INDEX TO

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

[illegible] FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL
UNDER THE CONSTITUTION OF INDIA

12[illegible] *to* 16*th* [illegible]

VO[illegible] No[illegible]

V2ll,92 N79
N 79.124.51
121966

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MARAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
C Sitharaman and Company, Madras-14
8 Mohan Pathippagam and Book Depot Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts ... Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Trunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S M Jagannathan Book House 35 Nandhi Koil Street Tiruchi 1
12 Ganesh Stores South Car Street Sivakasi

# Tamil Nadu Legislative Council Debates

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*12th to 16th February 1979.*

VOLUME CLIV (Nos. 1 to 5)

## TABLE OF CONTENTS.

*Monday, the 12th February 1979.*

PAGES.
Personnel of the Government of Tamil Nadu ... i—iv
Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... v
List of Members of the Tamil ... Legislative Council with their Constituenci... ... vii—x
1. Obituary Reference re death ... A. Subramaniam, Kattoor G... A. Krishnasami Vandayar, ... Ayyangar and A. K. Masila... Members of the Council ... 171–203
2. Questions and Answers ... 204
3. Announcements—
(1) Inclusion of questions ... tions ...
(2) Adjournment Motion
(3) Privilege Issue
(4) Decision of the ... mittee
(5) Amen... ...rma ... Governc...al ...
(6) Election... ...malai Univ...

42 C 50

PAGES

(3) Adjournment Motion *re* the incident in the Presidency College ... ... .. ... 420

(4) Report of the Tamil Nadu Third Pay Commission ... ... ... ... ...

3. Announcement *re* election of a member to the Senate of the Annamalai University ... ... 418

4. Adjournment motion *re* death of one Govindan while on the way to the Hispital after being in lock-up of Madhavaram Police Station on 15th February 1979 ... ... ... 418—420

5. Call Attention Notices—

(1) Non-regularisation of services of Secondary Grade Teachers appointed after 1st April 1970. 421—422

(2) Non-implementation of G.O. No. 333, Education, dated 14th February 1977 and consequent hardship and loss to teachers working under local ... ... ... 423—426

6. Present... port of the Commtttee on Gov... ...es ... ... ... 426

7. D... ...rnor's Address—cont. 426—482

... Made of the House .. ... 482

... ... ... ... 487—533

MARAS CITY.

...gmore, Madras-8.
Govy, Madras-4.
...e) Limited Madras-2.
... Company, Madras-1.
...nd Company, Madras-5.
...sa. ...ook House, Moore Market
6 ... Sitharaman and Company, Madras-14
8 Mohan Pathippagam and Book Depot
9 C. Venkatesan Chetty and Company. Madras-5.
10 The South India Saiva Siddhantha Wo... (Trunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers No. 11, Sunkurama...
12 New Century Book House (Private) Limited.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman... Madras-8.

IN MOFASSIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) Dis...
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Thanjavur Distri...
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukko...
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers 9/31, Cross Cut Road, Coim...
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coim...
11 S M Jagannathan Book House 35 Nandhi Koil Street, T...
12 Ganesh Stores, South Car Street, Sivakasi...

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் 121–152

2. அறிவிப்பு—

பேரறிஞர் அண்ணா பொறியியல் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு உறுப்பினர் தேர்தல் குறித்து. 152–153

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்—

(1) முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கருணாநிதி சென்ற ஊர்தி மீது உளி வீசப்பட்டது குறித்து. 153–164

(2) பாராளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் கொலை செய்யப்பட்டது குறித்து. 164–168

(3) திரு. நல்லசிவன் அவர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள் 168–169

4. கவன ஈர்ப்பு—

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் கட்டாய கருத்தடைக்கு நபர்கள் கொண்டு வர வேண்டுமென்று வற்புறுத்தப் படுவது குறித்து. 169–171

5. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி. 171–203

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள். 204

## உள்ளடக்கம்.

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள் .. .. .. 205-236

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—
சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் காவல் துறையினர் கல்லூரிக்குள் புகுந்து மாணவர்களைத் தாக்கியது குறித்து .. .. .. 236-242

3. கவன ஈர்ப்பு—
விவசாயிகள் விவசாயக் கடன்கள் ரத்து கோரி வரி கொடா இயக்கம் தொடங்கியுள்ளது குறித்து .. .. .. 243-245

4. அரசினர் தீர்மானம்—
வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் .. .. .. .. 245-246

5. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி. 246-288

6. அறிவிப்பு—
அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து. 289

7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 290

# பொருளடக்கம்


பக்கங்கள்

வினாக்கள் - விடைகள். 1—23

ஒத்திவைப்புத் தீர்மானம்—

திருச்சியில் உள்ள சிம்கோ மீட்டர் தொழிற்சாலையின் போக்கை எதிர்த்து சி.அய்.டி.யி. சங்கத் தலைவர் திரு. ரங்கராஜன் உண்ணாவிரதம் இருப்பதையும், அது தொடர்பாக சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் வீட்டில் கலவரம் நடத்தியதையும் குறித்து. 23—30

உரிமைப் பிரச்சினை—

முதலமைச்சர் மேலவையில் ஆற்றிய உரையை 'அண்ணா' நாளிதழில் தவறாகப் பிரசுரித்தது குறித்து. 30—31

கவன ஈர்ப்பு—

கடலூர் நகராட்சியிலுள்ள மேல்நிலைப் பள்ளியில் பௌதிகம், வேதியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய படிப்புகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் மாணவர்கள் படும் இன்னல்களைக் குறித்து. 32—39

ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி. 40—95

அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். 95

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வினாக்கள் — விடைகள் | 389-416 |
| 2. | தகவல் கோரல்— | |
| | (1) திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் நிறுவனத் தொழிற் தகராறு குறித்து | 416-417 |
| | (2) உறுப்பினர் திரு. இளம்பரிதி கைது குறித்து உரிமைக் குழுவின் அறிக்கை குறித்து, | 418 |
| | (3) மாநிலக் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து | 420 |
| | (4) மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை குறித்து | 420 |
| 3. | அறிவிப்பு— அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்குத் தேர்தல் குறித்து | 418 |
| 4. | ஒத்தி வைப்புத் தீர்மானம்— கோவிந்தன் என்பவர் கைது செய்யப்பட்டு மாதவரம் காவல் நிலையத்தில் லாக்கப்பில் வைக்கப்பட்டு, பிறகு வீட்டிலிருந்து மருத்துவமனைக்குக் கொண்டு வரும்போது இறந்தது குறித்து | 418-420 |
| 5. | கவன ஈர்ப்பு— | |
| | (1) 1-4-70க்குப் பின் அரசுப் பள்ளிகளில் பணி அமர்த்தப்பட்ட இடைநிலை ஆசிரியர்களின் பணி, வேலைக்குச் சேர்ந்த நாளிலிருந்து வரன்முறை செய்யப்படாதது குறித்து | 421-422 |
| | (2) நகராட்சி, மாநகராட்சி மற்றும் ஊராட்சி நிர்வாகத்தின்கீழ் இயங்கும் ஆசிரியர்களுக்கு 14-2-1977 தேதியிட்ட அரசாணை எண் 333 நிறைவேற்றப்படாததால் ஏற்படும் பண இழப்பு, இன்னல்கள் குறித்து | 423-426 |
| 6. | அரசு உறுதி மொழிக் குழுவின் முப்பத்தோராவது அறிக்கையை அளித்தல் | 426 |
| 7. | ஆளுநர் உரையின் மீது விவாதம்-தொடர்ச்சி | 426-482 |
| 8. | அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள். | 482 |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

*Members of the Council of Ministers.*

1. The HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service, Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The HONOURABLE THIRU K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning and Legislature, Public Works [Buildings], Establishment Works relating to Public Works Department.

3. The HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes and Excise.

6. The HONOURABLE THIRU G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections and Ex-Servicemen, Price Control.

7. The HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona.

8. The HONOURABLE THIRU K. NARAYANASWAMY, Minister in-charge of Law Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money lending, Legislation on Chits and Registration of Companies.

9. The HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, M[illegible] in-charge of Education including Technical Education, Offi[illegible] and Employment and Training.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :-

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், [illegible].

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :-

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக்காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வேளாண்மை, வேளாண்மை [illegible], வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், நீர்ப்பாசனம் உள்ளிட்ட பாசனம், ஆய்வுப் பொறியியல் பிரிவு.

15. மாண்புமிகு திரு. கா. இராசமுகமது (கிராமத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறுதொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராசன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் : நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூகநலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர் தம் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் (கைத்தறித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : கைத்தறி, கதர், நெசவு, நூல்.



## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

திரு. ம.பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. சு. இராமமூர்த்தி.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த.பி. செல்லத்துரை, பி.எஸ்.சி., பி.எல்.

விவாதப் பதிவாளர்

திரு. நா. கோ. தண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், திரு. கே. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 2 அறிவழகன், திரு. க., எம்.ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3 ஆறுமுகம், திரு. சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இரத்தின பாலகுருசாமி, திரு. | நியமனம். |
| 6 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமகிருஷ்ணத் தேவர், திரு. எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி, மன்றத் தொகுதி. |
| 8 இராசா முகமது, திரு. கா. (கிராமத் தொழில்துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராமமூர்த்தி, திரு. க. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 இளம்பரிதி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 எலமந்தா, திரு. பி., எம்.ஏ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 12 கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ., எம்.,ஏ. பி.எல். (கூட்டுறவுத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சங்கரலிங்கம், திரு. ம. எம்.ஏ. | திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 14 சந்தோஷம், திரு. டி., எம்.ஏ.,பி.எல். | தமிழ்நாடு [illegible] தெற்கு [illegible] தாரிகள் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 15 சிவஞானம், திரு. ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 17 சுந்தரேசத் தேவர், திரு. என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி., பி. பார்ம். (மாண்புமிகு துணைத் தலைவர்.) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 டிமாண்டி, திரு. பு. வி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 20 தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 21 தங்கவேலு, திரு. ஏ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 தமிழரசி, திருமதி ஏ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 தாமஸ், திரு. டி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 24 தாமோதரன், திரு. ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 25 வெற்றிடம் .. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 26 திராவிடமணி, திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 நாராயணசுவாமி திரு. கே. (சட்டத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| லதார்ராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 30 பாலசுப்பிரமணியம், திரு. கு. மா. | நியமனம். |
| 31 பாலசுப்ரமணியம், திரு. ஆ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 புலவர் புலமைப்பித்தன் | நியமனம். |
| 33 பெரியண்ணன், திரு. வி. ஆர். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 மணி, திரு. கோ. சி. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 35 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 36 மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 37 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 39 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 40 முருகேசன், திரு. எச். எல். | நியமனம். |
| 41 ராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள். |
| 43 வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 44 வில்வம், திரு. ஏ. கே. .. | நியமனம். |
| 45 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலைய அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 46 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 47 ஹண்டே, டாக்டர் எச். வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 48 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன் |

| தொடர் எண்ணும், உறுப்பினர் பெயரும் | தொகுதி |
| --- | --- |
| (1) | (2) |
| 49 வெற்றிடம் .. | .. சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 வெற்றிடம் .. | .. செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 வெற்றிடம் .. | .. கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 வெற்றிடம் .. | .. கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 வெற்றிடம் .. | .. மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 வெற்றிடம் .. | .. மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55 வெற்றிடம் .. | .. திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 வெற்றிடம் .. | .. திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெற்றிடம் .. | .. வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் .. | .. வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் .. | .. தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் .. | .. தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் .. | .. திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் .. | .. திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| — (சட்டவற்றிடம் ர்). .. | .. கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 'லதாராயணன், திரு | |

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்டமன்ற மேலவையின் ஐம்பத்து ஐந்தாவது கூட்டத் தொடர்.

---

**திங்கட்கிழமை, 1979 பிப்ரவரி 12.**

**சென்னை,** செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. இரங்கற் குறிப்புகள்.

**தமிழ்நாடு சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ. சுப்பிரமணியம், காட்டூர் கோபால், வி. வி. இராமசாமி, ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார், பி. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், மற்றும் ஏ. கே. மாசிலாமணி செட்டியார் ஆகியோர் மறைவு குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களே, தமிழ் நாடு சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ. சுப்பிரமணியம், காட்டூர் கோபால், வி. வி. இராமசாமி, ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார், பி. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் மற்றும் ஏ. கே. மாசிலா மணி செட்டியார் ஆகியோர் முறையே, 23—11—1978, 15—12—1978, 27—12—1978, 15—1—1979, 19—1—1979, 3—2—1979 அன்று இயற்கை யெய்தினர் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் 1937 முதல் 1939 வரை, 1946 முதல் 1952 வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1952 முதல் 1966 வரை மேலவை உறுப்பினராகவும் இருந்தவர்.

திரு. காட்டூர் கோபால் அவர்கள் 1971 ஆகஸ்ட் முதல் 1974 ஏப்ரல் வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர்.

திரு. வி. வி. இராமசாமி அவர்கள் 1952 முதல் 1953 வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1954 முதல் 1960 வரை மே... உறுப்பினராகவும் இருந்தவர்

திரு. எ. பெருமாள்சாமி [illegible] அவர்கள் 1946 முதல் 1952 வ[ரை] தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1957 முதல் 1968 வரை மேலவை உறுப்பினராகவும் இருந்தவர்.

திரு. பி. எஸ். பெருமாள்சாமி அய்யங்கார் அவர்கள் 1952 முதல் 19[57] வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1957 நவம்ப[ர்] முதல் 1960 ஏப்ரல் வரை மேலவை உறுப்பினராகவும் இருந்தவர்.

திரு. எ. கே. பாலுசாமி செட்டியார் அவர்கள் 1952 முதல் 1957 வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1957 மார்ச் முதல் 196[illegible] ஏப்ரல் வரை மேலவை உறுப்பினராகவும் இருந்தவர்.

அவர்களது மறைவுக்கு வருந்துகிறோம். அவர்கள் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறீர்கள் ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, பொதுவாக முதலமைச்சர் அவர்களுடைய கேள்விகள் எதுவுமே இன்றைக்கு இடம் பெறவில்லை . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் வினாக்கள் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் வினாக்களைப் பற்றித்தான் ஏதாவது கேட்க இடமே தவிர, முதலமைச்சர் அவர்களின் கேள்விகள் இந்த வினாக்கள் பட்டியலில் இடம் பெறவில்லையே என்று கேட்பது எந்த வகையிலும் [illegible] வினாக்கள் பட்டியலில் மாண்புமிகு முதலமைச்சர் சம்பந்தமான

சட்டப்[illegible]ர்).

[illegible]லநாராயணன், திரு.



வினாக்கள் இருந்து, அவற்றை நான் தள்ளிப் போட்டாலாவது கேள்வி கேட்கலாம். எனவே உறுப்பினர் அவர்கள் புதிய மரபை உருவாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். வினாக்கள் பட்டியலில் இல்லாத ஒன்றைப்பற்றிக் கேட்பதும், அந்த அமைச்சர் எங்கே என்று கேட்பதும், சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இம் மன்றத்தில் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதி மீறப்படுகிறது என்ற காரணத்தால்தான், நான் இதை எழுப்ப விரும்புகிறேன். ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் இரண்டு அவைகளும் தனித்தனியாக நடத்தால்தான், முதலமைச்சர் அவர்களால் வினாக்களுக்கு விடையளிக்கப்படும் என்று சொல்லப்பட்டதன் அடிப்படையில், இப்போது அவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இந்த நேரத்தில் முதலமைச்சர் அளிக்க வேண்டிய விடைகள் குறித்த வினாக்கள் பட்டியலில் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதைத்தான் நான் சொல்ல முன்வருகிறேன். சட்டமன்ற மேலவை நடைபெறும் முதல் நாள் இன்றுதான். அவை ஆரம்பித்து தொடர்ந்து 2, 3 நாட்களுக்குப் பிறகும் முதலமைச்சர் அவர்கள் விடையளிக்கவேண்டிய வினாக்கள் பட்டியலில் இடம் பெறவில்லை என்றால், அதைக் குறித்து இங்கே பிரச்சினை எழுப்புவது சரியாக இருக்கலாம். ஆனால் இன்றையதினம் தான் முதல் நாளாகும். அப்படி இருக்கும் போது, முதலமைச்சர் விடையளிக்க வேண்டிய வினாக்களைப் பட்டியலில் போடவில்லையே என்று கேட்பது எந்த வகையிலும் சரியில்லை. இருப்பவைப்பற்றி எதையாவது கேட்கலாமே தவிர, இல்லாத ஒன்றைப் பற்றி எதையாவது கேட்பது சரியில்லை என்று கூற விரும்புகிறேன்.

### Tractors Auctioned

*1 *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of Tractors brought to auction up to 30th June 1978, by the Co-operation Department towards loan arrears ?

### ஏலம் விடப்பட்ட உழுவைகள்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பின்வருவதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்—

கடன் நிலுவைக்காக 1978, ஜூன் 30 வரை கூட்டுறவுத் துறையினரால் ஏலத்திற்குக் கொண்டுவரப்பட்ட உழுவைகள் எத்தனை?

[1979 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: 5 உழுவைகள். உழுவைகள் என்றால் டிராக்டர்கள்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, விவசாயத்திற்கான உழுவைகள் ஏலத்திற்குக் கொண்டு வரப்படுகின்றபோது, விவசாயத்தை நவீனப்படுத்துகிற அல்லது இயந்திரமயமாக்குகிற முயற்சியைப் பாதிக்கிற காரியமாக அமைகிற காரணத்தால் இதுபோன்ற உழுவைகள் ஏலத்திற்குக் கொண்டு வரப்படும்போது, அரசாங்கமே முன்வந்து அதற்கான கடன் தொகையைத் தள்ளிவிடவோ அல்லது ஏலத்திற்கு உழுவையைக் கொண்டு வருகிற முயற்சியையாவது தள்ளிப்போடவோ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் மட்டும் 84 உழுவைகள் கைப்பற்றப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ கடன் தொகையைத் தந்த வகையில், விவசாயிகளுக்கு உழுவைகள் திருப்பித் தரப்பட்டு, நான் முன்பு குறிப்பிட்ட 5 டிராக்டர்கள் மட்டுமே கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் இப்போது உயர்மட்டக் குழு பரிந்துரை வருகிற வரையில், வேறு எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என்று அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: ஏலத்திற்கு வராமல் தவிர்க்கப்பட்ட உழுவைகள் என்று குறிப்பிடும்போது, இவைகளில் பெரும்பாலானவை இன்றைய தினம் விவசாயிகளிடம் இல்லை என்பதையும், இவைகளெல்லாம் மற்றவர்களுக்கு விவசாயிகளால் விற்கப்பட்டுத்தான் இந்தக் கடன் தொகைகள் அவர்களால் திரும்பச் செலுத்தப்பட்டன என்பதையும் அரசு அறியுமா? எனவே இன்றைய தினம் விவசாயிகள் மத்தியில் உள்ள அவர்களுடைய மோசமான பொருளாதார நிலைமையை அரசு மனதில் கொண்டு, விவசாயிகளின் விளை பொருள்களுக்குக் கிடைக்கும் குறைவான விலையைக் கணக்கில் கொண்டு இந்தப் பிரச்சினையை அரசு அணுகுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: கடந்த ஓராண்டுக் காலத்தில் ...டும் மொத்தம் 84 உழுவைகள் கைப்பற்றப்பட்டன என்றாலும் அவைகளில் ...வைகள் மீண்டும் அந்த விவசாயிகளிடமே திருப்பி அளிக்கப்பட்டு ...யும், 11 உழுவைகள் மட்டுமே கைப்பற்றப்பட்டு கட

...ர்).

'லநாராயணன், திரு.





1979 பிப்ரவரி 12]

தந்த வங்கிகளின் வசத்தில் இருக்கின்றன என்பதையும், 5 உழுவைகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: டிராக்டர்களைப் பொறுத்தவரையில், விவசாயிகளிடம் அதற்குரிய கடன் தொகையைத் திரும்பப் பெற முடியாத காரணத்தால்தான் கூட்டுறவு சங்கங்கள் அவைகளைக் கைப்பற்றி ஏலம் போட்டு ஏலத் தொகையைப் பெற்றுக்கொள்கின்றன. இப்படி விவசாயிகளிடமிருந்து எடுக்கப்பட்ட டிராக்டர்களை விற்பனை செய்வதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களே அந்த டிராக்டர்களை உழுவதற்கு அனுப்பி அவைகளிலிருந்து கிடைக்கிற தொகையைக் கணக்கில் ஈடு செய்துவிட்டு, மீண்டும் அந்த டிராக்டர்களை அவைகளுக்குரிய விவசாயிகளிடமே திரும்ப ஒப்படைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள ஏதேனும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய மேலான யோசனை அரசாங்கத்தால் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: உயர்மட்டக் குழு செய்த பரிந்துரையின் பேரில் விவசாயிகளிடமிருந்து தற்போது எதையும் ஜப்தி செய்வதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே விவசாயிகள் பட்டிருக்கிற கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் விவசாயிகளைப் பொறுத்தவரையில், ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று உத்தரவிட்டும், வாக்குறுதி கொடுத்திருந்தும்கூட, கடந்த வாரத்தில் திருவள்ளூர் அருகில் ஒரு விவசாயியிடமிருந்து திரும்பப் பெற வேண்டிய கடன் தொகைக்காக அதிகாரிகள் அவருடைய டிராக்டரை ஜப்தி செய்திருக்கிறார்கள் என்ற செய்தி அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவ்வாறு தெரியாது என்றால், இனிமேலாவது அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபடக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவைப் பிறப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கேள்வியிலேயே இரண்டு வகையான உணர்வுகள் இருக்கின்றன. 'தெரியுமா' என்ற சந்தேகத்தில் அவர் வினா இருக்கிறது. தயவுசெய்து அப்படிப்பட்ட விவரம் இருந்தால், அதுவும் தெளிவாக இருந்தால், அது என்னிடம் கொடுக்கப்படுமானால், உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 1

திரு. டி. சந்தோஷம்: விவசாயிகளுக்கான டிராக்டர்கள் விநியோகிக்கப்படும்போது, வேறு ஜாமீன்தாரர்களோடு [illegible] அளிக்கப்படுகின்றன. எனவே டிராக்டர்கள் ஜாமீன் [illegible] கொடுக்கப்படுகின்றன. இதன் காரணமாக [illegible] ஜாமீன்தாரர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பிறகுதான் இந்த டிராக்டர்கள் விவசாயிகளிடமிருந்து கைப்பற்றப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இதுபற்றிய போதிய விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போடுமாறு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வை. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்துடைய [illegible] இருந்தபோதிலும், [illegible] பகுதியான நான் சார்ந்திருக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தில்கூட டிராக்டர்கள் விவசாயிகளிடமிருந்து கைப்பற்றப்படுகின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அரசாங்கத்தினுடைய உத்தரவை மீறி டிராக்டர்களைக் கைப்பற்றிய அதிகாரிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? தற்போது கைப்பற்றப்பட்டிருக்கின்ற இந்த 5 டிராக்டர்களும் எந்த மாவட்டத்திலிருந்து கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இந்த ஐந்து டிராக்டர்களில் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த [illegible] இரண்டு டிராக்டர்களும், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த [illegible], [illegible], [illegible] என்ற மூன்று கிராமங்களிலிருந்து மூன்று டிராக்டர்களும் கைப்பற்றப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: இதேபோல தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகக் கடன் வாங்கி டிராக்டர்களை வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடனையும் திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பெற்ற கடனைத் [illegible] விவசாயிகளுக்கு உதவ முன்வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

..ராயம்
(சட்டத்து
..ர்).

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இக்கேள்வி தனிக் கேள்விக்குரிய [illegible] காரணத்தால், நான் பதில் சொல்லத் தயங்குகிறேன்.

'லநாராயணன், திரு.



1979 பிப்ரவரி 12]

திரு. கோ. சி. மணி: [illegible] தொகையை [illegible] திருப்பிச் செலுத்தினால்தான் டிராக்டர்கள் திருப்பி ஒப்படைக்கப்படும் என்ற முறையில் திருப்பிக் கொடுக்கப்பட்டனவா? அல்லது ஏதோ ஒரு தொகையைக் கொடுத்தாலே போதும் என்ற அளவில் திருப்பிக் கொடுக்கப்பட்டனவா? அல்லது முழுத் தொகையையும் பெற்றுக்கொண்டுதான் டிராக்டர்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தனிக் கேள்வி போட்டால், மிகத் தெளிவாக விளக்கம் அளிக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: விவசாயிகளுடைய உழவு மாடுகளை எந்தக் காரணத்தைக்கொண்டும் ஜப்தி செய்யக்கூடாது என்று அரசாங்க உத்தரவு இருக்கிறது. டிராக்டர்களும் பெரிய உழவு மாடுகள் என்ற அளவிலே இருக்கிற காரணத்தால், விவசாயிகளுடைய நலனை மனதிலே கொண்டு எந்தக் காரணத்தைக் கொண்டும் டிராக்டர்களை ஜப்திக்குக் கொண்டு வரக்கூடாது என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டிராக்டரை பெரிய உழவு மாடு என்று சொன்னார்கள். ஆனால் உழவு மாட்டின் விலையைவிட டிராக்டர்கள் விலை அதிகம். ஒரு டிராக்டரின் விலை 55 ஆயிரம் ரூபாய் ஆகிறது.

திரு. க. இராமமூர்த்தி: ஒரு டிராக்டரின் விலை 20 ஆயிரம் ரூபாய்தான் ஆகிறது . . . . .

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: கைப்பற்றப்பட்ட இந்தப் பெரிய உழவு மாடுகள் (டிராக்டர்கள்) ஒவ்வொன்றின் விலை முறையே 44 ஆயிரம், 35 ஆயிரம், 51 ஆயிரம், 55 ஆயிரம், 47 ஆயிரம் என்ற வகையிலே இருக்கின்றன.

திரு. ப. மாணிக்கம்: டிசம்பர் மாதம் 29 ஆம் தேதி கோவை மாவட்டம், திருப்பூர் பகுதியிலே உள்ள கிராமத்தில் ஒரு டிராக்டர் பறிமுதல் செய்யப்பட்டு முப்பதாயிரம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 1

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஆய்வுசெய்து தனிக் கேள்வி போடும்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் முதல் கேள்வி 30—6—1978 ஆம் நாள் வரையிலே இருந்த நிலைமையைப்பற்றிக் கேட்ட காரணத்தால், அதற்குத் தகுந்த விவரத்தைத் தான் நான் சேகரித்து வைத்திருக்கிறேன்.

## People's Co-operative Bank, Nagercoil.

*2 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(a) whether any complaint has been received by the Government stating that irregularities and embezzlements have been committed in the administration of the People's Co-operative Bank at Nagercoil; and

(b) if so, the action taken thereon ?

### நாகர்கோவில் மக்கள் கூட்டுறவு வங்கி.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகர்கோவில் மக்கள் கூட்டுறவு வங்கி நிர்வாகத்தில் ஒழுங்கீனங்கள் மற்றும் கையாடல்கள் நடைபெற்று இருப்பதாக அரசுக்குப் புகார் ஏதும் வந்ததா?

(ஆ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) 1976 ஆம் ஆண்டு தணிக்கையின்போது ரூபாய் 5,280-க்கு கையாடல் நடைபெற்றதாக நாகர்கோவில் துணைப் பதிவாளரின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பேரில் விசாரணை உத்தரவிடப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டது. முன்னாள் காரியதரிசி (பொறுப்பு) திரு. நீலகண்ட பிள்ளைக்கு ரூ. 1,000 அபராதமும் நீதிமன்றம் கலையும்வரை தண்டனையும் 19—1—1978-ல் தீர்ப்பளிக்கப்பட்டது. குற்றவாளி அதன் மீது நாகர்கோவில் மாவட்ட நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். அம்முறையீடு தற்போது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

(சட்டத்து... ...ளர்).

'லதாராயணன், திரு.



1979 பிப்ரவரி 12]

தற்பொழுது மேற்படி வங்கியின் நிர்வாகத்தில் ஏற்பட்ட ஒழுங்கீனங்கள் பற்றி கூட்டுறவுச் சட்டம் 65-ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: நாகர்கோவில் மக்கள் கூட்டுறவு வங்கியில் ஏற்பட்ட பல தவறுகளின் காரணமாக அதைச் சீர் செய்யும்வரை ஒரு அரசு துணைப் பதிவாளர் பொறுப்பிலே ஒப்படைக்கப்பட்டிருந்தது. பிறகு தவறுகள் எல்லாம் நிவர்த்தி செய்யப்பட்டு, மீண்டும் வங்கி நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பொறுப்பிலே கூட்டுறவு வங்கி இயங்கிக்கொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: நாகர்கோவிலைப் போலவே பல்வேறு கூட்டுறவு வங்கிகளின் நிர்வாகங்களில் ஏற்பட்ட ஒழுங்கீனங்கள் தொடர்பான வழக்குகள் தொடரப்படுகிற நேரத்தில், சட்டத்திலே ஏற்படுகிற ஓட்டைகள் மூலமாகத் தப்பிவிடுகிற சில நிர்வாக அதிகாரிகள் மீண்டும் திறமை ஊதியத்துடன் அதே வங்கியிலேயே பணியாற்றும் நிலை ஏற்படுகிறது. தவிர்க்க முடியாத சட்டச் சிக்கல்களின் காரணமாக அவர்கள் மீண்டும் வேலைக்கு வருகிறார்கள் என்றாலும் கூட, அவர்கள் மீண்டும் அதே வங்கியில் பணியாற்றுகிற நிலையைத் தவிர்க்க கூட்டுறவுத் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினரின் மேலான யோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

Question 3 was called.

THIRU G. VASANTHA PAI: Sir, on a point of order. This question does not disclose whether it is in respect of Colleges or Schools, as it simply says "whether it is a fact that Physical Education has been made a compulsory subject from the academic year 1975-76;" Is it in Colleges or Schools?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சந்தேகம் கேட்கிறீர்களா அல்லது பாயிண்ட் ஆப் ஆர்டரா?

THIRU G. VASANTHA PAI: The question does not clarify whether it is in Colleges or Schools.

## Physical Education.

*3 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that Physical Education has been made a compulsory subject from the academic year, 1975-76; and

(b) if so, whether there is any proposal to make it an Examination subject?

## உடற்பயிற்சிக் கல்வி.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உடற்பயிற்சிக் கல்வி, 1975-76 ஆம் கல்வி ஆண்டிலிருந்து கட்டாயப் பாடமாகக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், தேர்வுப் பாடமாக இதனை சேர்ப்பதற்கான செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) எந்தெந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனரோ அந்தந்த உயர்தொடக்கப் பள்ளிகளில் 6—8 வகுப்புகளிலும், அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் 6—9 வகுப்புகளிலும் உடற் பயிற்சிக் கல்வி, தேர்வுக்கான பாடங்களில் ஒன்றாக 1975-76-ம் ஆண்டு முதல் ஆக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளிகளில் 6—9 வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் உடற்பயிற்சிக் கல்வியில் பெறும் மதிப்பெண்கள், அடுத்த உயர்வகுப்பிற்கு அனுப்புவதற்கான கொள்கை களை வகுக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

திரு. பி. ஆர். தாமஸ்: அரசு இறுதித் தேர்விலே இந்தப் பாடம் கட்டாய மாகச் சேர்க்கப்பட்டால்தான், இந்தப் பாடத்திற்குரிய தகுதி நாட்டுமென்று கருதப்படுகிறது. ஆகவே அரசுத் தேர்விலே கட்டாயத் தேர்வுப் பாடமாக இதைக் கொண்டுவர மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது அந்த எண்ணம் ...

(சட்டத்து ... ார்).

'லநாராயணன், திரு.



திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'எந்தெந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர்கள் இருக்கிறார்களோ அந்தந்தப் பள்ளிகளில் உடற் கல்வி பாடமாக வைக்கப்பட்டுள்ளது' என்று சொன்னார்கள். அனைத்து உயர் தொடக்கப் பள்ளிகளிலும், உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமித்து உடற் கல்விப் பாடத்தைக் கட்டாயம் ஆக்குகிற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நிதி ஆதாரத்தையொட்டி பரிசீலிக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: உடற் பயிற்சிக் கல்வியை மேல் நிலைப் பள்ளிகளில் கட்டாயமாக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போதைக்கு இல்லை.

திரு. டி. சந்தோஷம்: தேர்வுப் பாடமாக எடுத்துக்கொண்டு மதிப்பெண் கள் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிந்துகொள்ளுகிறேன். எப்படி மதிப்பெண் கொடுக்கப்படும் என்று தெரிய வில்லை. 200 மீட்டர் இத்தனை செகண்டுகளில் ஓடினால் இவ்வளவு மார்க் என்று கொடுக்கப்படுமா? அப்படி நிர்ணயிப்பதில் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்கள் பல்வேறு பயிற்சிகளில் பங்குகொள்ளுவதற்கேற்ப மார்க் வழங்கப்படுகிறது. அதில் கஷ்டம் இருப்ப தாகத் தெரியவில்லை.

THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, will the Hon. Minister be pleased to clarify whether the Physical Education contemplated is for the purpose of improving the physique of the students, and if so, will the Government consider the establishment of the Department of Kynesiology as is in existence in foreign countries for these boys?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட யோசனை இப் போது ஒன்றுமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: [illegible] ஆகிய [illegible] ஆனால் மாணவர் களுக்கு அவ்வாறு [illegible] அந்த [illegible] என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: [illegible] ஆக்கப் பட்டிருந்து, அதன் [illegible] இருந்தால் அதைப்பற்றிப் பரிசீலனை செய்து [illegible].

## Physical Education Teachers.

* 4 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Tamil Nadu Physical Education Teachers' Association has made any representation to Government that Kit Allowance be paid to the Physical Education Teachers; and

(*b*) if so, the action taken thereon?

### உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு 'கிட்' படி ( Kit Allowance ) வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் சங்கம், அரசிடம் முறையீடு ஏதேனும் செய்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) செகண்டரிப் பள்ளிகளில் பணி புரியும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் சீருடை அணிந்துகொள்ளும் பொருட்டு ஒவ்வொரு உடற் பயிற்சி ஆசிரியருக்கும் அந்தந்தப் பள்ளி விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 (ரூபாய் ஐம்பது) சீருடைப்படி அளிக்க வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

(பிற்பகல் 1-20.)

திரு. பி. ஆர். தாமஸ்: 'கிட் அலவென்ஸ்' என்பது சிறப்புக் கட்டணமாக 28 நாரா. [illegible]லிக்கப்படுகிறது. ஒரு உயர்நிலைப் பள்ளியிலே நான்கு அல்லது ஐந்து (சட்ட[illegible]சிக் கல்வி ஆசிரியர்கள் இருந்தால், அவர்களுக்கு அளிக்கும் ளர்).

'லதார்ராயணன்,



'கிட் அலவென்ஸ்' மூலமாகவே பெருவாரியான தொகை செலவாகிவிடுகிறது. ஆதலால் சிறப்புச் [illegible] மாணவர்களைப் [illegible] முடியவில்லை. பள்ளிகளில் வசதிக் கட்டணம் வாங்கப்படுகிறது. அதிலிருந்து இந்தத் தொகையைக் கொடுக்க அரசு ஆணையிடுமா? அதுமட்டுமல்லாமல், இப்போது கொடுக்கப்படும் 50 ரூபாய் மிகக் குறைவாக இருக்கிறது. ஒரு சீருடைக்குக்கூடப் போதாததாக இருக்கிறது. எனவே கொடுக்கும் தொகையையும் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சிறப்புப் படியை உயர்த்தும் உத்தேசமில்லை. ஆனால் உடற்பயிற்சிக் கல்வி [illegible] முறையில் நடக்க திட்டங்கள் பரிசீலிக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: உடற்பயிற்சிக் கல்வியைப் பொறுத்தவரையில், உயர்நிலைப் பள்ளிகளிலே ஒரு பொது நிதி வசூலிக்கப்படுகிறது. அதிலிருந்து உடற்பயிற்சி ஆசிரியர்களுக்குத் தரப்படுகிறது. உயர் தொடக்கப் பள்ளி களிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அங்கே நிதி வசூலிக்கப்படுவதில்லை. அவர்களுக்கும் பஞ்சாயத்து பொது நிதியிலிருந்து 50 ரூபாய் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட யோசனையில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: முதல் கேள்வி கேட்ட உறுப்பினர் அவர் கள் கூறியதுபோல், பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகளில் வசதி நிதி Games fee குறைவாக ஏராளமான அளவிற்குத் தேங்கிக் கிடக்கிறது. வசதி இருப்பதால், அதிலிருந்து 50 ரூபாயைக் கொடுப்பதற்குப் பதிலாக, Gem s Fe விருந்து காம்படிர் அந்த 50 நிதியிலிருந்து கொடுத்தால், [illegible] இதை அரசு பரிசீலனை ஆபாமை மாணவர்களுக்காகப் பயன்படுத்தலாம். செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வசதிக் கட்டணம் பள்ளிக்கூட வசதிகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாணவர்களிடமிருந்து வசூலிக்கின்ற தொகையிலிருந்து உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு 50 ரூபாய் அளிக்கப் படுவது மாணவர்களுக்குத் தெரிந்திருப்பதால், எங்களுடைய பணத்திலிருந்து தான் உடற் பயிற்சி ஆசிரியர்கள் உடை உடுத்துகிறார்களென்று கேலியாக மாணவர்கள் பேசுவது கண்டு உடற் பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் வருந்துவது அரசுக்குத் தெரியுமா? அந்த நிலையை நீக்க, அரசே அவர்களுக்கு [illegible] தொகையை அளிக்குமா?

[1979 பிப்ரவ

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: செகண்டரிப் பள்ளிகளில் [illegible] புரியும் சாரண ஆசிரியர்கள் முன்னோடியாக இருக்கும் ஆண்டு மூன்று 40 ரூபாய் செலவில் [illegible] வழங்கப்படுகிறது. அதுதான் [illegible] இந்தத் திட்டத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்வோம். [illegible] உடற்பயிற் கல்வி ஆசிரியர்களைக் கேட்கும்போது, சாரண ஆசிரியர்களை அ[illegible]கள் கூட்டிக் காட்டலாம்.

திரு. செ. முத்துசாமி: அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, நடுநிலைப் பள்ளிகளிலே பணியாற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் கொடுக்க இட்டமில்லை என்று சொன்னார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றும் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு சலுகைகளைத் தந்துவிட்டு நடுநிலைப் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு அப்படி இல்லை என்று சொல்லுவது ஒரு வேறுபாட்டை இந்த அ[illegible] காட்டுவதாக ஆகாதா? அப்படி வேறுபாடு இன்றி அந்தப் படி[illegible] அவர்களுக்கும் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உயர்நிலைப் பள்ளிக[illegible] கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நடுநிலைப் பள்ளிகளில் இல்லை. [illegible] வித்தியாசந்தான் இந்த வித்தியாசத்திற்கு அடிப்படையாக இருக்கி[illegible] ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்[illegible] என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களு[illegible] வழங்கப்படுகிற 'ஸ்பெ. அலவன்ஸ்' சந்தா மாணவர்களிடமிருந்து 5 ரூபா[illegible] வாங்கப்படுவதாகச் சொன்னார்கள். பல பள்ளிகளிலே கிரவுண்டே இல்[illegible] அவர்களுக்குப் பயிற்சியும் கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட பள்ளிகள் மாணவர்களிடமிருந்து கட்டணத்தை வாங்காமலிருக்க நடவடிக்கை எடுக்[illegible]படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கிரவுண்ட் இல்லை என்[illegible] சொல்லும்போது, கிரவுண்ட் இல்லாமல் வேறு ஏதாவது விளையாட்டுக்களை சொல்லிக் கொடுக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அதற்கா[illegible] இப்படிப்பட்ட யோசனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. பி. ஆர். தாமஸ்: பாடத் திட்டத்திலே எல்லாவிதமான சூழ்நிலை[illegible]களிலேயும் உடற்பயிற்சிக் கல்வியைப் பயிற்றுவிக்க இடம் இருப்பதால்,

'முதல் 8ஆம் வகுப்புவரை சிறப்புக் கட்டணம் வசூல் செய்து, ஆசிரியர்களு[illegible]

28 நாரா[illegible]க்கட[illegible] வழங்க அரசு முன்வருமா?

(சட்ட[illegible]க் கல[illegible]

ர்).

'லநாராயணன்,



1979 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: உடற்பயிற்சி செய்வதற்கு ஏற்ற அளவிற்கு வசதி இல்லாத பள்ளிகளிலே, இட வசதியை ஏற்படுத்த, வசதிக் கட்டணத் திலிருந்து செலவு செய்யலாமென்று அரசு சட்டம் இயற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்ட பள்ளிகளிலிருந்து கோரிக்கை வந்தால், அதைப் பரிசீலனை செய்யலாம். அதற்குத் தனியான சட்டம் தேவையில்லை.

திரு. செ. முத்துசாமி: நடுநிலைப் பள்ளிகளிலே அப்படிப்பட்ட கட்டணம் வாங்க முடியவில்லை. அதனால் தரவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன்களிலும், நகராட்சி மன்றங்களிலும் இருக்கக்கூடிய பொது நிதியில் போதுமான பணம் இருந்து, அவர்கள் தரவேண்டுமென்று விரும்பினாலும், இப்போது நர சட்டத்தில் இடம் இல்லாததால்தான், அவர்களுக்கு அந்த அலவன்ஸ் கொடுக்க முடியாமல் இருக்கிறது. ஆதலால் அவர்களுக்கு 50 ரூபாயை பொது நிதியிலிருந்து வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உறுப்பினரவர்கள் வேறு ஒரு துறையின் நிதிபற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால், எந்த அளவிற்கு அது சாத்தியமென்பதை ஆராயலாம்.

## *Assistant Professors of Madras Law College.*

*5 Q.—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government are aware that the services of Assistant Professors who have put in eight years and ten years service in Madras Law College, have not been regularised so far; and

(b) if so, when they will be regularised?

சென்னை சட்டக்கல்லூரி துணைப் பேராசிரியர்கள்.

திரு. அ. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) சென்னை சட்டக்கல்லூரியில் எட்டு ஆண்டுகள், பத்து ஆண்டு களாகப் பணிபுரியும் துணைப் பேராசிரியர்கள் இதுவரை நிரந்தரமாக்கப் படாது இருப்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அவர்கள் எப்பொழுது நிரந்தரம் செய்யப்படுவார்கள்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) & (இ) சென்னை சட்டக் கல்லூரியில் பணிபுரியும் இளநிலைப் பேராசிரியர்களை நிரந்தரம் செய்வது பற்றிய குறிப்பு எதும் அரசிடம் இல்லை.

**திரு. ஆ. பாலசுப்பிரமணியம்:** சென்னை சட்டக் கல்லூரியில் பணியாற்றுகிறவர்கள் இன்னும் 10 (எ) (1) விதியின்கீழ் பணி புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை ஏன் இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சட்டக் கல்விப் பணிக்கான தனி விதிகள் இயற்றுவது குறித்து அரசின் பரிசீலனையில் இருந்து வந்ததால், மேற்படி பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்வதில் தாமதம் ஏற்பட்டது. அண்மையில் அரசு ஆணை (நிலை) எண் 1898, கல்வி, நாள் 21—10—78-ல் சட்டக் கல்விப் பணிக்கான தனி விதிகள் இயற்றப்பட்டுள்ளன. இனி மேற்கொண்டு காரியங்கள் நடக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** சட்டக் கல்லூரியில் எத்தனை பேராசிரியர்கள் சுமார் 5 ஆண்டுகளுக்கு மேல் 10 (எ) (1) விதியின்கீழ், நிரந்தரமாக்கப் படாமல், பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்? இனிமேல் எந்த இலாக்காவிலும் 10(எ)(1) விதியின் கீழ் நியமனம் செய்யாமல், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் நியமனம் செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தமிழ்நாடு சார்புப் பணியின் விதி 10 (எ) (1)ன்படி 18—7—1970 முதல் 31—1—1979 வரை 19 இளநிலைப் பேராசிரியர்கள், சென்னை சட்டக் கல்லூரியில் தற்காலிகமாகப் பணியில் நியமிக்கப்பட்டனர். இந்தப் பதவி விவரத்தைத்தான் தகுதி படைத்தோர்கள் தற்காலிகமாகப் பணியில் அமர்த்தும் இந்த வாய்ப்பை நாம் எடுக்காவிட்டால் சில சமயங்களில் கல்வி நிலையங்களில் கல்விப் பணி பாதிக்கப்படும் நிலை ஏற்படும். எனவே இந்த விதி இருப்பது நல்லதென்று கருதுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** கல்வித் தகுதி உடையவர்கள் எல்லா வேலைகளுக்கும் நிரம்ப இருக்கும் காலகட்டத்தில், அந்த விதித்தேவை ஏற்படப் போவதில்லை. இந்தச் சட்டம் கல்வித் தகுதி இல்லாதவர்கள் இருந்தபோது (சட்டமீட்டப்பட்ட சட்டம், 30 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளைக்காரன் போட்டது). இப்போது 5 பேர் வேண்டுமென்கிற வேலைக்கு 5,000 பேர்க

*8 நர்

*லகாராயணன்.



ளிருவில் நிற்கும் நிலை இருக்கிறது. இந்த நிலைமை எல்லாத் துறைகளிலும் இருக்கிறது. எனவே எல்லா இலாக்காவினரும் முன்கூட்டியே அடுத்த ஆண்டு தங்கள் துறையில் ஏற்படப்போகும் காலியிடங்களைக் கணக்கிட்டு, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகப் பட்டியல் வாங்கி வைத்துக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது? இப்போதிருக்கும் விதி, வேண்டியவர்களை நியமனம் செய்து, தவறு செய்ய இடம் கொடுக்கிறது. கேரளாவில் டிரான்ஸ் போர்ட் கண்டக்டர்களைக்கூட பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலம் நியமனம் செய்யப்படுகிறார்கள். இன்னும் வெள்ளைக்காரன் எழுதி வைத்ததைச் சொல்லிக் கொண்டிருந்தால், இந்த நிலை மாறுவது எப்போது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** எப்போது என்பதை இப்போது சொல்வதற்கில்லை. (சிரிப்பு).

**திரு. க. இராமமூர்த்தி:** சென்னை சட்டக் கல்லூரியினுடைய முதல்வர்கூட நிரந்தரம் செய்யப்படாதவர்தான் என்பது அரசுக்குத் தெரியுமா? இனிமேல் அவர்களை நிரந்தரம் செய்வதற்கு அரசு ஒரு காலக்கெடு வைத்து, நிரந்தரம் செய்ய முன்வருமா? தகுதி படைத்தவர்கள் இருக்கிறார்களா, இல்லையா என்பது மற்றவர்களுக்குத் தெரியும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்தக் குறைபாட்டிற்குக் காரணம் தனி விதிகள் இல்லாததுதான். இப்போது அது ஏற்பட்டுள்ள காரணத்தால், அந்தக் குறைபாட்டைப் போக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN : Sir, rule 10 (*a*) (i) is intended to recruit persons on a temporary basis. The whole rule loses its meaning if people are kept for five and ten years as temporary under rule 10 (*a*) (i). In this Law College, there are Assistant Professors who have been there for seven or eight years. Under the new Rules that have been framed, as all these 19 persons have adequate qualifications, may I know whether they will be confirmed as Assistant Professors from the date of their recruitment?

(பிற்பகல் 4.30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, இப்போது இருக்கும் 19 பதவிகளுக்கும் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் நேரடி நியமனம் மூலம் இளநிலைப் பேராசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister be pleased to realise that in a College like the Law College, which is a professional institution, it will affect the quality of education if the teaching staff is kept temporary ? In the light of the above act, will the Government consider that at least in professional colleges, this practice of recruitment under rule 10 (*a*) (i) is discontinued

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : [illegible] நடை[illegible], கல்வித் [illegible] என்பதை [illegible]. [illegible], கல்வி [illegible] தகுதிகள் [illegible].

*Higher Secondary Schools in Salem District*

*6 Q.—THIRU A. DRAVIDAMANI (on behalf of THIRU V. R. PERIANNAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of schools in Salem District, in which Higher Secondary Education Scheme (+ 2 pattern) is proposed to be introduced during the year 1978-79; and

(*b*) the schools selected for introducing this scheme?

சேலம் மாவட்டத்தில் உயர் இடைநிலைப் பள்ளிகள்.

திரு. ஆ. திராவிடமணி (திரு. வி. ஆர். பெரியண்ணன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1978-79 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் எத்தனை பள்ளிகளில் உயர் இடைநிலைக் கல்வித் திட்டம் (+ 2 முறை) கொண்டுவரக் கருதப்பட்டுள்ள[illegible]

(இ) [illegible] பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன ?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) நடப்புக் கல்வியாண்டில் (1978-79) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 67 உயர் நிலைப் பள்ளிகள் மேல் நிலைப்பள்ளிகளாக உயர்த்த அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும் சேலத்தில் 2 மெட்ரிகுலேஷன் பள்ளிகளும், ஏற்காட்டில் 2 ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளும் மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்த அனுமதிக்கப்பட்டுள்ளன.

(இ) விவரப்பட்டியல்@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

*Physically Handicapped Persons.*

* 7 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of Physically Handicapped persons working in Government Press, Madras, which received the President's Award for employing more number of Physically Handicapped persons during the year 1978;

(*b*) the years in which they were appointed;

(*c*) their percentage in the total number of persons working; and

(*d*) the nature of their physical disability?

உடல் ஊனமுற்றவர்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1978 ஆம் ஆண்டில் உடல் ஊனமுற்றோர்களை அதிகமாக வேலைக்கு நியமனம் செய்த அச்சகம் என்று குடியரசுத் தலைவர் விருது பெற்ற சென்னை, அரசு அச்சகத்தில் வேலை பார்த்து வருகின்ற உடல் ஊனமுற்றோர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்கள் எந்தெந்த வருஷங்களில் நியமிக்கப்பட்டவர்கள் ?

(உ) இவர்கள் மொத்த வேலை பார்க்கும் நபர்களில் எத்தனை சதவிகிதத்தினர் ?

(எ) இவர்கள் எத்தகைய உடல் ஊனமுற்றவர்கள் ?

---

@ 99-110 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) (1) முறை... பணியாளர்கள்—116.

(2) பயிற்சியாளர்கள்—20.

(இ) 1940 முதல் 1977 வரை நியமிக்கப்பட்டவர்கள்—முறையான ப... யாளர்கள் 116 பேர், பயிற்சியாளர்கள் 20 பேர்.

(ஈ) 2.11 சதவிகிதம்.

(உ) கீழே குறிப்பிட்டபடி:

திரு. எம். சங்காலிங்கம்: உடல் ஊனமுற்றவர்கள் 136 பேர்கள் சென் அச்சகத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 1967-க்குப்பின் வரை நியமிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்? 1967க்கு மு நியமிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் என்று தெரிந்துகொள்ள வி கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: என்னிடம் உள்ள குறி ஒவ்வொரு ஆண்டும் 1, 2 .... என்று தனித்தனியாகக் கொடுக்கப்பட் கிறது. அதை கூட்டி கணக்குச் சொல்ல வேண்டும். அதை நான் பெ மாகச் சொல்லியிருக்கிறேன். கல்லூரி முதல்வராக இருக்கின்ற எதிர்க் தலைவர் அவர்கள், வேண்டுமென்றால் அதைக் கூட்டித் தெரிந்துகொள்

திரு. ம. சங்காலிங்கம்: 1977-க்குப் பிறகு எத்தனை பேர்கள் ஊனமுற்றவர்கள் இந்த அச்சகத்தில் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, 197 2 பேர்.

## Unemployed Doctors.

*8 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. t Minister for Health be pleased to state the number of unemploy Doctors in Tamil Nadu as on 1st September 1977 even aft completing their internship?

### வேலை இல்லா டாக்டர்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்: 1—9—1977 அன்றுள்ளவாறு தமிழ்நாட்டில் எத்தனை டாக்டர் ...பட்டப் படிப்பு முடித்த பின்பும் வேலையில்லாமல் இருக்கிறார்கள்?

...ராய... பட்... (சட்டத்... ...ர்). ... இப்பே...

...நாராயணன், ...



மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: 1—9—1977-ல் உள்ளவாறு மருத்துவப் பணியாளர் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநரிடம் அரசு வேலை கோரி விண்ணப்பித்திருக்கும் டாக்டர்களின் எண்ணிக்கை 2,970.

திரு வே. தங்கப்பாண்டியன்: மொத்த எண்ணிக்கை 2,970 பேர்கள் என்று சொல்கின்றார்கள். ஏறத்தாழ 3,000 பேர்கள் இருக்கின்றார்கள். இன்றைக்கு எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது? டாக்டர்களுக்கு எந்த 'கைட் லைன்ஸ்' படி வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: 1—9—1977 தேதி வரை 320 ஆண்கள், 161 பெண்கள் தற்காலிக உதவி மருத்துவர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் எம்.பி., பி.எஸ். பட்டப்படிப்பு முடித்தபின் ஓராண்டு உள்ளிருப்புப் பயிற்சி முடித்து தங்களுடைய பெயர்களை மருத்துவத் துறை இயக்குநரிடம் பதிவு செய்துகொண்டவர்கள். தேவையான நேரத்தில் தற்காலிகமாக அவர்கள் நியமிக்கப்பட்டவர்கள். அதற்குப் பின் தேர்வாணைக் குழுவால் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் பெறுவார்கள். அது வரையில் அவர்கள் தற்காலிகமாகவே பணியாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: அரசு அவர்களைத் தற்காலிகமாக நியமிப்பது, அவர்கள் பெற்று இருக்கும் பயிற்சியின் அடிப்படையிலா அல்லது அவர்கள் தகுதி, திறமை இவைகளின் அடிப்படையிலா? அரசாங்கம் பயிற்சி பெற்ற டாக்டர்களுக்கு என்று தனிப்படுத்தி வேலை வாய்ப்பு தருகிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: அவர்களின் பதிவு எண்ணைப் பொறுத்தும், அவர்கள் பதிவு செய்த ஆண்டின் கணக்கின்படியும் எடுக்கப்படுகின்றார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: ஒரு ஆண்டிக்கு, எத்தனை டாக்டர்கள் படித்து பயிற்சி பெற்று வருகின்றார்கள், அவர்களில் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், விளக்கம் தரப்படும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: [1979 பிப்ர
பெயர்களைப் பதிவு செய்துகொண்டிருப்பதாகச் 2,970 டாக்டர்கள் வேலைக்காக த
பெயர். இதுவரை ஆக இருப்பவர்கள் எத்தனை பேர்; எம்.டி.,எம்
படித்தவர்கள், டிப்ளோமா ஹோல்டர்ஸ் எத்தனை பேர்? அப்படிப்பட்டவ
இதிலே இடம் பெற்றிருக்கின்றார்களா? அப்படியிருந்தால், அவர்களு
முன்னுரிமை கொடுக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: இங்குள்ள கேள்வியில் பொது
மருத்துவர்கள் என்ற வகையில்தான் கேட்கப்பட்டிருக்கிறது. இதுபற்
தனியாகக் கேள்வி போட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்
கூறலாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: பதிவு செய்யப்பட்ட 2,970 மருத்துவர்களி
சுமார் 500 பேர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அண்மையி
தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் ஆயிரத்திற்கு மே
பட்டவர்களும் இதில் உட்பட்டவர்கள். அதுபோக மீதி இப்போது வே
யில்லாமல் இருப்பவர்கள் எத்தனை பேர் என்று தோராயமாகக் கண
சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராஜன்: தனிக் கேள்வி போ
விவரம் தர முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: This is more or less what the hon. the Leader of the Opposition wanted to ask. Are these doctors recruited under rule 10 (a) (i) or are they being recruited through the Public Service Commission? This is what I would like to know.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: தலைவரவர்களே, 1—9—1977 தேதி வரையில் 370 பேர் ஆண்கள், 121 பேர் பெண்கள். அவர்கள் 10 (ஏ) (1)ன்படி தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி: கேள்விக்கு, துணைக் கேள்வி கேட்பது என் அனுமதிக்கப்படுகிறது. மூலக் கேள்விக்கு துணைக் கேள்வி கேட்கிறோம். கேள்வியை ஒட்டிய துணைக் கேள்வியைக் கேட்கலாம். எல்லாத் துணைக் கேள்விக்கும், தனிக் கேள்வி போடவேண்டும் என்று சொல்கின்றார்கள். டாக்டர்கள் கல்வித் தகுதி, பட்டப் படிப்பு பற்றி கேட்கிறோம். இதற்காக பட்டு இன்னொரு கேள்வி போடுவதானால், பதில் கிடைக்க எவ்வளவு காலம் இப்துணைக் கேள்விகள் மூலக்கேள்வியை ஒட்டியேதான் கேட்கப்படு

நாராய பட்ட
(சட்டத் ர்).
'லநாராயணன், த



கின்றன. அதனால்தான் நான் எழுந்து கேட்கிறேன். இல்லாவிட்டால் நான் எழுந்திருக்க மாட்டேன். அதற்கு ஓரளவுக்கு மரியாதை இருக்க வேண்டும். தனிக் கேள்வி போடுங்கள் என்பதற்காகவா கேள்வி போடுகிறோம்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: 1—9—1977 தேதியில் தமிழ் நாட்டில் எத்தனை பேர்கள் பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதுதான் மூலக் கேள்வி. அதற்கான பதிலைச் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நான் அமைச்சர் அவர்களிடத்திலே கேட்பது, மொத்தம் எம்.பி.பி.எஸ்., படித்து வேலையில்லாமல் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது. அப்படிப் பட்டம் பெற்றவர்களில் எம்.டி., எம்.எஸ்., டி.ஜி.ஓ., டிப்ளோமா ஹோல்டர்கள் இருந்தால், அவர்களுக்கு முன் உரிமை கொடுப்பதற்கு அரசாங்கத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: அந்தந்த மருத்துவ மனைகளின் தேவைக்கு ஏற்ப, அவர்களின் திறமை எங்கெங்கு தேவைப்படுகிறதோ அந்த அளவுக்கு அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU J. M. MIA KHAN: Sir, now evidently the recruitment has been made through the Public Service Commission. There are a few candidates now appointed on a temporary basis. Will the Government consider recruiting these temporary people also from the list of persons already interviewed and selected by the Public Service Commission?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.

திரு. ஆர். பாலசுப்ரமணியம்: அமைச்சர் அவர்கள் 2,970 பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். ஆனால் இது வரையிலே எத்தனையோ மருத்துவ மனைகள் டாக்டர்கள் இல்லாமல் இருக்கின்றன. இப்படி வேலையில்லாமல் இருக்கின்றவர்களையெல்லாம் வேலை போட்டால் என்ன? இதில் காலதாமதம் ஏன்?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: [illegible] இருக்கின்றன [illegible] இவர்களை [illegible] அமர் [illegible] இருக்கிறார்கள். [illegible] குழுவில் [illegible] படுகிறது.

திரு. க. [illegible]: [illegible] வேலையில்லாமல் இரு[illegible] வருகிறார்கள். [illegible] பணி [illegible] அரசுக்குத் தெரியுமா? அந்த [illegible] நடவடிக்கை எடுக்குமா?

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: இதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், விடை சொல்ல இயலும்.

திரு. க. இராமமூர்த்தி: [illegible] மருத்துவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அப்படியிருக்க, [illegible] நிலையைத் தவிர்க்கின்ற வகையில் அரசாங்க மருத்துவர்கள் தனியாக "கிளினிக்" வைத்து தொழில் செய்வதைத் தடுப்பதற்கு அரசு இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: அரசாங்க மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் தனியாகத் தொழில் செய்வதைத் தடுப்பதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

## *Nurses in Government Hospitals.*

* 9 *Q.*—THIRU D. SANTOSHAM: Will the Hon. Minister for Health be pleased to state—

(*a*) the average approximate ratio of nurses to the number of beds available in Government Hospitals; and

(*b*) whether there is any proposal to increase the number of nurses in proportion to the number of in-patients?

அரசு மருத்துவமனைகளில் செவிலியர்கள்.

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை, இப்[illegible]ர்களின் எண்ணிக்கை குறித்த தோராயமான சராசரி விகிதம் என்ன



(ஆ) மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: (அ) மருத்துவக் கல்லூரிகளோடு இணைக்கப்பெறாத மருத்துவ மனைகளில் 6 படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் விதமும், மருத்துவக் கல்லூரிகளோடு இணைக்கப்பட்ட மருத்துவ மனையில் 7 படுக்கைகளுக்கு 1 செவிலியர் விதமும் பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) படுக்கைகளுக்கான செவிலியர் விகிதாச்சாரத்தை தேவைக்கேற்ப திருத்தி அமைக்கவும் அதன்படி தேவையான செவிலியர்களை பணியில் அமர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. டி. சந்தோஷம்: மேல் நாடுகளுடன் ஒப்பிடும்போதும், பஞ்சாப் போன்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போதும் நம்முடைய மாநிலத்திலுள்ள செவிலியர்களின் எண்ணிக்கை விகிதாசாரம் மிகவும் குறைவு. அதுமாத்திரமல்ல, அவர்கள் நோயாளிகளைக் கவனிப்பதோடு, அவர்களுக்குச் சிறிதும் தொடர்பு இல்லாத cash book எழுதுதல், மருந்துக் கணக்கை எழுதுதல் இன்னும் தேவையில்லாத வேலைகள் தரப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அதன் காரணமாகத்தான் அவர்கள் நோயாளிகளுக்குச் சேவை செய்ய தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள இயலவில்லை என்ற ஒரு கருத்து இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கருத்து அரசின் கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டுவரப்பட்டுள்ளதா? கொண்டுவரப்பட்டுள்ளதென்றால், அரசு அது பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: பல வருடங்களுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களின்படி அந்தப் பணிகளை அவர்கள் செய்து வருகிறார்கள். ஆனால் இப்பொழுது அவற்றைத் திருத்தியமைக்கும் கருத்துரு மருத்துவக் கல்வி இயக்குநரிடமும், மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநரிடமும் கேட்கப்பட்டுள்ளது. அது வந்ததும் நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN: The Hon. Minister has given the ratio of nurses to beds very cleverly. May I know the ratio of nurses to patients, because there are many patients without beds in our hospitals? (Laughter)

[1979 பிப்...

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: அதனையும் [illegible] தரத்தை மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க முடி...

திரு. கோ. சி. மணி: செவிலியர்களின் வேலைப் பளு [illegible] அல்லது வேலையின் அடிப்படையிலா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: [illegible] காலத்திற்கு மு... ஏற்பட்ட [illegible] விதிகளின்படி இன்னின்ன வேலைகளை அவர்கள் வேண்டும் என்று [illegible], மாண்புமிகு உறுப்பினர் [illegible] செய்ய வேண்டும் என்று [illegible] இந்த அரசு வேலைப் பளுவைக் குறைப்ப... நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி: [illegible] இப்பொழுது வே... அவர்கள் செய்ய வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: [illegible] முறை இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறே...

திரு. ப. மாணிக்கம்: மருத்துவக் கல்லூரிகளோடு இணைக்கப்... மருத்துவ மனைகளில் 6 படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் வீதம்... கல்லூரிகளோடு இணைக்கப்படாத மருத்துவமனைகளில் 7 [illegible] களுக்கு ஒரு செவிலியர் வீதமும் பணிபுரிந்து வருவதாக அமைச்ச... குறிப்பிட்டார்கள். இதில் ஏன் இந்த மாறுபாடு இருக்க வேண்டும் என்... தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: ஏற்கெனவே ஏற்படுத்தப்... பட்ட விதிகளின்படி மருத்துவக் கல்லூரிகளோடு இணைக்கப் பெறாத [illegible] மனைகளில் 6 படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் வீதமும், மரு... கல்லூரிகளோடு இணைக்கப்பட்ட மருத்துவமனைகளில் 7 படுக்கைக... ஒரு செவிலியர் வீதமும் பணியாற்ற வேண்டுமென்று ஒரு முறையை [illegible] வைத்திருக்கிறார்கள். இது பற்றித் தனியாகக் கருத்து ஒன்றும் [illegible] யாது. இப்பொழுது இதையும் சேர்க்க அரசு நடவடிக்கை [illegible] வருகிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: செவிலியர்களுடைய வேலைப் பளு... களுடைய வேலைப் பளு மற்றும் அங்கு இருக்கின்ற எழுத்தர்களின் வே... ஆகியவற்றின் காரணமாக இப்பொழுது நோயாளிகளுக்குப் பல...

... நாராய... பட்ட... (சட்டத்... இ... ...ள்).

...லநாராயணன், ...



தொல்லைகள் இருந்துகொண்டிருக்கின்றன. நோயாளிகள் 2 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கியூவில் நிற்கக்கூடிய பரிதாபகரமான நிலை இருக்கிறது. மருத்துவத் துறையில் இருப்பவர்களின் ஓர்க் லோடை அசஸ் பண்ணி, அதன் அடிப்படையில் அவர்களை நியமிக்க அரசு ஒரு உயர் மட்டக்குழுவை ஏற்படுத்தி, 3 மாத காலத்திற்குள் அந்தக் குழுவின் அறிக்கையைப்பெற்று அந்த ரிப்போர்ட்டின் அடிப்படையில் இதைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: இதுபற்றி ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு, மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநர் ஆகியோரிடமிருந்து அதற்கான புள்ளிவிவரங்கள் கிடைக்கப்பெற்ற பிறகு, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister state whether these nurses are working on three shifts, two shifts or one shift?

The HON. THIRU R. SOUNDARARAJAN: Sir, they are working on three shifts.

*Family Benefit Scheme for Co-operative Spinning Mill Workers.*

*10 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Handlooms be pleased to state:—

(*a*) whether the workers of Kanyakumari district Co-operative Spinning Mills have sent any representation to the Government that the Family Benefit Scheme for Government Servants should be extended to the workers of the Co-operative Spinning Mills also; and

(*b*) if so, the action taken thereon?

கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு குடும்ப நலத் திட்டம்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கைத்தறி நெசவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்பநலத் திட்டத்தை (Family Benefit Scheme) கூட்டுறவு நூற்பாலைகளில் வேலை செய்து வரும் தொழிலாளர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று, கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்கள் கோரிக்கை ஏதேனும் அரசுக்கு அனுப்பி இருக்கிறார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

வினாக்க

மாண்புமிகு திரு. அர்

தாசாரத்தை



[illegible] தமிழ் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வேண் [illegible] [illegible] இ [illegible] [illegible] அறுவையில்லை.

அ [illegible] இல்லை.

[illegible] [illegible] [illegible] [illegible] வேண்டுமென்று [illegible] [illegible] என்ன?

மாண்புமிகு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கிறேன்.

திரு. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

மாண்புமிகு [illegible] [illegible] [illegible] [illegible] தெரிவித்து வருகிறது. [illegible]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

மாண்புமிகு [illegible] [illegible] (*)

(குறிப்பு [illegible] [illegible] என்பதைக் அவ்வுரை [illegible] குறிக்கும்.)





## 3. அறிவிப்புகள்.

### (1) வினாக்களை வினாப் பட்டியலில் சேர்ப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சட்டமன்ற மேலவை விதி 35-ன் படி வினாக்கள் தலைவரால் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து 42 நாட்களுக்குள்ளாக வினாப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். மேற்கண்ட கால அளவுக்குள் அதற்குரிய விடையை அனுப்ப முடியாவிட்டால் தலைவர் மேலும் 2 வாரங்களுக்குக் கால அவகாசம் நீட்டிக்கலாம். அப்படி நீட்டிக்கப்பட்ட காலத்திற்குப் பின், அவ்வினாக்கள் வினாப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்று மேலவை விதி தெளிவாகக் கூறுகிறது. காலம் கடந்தும் துறைகளிடமிருந்து 422 வினாக்களுக்கு இன்னும் விடை வரவில்லை. சட்டமன்ற மேலவைத் துறையிலிருந்து பலமுறை விடைகள் அனுப்பக் கோரி நினைவூட்டுக் கடிதங்கள் எழுதியும் இன்னும் அவைகளுக்குரிய விடைகள் வரப்பெறவில்லை. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர்களை இது குறித்துக் கவனித்து உடனடியாகத் தங்கள் துறைகளிடமிருந்து விடைகளை அனுப்ப ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்றக் கூட்டம் தொடர்ந்து 2 மாதங்கள் நடைபெறவிருப்பதால் வினாப்பட்டியலில் சேர்க்கப் போதுமான விடைகள் வரப்பெறாவிடில் மேற்கண்ட விதி 35-ன் படி விடைகள் வரப்பெறாத வினாக்களையும் வினாப்பட்டியலில் சேர்க்கும் நிலை ஏற்படும். அது நன்றாக இருக்காது. எனவே இச்சூழ்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு விடைகளை சீக்கிரம் அனுப்புமாறு துறைகளைப் பணிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மேலவைத் துறைக்கு கடந்த 9ஆம் தேதியே இதுசம்பந்தமாக ஒரு வேண்டுகோள் கொடுத்திருக்கிறேன். வினாக்கள்-விடைகள் நேரம் 'டல்' ஆக இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர்கள் வேண்டுமென்று இதைச் செய்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. சென்ற முறையும் இதே போன்ற பிரச்சினை ஏற்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதைத்தான் நான் அறிவித்துவிட்டேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** என்னுடைய கேள்வி அதுவல்ல. குறிப்பாக முதலமைச்சர் சார்ந்துள்ள போலீஸ் இலாகா சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு உடனுக்குடன் பதில் தருவது நல்லது.

வினா — விடை [illegible]

30. [illegible] வினாக்களை [illegible] குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : [illegible] [1979 பிப்ரவரி [illegible]

(பிற்பகல் 4.50)

திரு. கோ. வி. மணி : [illegible] அவர்களை [illegible] விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : [illegible] விரும்புகிறேன்.

திரு. கோ. வி. மணி : [illegible] இந்த அவையில் [illegible]

( ) [illegible] தீர்மானம் குறித்து.

[illegible] அறிவிக்கிறேன். [illegible] விரும்புகிறேன்.



(3) உரிமைப் பிரச்சினை குறித்து.

THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, may I have your leave? Sir, I have given notice of a privilege motion. I am requesting. . ..

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப்பற்றி தலைவருடைய அறைக்கு வந்து கேளுங்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(4) அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று பிற்பகல் 3½ மணிக்குக் கூடிய தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அறிவிக்க விரும்புகிறேன்.

| | |
|---|---|
| 12—2—1979 முதல் 17—2—1979 வரை | ஆளுநர் உரையின் மீது விவாதம் |
| 18—2—1979 | விடுமுறை |
| 19—2—1979 | தனியார் அலுவல்கள் |

மேற்கொண்டு நிகழ்ச்சி நிரல் பின்னர் முடிவு செய்யப்படும். மேலவை வழக்கம்போல் மீண்டும் நாளை மாலை 4 மணி முதல் 7 மணி வரை கூடும்.

(5) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள், 1979 பிப்ரவரித் திங்கள் 14-ஆம் நாள், புதன்கிழமை மாலை 5 மணிக்கு முன்னதாகச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

6) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு உறுப்பி[illegible] தேர்தல் குறித்து.

[1979 பிப்[illegible]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அண்ணாமலைப் பல்கலைக் [illegible] பேரவைக் குழுவிற்கு தமிழ்நாடு [illegible] உறுப்பின[illegible] களுக்குள் இருவரைத் தேர்ந்தெடுக்க [illegible] சார்ப் பிரதிநிதித்துவப்படி, ஒட்டுமொத்த மாற்று வாக்கு மூலம் [illegible] இத்தேர்தலுக்கு [illegible]

நியமனத்தாள்கள் [illegible] மாலை 5 மணி. [illegible] —14—2—

நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும்—14—2— மாலை 6 மணி.

நியமனத்தாள்களைத் திரும்பப்பெற [illegible] நாளும், நேரமும் 15—2—1979 மாலை 5 மணி.

வேட்பாளர் பட்டியலை வெளியிடுவதற்கான நாளும், நேரமும் 15—2—1979 மாலை 6 மணி.

தேர்தல் இருப்பின், அதற்கான நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத்தாள்களும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் [illegible] அகர வரிசைப் பட்டியலும் மேலவைச் செயலாளரிடமிருந்து அலு[illegible] நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

4. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவ[illegible] விதிகளின் 6-வது விதியின்கீழ், மேலவையின் 55-வது கூட்டத் தொடருக்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமித்துள்ளேன்:

1. திரு. க. என். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. க. இராமமூர்த்தி.
[illegible] பத்தாகினி கிருஷ்ணமூர்த்[illegible]



## 5. தகவல் கோரல்.

### 'அரசாங்கத் தொலைபேசி எண்கள் கொண்ட புத்தகம்' உறுப்பினர்களுக்கு அளிப்பது குறித்து.

*திரு. க. இராமமூர்த்தி: I rise on a point of order, Sir. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு துணைபுரிவதற்காக, அவர்களுடைய அலுவல்களை அவர்கள் முறையாக நடத்திக்கொள்வதற்காக, அவர்களுக்குத் தகவல் தருவதற்காக என்றெல்லாம் பல்வேறு வசதிகள் செய்து தரப் பட்டாலும், இங்கே உள்ளது போன்ற அரசாங்கக் குறிப்புகள் எல்லாம் மிக அதிகமான பணச் செலவில் தயாரித்து அளிக்கப்பட்டாலும், ஒரு சிறு குறை இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவையினுடைய உறுப்பினர்கள் அரசாங்க அதிகாரிகளோடு பல்வேறு துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கு வழிவகை செய்யுமளவுக்கு அரசாங்கத்தால் வெளியிடப்படும் 'தொலைபேசி **எண்கள்** கொண்ட புத்தகம்' ஒன்று—அதன் விலை ரூ. 5 என்று நினைக்கிறேன்—அந்த ரூபாய் 5 கொடுத்து வாங்கிக்கொள்வது என்பது வேறு—உறுப்பினர்களுக்குத் தரப்பட வேண்டுமென்று திரும்பத் திரும்பக் கேட்டும் இதுவரை எங்களுக்கு தரப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக் காட்டுவதோடு, இதனால் ஏதோ வேண்டுமென்றே உறுப்பினர்களைக் குறைத்து மதிப்பிடுகிற நிலையை உருவாக்குகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. பல்வேறு துறைகளில் பணியாற்றுகிறவர்கள், மற்றும் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுபோன்ற நிலைமைகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்களோ என்ற சந்தேகத்தைக்கூட உருவாக்கியிருக்கிறது. நாடாளுமன்றத்தில் இந்த வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இங்கே தற்போது அமைச்சர் பெருமக்களாக அமர்ந்திருக்கும் பலர் பாராளுமன்றத்தில் நீண்ட நாட்கள் பணியாற்றியவர்கள். அங்கெல்லாம் இதுபோன்று தரப்படுகிறது என்பது மட்டுமல்ல, நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் இந்த வசதி செய்து தரப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, தலைவர் அவர்கள் இதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 'அரசாங்கத் தொலைபேசி எண்கள்' கொண்ட புத்தகம் தேவைப்படும் உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டால் தரப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [illegible] கேள்வி களைப் பட்டியலில் சேர்த்து விடுகிறேன்.

(பிற்பகல் 4.50)

திரு. கோ. சி. மணி : [illegible] அவர்களே, நாங்கள் இரண்டாவது முறையாக இந்த [illegible] அறிவித்திருக்கிறீர்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்களைப் பட்டியலில் போடு கிறேன் என்று சொன்னதை இதுதான் [illegible] சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. கோ. சி. மணி : வினாக்களுக்குப் பதில் [illegible] முறைகளைப் பொறுத்தவரையில், தேக்கம் இருக்கிறது என்று [illegible] சொல்லியிருக் கிறீர்கள். இப்போது இரண்டாவது முறையாக [illegible] இந்த அவையில் நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள் [illegible] விரும்பு கிறேன்.

(2) ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திருவாளர்கள் இராம மூர்த்தி, தங்கப்பாண்டியன், கோ. சி. மணி, [illegible] ஆகியோர் மற்றும் சில உறுப்பினர்களின் ஆணையோடு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிப் பைக் கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றி நான் நாளை அறிவிக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நானும் ஒத்தி வைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறேன். என்னுடைய தீர்மானத் தைப் பற்றி . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. வீராசாமி என் பெயரைச் சொல்லவில்லை. எனவேதான் பொதுவாக நான் குறிப்பிட்ட உறுப்பினர்கள் மற்றவர்களோடு சேர்ந்து ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றை கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன். தனியாக உங்கள் பெயரைச் சொல்லவில்லை என்றால் சொல்லிவிடுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : என்னுடைய பெயரைச் சொல்ல வேண்டும் என்பதற்காக நான் இங்கே குறிப்பிடவில்லை. மற்றவர்களோடும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம் என்று கவனப்படுத்த விரும்புகிறேன்.



(3) உரிமைப் பிரச்சினை குறித்து.

THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, may I have your leave? Sir, I have given notice of a privilege motion. I am requesting. . ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி தலைவருடைய அறைக்கு வந்து கேளுங்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(4) அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று பிற்பகல் 3½ மணிக்குக் கூடிய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அறிவிக்க விரும்புகிறேன்.

| | |
|---|---|
| 12—2—1979 முதல் 17—2—1979 வரை | ஆளுநர் உரையின் மீது விவாதம் |
| 18—2—1979 | விடுமுறை |
| 19—2—1979 | தனியார் அலுவல்கள் |

மேற்கொண்ட நிகழ்ச்சி நிரல் பின்னர் முடிவு செய்யப்படும். பேரவை [illegible] மாலை 4 மணி முதல் 7 மணி வரை கூடும். [illegible]

(5) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள், 1979 பிப்ரவரித் திங்கள் 14-ஆம் நாள், புதன்கிழமை மாலை 5 மணிக்கு முன்னதாகச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

6) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு உறுப்பினர்
தேர்தல் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அண்ணாமலைப் பல்கலைக் கழ
பேரவைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்
தங்களுள் இருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இத்தேர்தல் விகிதா
சாரப் பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வாக்கு மூலம் நடைபெறு
இத்தேர்தலுக்கு பின்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

நியமனத்தாள்கள் பெற்றுச் சேர கடைசி நாளும், நேரமும்—14—2—19
மாலை 5 மணி.

நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும்—14—2—19
மாலை 6 மணி.

நியமனத்தாள்களைத் திரும்பப்பெற கடைசி நாளும், நேரமும்—
15—2—1979 மாலை 5 மணி.

வேட்பாளர் பட்டியலை வெளியிடுவதற்கான நாளும், நேரமும்—
15—2—1979 மாலை 6 மணி.

தேர்தல் இருப்பின், அதற்கான நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத்தாள்களும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின்
அகர வரிசைப் பட்டியலும் மேலவைச் செயலாளரிடமிருந்து அலுவல்
நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

4. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்ற மேலவை
விதிகளின் 6-வது விதியின்கீழ், மேலவையின் 55-வது கூட்டத் தொடருக்குக்
கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம்
பெறுமாறு நான் நியமித்துள்ளேன் :

1. திரு. ச. எஸ். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. க. இராமமூர்த்தி.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி



5. தகவல் கோரல்.

'அரசாங்கத் தொலைபேசி எண்கள் கொண்ட புத்தகம்' உறுப்பினர்களுக்கு
அளிப்பது குறித்து.

*** திரு. க. இராமமூர்த்தி :** I rise on a point of order, Sir.
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு துணைபுரிவதற்காக, அவர்களுடைய அலுவல்களை அவர்கள் முறையாக நடத்திக்கொள்வதற்காக, அவர்களுக்குத் தகவல் தருவதற்காக என்றெல்லாம் பல்வேறு வசதிகள் செய்து தரப் பட்டாலும், இங்கே உள்ளது போன்ற அரசாங்கக் குறிப்புகள் எல்லாம் மிக அதிகமான பணச் செலவில் தயாரித்து அளிக்கப்பட்டாலும், ஒரு சிறு குறை இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவையினுடைய உறுப்பினர்கள் அரசாங்க அதிகாரிகளோடு பல்வேறு துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கு வழிவகை செய்யுமளவுக்கு அரசாங்கத்தால் வெளியிடப்படும் 'தொலைபேசி எண்கள் கொண்ட புத்தகம்' ஒன்று—அதன் விலை ரூ. 5 என்று நினைக்கிறேன்—அதை ரூபாய் 5 கொடுத்து வாங்கிக்கொள்வது என்பது வேறு—உறுப்பினர் களுக்குத் தரப்பட வேண்டுமென்று திரும்பத் திரும்பக் கேட்டும் இதுவரை ...ங்களுக்கு தரப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக் காட்டு ...தோடு, இதனால் ஏதோ வேண்டுமென்றே உறுப்பினர்களைக் குறைத்து ...திப்பிடுகிற நிலையை உருவாக்குகிறார்களோ என்று எண்ணத் ...தோன்றுகிறது. பல்வேறு துறைகளில் பணியாற்றுகிறவர்கள், மற்றும் இது ...ம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுபோன்ற நிலைமைகளில் தங்களை ஈடு ...டுத்திக்கொள்கிறார்களோ என்ற சந்தேகத்தைக்கூட உருவாக்கியிருக்கிறது. ...ாடாளுமன்றத்தில் இந்த வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இங்கே ...ற்போது அமைச்சர் பெருமக்களாக அமர்ந்திருக்கும் பலர் பாராளுமன்றத்தில் ...ீண்ட நாட்கள் பணியாற்றியவர்கள். அங்கெல்லாம் இதுபோன்று ...ரப்படுகிறது என்பது மட்டுமல்ல, நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் இந்த ...சதி செய்து தரப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, தலைவர் ...வர்கள் இதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'அரசாங்கத் தொலைபேசி எண்கள்' ...காண்ட புத்தகம் தேவைப்படும் உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டால் தரப் ...டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

வெளியிட்டபோது, எப்படி நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இந்தக் காரியங்களை எல்லாம் செய்வோம் என்றார்களோ, அதை இன்றையதினம் செயல்படுத்தி கொண்டு வருகிறார்கள். இன்னும் பல விஷயங்களைச் செய்ய வேண்டி யிருக்கிறது. அன்றைக்குச் சொன்ன பல காரியங்களை இன்றைக்கு செயல்படுத்தி வருகிறார்கள், நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் என்பதை புள்ளிவிவரத்தோடு சுட்டிக் காட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

முதலாவதாக 1977 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் 5-வது பாராவில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது "அத்தியாவசியமான பொருள்கள் மலிவான விலையில் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய அளவுக்கு நிலைமையை உருவாக்குவோம்" என்ற ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள் ஆட்சிக்கு வந்தால் இதைச் செய்வோம் என்றார்கள்.

(பிற்பகல் 5.00)

சென்ற கவர்னர் பேருரைக்கு முன்பாகவே அவர்கள் கோடிட்டுக் காட்டித் தெளிவுபடுத்தினார்கள். தேர்தல் அறிக்கையிலே பாரா ஐந்தில் சொல்லி யிருக்கக் கூடிய அந்தக் கருத்து இன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. கிராமந் தோறும் நியாய விலைக் கடைகள் என்று சொன்னார்கள் அன்றைக்கு 'உங்களால் முடியுமா?' என்று கேட்டார்கள். 'இதனுடைய இம்ப்ளிகேஷனைத் தெரிந்துகொள்ளாமல் அறிவித்துவிட்டார்கள். இதை நடைமுறைப்படுத்த முடியுமா?' என்று கேட்டார்கள். ஆனால் அது முடியும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லி, 1979-ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் தேதி முடிய 13,400 கிராமங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்று இன்று தெரிவித்திருக் கிறார்கள். அவர்கள் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டதை நடைமுறைப் படுத்தியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இப்படி வேறு எந்த அரசாங்கமாவது திட்டவட்டமாக அறிவித்ததை நடைமுறைப் படுத்தியிருக்கிறதா என்றால், என்னைப் பொறுத்த வரையிலே, இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவதாக, கொள்முதல் திட்டத்திலே உள்ள குறைபாடுகளை நீக்குதல். இது தேர்தல் அறிக்கையிலே பாரா 6 (அ)-வில் இடம் பெற்றி ருக்கிறது. கொள்முதல் விஷயம் நம்முடைய தஞ்சை விவசாயிகளுக்கு ...ந்த வேதனை கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. நெல் கொள்முதல் ...நோக்கில், அவர்களுக்குரிய விலை கிடைக்கவில்லை என்ற குறை



இருந்து வந்திருக்கிறது. தொடர்ந்து பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகளாக இருந்து வந்த அந்தச் சிக்கலை படிப்படியாகத் தீர்த்துக்கொள்ளக்கூடிய பாதையிலே இந்த அரசாங்கம் போய்க்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கோதுமைக்குக் கொடுக்கக் கூடிய அளவுக்கு நெல்லுக்கும் விலை கொடுக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். இதற்கு முன் இருந்தவர்கள், ஏதோ ஒரு பத்து ரூபாயை அதிகமாகக் கொடுங்கள் என்று தான் சொன்னார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோதுமைக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, பாரா 2 (அ)-வில், 'மின்சார வெட்டை அறவே நீக்கு வதற்காக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், முயற்சி எடுத்துக்கொள்ளும்' என்று சொன்னார்கள். அந்தத் தேர்தல் அறிக்கையின் அடிப்படையிலே 110 மெகாவாட் திறனுள்ள குந்தா மின் திட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள். தூத்துக்குடி அனல் மின் நிலை யத்திலே 210 மெகாவாட் வரக்கூடிய அளவுக்கு நிலைமைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒகேனக்கல் திட்டமும் வரக்கூடிய அளவுக்கு இருக்கிறது.

அடுத்தபடியாக, சிறு தொழில்களைப்பற்றி பாரா 3(இ)-ல் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் துவங்கிட ஊக்கம் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது தமிழ்நாடு மினரல் கார்ப்பரேஷன் என்று உருவாக்கப்பட்டு, அதற்குப் பிறகு இன்னும் மேக்னசைட் தாதுப்பொருளை எப்படியெல்லாம் பயன்படுத்துவது என்ற திட்டத்திலே நம்முடைய ஆட்சி ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, உண்மையாகவே அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, காலதாமதம் இல்லாமல் நீதி கிடைக்குமாறு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். "Justice delayed is justice denied" என்று. ஏறத்தாழ கடந்த நான்கைந்து ஆண்டுகளாக உயர்நீதி மன்றத்திலேகூட எவ்வளவோ கோப்புகள் இருந்துகொண்டு, ஜட்ஜ்மெண்ட் தள்ளி வைக்கக்கூடிய நிலைமை இருந்து வந்தது. இதையெல்லாம் 1977 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே...

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1979 பிப்ரவரி 1

பிட்டிருக்கிறார்கள். அதற்காக இப்போது உயர்நீதி மன்றத்தில் கூடுதலாக நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதனை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே மாதிரியாக கிராம முன்னேற்றம் பற்றியும் பாரா 12-ல் சொல்லியிருக்கிறோம். அதையும் செய்து கொண்டு வருகிறோம். கல்வியைப் பொறுத்த வரையில், பாரா 10-ல் குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு நேரத்தில் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கப்பட்டது. "நீங்கள் வந்த பிறகு புரட்சிகரமாக என்ன திட்டத்தைச் செய்தீர்கள்?" என்று கேட்டார்கள். அப்போது அவர் சொன்ன பதில் என்னுடைய காதில் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. 'கல்லூரிப் படிப்பு என்றால், பெரிய நகரத்திற்கு வர வேண்டிய நிலை இருந்ததை மாற்றி, கல்லூரிப் படிப்பை கிராமத்திற்குக் கொண்டு போயிருக்கிறோம்' என்று சொன்னார்கள். அதுதான் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே நடைபெற்றிருக்கக் கூடிய புரட்சிகரமான திட்டம் என்று சொன்னார்கள். இந்தக் கல்லூரிகளில் எல்லாம் ஹையர் செகண்டரி படிப்பு வந்திருக்குமானால் என்ன ஆகியிருக்கும்? பல பேர் கிராமத்திலிருந்து நகரத்திற்கு வர வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் அதை மாற்றி கிராமத்தில் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளில் ஹையர் செகண்டரி படிப்பைக் கொண்டு சென்றிருக்கக் கூடிய நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. அது கிராமத்திற்குத் தந்திருக்கக்கூடிய முக்கியத்துவம் என்று சொன்னால் மிகையாகாது.

பாரா 16-ல் அரசு ஊழியர்களைப்பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது, 'அரசு ஊழியர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பற்றிப் பரிசீலிக்க தனிக் குழு அமைப்போம்' என்று சொன்னார்கள். அதை உடனடியாக அமைத்தார்கள். ஆனால் எதிர்க் கட்சியினர் தாங்கள் வற்புறுத்தியதால்தான் அமைக்கப்பட்டது என்று நினைக்கக்கூடும். ஆனால் ஏற்கெனவே தேர்தல் அறிக்கையிலேயே இது சொல்லப்பட்டுவிட்டது. அதைத் தான் நடைமுறைப்படுத்தியிருக்கிறோம்.

அடுத்தபடியாக கட்சிக் கண்ணோட்டம் இன்றி அனைவருக்கும் பொது என்ற வகையிலே ஆட்சி செயல்படும் என்று பாரா 1 (உ) பிரிவில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய எதிர்க் கட்சி நண்பர்கள், நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களைச் சொல்லவில்லை, தோழர்கள் இந்த ஆட்சி, கட்சிக்குச் சொந்தமாக இருக்கக் கூடிய



1979 பிப்ரவரி 12] [டாக்டர் எச். வி. ஹண்டே]

ஆட்சி, ஆளும் கட்சிக்காக நடைபெறுகிற ஆட்சி என்று குற்றம் சொல்லுகிறார்கள் என்றால், அவர்கள் அப்படிச் சொன்னால்தான், பொது மக்கள் மத்தியிலே மதிப்பைப் பெற முடியும் என்ற நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லுவதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்த ஆட்சி பொது மக்களுக்குச் சொந்தமான ஆட்சி. கட்சிக் கண்ணோட்டத்திலே ஆட்சி செய்யவில்லை என்பதை ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகிறேன். இதை நாங்கள் தேர்தல் அறிக்கையிலேயே அறிவித்திருக்கிறோம் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆட்சியைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு நடத்திய அந்தப் பழைய நிலைமையை மாற்றியமைத்து இன்றைய தினம் பொதுவாக அத்தனை பேருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் தோழர்களாக இருந்தாலும் சரி, அத்தனை பேருக்கும் சொந்தம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறதா என்பதை நான் இங்கே உணர்த்தியாக வேண்டும். இது குறித்து குறிப்பிட்டுக் காட்ட வேண்டுமென்றால், மூன்று விஷயங்களை உதாரணமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்னிடம் நிறைய விஷயங்களைப்பற்றிச் சொல்ல பட்டியல் இருந்தாலும், நிறைய நேரம் பிடிக்கும் என்பதால் மூன்று விஷயங்களை மட்டும் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் சிறந்தவர்களுக்கு அவர்கள் கலைத் துறையில் இருந்தாலும் சரி, மற்ற துறையில் இருந்தாலும் சரி, அவர்களுக்கு நல்ல வகையிலே மரியாதை கொடுக்க வேண்டும், அவர்களுடைய திறமைகளை நாம் பொது மக்களுக்கு உணர்த்தியாக வேண்டும் என்ற அடிப்படையிலே சில காரியங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலே உள்ள அனைவருக்கும் தெரியும், 1964ஆம் ஆண்டில் திரு. கக்கன் அவர்கள் உள்துறை அமைச்சராக இருந்தார் என்பது. அவர் அமைச்சராக இருந்த நேரத்தில், அவரை யாரும் குறை சொன்னது கிடையாது. ஏனென்றால் அந்த அளவுக்கு அவர் நல்ல வகையிலே நேர்மையான முறையிலே நிர்வாகத்தை நடத்தி வந்தார். அவரால் எப்படி அவ்வளவு நல்ல முறையில் எல்லோரிடமும் நடந்துகொள்ள முடிகிறது என்று வியப்பு அடையக் கூடிய நிலைமை இருந்தது. அவருடைய அந்த நல்ல பண்பை முன்மாதிரியாக பொது மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்று, அவர் எந்தக் கட்சியாக இருந்தாலும், அவருக்குத் தகுந்த மரியாதையை இந்த அரசு அளித்திருக்கிறது. அப்படி அவருக்கு மரியாதை செலுத்துவதன் மூலம் நமக்கு நாமே மரியாதை செலுத்துவதாக அமையும் என்ற அடிப்படையிலே செய்திருக்கிறார்கள். தேசியத் தலைவர்கள் எந்தக் கட்சி

சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கும் மரியாதை செய்தி இறார்கள். குறிப்பாக நம்முடைய மதிப்பிற்குரிய பெருந் தலைவர் அவர் தமிழகத்திற்கு மட்டுமல்லாமல் நம்முடைய நாட்டிற்கே பல கட்டங்கள் பெருமையைத் தேடிக் கொடுத்தவர் என்பதை வருங்காலச் சந்ததியி உணர வேண்டும் என்பதற்காக அவருடைய பிறந்த நாளை தே விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படு யிருக்கிறார்கள். இன்னும் பல விஷயங்கள் உள்ளன. இப்படி தேர் அறிக்கையிலே உள்ளவற்றையெல்லாம் நல்ல முறையில் நடத்திக்கொண் ருக்கிற இந்த ஆட்சியைப் பார்த்து, நம்முடைய நண்பர்கள், குறிப்ப எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள், தீவிரமாகத் தாக்கி குறை கூறுகிறார்க என்பதை எண்ணிப் பார்த்து மிகவும் வேதனை அடைகிறேன்.

(பிற்பகல் 5.10)

இருந்தாலும்கூட, இவ்வளவு நன்றாக நடைபெறும் இந்த ஆட்சிை கண்டு, நம்முடைய நண்பர்கள், குறிப்பாக எதிர்க்கட்சியில் இருந்துகொண் தீவிரமாகத் தாக்கிக் கூறினால் பயனடையலாமென்று நினைக்கிறவர்க குறை கூறுகிறார்களென்று நினைக்கும்போது வேதனையடைகிறே உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். இந்த அரசு ஆட்சிப் பொறுப்ல ஏற்றுக்கொண்டது ஜூன் மாத இறுதியில். ஏறத்தாழ ஒன்றரை ஆண்டு காலம் முடிந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந் போது, குறிப்பாக அன்றைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு, மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் பெருந்தன்ல யோடு ஒன்று சொன்னார்கள். "ஆட்சியை முதன்முதலாக நடத்துகிறார் அவர்களுக்கு 6 மாதங்கள் எந்தவிதமான இடைஞ்சலும் கொடுக்கமாட்டேன், அவர்களுக்கு வாய்ப்பு தருவோம், என்ன தவறு செய்கிறார்களென்று பார்ப் போம், பிறகு பேசுகிறேன், ஆறு மாதங்களுக்குப் பேச மாட்டேன், எந்த மான போராட்டத்திலும் ஈடுபட மாட்டேன்" என்று சொன்னார்கள். இப்போது நான் ஒரு எதிர்க்கட்சித் தலைவரை குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை. அவர்கள் மீது நிரம்ப மரியாதை எனக்கு இருக்கிறது. எனக்கு இருக்கிற வேதனையெல்லாம், என்ன செய்தாலும் தவறு என்று சொல்ல வேண்டும்; குற்றம் குறை கூற வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒருவன் திருமணம் செய்கிறான். எதிர்த்த வீட்டிலே அவனுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்று இந்த வீட்டிலே இருக்கிற னுக்கு எண்ணம் வந்தது. அவன் நல்ல காரியத்தில் ஈடுபட்டிருக்கிறான், அவனுக்குத் தொல்லை கொடுக்க என்ன வழி என்று இவனுக்குத் தெரிய வில்லை. பக்கத்திலுள்ள ஒருவன் யோசனை கூறினான். நீ ஒன்றும் செய்ய





வேண்டாம், திருமணத்திற்கு அவன் அழைப்பு கொடுத்தால், என் வீட்டிற்கு ஏன் அழைப்பு கொடுத்தாய் என்று கேள். அழைப்பு அவன் கொடுக்க வில்லை என்றால், ஏன் கொடுக்கவில்லை என்று கேள் என்று சொன்னானாம். இப்படி ஒரு கதை இருக்கிறது. ஒரு ஆட்சி என்ன நல்லது செய்தாலும், ஒரு சாராருக்குத் திருப்தி கிடையாது. ஆட்சியைக் குறை சொல்ல வேண்டும், எப்படியாவது ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும், தொல்லை கொடுக்க வேண்டும் என்ற கற்பனை உலகத்தில் தங்களை ஆட்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் சிலர். இதனால் யாருக்குப் பாதிப்பு? இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டு மென்ற காரியத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தெரியும். இதைக் கவிழ்க்க முடியுமென்பது பகற் கனவாகிவிட்டது. அதை அவர்கள் இப்போது படிப் படியாக உணர்கிறார்கள். என்ன செய்தாலும் இந்த ஆட்சி நடக்கும், இதைக் கவிழ்க்க முடியாதென்று மதுரைத் தேர்தலுக்குப் பிறகு நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் என்ன செய்தார்கள்? கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக ஒவ்வொரு போராட்டமாக நடத்திக்கொண்டு வந்தார்கள். வேறு எதையும் செய்ய முடியவில்லை. எதிர்க் கட்சியிலே தீவிரமாக இருக்கும் நண்பர்கள்—நம்முடைய மேலவை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அவ்வளவு தீவிரமாக இல்லை, அவருடைய நண்பர்களைச் சொல்கிறேன்—எப்படியாவது இந்த அரசுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்று நினைத்து, போராட்டத்தை ஆரம்பித்தார்கள். முதன்முதலாக போக்குவரத்து எப்படியாவது ஸ்தம்பித்துப் போக வேண்டுமென்று ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். முதலமைச்ச ரவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் அல்லவா, அவருக்கு அனுபவமில்லை, எப்படியாவது போக்குவரத்து ஸ்தம்பிக்கும் நிலைமை உருவாக்கினால், சென்னையில் உள்ள மக்களும், மற்ற மாவட்டங்களில் உள்ள மக்களும் இந்த ஆட்சி திறமையற்ற ஆட்சி என்று சொல்லக் கூடுமென்று நினைத்து அந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் என்ன நடந்தது. பொது மக்கள் ஒத்துழைப்பு அவர்களுக்குக் கொஞ்சங்கூட கிடைக்கவில்லை. அதாவது அந்தப் போராட்டத்தைத் துவக்கிய நண்பர் களுக்கு பொது மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. இவர்களுக்கு வேறு வேலையில்லை, இப்போதுதான் கட்சி ஆட்சிக்கு வந்திருக்கிறது, உடனடியாக இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கூறும் அளவிற்கு பொது மக்களுடைய வெறுப்பைத்தான் சம்பாதிக்க முடிந்தது. பொது மக்களின் ஆதரவை அவர்களால் திரட்ட முடியவில்லை என்பது அவர்களுக்கே தெரியும். அந்தப் போராட்டத்தைப் பிறகு கைவிட்டார்கள்.

அமெரிக்காவிலே ... நீங்கள் போராட்டம் ஆரம்பியுங்கள் என்று சொல்லி, போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இந்தப் போராட்டத்தைப் பார்த்து முதலமைச்சரவர்கள் என்ன பண்ணுவது என்று தெரியாமல் ... ஆரம்பித்தார்கள். ஆரம்பித்தவர்களுக்கே தெரியும், விவசாயிகளைப் பொறுத்த வரையில், மத்திய அரசினுடைய தாக்கீது இருக்கிறதென்றும், மாநில அரசு இதில் ஒன்றும் செய்வதற்கில்லை என்றும். கொள்முதல் விலையை மத்திய அரசு நிர்ணயிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, மத்திய அரசு பல முறை தாக்கீது அனுப்பியிருக்கிறது. வரி விதிக்காமல், you are neglecting to tax the farm-sector என்று. எந்தக் கட்சி நிதியமைச்சர் இருந்தாலும், மத்தியிலிருந்து கடிதம் வருகிறது. நம்முடைய முன்னாள் முதலமைச்சரவர்கள்கூட அப்படிப்பட்ட கடிதத்தைப் படித்தார்கள். இந்தப் போராட்டத்திலும் அவர்களாலே இப்படிப் பேசுவது மரபாக இருக்கிறது, அதனால் கூறுகிறேன்—ஒன்றும் செய்ய முடியவில்லை.

அடுத்து இன்னொரு ஆயுதத்தைப் பயன்படுத்தினார்கள். ஒரே உதாரணத்தைச் சொல்கிறேன். டி.ஐ. சைக்கிள் தொழிலாளர்கள் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அந்த நிறுவனத்திலே பணியாற்றும் தொழிலாளர்கள் எவ்வளவு அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்களென்பது அவர்களுடன் தினந்தோறும் தொடர்பு கொண்டவன் என்ற முறையில் எனக்குத் தெரியும். பல மாதங்கள் பட்டினி கிடந்தார்கள். டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலையை மீண்டும் துவக்க வேண்டுமென்று எவ்வளவு போராட்டங்களை செய்தார்கள் என்பதை உணர்த்த வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலையைத் துவக்க வேண்டுமென்று சொன்னது யார்? நம்முடைய தொழிற் சங்கத் தலைவர்கள், அதைத் துவக்கவில்லை என்றால் போராட்டம் நடத்துவோமென்று சொல்லி, உண்ணாவிரதம் இருந்தார்கள். டி.ஐ. சைக்கிள் மேனேஜ்மென்டை எதிர்த்து ஊர்வலம் நடத்தி, அந்த ஊர்வலம் கோட்டையை நோக்கி வரும் நிலைமை ஏற்பட்டது. இங்கே ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். மனச்சாட்சியோடு பேச வேண்டும். எந்த மாநிலத்திலாவது, எந்த முதலமைச்சராவது இம்மாதிரி காரியங்களுக்காக பப்ளிக் ஹாலிடே டிக்ளேர் செய்திருக்கிறார்களா? எல்லா நிறுவனங்களுக்கும் விடுமுறை கொடுத்து, அந்தப் போராட்டத்திற்கு அரசு ஆதரவாக இருக்கிறதென்று தெரிவித்தார்கள். தொழிற் சங்கத் தலைவர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களுடைய





மனச்சாட்சி எப்படி இருந்திருக்கும்? ஒரு அரசாங்கம் தொழிற் சங்கப் போராட்டத்தை இந்த அளவிற்கு ஆதரித்து, நல்லதொரு நிலைமையை உருவாக்கும்போது, அதைப் பாராட்ட வேண்டாமா? பாராட்டினார்களா?

அதற்குப் பிறகு ஒரு மதிப்பிற்குரிய தொழிற் சங்கத் தலைவர்—பெயரைக் குறிப்பிடவில்லை, அவர் சட்ட மன்றத்தில் இல்லாததால், அவர் பெயரைக் குறிப்பிடுவது மரபல்ல—உண்ணாவிரதம் இருந்தார். அவர் உண்ணாவிரதம் தொடர்ந்து இருந்து, அது முற்றி பயங்கரமான நிலைமைகள் உருவாகி, அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு, இன்னும் பல பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு, ரணபூமியாகி, தமிழ் நாட்டில் Land and order failed

என்று சொல்லும் நிலை உருவாகாதா என்று சிலர் கற்பனை செய்திருக்கலாம். யார் அவ்வாறு கற்பனை செய்திருப்பார்களென்ற ஆராய்ச்சிக்கு நான் செல்ல விரும்பவில்லை. தொழிற் சங்கத் தலைவர் உண்ணாவிரதம் இருக்கிறார் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிந்தவுடன், அவர்களைப் பார்த்து உண்ணாவிரதத்தைக் கை விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். எப்படி நான் உண்ணாவிரதத்தைக் கை விடுவது, டி.ஐ. சைக்கிள் தொழிலாளி அவஸ்தைப்படுகிறானே, வேதனைப்படுகிறானே என்று அவர்கள் கேட்டார்கள். அப்போது நம்முடைய முதலமைச்சரவர்கள், நான் அந்த டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலையைத் துவக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். சிம்சன் கம்பெனியில் ஒரு போராட்டம் நடந்தது. சிம்சன் தொழிற்சாலையில் 95 லட்சம் ரூபாய் போனஸ் 1972ஆம் ஆண்டு கொடுத்தார்கள். அந்தத் தொழிற்சாலையில் 15,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஒருவருக்கு 600 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை போனஸ் கொடுத்தார்கள். அப்படிப்பட்ட நல்ல தொழிற்சாலை அது. அந்தத் தொழிற்சாலை குட்டிச்சுவர் ஆகும் அளவிற்கு, நாசமாகும் அளவிற்கு கிட்டத்தட்ட ஓராண்டு போராட்டம் நடந்தது. எத்தனை முறை சட்டப் பேரவையிலும், சட்ட மேலவையிலும் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும். கடைசியாக மூவர் குழு போடப்பட்டது. நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள்கூட இங்கே இருக்கிறார்கள். அந்த நேரத்தில் அவர்கள்கூட தீவிரமாகப் பாடுபட்டார்கள். 'சிம்ஸன் நிறுவனம்' அப்படியே

(பிற்பகல் 5-20.)

இருந்துகொண்டிருக்கிறது. அந்த நிறுவனம் ரூ. 30 லட்சம் அல்லது ரூ. 40 லட்சம் அளவுக்குக்கூட போனஸ் தரமுடியாத அளவுக்கு இருக்கிறது. நன்றாக நடந்துகொண்டிருந்த நிறுவனம் நசுக்கப்பட்டு, பாழாக்கப்பட்டது.

அதேபோல் டி.ஐ. சைக்கிள் நிறுவனம் மூடாமல் இருந்தது. "அதை
திறக்க முயற்சிக்க வேண்டும், இல்லாவிட்டால் நாங்கள் உண்ணாவி…
இருப்போம், அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றார்கள்.
நிறுவனத்தைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று செ…
நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான நடவடி…
எடுத்தார்கள். அப்படி நடவடிக்கை எடுத்த பிறகு, 'ஏன் தொடங்கி…
என்பதுபோல நடந்துகொள்கிறார்கள். நான் மாண்புமிகு அங்கத்தின…
மத்தியிலே சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் எண்ணம் 'நீ அ…
தொடங்கியிருக்கிறாய், அந்த நிறுவனத்தை நாங்கள் அல்லவா தொ…
யிருக்க வேண்டும்' என்பதுதான். அது நாங்கள் செய்யவேண்டிய கா…
அல்லவா என்கிறார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவ…
கருத்தைப் பொறுத்த வரையில் "Not who does it. All that he
interested in is what good is done".
நாட்டில் என்ன நன்மைகள் நடைபெறுகின்றன என்றுதான் நினைக்கிறார்…
அதைச் செய்பவர்கள் யார் என்பதுபற்றி அவர் கவலைப்படுவதில்லை. அ…
நிறுவனத்தில் சுமார் 1,200 தொழிலாளர்கள் வேலைக்குப் போய்க்கொண்டி…
கிறார்கள். இப்போது தொழிற்சாலை வேலை செய்கின்றது. மீண்…
it was put on the rails by the Hon. the Chief Minister. தொ…
சாலை தொடங்கியது தவறா? தொடங்கியதற்காக என்று ஒரு ப…
செய்வதா? இன்னும் பல தொழிற்சாலைகளில் இப்படி மூடு விழாக்…
இல்லாமல் இருந்தால், நாடு நன்றாக இருந்தால், நமக்கு நல்லது இல்லை…
என்றுதான் நினைப்பதாக நாங்கள் எண்ண வேண்டியிருக்கிறது. அந்த ப…
23-ந் தேதி நடந்தது என்று நினைக்கிறேன். அந்த பந்த் என்ன ஆயிற்…
நடந்ததா? நமக்குத் தெரியும். அந்த பந்த் நடக்கவில்லை. தொழிலாளர்க…
வேலைக்குப் போனார்கள். ஏன் இதைக் கெடுக்க வேண்டும்? அன்…
தினம் பொதுமக்களுடைய பாராட்டுதலை அரசாங்கம் பெற்றதே…
வேறு ஒன்றும் நடக்கவில்லை. அடுக்கடுக்காக, like a series of waves
கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நமது மாண்புமிகு முதல்வர் அவர்க…
முதன் முறையாக அரசுப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்…
நிலைமைகளை எப்படி எளிதாகச் சமாளித்தார்கள், பொது மக்களுடை…
பாராட்டுதலைப் பெற்றார்கள் என்பது நமக்குத் தெரியும். அவர்க…
மக்களுடைய பாராட்டுதலைப் பெற்றதைத் தவிர, வேறு ஒன்றும் நடக்…
வில்லை.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆட்சி நன்றாக நடந்…
கொண்டிருக்கிறது. எந்தவிதமான தொந்தரவும் இல்லை. நாடு எதிர்…
…ர் இருக்கின்றன. அவைகளைப்பற்றி நான் குறை கூறவில்லை…



"The political climate in Tamil Nadu is the best when compared to the rest of the country" மற்ற மாநிலங்களில் என்ன நிலைமைகள் நிலவுகின்றன என்பதைப் பார்க்கிறோம். நம் மாநிலத்தில் அரசியல் அமைதி இருக்கிறது. இந்த நேரத்தில் மக்களுடைய நலனை விரும்பக்கூடிய நண்பர்கள் என்ன செய்ய வேண்டும்? நன்றாக நடந்து கொண்டிருக்கின்ற ஆட்சிக்கு let us do something good. அதாவது நன்மை செய்வோம், நல்ல காரியங்களில் ஈடுபடுவோம் என்று இருக்க வேண்டுமே தவிர, இதைக் குட்டிச்சுவர் செய்வது என்று இருக்கக்கூடாது. மற்ற மாநிலங்களைப் பார்க்கிறோம். இங்கு ஆட்சி நிலையாக, திறமையாக நடத்தப்படுகின்றது. அதே நேரத்தில் வேறு பல மாநிலங்களிலே ஆட்சி ஆட்டம் கொடுக்கக்கூடிய அளவில் நிலைமைகள் இருப்பதைப் பார்க்கிறோம். மத்தியிலே அமைதி இல்லை என்றால், என்ன ஆகும்? 'Don't cut your nose to spite the face' என்று நான் சொல்வது இங்கே பொருத்தமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அமைதியில்லை என்றால், மத்தியில் வேறு கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் கூட, அது நம் மாநிலத்தையும் பாதிக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசிய நேரத்திலே, அவர்கள் சொன்னார்கள். நமக்கு கட்சி அரசியல் என்பது வேறு. மாநில அரசு எதை விரும்புகிறது? அமைதியைத்தான் விரும்புகிறது. மத்திய அரசு சரியாக நடக்கவில்லை என்றால், யார் பாதிக்கப்படுவார்கள்? மாநில அரசுகளும் பாதிக்கப்படும். அந்த அளவிற்கு ஒரு நல்ல பரந்த நோக்கத்தோடு அவர்கள் சொன்னார்கள். இதுதான் முதலமைச்சர் அவர்களுடைய கருத்து. அந்தக் கருத்தையே எதிர்க்கட்சி நண்பர்களும் ஏற்றுக்கொண்டு தாங்கள் செய்வதைக் கைவிட்டு, அமைதியாக ஆட்சி நடக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அந்த நிலைமைகளை மாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் "தயவுசெய்து அந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்" இனிமேலும் நாம் செய்யவேண்டிய நல்ல காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. எதிர்க்கட்சிகள் மிகமிகத் தேவை என்பது எல்லோருக்கும் தெரியும். அது எதிர்க்கட்சியிலே உள்ளவர்களுக்கும், பணியாற்றுகின்றவர்களுக்கும் நன்றாகத் தெரியும். நிர்வாகம் செம்மையாக நடைபெற வேண்டுமென்றால், எதிர்க்கட்சிகள் விழிப்போடு இருந்து செயல்பட வேண்டும். நாட்டினுடைய நன்மையைக் கருத வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த அளவிலே, அவர் பொறுப்புடன் நடந்துகொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அது இந்திப் பிரச்சினை. அது நம்மிடையே ஒரு பெரிய பிரச்சினையாகக் கிளப்பப்பட்டிருக்கிறது. இந்தித் திணிப்புப் பற்றிய பிரச்சினை. இந்தித் திணிப்பைப் பொறுத்த அளவில், அத்தனை பேரும் ஒரே மாதிரியான கருத்தைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது எதற்காக நமக்குள்ளேயே இந்தச் சச்சரவு. இந்தியைப் பற்றிய அரசு தீவிரமாகத் திணிக்க முயற்சிக்கிறார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. வ. ஆர். தாமோதரன் அவர்களாக இருந்தாலும் சரி, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவராக இருந்தாலும் சரி, திரு. திண்டிவனம் ராமமூர்த்தியாக இருந்தாலும் சரி, அத்தனை பேர்களும் இந்தித் திணிப்பைப் பொறுத்த அளவில் Let us fight tooth and nail என்றுதான் இருக்கின்றோம். அது நியாயமான வாதம் என்றுதான் நாங்களும் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். இந்தித் திணிப்பினுடைய பல்வேறு கட்டங்களிலும் ஏற்படக்கூடிய நிலைமைகளை திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் உணர்ந்துதான் இருக்கின்றன. எந்த அளவுக்குப் பொதுமக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதை உணராமல் இல்லை. அத்தனை பேரும் இதைப்பற்றிக் கூறிப்போனோமே. இதிலே என்ன கருத்து வேறுபாடிருக்கின்றது என்று கேட்க விரும்புகிறேன். அது முறையில்லை என்று கருதுகிறார்கள். நாங்கள் போகின்ற வழியில்தான் போவோம் நீங்கள் வரவேண்டியதில்லை, எதிர்க் கட்சி மட்டும்தான் அதை எதிர்க்க வேண்டும் என்ற அளவுக்கு இருக்கின்றார்கள். இந்த மன்றத்திலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பாராளுமன்றத்திலே இந்தித் திணிப்பைப் பேசப்பட்டபோது திரு. குல்சாரிலால் நந்தா அவர்கள் இருந்தார்கள். திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இருந்தார்கள். அந்தப் பாராளுமன்றத்திலேயே இன்றைய நாங்க நிதி அமைச்சர் அவர்கள் தீவிரமாக புள்ளிவிவரத்தோடு காட்டமாக அன்றைக்குப் பல்வேறுவிதமாக அவர்களுக்கு உறைக்கக்கூடிய அளவுக்கு பேசியிருக்கிறார்கள். அவருடைய பேச்சைக் கேட்ட பிறகு அத்தனை பேரும் சேர்ந்து பரபரப்பாக தீப்பொறி பறக்கக் கூடிய பேச்சு என்று அதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

It is highly inflammatory sceech.

என்று சொல்லக்கூடிய அளவுக்குப் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசியவர்கள் இன்று இங்கே இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்தித் திணிப்பை கடந்





5 ஆண்டுகளாக எதிர்த்தவர்களில் ஒருவராக நமது சட்ட அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். இந்தித் திணிப்பை எதிர்த்தவர்கள் எல்லாம் இந்த மன்றத்திலேயே இருக்கிறார்கள். பாராளுமன்றத்திலேயே இந்தித் திணிப்பை எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். அதைவிட, 1962-ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலேயே, பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு Assurance கொடுத்தார்கள். ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். ஆனால் சட்டத்தின் வாயிலாகக் கொடுக்கவில்லை. ரூலிலே போட்டுக் கொடுக்கவில்லை. பாராளுமன்றத்திலே பேசுகின்ற நேரத்திலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். Non-Hindi-speaking States இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகின்ற வரையில் நாங்கள் இந்தியைப் புகுத்த மாட்டோம் என்று சொன்னார்கள். அந்த நேரத்தில் Non-Hindi-speaking States, என்று சொன்னார்கள். அதை நாம் பார்க்க வேண்டும். இன்றைக்கு நாம் தனிப் பாதையிலே போய்க்கொண்டிருக்கிறோம் என்று சொல்வதைவிட்டு, அந்த வாக்குறுதியைச் செயல்படுத்துமளவுக்கு நாம் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

நமக்குள்ளே போட்டி போட்டுக்கொண்டு நான் ஜாஸ்தி எதிர்க்கிறேனா, இல்லை நீங்கள் அதிகமாக எதிர்க்கின்றீர்களா என்ற போட்டி மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு நமக்குள்ளே சண்டை சச்சரவை ஏற்படுத்திக் கொண்டால், யாருக்கு ஆபத்து? நாட்டு மக்களுக்கு ஆபத்து. இதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியை எதிர்க்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் சொல்லியா நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரிய வேண்டும்? அவர்கள் சொல்லியா நம்முடைய முதலமைச்சர் உணர வேண்டும்? 1962 ஆம் ஆண்டு இதே மேலவையில் எதிர் வரிசையிலே இன்றைய முதல்வர் அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள். அப்பொழுது கல்கி பத்திரிகை அன்றைய மூதறிஞர் வேண்டுகோளின்படி ஒரு கருத்தரங்கை நடத்தியது.. இந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டும்—அதற்கு என்னென்ன கருத்துக்களை, ஆலோசனைகளைச் சொல்லுகின்றீர்கள் என்ற வாதம் அந்தக் கருத்தரங்கில் நடத்தப்பட்டது. நம்முடைய இன்றைய முதலமைச்சர் அன்றையதினம் ஒரு சாதாரண எம்.எல்.சி.ஆக இருந்த நேரத்தில்—அப்பொழுது அவர்களுக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை, பெரும் அளவில் அரசியலில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை. அண்ணா கட்டளையிட்டார்—கட்டளையை ஏற்று இங்கே உட்கார்ந்திருந்த நேரம்—அந்த நேரத்திலே ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அதி

அத்தனை கருத்துக்களையும் நான் இங்கே சொல்லவில்லை. ஒரே ஒரு வார்த்தையை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஆங்கில மொழி ஒரு அந்நிய மொழி என்று வடக்கே உள்ளவர்களால் சொல்லப்பட்டது. ஒரு சாதாரண உறுப்பினராக இருந்த நேரத்தில் எவ்வளவு ஆணித்தரமாக, எவ்வளவு துணிவோடு அதுவும் எல்லா மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சி—எதிர்க் கட்சிகள் ஆட்சிக்கு வரும் என்ற சூழ்நிலை இல்லாத நேரத்தில்—ஏக போகமாக ஒரே கட்சி ஆட்சி நடந்துகொண்டிருந்த நேரத்தில், பேசுவதற்கே பயமாக இருக்கக்கூடிய அந்தக் காலத்திலேயே தைரியமாக "ஆங்கிலம் அந்நிய மொழி என்றால், நான் சொல்லுகின்றேன் இந்தி மொழியும் அந்நிய மொழி தான்" என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு தெளிவாக அழுத்தம் திருத்தமாக அந்தக் காலத்திலேயே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இன்றையதினம் இவர்கள் சொல்லித்தான் முதலமைச்சருக்கு இந்தித் திணிப்பு எதிர்ப்பு உணர்வுகள் வர வேண்டுமென்ற ஒரு துர்பாக்கியமான நிலையில் நிச்சயமாக, கட்டாயமாக இல்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். அவரது ஆணித்தரமான கருத்துக்கள் இன்றும் கட்டுரை வடிவில் இருக்கின்றன. ஆக, 1961 மற்றும் 1962 ஆகிய இரண்டு கட்டங்கள் வந்திருக்கின்றன. அதற்கு அடுத்தபடியாக ஒரு கட்டம் வந்தது. அன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு தலைவரவர்கள் சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்தபோது, அண்ணா அவர்கள் மொழிப் பிரச்சினை பற்றி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அன்றையதினம் அந்தத் தீர்மானத்தின் மீது இறுதியாகப் பேசிய அண்ணா அவர்கள் சொன்ன கருத்தைச் சுருக்கமாக இரண்டே வார்த்தைகளில் சொல்வது பொருத்தமாக இருக்கும். அப்பொழுது 14 தேசிய மொழிகள் இருந்தன. "இந்தியாவின் தேசிய மொழிகள் அத்தனையும் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும். அதுவரை ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்பது எங்கள் கழகத்தின் திட்டம். அது நிறைவேறுகிற வரை நாங்கள் ஓய்ந்து திருப்தி அடைவோம் என்று சொல்வதற்கில்லை" என்று அன்றையதினம் சொன்னார்கள். இப்பொழுது அங்கே வந்திருக்கிறதே சட்டம் அது உங்களுக்கு எப்படிப்படுகிறது என்று கேட்டால், அது எங்களுக்கு எப்படிப் படுகிறது என்றால், மழை பெய்கிறபோது குடை கிடைக்காவிட்டாலும் மேல் துணியை குடைக்குப் பதிலாகப் பிடிப்பது போல் உடனடியாக இந்தி வராமல் இருப்பதற்காக ஆங்கிலத்தை வைத்து இந்தியைத் தடுக்கிறோம். அப்படித் தடுக்கிறபோது 14 மொழிகளுக்கும் முழு உரிமை கொடுக்கிற வரை ஆங்கிலம் பயன்படுத்தப்பட வேண்டுமென்று சொல்கிறோம். சம அந்தஸ்து கிடைக்கிற வரை, நாம் அந்த நிலைக்கு வரும்வரை கொஞ்சம் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள்



சொன்னதை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். "இந்திக்குக் கொடுக்கக் கூடிய சம அந்தஸ்து 14 மொழிகளுக்கும் முழுமையாகக் கொடுக்கப்படவேண்டும். ஆகவே அப்படிக் கொடுக்கிற வரை நாங்கள் ஆங்கிலத்தை ஒரு போர்க் கருவியாக, கேடயமாகக் கையாள்வோம்" என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு இது உடன்பட்ட கருத்தாகையால், அவர்களும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அந்தக் கருத்தை நான் சட்டமன்றப் பேரவையில் இருக்கும்போதே சொல்லியிருக்கிறேன். அதாவது அனைத்து மொழிகளுக்கும் சம அந்தஸ்து கிடைக்கிறவரை ஆங்கிலம் ஒரு போர்க் கருவியாக, கேடயமாகப் பயன்படுத்தப்படலாம் என்ற கருத்து அன்றையதினம் சட்டமன்றப் பேரவையில் சொல்லப்பட்டது. இறுதியாக பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு அருமையான கருத்தினைப் பக்குவமாகச் சொன்னார்கள். நான் இங்கு கேட்பதெல்லாம் இதை யார் செய்ய வேண்டும் என்பதுதான். ஆங்கிலம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால், அதைத் தமிழகம் மட்டும் செய்தால் போதுமா? எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் தெளிவாக இருக்கிறோம். பிரிவினை நாடோம் என்பதுதான் எங்களுடைய அடிப்படையான கொள்கை, கருத்து. இந்த விஷயத்தில இம்மாமன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களிடையே எந்தவித கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. காரணம் இங்கே வீற்றிருக்கக் கூடிய உறுப்பினர்கள் அனைவரும் 'ஓத்' அதாவது பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு அவையில் வீற்றிருக்கிறோம். பிரிவினை என்று சொல்லும்போது, அதுபற்றி அறிக்கையில்கூட குறிப்புகள் இருக்கின்றன. மத்திய அரசோடு போராட வேண்டுமென்றால்—நாட்டினுடைய ஒற்றுமையும் ஒருமைப்பாடும் காப்பாற்றப்பட வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்? இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகிறவரை இந்தியை மத்திய அரசு திணிக்கக் கூடாது என்று போராட தமிழ்நாடு ஒன்றுதானா இருக்கிறது? ஒரிசாவில்கூட இந்தி பேசவில்லை. இதுபற்றி குறிப்பிலேயே இருக்கிறது. ஒரிசா முதலமைச்சர் திரு. சிங்தேவ் அவர்கள் அன்றைய தினம் ஆங்கிலம்தான் இருக்க வேண்டுமென்று சொன்னதை நான் அண்ணா அவர்களிடத்தில் சுட்டிக் காட்டியபோது என்னை வெகுவாகப் பாராட்டினார். அங்கு ஒரியா மொழிதான் பேசப்படுகிறது. வங்காளத்தில் வேறு மொழி பேசப்படுகிறது. குஜராத்தில் வேறு மொழி பேசப்படுகிறது. முதன் முதலாக இந்தி பேசாத மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் இன்றையதினம் பாரதப் பிரதமராக இருக்கிறார். பொலிட்டிக்கல் விஸ்டம் தெளிவுபடுத்தப்பட வேண்டாமா? அப்படி அவர்களைப் பார்த்து உங்களுடைய கருத்து என்ன என்று கேட்பதில் என்ன தவறு இருக்க முடியும்? இதுவரை யார் அப்படிக் கேட்...

கிறார்கள்? நான் இப்படிப் பேசுகிறேனே என்று இங்கு இருக்கக் கூ
மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் வருத்தப்படக் கூடாது. இந்தித் தி
எதிர்ப்பு என்ற பெரிய பூதத்தை கட்சியை வளர்க்கப் பயன்படுத்தக் கூடா
என்பது என்னுடைய கருத்து. அதை வைத்துக்கொண்டு எந்தக் கட்சியு
வளர வேண்டிய தேவையுமில்லை. அதைக் காட்டினால் கட்சி வளரும் என்
நிலை இருக்கவே கூடாது. "Let us not indulge in such a suicida
and anti-national step". கட்சியை வளர்க்க அதைத் த
பல வழிகள் இருக்கின்றன. என்னுடைய சந்தேகம் எல்லாம் எதிர்க் கட்
சியிலுள்ளவர்கள் தங்களுடைய கட்சியை வளர்க்கத்தான் இதைப் பய
படுத்துகிறார்கள் என்பதுதான். எங்கள் கட்சியைப் பொறுத்தவ
எங்களுடைய முதலமைச்சரைப் பொறுத்தவரை, அவர் நினைப்பதெல்ல
தமிழ் நாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதுதான். ஆனால் அவர்கள்
எதிர்க்கட்சிகளில் இருப்பவர்கள்—நினைப்பதெல்லாம் கட்சியை எப்ப
காப்பாற்றுவது என்பதுதான். தமிழகத்தைக் காப்பாற்றும் நோக்கத்
விட்டுவிட்டு துரதிருஷ்டவசமாக எதிர்க்கட்சிக்காரர்கள் இந்திப் பிரச்சினை
வைத்து கட்சியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை ந
வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இ
ஒரு விளக்கம். கட்சியை வளர்ப்பதற்காக இந்திப் பிரச்சினையைப் ப
டுத்துகிறார்கள் என்பது வட இந்தியாவிலே உள்ள இந்தியைத் திணிப்ப
களால் சொல்லப்படுகிற வாதம். இதைத்தான் நண்பர் டாக்டர் ஹண்
அவர்களும் சொல்கிறார்கள். இந்தி திணிக்கப்படவில்லை என்ற வாதத்
நண்பர் டாக்டர் ஹண்டே அவர்கள் ஒத்துக்கொள்கிறாரா?

(பிற்பகல் 5.40)

டாக்டர் எச். வி. ஹண்டே: இந்தித் திணிப்பு இருக்கிறது என்பன
தெளிவாக, படிப்படியாக நான் இங்கே அவையில் சொல்லியிருக்கிறேன்
இந்தித் திணிப்பு இருக்கிறது என்பதை உணரவில்லை என்றால், இங்கே நா
பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சைப் பற்றிக் குறிப்பிடவேண்டி
அவசியமேயில்லை. ஆனால் இந்திப் பிரச்சினையை ஒரு கட்சிப் பிரச்சினை
யாக ஆக்கக்கூடாது என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் சொல்லி
கொள்ள விரும்புகிறேன். நாம் அனைவரும் இந்தப் பிரச்சினையில் ஒற்றுமை
யாக இருந்து எதிர்ப்புக் குரல் கொடுப்போம் என்கிறேன்
"kindly give your hand" என்றுதான் கேட்கிறேன். இதற்காக ஒ
கட்சியின் போராட்டம் வேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன். இந்



பிரச்சினை என்று சொல்லி இன்றையதினம் கட்சியைக் காப்பாற்றுவதைவிட தமிழகத்தைக் காப்பாற்றுவதுதான் மிக முக்கியம் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எனவே இதை உணர்ந்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது அடுத்த கட்டம். நான் ஒவ்வொரு கட்டமாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். பண்டித நேரு அவர்கள் வாக்குறுதி கொடுத்தது ஒரு கட்டம், முன்னாள் முதலமைச்சர் அவர்களின் பேச்சு இரண்டாவது கட்டம். பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சு மூன்றாவது கட்டம். நான்காவது கட்டம்தான் இப்போதைய நிலை. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்திருந்தால், என்ன செய்திருப்பார்களோ, அதைத்தான் இன்றையதினம் உள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். எந்தக் காரியத்தை அறிஞர் அண்ணா அவர்கள் செய்ய வேண்டுமென்று நினைத்தார்களோ அதைத்தான் இன்றையதினம் படிப்படியாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்பதை இந்த மாநிலம் மட்டும் தெரிவித்தால் போதாது. தென் பிராந்தியத்திலிருக்கிற அனைத்து மாநிலங்களும் இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். எனவேதான் தென் பிராந்திய மாநிலங்களின் முதலமைச்சர்களை நமது முதலமைச்சர் அவர்கள் அணுகினார்கள். ஆந்திர மாநில முதலமைச்சரை அணுகினார்கள். காரணம் ஆந்திர மாநிலம் இந்தி பேசாத மாநிலம் என்றாலும்கூட, அவர்கள் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நேருவின் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று அண்ணா அவர்கள் போராடினார்கள். இன்றைய அமைச்சர் மாண்புமிகு திரு. நாஞ்சில் மனோகரன் அவர்கள் பாராளுமன்றத்தில் நம் அனைவருக்குமாகப் போராடி, வாதாடும் போது இதைத்தான் கேட்டார்கள்.

"I want a re-assurance from you that that assurance will be kept up" ஆக ஆந்திர மாநிலம் இந்தி பேசாத மாநிலமாக இருந்தாலும், "பரவாயில்லை, இந்தி இருக்கட்டும்" என்று சொல்லி விட்டால் என்ன ஆவது? கோவா மாநிலம் இந்தி பேசாத மாநிலம் என்றாலும், "பரவாயில்லை" என்று சொல்லிவிட்டால் என்ன ஆவது? அதைப் போலவே கருநாடக மாநிலம் இந்தி பேசாத மாநிலமாக இருந்தாலும், "பரவாயில்லை" என்று சொல்லிவிட்டால் என்ன ஆவது? மும்மொழியை ஏற்றுக்கொண்ட இந்த மாநிலங்களையெல்லாம்—தமிழகம் மட்டும் விதிவிலக்காக இருந்து—இந்தி பரவாயில்லை என்று சொல்லி, அதற்காகத் தலையாட்டிவிட்டால் நம் கதி என்ன, நம் தமிழ் நாட்டின் நிலை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நமது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை, ஒரு விஞ்ஞான ரீதியான போராட்டமாக, பலமுனைப்

போராட்டமாக நாம் நடத்தியாக வேண்டும். நாட்டு மக்களுக்கு இந்தி பேசாத மக்களுக்கு பயன்படக்கூடிய அளவுக்கு ஒரு போராட்டமாக அது அமைய வேண்டும் என்றால், இந்தி பேசாத மாநிலங்களான ஆந்திரத்தை, கேரளத்தை, கருநாடகத்தை அழைத்து, "உங்களுடைய கருத்து என்ன? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் இந்த மூன்று மாநிலங்களின் முதலமைச்சர்களையும் நம் மாநில முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு இந்தக் கோட்டைக்கு அழைத்து, அவர்களுடைய கருத்தைக் கேட்டறிந்து நமது போராட்டத்திற்கு அவர்கள் ஆதரவையும் திரட்ட முற்பட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களுக்கே நன்கு தெரியும். கருநாடகத்தைப் பொறுத்தவரையில், அவர் சார்ந்திருக்கிற கட்சிதான் அங்கே ஆட்சி நடத்துகிறது. ஆந்திர மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், அவர் சார்ந்திருக்கிற கட்சிதான் அங்கு ஆட்சி நடத்துகிறது. அதைப் போலவே கேரளத்தில் அவர் சார்ந்திருக்கிற கட்சி சி.பி.ஐ. போன்ற கட்சிகளின் துணையோடு ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது. இந்த மாநிலங்கள் எல்லாம் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அதாவது அவைகளின் தாய் மொழியோடு, ஆங்கிலத்தையும் இந்தியையும் அந்த மாநிலங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அது நமக்கு எவ்வளவு ஆபத்தாக இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த மாநிலங்களுடைய கருத்தை மாற்றி அமைப்பது தேவையா இல்லையா? அதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். இந்தக் கேள்விக்கு பதிலளிக்க வேண்டும். அப்படி அந்த மாநிலங்களின் முதலமைச்சர்களின் எண்ணங்களை மாற்றி, கருத்துக்களை மாற்றி, அவர்கள் மனதை மாற்றி நம் பக்கத்தில் அவர்களை அழைத்து வருவது இராஜ தந்திரமா? அல்லது நாம் மட்டும் இதைப்பற்றிப் பேசி, மாநாடுகளை நடத்தி, இந்தி வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருப்பது இராஜ தந்திரமா? எதனால் அதிக லாபம் கிடைக்கும்? அவர்களையெல்லாம் நம் பக்கத்தில் இழுத்துக் கொண்டு வந்து அவர்கள் கருத்துக்களை மாற்றி, போராடுவது சரியா? இல்லையா? எது சரி? நம் அனைவருக்கும் மனச்சாட்சி இருக்கிறது. அதனால்தான் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற மாநில முதலமைச்சர்களை எல்லாம் வரவழைத்து இந்தித் திணிப்பை எதிர்த்து ஏகமனதாக ஒரு தீர்மானம் போட்டு எல்லோருமாக ஒன்றாகச் செயல்பட வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டார்கள். இதற்கு முன்னால் தமிழகத்தில் இப்படிப்பட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டதுண்டா? நான் கேட்பதற்குத் தயவுசெய்து பதில் சொல்ல வேண்டும்



* **திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, மும்மொழித் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், அது இந்தியா முழுவதிலும் கொள்கை அளவில் ஏற்கப்பட்ட ஒன்று. மும்மொழித் திட்டத்திற்கு எதிர்ப்பு என்பது தமிழகத்தில் எப்படி ஏற்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். டாக்டர் ஹண்டே அவர்களுக்குக்கூட அது மிகத் தெளிவாகத் தெரியும். தமிழகத்திலே இரு மொழித் திட்டத்திற்கான தீர்மானத்தை அறிஞர் அண்ணா அவர்கள் முன்மொழிந்தபோது இருந்த நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். வட மாநிலங்களில் எங்கேயும் மும்மொழித் திட்டத்தை முறையாக செயல்படுத்தவில்லை. மத்திய அரசு அறிவித்த அந்தத் திட்டத்தை மனப்பூர்வமாக எந்த வட மாநிலமும் நிறைவேற்றவில்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கு ஒரு பதிலடியாக, ஒரு பதிலடி கொடுக்கிற முறையில் நாம் இருமொழித் திட்டத்தை நிறைவேற்றி செயல்படுத்துவோம்; அதன் மூலம் அவர்களுக்கு நம் உணர்வுகளைத் தெளிவுபடுத்த வேண்டும் என்ற நிலையில் தான் நாம் இருமொழித் திட்டத் தீர்மானத்தை நிறைவேற்றினோம். மத்திய அரசு உட்பட இந்தியாவில் இருக்கிற வேறு எந்த மாநிலமும் மும்மொழித் திட்டத்தை முறையாகச் செயல்படுத்த முன்வரவில்லை என்ற நிலை ஏற்பட்டதாலேயே இந்தத் தீர்மானம் வந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. டாக்டர் ஹண்டே அவர்களின் விளக்கம் கொஞ்சம் மாறுபட்ட நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. எனவே அவர் இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அண்ணா அவர்கள் எந்தச் சூழ்நிலையில், எதைச் சொல்லி இந்த இருமொழித் திட்டத்தை முன்மொழிந்து நிறைவேற்றினார்கள் என்பதை நினைவில் வைத்து விளக்கம் அளிப்பார்கள் என்று நினைக்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். நம் அத்தனை பேருடைய சார்பிலும் பாராளுமன்றத்திலே வாதிட்டவர்கள் என்ற நிலையில் அவர்களேகூட மிகத் தெளிவாக இந்தப் பிரச்சினையில் விளக்கம் தருகிற நிலையில் இருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹண்டே:** "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்று நான் சொல்ல ஆரம்பித்தேன். எதற்காக அதை நான் குறிப்பிட்டேன் என்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் வாயால் சொல்ல வேண்டும் என்றுதான். அப்போதுதான் மெய்ப் பொருள் காண்பது இயலும் என்ற அடிப்படையில் சொல்ல ஆரம்பித்தேன். என்னால் ஒன்றை உணர முடிகிறது. மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு இதிலே ஒரு சங்கடம் இருக்கிறது. அதையும் நான் விளக்க ஆசைப்படுகிறேன். மத்திய சர்க்காரில் மும்மொழித் திட்டம் என்பது கிடையாது. இது நா

அனைவருக்கும் நன்கு தெரியும். நம்மை ஏமாற்றுவதற்குப் போடப்பட் நாடகம் அது. நம்மை ஏமாற்றுவதற்காக மும்மொழித் திட்டத்தை ஜா யாகக் காட்டினார்களே தவிர, மத்திய அரசாங்கத்திலே இருமொ திட்டம்கூட கிடையாது. அங்கே இருப்பது ஒரு மொழித் திட்டம்தான்

**திரு. க. இராமமூர்த்தி:** அதுதான் உண்மையான நிலையென் மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கிற அவருடைய கட்சி அ எதிர்க்கிறது என்றால், அதைத் தடுத்து நிறுத்த என்ன நடவடிக் அவர்கள் மேற்கொண்டாலும், அவர்களோடு இணைந்து போராட எ கட்சி சார்பில், நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்து கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹண்டே:** மாற்கு. இதைச் சொன்னதற்காக நான் ந தெரிவித்துக்கொள்கிறேன். அவர் அப்படிச் சொல்வார் என்பது எனக் தெரியும். அவர் அப்படிச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் ந இதைச் சொன்னேன். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மத் அரசாங்கத்தின் கருத்தை ஆதரித்து யாரும் அரசியல் நடத்த முடிய என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். அந்த நிலைமையினைத் தமிழகத்திலே உருவாக்கியிருக்கிறார்கள் ஆகவே மற்ற மாநிலங்களின் நிலைமை என்னவாக இருந்தாலும், தம தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தித் திணிப்பு இருக்கிறது என்ப நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மும்மொழித் திட்டத்தைப்பற் குறிப்பிடும்போது, முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியொன்றையும் நான் இங் குறிப்பிட விரும்புகிறேன். மதிப்பிற்குரிய திரு. பக்தவத்சலம் அவர்க இங்கே முதலமைச்சராக இருந்தபோது, இந்தப் பிரச்சினை இதே மேலவையி எழுப்பப்பட்டது. அப்போது அவர் "மும்மொழித் திட்டம் என்பது இந் நாட்டுக்குத் தேவை" என்று குறிப்பிட்டார். அப்போது இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் ஒரு கருத்தை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அது நம் சட்டமன்ற மேலவைக் குறிப்பில் ஏறியிருக்கிறது. அன்றைய முதலமைச்சர் அவர்களைப் பார்த்து, டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் சொன்னார்கள். "நீங்கள் மும்மொழித் திட்டம் வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். ஆனால் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், ஒன்று அவர்கள் இந்தியைப் படிப் பார்கள், தேவைப்பட்டால் ஆங்கிலம் படிப்பார்கள். ஆனால் தமிழகத்தில் பேசப்படுகிற தமிழ்மொழியை வட மாநிலங்களில் படிப்பதில்லை. அதேபோல் அங்கே தெலுங்கு அவர்களால் படிக்கப்படுவதில்லை. எனவே இந் மும்மொழித் திட்டம் என்பதே நம்மை ஏமாற்ற உருவாக்கப்பட்ட





நாடகம்" என்று மிக விளக்கமாக அன்றையதினம் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் எதிர்க் கட்சி தலைவராக இருந்து கருத்துத் தெரிவித் தார்கள் என்பதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்றைய நிலை என்னவென்றால், வட மாநிலங்களைப் பொறுத்த வரையில், அவர்கள் எந்த ஒரு தென்னாட்டு மொழியையும் படிக்கத் தயாராக இல்லை. அது அவர்களுக்குத் தேவையும் இல்லை என்று அவர்கள் நினைக் கிறார்கள். நமக்கிருக்கிற கவலையெல்லாம் நாம் எப்படியும் இந்தி பேசாத மாநிலங்களுடைய ஆதரவை இந்தித் திணிப்புக்கு எதிராகப் பெறவேண்டும் என்பதுதான். இப்போது அவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமா வேண்டாமா? இதுதான் என்னுடைய கேள்வி. இதைத்தான் நான் உங்கள் முன்னாலே வைக்கிறேன். இந்தி பேசாத மாநிலங்களுடைய முதல்வர்களின் என்பதுதான். இப்போது அவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமா? வேண்டாமா? அந்த நல்ல முயற்சியில் இன்றையதினம் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்களா இல்லையா? இதுதான்

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 5-50)

என்னுடைய கேள்வி, வாதம் எல்லாம். ஆகவே அந்த நல்ல காரியத்தில்

ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்து அதற்கு அவர்களைப் பாராட்டியிருக்கவேண்டும். இதை நிச்சயமாக திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் பாராட்டுவார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர் அப்போதும் பாராட்டிக்கொண்டிருந்தார். இப்போதும் பாராட்டுவார்கள் என்று நினைக்கிறேன். நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம், எதிர்க் கட்சித் தலைவர்களும் இதற்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும் என்பதற் காகத்தான்.

இன்னொரு விஷயத்தையும் இங்கே நாம் உணர்ந்தாக வேண்டும். மாண்புமிகு திரு. கருத்திருமன் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த போது, எல்லா அரசியல் கட்சிகளையும் அழைத்துக் கருத்தைக் கேட்டிருக்க வேண்டாமா என்று கேட்டபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன் னார்கள், "எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எல்லா அரசியல் கட்சிகளையும் அழைத்து ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டும் என்று சொன் னார்கள். அதை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன்" என்று. இந்தக் கருத்தை அன்றைய தினமே அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அவர் துரதிருஷ்டவசமாக அவர் நம்மை விட்டுப் பிரிந்து போய்விட்டார்.

மட்டும் தொடர்ந்து முதலமைச்சராக இருந்திருந்தால், அதை அவர் ந முறைப்படுத்தியிருப்பார். எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களையும் கூப் 'இந்தித் திணிப்பு எதிர்ப்புக்கு என்ன செய்யலாம்? எப்படி நடவ எடுக்கலாம்?' என்று கேட்டிருப்பார்கள். ஆலோசனைக் கூட்டத்தைக் பிருப்பார்கள். ஆனால் நான் வேதனையோடு சொல்கிறேன், அவரு பின்னால் வந்தவர்களால் அப்படிப்பொரு கூட்டம் கூட்டப்படவே இல் பிறகு வந்த ஆட்சியாளர்கள், எதிர்க் கட்சித் தலைவர்களை அழை அவர்கள் என்ன கருதுகிறார்கள், மேற்கொண்டு என்ன நடவ எடுக்கலாம் என்பது பற்றிக் கேட்கவே இல்லை. ஆனால் அண்ணா அ சொல்லிவிட்டுச் சென்றதை நடத்திய பெருமை, எதிர்க் கட்சித் தலை அழைத்துப் பேசிய பெருமை இன்று நம்முடைய முதலமை இல்லை இருக்கிறதே தவிர, அதற்கு முன்பிருந்த முதலமைச்சருக்கு என்பதை வேதனையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலு அண்டை மாநிலத்தில் உள்ள முதலமைச்சர்களும் கூப்பிட்டுப் பேசி நல்ல நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒரு நேரமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹண்டே:** முடித்துக் கொள்ளுகிறேன். இதிலே இன் மொரு கருத்தைக் கூறிவிட்டு முடித்துக்கொள்ளுகிறேன். இந்தக் கரு எல்லோருக்கும் பொருந்தும், இந்தச் சபையிலே இருப்பவர்கள் வரவே தக்க கருத்தாக இருக்கும். இதிலே கருத்து வேறுபாடு இருப்பதற்கு மில்லை. "English for Unity" என்று ஏறத்தாழ 15 ஆண் களுக்கு முன்பாக மூதறிஞர் ராஜாஜி அவர்கள் எழுதி 25 காசுக்கு வெளியிட் பிரசுரத்தைப் பற்றித் தெரிவிக்க விரும்புகிறேன். அப்புத்தகத்திலே அவ எவ்வளவு வேதனையோடு எழுதியிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டியா வேண்டும். ஒரு முறை கடற்கரை கூட்டத்திலே பேரறிஞர் அண்ண அவர்கள் இதை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். "Real quarrel" என் தலைப்பில்

"It should be realised that the quarrel is not betwee languages. All the men prefer to put it that way. Languages d not quarrel. The issues are between men, groups of men, wit ambitions and selfish hearts. Let us realise this fact and we shal then, if we try, be able to find the right solution. The pleas mad on behalf of Hindi and the scorn swung at English: Have the anything to do with the language issue? No. It is the ambitio of the Hindi-speaking leaders, their own and that of Hindi-speaki



men in a lower tier. Swords and spears, flags and flowers and languages do not hate or love. It is the men who hate and love, that carry and use those tools to satisfy their feelings of jealousy, fear, hate and love. We must get behind the misleading facade of lifeless instruments and understand and deal with the hearts of men."

என்று எழுதியிருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தப் பிரச்சினையிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது என்பதற்காகத்தான். எப்படியாவது தென் மாநிலங்களைத் தங்கள் வழிக்குக் கொண்டு வர வேண்டுமென்று திணிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலே நமக்குள்ளே கருத்து வேறுபாடுகளை வளர்த்துக்கொண்டு, சச்சரவுகளை வளர்த்துக்கொண்டு, நாட்டின் நிலைமைகளை மோசமாக்கிக் கொண்டு போகக்கூடிய நிலையை உருவாக்க வேண்டுமா என்று மதிப்பிற்குரிய முஸ்லீம் லீக் தோழர்களையும் மற்ற தோழர்களையும், கம்யூனிஸ்ட் தோழர்களையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர்களையும் கேட்க விரும்புகிறேன். எவ்வளவு நல்ல அன்போடு, பாசத்தோடு இந்த ஆட்சி நடைபெற வேண்டும் என்பதற்காக, முற்போக்குச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாடுபட்டார்கள் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். 1977 ஆம் ஆண்டு மே மாதத்தில் சட்டமன்றத் தேர்தலில் முஸ்லீம் லீக் தோழர்கள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு பாடுபட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே உணர்ந்தாக வேண்டும். அதே மாதிரியாக கம்யூனிஸ்ட் தோழர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக இரவும் பகலும் தொகுதிகளுக்குச் சென்று வாக்குகளைப் பெற எவ்வளவு பாடுபட்டார்கள் என்பதை உணர்ந்தாக வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இன்று ஏன் திடீரென்று கோபம் வந்துவிட்டது? நான்கைந்து மாதங்களுக்குள்ளாக எப்படி, தங்களுக்காக, தங்கள் வெற்றிக்காகப் பாடுபட்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மீது கோபம் வந்துவிட்டது என்று மாண்புமிகு முஸ்லீம் லீக் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். கோபம் இருந்தால், உட்கார்ந்து நேரிடையாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டியதுதானே. இங்கு ஏற்பட்டிருக்கிற ஆபாசங்களின் விளைவாக அணி உருவாக்கப்படும் நிலை ஏற்பட்டால், அதையும் அரசியல் ரீதியாகச் சந்திக்கத் தயாராக இருக்கிறார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். ஆனால் அப்படி ஒரு நிலைமை தேவைதானா என்பதுதான் அடிப்படையான கேள்வி.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1979 பிப்ரவரி

தம்மை விட்டுப் பிரிந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் அ
களுடைய வெற்றிக்காக இரவும் பகலும் பாடுபட்டு வாக்குகளைச் சேகரித்
தம்முடைய முதலமைச்சர் அவர்கள். வேதனை என்னவென்றால், மறை
முருகையனை எதிர்த்துப் போட்டியிட்டவர் வெற்றி பெற வேண்டும் என்
பாடுபட்ட சிலர் இன்று திடீரென்று திரு. முருகையன் அரசியல் ரீதியா
அரசியல் காரணத்திற்காகக் கொலை செய்யப்பட்டார் என்று சொல்வதுதான்
திரு. முருகையன் வெற்றிக்காகப் பாடுபட்டவர்களே அவரைக் கொலை செ
எண்ணுவதில் என்ன லாபம் இருக்க முடியும்? அவரைக் கொலை செய்வ
அரசாங்கத்திற்கு என்ன இலாபம்? இந்த வேதனைக்குரிய சம்பவத்தைக்
காண நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனே வர வேண்டு
என்று சொன்ன பெரிய தலைவர்கள் ஒரே மேடையில் ஏறிப் பேசிக்கொண்
டிருந்தபோது, அந்த இரங்கல் கூட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் வந்ததும்
அவரை முதலில் பேசச் சொன்ன தலைவர்கள் இன்று திடீரென்று இதற்
கெல்லாம் காரணம் முதலமைச்சர்தான் என்று சொல்லுவது வேதனைப்பட
வேண்டிய விஷயமாக இருக்கிறது. இப்போது நடைபெற்றிருக்கும் சம்பவம்
இப்படி இருக்கிறது. ஆனால் 1972 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு
ஆரம்பம் வரை அரசியல் ரீதியாக யாரைக் கொலை செய்ய வேண்டும் என்
சதித் திட்டம் தீட்டப்பட்டது? நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அ
கள் அன்றைய தினம் பேசினால், அவருடைய பேச்சைக் கேட்க ஏராளமா
கூட்டம் வருகிறது என்ற காரணத்தால், அவரை எப்படியாவது கொலை செய்
வேண்டும் என்பதற்காக அவரை விமான நிலையத்தில் நான்கைந்து பே
தாக்கியது திட்டமிட்ட சதித் திட்டமா, அல்லது யாராக இருந்தாலும்
கொலை செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று ஆளுநர் அறிக்கையிலே
தரப்பட்டிருப்பது சதித் திட்டமா என்று கேட்க விரும்புகிறேன். இவ்வள
பயங்கரமாக சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை எல்லாக் கட்சி
தோழர்களும் உணர்ந்தாக வேண்டும். குறிப்பாக சேலம் மாவட்டத்திலே
நடைபெற்ற அந்தக் கொலை, அதற்குப் பிறகு சாட்சியங்கள் வராமல் அழிக்கப்
பட்ட நிலைமை, பிறகு அதற்காக ஒரு கமிட்டி போட்டு அதை மீண்டும்
'ரீ-ஓப்பன்' செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது திட்டவட்டமாக
அரசியல் ரீதியாக, அரசியல்வாதிகள் சேர்ந்து செய்த சதித் திட்டம்
இல்லையா? மதிப்பிற்குரிய அமைச்சர் அம்மையார் அவர்களுக்கு மகளிர்
களிடத்தில் அதிகச் செல்வாக்கு இருக்கிறது என்பதற்காக அவர் கிராமங்களில்
செல்லுகிற நேரத்தில் எப்படியாவது அவரைக் கொலை செய்ய வேண்டுமென்



1979 பிப்ரவரி 12] [திரு. எச். வி. ஹண்டே]

(பிற்பகல் 6-00)

திட்டமிட்டு முயற்சி செய்தார்கள். அன்றைய தினம் பிடிபட்டது யார்? மனச்சாட்சியோடு பேச வேண்டும். அம்மையார் அவர்களை வன்முறைக்கு ஆளாக்குவதில் ஈடுபட்டவர் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைச் செயலாளர் என்று கோர்ட்டில் நிரூபிக்கப்பட்டு, அந்த ஜட்ஜ்மெண்ட் காப்பிகூட இருக்கிறது. அவ்வளவு திட்டமிட்டுச் செய்தார்கள். கடைசியாக மீண்டும் சொல்கிறேன். எதிர்க் கட்சிகள், குறிப்பாக மதிப்புமிக்க கம்யூனிஸ்ட், முஸ்லீம் லீக் கட்சித் தோழர்களுக்கு ஏதாவது குறை இருந்தால், அதைப் பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள். அவர்களுடைய எதிர் கால நன்மைக்காகச் சொல்கிறேன். நாட்டின் எதிர்கால நன்மைக்காகச் சொல்கிறேன். நல்ல சூழ்நிலை தமிழகத்திலே இருக்கிறது. அரசியல் சூழ்நிலை அமைதியாக இருக்கிறது. இதைப் பயன்படுத்தி நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பத்திலேயே வெளி நடப்பு செய்தார்கள். அதைப் பற்றிப் பேசவில்லை. அது அவரவர்களுடைய விருப்பம். அவரவர்கள் அரசியல் ரீதியாகத் தங்களுடைய கோபத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று வெளி நடப்பு செய்தார்கள். It may be demonstration of either anger or frustration.

அதற்குள்ளே நான் நுழையவில்லை. நான் சொல்வதெல்லாம் அது எப்படியிருந்தாலும், பரவாயில்லை. நீங்கள் வெளி நடப்பு செய்திருக்கிறீர்கள். அதனால் இந்த நன்றித் தீர்மானத்தை எதிர்த்துத்தான் ஆக வேண்டுமென்பதில்லை. அப்போது கோபம் வந்தது. அரசியல் ரீதியாக வெளி நடப்பு செய்தீர்கள். மக்கள் மத்தியிலே எந்த அளவிற்கு அது பயன்பட்டது என்பது வேறு விஷயம். அது ஆராய்ச்சிக்குரியது. தேர்தல் அறிக்கையிலே என்னென்ன சொன்னார்களோ, அதைப் படிப்படியாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஐந்து ஆண்டுகளில் தேர்தல் அறிக்கையிலே சொன்னவற்றைச் செய்து முடிப்போமென்ற நம்பிக்கை இருக்கிறது. மீண்டும் மக்கள் மத்தியிலே திரும்பும்போது இந்த அறிக்கையைத் தந்தோம். நிறைவேற்றினோம். "we are coming back to you" என்று சொல்வோம். விஞ்ஞான ரீதியாக Scientific approach to the Political problem என்று சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கிறது. கவர்னர் உரைத் தீர்மானத்திற்குத் திருத்தங்களைக் கொடுப்பது, அவரவர் குறைகளைச் சொல்வதற்காகத்தான். அது நியாயமானது. நாங்கள்கூட கொடுத்திருக்கிறோம். அதை மீண்டும் வாபஸ் பெற்றுக்கொண்டு, ஏகமனதாக இந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றுவதுதான் இந்த மன்றத்தின் மரபு. எனவே, அப்படி இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஆ. திராவிடமணி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற சில கருத்துக்களை முன்வைத்து, நம்முடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் அந்த அறிக்கையை வரவேற்று, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்திருக்கிறார்கள். ஆளுநர் உரை பற்றிப் பேச வந்தவர்கள், பொது மேடையிலே பேசுகிற மாதிரி கருத்துக்களைச் சொன்னார்கள். அரசியல் பேச வேண்டுமென்றால், அதற்கு [illegible] மன்றம் தேவையில்லை. பகிரங்கக் கூட்டங்கள் இருக்கின்றன. விவா[illegible]குரிய பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதும், இன்னின்ன குறைகள் [illegible]கின்றன என்பதைச் சொல்வதும்தான் ஆளுநர் அவர்களுடைய உரை மீதான விவாதத்தில் நாம் மேற்கொள்கிற மரபாக இருக்கிறது. அவர் ஆரம்ப காலத்திலிருந்தே, அதாவது சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதும் அவர் கலகலப்பாகப் பேசியதில்லை. ஆகவே, அவர் அப்படிப் பேசினார். பரவாயில்லை. அவருடைய உரைக்கு சில விளக்கங்கள் கொடுக்க வேண்டியது எதிர்க்கட்சி என்ற முறையிலே எங்களுடைய கடமை.

ஆளுநர் உரையிலே, ஏறத்தாழ 16 பக்கங்கள், 30 ஐட்டங்கள் இருக்கின்றன. ஒரு வரி கூட தொழிலாளர்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை. 'திராவிட மணி, நன்றாகப் படியுங்கள்' என்று சொல்லிவிடக் கூடாதென்பதற்காக, நானும் இந்த உரையைத் திருப்பித் திருப்பிப் படித்துப் பார்த்தேன். இதிலே ஒன்றுமில்லை. என்ன காரணத்தால் விடுபட்டுப் போனது என்பது தெரியவில்லை. இதிலே விடுபட்டுப் போனாலும்கூட, அடுத்து சமர்ப்பிக்க இருக்கிற நிதிநிலை அறிக்கையிலே விடுபட்டுப் போய்விடக் கூடாதென்பதற்காகச் சில குறிப்புகளை அவைமுன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலாளர் பிரச்சினையில் மிக முக்கியமான பிரச்சினை அண்மையிலே ஏற்பட்ட டி. ஐ. சைக்கிள் தொழிலாளர் பிரச்சினை. அந்தத் தொழிலாளர்கள், கிட்டத்தட்ட 2,000 பேர்கள் இரண்டு ஆண்டுகளாக வேலையில்லாமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைக்கு நல்ல லாபம் சம்பாதித்துக் கொடுத்து, அதன் உரிமையாளர்கள் 5 பங்களாக்கள் கட்டிக்கொள்ளும் அளவிற்கு உற்பத்தி செய்து கொடுத்து, பாடுபட்டிருக்கிறார்கள். மாநிலத்திலே பல்வேறு ஆலைகள், தொழிற்சாலைகள் இருக்கின்றன. எல்லாத் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்கள், நா[illegible] பணி செய்யும் தொழிற்கூடங்கள் நல்ல முறையில் இயங்க வேண்டும், லாப[illegible] கிடைக்க வேண்டும், அதனால் நமக்கு போனஸ் நிறையக் கிடைக்க வேண்டுமென்ற உணர்ச்சியில்தான் வேலை செய்கிறார்கள்.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இரண்டு ஆண்டுகளாக . . . .

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் பேசியதை நாங்கள் அப்படியே ஏற்றுக் கொண்டதாக ஆகாது. எங்கள் கட்சியைத் தாக்கிப் பேசியபோதுகூட இந்தச் சபையின் மரபை நாங்கள் காத்தது மாதிரி, மாண்புமிகு அமைச்சர்களும் குறிப்பு எழுதி வைத்துக் கொண்டு, கவர்னர் உரை மீதான விவாதத்திற்கு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் முன்பு விளக்கம் தந்தால், இந்தச் சபையின் மரபு காக்கப்படும்.

**திரு. ஆ. திராவிடமணி:** மாநிலத்திலே பல்வேறு தொழிற்சாலைகள், நூற்பு ஆலைகள் இருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக . . . . . . (தொழிலாளர் நல அமைச்சர் 'கடந்த 9 மாதங்களாக' என்றார்) நன்றி, திருத்திக்கொள்கிறேன். ஓராண்டு பட்டினி கிடந்தார்கள் என்பது உண்மைதான்.

பல்வேறு தொழிற்சாலைகள், ஆலைகள் இருக்கின்றன. அங்கே லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். லாபம் சம்பாதித்துக் கொடுக்கிறார்கள், போனஸ் வாங்குகிறார்கள். அமைச்சரவர்கள் தலையிட்டு, சில பிரச்சினைகளை சுமுகமாகப் பேசி தீர்த்திருக்கிறார்கள். பல்வேறு சங்கங்கள் சுமுகமாகப் பேசித் சில பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறார்கள். தொழிற் சங்கத் தலைவர்கள், 40 ஆண்டுகள், 30 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள், பேசி பிரச்சினைகளை முடித்திருக்கிறார்கள். அதே போல டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலைத் தகராறு பற்றி, சம்பந்தப்பட்ட உரிமையாளர்களைக் கூப்பிட்டு, உங்களிடையே என்ன தகராறு என்று கேட்டு, சமரசமாகப் பேசியிருந்தால், ஓராண்டு வரை அந்தப் பிரச்சினை இருந்திருக்காது. அந்தத் தொழிலாளர்கள் பசியோடு, பட்டினியோடு இருந்திருக்க மாட்டார்கள். அந்தத் தொழிலாளர்களின் வீட்டுப் பெண்கள், குழந்தைகள் ஊர்வலமாக திரு. தங்கமணி அவர்களின் தலைமையின்கீழ் வந்தார்கள். முதலிலேயே ஊர்வலத்திற்கு அனுமதியில்லை என்று சொல்லித் தடுத்திருக்கலாம். ஊர்வலம் வரும்போது, இடையிலே புகுந்து தாய்மார்களையும், குழந்தைகளையும் அடித்திருக்கிறார்கள். ஒரு பார்-அட்-லா முன்னாள் எம்.பி. முன்னாள் எம்.எல்.ஏ.வாக இருந்தவர் திரு. தங்கமணி அவர்கள் அவரை அடித்திருக்கிறார்கள். அப்படி அவரை அடிக்கும்போது, மற்றவர்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஏன் அடித்து விட்டார்களென்று பக்கத்து வீட்டுக்காரர்கள் கேட்க மாட்டார்களா? திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கலைஞர் அவர்களுக்குப் போன் பண்ணி திரு. தங்கமணியை அடித்துவிட்டார்களென்று சொன்னார்கள். 13 ஆம் தேதி சம்பவம் நடந்திருக்கிறது. 14 ஆம் தேதி தி.மு.க. செயற்குழுக் கூட்டத்திலே செய்தி தெரிவிக்கப்பட்டது. செய்தி தெரிவிக்கப்பட்டவுடன், 16 ஆம் தேதி சர்வ கட்சிக் கூட்டத்திலே,

தங்கமணி அவர்களை அடித்தது தவறு. இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், உடனடியாக முதலமைச்சரவர்கள் தலையிட்டு, பேச்சு வார்த்தை நடத்த வேண்டும், இது எந்தக் காரணத்தால் என்பது தெளிவாகத் தெரிய வேண்டுமென்று சர்வ கட்சியினர் முடிவு செய்து முதலமைச்சரவர்களைப் பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கச் சென்ற நேரத்திலே முதலமைச்சரிடமிருந்து ஒன்றுமே தகவல் இல்லை. அதற்குப் பிறகு வேறு வழியில்லை. இப்படியே அடித்துக்கொண்டு போனால், அதற்கு முடிவு வேண்டுமென்பதற்காக மாநில அளவில் பந்த் நடத்த அறிவிக்கப்பட்டது. ஏன் இந்த பந்த் 23 ஆம் தேதி நடக்கிறது என்று விளக்க ஒரு பொதுக் கூட்டத்தை 22 ஆம் தேதி சர்வ கட்சி சார்பாக பொதுக்கூட்டம் நடத்தி தெரிவிக்கப்பட்டது. மக்கள் மத்தியிலே விளக்கங்கள் கொடுத்து, 23 ஆம் தேதி கடைகளை அடைக்க வேண்டும், எல்லோரும் கடை அடையுங்கள், ஒரு தங்கமணி அடிபட்டார் என்றால், இது மாநிலத்திலுள்ள அத்தனை தொழிலாளர்களுக்கும் கேவலம், இதிலே அத்தனை பேரும் நியாயம் சொல்லுங்கள் என்று கேட்டோம். ஒருநாள் அடையுங்கள் என்று எவ்வளவோ சொன்னோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22 ஆம் தேதி வரையில்

(பிற்பகல் 6-10)

ஒன்றும் சொல்லவில்லை. 22 ஆம் தேதி பெரியார் விழாவிலே பேசுகின்றார்கள். அன்று கடைசி நேரத்திலே கூட இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. 22 ஆம் தேதி அன்று பேசியிருக்கிறார்கள். 23 ஆம் தேதியன்று வானொலியில் பேசியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு அன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன், "நாளை நடத்த இருக்கின்ற 'பந்த்'-ஐ நிறுத்துங்கள்" என்று கடைசி நேரத்திலேகூட சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லவில்லை. அப்படிச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆறு மணி அளவில் வானொலிப் பேச்சு ஒலி பரப்பப்படுகிறது. அன்றைய 15 நிமிட நேர வானொலிப் பேச்சை நானும் கேட்டேன். ஒரு வார்த்தையாவது சொல்வார் என்று எதிர்பார்த்தேன், ஆனால், அந்த 'பந்த்'-ஐ எப்படிப் பந்தாடுவது என்றுதான் சொன்னார்களே தவிர, இந்தப் போராட்டத்தை வாபஸ் வாங்குங்கள் பேசித் தீர்ப்போம் என்று சொல்லவில்லை. பின்னர் சிறையிலிருந்த உமாநாத் அவர்கள் கேட்டுக்கொண்டபடி பின்னர் 31 ஆம் தேதி அளவில் ஒரு அறிக்கைகூட கொடுத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள், என்று சொல்லியிருந்தால், அந்தப் பிரச்சினை முடிந்திருக்கும். அப்படி ஏன் அவர் சொல்லவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. இதற்கு என்ன சர்வ கட்சிக்கூட்டம் வைக்கக்கூடாதா? அதில் பேசக்கூடாதா? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதுகூட, பல்வேறு தொழிற் சங்கங்கள் போராட்டங்கள் நடத்தினார்கள். [illegible]



கோயம்புத்தூர் மில் தொழிலாளர் பிரச்சினை வந்தது. அப்போது கலைஞர் அவர்கள் சர்வ கட்சியினரை அழைத்துப் பேசி, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லையா? அதே மாதிரி ஏன் செய்திருக்கக் கூடாது என்று கேட்க எனக்கு உரிமையுண்டு. நாங்கள் எதிர்க்கட்சியினர் என்ற முறையில் அந்தப் பிரச்சினைகளை அணுகுகிறோம். பொதுமக்களின் பிரச்சினைகள் வரும்போது, அதை நாங்கள் கட்சிப் பிரச்சினையாக்கி, ஆட்சியைக் கவிழ்க்க இப்படியெல்லாம் செய்வதாக முதலமைச்சர் அவர்கள் பலமுறை சொல்லிவிட்டார்கள். ஜனநாயக முறையிலே அமைக்கப்பட்ட இந்த ஆட்சியைக் கவிழ்ப்பது என்று சொல்வது சிறுபிள்ளைத்தனமான பேச்சு என்று கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இங்கு அங்கத்தினர் டாக்டர் ஹண்டே ஒரு அரசியல் கட்சியை விட்டு கட்சி தாவுகின்ற அந்த முறையிலே பேசுகின்றார். இப்படிப்பட்ட நிலைமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை என்பதை மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி மொழிப் பிரச்சினையில் இங்கு எந்த அளவுக்குத் தீவிரமாக இருந்தது என்பதும் தெரியும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அண்டை மாநிலங்களின் முதலமைச்சரவர்களை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். ஆந்திரா மும்மொழித் திட்டம் வேண்டும் என்று சொல்கிறது.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Chairman, Sir, while referring to the hon. Member Dr. Hande, I heard the Member using the word" கட்சியை விட்டு கட்சியை தாவுகின்ற" I think that it is not benefiting the honour and dignity of this House to use such expressions which tend to cast aspersions on the political activities of an hon. Member.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சில விஷயங்களைக் குறிப்பிட்டுப் பேசும்போது, கண்ணியமான முறையில் மற்ற உறுப்பினர்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி: துணைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்திப் பிரச்சினை குறித்து ஆந்திர முதலமைச்சர் அவர்களை அழைத்துப் பேசினார்கள். கர்நாடக முதலமைச்சர் அவர்களை அழைத்துப் பேசினார்கள். கேரள முதலமைச்சர் அவர்களை அழைத்துப் பேசினார்கள். அந்த மூன்று முதலமைச்சர்களும் ஒத்துக்கொள்ளவில்லை. அந்த மூன்று பேருமே மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டவர்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்லெண்ணத்தில் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற கருத்திலே கூட்டம் போட்டுப் பேசுகின்றார்கள். இந்தி

இப்போது நாட்டிலே போதை பரவிக்கொண்டிருக்கிறது. மத்தியிலே ரெயில்வே துறையிலும், போஸ்டல் துறையிலும் இந்தியைத் திணிப்பதிலே இருக்கின்றார்கள். அந்தத் துறைகளில் பணியாற்றுகின்றவர்கள் இந்தியிலே தேர்வு பெற்றால்தான் அவர்களுக்குப் பதவி உயர்வு என்றெல்லாம் அறிக்கைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். பாதி அலுவலகங்களிலே இந்தியைப் புகுத்திய வேண்டும், மருந்துச் சீட்டுகளிலேகூட இந்தியிலேதான் மருந்து குறிப்பிட்டு எழுத வேண்டும் என்றெல்லாம் சொல்கின்றார்கள். அவர்கள் அதைப்பற்றி கண்டிப்பாகவே சொல்லிவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே திராவிட முன்னேற்றக் கழகம் தீவிரம் காட்டுகிறது. 1938-லிருந்தே இந்தி எதிர்ப்பிலே தீவிரமாக, யாரைப் பற்றியும் கவலைப்படாமல், இருக்கிறது. தனியாக ஒரு மகாநாடு போட்டு, கருப்புச் சட்டை ஊர்வலம் நடத்தி, மத்திய சர்க்காருக்கு நம்முடைய வெறுப்பைக் காட்டினோம். திருச்சியிலே மகாநாடு நடந்துவிட்டது என்பதற்காகவே கோவையிலே ஒரு மகாநாடு போட்டிருக்கிறீர்கள். இந்தப் போட்டி மகாநாட்டைப் போட்டது யார் என்று இந்த அவைக்குத் தெரியும், நாட்டிற்கும் தெரியும். திருச்சியிலே இந்தி எதிர்ப்புக்காக மகாநாடு நடந்தது. அதிலே மாநில சர்க்காருக்குப் பிரச்சினை யில்லை. மத்திய அரசின் இந்தித் திணிப்பை நாம் கண்டிப்பாக எதிர்க்க வேண்டும் என்று மகாநாடு நடத்தினோம். இதை வைத்துக்கொண்டு, நாங்கள் அரசியல் பண்ண வேண்டுமென்று இல்லை. இதற்காக நமது முதலமைச்சர் அவர்கள் மற்ற மூன்று மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டி னார்கள். அதைப்பற்றிப் பேசினார்கள் என்று டாக்டர் ஹண்டே அவர்களும் பேசினார்கள். அவர்கள் அந்த மகாநாட்டிலே நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டோம் என்று சொன்னார்களா? அவர்கள் அப்படியே போய்விட்டார்கள். இதற்கு ஒரு கூட்டம் தேவையா? தமிழக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக அவர்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று என்ன அவசியம் இருக்கிறது? இந்தித் திணிப்பைக் கண்டித்ததால் விமோசனம் வந்தது என்று பெருமை வரட்டும் என்பதற்காகச் செய்யவில்லை. இந்தி புகுத்தப்பட்டு விட்டால், அந்த நோய் பரவிவிடும் என்பதற்காக, தி.மு. கழகம் கடமை உணர்ச்சியோடு செய்தார்களே தவிர, வேறல்ல. யாரையும் எதிர்க்கும் நோக்கத்துடன் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பிரச்சினையை அணுக வில்லை என்பதை நமது அங்கத்தினர் டாக்டர் ஹண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்களின் உரையிலே, காவிரி நீர்ப் பிரச்சினை என்ன ஆயிற்று என்று சொல்லப்படவில்லை. காவிரி நீர் பிரச்சினை விஷய மாக டெல்லி போயிருந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அங்கே கண்டிப்





பாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் பத்திரிகையிலே பார்த் தேன். இது ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயம். 1974-லே தமிழ்நாட்டிற்கு 56,600 கோடி கன அடி தண்ணீர், கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது பெற்று இருக்கின்றார். "இந்த அளவு தண்ணீரைத் தந்தால்தான், நாட சமாதானமாகப் பேச முடியும். நீங்கள் தண்ணீரைக் குறைத்தால் நான் கையெழுத்துப் போட மாட்டேன்" என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, டெல்லிக்குப் போய் மத்திய அமைச் சர்களிடத்திலே பேசும்போது, 56,600 கோடி கன அடி தண்ணீர் வாங்கியிருக் கிறார்கள். அதுவும் அவசர கால நெருக்கடி நேரத்திலே, 1976-ல் 48,900 கோடி கன அடி அளவுக்குக் குறைந்துவிட்டது. 8,000 கோடி கன அடி தண்ணீரைப் பெறுவதற்கு திரு. தேவராஜ் அர்சுடன் பேசியிருக்கிறார்கள். "8,000 கோடி கன அடி தண்ணீரைக் குறைத்திருக்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். 1974-ல் கலைஞர் அவர்கள் இருந்தபோது, 56,600 கோடி கன அடி தண்ணீர் கொடுத்தீர்களே அந்த அளவுக்கு வேண்டும், இப்போது அப்படித் தருவதாக இருந்தால்தான் நான் கையெழுத்துப் போடு வேன்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே பேசியதாகச் செய்தி வந்தது. அந்தச் செய்திப்படி அந்த அளவு குறைக்கப்பட்ட தண்ணீ ரைப் பெறுவதற்கு என்ன திட்டம் மேற்கொண்டிருக்கிறீர்கள் என்று இந்தக் குறிப்பிலே இல்லை. நிதிநிலை அறிக்கையிலே அதைப்பற்றிச் சொல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

(பிற்பகல் 6-20)

அடுத்தபடியாக, சிறிய விவசாயிகளிடமிருந்து வட ஆற்காடு மாவட்டத் திலே ஜப்திகள் நிறையச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பாத்திரம், கலப்பை போன்றவற்றைக் கொண்டு போய்விட்டார்கள். ஒரு வீட்டிலே இருந்த கதவைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். மாவாட்டும் கல்லைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். மசால் அரைக்கும் அம்மியைக் கூட தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். (சிரிப்பு). குழவி மட்டும் வீட்டில் கிடக்கிறது (பலத்த சிரிப்பு). இது தொடர்பாக உயர் மட்டக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வருகிறது. அவர்கள் அரசுக்கு ஓர் அறிக்கை தருவார்கள். அந்த அறிக்கை வந்த பிறகு வசூலை எப்படிச் செய்வது, எத்தனை ஏக்கர் வரை உள்ளவர்களுக்குக் கடன்களைத் தள்ளுபடி செய்வது, எந்தெந்தப் பகுதி களிலே விளைச்சல் இல்லை, எந்தெந்தப் பகுதிகளில் மணல் மூடி விட்டது போன்ற விஷயங்களில் முடிவெடுப்பார்கள். அதற்குப் பிறகு இந்த வசூலைச் செய்வதில் கொஞ்சம் வேகம் காட்டுவோம். அப்படி வேகம் காட்டியும்

அவர்கள் குத்தகை பாக்கியில்லையென்றதால், ஜப்தி செய்வோம் என்று சொல்லுகிறார்கள். [illegible] பட்டக் குழுவினர் [illegible] சுற்றுப்பயணம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்தாலோசித்து அறிக்கையைத் தயாரித்து வருகிறார்கள். இந்த ஜப்தி [illegible] தஞ்சாவூர் மாவட்டத்திலே மட்டும் செய்யப்படுவதாக ஏற்கெனவே பலர் சொல்லுகிறார்கள். அவர்கள் மீது ஜப்தி செய்யப்படுவதாக பத்திரிகைகளில் செய்திகளெல்லாம் வருகின்றன. இது சம்பந்தமாக எங்களுக்கெல்லாம் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்திலே உள்ள மக்களை [illegible] மக்களை [illegible] கசக்கிக் காரணம் தான் என்ன? [illegible] திட்டத்திலே அவர்களுக்கு [illegible] செய்ய வேண்டும். [illegible] இருந்தால் கூட பரவாயில்லை. [illegible] கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய [illegible] செய்துள்ளோம் என்று [illegible] ஆளுநர் உரையில் இருந்திருக்கலாம். ஆனால் அதற்கு ஒரு வழிவகை இருக்கவில்லை. [illegible] திட்டத்திலாவது அதை ஒரு அம்சமாகச் சேர்க்க வேண்டும். [illegible] வேண்டும்.

அடுத்தபடியாக, நெல்லுக்கு விலை நிர்ணயிப்பதைப் பொறுத்தவரை இன்னும் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்ற ஒரு வாசகம் கவர்னர் உரையில் வருகிறது. "கோதுமைக்கு இதுவரை அளிக்கப்பட்டு வந்துள்ள மாதிரி, அரிசிக்கும் தர வேண்டுமென்ற கருத்தை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தும்" என்று இருக்கிறது. இப்படிப் பிரச்சினையை ஆரம்பித்து ஓராண்டு ஆகிறது. இன்னும் வலியுறுத்தும், கேட்கும், சொல்லும் பார்க்கும் என்றெல்லாம் வாக்கு கூடாது. (சிரிப்பு). திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் போனஸ் என்ற வகையில் 15 ரூபாயும், வண்டிக் கூலி என்ற வகையில் 5 ரூபாயும் தந்த மாதிரி, சைக்காடிய புதிய வரவு செலவுத் திட்டத்திலாவது அதை மறவாமல் சேர்த்து விட வேண்டும். மத்திய சர்க்கார் கொடுக்கும், கவனிக்கும், பார்க்கும், வலியுறுத்துவோம் என்றெல்லாம் எழுதுவதையும், பார்த்தும், கேட்டும் சலித்து விட்டது, புளித்து விட்டது. "எங்கள் சாதனையால் 13 ஆயிரம் கிராமங்கள் பயன்பெற்று விட்டன"—இந்தச் செய்திகளெல்லாம் எனோ திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத் தெரியவில்லை.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான் தேர்தல் நேரத்தில் போது கொடுத்த வாக்குறுதிகளை அப்படியே நிறைவேற்றியிருக்கிறது என்று டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள். காமராஜர் அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை முதன் முதலாக நிறைவேற்றி



னார்கள். எஸ்.எஸ்.எல்.சி. வரை இலவசக் கல்வி என்று சொன்னார்கள். சொன்னமாதிரி அந்தத் திட்டத்தை அமுல்படுத்தினார்கள். பி.யு.சி. வரை இலவசக் கல்வி என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். சொன்னமாதிரி அதை நிறைவேற்றினார்கள். அதேமாதிரி 1967 ஆம் ஆண்டிலே புஞ்சை நிலங்களுக்கு நில வரி இல்லை என்று சொன்னார்கள். அதை நிறைவேற்றினார்கள். அதேமாதிரி ஏழையெளியவர்களுக்கு வரியைக் குறைப்போம், தாங்கக்கூடியவர்களுக்கு வரியை விதிப்போம் என்று பேரறிஞர் அண்ணா சொன்னார்; அதை நிறைவேற்றினார். ஊனமுற்றோர்களுக்கு மறுவாழ்வு உண்டு, கண்ணிழந்தவர்களுக்கு மறுவாழ்வு உண்டு என்று கலைஞர் சொன்னார்; சொன்னமாதிரி நிறைவேற்றினார். அதைத் தொடர்ந்து நீங்களும் சில வாக்குறுதிகள் சொன்னீர்கள். சில காரியம் செய்திருக்கிறீர்கள். 'நாங்கள் தான் செய்தோம்' என்று சொல்லக் கூடாது (சிரிப்பு). "நாங்களும் செய்தோம்" என்றுதான் இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, அமுதம் நியாய விலைக் கடைகள் என்ற பெயரில் அவற்றுக்கு 150 ரூபாய் சம்பளத்தில் எஸ்.எஸ்.எல்.சி. காரர்களை நியமித்திருக்கிறார்கள். அமுதம் கடைகளில் சரியான வியாபாரம் இல்லை. அவைகள் வெறும் டம்மியாக இருக்கின்றன. கடையில் வியாபாரம் இல்லாத இந்த நிலையில் கடை வாடகை வேறு, மின்சாரக் கட்டணம் வேறு கட்ட வேண்டியுள்ளது. அமுதத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள வினியோக உரிமையைப் பறித்து மினி சூப்பர் மார்க்கெட்டுக்குக் கொடுத்தால், வேலையும் கிடைக்கும், விற்பனையும் 'டல்' ஆகாது, நஷ்டமும் ஏற்படாது. இதில் 3 கோடி ரூபாய் நஷ்டம் என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசு ஈட்டுத் தொகை கொடுக்கும் என்று நம்பி ஒவ்வொரு அமுதத்துக்கும் 2 பேரை நியமித்து உட்கார வைத்திருக்கிறார்கள். நான் சொல்லுவதெல்லாம், "தனியாரிடம் அந்த உரிமையைக் கொடுக்க வேண்டாம். ஸ்டோர்களுக்கு அந்த உரிமையைக் கொடுக்கலாம். அவர்கள் தவறு ஏதேனும் செய்தால், உடனே அந்த உரிமையைப் பறிக்கலாம்." அப்படி இல்லாமல் தனியாகக் கடையை வைத்து, இரண்டிரண்டு பேர் வீதம் உட்கார வைத்து, சர்க்கார் கோடிக் கணக்கில் நஷ்டப்பட்டு, அதை இயக்கத் தேவையில்லை.

அடுத்தபடியாக, 5 ஆண்டுகளில் ஒரு லட்சம் வீடுகள் கட்டப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கொத்தனார், சித்தாள் போன்றவர்கள் இன்றைய தினம் நாட்டிலே நிறைய பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆண்டுக்கு ஒரு லட்சம் வீடுகள் என்று அந்தத் திட்டத்தை மாற்ற வேண்டும்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு லட்சம் வீடுகள் என்பதை ஆண்டுக்கு ஒரு லட்சம் வீடுகள் என்று திட்டமிட வேண்டும். அந்த பாதியை மாற்றிக் கொண்டு ஒரு லட்சம் வீடுகள் என்று திட்டத்தைத் தீட்டி, வேலைவாய்ப்பு, கிராமப்புறங்களில் மக்கள் வேலையில்லாமல் தவிக்கின்ற நிலைமையைப் போக்க வேண்டும். கிராமங்களிலே மற்றும் கிராமப்புறங்களிலே உள்ள மக்களிடம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவோம் என்று வழங்குவது சொல்லுகின்ற வெறும் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருந்தால், உண்மையிலேயே அந்த லட்சக்கணக்கான மக்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். உண்மையிலேயே இந்த அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 2 ஆயிரம் குடும்பங்கள் நைலான் வலைகளை குடிசைகளில் பின்னிக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் சாதாரண ஏழை எளிய மக்கள், படிக்காத மக்கள் எதோ தன் கையே தனக்கு உதவி என்ற முறையில் தாங்கள் கற்ற நூலைத் தொழிலை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் நைலான் நூல் வாங்கி அதை வலையாகப் பின்னி, விற்று, வயிற்றுப் பிழைப்பை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழை எளிய மக்களின் தொழிலைக் கெடுக்க ஒரு நாள் அங்கே இயந்திர மெஷின் வைத்திருக்கிறார். அந்த மெஷினை உடனே எடுத்து அந்த இரண்டாயிரம் குடும்பங்களும் தாங்கள் செய்து வந்த தொழிலைத் தொடர்ந்து செய்ய வழிவகை செய்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பல உறுப்பினர்கள் இன்னும் பேச இருக்கிறார்கள். விரைவாகப் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஆ. திராவிடமணி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்னும் ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டும் கூறி என்னுடைய உரையை முடித்து விடுகிறேன். அடுத்தபடியாக, "சென்னையிலும், நீலகிரி மாவட்டத்திலும் பெய்த பெரு மழை காரணமாக" என்று மட்டுமே போட்டிருக்கிறார்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலும் பெரு மழை பெய்து, புயல் அடித்து ஏராளமான இடங்கள் சேதம் அடைந்திருக்கின்றன. சென்னையிலும் நீலகிரி மாவட்டத்திலும் என்ற வார்த்தைகளுக்கு அடுத்து "கன்னியாகுமரி மாவட்டத்திலும் தஞ்சை மாவட்டத்திலும்" என்று இருந்திருக்க வேண்டும். காரணம் தஞ்சை மாவட்டம் கடற்கரையைக் கொண்டதாக இருப்பதால், அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த இரண்டு மாவட்டங்களின் பெயர்களும் அதில் இருந்திருக்க வேண்டும். "சென்னையிலும், நீலகிரி மாவட்டத்திலும்,





கன்னியாகுமரி மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்தில் கடற்கரையை ஒட்டிய பகுதிகளிலும் பெய்த பெரு மழை காரணமாக" என்று ஆளுநர் உரையில் வரவில்லை என்றாலும் கூட, அவர்களுக்கும் அந்தச் சலுகையைக் கொடுக்க வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் மலைச் சரிவில் வீடுகளைக் கட்டிவிட்டார்கள். அந்த வேலை செய்கின்ற தொழிலாளர்கள் தங்களின் வசதிக்காக அப்படிக் கட்டிவிட்டார்கள். அப்படிப்பட்ட வீடுகளை மலைச் சரிவில் கட்டியதால்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. தொழிலாளர்கள் கட்டியதால்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. தொழிலாளர்கள் கட்டியதால்தான் இப்படிப்பட்ட வீடுகள் சமவெளியில் அண்மை அரசுகள் சொன்னபடி ஆயிரம் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். ஆனாலும் நான் கூறுகிறேன், வீடுகள் கட்டுவதற்கு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதாது. அதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும்.

பாம்பன், ராமேஸ்வரம், தங்கச்சிமடம் போன்ற பகுதிகளில் 750 படகுகள் பாதிக்கப்பட்டு மீனவர்கள் மீன் பிடிக்கப் போக முடியாமல் கஷ்டப்

(பிற்பகல் 6-30)

படுகிறார்கள். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் நிவாரணத் திற்காக என்று ரூபாய் 10 கோடி அளித்திருக்கிறார்கள். ஆனால் நமது அரசு ரூபாய் 50 லட்சம் மட்டுமே இதற்காகச் செலவிடப்படும் என்று சொல்லியிருக் கிறது. எனவே, குறைந்தது ரூபாய் 2 கோடியாவது அரசு ஒதுக்கி இராமேஸ்வரம் பகுதியில் அடிக்கடி பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நிரந்தரமான வசதிகள் கொடுத்து அவர்களுடைய மறுவாழ்வை உத்தரவாதம் செய்ய வேண்டும். அதை அரசு செய்யும் என்று நம்புகிறேன்.

அடுத்து, கலைத் துறையில் பணியாற்றக்கூடியவர்களுக்கு நிதி வழங்குவது பற்றி அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். திருமதி வைஜயந்திமாலா வுக்கு நிதி உதவி; வாழ்க்கையிலே நன்றாக இருக்கிறவர் அவர். பெரிய இலட்சாதிபதியான டாக்டர் பாலியைத் திருமணம் செய்துகொண்டிருக்கிறவர். இவர்களுக்குப் போய் நிதி வளமான வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறவர். பிரியாணி சாப்பிட்டவருக்கு மேலே தயிர் வழங்குவது என்பது சரியில்லை. நிறைய பேர் பசியோடு இருக்கிறார்கள். சாதம் தேவையில்லை. (சிரிப்பு) மதுரை மாவட்டத்தில் அவர்களுக்குச் சாப்பாடு போடுங்கள். 8 கட்டை நாடக நடிகர்கள் நிறைய பேர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேடையிலே பாடக்கூடியவர்கள் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ராஜபார்ட், ராஜா, ராஜபார்ட்தான். ஸ்திரீ பார்ட் நாடகத்திலே நடிக்கும்போது "ராஜாதி ராஜ, ராஜமார்த்தாண்ட, வீராதி வீரர், தீராதி தீர", நாடகம் முடிந்த உடனே ஹார்மோனியப் பெட்டியைத்

[திரு. ஆ. திராவிடமணி] [1979 பிப்ரவரி 12

தலைமைச் செயலகத்தில் [illegible] கொண்டிருக்கின்றவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களை நாட்டிலே சொல்லுவது "கூஜா". அவர்களுக்கெல்லாம் 15 ரூபாய்தான் சம்பளமாக நாட்டிலே கிடைக்கிறது. இந்த நாட்டில் [illegible] பஞ்சாயத்துக்களிலே நடக்கும். பஞ்சாயத்து, [illegible], [illegible] பஞ்சாயத்துக்களில்தான் நடக்கும். [illegible] களில் மழை இருக்கும். [illegible] இருக்கும். [illegible] இவர்களுக்குப் [illegible]. [illegible] வேலை யில்லாமல் [illegible] கொண்டிருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் [illegible] இருக்கிறார்கள். 25 ரூபாய்க்கு [illegible]. [illegible], [illegible], கிருத்தன் எல்லாம் [illegible] 60 [illegible] "[illegible]. . ." (உறுப்பினர் [illegible]—[illegible]) ஆனாலும், [illegible] கொண்டிருக்கிறார்கள். அவர்களுக் [illegible] விட்டுவிட்டு [illegible] ஆடுகி [illegible] கொண்டிருக்கிறார்கள். [illegible] என்பது [illegible] இருக்கும்? [illegible] உதவி [illegible] இருக்கும். [illegible] வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் ஹண்டே அவர்கள், குறை சொல்லுவதுதான் தி.மு.க.வுக்கு வேலை என்று கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் ஆட்சியின்போதே எதிர்க்கட்சியாகச் செயல்பட்டு நல்ல பெயர் வாங்கியது. 1957 முதல் 1962 வரை 15 பேரோடு எதிர்க்கட்சியில் இருந்த தி.மு.க. டாக்டர் [illegible] பாராட்டப்பட்டது. என்றால், [illegible] எதிர்க்கட்சி என்று பாராட்டப்பெற்றது. 15, 50 ஆக [illegible] பெற்ற எதிர்க்கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். அப்படி எதிர்க்கட்சியாக இருந்து ஆளும் கட்சியாக வந்தோம். இப்போது மீண்டும் எதிர்க்கட்சியாக இருக்கிறோம். எனவே எதிர்க்கட்சி என்றாலே குறை சொல்லிக்கொண்டே இருப்பவர்கள் என்று டாக்டர் அவர்கள் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார். அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். தாங்கள் மிகவும் பண்பட்டவர்கள். தெளிந்தவர்கள்.



1979 பிப்ரவரி 12] [திரு. ஆ. திராவிடமணி]

அடுத்து, முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்களுக்கு அரசாங்கத்திலே யிருந்து மாதம் ரூபாய் 500 உதவி அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மிகவும் நல்லது. மதுரை வைத்தியநாத அய்யர் அவர்களுடைய சிஷ்யர். அவருக்கு மாதம் ரூபாய் 1,000 கொடுக்கலாம். அவர் கால் வீங்கிப் போய் ஆஸ்பத்திரியில் படுத்துக்கொண்டிருக்கிறார். நாங்கள் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்குக் கொடுத்த அடிப்படையிலே நீங்களும் செய்திருக்கிறீர்கள். கிட்டத்தட்ட தான் அவர்களுக்குக் கொடுத்த அடிப்படையில் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் அதை 1,000 ரூபாயாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

*திரு. என். இராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையை நான் படித்துப் பார்த்தேன். எதோ எல்லா வகையிலும் தொட்டுத் தொட்டுப் பேசியிருக்கிறார். ஆனால் விவசாயியைப் பொறுத்தவரையில், அவன் என்ன துரதிருஷ்டம் செய்தானோ தெரியவில்லை, அவனைப்பற்றி இந்த அறிக்கையிலே ஒன்றுமே யில்லை. இன்று நாட்டிலெல்லாம் "தன்னைப் பெற்ற ஆத்தாள் கஞ்சிப் பிச்சை வாங்குகிறாள்: தம்பி கும்பகோணத்தில் கோதானம், பூதானம் வழங்குகிறான்" என்பதைப்போல இருக்கிறது. (சிரிப்பு) என்னுடைய அனுபவத்தில் நான் பார்க்கிறேன் என்றால், நீ பெரியவனா நான் பெரியவனா என்ற சண்டை தான் தற்போது நடந்துகொண்டிருக்கிறது.

@ 77. Notification issued with G.O. Ms. No. 1236, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 6th November 1978 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Research (field) Assistant, Grade II sanctioned for Post-Graducate Course in Urban Engineering at the College of Engineering, Guindy within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

@ 78. Notification issued with G.O. Ms. No. 1478, Agriculture (A.M.I.), dated the 2nd September 1978 in regard to appointment of officers specified in the Table thereto as Special Officers to exercise the powers and perform the functions of the Market Committees specified therein. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

79. Sixth Annual Report of the Tamil Nadu Dairy Development Corporation Limited for the year 1977-78 containing the Audit Report and the comments of the Comptroller and Auditor-General of India. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

80. Schedules to Annual Financial Statement for 1978-79 and Supplementary Financial Statement for 1977-78 of the Tamil Nadu Electricity Board. [Laid on the table of the House under section 61 (3) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948)].

*B. Reports, Notifications and other Papers.*

* 1. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officer) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 11 of 1978).

* 2. The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 12 of 1978).

* 3. The Tamil Nadu Prohibition (Second Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 13 of 1978).

** 4. Fifth Report of the Committee on Public Undertakings on the Audit Report on the Accounts of the Tamil Nadu Housing Board for the year 1965 66. (Tamil).

*** 5. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 14 of 1978).

*** 6. The Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 15 of 1978).

*** 7. The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 16 of 1978).

*** 8. The Tamil Nadu Panchayats (Third Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 17 of 1978).

9. Tenth Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1975 to 31st March 1976.

££ 10. The Madras City Municipal Corporation (Second Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 18 of 1978).

&& 11. Notification issued with G.O. Ms. No. 730, Labour and Employment, dated the 13th July 1978, in regard to an amendment to the Tamil Nadu Contract Labour (Regulation and Abolition) Rules, 1975.



&12. The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Amendment Ordinance, 1979 (Tamil Nadu Ordinance No. 1 of 1979).

& 13. The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Ordinance 1979 (Tamil Nadu Ordinance No. 2 of 1979).

& 14. The Tamil Nadu Pawnbrokers (Amendment) Ordinance, 1979 (Tamil Nadu Ordinance No. 3 of 1979).

& 15. Extract of paragraphs 1 to 4 of his letter No. 1/13(2)/78/L-I, dated 15th December 1978 from the Secretary, Lok Sabha Secretariat, Parliament House, New Delhi-110001.

\+ 16. The Constitution (Forty-fifth Amendment) Bill, 1978 as introduced in the Lok Sabha.

\+ 17. The Constitution (Forty-fifth Amendment) Bill, 1978, as passed by the both Houses of Parliament.

\+ 18. Lok Sabha Debates on the Bill, dated 15th May, 7, 8, 9, 10, 11, 21, 22 and 23 August and 6 and 7 December 1978. (Vols. . and II).

\+ 19. Lok Sabha Debates on the Bill dated 15th May, 7, 8, 9, 1 August, 1978.

@ 20. The Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Ordinance, 979 (Tamil Nadu Ordinance No. 4 of 1979).

@ 21. Notification issued with G.O. Ms. No. 1233, Labour and Employment, dated the 13th October 1978 in regard to amendments to the Tamil Nadu Contract Labour (Regulation and Abolition) Rules, 1975.

@@ 22. The Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Amendment Ordinance, 1979 (Tamil Nadu Ordinance No. 5 of 1979).

23. Address by the Governor of Tamil Nadu to both Houses of the Tamil Nadu Legislature assembled together on 9th February 1979.

---

* Sent by post to all M.L.Cs. on 5th October 1978.

** Sent by post to all M.L.C.s, on 16th October 1978.

*** Sent by post to all M.L.Cs. on 2nd November 1978.

£ Sent by post to all M.L.Cs. on 16th November 1978.

££ Sent by post to all M.L.Cs. on the 4th December 1978.

£££ Sent by Post to all M.L.Cs. on 8th December 1978.

$ Sent by post all M.L.Cs. on 28th December 1978.

$$ Sent by post to all M.L.Cs. on 19th January 1979.

@ Sent by post to all M.L.Cs. on 31st January 1979.

@@ Sent by post to all M.L.Cs. on 6th February 1979.

% Laid on the Table of the House on 9th February 1979.

\+ Circulated to all M.L.Cs.



## இணைப்பு I

[19-ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 6-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### சேலம் மாவட்டத்தில் 1978-79-ல் தொடங்க அனுமதித்துள்ள மேல்நிலைப் பள்ளிகளின் பட்டியல்.

1. அமம்மாப்பேட்டை நகராட்சி மேல்நிலைப்பள்ளி, அம்மாப்பேட்டை.
2. சிறுமலர் மேல்நிலைப்பள்ளி, சேலம்.
3. ஸ்ரீ இராமலிங்க வள்ளலார் மேல்நிலைப்பள்ளி, சூரமங்கலம்.
4. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர்.
5. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, (தெற்), நாமக்கல்.
6. அரசு மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர் ரோடு, ராசிபுரம்.
7. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சங்ககிரி.
8. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, எடப்பாடி.
9. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு.
10. செங்குந்தர் மகாஜன மேல்நிலைப்பள்ளி, தாரமங்கலம்.
11. அரசு மேல்நிலைப்பள்ளி, மேட்டூர் அணை.
12 .குகை நகராட்சிப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சேலம்.
13. பாரதி வித்தியாலயா மேல்நிலைப்பள்ளி, சேலம்.
14. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சேலம்.
15. நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சேலம்.
16. நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பாவடி, சேலம்.
17. ஸ்ரீ ராமகிருஷ்னா சாரதா மேல்நிலைப்பள்ளி, சுப்ரமணியபுரம், சேலம்.
18. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆட்டையாம்பட்டி.
19. அரசு மேல் நிலைப்பள்ளி, வேம்படிதாளம்.
20. அரசு மேல் நிலைப்பள்ளி, அயோத்தியாப்பட்டணம்.
21. அரசு மேல் நிலைப்பள்ளி, பேளூர்.
22. அரசு மேல் நிலைப்பள்ளி, வாழப்பாடி.
23. அரசு மேல் நிலைப்பள்ளி, மல்லூர்.

[1979 பிப்ரவரி 12

24. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, தம்மம்பட்டி.
25. அரசு மேல்நிலைப்பள்ளி, கங்கவள்ளி.
26. அரசு மேல்நிலைப்பள்ளி, பெத்தநாயக்கன்பாளையம்.
27. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நாமக்கல்.
28. அரசு மேல்நிலைப்பள்ளி, மோகனூர்.
29. கந்தசாமி கண்டர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வேலூர்.
30. அரசு மேல்நிலைப்பள்ளி, வெண்ணந்தூர்.
31. அரசு மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம்.
32. அரசு மேல்நிலைப்பள்ளி, மல்ல சமுத்திரம்.
33. அரசு மேல்நிலைப்பள்ளி, நடுப்பட்டி.
34. அரசு மேல்நிலைப்பள்ளி, மேச்சேரி.
35. அரசு மேல்நிலைப்பள்ளி, ஜலகண்டாபுரம்.
36. அரசு மேல்நிலைப்பள்ளி, வந்தவாசி.
37. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.
38. நிர்மலா மேல்நிலைப்பள்ளி, கொளத்தூர்.
39. வல்வில் ஓரி ஜி. டி. ஆர். மேல்நிலைப்பள்ளி, வளவந்தி நாடு கொல்லி மலை.
40. புனித ஜோசப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ராசிபுரம்.
41. அரசு மேல்நிலைப்பள்ளி, எருமப்பட்டி.
42. அரசு மேல்நிலைப்பள்ளி, மகுடஞ்சாவடி.
43. புனித மேரி மேல்நிலைப்பள்ளி, மேட்டூர் அணை.
44. நேஷனல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராசிபுரம்.
45. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு.
46. செங்குந்தர் மகாஜன மேல்நிலைப்பள்ளி, குருசாமிபாளையம்.
47. அரசு மேல்நிலைப்பள்ளி, கொங்கணாபுரம்.
48. பாத்திமா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஓமலூர்.
49. அரசு மேல்நிலைப்பள்ளி, தலைவாசல்.
50. அரசு மேல்நிலைப்பள்ளி, செல்லப்பம்பட்டி.
51. அரசு மேல்நிலைப்பள்ளி, நாமகிரிப்பேட்டை.



...ரி 12]

...மேல்நிலைப்பள்ளி, இளம்பிள்ளை.

...ராணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நெத்திமேடு, சேலம்.

...மேல்நிலைப்பள்ளி, பாண்ட மங்கலம்.

...மேல்நிலைப்பள்ளி, உலகப்பம்பாளையம்.

...சு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர்.

57. கோகுல்நாத் இந்து மகாஜன மேல்நிலைப்பள்ளி, சேலம்.
58. அரசு மேல்நிலைப்பள்ளி, மங்களபுரம்.
59. அரசு மேல்நிலைப்பள்ளி, சிங்களாந்தபுரம்.
60. அரசு மேல்நிலைப்பள்ளி, கந்தம்பாளையம்.
61. சி. எஸ். ஐ. மேல் நிலைப்பள்ளி, சேலம்.
62. அரசு மேல்நிலைப்பள்ளி, காரக்குறிச்சி புதூர்.
63. அரசு மேல்நிலைப்பள்ளி, தொ. ஜேடர்பாளையம்.
64. அரசு மேல்நிலைப்பள்ளி, கருப்பூர்.
65. அரசு மேல்நிலைப்பள்ளி, கோழிக்கால் நத்தம்.
66. அரசு மேல்நிலைப்பள்ளி, பேளுக் குறிச்சி.
67. அரசு மேல்நிலைப்பள்ளி, சாத்தப் பாடி.

### ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள்.

1. மான்ட்போர்ட், ஏற்காடு.
2. சேக்ரடு ஹார்ட், ஏற்காடு.

### மெட்ரிகுலேஷன் பள்ளிகள்.

1. ஹோலி கிராஸ் மெட்ரிக்குலேஷன் பள்ளி, சேலம்.
2. புனித ஜோசப் மெட்ரிக்குலேஷன் பள்ளி, சேலம்.

V2(1),32 N79 N79.154:1 12946

இணைப்பு II.

[34 ஆம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

Address by Thiru Prabhu Das Patwari, Governor of Tamil Nadu to the Members of the Tamil Nadu Legislative Assembly and the Tamil Nadu Legislative Council, assembled together at the Assembly Chamber, Fort St. George at 11.00 a.m. on Friday, the 9th February 1979.

Esteemed Members of the Legislature,

I have great pleasure in welcoming you all to this combined session.

2. The food position in Tamil Nadu is comfortable. There is no restriction on the movement of paddy and rice within the State. Even traders transporting rice or paddy outside the State have to give only a levy of 20 per cent.

3. The Tamil Nadu Government has been taking up with the Central Government the question of fair procurement price for paddy and stressing the need for fixing the price based on the cost of production. The Chief Minister reiterated this request by writing to the Prime Minister and the Union Agriculture Minister. Thanks to these efforts, the Central Government has raised the basic price for coarse variety of paddy from Rs. 78 to Rs. 85 per quintal. This is not adequate to cover the expenditure incurred by the agriculturists for paddy production. The price of wheat is fixed by Government of India based on the cost of cultivation. It is unfortunate that the request of Tamil Nadu Government to fix the price of paddy on a similar basis has not been conceded. There will be no let up in the State Government's efforts in emphasising the need for a fair price. Tamil Nadu will also stress the need for Government of India to subsidise rice price to the extent of wheat subsidy in order to continue to make rice available to the consumers at reasonable prices, simultaneously ensuring fair price to the producer.

4. Under the scheme for establishment of a fair price shop in every village, about 13,400 villages have benefited up to 31st January 1979. The remaining villages also will be covered



within one or two months. This scheme involving a net expenditure of about Rs. 3 crores per year, confers great benefits on the villagers. The Central Government has now evolved a scheme to assist the establishment of such village shops. I would like to urge the Government of India to allow assistance under its new scheme, to all the village shops in Tamil Nadu.

5. The Government has been giving special attention not only to distribution but also generation of electricity. During the last year the 35 MW. Suruliyar power station and the 110 MW. Kundah fourth stage power station have started their operations. The first 210 MW generator of the Tuticorin Thermal Power Station will be connected to the grid shortly. The Central Electricity Authority has approved the Lower Mettur Power Scheme having four power stations downstream of Mettur utilising the irrigation discharge. This scheme, with a total capacity of 120 MW. is expected to produce annually, on an average, 537 million units. Work on this project has already started. Work on the Kadamparai pumped storage power scheme has also commenced.

6. It is hoped that there will be no power cut during this year provided we have a normal South-west monsoon. Government has taken a policy decision that, in the event of any future power cut, small scale industries will be exempted from power cut as Agriculture is exempted at present. I hope that the Honourable Members will welcome this decision to encourage the small scale industries which provide widespread employment opportunities.

7. The Government has evolved a massive new scheme to provide house-sites to all the landless poor in the rural areas. Benami lands and surplus lands will be taken over and utilised for the implementation of this scheme. Proper layouts with necessary facilitie swill be drawn up for development of these lands.

8. The Government has also started the implementation of a new scheme to construct one lakh houses in rural areas within a five year period. Under this scheme, loans for house construction will be given to the villagers through Co-operative House Building Societies, each covering a revenue division. A subsidy not exceeding Rs. 600 will be given to the poor Harijans whose

annual income is not more than Rs. 4,200. It is the policy of this Government to have habitations in which people of various castes live together. In pursuance of this policy, subsidy will be given to poor persons of other castes also who opt to live in predominantly Harijan habitations. Under this scheme, houses will be built utilising the locally available building materials, enabling construction with economy. The borrowers will be allowed to remit their share of 20 per cent of the cost of the house, in cash or by way of labour.

9. The Government has decided to draw up village planning schemes to create new villages and to expand the existing villages in a planned manner. All along, urban and semi-urban areas have been developed under Town Planning Schemes; the Government now proposes to take steps to execute village planning schemes to develop villages also on proper lines with facilities like drinking water, drainage, education and street lighting. During the coming year this scheme will be implemented in five Panchayat Unions in each of the Districts. Soon this will be extended throughout the State.

10. The Government has decided to take steps to change the atmosphere on frustration among landless labourers, small farmers and among unemployed, both educated and uneducated by elimination of unemployment in rural areas, ushering in an era of hope in their future. Unskilled labourers have to be trained in skills and must be imparted proper education in the use of tools and an environment should be created in which they are successfully self-employed. The benefits of various schemes drawn by Government should reach those who ought to get these benefits. To help lakhs of people, who suffer due to unemployment, this Government has decided to launch an Employment Guarantee Scheme in rural areas, from the coming year, with Panchayat Union as the unit. I am sure Members would be happy to welcome this scheme, which will activise the rural areas.

11. The Government has decided to set up a Directorate of Sericulture so as to concentrate on the development of silk industry which creates job opportunities in rural areas. During this year the new area brought under mulberry was 4,000 acres. Steps are being taken to raise mulberry in 8,000 acres more in the next



year. Within six months of their inception, the 8 District Industries Centres have rendered assistance enabling more than 900 new small scale industries to go into actual production. About 11,000 persons have secured job oportunities in these units. The Tamil Nadu Industrial Investment Corporation has opened three new branches at Tiruchirappalli, Cuddalore and Dharmapuri to facilitate extension of credit facilities to small borrowers. An independent rural industries wing is being organised under the Khadi and Village Industries Board in order to encourage setting up of rural industries and to pay special attention to the marketing of their products.

12. A project for setting up a modern salt factory covering an extent of 6,000 acres in Vedaranyam region has been recently approved by the Government. This scheme, which will be executed in a period of three years, will give employment for hundreds of persons. The Government is also examining the feasibility of setting up salt pans on either side of the Buckingham Canal, utilising the coolant water of the Kalpakkam power station.

13. While earnest efforts are being taken to establish more rural industries, the Government has with determination and direction taken steps to encourage large industries which are basic to economic development. The Tamil Nadu Minerals Limited, set up recently, has started mining work in various places and is engaged in exporting black granite. In order to scientifically mine magnesite, a rare mineral in this country, Tamil Nadu Magnesite Limited, a new Company in public sector has been set up. It has started its activities a few days ago. A joint sector project is also being established to utilise the mined material. The Government is also examining a proposal in consultation with Government of India for establishment of a dry dock which can undertake repairs for ocean going vessels, both of Indian and foreign flags.

14. Messrs. Tuticorin Alkali Chemicals are establishing a factory at Tuticorin at a total cost of Rs. 35 crores, utilising salt as a raw material. Necessary steps are being taken to obtain the assistance of the All India Financial Institutions. Recently technical collaboration agreements were signed at Tokyo in the

presence of the Chief Minister with the Japanese firm, Hitachi
Zoshen. This factory will produce, annually Rs. 16 crores worth
of Soda Ash and Fertilisers which are in great demand in the
country today.

15. The Honourable Members are aware of this Government's
plan to utilise bagasse, hitherto used only as fuel, as a raw mate-
rial for production of newsprint. Having realised the need for
utilisation of such alternative raw materials in the context of the
shortage of forest based raw materials, the Central Government
has recently announced special concessions for paper factories
utilising bagasse to meet more than 75 per cent of their raw
material requirement. Our Government has applied to the
Government of India for a letter of intent for setting up the new
factory.

16. In a situation where the availability of jobs in the Govern-
ment are few and persons seeking Government employment are
many, the Government wants to give preference in giving jobs to
the off-springs of poor and illiterate parents. Government will
implement this policy without detriment to the existing special
concessions for the Scheduled Castes and Backward Classes. With
this emphasis, I hope that the new generation of youngsters whose
forefathers had not enjoyed such job opportunities for years will
start their careers with confidence and courage.

17. It is the policy of this Government to widely disperse the
headquarters of various Directorates and the Government Corpora-
tions, not allowing all of them to be crowded in Madras City
Based on this policy, the Tamil Nadu Harijan Housing and
Development Corporation had its headquarters shifted to Villu
puram. The office of the Registrar of Co-operative Societies
(Housing) has been shifted to Tiruchirappalli. The proposed Seri
culture Directorate will function with Salem as its headquarters
Government will take further steps in this direction.

18. The Government announced its decision, during the
Periyar Centenary Celebrations, on the bifurcation of Coimbatore
district and creation of a new district with Erode as its head
quarters. A Special Officer will be appointed soon to take neces
sary steps for the formation of the new district and the distric
will start functioning soon.



19. In the context of the growing economy, persons trained in
management techniques are required by the Government and
enterprises both under public and private sectors. Towards meet-
ing this growing demand, Government has decided to set up a
new institute to be called the Madras Institute of Management
with the participation of the Government, Government institutions
and the general public. I hope that the public and the Govern-
ment of India will readily come forward to help in the establish-
ment and development of this institute. As a first step this Insti-
tute will begin to function soon for training Government Officers
and public sector employees.

20. A large number of persons from Tamil Nadu are doing
excellent work in various foreign countries. During the recent
visit of the Chief Minister abroad, he was immensely pleased to
know how keen they are to render their services for the develop-
ment of their motherland. I am happy to announce that the
Government of Tamil Nadu is drawing up detailed schemes to
utilise, during their visits to Tamil Nadu, the talents of these
persons, who are in touch with latest scientific advancements.

21. The Honourable Members of the Legislature would not
have forgotten the great loss to life and property sustained by the
people in Madras, Nilgiris district and coastal areas around
Pamban, due to a heavy and continuous downpour. I want to
particularly congratulate the Government machinery, public
undertakings, voluntary organisations and others who have ren-
dered necessary assistance efficiently to the affected people on
a war footing, making use of their earlier experience in meeting
the challenge of the wrath of Nature. We are grateful to the
Government of India for having sent a Study Team promptly and
also having sanctioned a grant of Rs. 10 crores, though the assis-
tance did not match the full extent of damage.

22. The Nature's fury snatched a way many a young child in
the Sivakasi area during the last monsoon in an accident, causing
immence agony to all of us. It is very difficult for the people
of Tamil Nadu to recover from the traumatic shock caused by
this tragedy. The Government strongly condemns the practice of
some of the industrialists employing children in their factories,
especially where explosive materials are used. Any such practice
will attract stern legal action.

23. The House is aware of the damage to life and property when the cyclone which affected Tamil Nadu hit Sri Lanka with great ferocity. Tamil Nadu with its hoary tradition of rushing to the aid of those in distress, even under fire of sacrifice, sent goods worth Rs. 10 lakhs to this neighbouring country. Though the amount is small, I am sure by this noble gesture, it has earned the appreciation of one and all. We also want to thank the Government of India for enabling the Tamil Nadu Government to render this assistance in time.

24. This Government, with its strong faith in the policy of prohibition, has promulgated recently an Ordinance to intensify the implementation of this policy. This Ordinance stipulates that items like varnish must be manufactured only by public sector undertakings; it also specifies life imprisonment for persons who are responsible for deaths due to consumption of illicit liquor. Minimum jail terms have been prescribed for various prohibition offences. Further, it provides for removal of persons who are habitually committing such serious offences, from specific areas. To a certain extent, the Ordinance, had the desired effect. The Government is taking steps to replace the above Ordinance, with modifications, based on the experience during the interregnum by a suitable legislation to enforce prohibition which will go a long way in raising the standard of living of the poor people. I hope the Members of the House will give their valuable suggestions for achieving this noble objective and support this measure. For ensuring the effective implementation of the prohibition policy, the Government has undertaken measures to revamp and strengthen the Police Force.

25. The House is well aware of the commitment of the Government in eliminating corruption in administration and in all walks of life. Thanks to the measures taken by the Government in this direction and the co-operation extended by the Honourable Members of the House, positive results are being produced.

26. I want to refer here to the steps being taken by the Government for preservation and development of Tamil language, art and culture. The Government has recently implemented the Tamil script reform advocated by Periyar E.V.R. and other Tamil scholars. The Government will try to extend its adoption, taking



into account the views of scholars. A Tamil Shorthand Dictionary will be published, for the first time, by the Tamil Nadu Text Book Society. The Government has sanctioned grants to the International Association of Dravidian Linguistics at Trivandrum for construction of buildings and for continuing its activities. Taking energetic preliminary steps for the forthcoming World Tamil Conference at Madurai, the Government has sanctioned a grant of Rs. 50,000 as first instalment. I am sure everyone will acclaim the Government's recent action in honouring eight distinguished artists by grant of awards and monthly payments.

27. It is the firm stand of this Government that Hindi should not be imposed on anybody and that the two language formula will be followed in our State. It is evident that all the political parties of Tamil Nadu are unanimously against imposition of any language. It is appropriate that the Government recently convened a conference of all parties to unify their views on this subject. I hope that all the Legislators, irrespective of party affiliations, will render assistance to the Government in initiating steps which will reflect the strong feelings of the people of Tamil Nadu on this issue.

28. It is but natural to have clash of ideas in any democratic set-up; to reach constructive decisions and progressive action, such debates are inevitable. No one can have any difference of opinion that individuals and political parties should follow the path set out by Gandhiji and Anna, while exchanging differing viewpoints or in their efforts to propagate their ideas. We have to definitely put an end to the dangerous trend of seeking solutions to problems through acts of violence. My Government is deeply shocked by the few acts of violence that recently took place in our State which is noted all along for its tradition of liberality of thought, logical reasoning, cultured behaviour and peaceful approach. In particular, the murder of Thiru Murugayyan, Member of Parliament gives us great sorrow. The Government condemns this barbaric murder and I can assure you that those who are responsible for this act will not escape from the arms of law and the punishment they deserve. Time has come when leaders of all political parties in Tamil Nadu sit together, deliberate dispassionately and create a situation wherein the atmosphere of peace in the State does not get vitiated by

political predilections or differences due to religion, caste or language, I earnestly request you, as representatives of the people, to create the proper climate.

29. Legislative measures to replace Ordinances and for other purposes will be brought for your consideration and approbation in this session. There will be ample opportunities for all of you to explain different viewpoints and discuss various problems in a friendly atmosphere, true to the democratic principles.

30. I have no doubt in my mind that your efforts will make Tamil Nadu the true repository of democratic spirit and traditions; that your deliberations will have the aim of ensuring the well-being of the people and of enriching their lives, bringing happiness and prosperity to every family.

*Vanakkam.*

**திரு. பிரபு தாஸ் பட்வாரி, தமிழக ஆளுநர் அவர்கள் செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சட்டப் பேரவை மண்டபத்தில் ஒருங்கே குழுமியிருந்த தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு 1979 பிப்ரவரி 9 ஆம் நாள், வெள்ளிக்கிழமை ஆற்றிய உரையின் தமிழாக்கம்.**

பேண்மை தங்கிய சட்ட மன்ற உறுப்பினர்களே,

சட்ட மன்றத்தின் இணைந்த கூட்டத்திற்கு வந்துள்ள உங்கள் அனைவரையும் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

2. தமிழ்நாட்டில் உணவு நிலைமை திருப்திகரமாக இருந்து வருகின்றது. நெல், அரிசி இவைகளுக்கு மாநிலத்திற்குள்ளே நடமாட்டத் தடையோ, கட்டுப்பாடோ ஏதும் கிடையாது. சம்பா பருவத்தில் இம் மாநிலத்தை விட்டு வெளியே வர்த்தகர்கள் கொண்டு செல்லும் நெல், அரிசி இவற்றில் 20 சதவீதம் அரசின் இருப்பிற்கு விற்க வேண்டும் என்ற கட்டுப்பாடு மட்டுமே தற்போது இருக்கிறது.

3. தமிழக அரசு, நெல்லுக்கு அதன் உற்பத்திக்கு ஆகும் செலவைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நியாயமான அடிப்படை விலை நிர்ணயிக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. இது பற்றி பிரதமருக்கும், மத்திய வேளாண் துறை அமைச்சருக்கும் முதலமைச்சர் கடிதம் எழுதி அரசின் கோரிக்கையை வற்புறுத்தினார். இதன் விளைவாக முன்பு கொடுத்து வந்த குவிண்டால் ஒன்றுக்கு 78 ரூபாயிலிருந்து 85 ரூபாயாக சன்னக் கட்டை ரக நெல்லுக்கு மத்திய அரசு அடிப்படை விலையை உயர்த்தி





யுள்ளது. இது விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்திக்குச் செலவிடும் தொகைக்குச் சமமாகக் கூட இல்லை. கோதுமையின் கொள்முதல் விலை சாகுபடி செலவை அனுசரித்து, மத்திய அரசினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்தில், அதே அடிப்படையில் நெல்லின் கொள்முதல் விலையையும் நிர்ணயிக்க வேண்டுமென்ற தமிழக அரசின் நியாயமான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் படாதது வருந்தத்தக்கது. அரசு நியாயமான விலை தரவேண்டியதன் அவசியத்தை தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. உற்பத்தியாளருக்கு நியாயமான விலையை நிர்ணயிக்கும்போது, நுகர்வோர்க்கும் நியாயமான விலையில் அரிசி கிடைக்கச் செய்வதற்காக, கோதுமைக்கு இதுவரை தரப்பட்டு வந்த அளவில், அரிசிக்கும் மானியம் தர மத்திய அரசு முன்வர வேண்டுமென்ற கருத்தை தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

4. கிராமந்தோறும் ஒரு நியாய விலைக் கடை மூலம் அடிப்படைப் பொருட்களை விற்கும் அரசின் திட்டத்தின் கீழ் 31—1—1979 முடிய சுமார் 13,400 கிராமங்கள் பயன் பெற்று விட்டன. மீதமுள்ள கிராமங்களும் ஓரிரு மாதங்களுக்குள் பயனடையும். ஆண்டொன்றுக்கு சுமார் 3 கோடி ரூபாய் நிகரச் செலவில் செயல்படுத்தப்பட்டு, கிராம மக்களுக்கு பெரிய பலனைத் தரும் இத்திட்டத்திற்கு, மத்திய அரசு புதிதாகத் திட்டியுள்ள தனது திட்டத்தின்கீழ் உதவ வேண்டும் என்பதே எனது கோரிக்கை. இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும் என நம்புகிறேன்.

5. மின்சாரத்தை வழங்குவதில் மட்டுமின்றி, மின் உற்பத்தியை அதிகரிப்பதிலும் அரசு மிகச் சிறப்பான கவனம் செலுத்தி வருகின்றது. 35 மெகாவாட் திறனுள்ள சுருளியாறு மின் நிலையமும், 110 மெகாவாட் திறனுள்ள குந்தா மின் திட்டத்தின் நான்காவது கட்ட நிலையமும் சென்ற ஆண்டு செயல்படத் தொடங்கியுள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் 210 மெகாவாட் திறனுள்ள முதல் இயந்திரம் விரைவில் மின்சாரம் வழங்கத் துவங்கவுள்ளது. மேட்டூர் அணைக்குக் கீழே ஆற்றில் பாசனத்துக்கு செல்லும் நீரினைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய, நான்கு மின் நிலையங்கள் அமைப்பதற்காக அரசு திட்டியுள்ள திட்டத்துக்கு மத்திய மின் ஆணைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்தினால் மொத்தம் 120 மெகாவாட் திறனுள்ள இயந்திரங்களின் மூலம், ஆண்டொன்றுக்கு சராசரி 537 மில்லியன் யூனிட் மின் உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான பணி தொடங்கப்பட்டுவிட்டது. காடம்பாறை நீரேற்றி மீண்டும் மின் உற்பத்தி செய்யும் நிலையம் அமைப்பதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

6. இயல்பான தென்மேற்குப் பருவமழையுடன் அமைந்தால், மின்சார வெட்டு ஏதுமின்றி, இந்த ஆண்டு மின்சக்தி வழங்க இயலும் என எதிர்பார்க்

[1979 பிப்ரவரி 12

கப்படுகின்றது. மேலும், மின்வெட்டு எதிர்காலத்தில் ஏற்பட நேரிட்டால்,
வேளாண்மைக்கு முன்னுரிமை தந்து மின் விசையேற்றங்களுக்கு மின்வெட்டி
லிருந்து விலக்கு அளித்து வருவதைப் போலவே, சிறு தொழில்களுக்கும் மின்
வெட்டிலிருந்து விலக்களிக்க அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. பரவ
லாக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் சிறு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம்
தரும் இக்கொள்கை முடிவினை மன்ற உறுப்பினர் அனைவரும் வரவேற்பர்
என நம்புகிறேன்.

7. கிராமப் பகுதிகளில் நிலமற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும்
வீடு கட்டுவதற்குத் தேவையான வீட்டு மனைகளை வழங்கும் புதிய பெரும்
திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது. பினாமி நிலங்களையும் தேவைக்கதிக
மான நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து உபரி நிலங்களையும் அரசு கைப்
பற்றி, அந்த நிலங்களை இத்திட்டம் செயல்பட அரசு பயன் படுத்தும். இந்த
நிலங்களைக் குடியிருப்புகளுக்குப் பயன்படுத்துவதற்காக தக்க வசதிகளுடன்
கூடிய முறையான ஊரமைப்புத் திட்டங்கள் வகுக்கப்படும்.

8. மேலும் கிராமங்களில், ஐந்தாண்டுகளில் மொத்தம் ஒரு இலட்சம்
வீடுகள் கட்ட உதவும் திட்டமொன்றை வகுத்து, அரசு செயலாற்றத்
தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், வருவாய்க் கோட்டம் Revenue
Division ஒவ்வொன்றிலும், ஒரு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் மூலம்
கிராமம் ஒவ்வொன்றிலும் ஒரு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் மூலம் கிராம
மக்களுக்கு வீடு கட்ட கடனுதவி அளிக்கப்படும். தாழ்த்தப்பட்ட மக்க
ளிடையே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு Economically Weakes
Sections அதாவது ஆண்டு வருமானம் 4,200 ரூபாய்க்கு மேற்படாமல் உள்ள
வகுப்பினரும் இணைந்து வாழ்வதற்கு ஊக்களிப்பதே அரசின் கொள்கை
யாகும். தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் வீடு
கட்டும்போது, மற்ற பிரிவினருக்கும், இதைப் போலவே மானியம் வழங்கப்
படும். இத்திட்டத்தின் கீழ் அவ்வப்பகுதிகளில் கிடைக்கும் கட்டிடப்
பொருட்களைப் பயன்படுத்தி, குறைந்த விலையில் வீடுகள் கட்டப்படும். வீடு
கட்ட கடன் பெறுவோர் பணமாகவோ உழைப்பாகவோ வீட்டின் விலையில்
20 சத விகிதம் தங்கள் பங்காகச் செலுத்துவார்கள்.

9. கிராமப் பகுதிகளிலும் புதிய கிராமங்களை உருவாக்கவும், தற்
போதுள்ள கிராமங்கள் திட்டமிட்ட முறையில் விரிவாக்கப்படுவதற்கும்
ஊரமைப்புத் திட்டங்கள் தீட்ட அரசு முடிவு செய்துள்ளது. நகரங்களும்
நகரை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளும் மட்டுமே திட்டமிட்ட முறையில்
வளர்வது என்பதோடு நில்லாமல், கிராமங்களில் முறையான வளர்ச்சி ஏற்
படவும், அதனடிப்படையில் குடிநீர் வடிகால் வசதி, கல்வி வசதி, தெருவிளக்கு



1979 பிப்ரவரி 12]

வசதி போன்ற தேவையான வசதிகளுடன் கிராமங்கள் மிளிரவும் அரசு நட
வடிக்கைகள் மேற்கொள்ளும். வரும் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும்
அய்ந்து ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். விரைவில்
மாநிலம் முழுவதும் விரிவாக்கப்படும்.

10. கிராமப் புறங்களில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து, படித்த, படிக்காத இளைஞர்கள், சிறு விவசாயிகள், நிலமற்றோர் அனைவரும் தங்களது எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையைப் பெறுவதோடன்றி, நிகழ் காலத்தில் நிலவும் விரக்தி மனப்பான்மையை அறவே போக்கிட அரசு திர்மானித்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். கைத்தொழில் எதும் தெரியாமல் வெறும் கூலி வேலையை மட்டும் செய்து வாழ்வோர், தொழில் கற்று, தம்மை நம்பி வாழ்ந்திடும் நிலை உருவாகிடல் வேண்டும். அரசு தீட்டுகின்ற திட்டங்களின் பலன்கள், நியாயமாகச் சென்று சேர வேண்டியவர்களுக்குச் சென்றிடல் வேண்டும். இலட்சக் கணக்கில் வேலை வாய்ப்பின்றி உழன்று கொண்டிருக்கும் வேதனையான சுழற்சியில் சிக்கித் தவிப்பவர்கள் பலனடையும் குறிக்கோளின் அடிப்படையில், ஊராட்சி ஒன்றிய அடிப்படையில், "எல்லோருக்கும் வேலை வாய்ப்பு" என்ற முறையில் வரும் ஆண்டிலிருந்து வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டமொன்றை (Employment Guarantee Scheme) செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இதன் மூலம், கிராமப் பகுதிகள் பெறப்போகும் புதிய மறு மலர்ச்சி, மன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்வூட்டும் என நம்புகிறேன்.

11. கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் பட்டுத் தொழில் வளர்ச்சி சிறப்புற நடைபெறுவதற்காக தனியாக பட்டுத் தொழில் இயக்குநரகம் ஒன்றை அரசு அமைக்க முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு 4,000 எக்கர் பரப்பளவில் புதிதாக முசுக்கட்டை வளர்க்கப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு கூடுதலாக 8,000 ஏக்கரில் முசுக்கட்டை பயிரிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாவட்டத் தொழில் மையங்கள், 8 மாவட்டங்களில் பணி ஆற்றத் துவங்கி 6 மாத காலத்திற்குள்ளாகவே 900-க்கு மேற்பட்ட சிறு தொழில்கள் உற்பத்தி துவங்குவதற்கு உதவி செய்துள்ளன. இவற்றின் மூலம் ஏறக்குறைய 11,000 பேர் புதிய வேலை வாய்ப்புப் பெற்று உள்ளனர். சிறிய அளவில் கடன் வாங்குவோருக்கு நிதி உதவி உடனடியாகத் தருவதற்கு உதவும் வகையில், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம திருச்சிராப்பள்ளி, கடலூர், தருமபுரி ஆகிய ஊர்களில் மூன்று புதிய கிளைகளைத் திறந்துள்ளது. மேலும் பல்வேறு கிராமத் தொழில்களை ஊக்குவிப்பதற்கும், இவற்றில் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்வதில் தனிக் கவனம் செலுத்தவும் கிராமத் தொழில் பிரிவு ஒன்று தனியாக இயங்கும்.

12. வேதாரண்யம் பகுதியில் 6,000 ஏக்கர் நிலப் பகுதியில் பெரியதொரு நவீன உப்புத் தொழிற்சாலையை உருவாக்கும் திட்டத்திற்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. சுமார் மூன்று ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றி முடிக்கப் பெற இருக்கும் இத்திட்டம், நூற்றுக்கணக்கானோர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கும். கல்பாக்கம் அனல் மின் நிலையத்தின் குளிர்விப்பு நீரின் (Coolant Water) அடிப்படையில், பக்கிங்ஹாம் கால்வாயின் இரு மருங்கிலும் மேலும் உப்பளங்களை அமைப்பதற்கான வாய்ப்புகளையும் அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

13. கிராமச் சிறு கைத்தொழில்களை ஏற்படுத்த முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே நேரத்தில், பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான பெரிய தொழில்களை ஊக்குவிக்கும் முயற்சிகளிலும் அரசு பின்தங்கிவிடவில்லை. தக்க பெரிய தொழில்கள் அமைப்பதற்கும் அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்துவரும். கனிப் பொருள் வளத்தை நன்கு பயன்படுத்துவதற்காக அண்மையில் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு கனிவள நிறுவனம் (Tamil Nadu Minerals Limited) பல இடங்களில் சுரங்க வேலைகளை ஆரம்பித்து, கருப்புக்கல் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளது. நாட்டிலேயே அரிதாகக் கிடைக்கும் மாக்னசைட் கனிப் பொருளை சீரிய முறையில் வெட்டியெடுப்பதற்காக தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் அரசுத் துறையில் நிறுவப்பட்டு, அது தன் பணிகளை சில நாட்களுக்கு முன் தொடங்கியுள்ளது. வெட்டியெடுக்கப்படும் கனிப் பொருளை பயன்படுத்த கூட்டுத் துறை நிறுவனம் ஒன்றும் உருவாகி வருகின்றது. இந்திய நாட்டுக் கப்பல்களும், அயல்நாட்டுக் கப்பல்களும் பயன்படுத்தத் தக்க வகையில், கப்பல்களைப் பழுது பார்ப்பதற்கேற்ற உலர் கப்பற்கூடம் (Dry Dock) ஒன்று தமிழ் நாட்டில் அமைப்பதற்கான செயற் குறிப்புகளை மத்திய அரசுடன் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகின்றது.

14. தூத்துக்குடியில் உப்பை மூலப்பொருள்களுள் ஒன்றாகக் கொண்டு, மொத்தம் 35 கோடி ரூபாய்ச் செலவில் உருவாக இருக்கும் தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் நிறுவனம், மத்திய நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொண்டு வருகின்றது.

ஜப்பானிய நாட்டு, ஹிட்டாசி ஜோஷன் நிறுவனத்துடன் தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்களும் அண்மையில் முதலமைச்சர் முன்னிலையில் டோக்கியோவில் கையெழுத்திடப்பட்டன. நாட்டில் இன்று மிகவும் தேவைப்படும் சோடா ஆஷ், இரசாயன உரங்கள் இவற்றை சுமார் 16 கோடி ரூபாய் அளவுக்கு ஆண்டு ஒன்றில் இத் தொழிற்சாலை உற்பத்தி செய்யும்.



15. கரும்புச் சக்கையை வெறும் எரிபொருளாக மட்டும் பயன்படுத்தாமல் அரிய மூலப்பொருளாக பயன்படுத்தி செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்யும் அரசுத் திட்டம்பற்றி மன்ற உறுப்பினர்கள் முன்பே அறிவர். காட்டு வளம் குறைவாக உள்ள நம் நாட்டில், இவ்வாறு மாற்று மூலப் பொருளைப் பயன்படுத்துவதற்கு ஊக்கம் அளிப்பதன் உடனடி அவசியத்தை உணர்ந்த மத்திய அரசு, கரும்புச் சக்கையை மூலப் பொருட்களில் முக்கால் பங்கிற்கு மேல் பயன்படுத்தும் காகித ஆலைகளுக்குச் சிறப்பான பல சலுகைகள் அளிப்பதாக சில நாட்களுக்கு முன்பு அறிவித்துள்ளது. புதிய ஆலை நிறுவுவதற்கான முன் அனுமதிக் கடிதம் கோரி, மத்திய அரசுக்கு நமது அரசு விண்ணப்பித்துள்ளது.

16. வேலையற்றிருப்போர் எண்ணிக்கை மிகுதியாகவும் அரசினர் வேலை வாய்ப்புகள் குறைவாகவும் உள்ள நிலையில், ஏழை எளியவர்களின் மக்களுக்கு, அதிலும் அவர்களிடையே பள்ளிகளின் வாயிற்படிகளையே கண்டறியாத குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்று அரசு விரும்புகிறது. தாழ்த்தப்பட்டோர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தோர் ஆகியோர்க்கான சிறப்புச் சலுகைகட்கு சரிவேற்படாமல், இதனை அரசு நடைமுறைப் படுத்தும். இதன்மூலம் தலைமுறை தலைமுறையாக வாய்ப்புகளை இழந்து நிற்கும் மக்களின் புதிய தலைமுறையினர், புத்துணர்வும் புது வேகமும் பெறும் வாய்ப்பு கிடைக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

17. அரசின் இயக்குநரகங்களும், அரசு நிறுவனங்களின் தலைமையிடங்களும் சென்னையிலேயே குவிந்து இருப்பதை விடுத்து, தக்க இடங்களில், மாநிலத்தில் பரவலாக அமைய வேண்டுமென்பது அரசின் கொள்கை. இந்தக் கொள்கையின் அடிப்படையில், அரிசன வீட்டுவசதி வளர்ச்சி நிறுவனம் விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம் திருச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது. புதிதாக நியமிக்கப் படவிருக்கும் பட்டுத் தொழில் இயக்குநர் சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுவார். இக்கொள்கையின் அடிப்படையில் மேலும் அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கும்.

18. கோயம்புத்தூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு புதியதொரு மாவட்ட அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற அரசின் முடிவு, பெரியாரது நூற்றாண்டு விழாவின்போது அறிவிக்கப்பட்டது. இதற்கான நடவடிக்கைகள் எடுக்க தனி அதிகாரி நியமிக்கப்பட்டு, விரைவில் இந்த மாவட்டம் செயல்படத் துவங்கும்.

19. இன்றைய வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பில், நிர்வாகப் பயிற்சி பெற்ற பலர், அரசுப் பணிகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும், தனியார் அமைப்புகளுக்கும் தேவைப்படுகின்றனர். பெருகி வரும் இந்தத்

தேவையை ஈடுகட்ட உதவும் வகையில், சென்னையில் நிர்வாகப் பயிற்சி [1979 பிப்ரவரி 12
நிலையம் (Madras Institute of Management) ஒன்றை, அரசு, அரசு
நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோரது கூட்டு முயற்சியில் நிறுவ அரசு
முடிவு செய்துள்ளது. பொது மக்களும், மத்திய அரசும் இதற்கு மனமுவந்து
உதவி செய்து, இதன் வளர்ச்சியில் பங்கேற்பர் என நம்புகிறேன். முதற்
கட்டமாக அரசு அலுவலர், அரசு நிறுவனங்களில் பணி புரிவோர் ஆகியோரைப்
பயிற்றுவிக்கும் வகையில் இந்தக் கல்லூரி விரைவில் செயல்படத் துவங்கும்.

20. அயல்நாடு சென்று, பெருமையுடன் சீரிய பணியாற்றிவரும் தமிழ்
நாட்டைச் சேர்ந்த பலர், தாயகத்தின் வளர்ச்சிக்கு தங்களாலான செயல்
களைச் செய்ய எவ்வளவு ஆர்வமுடன் உள்ளனர் என்பது அண்மையில் முதல்வர்
மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணத்தின் போது தெளிவாகத் தெரிந்தது.
வளர்ந்து வரும் அறிவியல் கருத்துக்களை நன்கு அறிந்த அத்தகையோரது
ஆர்வமும் முயற்சிகளும் அவர்கள் இடையிடையே தாயகம் வந்து செல்லும்
போது, தமிழ்நாட்டுக்குப் பயன்படும் வகையில் ஏற்ற செயல் திட்டங்களைத்
தமிழக அரசு உருவாக்கி வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் கூற விரும்பு
கின்றேன்.

21. சென்னையிலும், நீலகிரி மாவட்டத்திலும், பாம்பனை ஒட்டிய கடற்
கரைப் பகுதிகளிலும், குறுகிய காலத்தில் பெய்த பெருமழை காரணமாக, உயிர்
களுக்கும், உடைமைகளுக்கும் ஏற்பட்ட சேதங்கள் மன்ற உறுப்பினர்கள்
நெஞ்சங்களை விட்டு அகன்றிருக்காது. போர்க்கால நடவடிக்கைகளைப்
போல, அரசு இயந்திரம் செயல்பட்டதையும், பொது நிறுவனங்களும்,
அனைத்துத் துறையினரும் விவேகத்தோடு, ஏற்கனவே பெற்ற அனுபவ அடிப்
படையில் திறமையாகச் செயல்பட்டதையும் இங்கே நான் குறிப்பாகப்
பாராட்ட விரும்புகிறேன். மைய அரசின் உதவி, ஏற்பட்ட சேதத்தின் மதிப்
பீட்டளவிற்குக் கிடைக்காவிட்டாலும், மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று
ஆய்வுக் குழு ஒன்றை உடனடி அனுப்பி வைத்து, 10 கோடி ரூபாய் வழங்கி
யதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

22. சென்ற பருவ மழையின்போது, சிவகாசிப் பகுதியில், ஏற்பட்ட விபத்
தில் பல இளந்தளிர்களை இயற்கை காவு கொண்டது. நமது நெஞ்சங்களைப்
பற்றியெரியச் செய்துவிட்ட பயங்கரமான இந்த நிகழ்ச்சியின் மூலம் தமிழ்ச்
சமுதாயத்தின் இதயத்தில் ஏற்பட்டுவிட்ட காயம் அவ்வளவு விரைவில் ஆறக்
கூடியதல்ல. சின்னஞ் சிறு பிள்ளைகளை வேலைகளில், குறிப்பாக வெடி
மருந்துகளைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் ஈடுபடுத்தக் கூடாது என்ற



சட்டத்தை சில தொழிலதிபர்கள் மீறி வருவதை எனது அரசு வன்மையாகக்
கண்டிக்கிறது; தொடர்ந்து மீறுதல் சட்டத்தின் கவனத்தை ஈர்க்கும்
என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

23. அண்மையில் தமிழகத்தைத் தாக்கிய பெரும் புயல், மழை, அண்டை
நாடான ஸ்ரீலங்காவையும் வெறி கொண்டு தாக்கி நூற்றுக்கணக்கானோர் வாழ்
விழக்கவும், பண்டங்களை, உடைமைகளைப் பறி கொடுக்கவுமான நிலை ஏற்
பட்டதை நீங்கள் அறிவீர்கள். மனிதாபிமான அடிப்படையில், பிறருக்குத்
துயரோ, இடரோ, இடுக்கண்ணோ ஏற்படும்போது தன்னை வருத்திக்கொண்டு,
மற்றவர்களுக்கு உதவிடும் பண்பாடு பெற்ற தமிழகத்தின் சார்பாக, பத்து
இலட்சம் ரூபாய் பெறுமான பல பொருட்களை, அரசு ஸ்ரீலங்காவிற்கு அனுப்பி
வைத்தது; அவர்களின் துயர் துடைக்கும் முயற்சியில் தனது எளிய பங்கினை
செய்ததன் மூலம் அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. தமிழக அரசு,
தனது கடமையினைச் செய்வதற்கு உறுதுணையாகவிருந்த, இந்திய அரசிற்
கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

24. மதுவிலக்குக் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள இந்த
அரசு, அக்கொள்கையைத் தீவிரமாகச் செயலாக்குவதற்காக அண்மையில்
அவசரச் சட்டமொன்றை பிறப்பித்துள்ளது. வார்னீஷ் போன்ற பொருட்
களை அரசைச் சார்ந்த நிறுவனங்கள் மட்டுமே தயாரிக்க வேண்டும் என்ப
தோடு, கள்ளச் சாராயத்தின் விளைவாக உயிரிழப்பு நேரிடின், அதற்குக் காரண
மானவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கவும் இந்த அவசரச் சட்டம் வகை
செய்கின்றது. பல்வேறு மதுவிலக்குக் குற்றங்களுக்கு குறைந்த பட்ச
தண்டனைகள் கொடுக்க வேண்டிய நிலையையும் இச்சட்டம் ஏற்படுத்தியுள்ளது.
மேலும் தொடர்ந்து கடுமையான குற்றங்களில் ஈடுபடுவோர்களை, அவர்கள்
வழக்கமாக வசிக்கும் பகுதியிலிருந்து மாறி வேறிடத்தில் வாழ்ந்தாக வேண்டிய
நிலைக்கும் இது வழி செய்கின்றது. எதிர்பார்த்த பலனையும் ஓரளவுக்கு
இந்த அவசரச் சட்டம் அளித்துள்ளது. அடித்தளத்து மக்கள் வாழ்வு உயர
உதவும் மதுவிலக்கைச் செம்மையாக செயல்படுத்த உதவும் இந்த அவசரச்
சட்டத்தை, இடைக்காலத்தில் ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாகச் சில
மாற்றங்களுடன், சட்டமாக்க அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. மன்ற
உறுப்பினர்கள் இந்த உயரிய நோக்கம் நிறைவேற தங்களது மேலான கருத்து
களைக் கூறி இதனை ஆதரிப்பார்கள் என நம்புகிறேன். மதுவிலக்குக்
கொள்கையை நன்கு செயல்படுத்துவதற்காக காவல் துறையைச் சீரமைத்து,
பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது.

25. நிர்வாகத்திலும், பிற துறைகளனைத்திலும் ஊழல் களையப்பட
வேண்டுமென்பதில் அரசு திடமான நம்பிக்கை கொண்டுள்ளதை மன்ற உறுப்

ினர்கள் நன்கு அறிவார்கள். அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளின் விளை ாகவும் மன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பின் காரணமாகவும் நல்ல பலன்கள் ற்பட்டு வருகின்றன.

26. தமிழ் மொழி, கலை, பண்பாடு இவற்றைப் பேணி வளர்த்திட அரசு ௭டுத்துவரும் நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பெரியார் ஈ. வே. ரா. அவர்களாலும், மற்ற பல தமிழறிஞர்களாலும் கூறப்பட்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அண்மையில் அரசு செயலுக்குக் கொண்டு வந்துள் ளது. அறிஞர்களின் கருத்துக்களை அறிந்து இதனைப் பரவலாக செயல் படுத்த அரசு முயற்சிகள் மேற்கொள்ளும். முதன் முறையாக தமிழ் மொழி சுருக்கெழுத்து அகர வரிசை ஒன்றை இன்னும் சில மாதங்களில் தமிழ் பாட நூல் நிறுவனம் வெளியிடும். திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள திராவிட மொழி ஆராய்ச்சி சங்கத்திற்கு (International Association of Dravidian Linguistics) கட்டிடம் கட்டுவதற்காகவும், பணிகளைத் தடங்கலின்றி நிறைவேற்றுவதற்காகவும் அரசு மானியம் வழங்கியுள்ளது. மதுரையில் வரும் ஆண்டில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டிற்கான ஆரம்ப வேலைகளை முனைப்பாக மேற்கொண்டு, முதற்கட்டமாக 50,000 ரூபாய் நிதி உதவியையும் அரசு அளித்துள்ளது. மேலும் அரசுக் கலைஞர்களாக எட்டு கலை விற்பன்னர்களை அரசு அண்மையில் பாராட்டி, பரிசுகளும், உதவித் தொகையும் வழங்கியுள்ளது அனைவரும் பாராட்டுதற்குரியதாகும்.

27. இந்தி மொழி எவர் மீதும் சுமத்தப்படலாகாது என்பதிலும், இரு மொழிக் கொள்கை தமிழ் நாட்டில் பின்பற்றப்பட வேண்டுமென்பதிலும் இந்த அரசு அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது. மொழித் திணிப்பு ஏற்றுக் கொள் ளப்படலாகாது என்பதில் தமிழ்நாட்டிலுள்ள எல்லா கட்சிகளும் ஒருமித்த எண்ணம் கொண்டுள்ளன என்பது வெளிப்படையாகும். இக்கருத்துக்களை ஒருமுகப்படுத்துவதற்கு அண்மையில் அரசு கூட்டிய அனைத்துக் கட்சிகள் மாநாடு ஏற்றதொரு செயலாகும். கட்சி வேறுபாடின்றி தமிழக மக்கள் அனைவரின் உள்ளக் கிடக்கையை பிரதிபலிக்கும் வகையில் ஏற்ற நடவடிக்கை களை அரசு எடுப்பதற்கு சட்ட மன்றம் உறுதுணையாக செயல்படுமென நம்பு கிறேன்.

28. ஜனநாயக அமைப்பு முறையில், கருத்துப் போராட்டங்கள் ஏற்படுவது இயற்கை; ஆக்கபூர்வமான முடிவிற்கும் செயலாற்றலுக்கும், அவை தவிர்க்க முடியாதவை. எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளும் போதும் அவைகளை எடுத்து வைக்கும் முயற்சிகளின் போதும், நபருக்கு நபர், கட்சிக்குக் கட்சி, கடைப்பிடிக்க வேண்டிய நெறி, காந்திய நெறி, அண்ணா வழி என்பதில் யாருக்கும் வேறுபட்ட கருத்திருக்க முடியாது; பிரச்சினைகளுக்குப் பரிகாரம்



பழி வாங்கிடும் வன்முறை உணர்ச்சியின் மூலம்தான் முடியும் என்ற அபாயகர மான போக்கிற்கு நிச்சயமான முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அமைதிக் கும், ஆழ்ந்த சிந்தனைக்கும், நயத்தக்க நாகரீகத்திற்கும் நாடு போற்றிடும் நன்னோக்கிற்கும் தனிப் பாரம்பரியம் பெற்ற தமிழகத்தில் அண்மைக் காலமாக சில வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பது எனது அரசிற்கு வேதனை யைத் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பாக, நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர், திரு. முருகையன் அவர்கள் படு கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி மெத்த வேதனையைத் தருகிறது. கொலைக்கு காரணமானவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதை உறுதி யாகக் குறிப்பிட விரும்புகிறேன். காட்டுமிராண்டித் தனமான இந்தக் கொலை வெறியை வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரண மாகவோ மொழி, சாதி, மதம் காரணமாகவோ தமிழகம் அமைதி இழக்காத அளவிற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி, மனம் திறந்து விவாதித்து, ஏற்புடைத்தான நல்ல சூழ்நிலையை உருவாக்க முயற்சிக்க வேண்டும் என மக்களின் பிரதிநிதிகளாகிய உங்களை விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

29. சட்டமன்றத்தின் இக் கூட்டுத் தொடரில் மிக முக்கியமான அவசரச் சட்டங்களும் மசோதாக்களும் மாண்புமிகு உறுப்பினர்களின் ஆய்விற்கும், அங்கீகாரத்திற்கும் கொண்டுவரப்பட இருக்கின்றன. தொடர்ந்து பிரச்சினை கள் பற்றி விளக்கம் அளிக்கும் வாய்ப்பும் தோழமை உணர்வோடு, ஜனநாயகப் பண்போடு கலந்துரையாடும் சந்தர்ப்பங்களும் ஏராளம் கிடைக்க விருக் கின்றன.

30. தமிழக மக்களின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு, அவர்கள் தம் வாழ்வு மேலும் சிறப்புடன் விளங்க, இல்லங்கள் தோறும் மகிழ்ச்சியும் மன நிறைவும் ஏற்பட, நிம்மதி எழுந்தோங்க, மாண்புமிகு உறுப்பினர்கள் செயல் பட்டு, உண்மையான ஜனநாயக உணர்வின் உறைவுளாக தமிழகம் நடை போட நிச்சயம் உங்கள் பணி அமையும் என மனதார நம்புகிறேன்.

வணக்கம்.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1979 பிப்ரவரி 13.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Judicial First Class Magistrate's Court at Dharmapuri*

*11 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Ministtr for Law be pleased to state—

(a) whether there is any proposal to set up a Judicial First Class Magistrate's Court at Dhormapuri; and

(b) if so, when it will start functioning?

தர்மபுரியில் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி மன்றம்

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தருமபுரியில் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி மன்றம் ஒன்று அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது செயல்படத் தொடங்கும்?

THE HON. THIRU K. NARAYANASWAMY: (a) and (b) There is a proposal to constitute a Judicial First Class Magistrate's Court at Dharmapuri. Due to paucity of funds, the proposal could not be sanctioned this year. The High Court has been requested to renew the proposal for consideration during 1979-80.

THIRU D. SANTOSHAM: Hon. Chairman, Sir, I would like to know from the Hon. the Law Minister whether there is any proposal to upgrade any Second Class Magistrate's Courts into First Class Magistrate's Courts if there is any difficulty in creating new First Class Magistrate's Courts.

THE HON. THIRU K. NARAYANASWAMY : I think the upgrading proposal is under the consideration of the Givern-ment. I think the hon. Member meant, if I can presume so, the integration of the Second Class Magistrate's Courts with the Courts of District Munsifs so that they might be upgraded. If that is the proposal that was in the mind of the hon. Member, I think it is now going to reach some fruition and hopefully so.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, தர்மபுரி போன்ற பல்வேறு மிக முக்கியமான ஊர்களில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி மன்றம் இல்லாத காரணத்தால், அமைக்கப்படாத காரணத்தால் வழக்கு குறித்து வருகின்ற வழக்குரைஞர்களும், வழக்காளர்களும் உடனடியாக, மிக அருகிலேயே நீதியைப் பெறுகின்ற வாய்ப்பை இழந்து விடுகின்றனர். இதுபோன்று வட ஆற்காடு மாவட்டத்திலும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி மன்றம் இல்லை. அதனால் 50 மைல், 60 மைலுக்கு அப்பால் சென்று நீதியைப் பெற வேண்டிய கஷ்ட நிலைமை இருக்கிறது. விரைவில் இது போன்ற முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள் அந்த இடங்களில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : I appreciate, with a sense of absolute sympathy, the difficulties experienced by the litigant-public as described by the hon. Member. The hon. Member is requested to put a separate question so far as North Arcot d'strict is concerned.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்களுக்கு புதிய மதுவிலக்கு சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்குகிற அதிகாரம் இல்லாததால், இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்கள் எல்லோருக்கும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்களுக்கு உள்ள அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்ற கருத்துரு ஏதாவது அரசின் பரிசீலனைக்கு வந்திருக்கிறதா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : Such a matter is now receiving the attention of the Government.

திரு. க. இராமமூர்த்தி : தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி ஆகிய தாலுக்காவைச் சார்ந்த ஒரே ரெவின்யூ டிவிஷன். அந்தப் பகுதியிலே ஒரு சப்-மாஜிஸ்டிரேட், ஆர்.டி.ஓ. போன்ற எல்லா அதிகாரிகளும், எல்லா அமைப்புகளும் இருந்தும், முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் இல்லாததால், எல்லா வழக்குகளுக்கும் அவை நடந்துகொண்டிருக்கின்ற நிலையிலேயே வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள் அப்பீல்களுக்காகச் செல்ல வேண்டுமென்றால்,



அதிகப்படியாகப் பணம் செலவழித்து விழுப்புரம் செல்ல வேண்டியிருக்கிறது. இது போன்ற நிலைமைகளை, பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை, மாற்றியமைக்கும் வகையிலே இதுபோன்ற சௌகரியம் இருக்கின்ற இடங்களில் அமைக்கப்படுமா ?
முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி மன்றம்

The Hon. Thiru K. NARAYANASAMY: After hearing the small dissertation from my hon. Friend, I request that a separate question may be put.

## *Hunger-Strike by Prisoners under Remand.*

* 12 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether it is a fact that the prisoners under remand went on hunger-strike during the first week of August, 1978 in Kokkira-kulam Sub-Jail, Tirunelveli district ; and

(*b*) if so, the demands for which they went on hunger-strike?

**காவல்வைப்புக் கைதிகள் உண்ணாவிரதம்.**

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், கொக்கிரகுளம் சார்புச் சிறையில் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் காவல் வைப்புக் கைதிகள் உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பது உண்மையா ?

(இ) அவர்கள் என்னென்ன கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதம் மேற்கொண்டனர் ?

The Hon. Thiru K. NARAYANASWAMY: (*a*) No Sir.

(*b*) Does not arise.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இந்த சப் ஜெயிலில் வைக்கப்பட்டிருந்த காவல் வைப்புக் கைதிகள் டெபுடி தாசில்தாரால் கொடுமையாக நடத்தப்பட்ட தாகவும், அதனால்தான் அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததாகவும், பின்னால் ஆர்.டி.ஓ. தலையிட்டு சமரசம் செய்த பிறகே அவர்கள் ஜெயிலுக்கு உள்ளே போனதாகவும் சொல்லுகிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சருடைய பதிலில் மிகப் பெரிய உண்மை மறைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் இதுபற்றி விசாரித்து இந்த அவைக்கு உண்மையான தகவலை மாண்புமிகு அமைச்சர வர்கள் தருவார்களா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY: The Government have this information in their possession. The remand prisoners confined in the Special Sub-Jail, Kokkirakulam, Tirunelveli district undertook a hunger-strike during the last week of August 1978 and first week of September 1978 only. The remand prisoner Abdul Majeed alias Francis Selvanayagam was sentenced to undergo Rigorous Imprisonment for 22 months by the Sub-Divisional Magistrate, Tuticorin under section 380, Indian Penal Code and was admitted into the Sub-Jail, Kokkirakulam on 21st August 1978. He started a hunger-strike on 22nd August 1978, the very next day, on the ground that the sentence awarded by the Sub-Divisional Magistrate was too heavy and demanded re-trial. He broke the hunger-strike on 5th September 1978 of his own accord. Shanmugam, another remand prisoner was on hunger-strike from 1st September 1978 to 4th September 1978 to press a charter of demands which he made earlier. The details of his demands are not available. But he broke his fast on 4th September 1978 of his own accord.

## *Retired Non-teaching Staff of Aided High Schools.*

* 13 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that retired teaching staff in Aided High Schools have got commutation of pension facility; and

(b) if so, the reasons for not extending this facility to the retired non-teaching staff in such schools?

**மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளின் ஓய்வு பெற்ற ஆசிரியரல்லாத பிற பணியாளர்கள்.**

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மானிய உதவித் தொகை பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெறுகின்ற வசதி பெற்றுள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அப்பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அல்லாத பிற பணியாளர்களுக்கு இவ்வசதி நீட்டிக்கப்படாததற்கான காரணங்கள் யாவை?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) உதவி பெறும் பள்ளிகளிலிருந்து ஓய்வுபெறும், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தில் ஒரு பகுதியை மொத்தமாக காசாக்கும் வசதியை விரிவுபடுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. ஆர். தாமஸ்:** ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாகத் தருவது குறித்து கல்வித் துறையின் அரசாணை எண் 137, நாள் 24—2—1978-ன் படி மருத்துவ சோதனைகளுக்குப் போகாமல், ஓய்வு பெற்ற ஓராண்டில், இந்த மொத்தத் தொகை வேண்டி விண்ணப்பம் கொடுத்தால், வழங்கலாம் என்று இருக்கிறது. ஆனால், இந்தச் சலுகை தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு மட்டும் மறுக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி:** அரசு ஊழியர்கள் ஓய்வு பெற்றால், அவர்களுக்கு எம்.ஓ. மூலம் பென்ஷன் தொகை அனுப்பப்படுகிறது. மணியார்டர் கமிஷனை அரசே ஏற்கிறது. அதுபோன்ற சலுகை இவர்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுபற்றி தனியாகக் கேள்வி கேட்டால், விவரமாக பதில் தர முடியும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அரசுப் பள்ளிகளில் பணி புரிகின்ற ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாகத் தருவது பற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருப்பதாக மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் சொன்னார்கள். தனியார் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெறுகிற ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கும் இந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு அறிவிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்த வசதி உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு உண்டு என அரசாணை எண் 1022, கல்வித் துறை, நாள் 20—8—1974-ல் இருப்பதாக இங்கே விவரம் தரப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 4-10)

**திரு. பி. ஆர். தாமஸ் :** தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் தங்களின் 55-வது வயதில் ஓய்வு பெறுகிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் 58-வது வயதில்தான் ஓய்வு பெறுகிறார்கள். எனவே அவ்வாறு இந்தச் சலுகை இந்தப் பணியாளர்களுக்கு விரிவாக்கப்படாவிட்டால், ஆசிரியரல்லாத பணியாளர்களின் ஓய்வு வரம்பையும் 58 வரை உயர்த்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆசிரியர்களைத் தவிர மற்றவர்களின் ஓய்வு வயது வரம்பை உயர்த்தும் உத்தேசம் எதும் அரசுக்கு இப்போது இல்லை.

## *Gazetted Teachers in 'B' Wing High Schools*

* 14 Q.—THIRU M SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Gazetted Teachers District—wise working in the 'B' Wing High Schools, whose services have not been regularised, even though they had rendered two years of service; and

(*b*) the reason for the non-regularisation of their services?

**'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் அரசிதழ் பதிவுபெற்ற ஆசிரியர்கள்.**

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் அரசிதழ் பதிவு பெற்ற ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறவர்களில், இரண்டு ஆண்டுகள் பணி புரிந்தும், அப்பதவியில் பணி வரன்முறை செய்யப்படாதவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர் இருக்கிறார்கள் ?

(இ) அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படாததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) பணிவரன் முறை செய்யப்படாத அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் மொத்தம் 111 பேர் உள்ளனர். மாவட்ட வாரியாகத் தகவல் பின்வருமாறு :



| | |
|---|---|
| செங்கற்பட்டு | 19 |
| தென்னாற்காடு | [illegible] |
| வட ஆற்காடு | 16 |
| தஞ்சாவூர் | 11 |
| திருச்சிராப்பள்ளி | 15 |
| மதுரை | 3 |
| இராமநாதபுரம் | 2 |
| திருநெல்வேலி | 8 |
| சேலம் மற்றும் தருமபுரி | 22 |
| கோயம்புத்தூர் | 13 |
| மொத்தம் .. | 111 |

(இ) அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் நியமனத்திற்கு அவ்வாசிரியர்களின் பணி மூப்பினை எவ்வித முடிவும் எடுக்காத நிலையில் மாவட்ட பணி மூப்பினை அடிப்படையாகக் கொண்டு சில (அரசிதழ் பதிவு பெற்ற) தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். பின்னர் 1977-ல் அரசிதழ் பதவி பெற்ற தலைமை ஆசிரியர்களுக்கான தனிவிதி முறைகள் வகுக்கப்பட்டன. மாநில பணி மூப்பின்படிதான் அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டுமென அரசு முடிவெடுத்து அதனடிப்படையில் மாநில பணி மூப்பின்படி 75 தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களின் பணியை வரன்முறைப் படுத்துவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 1977 ஆம் ஆண்டில் மாநில பணி மூப்பு அடிப்படையில் அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்களாக எத்தனை பேர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பணி வரன்முறைப்படுத்தப்படாத 111 அரசிதழ் பதிவு ஆசிரியர்களில் இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் போக மற்றவர்கள், எஞ்சியவர்கள் அந்தப் பதவியை இழந்தனரா ? அவர்கள் நிலை என்னவாக இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நியமனம் செய்யப்பட்ட மற்ற 36 தலைமையாசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

[1979 பிப்ரவரி 13

**திரு. ம. சங்கரலிங்கம் :** முதலில் 111 அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்கள் இருந்தார்கள். பிறகு 1977-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முறையின்படி 75 தலைமையாசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். எனவே மீதமுள்ள 36 அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்களின் பணி அந்தப் பதவியிலேயே வரன்முறை செய்யப்பட்டிருக்கிறதா அல்லது அவர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டு பணி வரன்முறை செய்யப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாவட்ட பணி மூப்பின்படி நியமனம் செய்யப்பட்ட 36 தலைமையாசிரியர்களின் பணியை வரன்முறைப் படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்ற விவரம்தான் எனக்கு இங்கே தரப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்கள் பிரச்சினையைப் போலவே, 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் அரசிதழ் பதிவு பெறாத தலைமையாசிரியர்கள் மாவட்ட பணி மூப்பின் அடிப்படையில் பள்ளிகளில் நியமிக்கப்பட்டு இன்னுவரையும் அவர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு கொடுக்கப்படாமலும், பணி வரன்முறை செய்யப்படாமலும் இருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அவர்களின் குறையைத் தீர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. க. அறிவழகன் :** அரசிதழ் பதிவுபெற்ற தலைமை ஆசிரியர்கள் அனைவருமே மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் உயர்நிலைப் பள்ளிகளில் அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்கள் எவருமே இப்போது இருப்பதாகக் காணோம். எனவே இந்தச் சூழ்நிலையில் மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக நியமிக்கப் பட்டவர்களை அவர்கள் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக இருந்தும்கூட, அவர்களின் பணி வரன்முறைப்படுத்தப்படாமல் இன்னும் "டெம்பரரி" என்று சொல்லப்படுகிற நிலைமையில் இருந்து வருகிறார்கள். அதாவது தகுதியற்ற தலைமையாசிரியர்கள் என்று வழங்கப்படுகிற முறையில் இருந்து வருகிறார்கள். எனவே இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து உரிய ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1979 பிப்ரவரி 13]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட தலைமை ஆசிரியர்களைப் பொறுத்துத்தான் பணி வரன்முறைப்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

## 10+2+3 *System.*

* 15 *Q*.—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any arrangement has been made for the students, who failed in the Examination during 1977-78 academic year, to continue their studies under *10+2+3* system ; and

(*b*) if so, the details thereof ?

## 10+2+3 பாடத் திட்டம்.

**திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்** கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977–1978 கல்வி ஆண்டில் தேர்வில் தவறிய மாணவர்கள், தங்கள் கல்வியைத் தொடருவதற்கு 10+2+3 பாடத்திட்ட அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) ஆம், 11 ஆம் வகுப்பு அதாவது எஸ்.எஸ்.எல்.சி., பொதுத்தேர்வில் தவறிய மாணவர்களை மேல் நிலை முதலாண்டு வகுப்பில் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

**திரு. க. இராமமூர்த்தி :** இப்படி அனுமதி வழங்குகிற உத்திரவு பள்ளிகளுக்குக் குறித்த காலத்தில் கிடைக்காத காரணத்தால், பெருமளவுக்கு இதில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடுகிற நிலைமையும் அவர்களுக்குச் சரியான முறையில் வழி காட்ட முடியாத அளவிலே பள்ளித் தலைமையாசிரியர்களும் தவித்துக் கொண்டிருந்தனர் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அதைப் போலவே இந்தத் திட்டத்தில் செய்திருக்கிற மாற்றத்தின் விளைவாக மாணவர்களுக்கு ஓராண்டுப் படிப்பு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அரசு அறியுமா?

முயற்சியை மேற்கொள்ளாததன் காரணமாக தற்போது மாணவர்கள் படித்த பாடத்தை மீண்டும் படித்து ஆண்டுக் கணக்கில் வீணடிக்கப்படுகிற நிலை உருவாகியிருப்பதைத் தவிர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா? இனி மேலாவது இந்தத் தவறைத் திருத்திக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது செய்யப்பட்டிருக்கிற மாறுதலில் இருக்கிற ஒரு உண்மையை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்க வேண்டும். இப்போது வெறும் ஆண்டுகளைப் பிடிக்கிற வேலை நடக்கவில்லை. பாடத்தின் தரத்தை உயர்த்துகிற வேலை நடைபெறுகிறது. புதிதாக வந்திருக்கிற 11-வது வகுப்பு ஏற்கெனவே உள்ள புகுமுக வகுப்புக்குச் சமமாகவும் 12-வது வகுப்பு பட்டப்படிப்பின் முதலாண்டுக்குச் சமமாகவும் இருக்கிறது. இவர்கள் தேறி கல்லூரிக்குப் போகிறபோது, அந்தப் பாடங்களின் தரமும் சரியாக இருக்கும். யாரும் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலையில் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 1977-78 ஆம் கல்வியாண்டில் எஸ்.எஸ்.எல்.சி., தேர்வில் தவறிய மாணவர்களையும் 11-வது வகுப்பில் சேர்த்துக்கொள்ளுவதற்கு அரசு கடந்த ஜூலை மாதத்தில் உத்தரவு பிறப்பித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எஸ்.எஸ்.எல்.சி., தேர்வுக்குப் பணம் கட்டி, தேர்வு வருகிற நாள் வரை படித்து, தேர்வு எழுதுகிற காலத்தில் உடல் நலிவுற்று தேர்வு எழுத முடியாத மாணவன் ஒருவன்—அவன் திருநெல்வேலி மாவட்டம், காயல்பட்டினத்தைச் சேர்ந்தவன்—தன்னைத் தோற்றவனாகக் கருதி 11-வது வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறான். அவன் எல்லா நாட்களுக்கும் வகுப்பிற்குச் சென்றிருக்கிறான். அவனை 11-வது வகுப்பில் சேர்க்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நானும் இது குறித்து முதன்மைக் கல்வி அலுவலருக்கு எழுதிக் கேட்டதற்கு, மறுத்து எழுதியிருக்கிறார்கள். அவன் இந்த ஆண்டு முழுவதும் படிக்க முடியாமல் இருக்கிறான். இப்படிப்பட்ட நிலைமை அவனுக்கு அரசு அதிகாரி செய்த தவறின் காரணமாக ஏற்பட்டுள்ளது என்பதால் 12-வது வகுப்பில் சேர அவனுக்கு அனுமதி வழங்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இது குறித்துப் பரிசீலிக்கலாம்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** எஸ்.எஸ்.எல்.சி.-யில் தேர்வு அடையாத மாணவர்களையும் 11-வது வகுப்பிலே சேர்த்துக்கொள்ளுவதற்கான ஆணையைப்பற்றி மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். எஸ்.எஸ்.எல்.சி.யில் தேர்வு அடையாதவர்களை அடுத்த மேல்நிலைப் பள்ளியில் சேர்க்க முயற்சி எடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது. ஆனால் மேல்நிலைப் பள்ளியில் 4 சப்ஜெக்டுகள் வைத்திருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி.யில் தேர்வு அடையாதவர்களை அங்கே சேர்க்கிறார்கள். அங்கே மாணவர்களுக்கு அதிகப்படியான பாடத் திட்டங்களை வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்த 4 சப்ஜெக்டை 3 சப்ஜெக்டாகக் குறைக்கலாம் என்று Secondary Education Board பரிந்துரை செய்ததை கல்வி இலாகா ஏற்றுக்கொள்ள, அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதைவிட பிரமாதமான ஒரு யோசனையை அவர்கள் சொல்லியிருக்கிறார். அதாவது நகரத்தில் உள்ளவர்களுக்கு 4 பாடங்களும், கிராமத்தில் உள்ளவர்களுக்கு 3 பாடங்களும் வைக்கலாம் என்று. (சிரிப்பு) முன்பு 5 பாடங்களைப் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மேல் வகுப்பில் இப்போது 4 பாடங்களைத்தான் படிக்கிறார்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு எஸ்.எஸ்.எல்.சி.-யிலே வெற்றி பெற்றவர்கள் 12-வது வகுப்பிலே சேரலாம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த 11-வது வகுப்புப் பாடங்கள் ஏற்கெனவே தொடங்கி முடிந்துவிடுகின்றன. 12-வது வகுப்பில் சேர்ந்தால், மாணவர்கள் நிச்சயமாக அந்தப் பாடங்களில் வெற்றி பெற முடியாது. அவர்களுக்காக தனியாக பி. யு. சி. வகுப்புகளை நடத்தலாம் என்ற கருத்தை சென்னை பல்கலைக் கழகத்துணை வேந்தர் செனெட்டில் தெரிவித்தார்கள். ஆகவே அதற்கு தக்கபடி பி. யு. சி. வகுப்புகளைக் கல்லூரிகளில் மறுபடியும் நடத்தினால், ஆசிரியர்களுக்கும் வேலை இல்லை என்ற தொல்லை குறையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பைத் தந்திருக்கிறோம். பி.யு.சி.-யை எடுப்பதைத்தான் முதல் வேலையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** வருகிற கல்வியாண்டில் அதிகமான மாணவர்கள் மேல்நிலை வகுப்பிற்குப் போக வேண்டிய காலத்தில் மேலும் அதிகமான மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

## *Teachers of Private Polytechnics*

* 16 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any representation to the effect that the concessions such as Medical Leave and Surrender Leave enjoyed by the Teachers in the Government Polytechnics be extended to the Teachers of Private Polytechnics ; and

(*b*) if so, the action taken thereon ?

தனியார் பல்தொழில் நுட்பப் பயிலகங்களின் ஆசிரியர்கள்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்கட்கு, அரசுப் பல்தொழில் நுட்பப் பயிலகங்களின் ஆசிரியர்களுக்குள்ளது போல மருத்துவ விடுப்பு, ஒப்படைப்பு விடுப்பு வழங்கப்பட வேண்டுமென முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) மருத்துவ விடுப்பு, ஒப்படைப்பு விடுப்பு முதலியன வழங்கப்பட வேண்டுமென்ற தனியார் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் அனுப்பிய முறையீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. முத்துசாமி : தனியார் பள்ளிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் உள்ள ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதே போல தனியார் தொழில் நுட்பப் பயிலகங்களில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று நீண்ட காலமாகக் கேட்டு வருகிறார்கள். சமீபத்தில் வரவிருக்கிற பட்ஜெட்டிலாவது இந்தச் சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்படுமா ? ஒரு பிரிவினருக்கு வழங்கிவிட்டு இன்னொரு பிரிவினருக்கு வழங்கப்படாமல் காலம் தாழ்த்துவது என்பது, இந்த அரசு ஒரு பிரிவினருக்கு மட்டும் காட்டிய ஒரு சார்பான நடைமுறையாக ஆகாதா ? ஆகவே அந்தச் சலுகையை அவர்களுக்கு வழங்கும்போது பின் தேதியிட்டு (Retrospective effect) வழங்கும் முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1979 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை உணர்ந்துதான் அவர்களுடைய குறைகளைப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசு ஊழியர்களுக்குள்ள சலுகை ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஒரு பிரிவு ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றப் பிரிவினருக்கு வழங்கப்படுவதில்லை. இதைப் பரிவோடு கவனித்து, அவற்றைப் போக்க இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே எந்தச் சலுகையை வழங்கினாலும், அது எல்லாத் துறை ஆசிரியர்களுக்கும் பொருந்தும் வகையில் நிலையான ஆணை (Standing Orders) வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதையும் பரிசீலிக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : அரசு இடக்கூடிய உத்தரவுகளின் பலன்கள் பல நேரங்களில் ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை. உதாரணமாக நெல்லை மாவட்டத்திலே முதலமைச்சர் அவர்கள் சென்றிருந்தபோது, தனியார் பள்ளி ஆசிரியர்களும், உள்ளாட்சித் துறை ஆசிரியர்களும் தங்களுக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதற்காகக் கொடுக்கப்பட்ட முன்பணம் (அட்வான்ஸ்) கிடைக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களும் அந்த இடத்திலேயே உத்தரவு போட ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அந்த உத்தரவு இன்னும் அமுலாகவில்லை. அதற்குக் காரணம் நிதி வழங்கவில்லை என்று சொல்லுகிறார்கள். நிதியை அனுசரித்துத்தான் ஆணையைப் போட்டிருப்பார்கள். ஆனால் கீழ் மட்டத்திலே அது அமுலாக்கப் படாமல் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலே அந்த முன்பணம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அரசு போடக் கூடிய உத்தரவுகள் அமுலாவதற்குத் தக்க முறையிலே அரசு சீரான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லப்படும்.

## House-Rent Allowance.

* 17. Q.—Thiru M. SANKARALINGAM, Thiru D. SANTOSHAM & Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government are aware that even though Kovilpatti Municipality has been upgraded as Second Class Municipality, the Teachers and Government Servants working in that Municipality, were not sanctioned House Rent Allowance applicable to Second Class Municipality ;

(b) if so, whether the Government have received any representations regarding the matter ; and

(c) the action taken thereon ?

## வீட்டு வாடகைப் படி.

திரு. ம. சங்கரலிங்கம், திரு. டி. சந்தோஷம் மற்றும் திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவில்பட்டி நகர்மன்றம் இரண்டாம்தர நகர்மன்றமாக உயர்த்தப்பட்டும், அந்நகர்மன்றத்தில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர்களுக்கு இரண்டாம்தர நகர்மன்றத்திற்கு உரிய வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதுபற்றி முறையீடுகள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(உ) அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ), (இ) மற்றும் (உ) இரண்டாம் நிலை நகராட்சிகளும் வீட்டு வாடகைப்படி பொறுத்தமட்டில் மூன்றாம் தரத்தையே சேர்ந்ததாகும். கோவில்பட்டி நகராட்சி இரண்டாம் நிலைக்கு உயர்த்தப்பட்டதினால் வீட்டு வாடகைப்படி விகிதம் மாறாது. ஆகவே இதுபற்றி வரப்பெற்ற முறையீட்டினை அரசு ஏற்றுக்கொள்வதற்கில்லை.



திரு. ம. சங்கரலிங்கம் : ஜனத்தொகையின் அடிப்படையில் நகர்மன்றங்களை மூன்றாந்தரம், இரண்டாந்தரம், முதல் தரம் என்று பிரிவு செய்கிறோம். மக்கள் நெருக்கம் அதிகமாகிறபோது, குறைந்த வாடகையில் வீடுகள் கிடைப்பதில்லை. வீட்டு வாடகை உயர்ந்து கொண்டே போகிறது. ஆகவே இரண்டாந்தர நகர்மன்றத்தில் இருப்பவர்களுக்கு மூன்றாந்தர நகர் மன்றத்திற்குரிய வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படுவதை மாற்றி இரண்டாந்தர நகர் மன்றங்களுக்கு உயர்ந்த வீட்டு வாடகைப் படியை நிர்ணயம் செய்ய அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வீட்டு வாடகைப் படியைப் பொறுத்த அளவில், ஏற்கெனவே பிரிக்கப்பட்டிருக்கிற முறை, சென்னை மாநகரமும் அதைச் சுற்றியுள்ள 32 கிலோமீட்டருக்குள் உள்ள நகராட்சிகளும், மதுரை மாநகரமும் அதைச் சுற்றியுள்ள 16 கிலோ மீட்டருக்குள் உள்ள நகராட்சிகளும் முதல் தரம் என்றும்,

மாவட்டத் தலைநகரங்களும், முதல் தர நகராட்சிகளும் இரண்டாந்தரம் என்றும்,

கோட்டாட்சித் தலைமையிடமும், வட்டத் தலைமையிடமும், முதல் தரம் அல்லாத மற்ற நகராட்சிகளும் மூன்றாந்தரம் என்றும் உள்ளது. அதை இப்போது மாற்றுவதற்கில்லை.

திரு. க. அறிவழகன் : அமைச்சர் அவர்களுடைய பதிலில் சென்னை மாநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 32 கிலோமீட்டர் தூரத்திற்குள்ளவைகளுக்கு முதல்தர வீட்டு வாடகைப்படி தரப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். இப்போது சென்னை மாநகரமே மேலும் 10 கிலோமீட்டர் தூரத்திற்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 42 கி. மீ. தூரத்தில் உள்ளவர்களும் தங்களுக்கு முதல் தர வீட்டு வாடகைப்படி கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அரசு இதையும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நகர் நீளுகிற அளவுக்கு நிதிநிலைமை நீண்டால், அது பற்றி கவனிக்கலாம். (சிரிப்பு)

(பிற்பகல் 4-30)

திரு. செ. முத்துசாமி : அமைச்சரவர்கள், இரண்டாம தர நகராட்சிகள் என்று சொல்லும்போது 16 கிலோ மீட்டர் தூரம் வரையும், முதல் தர நகராட்சிகள் என்று சொல்லும்போது 32 கிலோ மீட்டர் தூரம் வரையும் வீட்டு வாடகைப்படி தரப்படுகிறதென்று சொன்னார்கள். பொதுவாக

நிலையும், 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அரசு ஊழியர்களுக்கு உண்டு என்ற நிலையும் இருக்கிறது. உள்ளாட்சித் துறை ஊழியர்களும், தனியார் பள்ளி ஆசிரியர்களும் 16 கிலோ மீட்டருக்குள் இருந்தால், அவர்களுக்கும் வீட்டு வாடகைப் படி அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அப்படித்தான் உத்தரவு இருக்கிறது. வேறு எங்கேனும் சிக்கல் இருந்தால், அதைக் குறிப்பிட்டுக் கூறினால், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அமைச்சரவர்கள் கூறும்போது, சென்னை நகரம் 42 கிலோ மீட்டர் வரைக்கும் போனாலும், 32 கிலோ மீட்டர் வரைக்கும்தான் வாடகை தரப்படுமென்று சொன்னார்கள். அப்படியென்றால், நகரத்தின் ஒரு பகுதிக்கு ஒரு வாடகையும், இன்னொரு பகுதிக்கு இன்னொரு வாடகையும் தருவார்களா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** வீட்டு வாடகைப் படி என்பது சென்னை மாநகரத்தைச் சுற்றியுள்ள, 32 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள நகராட்சிகள்; மதுரையைச் சுற்றியுள்ள, 16 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள நகராட்சிகள் ஆகியவற்றுக்கு ஒரே விதமான விகிதத்தில் அளிக்கப்படுகிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** சென்னை நகரம் 10 கிலோ மீட்டர் நீண்டால், வீட்டு வாடகைப் படி அந்த 10 கிலோ மீட்டருக்கும் சேர்த்து தரப்படுமா? தரப்படமாட்டாதென்றால், இரண்டு விதமான வீட்டு வாடகைப் படி இருக்குமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** நகரம் நீளும்போது பரிசீலிக்கப்பட வேண்டிய பிரச்சினை.

## *Railway Cess Fund.*

* 18 Q.—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the amount of money belonging to the former District Boards Railway Cess Fund now lying unspent, in the Districts in the State ;

(*b*) the various heads under which the said Fund was spent in the past ;

(*c*) the authorities who finalised the schemes under which the amounts were spent ; and

(*d*) the proposals, if any, of the Government for spending the unspent amount of the said Fund ?



## இரயில்வே செஸ் நிதி.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் உள்ள மாவட்டங்களில், முன்னாள் மாவட்டக் குழுக்களின் இரயில்வே செஸ் நிதியில் தற்போது செலவழிக்கப்படாமல் உள்ள தொகை எவ்வளவு?

(இ) இதற்கு முன்பு எந்தெந்தத் தலைப்புகளின்கீழ் மேற்சொன்ன நிதி செலவழிக்கப்பட்டது?

(உ) அத்தொகைகள் எந்தத் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டனவோ அவற்றிற்கு எந்த அதிகாரிகள் இறுதி உரு கொடுத்தனர்?

(எ) மேற்சொன்ன நிதியின் செலவழிக்கப்படாத தொகையைச் செலவிடுவதற்கான அரசின் செயற்குறிப்புகள் யாவை?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) எல்லா மாவட்டங்களிலும் **சேர்த்து** (1978-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பெறப்பட்ட அறிக்கைபடி)—

ரொக்கத் தொகையாக ரூ. 26,64,626.42

(1978-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பெறப்பட்ட அறிக்கைபடி பத்திரங்களாக ரூ. 81,45,074.84

மொத்தம் .. ரூ. 1,08,09,701.26

(இ) கீழே கண்டுள்ள திட்டங்களுக்குச் செலவு செய்யப்பட்டது :—

(1) பாதுகாக்கப்பட்ட குடிநீர்

(2) ஆரம்பப் பள்ளி கட்டிடங்கள்

(3) தாய்சேய் நல விடுதிக்கான கட்டிடங்கள்

(4) மருந்தகக் கட்டிடங்கள்

(5) சாலைகள் போடுதல்

(உ) அரசு.

(எ) தற்போது ஒன்றும் இல்லை.

[1979 பிப்ரவரி 13

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, குறிப்பாக இந்த நிதியின் அடிப்படையில் சாலைகளுக்குச் செலவிடும் பணம் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. ஆங்காங்கே சில பர்லாங்குகள், அரை மைல் அல்லது ஒரு மைல் என்ற அளவிலே, முழுமையாக இல்லாமல், சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தச் சாலைகளை முழுமைப்படுத்துவதற்கு அந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இன்ஜினியரிடத்தில் செல்லும்போது, பணம் தீர்ந்துவிட்டது, மேற்கொண்டு பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையிலே போட்ட சாலைகள் யாருக்கும் பயன்படாமல், பாழாகும் நிலைதான் இருக்கிறது. எனவே இப்படி ரெயில்வே செஸ் நிதியைப் பயன்படுத்தி சாலைகள் போடுவது முழுமை பெறாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா? அவற்றை முழுமை பெறச் செய்ய, எந்த விதத்திலாவது நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ரெயில்வே செஸ் நிதியைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையிலே அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, செலவழிக்கப்படுகிறது. அதற்கான முன்னுரிமை என்ன என்பதை நான் சொன்னேன். அவை, குடி தண்ணீர் வழங்கல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், தாய்சேய் நல விடுதிக் கட்டிடங்கள், மருந்தகக் கட்டிடங்கள், இணைப்புச் சாலைகள் போடுதல். குறிப்பிட்ட இடத்தில் ஏதாவது சாலைகள் போட வேண்டிய அவசியம் இருந்து, அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டுக் கூறினால், மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்தை அறிந்து, அதற்கான செலவைச் செய்ய அரசு முற்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒதுக்கீடு செய்கின்ற அளவிலே இந்தப் பணம் கையாளப்படுவதாலே, அவர்கள் எந்த அடிப்படையிலே செலவு செய்கிறார்களென்பது தெரியவில்லை. தென் ஆற்காடு மாவட்டத்தில் பல சாலைகள் பாதியில், யாருக்கும் பயன்படாமல் இருக்கின்றன. கான்ட்ராக்டர்கள் மட்டும் லாபமடைகிற அளவிற்கு இருக்கின்றன. சம்பந்தப்பட்ட இலாகாவிற்குப் பயன்படுகிறதோ, இல்லையோ தெரியாது. அந்த அளவிலே சாலைகள் பாதியில் நின்றுவிட்டன. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த நிதியைப் பயன்படுத்தும்போது, அவர்கள் சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கிணங்க பயன்படுத்துவதால், இனியாவது அதை முறைப்படுத்த அரசு முன்வருமா?



1979 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ரெயில்வே செஸ் நிதி என்பது தனியாக இருக்கும் நிதி. அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதை, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துப்படி அரசு முடிவு செய்யும். மாண்புமிகு உறுப்பினரவர்கள், எந்தெந்தச் சாலைகளுக்கு இந்த நிதி சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டு எழுதினால், அது பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : சேலம் மாவட்டத்தில் இருந்த ரெயில்வே செஸ் நிதியிலிருந்து சேலம் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று சேலம் மாவட்ட மக்கள் அரசுக்குப் பரிந்துரை செய்தார்கள். அதுபற்றி அரசு பரிசீலித்ததா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தனிக் கேள்வி போடவும்.

திரு. பி. மாணிக்கம் : ரெயில்வே செஸ் நிதியைப் பயன்படுத்துவதற்கான Guide lines மாவட்ட ஆட்சியாளர்களுக்குத் தரப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தரப்பட்டிருக்கிறது. அதைத்தான் ஏற்கெனவே படித்தேன்.

### *Kodumudiyaru Dam.*

*19 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether it is a fact that the dam work on Kodumudiyaru, Tirunelveli district, has been stopped ;

(*b*) if so, the reason therefor ;

(*c*) the total estimate for this scheme ;

(*d*) the amount spent so far for this scheme ;

(*e*) whether any request has been made by the public of that area to continue the execution of this scheme ; and

(*f*) if so, the action taken thereon ?

### கொடுமுடியாறு அணை.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், 'கொடுமுடியாறு' அணைத்திட்ட வேலை நிறுத்தப்பட்டுவிட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

(உ) இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

(எ) இத்திட்டத்திற்கு எவ்வளவு தொகை இதுவரை செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

(அ்) இத்திட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டுமென்று அவ்வட்டார மக்களிடமிருந்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஒ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) இத்திட்டம் மறுபரிசிலனையில் உள்ளது.

(உ) இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 1975-76-ம் ஆண்டு நிலைவாசிப் பட்டியல்படி ரூ. 223 லட்சம்.

(எ) 1978-ம் ஆண்டு சனவரி மாதம் முடிய இத்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூபாய் 11.32 இலட்சமாகும்.

(அ்) ஆம்.

(ஒ) இத்திட்டத்தைப் பற்றிய மேல் நடவடிக்கை பற்றிய முடிவு மறுபரிசிலனையின் விளைவைப் பொறுத்திருக்கும்.

(பிற்பகல் 4-40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மத்திய அரசினுடைய திட்டக் கமிஷன் அனுமதி அளிக்கப்பெற்று மத்திய அரசினுடைய நிதி உதவியோடு தொடங்கப் பெற்றது. அதில் 11 லட்சம் ரூபாய் அளவுக்கு செலவு செய்யப்பட்டுள்ளது. சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரோடு போடப்பட்டிருக்கிறது. அங்கே, கொடுமுடியாறு பகுதியில் ஒரு தனி டிவிஷன் அமைக்கப்பட்டு, அங்கே அலுவலர்கள், மற்றும் சிப்பந்திகள் இருக்கவும் Gutst House அமைக்கப்பட்டு, பாலங்கள் அமைக்கப்பட்டு, கிணறுகள் வெட்டப்பட்டு, அஸ்திவாரம் 1,400 அடிக்குப் போடப்பட்டு, அதற்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. சுமார் 40 குளங்கள் வெட்டப்பட்டு, சுமார் 6 ஆயிரம் எக்கர், பாசனவசதி ஏற்பட்டிருக்கிறது. நாங்குநேரியுடன் இரண்டு சட்ட மன்றத் தொகுதியில் உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் பயன்பெறுகின்ற அளவுக்குச் செய்யப்பட்டிருக்கிறது. திடீரென்று 18—2—1978-ல் ஒரு தனிஉத்தரவு போடப்பட்டு நிறுத்தப்பட்டதற்கு என்னவகை காரணம் பின்னணியில் இருக்கிறது என்பதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கடந்த 28—2—1975 தேதியில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில் கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டத்திற்கு 166 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதற்குப் பின்னாலே இந்தத் திட்டத்தினுடைய கணக்கு ரூ. 223 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் வறட்சிக் காலத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சீர்திருத்துவது என்ற அடிப்படையில் சில நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் பணிகளுக்காக என்று அரசு ரூ. 25 லட்சம் ஒதுக்கீடு செய்தது. அதில் அவசர காலப் பணிக்காக என்று எடுத்துக்கொண்டு செலவிடப்பட்டது. அதில் 11,32 இலட்சம் செலவாகியது. இந்தத் திட்டத்தில் உணவு உற்பத்தி ஆணையாளர் அவர்கள் ஒரு கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கணக்குப்படி இந்தத் திட்டத்தினால் பயன் கிடைக்காது என்று வெளிப்படையாகத் தெரிவதாக ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். அரசைப் பொறுத்த வரையிலே, 28—2—1978-ல் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கருதியுள்ளார்கள். அதன் அடிப்படையிலே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு ஆராய்ந்து தான் அதனுடைய திட்டத்திலே நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நெருக்கடிக் காலம் இருக்கின்றபோதுகூட மத்திய அரசு அதற்கு முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு எங்கெல்லாம் திட்டம் போட்டிருக்கிறது, சில வேண்டாத இடங்களிலேகூட ஆரம்பித்து விட்டார்கள் என்று நிறுத்தினாலும்கூட, இதை நிறுத்தவில்லை. இதற்குச் செலவு செய்யச் சொன்னார்கள். ஆனால் இதை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று எந்த அடிப்படையிலே, எந்த expert report பேரில் நிறுத்தியிருக்கிறார்கள் ? அந்தத் திட்டத்தில் 40 குளங்கள் வெட்டப்பட்டு, 6 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இன்றைக்கு கொடுமுடி ஆறு எல்லையிலே இருக்கின்ற ஒரு பெரிய நிலச்சுவான்தாருக்காக, அவருடைய நிலம், தோட்டங்களைக் கையகப்படுத்தப்படும் நிலையில் இருப்பதை அவர் தடைப்படுத்துவதன் காரணமாகத்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது. இது பற்றி அரசின் கவனத்திற்குத் தகவல் வந்திருக்கின்றதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கெனவே பதிலிலேயே விளக்கமாகச் சொன்னேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்பதால் மீண்டும் இன்னும் விளக்கமாகச் சொல்லிக்கொள்கிறேன். இது மத்திய அரசினுடைய நிதி உதவி பெற்ற திட்டம் என்று சொன்னார்கள். முன்னர் இருக்கின்ற குறிப்பிலே அது போன்று மத்திய அரசினுடைய நிதி உதவி பெற்ற திட்டமாக எனக்குத் தெரியவில்லை. அவசர காலத்திலிருந்து தான் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதிலேயே 11.32 லட்சம் ரூபாய் அளவுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 5,634 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். பின் 559 ஏக்கர் நிலம் மீண்டும் பாசன வசதி பெற இருக்கிறது. இந்தக் கணக்குகளையும் கொடுத் திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்து இருக்கக்கூடிய பொறியாளர் களும் மற்றும் உணவு உற்பத்தி ஆணையாளர் அவர்களும் பரிசிலனை செய்ததிலே இது ஒரு இலாபகரமான திட்டமாக இருக்காது என்ற கருத்தினை அவர்கள் எழுதியுள்ளார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில், இலாபக் கணக்குப் பார்த்து விவசாயிகளுக்குச் செய்வதில்லை. இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு பயன் கிடைக்கும் என்ற அடிப்படையில்தான் நாம் திட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கிறோம். அப்போதிருந்த அரசு காலத்திலே திட்டங்களைப் போடுகின்ற நோக்கில் உணவு உற்பத்தி எவ்வளவு இலாபகரமாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் திட்டங்கள் போடப் பட்டன. இந்த அரசு வந்த பிறகு, எல்லா நிலத்திலும் என்னென்ன விதமாக விளைச்சலைப் பெருக்க முடியும் என்ற அடிப்படையிலும், என்னென்ன பயிர்கள் என்ற அடிப்படையிலும்தான் கணக்கிட்டுச் செய்கிறது. உணவுப் பொருள்களை மட்டுமே மையமாக வைத்துக்கொள்ளாமல் பணப் பயிர்கள், கரும்பு போன்றவை பயிர் செய்தால், எவ்வளவு இலாபம் கிடைக்கும் என்று கணக்கு எடுத்துக்கொண்டுதான் திட்டங்கள் போட்டுக்கொண்டிருக்கிறோம். அதனாலேதான் இந்தத் திட்டம் மறுபரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ ஒரு பெரிய நிலப்பிரபு இதற்குத் தடையாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையிலே, அவர்கள் எத்தனை பெரியவராக இருந்தாலும் சரி எத்தனை சிறியவராக இருந்தாலும் சரி, அது யாராக இருந்தாலும் அவர்களால் எந்தத் தடை, எப்படி வந்தாலும் விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தை ஏற்றுகொள்ள வேண்டும் என்று சொன்னால், ஏற்றுக்கொள்வோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கைவிடப் படுகிறது என்று சொன்னார்கள். 28—2—1978 முதல் கைவிடப்படுகிறது என்று சொல்கிறார்கள். இதற்காக நாங்குநேரி, வள்ளியூர் பகுதியிலேகூட ஒரு நாள் அர்த்தால் செய்தார்கள், கடை அடைப்பு செய்தார்கள். யார் இந்தத் திட்டத்திற்குப் பின்னணியாக இருந்துகொண்டு தடை செய்துகொண்டிருக் கின்றார்கள் ? பகிரங்கமாகவே சொல்கிறேன். அதைப்பற்றி அரசுக்குத் தெரியும். இங்கு சொல்வதென்றாலும் எனக்குத் தடையில்லை. அவர் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர். அவருக்கு அங்கு 800 ஏக்கர் நிலம் இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகளைச் சொல்லக் கூடாது. தகவல் சொல்வதாக, கேட்பதாகத் தான் இருக்க வேண்டும். விதி முறைகளில் அப்படித்தான் இருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, நாங்குநேரியில் சட்டமன்ற அங்கத்தினர் அவர்களின் தலைமையில்கூட ஒரு ஊர்வலம் இந்தப் பிரச்சினைக்காக நடத்தப்பட்டிருக்கிறது. அது பற்றிய தகவலும் அரசுக்கு வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்களா ? அந்த expert report -ஐ அரசு இந்த அவையிலே வைக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மறுபரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது என்று ஏற்கெனவே நான் சொன்னேன். அந்தப் பரிசிலனை முடிந்த பின்னர், அந்த ரிப்போர்ட்டை வைக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டால், அந்த அறிக்கை சமர்ப்பிக்கப் பட வேண்டுமென்று சொன்னால், அதைப்பற்றி அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கொடுமுடி ஆறு திட்டத்திற்கு மத்திய அரசு எந்தவிதமான நிதி உதவியும் செய்யவில்லை என்று சொல்கின்றார்கள். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசே ஒப்புதல் அளித்திருக்கிறது. மத்திய அரசே ஒப்புதல் அளித்த பிறகும், மாநில அரசு அதை நிறுத்துவது முறைதானா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே, மாநில அரசுதான் அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிலே எழுதிக் காட்டியிருக்கிறார்கள். மேலும் மத்திய அரசு மூலம் வந்த திட்டம் என்பதற்குள்ள குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை என்பதை நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

[1979 பிப்ரவரி 13

**திரு. பி. மாணிக்கம் :** அந்தத் திட்டத்தை மறு பரிசிலனை செய்ய எவ்வளவு நாட்கள் ஆகும்? அது முடிந்த பிறகு அறிவிப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, எவ்வளவு நாட்களில் முடியுமோ அவ்வளவு நாட்களில் முடித்துவிட்டுச் சொல்லலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இப்படி அமைச்சர் அவர்கள் சொல்வது இந்த அவையை அவமதிப்பதாக இருக்கிறது. இது ஒரு பெரிய திட்டம். இரண்டு சட்ட மன்ற உறுப்பினர்களின் தொகுதியைச் சேர்ந்தது. அந்தத் தொகுதி மக்கள் நல்ல பயன் பெறுகின்ற ஒரு திட்டம். அரசு ரூ. 25 லட்சம் நிதி ஒதுக்கி செலவு செய்யப்பட்டுள்ள ஒரு திட்டம். இந்தத் திட்டத்திற்காக 3, 4 முறைகள் கிளர்ச்சிகள்கூட நடந்திருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'எவ்வளவு விரைவில் செய்ய முடியுமோ' என்றுதான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 'எவ்வளவு விரைவில் செய்ய முடியுமோ' என்று சொல்லியிருந்தால், அப்படிச் சொல்ல மாட்டேன். குறிப்பாக ஒரு 2 மாத காலத்திற்குள்ளாவது சொல்ல முடியுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், ஒரு முக்கியமான கொள்கைப் பிரச்சினையும் இதில் உள்ளது. நிலப்பிரபுக்களில் ஒருவர், அதுவும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர், ஆளுங் கட்சிக்கு வேண்டியவர் என்று சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்த அடிப்படையிலேதான் இந்தத் திட்டம் நிறுத்தப் பட்டது என்று குறிப்பிட்டார்கள். அது அப்படி அல்ல. ஆற்றின் குறுக்கே அணை கட்டி நீரைத் தேக்குகிறபோது, அதற்கான முதலீட்டை, செலவை நாம் தான் மேற்கொள்கிறோம். கடந்த ஆண்டுகளில் அந்த ஆற்றின் மூலம் எவ்வளவு கூடுதலான தண்ணீர் வீணாகக் கடலிலே போய்ச் சேர்கிறது என்று கணக்கெடுத்து, அந்தத் திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். அப்படிப் போடுகின்றபோது, பல திட்டங்களில் அத்தகைய உபரி தண்ணீர் இல்லாம இருக்கின்றது. அத்தகைய ஒரு திட்டமாகத் தான் இந்தக் கொடுமுடி ஆ திட்டம் இருக்கிறது. ஆக உபரித் தண்ணீர் இல்லாத இந்த இடத்தில் இந்த திட்டத்தை மேற்கொள்ளலாமா என்பதுதான் இப்போது பிரச்சினையா இருக்கின்றது. இது குறித்து இரண்டு விதமான தொழில் நுட்பக் கருத்துக்க



1979 பிப்ரவரி 13]

(பிற்பகல் 4-50)

மேற்கொள்வது வீண் செலவு.
உள்ளன. ஒன்று அத்தகைய திட்டத்தை அல்லது அதிகமான மழைக்
இன்னொரு கருத்து வெள்ளக் காலங்களில் இருக்குமேயானால், இம்
காலங்களில் அத்தகைய ஒரு நீர்த்திட்டம் நமக்கு கொண்டு வறட்சிக் காலத்தில்
யுள்ள நீரை பாசனத்துக்குத் தேக்கி வைத்துக் நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு
அதைப் பயன்படுத்த வாய்ப்பாக இருக்கும். இதற்காக 3 அல்லது 4 கோடி
ஒரு முறைதான் வெள்ளம் வருகிறது. பிரச்சினையாக இருக்கிறது.
ரூபாய்க்கு ஒரு திட்டம் போடலாமா என்பதும் கொள்கை முடிவின் காரணமாக
மூன்று, நான்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு நீர்ப்பாசன அமைச்சரவர்கள்
அது காத்து இருக்கிறது. அதனால்தான் என்று தெரிவித்தார்கள்.
அதைப்பற்றிப் பேசும்போது அரசு ஆராயும்

**திரு. ம. சங்கரலிங்கம் :** தண்ணீர் வருகிற இடம் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு இந்தப் பகுதி. வருடத்திற்கு இரு முறை தண்ணீர் வரும். உபரித் தண்ணீர் கடலுக்குப் போகிற இடம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 10 வருடங்களாக அணையின் கொள்ளளவுக்குத்தான் அங்குள்ள 'ரெயின்பால்' இருக்கிறது. தண்ணீர் உபரியாக வந்தால் நன்றாக இருக்கும். தண்ணீரின் அளவு பற்றி ஏதாவது கணக்கு எடுக்கப்பட்டிருக் கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஆற்றின் கீழ் பகுதியில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரியின் கலங்கல் வழியாக தண்ணீரே போக வில்லை என்பதுதான் எடுக்கப்பட்ட கணக்கு.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அற்புதமான விளக்கமொன்றை மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்தார்கள். உபரித் தண்ணீர் அதிகமாக இருந்தால், புதிய கொள்கையை வகுப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். சமீப காலமாக இந்தத் திட்டத்தை அரசு அனுமதித்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

## *Apple Cultivation*

* 20 *Q.*—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether any research work was conducted for the cultivation of Apples in Tamil Nadu ;

(*b*) if so, the result thereof ;

(*c*) the number of acres in Tamil Nadu, wherein Apple is being cultivated at present ; and

(*d*) the variety of Apple which is being cultivated ?

## ஆப்பிள் பயிரிடுதல்

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் ஆப்பிள் பயிரிடுவது பற்றி ஆராய்ச்சி ஏதும் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் முடிவு என்ன ?

(உ) தற்போது தமிழ்நாட்டில் எத்தனை ஏக்கரில் ஆப்பிள் பயிரிடப் படுகிறது ?

(எ) எந்த ரக ஆப்பிள் பயிரிடப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) ஆராய்ச்சியின் பயனாக கிடைக்கப்பெற்ற முடிவுகள் :—

(1) பல்வேறு நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட 120 வகை ஆப்பிள்கள் கொடைக்கானலில் ஆராய்ச்சி செய்யப்பட்டன. விரைவில் பலனுக்கு வரக்கூடிய கேரிங்டன், அய்ரிஷ்பீச் ஆகிய இரண்டு இரகங்களும் கொடைக்கானல் 1, விண்டர்பனானா, பார்லின்ஸ் பியூட்டி ஆகிய மூன்று நடுத்தர கால இரகங்களும், ட்ராபிகல் பியூட்டி என்னும் நீண்டகால இரகமும் கொடைக்கானல் சூழ்நிலைக்கு நன்கு பலனளித்துள்ளன.

(2) நவம்பர், டிசம்பர் மாதங்களில் சரிவு மற்றும் ஒட்டுமுறை மூலம் நூற்றுக்கு நூறு சதவீதம் ஆப்பிள் மரங்கள் நன்கு வளர்கின்றன.

(3) குறிப்பிட்ட காலங்களில் சாண்டோனின் 'எ', ஆலர் 3000 பி.பி.எம்., ஜி.எ. 500 பி.பி.எம். மற்றும் ஆலர் 2000 பி.பி.எம், ஆகிய மருந்துகளை தெளித்தால் மலர்களின் எண்ணிக்கையும் பழ மகசூலும் அதிகரிக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

(4) எந்தெந்த முறையில் இந்தப் பழங்களை வெளியூருக்கு குறைந்த அளவு சேதங்களுடன் அனுப்பலாம் என்ற விபரமும் அறியப்பட்டுள்ளது.

(உ) சுமார் 10 ஹெக்டரில் பயிரிடப்படுகிறது.

(எ) கொடைக்கானல் பகுதியில் பார்லின்ஸ் பியூட்டி என்னும் இரகமும், நீலகிரிப் பகுதியில் ரோம் பியூட்டி என்னும் இரகமும்தான் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.



**திரு. ம. சங்கரலிங்கம் :** ஆராய்ச்சியில் நல்ல ஆப்பிள் மரங்கள் வளர்க்க முடியும் என்று கண்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். பத்து ஏக்கராவில் ஆப்பிள் பயிரிடப்படுகிறது என்றும் சொன்னார்கள். இதை மலைப் பகுதிகளில் விஸ்தரிக்க தனித் திட்டங்கள் ஏதாவது அரசின் பரிசிலனையில் இருக்கிறதா ? எந்தப் பகுதியில் இது விஸ்தரிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஆப்பிள்கள் பயிரிடப்படுவதற்குத் தேவையான சீதோஷ்ண நிலைகள் உள்ள பகுதிகளில் அவை பயிரிடப்படுகின்றன. குறிப்பாக மலைச் சரிவுகளில்தான் இதுபோன்ற பழ வகைகள் பயிரிடப்படுகின்றன. நீலகிரி, கொடைக்கானல் போன்ற மலைச் சரிவுகளில் இதை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**THIRU G. VASANTHA PAI :** Will the Hon. Minister kindly elucidate whether these Kodaikanal Apples which were originally forbidden fruits for eating are now used only for cooking or whether they are used for eating?

**THE HON. THIRU P. KOLANDAIVELU :** The fruits available at Kodaikanal are being used only for eating.

**THIRU A. R. DAMODARAN :** The Hon. Minister mentioned a variety of Apple known as Winter Banana. May I know whether this Apple is shaped like a banana ; or is it an Apple ?

**THE HON THIRU P. KOLANDAIVELU :** The name itself denotes that it is only an Apple. It is not a banana nor is it of a banana's size.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மத்திய அரசு மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம் என ஒரு திட்டத்தை அறிவித்து அதற்காக சிறிது நிதி ஒதுக்கியிருப்பதாகச் செய்தி வந்ததை நான் பார்த்தேன். அதைப் பயன் படுத்தி மலைப் பகுதியில் இதை அபிவிருத்தி செய்ய அரசு ஆராய்ந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இதைப் பெரிய அளவில் ஆராய்வதற்காகவே ஏற்கெனவே I.C.A.R (Indian Council of Agricultural Research) என்ற நிறுவனமும் தமிழ்நாடு அரசும் கூட்டாகச் சேர்ந்து ஆராய்ச்சியை மேற்கொண்டன. இது 1961-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் இப்போது வேளாண்மை பல்கலைக் கழகம் தொடர்ந்து இந்த ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருக்கிறது. தனிப்பட்ட வேறு எந்தத் திட்டத்தின் மூலமாகவும் இல்லாமல் வேளாண்மைப் பல்கலைக் கழகம் மட்டுமே இந்த ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருப்பதன் காரணத்தால், இன்னும் புது வகைகள் எல்லாம் கிடைப்பதற்கு வழிவகைகள் இருக்கின்றன.

[1979 பிப்ரவரி 13

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** பழத்திற்குப் பெயர் தான் பனானா என்றாலும், வடிவத்தில் ஆப்பிள்தான் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். பழம் எங்கிருந்து வந்த பழமாக இருந்தாலும், அது பயிரிடப் படுகின்ற இடம் தமிழ்நாடாக இருப்பதால், பயிரிடப்படுகின்ற இடத்தின் பெயரைப் பெருமைப்படுத்துவதற்காக அந்தப் பழத்தின் பெயரைத் தமிழில் இட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்த ரகங்கள் எல்லாம் இன்னும் நன்றாக விஸ்தரிக்கப்பட்டு நல்ல பழங்கள் கிடைத்த பிறகு, தமிழ்நாட்டின் பெருமையைப் பறை சாற்றுகின்ற வகையில் தமிழ்நாட்டின் பெயரைத் தாங்கிச் செல்லும் வகையில் பெயரிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆப்பிள் ஊட்டியிலும் கொடைக்கானலிலும் பயிரிடப்படுகின்றது அல்லது பயிரிட முயற்சி எடுக்கப்படுகின்றது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அங்கே பண வசதியோடு வசிப்பவர்களுக்கு மட்டுமே இது உதவும் என்கின்ற காரணத்தால், இதை ஏற்காடு, ஏலகிரி, கல்ராயன் மலை போன்ற தமிழ்நாட்டிலுள்ள அத்தனை மலைப் பகுதிகளிலும் விஸ்தரித்து அதன் மூலம் வசதியற்றவர்களும் பயனடைவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### பேரறிஞர் அண்ணா பொறியியல் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு உறுப்பினர் தேர்தல் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பேரறிஞர் அண்ணா பொறியியல் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு ஓர் உறுப்பினர் மேலவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்காக கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| நியமனத் தாள்கள் வந்து சேர கடைசி நாளும், நேரமும். | 15—2—1979 மாலை 5 மணி. |



1979 பிப்ரவரி 13]

[மேலவைத் தலைவர்]

| | |
|---|---|
| நியமனத் தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும். | 15—2—1979 மாலை 6 மணி |
| நியமனத் தாள்களை திரும்பப் பெற கடைசி நாளும், நேரமும். | 16—2—1979 மாலை 5 மணி |

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் வாக்கெடுப்பு நடைபெறும். வாக்கெடுப்பிற்கான நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### (1) முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கருணாநிதி சென்ற ஊர்தி மீது உளி வீசப்பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் க. இராமமூர்த்தி, எம். சங்கரலிங்கம், ஆற்காடு நா. வீராசாமி, வே. தங்கபாண்டியன் ஆகியோர் பேரவை எதிர்க் கட்சித் தலைவரைத் தாக்கிய சம்பவம் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால், அந்த நிகழ்ச்சி அண்மையில் நடந்ததாக இருக்க வேண்டுமென்று மேலவை விதியில் சொல்லப்பட்டிருக் கிறது. இது கொஞ்ச காலத்திற்கு முன்னால் நடந்ததாக இருந்தாலும், இதன் முக்கியத்துவத்தை ஒட்டி இதை நான் எழுப்ப அனுமதிக்கிறேன். இது ஒத்தி வைப்புத் தீர்மான விதிகளுக்கு எப்படி உட்பட்டது என்பதைப்பற்றிச் சுருக்கமாக ஒவ்வொருவராக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த சம்பவத்தைப் பொறுத்தவரை, பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசியல் தலைவர்கள் மீது, பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் மீது, பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மீது இது போன்ற தாக்குதல் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருவதாக செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. இந்த நிலையில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களை அவருடைய சுற்றுப்பயணத்தின் போது தாக்க எத்தனித்தார்கள் என்ற செய்தியும் பத்திரிகைகள் மூலமாக பார்க்கிறோம். அரசியல் கட்சித் வந்துகொண்டிருக்கின்ற நிலைமையைப்

[திரு. க. இராமமூர்த்தி] [1979 பிப்ரவரி 13

(பிற்பகல் 5-00)

தலைவர்கள் அல்லது பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் ஆகியோரது பத்திரத்தையும் பாதுகாப்பையும் மிகுந்த கவனத்தோடு கண்காணிக்க வேண்டியது காவல் துறையினுடைய பொறுப்பாகும். அரசியல் கட்சித் தலைவர் ஒருவரின் சுற்றுப் பயணத்தின் துவக்கத்திலேயே இதுபோன்ற ஒரு நிலை இருப்பதை முன்னதாக காவல் துறையினுடைய ஒற்றுப் போலீசார் மூலம் அறிந்து கொள்ளவில்லை அல்லது அறிந்துகொள்ள இயலவில்லை என்றாலும்கூட, ஏற்பட்டுவிட்ட ஒரு சந்தர்ப்பத்தின் மூலமாக அந்த வாய்ப்பு ஏற்படும்போது, அடுத்த நாள் தொடர்ந்து இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது மிகுந்த வேதனையைத் தருகிறது. காவல் துறையினர் இதில் போதிய அளவுக்கு கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள் அல்லது அலட்சியமான ஒரு போக்கில் இருக்கிறார்கள் என்ற நியாயமான சந்தேகத்தையும் அச்சத்தையும் உருவாக்கியிருக்கிறது.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சம்பவத்தின் தொடர் பின்னணியாக காவல் துறையினுடைய கண்காணிப்புக் குறைவு அல்லது தகுதியான நடவடிக்கையை முறையாக எடுக்காத நிலையின் காரணமாக இதுபோன்ற சம்பவங்கள், தனித்தனிச் சம்பவங்களாகவோ அல்லது திட்டமிடாத வகையில் யாரோ ஒருவர் செய்தது என்ற முறையில் அமைந்தாலும்கூட, அதையொட்டி வெளிவருகிற செய்திகளும், அதனால் உண்டாகிற பரபரப்பும் பெரிய அளவில் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறவர்களிடையே மனக் கசப்பையும், அரசியல் கட்சிகளுக்குள்ளே ஒரு மோதலையும், சமுதாயத்தில் அமைதியின்மையையும் உருவாக்கும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை நல்ல சூழ்நிலையை உருவாக்கவில்லை என்பது மட்டுமல்ல, சட்ட ஒழுங்கு அடிப்படையிலும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்களின் பாதுகாப்பைக் கண்காணிக்கத் தவறுகிற முறையின் காரணமாக அதைத் தொடர்ந்து ஏற்படும் வாதங்கள், விளம்பரங்கள், பேச்சுக்கள் ஆகியவைகள் மூலமாக யாரை வேண்டுமானாலும் தாக்கலாம், அல்லது தாக்கிய பிறகு அரசியல் பின்னணியைக் காரணமாகக் காட்டி (தாக்குவதற்கு முன்னதாக அந்தப் பின்னணியில்லை என்றாலும்கூட) கடமை தவறுகிற அதிகாரிகள் அல்லது சம்பவத்தில் ஈடுபடுகிற குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர். ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால், என்னென்ன சொல்லலாமோ அதையெல்லாம் சொல்லி



1979 பிப்ரவரி 13] [மேலவைத் தலைவர்]

விட்டார்கள். ஆனால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டுமே கருத்துச் சொல்ல வேண்டும். நானும் இதுவரை அனுமதித்துவிட்டேன். மரபுக்கு மாறாக அனுமதித்திருக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அவசரப் பொது முக்கியத்துவத்தைப் பொறுத்த வரையில், அவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட வண்ணம் இது அவை கூடுவதற்கு முன்னதாக நடைபெற்ற நிகழ்ச்சி. இதைப்பற்றி ஆளுநர் உரையின்போது விவாதிக்கலாம் என்றாலும்கூட, இந்த நிகழ்ச்சியின் விளைவாக ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை, தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற நிலைமை, அரசியல் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற பாதுகாப்பற்ற நிலைமை இவற்றை நாம் உணர்ந்தாக வேண்டும். பரவலாக இன்றையதினம் அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்களுக்கும் பாதுகாப்பில்லை என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. அரசாங்கம் இந்த அச்சத்தை உணர வேண்டும். இந்த அச்சத்தோடு இனி வீதிகளிலே அரசியலில் ஈடுபட்டவர்கள், கடுமையான கருத்துக்களை கூறுபவர்கள் போக முடியாது, அதுவும் தனியாகப் போக முடியாது என்ற நிலைமை உருவாவது நல்லதல்ல என்பது மட்டுமல்ல, இது ஒரு நல்ல முன்மாதிரியாக அமையாது என்பதையும், சமுதாயத்தில் ஒரு கொந்தளிப்பை உருவாக்கிவிடும் என்பதையும், அதை எப்படியும் தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்தச் சூழ்நிலை காரணமாக நான் கொடுத்திருக்கிற தீர்மானம் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

* **திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம் நாட்டில் ஜனநாயகம் நிலைத்து நிற்கிறது என்று சொல்ல வேண்டுமென்றால் உண்மையில் எதிர்க் கட்சி சிறப்பாகச் செயல்படுவதற்கு ஆளும்கட்சி தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, வழிவகை செய்து கொடுக்க வேண்டியது மிக இன்றியமையாததாகும். எதிர்க் கட்சித் தலைவர் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போதும் அல்லது சுற்றுப் பயண நிகழ்ச்சிகளில் ஈடுபடும்போதும் திட்டமிட்டு அவரைத் தாக்குகிற நிலை ஏற்படுகிறது என்றால், நாட்டில் சட்ட ஒழுங்கு குலைவது மட்டுமல்லாமல், திட்டமிட்டு ஜனநாயகம் குலைக்கப்படுகிறது என்பதுதான் அதனுடைய பொருளாகும். எனவே இது ஒரு மிகப் பெரிய பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகும். அண்மையில் இரண்டு சம்பவங்கள் தமிழகத்தில் நடைபெற்றிருக்கின்றன. தமிழகத்தின் முக்கிய எதிர்க் கட்சித் தலைவரான டாக்டர் கலைஞர்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 பிப்ரவரி 13

அவர்கள் கழிந்த மாதம்—மிக அண்மையில்—ஜனவரி மாதம் 31 ஆம் தேதி
திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின்போது
உளியால் தாக்கப்பட்டார்கள் என்ற செய்தி எல்லோரும் அறிந்ததாகும்.
தாக்கப்பட்ட வேன் கூட படம் எடுக்கப்பட்டு பத்திரிகைகளில் வெளியிடப்
பட்டது. அந்த வேனில் அவர் எப்போதும் இடது பக்கத்திலேதான்
அமருவார்கள். வலது பக்கத்திலே டிரைவர் இருப்பார் என்பது
அனைவருக்கும் தெரியும். இடது பக்கத்திலே வீசப்பட்ட அந்த உளி முன்
கண்ணாடி வழியாகச் சென்று அவருடைய தலைக்குப் பின்னால், பின்புறமாக
வெளிவந்திருக்கிறது. இதையெல்லாம் நாம் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்
கிறோம். மிகப் பெரிய கூட்டம், பகல் 12 மணி அளவிலே நடக்கிறது.
அப்போது அவரைத் திட்டமிட்டுத் தாக்குகிற செயல் நடைபெறுகிறது.
31 ஆம் தேதி இது நடந்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து ஒருவர் கைது
செய்யப்பட்டிருக்கிறார். அதைப்பற்றி விசாரணை நடக்கிறது என்று செய்தி
கேள்விப்படுகிறபோதும், வருகிற செய்திகள் மிகவும் சந்தேகத்திற்கு
உரியனவாக இருக்கின்றன ; உண்மையான விசாரணையாக அது இல்லாமல்,
மாற்று நிலைமைகளை உருவாக்கக்கூடிய விசாரணையாக இருக்கிறது என்று
கேள்விப்படுகிறோம். அடுத்து, பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதி, 10 ஆம்
தேதிகளில் தென்னாற்காடு மாவட்டத்திலே சுற்றுப் பயணத்தை
மேற்கொள்கிறார். சிதம்பரத்தை அடுத்த ஸ்ரீமுஷ்ணத்திலே ஒரு கூட்டத்திற்காக
வருகிறார். அந்தச் சுற்றுப்பயணம் பற்றிய விவரம் பத்திரிகைகளிலே
வந்திருக்கிறது. அந்தக் கூட்டம் வெகுவாக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது
இது அரசுக்கும் தெரிகிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்
எல்லாக் கட்சித் தலைவர்களும் தங்களின் அரசியல் நிகழ்ச்சிகளை செவ்வனே
நடத்திக்கொள்வதற்கு வாய்ப்பும் வசதியும் செய்து தர வேண்டியது
அரசாங்கத்தினுடைய பொறுப்பாகும். அவர்களுடைய பாதுகாப்பிற்கு உறுதி
செய்வதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். சிதம்பரம் அருகில் கூட்டத்திற்கு
8 மணி அளவில் கலைஞர் அவர்கள் வருகிறார்கள். அப்போது சுமார் 50, 60
பேர் அவரைச் சுற்றி நின்றுகொண்டு தாக்க முற்படுகிறார்கள். அவர்கள்
கையிலே ஆயுதம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் போலீசார்
பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்
கிறார்கள். இப்படித் தொடர்ந்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் திட்டமிட்ட
வகையிலே தாக்கப்படுகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சம்பவத்தைப்பற்றியெல்லாம் சொல்லி
விட்டீர்கள், குற்றச்சாட்டுகளைச் சொல்லிவிட்டீர்கள், எல்லா விஷயத்தையும்
சொல்லிவிட்டீர்கள். ஆனால் இது எப்படி பொதுமுக்கியத்துவம் வாய்ந்த
அவசர நிகழ்ச்சி என்பதைப்பற்றிச் சொல்ல வேண்டும்.



1979 பிப்ரவரி 13]

**திரு. ம. சங்கரலிங்கம் :** இதில் நாம் பார்க்க வேண்டியது என்ன
வென்றால் இதன் பின்னணி என்ன? அரசு தருகிற சமாதானம், கருத்து
என்ன? நாங்கள் என்ன கருதுகிறோம்? பிற கட்சித் தலைவர்கள் என்ன
கருதுகிறார்கள்? இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சட்டமன்றத்தில்
விவாதித்தால்தான் உண்மையிலேயே நாங்கள் சொல்லுவதில் தவறு
இருக்கிறதா என்பதை பொது மக்கள் உணர முடியும். தவறு இருக்குமானால்,
அதைப் பற்றிய விளக்கம் தர முடியும். நாங்கள் சொல்லுகிற சந்தேகம்
உண்மையாக இருக்குமானால், அதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்,
அவர்களைக் கண்டுபிடிக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் என்ன, அவர்கள்
மீது என்ன நடவடிக்கையை அரசு மேற்கொண்டது என்று அறிய இயலும்.
இந்த விஷயங்களையெல்லாம் பொதுமக்கள் அறிந்துகொள்ள, தெரிந்து
கொள்ள இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப்பற்றி விவாதிப்பது மிகவும்
முக்கியமானது, அத்தியாவசியமானது. இதைவிட வேறு ஒரு பொது
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஜனநாயக நாட்டில் இருக்க முடியாது.
எதிர்க் கட்சிக்கு வருகிற ஆபத்துதான் ஜனநாயக நாட்டில் ஏற்படும் மிகப்
பெரிய ஆபத்தாகும். எனவே இந்தப் பொருளைக் குறித்து விவாதிப்பதற்கு
அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதைப்பற்றி ஒரு
விரிவான விவாதம் நடத்த அரசு இசைய வேண்டும் தலைவர் அவர்களும்
அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,
திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராகவும், சட்டமன்றப்
பேரவையின் எதிர்க் கட்சித் தலைவராகவும் இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர்
அவர்களை, சமீப காலமாகத் தொடர்ந்து இன்றைய * *

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மேலவைத் தலைவர்
அவர்களே, இது முறையா என்பதைப்பற்றி உங்களுடைய தீர்ப்பை எதிர்
பார்க்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * என்ற வாசகம் அவையின்
குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் ஆதாரத்தோடு சொல்லுகிறேன்.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1979 பிப்ரவரி 13

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒத்தி வைப்புத் தீர்மானம் எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றிச் சொல்லுங்கள். விவாதத்திற்கு அனுமதி தந்தால்தான், விவரத்தைச் சொல்லலாம். ஆகவே எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், சுற்றுப்பயணம் செய்கிற நேரத்தில், குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில், இராதாபுரம் பகுதியில் 31—1—1979 அன்று காலை அவர் காரில் எந்தப் பகுதியிலே உட்கார்ந்து இருக்கிறார் என்பதையும், அந்தப் பகுதியிலே அவர் சுற்றுப்பயணம் செய்த நிகழ்ச்சியையும் வைத்துக் கொண்டு. எந்த இடத்திலேயிருந்து உளியை வீசினால் அது அவரைத் தொடும், அவர் மீது பாயும் என்பதை பயிற்சி எடுத்தவன் செய்தது போல் அந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. மற்றவர்கள் மனதைப் புண்படுத்த வேண்டும் என்பதற்காக நான் இதைக் குறிப்பிடவில்லை. அவர் சென்ற வேன் அப்படியே இருக்கிறது. போலீஸ் துறையினர் கூட புகைப்படம் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். வேண்டுமானால் தலைவர் அவர்களே வேனைப் பார்த்து, முதலமைச்சர் அவர்களே கூட வேனைப் பார்த்து, அதில் எந்த அளவுக்கு வேகமாக வீசப்பட்டிருந்தால் அந்த உளி . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் தப்பாகப் பேச வேண்டாம். மரபைக் கடைப்பிடிக்க வேண்டும். அவசரப் பொது முக்கியத்துவம் பற்றி மட்டும் சொல்ல வேண்டும். விஷயம் பழையதாக இருந்தாலும், விஷயத்தின் முக்கியத்துவத்தைப் பார்த்து அதற்கு மதிப்புக் கொடுத்து அதைப்பற்றிச் பேச அனுமதித்திருக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** சம்பவங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சம்பவங்களைச் சொல்வதாக இருந்தால், அது தீர்மானத்தின் மீது நடைபெறுகிற விவாதமாக அமைந்துவிடும். ஆகவே அவசரப் பொது முக்கியத்துவத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தமிழ் நாட்டில் இன்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறவர்கள் அனைத்துக் கட்சிப் போராட்டம் நடத்துவதாக இருந்தால், அவர்களுடைய வீடு தாக்கப்படுவதும் அவர்கள் சுற்றுப்பயணம் செய்கிற நேரத்தில் உளி வீசி அவர்களைக் கொலை செய்ய முயற்சிப்பதும், பொதுக் கூட்டத்திலே கலந்துகொண்டு பேசுகிற நேரத்தில் . . .



1979 பிப்ரவரி 13] (பிற்பகல் 5-10)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்படியே தொடர்ந்து பேசினால் உங்களுடைய பேச்சை குறிப்பேட்டிலிருந்து நீக்க வேண்டி வரும். மேற்கொண்டு சம்பவங்களைப்பற்றிப் பேசக் கூடாது. தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்தால்தான், சம்பவங்களைப்பற்றிச் சொல்லலாம். உறுப்பினர் அவர்களுக்கு மரபு தெரியும். அவசர பொது முக்கியத்துவத்தைப்பற்றி மட்டும் பேச வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** விவாதத்திற்குள்ளே செல்லவில்லை. கோபப்படாதீர்கள். பத்தாம் தேதி தென்னாற்காடு மாவட்டத்திலே சுற்றுப் பயணம் சென்றபோது, அவர் பெரிய கூட்டத்தை நோக்கி 50 பேர் கூடி பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு தாக்க வருகிறார்கள் என்றால் இது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதுகிறீர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இதோடு முடித்துக்கொள்ளச் சொல்லுகிறீர்களா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதை விட என்ன சொல்ல முடியும் ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து இருக்கின்றன. நிலைமைகளை விளக்குவதற்காக நீங்கள் கொடுத்திருக்கிற அனுமதியைப் பயன்படுத்தி சொல்லிவிடுகிறேன். ஏனென்றால் இன்றைய தினம் ஆளும் கட்சியிலே இருக்கிற முதலமைச்சர் இப்படிப்பட்ட சம்பவங்களை பத்திரிகையிலே பார்த்தால் வருத்தமாவது தெரிவித்திருக்க வேண்டாமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பத் திரும்ப அப்படியே பேசுகிறீர்கள். நானும் கொஞ்சம் சுமாராகப் பேசுகிறவன்தான். எனக்கும் தெரியும். (சிரிப்பு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** எனக்குப் பேசத் தெரியாமல் இருக்கலாம். நீங்கள் எங்களுடைய அதைத் தாங்கள் திருத்துவதில் ஆட்சேபணையில்லை. உணர்வுகளை மதிப்பீர்கள் என்ற நம்பிக்கையில்தான் சொல்லுகிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதைவிட சலுகைகளை எதிர்க் கட்சிக்குக் காட்டத் தேவையில்லை. மரபை மீறி சலுகைகளைக் காட்டியிருக்கிறேன்.

[1979 பிப்ரவரி 13

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மரபை மீறிச் சலுகைகள் எனக்குத் தேவையில்லை. சலுகைகள் நான் எதிர்பார்க்கமாட்டேன். இப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையைவிட வேறு ஒரு பிரச்சினையை அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதவில்லை. ஆகவே இதை உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, அண்மையிலே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்கள் மீது திட்டமிட்டு கொலை செய்ய முயற்சி நடைபெற்றிருக்கிறது என்ற செய்தி தமிழ் நாட்டின் அரசியலில் ஒரு பரபரப்பை உருவாக்கியிருக்கிறது. இந்தச் செய்தி விவாதிக்கக் கூடிய அளவுக்கு மிகப் பெரிய பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்லுவதற்குக் காரணம் இதுதான். இதைத் தொடர்ந்து நாட்டிலே அமளி, துமளி ஏற்படலாம். அதனால் ஆளும் கட்சிக்காரர்களுக்குப் பாதகம் ஏற்படலாம். ஆகவே ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகளுக்கிடையே கொந்தளிப்பு உருவாகும் நிலைமை வரலாம். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படக் கூடாது என்ற உணர்வு ஆளும் கட்சிக்கும், மாண்புமிகு முதலமைச்சருக்கும் இருக்கும் என்ற உணர்வோடுதான் இதைப்பற்றி ஒத்தி வைத்துப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படிப் பேசினால் அதனுடைய உண்மைகள் தெரிய வரும். இன்னும் ஒத்தி வைத்துப் பேச வேண்டும் என்று சொல்லுவது இதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட வேண்டும் என்பதற்காகத்தான். ஏனென்றால் இந்த வழக்கு சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதற்கான தடையங்கள், சாட்சியங்கள் அழிக்கப் படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாற்றப்படுகிறார்கள். நெல்லை மாவட்டத்தில் இந்தமாதிரி நிகழ்ச்சிகள் மீண்டும் தொடராமல் இருப்பதற்கு இதை உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி விவாதத்திற்கு எடுத்துக்கொண்டால், பல்வேறு விவரங்கள் அரசுக்குத் தெரியும், எங்களுக்கும் தெரியும், நாட்டு மக்களுக்கும் இந்த அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் நேர்மையாக நடந்துகொண்டிருக்கிறது என்ற உண்மை நிலையும் ஜனநாயகத்தைக் காப்பாற்ற நமது முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்ற விவரமும் கிடைக்கும். இந்த முக்கிய காரணங்களைக் கருதி மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



1979 பிப்ரவரி 13]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையினுடைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள், நெல்லை மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்த போது, உளி வீசி, அவரைத் தாக்க முயற்சித்ததாகச் சொல்லப்படுகிற விஷயத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் பொறுப்பான ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுக்கும் போது, "உளி வீசி தாக்க முயற்சி செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிற" என்று கூறி அரசாங்கத்திற்கு எதிர்க் கட்சியினர் ஒரு தவறான தகவலைத் தெரிவித்தது போலவும் அவையின் முன்னவர் அவர்கள் பேசுவது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'சொல்லப்படுகிற' என்று சொன்னது சட்டரீதியான பாதுகாப்புக்காக சொன்ன வார்த்தையே தவிர வேறு ஒன்றுமல்ல. அவையின் முன்னவர் ஒரு வழக்கறிஞர். ஆகவே பாதுகாப்பாக அந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மேலவைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் தம்முடைய கருத்தை எடுத்துக்கூறும்போது, உண்மை நிலை என்னவென்று முடிவு தெரியாத நிலையில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது என்று கூறுவதுதான் மரபே தவிர, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய வேதனையை வெளியிடும்போது, இதை எந்த அளவுக்கு அவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்களோ அதற்கேற்ப வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் முறையே. ஆனால் ஆட்சியிலே இருக்கிறவர்கள் தங்களுக்கு உண்மை நிலை முழுவதும் கிடைப்பதற்கு முன், வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டிய நிலையில் இருக்கும்போது, வழக்கு மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இருக்கும்போது, 'கொலை செய்ய முயற்சி' என்ற முடிவுக்கு அரசு வந்து ஒரு கருத்தை வெளியிடுமானால், அது நடுநிலை என்று சொல்ல முடியாது என்பதை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளுமென்று எதிர்பார்க்கிறேன்.

அந்த வகையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனே அனுதாபம் தெரிவிக்க வேண்டும், அல்லது இது எப்படி நடக்கக் கூடாது என்று சொல்லுவதை விட என்ன நடந்தது என்பதை அறிவதற்கும், யார் இந்த முயற்சியில் ஈடுபட்டார்கள், இந்த முயற்சியில் ஈடுபட்டதற்கு என்ன காரணம் என்பதை அறியவும், பிறர் சொல்லுவதைப் போல ஒருவேளை பின்னணி ஏதாவது இருக்கிறதா என்பதை அறியவும்,

அதைவிட இந்த முயற்சியில் ஈடுபட்டவன் எந்த நோக்கத்திலே ஈடுபட்டான் என்று கண்டுபிடிக்கவும் அதிகாரிகள் முயற்சி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தோடு, அக்கறையோடு நாங்கள் உத்தரவிட்டுக்கொண்டிருக்கிற வேளையில் மீண்டும் ஒரு முறை கலகம் விளைவிக்கக்கூடிய சூழ்நிலை வந்ததாக பத்திரிகையில் செய்தி வந்தவுடனே நான் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களைத் தொலைபேசியில் கூப்பிட்டுக் கேட்காமல் அதிகாரிகளுக்கு உடனடியாக உத்தரவிட்டு செக்யூரிடி என்ற பொறுப்புணர்வுள்ள அதிகாரியை அனுப்பி வைத்தேன் என்பது இங்கே எதிர்க் கட்சியிலே உள்ள நண்பர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

ஆனால் மாண்புமிகு கலைஞர் அவர்கள் அதை வேண்டாம் என்று சொல்லி விட்டு குறிப்பாக அவர்கள் 'எங்கள் கட்சிக்காரர்களைக் கலந்து கொண்டு தான் நாங்கள் பதில் சொல்ல வேண்டும், ஆகவே அவர்களைத் திருப்பி யனுப்புகிறேன்' என்று சொல்லி திருப்பியனுப்பியிருக்கிறார்கள். பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்லும்போது, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தை பதிவேட்டில் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். இந்த நிகழ்ச்சியின் காரணமாக வெளியே பரபரப்பு ஏற்படுவதும், ஆத்திரம் ஏற்படுவதும், ஒருவேளை மற்ற கட்சிகளுக்கு—அதுவும் ஆளும் கட்சி என்று குறிப்பிட்டார்கள் என்று நினைவு—இப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்படக்கூடிய ஆபத்தான சூழ்நிலை வந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது என்று சொல்லும்போது, படிக்கின்ற சாதாரண மக்களிடையே இப்படியும் நாம் செய்ய வேண்டுமோ என்ற எண்ணத்தைத் தூண்டிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். அந்த வகையில்தான் நான் எச்சரிக்கையாக இருக்கிறேன்; என்னைப் பொறுத்த வரையில். என்னைப் பொறுத்தவரையில் என்று சொல்லுவதைவிட எங்களைப் பொறுத்தவரையில், இந்த அரசைப் பொறுத்தவரையில், யாருக்கு எப்படிப்பட்ட ஆபத்து ஏற்படுவதாக இருந்தாலும், எங்களுக்கு ஏற்படுவதாக மட்டுமல்ல, இந்த நாட்டினுடைய பண்பாட்டிற்கே ஏற்படும் மாபெரும் பாதகம் என்று நாங்கள் நம்புகிறோம். அந்த வகையிலே நாங்கள் எச்சரிக்கையோடு வெகு விரைவாக இந்த வழக்கு சம்பந்தமாக குற்றவாளியைக் கண்டுபிடித்து, குற்றம் சாட்டப் பட்டிருப்பவன் குற்றவாளி என்றால், அவனுக்கு தக்க தண்டனையைக் கொடுக்கக்கூடிய வகையில் ஆதாரங்களை வழக்கு மன்றத்தில் கொண்டுவந்து அதை நிரூபிக்கக்கூடிய வகையில் இந்த அரசு அக்கறை காட்டி வருகிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதைப்பற்றி இந்த நேரத்தில் இந்தச் சபையில் பொது விவாதம் என்ற வகையில் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி



வைத்துப் பேசுவதின் மூலம் நாட்டிலே எது வெளியிடப்படக்கூடாதோ, எது நாட்டில் உண்மையான அமைதியை மாற்றி ஒரு தொல்லையை ஏற்படுத்த உதவி செய்யுமோ, அப்படிப்பட்ட நிலையை உண்டாக்குவதற்கு, அது உதவும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-20)

மேலும் ஆளுநர் உரையின் மீது, நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடை பெற இருக்கிறது. அது போன்று வேறு பிரச்சினைகள் சட்ட மன்றத்திலே வந்திருக்கின்றன. அவைகளுக்கு நான் பதில் சொல்ல அவசியமிருப்பதாலும், ஆதாரத்தோடு பல்வேறு வகைகளில் நிரூபிக்கத் தயாராக இருப்பதாலும், இந்த மாமன்றத்தின் முக்கியமான இன்னும் பல நிகழ்ச்சிகளை நடத்த விடாமல் தள்ளி வைத்து, அந்த நேரத்தை இதற்குப் பயன்படுத்தக் கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன். நான் மேலவைத் தலைவரவர்களின் மூலமாக இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் தமிழக அரசு வன்முறையை நிச்சயமாக ஆதரிக்காது என்பதைப் பலமுறை சொல்லியிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக விடுதலை செய்வது என்ற பிரச்சினை வந்த போது கூட, வன்முறையில் ஈடுபட்டவர்களை விடுதலை செய்ய மாட்டோம் என்று சொல்லி, அதைக் கடைப்பிடித்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் பரபரப்பாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் இருந்தாலும்கூட, அந்தப் பரபரப்பை மேலும் அதிகமாக்குவதற்குத்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலமாகப் பேசும் கருத்துக்கள் இருக்கும் என்பதால், அந்த நிலைக்கு எதிர்க் கட்சி நண்பர்கள் வற்புறுத்தக் கூடாதென்று தெரிவித்துக்கொள்கிறேன். வழக்குகள் உண்மையிலே சரிவ நடக்கும். எந்த ஒரு சார்போடும் வழக்குகளை நடத்தாமல், ஒழுங்கா நடக்குமென்றும், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள், அதற்கு இந்த அ உதவுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இதை இந்த மாமன்றம் ந மென்ற நம்பிக்கையோடு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைத் திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டுமென்று மேலவைத் தலைவரவர்களின் மூலமா கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அவசரப் பொது முக்கியத்துவம் என்பதில் பல பிரச்சினைக இருக்கின்றன. இதை உடனடியாக முடிவு செய்யாவிட்டால், மே முடிவெடுக்காவிட்டால் நாளைய தினம் அல்லது சில மணி நேரங்களில் மி பெரிய கொந்தளிப்பு அல்லது தவிர்க்க முடியாத நிலைமை நாட்டிலே ஏற்ப

விடுமென்றால்தான், இதைப் போன்ற நடைமுறையைக் கையாள வேண்டும். இப்போது அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை. இந்த நிகழ்ச்சி நடந்து, பத்திரிகைகளில் பேசப்பட்டு, அவரவர்கள் தங்களுக்கு எப்படிச் செய்தி கிடைக்கின்றதோ அவைகளையெல்லாம் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்களென்ற பிறகும் இன்னமும் அமைதியாக நாடு இருக்கிறது என்பதால், இதைப் பற்றி நாம் மேலும் குழப்ப வேண்டாமென்று பணிவோடு சொல்லி, இந்த அளவில் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லாததால் அனுமதி மறுக்கிறேன்.

## (2) பாராளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் கொலை செய்யப்பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திரு. முருகையனின் கொலை குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வரவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் என்பதற்கு நல்ல விளக்கத்தை சூசகமாக அளித்தார்கள். அதை கவனத்தில் வைத்துக் கொண்டு, விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் என்பதில் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன அவர்களுடைய கொலையை ஒட்டி புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் புலன் விசாரணை பற்றிய தகவல்களை, அபிப்பிராயங்களைச் செய்தியாக மக்களுக்குத் தருகின்ற நிலையை, காவல் துறை அதிகாரிகள் எடுத்திருக்கிறார்கள். இந்தப் புலன் விசாரணையும், அது தொடர்பான வழக்கும் முறையாக நடைபெறுமா என்ற அச்சமும், சந்தேகமும் மிக்க ஆழமாகப் பதிந்திருக்கிறது. அதுமட்டுமல்ல. இந்தப் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள்மீதே அவநம்பிக்கை உருவாகியிருக்கிறது. மற்றவைகளையெல்லாம் ஒதுக்கித்



தள்ளினாலும், இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்பட்டுள்ள இந்த நிலை தடுத்து நிறுத்தப்படவில்லை என்றால், பொதுமக்கள் மத்தியிலே எந்த ஒரு வன்முறைச் சம்பவம் நடைபெற்றாலும் * * இந்தச் சம்பவம் நடைபெற்ற பிறகு மாண்புமிகு சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைத் தாக்கிய சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இது போன்ற அதிகாரி களுடைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தாததால், தங்களைத் தடுக்க மாட்டார்களென்ற தைரியமும், துணிச்சலும் அவர்களுக்கு ஏற்பட்டு, பல பகுதிகளில் அவர்கள் 'லெதார்ஜிக்'-ஆக செயல்படுகிறார்கள். அதாவது சுறுசுறுப்பு இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை சம்பந்தப்பட்ட துறையில் பலவீனம் ஏற்படவும், அந்த அதிகாரிகள்மீது அவநம்பிக்கை ஏற்படவும் வழி வகுக்கிறது. இது உடனடியாகத் தவிர்க்கப்பட வேண்டிய நிகழ்ச்சி என்பதால், இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து, இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மேலவைத் தலைவரவர்களே, மறைந்த திரு. முருகையன் அவர்களுடைய கொலையைப்பற்றி அதிகாரிகள் அவ்வப்போது வெளியிடுகிற கருத்துக்கள், அறிக்கைகள், விளக்கங்களைப் பார்க்கும்போது இந்த வழக்கு சரிவர, ஒழுங்காக விசாரணை செய்யப்படுமா, உண்மையான குற்றவாளி தண்டிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுமா என்ற சந்தேகம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களின் மனதில் உள்ளது என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கொலை நடந்துவிட்ட நிலையில், இது கொலையா, மரணமா என்ற கேள்வி எழுந்து, இது கொலைதான் என்பதை நிச்சயப்படுத்தும் வகையில், அந்தத் தகவலை வெளியிடுவது காவல் துறையின் நேர்மைக்கு எடுத்துக்காட்டு என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. கொலையாளி என்று சந்தேகப் படுகிற ஒருவரைக் கைது செய்திருக்கிறார்கள் என்பதும், வழக்கு மன்றத்திற்கு அந்த வழக்கு போகக்கூடிய நிலைமையை உருவாக்கிவிட்டார்களென்பதையும் எண்ணிப் பார்க்கும்போது, அவர்கள் அலட்சியமாக இல்லை என்பது விளங்கும். ஏதோ நடந்துவிட்டது, பார்த்துக்கொள்வோம் என்றோ அல்லது யாரும் கேட்பாரில்லை, அது எப்படியோ நடந்துகொண்டு போகட்டும் என்று காமதப்படுத்தும் எண்ணமோ அதிகாரிக்கு இல்லை என்பது தெளிவாகிறது. குறிப்பாக தமிழகத்தில் இது போன்ற பிரச்சினைகள் நம் முன் வரும்போது, ஒரு கட்சியைச் சேர்ந்த தலைவர் அல்லது நண்பர்கள் அல்லது பொது

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மக்கள் அல்லது விவரம் தெரிந்த பிரமுகர்கள் இதைப்பற்றி அறிக்கை வெளியிடுவது, அதை மக்கள் படிப்பது என்ற நிலைமை ஏற்படும்போது, அதிகாரிகளுக்குத் தெரியும் உண்மையை வெளியிடும் கட்டாயம் ஏற்படுகிறது. வழக்கு மன்றத்திற்குப் போக முடியாமல் அல்லது குற்றம் செய்திருப்பவன் கண்டிக்கப்படாமல் போனால் இப்படிப்பட்ட நிலைமை என்று கேட்க யாருக்கும் உரிமையுண்டு. அதிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள உறுப்பினர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பும், உரிமையும், கடமையும் இருக்கிறது. அதை எல்லோரும் நம்புகிறோம், ஏற்றுக்கொள்கிறோம்.

பத்திரிகைகளில் எப்படி கொலை செய்யப்பட்டார் என்பது வந்தது. ஒருவர் கொன்றாரா அல்லது 10, 15 பேர்கள் சேர்ந்து கொன்றார்களா என்றெல்லாம் பகிரங்கமாக மேடைகளில் விவாதிக்கப்பட்டது. இந்த நிலைமையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களுக்குக் கிடைத்த உண்மையை ஊரறிந்துச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப் படுகிறார்கள். இந்த நிலைமைகள் குறைந்தால், அவர்கள் பதில் சொல்லாமல் இருக்கும் நிலைமைகள் ஏற்படும். இப்படி பதில் சொல்லுவது இன்று மட்டும் நடைபெறுவதல்ல. தொன்றுதொட்டு பல ஆண்டுகளாக, பல அதிகாரிகள் இது போன்ற சம்பவங்களில் தங்கள் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். முன்பு இருந்தவர்கள் ஆட்சியிலே,

(பிற்பகல் 5-30)

4, 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு அம்மையாருடைய கொலை நடந்துவிட்டது என்று செய்தி பத்திரிகையிலே வெளியிடப்பட்டது. பிறகு சில நாட்கள் கழித்து, அதிகாரிகள் அது கொலை அல்ல, அது மரணம் என்று சொன்னார்கள் என்பதையும் நான் இங்கே இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் என் எதிரில் நின்றவை அவைகளைப்பற்றிக் கேட்கவும் இல்லை. கண்டிக்கவும் இல்லை. என்ன சொல்கின்றார்களோ அதையே நிரூபிக்க முயலுகின்றார்கள். அந்த அளவுக்கு தான் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அப்படி அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்கத் தவறுவார்களானால், அவர்கள் எப்படிப்பட்ட அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை இந்த அரசு எடுக்கும் என்று அரசின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன். திரு. முருகையன் மறைந்தபோது, அந்த இடத்தில் அனுதாபத்தோடு கூட்டத்தில் பேசிய வார்த்தைகளை நான் திரும்பச் சொல்கின்றேன். அதிகாரிகள் இந்தப் பிரச்சினையில் தவறு செய்வார்களானால், ஒழுங்காகக் கண்டுபிடிக்காது போனால், நிச்சயமாக இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். எப்படிப்பட்ட அதிகாரியாக இருந்தாலும் சரி, தக்க நடவடிக்கை



எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வார்த்தைகளை நான் மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே இந்தப் பிரச்சினை காரணமாக இந்த பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை, உண்மையாகக் கொலை செய்தவன் யார் என்பதைக் கண்டு பிடிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எழுந்தார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதாக இருந்தால்தான், விளக்கம் கேட்கலாம். இப்போது நான் பொருளை விவாதத்திற்கே விடுவதா இல்லையா என்பது பிரச்சினையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * *

**திரு. க. இராமமூர்த்தி :** * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * *

**திரு. க. இராமமூர்த்தி :** * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * *

**திரு. க. இராமமூர்த்தி :** * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * *

**திரு. க. இராமமூர்த்தி :** * *

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * *

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பின் அவையை இந்தப் பிரச்சினைக்காக ஒத்தி வைக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை என்பதால், நான் என் அனுமதியை மறுக்கிறேன்.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்பைப்பற்றி நான் இங்கே சொல்லவில்லை. அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு வார்த்தையைத் தவறாகச் சொல்லியிருக்கிறார்கள்.

(திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** தீர்ப்பு கொடுத்து முடிந்துவிட்டது. உறுப்பினர் அவர்கள் உட்காரவேண்டும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவர் அவர்களே, திரு. க. இராமமூர்த்தி அவர்கள் ஒரு வார்த்தையைத் தவறாக சொல்கின்றார்கள். அது பத்திரிகையிலேயும் தவறாக வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். * * அவர் சொல்லிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்கவேண்டுமா என்பது பற்றி தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதை எடுத்து விடுவதிலே அவருக்கும் ஒன்றும் நஷ்டமில்லை. அதை எடுத்துவிடலாம். அதிலே ஒன்றும் பிரமாதமாக இல்லை. அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம்

**திரு. க. இராமமூர்த்தி:** * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** * *

## (3) திரு. நல்லசிவன் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான், அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்போது 11 ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு முன்பு 17 ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது:** * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அது அப்படியே நீக்கப்படுகிறது. பத்திரிகைகளுக்கும் அப்படியே சொல்லிக்கொள்கிறேன்.

---

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



அடுத்து திரு. நல்லசிவன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் கொடுத்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானம் ஒன்றுகூட அவசர முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. அவர்களுக்கு உதவியாகச் சொல்கிறேன். இன்னும் 2 மாத காலம் அவை நடக்கப்போகிறது. அவைகளை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்தால், அவைகளுக்கு அமைச்சர் அவர்களே நேரடியாக பதில் கொடுப்பார்கள். அது உறுப்பினர் அவர்களுக்கும் பயன் கொடுப்பதாக இருக்கும் என்று சொல்லி, அந்த 11 தீர்மானங்களையும் நிராகரிக்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவர் அவர்களே, நான் மொத்தம் 13 ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். நீங்கள் 11 என்று சொல்கின்றீர்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அந்த இரண்டு தீர்மானங்கள் சேராததற்காக வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** உண்ணாவிரதம் பற்றியும் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். தலைவர் அவர்களே, அதை பற்றிச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அது பற்றித் தகவல் இப்போது வந்திருக்கிறது. 11 தான் கிடைத்தது இரண்டு இன்றைக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி இரண்டு நாளில் சொல்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, பச்சையப்பன் கல்லூரியில் தகராறுபற்றி நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அதைப்பற்றிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நாளைக்கு அதைப்பற்றி எடுத்துச் சொல்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

**இராமநாதபுரம் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் கட்டாய கருத்தடைக்கு நபர்கள் கொண்டு வர வேண்டுமென்று வற்புறுத்தப்படுவது குறித்து.**

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 பிப்ரவரி 13

"இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அனைவரும் கட்டாய கருத்தடைக்கு நபர்கள் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலவரம் குறித்து".

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ள ஆட்களைக் கொண்டுவருமாறு ஆசிரியர்கள் யாரும் வற்புறுத்தப்படவில்லை என்றும், சில ஆசிரியர்கள் தாங்களாகவே முன்வந்து குடும்பநல சிகிச்சைக்கு உதவி செய்கிறார்கள் என்றும் மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் கூறியுள்ளார். மேலும் இதில் எந்தவிதமான கட்டாயமோ வற்புறுத்தலோ இருக்கக்கூடாது என்று தெளிவாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். கருத்தடைக்கு நபர்களைக் கொண்டுவரவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்பதாக இதுவரை அரசுக்கு எந்தவிதமான புகாரும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, என்னுடைய இரண்டொரு சந்தேகங்களை கேள்வி மூலம் கேட்க விரும்புகிறேன். முகவை மாவட்டத்தில் காரியாப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நேரடியாக உத்தரவு போடாவிட்டாலும் கூட, இன்றைக்கு காரியாப்பட்டி, அருப்புக்கோட்டை தொகுதிகளிலுள்ள, ஆரம்ப சுகாதார நிலையங்களில் 350 ஆசிரியர்களுக்கு, ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு கேஸ் என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 300 பேர்களைக் கருத்தடைக்குக் கொண்டு வந்ததாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மறைமுகமாக ஆசிரியர்கள் கருத்தடைக்கு நபர் கொண்டுவருவதில் ஈடுபடுத்தப் படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? கடந்த ஒரு மாத காலமாக அவர்களுக்கு பர்மிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது அங்குள்ள அட்டென்டன்ஸ் ரிஜிஸ்டர்களில் இருக்கிறது. பல ஆசிரியர்களுக்கு பர்மிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த இடங்களிலே ஆசிரியர்கள் பலர் கையொப்பம் இட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

(மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கைகளில் அமர்ந்து கொண்டு **பேசிக் கொண்டிருந்தார்கள்**).



1979 பிப்ரவரி 13]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். அவையில் அமைதி நிலவ வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** சில ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தாங்களாகவே முன் வந்து தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி தங்களுடைய ஒத்துழைப்பைத் தருகிறார்கள் என்ற தகவலை மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தந்திருக்கிறார்கள். நாட்டுக்கு ஏற்ற திட்டம் என்பதாலும், நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்கள் ஆசிரியர்கள் என்ற காரணத்தினாலும், அவர்களாகவே முன் வந்து தங்களுடைய ஒத்துழைப்பைத் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பெயர்களைத்தான் சேர்த்திருக்கிறார்கள். அவர்களை வற்புறுத்தியதாகவோ, அச்சுறுத்தியதாகவோ இதுவரை எந்தவிதத் தகவலும் வரவில்லை. அப்படி ஏதாவது தகவல் இருந்தால், அதுபற்றித் தெரிவித்தால், விசாரித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 5. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் நேற்றைய தினம் முன் மொழிந்த தீர்மானத்தை ஒட்டி, ஆளுநர் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதிலே நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நேற்றையதினம் டாக்டர் ஹண்டே அவர்கள் பெரிய முயற்சி எடுத்துக்கொண்டு அரசாங்கத்தின் சாதனைகளை விளக்குவதில் தன்னுடைய வாக்கு சாதுர்யத்தை வெகு அழகாகப் பயன்படுத்தினார்கள். நல்ல எண்ணத்தில் தான் அவருடைய உரை இங்கே அமைந்திருந்தது. அவர் ஆளும் கட்சித் தலைவருடைய சாதனைப் பிரகடனத்தை எழுதிக் கொண்டு வந்து வாசித்துக் காட்டினார். அவர் எல்லாவற்றையும் பட்டியல் போட்டுக் காட்டி, எங்களுடைய முதல்வர் தான் இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள மற்ற எல்லா முதலமைச்சர்களைவிட திறமையானவர், கெட்டிக்காரர், நேர்மையானவர் என்றெல்லாம் கூறி, ஆளுநர் உரைக்கு ஒரு தங்க முலாம் பூசி அதன் பின் பேச ஆரம்பித்தார். அவர் சட்டமன்றத்தில் இருந்த காலத்தில் பேசிய வெகு சாதுர்யமான பேச்சுக்களையெல்லாம் நான் கேட்டிருக்கிறேன். அவைகளையெல்லாம் நான் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறேன். 1972 ஆம் ஆண்டிலே அது போல் 1973 ஆம் ஆண்டிலே அவர் சட்டமன்றத்திலே பேசிய பேச்சுக்கள் எல்லாம், எழுப்பிய மிக முக்கியப் பிரச்சினைகள் எல்லாம் என் காதுகளில் இன்றைக்கும்

சிங்காரமாக ஒலித்துக்கொண்டிருக்கின்றன. "All that glitters is not gold." அவர் பெரிய பேச்சு சாதுர்யத்தை நான் பாராட்டுகிறேன். அவர் கட்சியில் முக்கிய இடம் பெற்றிருக்கிறவர் என்ற காரணத்தால், ஒரு வாதத்திற்காக அவர் அப்படிப் பேசியதாக நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அவர் எந்த ஒரு நல்ல வாதத்தையும் சொல்லவில்லை. அவர் சொல்லியது எல்லாமே சொத்தையான வாதங்கள் என்பதை நான் இங்கு சுட்டிக் காட்டியிருக்கிறேன். அற்புதமான முறையில் முதலமைச்சர் இங்கே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் என்றும், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் உள்ள முதலமைச்சர்கள் இவரைப் போல் ஆட்சியைத் திறம்பட நடத்தவில்லை என்றும் கூட சொல்லியிருக்கிறார். 1974 ஆம் ஆண்டிலே அன்றைய முதலமைச்சரை முனிசிபாலிட்டியைக் கூட நிர்வகிக்கத் தகுதியற்ற 'இன்-எபிஷியன்ட்' சீப் மினிஸ்டர் என்று கூறிய சொற்கள் இன்றைக்கும் என் காதுகளில் ரீங்காரமாகக் கேட்டுக்கொண்டு தான் இருக்கின்றன. இன்றைக்கு தமிழ் நாட்டினுடைய பட்டி தொட்டிகளில் எல்லாம் புகழ்வதாக வெறும் வார்த்தைகளால் முதலமைச்சரைப் புகழ் பாடுகிறார். 1974 ஆம் ஆண்டு ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின்போது அவர் குறிப்பிட்ட ஒரு வாக்கியத்தை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது, அவர் சொன்னார். I will simply quote the very words of Dr. Hande. "I would like to say that the Governor's Address is full to platitudes and claims which have absolutely no relationship to the dismal situation that is obtaining in this State". 1974 ஆம் ஆண்டிலே டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்ன வார்த்தைகளை இன்றையதினம் இந்த அரசாங்கம் நிறைவேற்றுவதில் முழுமை பெற்றுவிட்டதா? தேர்தல் அறிக்கையிலே சொன்னதையெல்லாம் திட்டமாகத் தீட்டி, மக்களை வளமாக வைத்திருக்கிறோம், தமிழ்நாடு நல்வாழ்வு பெற்றிருக்கிறது என்று கோடிட்டுக் காட்டியிருப்பார்களேயானால், நான் முழு மனதுடன் வரவேற்றிருப்பேன்.

அடுத்தபடியாக, நான் மிக முக்கியமான பிரச்சினைபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அது இன்றையதினம் இந்த நாட்டிலே ஏற்பட்டுள்ள சட்ட ஒழுங்குப் பிரச்சினை பற்றியதாகும். தமிழ்நாட்டில் புதிய அரசாங்கம் அமைந்து 1½ ஆண்டுகள் ஆகின்றன. இன்று புதிய அரசு தமிழ் நாட்டில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தைத்தான் இந்தியாவிலே உள்ள மற்ற எல்லா மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்று உறுப்பினர் டாக்டர் ஹண்டே சொன்னார். தலைவரவர்களே, நான் இந்த சந்தர்ப்பத்திலே உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதென்னவென்றால், நாட்டிலே இன்றையதினம் ஒன்றன் பின் ஒன்றாக பல துயரமிக்க சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாணவர்கள், ஆசிரியர்கள்,





தொழிலாளர்கள் ஆகியோரின் பிரச்சினைகளுக்கு, கிளர்ச்சிகளுக்கு எப்படி அரசியல் சாயம் பூசலாம் என்று கேட்கிறார்கள். இவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில், நாட்டிலே நடைபெற்ற வன்முறைகள், கலவரங்கள், கதவடைப்புகள், கொந்தளிப்பு நிலைமை, பஸ் எரிப்பு எல்லாம் நியாயம் என்று கருதுகிறார்களா? இன்றைக்கு எதிர்க் கட்சிக்காரர்களைப் பார்த்து கேலி செய்து குதர்க்கமாகப் பேசுகிறார்கள். இன்றைக்கு அவர்கள் தங்களைப் பெரியவர்களைப் போல ஏசுவைப் போலவும், புத்தரைப் போலவும், மகாத்மா காந்தியைப் போலவும் பேசுகிறார்கள். அன்றைக்கு இவர்கள் கிளர்ச்சிகளை தூண்டி போராட்டமாகக் கத்திகளைக் கூட எடுத்திருந்தார்கள்தான்.

இப்பொழுது இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட சம்பவத்தைச் சொல்ல வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு முன்னேற்றக் கழகப் பேச்சாளர் தாக்கப்பட்டு மரணம் அடைந்தார். இன்று வரை அதற்குக் காரணமானவர்களைக் கைது செய்திருக்கிறார்களா? கொலை நடைபெற்று பல மாதங்கள் உருண்டோடி விட்டன. கொலை நடைபெற்றது உண்மை. இதை யாரும் மறுக்க முடியாது. பின் ஏன் இதுவரை யாரையும் கைது செய்யவில்லை? தமிழ் நாட்டின் ஒரு பகுதியிலே ஒரு கொலை நடைபெற்றிருக்கிறது. அந்தக் கொலையில் அரசியல் கட்சிக்காரர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்பதல்ல பிரச்சினை. கொலை செய்தவர்கள் யாராக இருந்தாலும், வழக்குப் போடப்பட வேண்டுமல்லவா? இதுநாள் வரை அந்த ஸ்ரீவில்லிபுத்தூர் கொலை தொடர்பாக வழக்குப் போடப்படவில்லை. திரு. முருகையன் கொலை சம்பந்தமாக நான் அதிகம் பேச விரும்பவில்லை.

தமிழ் நாட்டின் பிரதான எதிர்க் கட்சித் தலைவர் மீது தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. அவருடைய வீடு தாக்கப்பட்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது என்று அருமை உறுப்பினர் டாக்டர் ஹண்டே சொன்னார்களே, அது எப்படி பாதுகாக்கப்படுகிறது?

அதேபோல சென்னை மாநகரில் பிரேமா என்ற பெண்மணி கொலை செய்யப்பட்டார். திறமை வாய்ந்த நம்முடைய தமிழக போலீசை ஆட்சியிலிருப்பவர்கள் கேவலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. உண்மைக் கொலையாளியை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. குறிப்பிட்ட சில பேருடைய பெயர்களைக் கொடுத்திருந்தும், கண்டுபிடிக்க முடியவில்லை.

அதேபோல் பரமக்குடியில் ஒரு சம்பவம். அங்கே பட்டப்பகலில் ஒரு தாசில்தார் தாக்கப்பட்டிருக்கிறார். வழக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் விசாரணை செய்யவில்லை.

ஏற்பாடு செய்யுங்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, அங்கே நடைபெற்ற சம்பவங்களை நான் குறிப்பிட்டு பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அவர் சொல்லுகிற தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஒரு சிறிய சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். சிவகாசியில் ஒரு பஸ் முதலாளி; இன்னொரு பஸ் முதலாளியோடு கள்ளக் கடத்தலில் அல்லது கள்ளப்பணத்திலே ஒரு தகராறு வருகிறது. அந்த பஸ் முதலாளியை ஒரு தனியறையிலே இரவு இரண்டு மணி வரை அடைத்து அடித்து நொறுக்குகிறார்கள். இரண்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று பலாத்காரமாக அந்த முதலாளியைத் தாக்கி வருகிறார்கள். தாக்கி வந்து அறையில் போட்டு அடித்து எழுதி வாங்குகிறார்கள். அடிபட்டவர் வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடருகிறார். இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு சட்ட மன்ற உறுப்பினர் மீது வழக்குத் தொடரப்படுகிறது. அந்த வழக்கில் பஸ் முதலாளிக்காகச் சாட்சி சொன்ன மனிதர் விருதுநகரில் சினிமா பார்க்கும்போது சினிமாக் கொட்டகையிலே தாக்கப்படுகிறார். நான் இதையெல்லாம் சொன்னால், சிலருக்குக் கோபம் வருகிறது.

டாக்டர் ஹண்டே அவர்கள்கூட அடிக்கடி மனச் சாட்சியைப்பற்றிப் பேசினார்கள். "மனச் சாட்சி தூங்குகிறபோது மனக்குரங்கு ஊர்வலம் வரும்" என்பார்கள். இந்த நிலைதான் எங்கேயும் இருக்கிறது. நான் இராமநாதபுரம் மாவட்டத்தைப்பற்றிச் சொல்லுவதற்குக் காரணம் ஒன்றிரண்டு சம்பவங்கள் அல்ல, பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. சட்டம் ஒழுங்கு அங்கே கெட்டுப்போனதால்தான் இந்தச் சம்பவங்கள் எல்லாம் நடைபெறுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, டாக்டர் ஹண்டே அவர்கள் பேசும்போது, "இந்த அரசாங்கத்தில் ஆளும் கட்சிக்காரர்களின் தலையீடு கிடையாது; கட்சிக்கு அப்பாற்பட்டுத்தான் காரியங்கள் எல்லாம் நடைபெறுகின்றன" என்று குறிப்பிட்டார்கள். எதற்கெடுத்தாலும் 'சர்வ கட்சிக்காரர்களைக் கலந்துதான் காரியமாற்றுகிறோம், அரசியலுக்கு அப்பாற்பட்டு காரியமாற்றுகிறோம்' என்று குறிப்பிட்டார்கள். முன்பெல்லாம் மாவட்டத்தில் ஆளும் கட்சிக்காரர்கள் தலையீடு அதிகமாக இருந்தது, மாவட்டம், வட்டம் என்று பல நிலைகளில் தலையீடு இருந்தது என்றெல்லாம் குறிப்பிட்டு, இன்றையதினம் அதிகாரிகள் எடுக்கிற முடிவுகள், மேலே அமைச்சர்கள் எடுக்கிற முடிவுகள்தான் செயல்படுத்தப்படுகின்றன என்று குறிப்பிட்டார்கள். ஆளும் கட்சிக்காரர்களின் தலையீடு பற்றி எத்தனை சம்பவங்களை வேண்டுமானாலும் என்னாலே சொல்ல முடியும். ஒவ்வொரு கட்டத்திலும் ஆளும் கட்சிக்காரர்களின் முடிவுக்குப் பின்னால்தான் காரியங்கள் நடைபெறுகின்றன. சம்பவங்களை





சொல்ல வேண்டுமா? இராமநாதபுரம் மாவட்டத்திலே அருப்புக்கோட்டைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஒத்துழைப்பில்லாமல் எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை. எத்தனை சான்றுகள் வேண்டும்? அண்மையிலே அங்கே ஒரு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டது. ஒரு மிகப் பெரிய விழாவாக அதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன, விளம்பரங்கள் செய்யப்பட்டன. "கல்விச் சீரமைப்பு மாநாடு"— அரசாங்கப் பணம் மட்டுமல்லாமல் பல்வேறு பள்ளிகளிலிருந்து நிதி வசூல் செய்து விழா ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த விழாவுக்கு ஆளும் கட்சிக்காரர்களுக்கு மட்டும்தான் அழைப்பு. அழைப்பிதழ்களில் ஆளும் கட்சிக்காரர்கள் பெயர்கள் மட்டுமே இடம் பெறுகின்றன. அரசாங்கப் பணத்திலே நடக்கிற விழா. அதற்கு ஆளும் கட்சிக்காரர்களின் பெயர்கள் மட்டுமே கொண்ட அழைப்பிதழ்கள். சட்டப் பேரவையில் இப்போது கொறடாவாக இருக்கும் திரு. அரசு கோவிந்தராஜன் அவர்கள் ஒருமுறை பேசியிருக்கிறார். டாக்டர் ஹண்டே அவர்கள் பேசுவதற்கு முன்னாலே தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பேசியிருக்கிறார், அகில இந்திய அண்ணா தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் என்ற நிலையில் பேசியிருக்கிறார். "என்னுடைய தொகுதியில் அடுத்த தொகுதி சம்பந்தம். அரசாங்க விழாவில் கலந்து கொள்கிறார், என்னுடைய பெயரைப் போடாமல் அவருடைய பெயரைப் போடலாமா?" என்றெல்லாம் கேட்டிருக்கிறார். ஆனால் என்னுடைய மாவட்டத்தில் அடுத்த தொகுதிக் காரர்கள் அல்ல, அடுத்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே வந்து அரசாங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் பெயர்கள் எல்லாம் அழைப்பிதழ்களில் போடுகிறார்கள். ஆனால் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் என்று எங்கள் பெயரை யாரும் போடுவதில்லை. மற்ற கட்சிக் காரர்கள் என்பதாலே, எதிலும் போடுவதில்லை. சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். அவரை எந்த அரசாங்க நிகழ்ச்சிகளிலும் போடுவதில்லை. ஆக முப்பெரு விழா என்று மாவட்டத்திலே இருக்கிற எல்லாப் பள்ளிகளும் கலந்துகொள்ள ஏற்பாடு செய்தார்கள். கல்விச் சீரமைப்பு மாநாடு— மக்களிடம் வசூலித்த பணத்திலே அரசாங்கப் பணத்தில் அல்லாமல் பொது மக்களிடம் இருந்து வாங்கிய பொருள்கள்—மற்றும் பொது அறிவியல் கண்காட்சிப் பெற்றோர் சங்க விழா என்று அனைத்தும் இணைக்கப்பட்டு முப்பெருவிழாவாக ஏற்பாடு செய்கிறார்கள். அந்த விழாவுக்கான அழைப்பிதழில் எங்கள் பெயர் இல்லை. எங்களைப் போட வேண்டும் என்றுகூட அல்ல, போட்டாலும் நாங்கள் வரத் தயாராக இல்லை. எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், முதல்வர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் இந்த நிகழ்ச்சிக்கு கலந்து கொள்வார்கள் என்று ஏற்பாடு செய்யப்பட்ட

பெரிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டு எல்லாப் பள்ளிகளும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனால் திடீரென்று முதலமைச்சர் 10 ஆம் தேதி வரவில்லை என்ற காரணத்திற்காக மாநாடு நிறுத்தப்படுகிறது. முதலமைச்சர் வர இயலவில்லை என்பதற்காக ஒரு மாநாடு நிறுத்தப்பட வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அரசாங்கப் பணம் மட்டு மல்ல, வசூலித்த பணம் வீணாவதா? எவ்வளவு பொருள் செலவு, ஆசிரியர் களின் நேரம், உழைப்பு எல்லாம் வீணாவதா? அந்த மாநாட்டில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மட்டும் கலந்து கொண்டால், அது நடைபெறாதா எதற்காக அதைத் தள்ளிப் போட வேண்டும்? அதுவும் பெரிய பந்த எல்லாம் போட்டு, மிகப் பெரிய அளவில் பணம் செலவழிக்கப்பட்டு, பல்வே பள்ளிகள் அதில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்தபிறகு, முதலமைச்ச வரவில்லை என்பதற்காக இந்த நிகழ்ச்சியைத் தள்ளிப் போடுவது நியாயமா

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாநாடு நடைபெறும், ஆனா இன்னும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில்தான் மாநா ஒத்தி வைக்கப்பட்டது.

**திரு. வே. தங்கப்பாண்டியன்** : 10 ஆம் தேதி நடக்கும் என்று மாநாட்டிற் காக ஏகப்பட்ட பணம் செலவழிக்கப்படுகிறது, பெரிய பந்தல் போடப்படு கிறது, பொதுமக்களிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது. அதுவும் கட்டாயப் படுத்தி வசூலித்த பிறகு, மாநாட்டை முதல்வர் வரவில்லை என்ற காரணத் திற்காக தள்ளிப் போடலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : அவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் வர இயலாமை காரணமாக நிறுவனங்களை ஒத்தி வைக்கப்படுகின்றன. மாநாடு தள்ளி வைக்கப்படுவதில் அதிசயம் இல்லை. மாநாட்டை ஏற்பாடு செய்தவர்கள் செய்த காரியமாக இருக்கலாம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்** : முதல்வர் அவர்கள் வராத காரணத்தால் மாநாட்டைத் தள்ளிவைப்பது எந்த வகையில் நியாயம் என்றுதான் கேட் கிறேன். மாநாட்டிக்காக ஆசிரியர்கள், அதிகாரிகள் மேற்கொண்ட சிரமத்தை ஒரு நிமிடமும் எண்ணிப் பாருங்கள். அரசாங்கப் பணம் மட்டுமல்ல, ஆசிரியர்கள் வசூலித்த பணம், பொதுமக்கள் பங்கேற்பு, இவைகளைக் கொண்டு நடக்கிற ஒரு மாநாடு தள்ளி வைக்கப்பட வேண்டுமா? அது மட்டுமல்ல. இதைத் தள்ளி வைத்தால், பிறகு நடக்கும்போது பள்ளிக் கூடம் இருக்காது, கோடை விடுமுறை ஆரம்பமாகிவிடும், மாணவர்கள் இருக்க மாட்டார்கள். அதற்குப் பிறகு ஜூன் ஜூலை மாதங்கள் என்று வந்துவிடும்.





எதற்காகச் சொல்கிறேன் என்றால் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து தான் தி.மு.க.-காரன் ஆட்சியை விட்டுப்போனான் என்று சொல்லிக் கொண்டு, அதையேதானே நீங்கள் இன்னும் அதிகமாகச் செய்து கொண்டிருக் கிறீர்கள். "குட்டி 10 அடி பாய்ந்தால் தாய் 16 அடி பாயும்" என்பார்களே, அதைப் போலத்தானே நீங்கள் நடந்து கொள்கிறீர்கள்? (அவையில் சிரிப்பொலி)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : உறுப்பினர் அவர்கள் பழமொழியைத் தலைகீழாகச் சொல்லுகிறார்கள் என்று நினைவூட்ட விரும்புகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்** : மன்னிக்கவேண்டும். அரசாங்க விழாக்கள் என்ற பெயரில், இதுபோன்ற நிகழ்ச்சியின் காரணமாக, ஏராள மான பணம் வீணாக்கப்படுகிறது. பணம் மட்டுமல்ல, அதிகாரிகளின் நேரமும் உழைப்பும் வீணாக்கப்படுகிறது. இன்னொரு சம்பவத்தையும் குறிப் பிட விரும்புகிறேன்.

**திரு. க. அறிவழகன்** : உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியனை அழைக்க வில்லையே என்ற காரணத்திற்காகக் கூட மாநாட்டை ஒத்தி வைத்திருக்க லாம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்** : திரு. அறிவழகன் வேண்டுமானால் அப்படி நினைக்கலாம். ஆனால் இதுபோன்ற " " Cheap Popularity " யை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. மறுபடியும் சொல்லுகிறேன், இதைச் சொல்வதற்குக் காரணம் எங்களை அழைக்கவில்லையே என்பதல்ல.

(பிற்பகல் 6-00)

**திரு. க. அறிவழகன்** : ஒத்தி வைத்த காரணத்தால் உறுப்பினர் அவர்கள் எண்ணம் நிறைவேறியது இல்லையா?

**திரு. வே. தங்கப்பாண்டியன்** : அருப்புக்கோட்டைக்கு முதலமைச்சர் வருகிறார். அப்போது வைகைத் தண்ணீரை உபயோகப்படுத்தி ஒரு அணை கட்டப்படும் என்று அரசாங்கம் கொள்கை வைத்திருக்கிறது என்று அறிவிக்கப் பட்டது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : கொள்கை வைத்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டதே தவிர, முடிவு சொல்லப்படவில்லை. அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது, ஏனென்றால் அணையைக் கட்டிவிட்டு தண்ணீர்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 13

தேங்கவில்லை என்று பின்னாலே குறை வரலாம். ஆகவே வெள்ளக் காலத்தில் மட்டும் தண்ணீர் தேக்க முடியும் என்று தெரிந்து செய்தால், அதில் தவறு இல்லை. அதைப்பற்றி அரசு யோசனை செய்கிறது என்றுதான் நான் சொன்னேன்.

**திரு. க. அறிவழகன் :** துணைத் தலைவர் அவர்களே, என்னைக் கூட சென்னை மாநகரத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் நடக்கும் மாநாடுகளுக்குக் கூப்பிடுவதில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயர் போடவில்லை என்பதற்காக நான் சொல்ல வரவில்லை. விழாக்கள் என்ற பெயரால் பணம் விரயம் ஆகிறது என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டிருந்தாலே அந்த விழா நிறைவு பெற்றிருக்கும். போடுகிற பெயரைப் பற்றியல்ல நான் சொல்லுவது.

15—11—1975 அன்று டாக்டர் கலைஞர் அவர்கள் விரகனூர் திட்டத்தைத் தொடங்கிய அடிக்கல் நாட்டுவிழாவன்று இருதயமால் நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றி அறிவித்தார்கள். அறிவிக்கப்பட்ட இடத்திலே 10 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. பிறகு எமர்ஜென்சியில் அப்போதிருந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் முகவை மாவட்டத்திற்கு வரும்போது அவர்கள் துவக்கி வைக்க வேண்டுமென்று இருந்தது. இத்திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டம், அதற்காக 10 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், நிலத்தைக் கையகப்படுத்தும் பிரச்சினை தான் இருக்கிறது என்றும் அன்றைக்கிருந்த கன்சல்டேடிவ் கமிட்டி தெரிவித்தது. ஆகவே அத்திட்டத்திற்கு மீண்டும் அடிக்கல் நாட்டுவது அவசியம் இல்லாதது என்று அவர்கள் கைவிட்டுவிட்டார்கள். ஆனால் இப்போது அதே திட்டம் முதலமைச்சருடைய பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

வைகையினுடைய நான்-ஆயகட் பகுதிக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக முதலமைச்சருடைய தைரியத்தைப் பாராட்டுகிறேன். அரசாங்கத்திடம் உள்ள தனிப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி பம்பு எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அருப்புக்கோட்டைப் பகுதிக்குத் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீருக்கு வாங்கப்பட்ட பணம் எவ்வளவு? அங்கே முதலமைச்சர் தொகுதியின் பிரதிநிதி என்று ஒருவர் இருக்கிறார். அவர் அரசாங்கம் தண்ணீர் அளிக்கத் தயாராக இருக்கிறது என்று சொல்லி 3 ஆயிரம் ரூபாயை வாங்கியிருக்கிறார்



1979 பிப்ரவரி 13] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

பி.டபிள்யூ.டி. ஜீப்பை வைத்துக் கொண்டு அதிகாரியோடு சென்று இந்த ஊருக்குத் தண்ணீர் கொடுக்கத் தயாராக இருக்கிறேன், நீங்கள் மூன்றாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்லி கேட்டிருக்கிறார். அய்ந்து ஊர்களில் மூன்றாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் நல்ல அனுபவம் வாய்ந்த உறுப்பினர் என்பதை அறிவேன். ஆகையால் அவர்கள், மூன்றாயிரம், நான்காயிரம் ரூபாய் என்று வாங்குகிறார் என்று சொல்லுகிறபோது, யாரேனும் எழுதிக் கொடுத்தார்கள் என்பதை வைத்தோ, கேள்விப்பட்டதை வைத்தோ இத்தகைய மன்றங்களில் பேசுவது முறையாகாது என்பதை நன்றாக அறிவார்கள். அவர்களே தெரிந்து அதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு சொல்கிறாரா என்பதை. . .

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நிச்சயமாக, விசாரணையை வையுங்கள். கொடுத்த விவசாயிகளை விசாரித்து சாட்சியாகக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பொறுப்பேற்றுக்கொள்ளுகிறேன் என்று சொல்லிவிட்டு, விவசாயிகளை விசாரித்துக் கொண்டு வருகிறேன் என்று சொன்னால் எப்படி ?

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** விசாரணை வையுங்கள். பொறுப்பு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, on a point of order. The hon. Member makes a charge. The charge must be specific and it must be substantiated. Otherwise, he can simply make a charge and say that he will make himself responsible. But how do we know the charge ? How do we know from whom he got the money and how is it going to be proved ? What do we know about the credibility of the witness that he will bring in before us ? Should we not know it ?

அவரே ஒரு விவசாயியைத் தயார் பண்ணி இங்கே வந்து சொன்னால் எப்படி ஒத்துக்கொள்ள முடியும் What is the protection for the hon. Members here ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள். பொதுவாக எந்த மன்றமாக இருந்தாலும், பொறுப்பேற்றுக்கொள்ளுகிறேன் என்று ஒரு உறுப்பினர் சொன்னால், எப்படி நிரூபிக்க வேண்டும், எங்கே நிரூபிக்க வேண்டும் என்று

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 பிப்ரவரி 13

அரசாங்கம் தன்னுடைய கட்டளையைத் தெரிவிக்க வேண்டும். ஓர் உறுப்பினர் பொறுப்பேற்றுக்கொள்ளுகிறேன் என்று சொன்னதற்குப் பின்னால் அமைச்சர் அவர்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமே தவிர, அதைக் குறிப்பிலிருந்து நீக்க முயற்சி செய்யக் கூடாது.

Mr. DEPUTY CHAIRMAN : The Hon. Minister wanted to know whether the hon. Member would take responsibility for the statement he made. The hon. Member says that he will take responsibility for it if there is to be an inquiry. Now, what does the Hon. Minister want ?

The Hon. Thiru S. RAMACHANDRAN: Neither the charge is specific nor is it possible to find out the truth in what he says. மூன்றாயிரம் ரூபாய் வாங்கினார் என்று யார் வேண்டுமானாலும் சொல்லலாம். நானே சொல்லுகிறேன் திரு. தங்கப்பாண்டியன் வாங்கினார், விசாரணை வையுங்கள் என்று. அதை எப்படிக் கண்டுபிடிப்பது ?

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அரசாங்கத்திற்கு அந்த வாய்ப்பு இருக்கிறது.

Mr. DEPUTY CHAIRMAN . The Hon. Member can be specific on his point instead of being vague on it.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, மூன்று ஊர்களில் அதற்காக பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. கொடுத்த விவசாயிகள் சொல்லத் தயாராக இருக்கிறார்கள். விசாரணை வைத்தால், சொல்லுகிறேன். பொறுப்பேற்றுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுடைய பிரச்சினையிலே இந்த அரசாங்கம் கொஞ்சங்கூட கவனம் செலுத்தவில்லை. பதவிக்கு வருவதற்கு முன்னால், விவசாயிகளின் கண்ணீரைத் துடைப்போம், மாணவர்கள் பிரச்சினைகளைப் போக்குவோம், ஆசிரியர்கள் பிரச்சினையைத் தீர்ப்போம் என்றெல்லாம் சொன்னார்கள். நெல்லுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையைத் த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு மனுப் போட்டிருக்கிறோம் என் கவர்னருடைய பேருரையிலே சொல்லியிருக்கிறார்கள். கேரளாவில் உள் அரசாங்கம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 120 கொடுப்போம் என்று சொல் யிருக்கிறார்கள். குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 120 கொடுப்போம் என் சொல்லுகிற அளவுக்கு சிறிய மாநிலமான கேரளாவுக்கு தைரியம் இருக்கி போது, நம்முடைய மாநிலத்தில் முழு முதல் விளைபொருளான நெ உற்பத்திக்கு ஊக்கம் தர, இந்த அரசாங்கம் விவசாயிகளுக்குச் சொன் வாக்குறுதிகளைக் கொஞ்சமாவது நினைத்துப் பார்த்து, ஆக்க பூர்வமா



1979 பிப்ரவரி 13] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

நடவடிக்கை என்ன எடுத்திருக்கிறது? சென்ற ஆண்டே சொல்லப்பட்டது, நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம் என்று. ஆனால் இதுவரையிலும் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. மத்திய அரசாங்கம் கொடுக்கத் தயாராக இருக்கிறதா என்று தெரியவில்லை. இல்லையென்றால் இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று தெரியவில்லை. அதற்கு எப்படி பரிகாரம் காணப்போகிறார்கள் ?

விவசாயிகளிடம் ஜப்தி செய்கிறார்கள் என்று சொன்னபோது, நேற்றைய தினம் ஜப்தி நடைபெறவில்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் போட்ட இந்த உத்தரவு கீழ் மட்டத்தில் பின்பற்றப்படுவதில்லை. நூற்றுக் கணக்கான விவசாயிகளிடம் ஜப்தி செய்யப்பட்டதால்தான் அவர்கள் கோவண ஊர்வலம் வந்தார்கள். கோயம்புத்தூரிலும், அருப்புக்கோட்டை தாலுக்காவிலும் தகராறு செய்கிறார்கள் என்பதால் அவர்களிடம் பணம் வசூல் பண்ணுவது கிடையாது. உசிலம்பட்டியிலும் வசூல் பண்ணுவது கிடையாது. தகராறு பண்ணினால் வசூல் செய்வது கிடையாது. சும்மா இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்தில், சாத்தூர், விருதுநகர் ஆகிய இடங்களில் வசூல் செய்கிறார்கள். ஒன்று எல்லோரிடமும் வசூல் செய்யக் கூடாது; அல்லது வசூல் செய்வதாக இருந்தால், எல்லோரிடமும் வசூல் செய்ய வேண்டும். சட்டம் எல்லோருக்கும் சமம்தானே.

குடி தண்ணீர் பிரச்சினையிலே வீராணம் பற்றியெல்லாம் ஏற்கெனவே பேசப்பட்டது. அருப்புக்கோட்டை தொகுதியிலிருந்து முதுகுளத்தூருக்குத் தண்ணீரைக் கொண்டு போகிறார்கள். குழாய்களையெல்லாம் புதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு நடந்த விழாவில் கூட நாடாளுமன்ற உறுப்பினர் பங்கு கொண்டுள்ளார். ஆனால் கிணறு வெட்டவில்லை. பம்புகள் போடவில்லை. ஆனால் குழாய்களைப் புதைக்க காண்ட்ராக்ட் மட்டும் விடப்பட்டு பைப் லைன்கள் போடப்பட்டிருக்கிறது. ஆனால் கிணறுகள் வெட்டப்படவில்லை. இப்படிப்பட்ட தவறான காரியங்களில் பணம் விரயம் செய்யப்படுகிறது.

அடுத்து, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வருகிறேன். அதற்கு ஆதாரம் கேட்பார்கள். ஆதாரத்தோடுதான் சொல்லுகிறேன். ஏலம் இப்போது போடுவதில்லை என்று சொன்னார்கள். ஆனால் பகிரங்கமாக ஏலம் போட்டிருக்கிறார்கள். அது பத்திரிகையிலே கூட வந்திருக்கிறது. இந்தப் பத்திரிகையில் . . .

Mr. DEPUTY CHAIRMAN: The hon. Member may please get the permission of the Chair before showing the paper.

[1979 பிப்ரவரி 13

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, அது அரசுக்கு ஆதரவான 'தினமலர்' பத்திரிகையில்தான் வந்திருக்கிறது. அதைத் தான் படிக்கிறேன்.

Mr. DEPUTY CHAIRMAN : Yes

திரு. வே. தங்கப்பாண்டியன் : அதில் போட்டிருப்பது, 'டிராக்டர் ஏல விற்பனை'—வெங்கிடபதி நாயக்கர் அவர்களின் குமாரர் திரு. நவநீத கிருஷ்ணன் அவர்கள் திருச்சுழி கூட்டுறவு நிலவள வங்கியிலிருந்து கடன் பெற்று வாங்கிய 1975ஆம் வருடத்திய தயாரிப்பான 25 குதிரைச் சக்தியுடைய டிராக்டர் ஒன்று 31—1—1979 ஆம் தேதி புதன் கிழமை மாலை 3 மணி யளவில் ரெட்டியாபட்டியில் உள்ள திருச்சுழி கூட்டுறவு நிலவள வங்கியின் அலுவலகத்தில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும் என்று போட்டிருக் கிறார்கள். பிறகு ஏலத்தில் விற்றுவிட்டார்கள். ஏலத்தில் விட்டதை நான் தப்பு என்று சொல்லவில்லை. ஆனால் இந்தக் கோபம் ஏன் முத்து சாமித் தேவர் என்பவரின் மேல் வரவில்லை என்றுதான் கேட்கிறேன். அவர் ஊராட்சி மன்றத் தலைவர். அவரும் டிராக்டர் வாங்கியிருக்கிறார் வெங்கிடபதி நாயக்கர் செய்த தவறு என்னவென்றால் அவர் இரண்டு டியூலைக் கட்டியிருக்கிறார். அந்த நாயக்கர்—நவநீதகிருஷ்ணன், ஏன் ஆலோ

(பிற்பகல் 6-10)

வெங்கிடபதி நாயக்கர், சிவலார்பட்டி போஸ்ட், 1—11—1976-லே 6,173 ரூபாய் கட்டியிருக்கிறார். முதல் தவணை இது. ஆனால் அதே நிலவள வங்கியில் முத்துசாமித் தேவர், முன்னாள் ஒன்றியப் பெருந் தலைவர், அந்தத் தொகுதி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். அந்தக் காரணத்திற்காக வாங்கிய தொகை ரூபாய் 42,500 ஆனால் ஒரு தவணைகூட கட்டவில்லை. அவர் டிராக்டர் பறிமுதல் செய்யப் படவில்லை. ஆனால் ரூபாய் 6,523 கட்டியிருக்கிற—30—6—1977-க்குள் ரூ 6,173 ; 19—8—1978-ல் ரூ. 350—நவநீதகிருஷ்ணன் டிராக்டர் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.

டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள், ஊழல் உண்டா, ஆதாரம் இருக்கிறதா என்று. இதோ ஆதாரம் இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? சட்ட மன்ற உறுப்பினர்கள் முதல் சாதாரண அமைப்பாளர்கள் வரை இன்றைக்கு எல்லா மட்டங்களிலும் தங்கள் கைங்கரியத்தைச் செய்யும்போது, கட்சி அரசியலைக் கவனிப்ப திடையாது. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் வைத்து மறைக்க அர



முயற்சிக்கிறது. எப்படிச் செய்தாலும், நாட்டு மக்கள் உண்மையை அறிந்து கொள்வார்கள்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையைச் சொல்லியாக வேண்டும். கவர்னர் அவர்கள் உரையில் 13,000 நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தி யுள்ளோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலையை நான் முழுமையாக ஆதரிப்பவன். ஆனால் நாம் ஏற்கெனவே நியாய விலைக் கடைகளை கூட்டுறவுத் துறையின்கீழ் நடத்திக் கொண்டிருந்தோம். இப்போது 'வைகை' என்ற பெயரில் நியாய விலைக் கடைகளை உருவாக்கியிருக் கிறார்கள். அந்தப் பெயரிலே ஒரு யோகம். வைகையில் 6 மாதங்கள் தண்ணீர் வரும், 6 மாதங்கள் தண்ணீர் வராது என்பதுபோல் இந்தக் கடை களில் கொஞ்ச நாள்தான் பொருள்கள் இருக்கும், கொஞ்ச நாட்களுக்கு இருக்காது. (சிரிப்பு) தேவையான பொருள்கள் அந்தக் கடைகளில் கிடைக்கவில்லை. கடையை அமைத்துவிட்டு, தளவாட சாமான்களைக் கொடுத்துவிட்டு, ஊருக்குத் தேவையான பொருள்கள் கிடைக்கவில்லை என்றால் என்ன லாபம்? அரசாங்கம் 13,000 கடைகளைத் திறந்துவிட்டோம் என்று சொல்லி விட்டால் போதுமா? தேவையான பொருள்களைக் கொடுக்க முடிகிறதா? ஒரு சிறு ஆய்வு நடத்திப் பாருங்கள். 13 ஆயிரம் கடைகளில் தேவையான அளவிற்குப் பொருள்கள் கிடைக்கின்றனவா, நியாய விலைக்குக் கிடைக்கின்றனவா என்று ஆய்வு நடத்தி உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள்.

இன்னொரு பிரச்சினை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வெளிநாடு சென்றார்கள். வெற்றிகரமாகத் திரும்பியிருக்கிறார்கள். 'சென் றேன், வென்றேன், கண்டேன்' என்று சரித்திரத்தில் படித்த ஞாபகம்.

* டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும் 'ஆர்டர்' சரியாக இல்லை. 'சென்றேன், கண்டேன், வென்றேன்' என்று சொல்ல வேண்டும். It is vedi, vin, vichi in Latin.

திரு. வே. தங்கப்பாண்டியன்: முதலமைச்சரவர்களோடு பலர் சென்றிருக் கிறார்கள். அதிகாரிகள் உடன் செல்லும்போது, அரசாங்கப் பணித் திட்டங் களுக்குப் புதிய முறைகளைப் படித்து வருவது புதிதல்ல. முதலமைச்சர வர்களோடு சென்று வந்தபின், அரசியல் லாபத்திற்காக அல்ல, வியாபார லாப மாக ஓர் ஆசிரியர் வேறு பத்திரிகையில் எழுதுகிறார். அதிலே அரசாங்க அதிகாரிகளுடைய நடவடிக்கைகளைப்பற்றி வருகிறது. இன்னொரு பத்திரிகையில் எங்கெங்கே போனார்கள் என்று வரும். வேறு பத்திரிகையில் முதலமைச்சர் சுற்றுப்பயணம் பற்றி எழுதும்போது, அதிகாரி இங்கே தங்கி னார், நிதிச் செயலாளர் அந்த இடத்திற்குப் போக வேண்டுமென்று சொன்

னார், லண்டன் பார்க்கவில்லை என்றார், அங்கே சுற்றிப் பார்த்தார்கள், அதிகாரிகள் தங்களுடைய இடத்திற்கு அங்கே போனார்கள் என்று பட்டியல் கொடுக்க முடியும். வேறு இடத்திற்குச் சென்றார்கள் என்று சொல்லுகிறார்கள். அது ரகசியமாக இருக்க வேண்டும் என்று விரும்பினால், முழுமையான ரகசியமாக இருக்க வேண்டும். ஒரு வாரப் பத்திரிகையில் குறிப்பிட்ட அதிகாரி பற்றி வரும்போது, 'பிரிவிலேஜ்' ஆகக்கூட இருக்கிறது. இதை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

நான் ஒரு சிறிய சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசாங்க அதிகாரிகள் இப்போது அறிவிப்பு செய்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்வதற்கு வேதனையாக இருக்கிறது. நாங்கள் அமைச்சர்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள், ஒரு அமைச்சருக்குத்தான் முழுப் பொறுப்பிருக்கிறதென்று சொன்னார்கள். கேபினெட்டில் எல்லோருக்கும் 'ஈக்குவல் ரெஸ்பான்சிபிலிட்டி' இருக்கிறது. கல்வித் துறையில் கடந்த மாதம் ஒரு அறிவிப்பு வந்தது. 23,000 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுமென்று கல்வி இயக்குநர் அறிவிக்கிறார். 23,000 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுமென்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்ல வேண்டும் அல்லது கல்வி அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும். ஆனால் கல்வி இயக்குநர் அதைச் சொல்கிறார். 23,000 ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோமென்று இயக்குநர் சொல்கிறார். கொடுக்க முடியுமா? கவர்னர் அவர்கள் உரையில் சொல்லப்பட்டிருக்கிறதா? அது நடக்குமா? எட்டாம் வகுப்பில் 'காமன் எக்சாமினேஷன்' கொண்டுவரப் போகிறோமென்று 'பாலிசி டெசிஷன்'-ஐ இயக்குநர் அறிவிக்கிறார். தாங்கள் சொன்னால் அமைச்சர்கள் ஏற்றுக்கொள்வார்களென்று நினைக்கிறார்களா? கொஞ்சம் அசந்தால் அவர்கள் உங்கள் நாற்காலிகளைப் பிடித்துக்கொள்வார்கள். இதற்கு இடம் கொடுக்கக் கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன்.

**MR. DEUPTY CHAIRMAN**: Is the hon. Member aiming the chairs of the Hon. Ministers?

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு முதல்வரவர்கள் வெளிநாடு சென்று திரும்பியபிறகு, தூத்துக்குடியில் ஆல்காலிக் கெமிகல் தொழிற்சாலை அமைக்கப்படுமென்று சொன்னார்கள். அது வரவேற்கத்தக்கது. தென் மாவட்டங்களுக்கு நல்ல வேலைத் திட்டம் இது. ஆனால் எந்தத் துறையில் அமைக்கப் போகிறார்களென்று சொல்லவில்லை. தனியார் துறையா, பொதுத் துறையா அல்லது கூட்டுறவுத் துறையா என்று சொல்லவில்லை. கூடியமட்டும் இந்த அரசாங்கம் வைத்துள்ள கொள்கை என்று கருதுகிறேன்



புதிய காகித ஆலை என்றாலும், ஆல்காலிக் கெமிகல் தொழிற்சாலை என்றாலும் சரி, யார் ஆரம்பிக்கப் போகிறார்கள்? ஏற்கனவே அரசாங்கத்தின் சார்பாக—ஜாயின்ட் செக்டாரில் இருக்கிறது. அதிலே பல தவறுகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். எனவே புதிதாக ஆரம்பிக்க இருக்கும் தொழிற்சாலை பப்ளிக் செக்டாரிலா, ஜாயின்ட் செக்டாரிலா, பிரைவேட் செக்டாரிலா என்று சொல்லியிருக்க வேண்டும். நாம் விரும்புவதெல்லாம், எவ்வளவு பெரிய தொழிற்சாலையாக இருந்தாலும், அது பொதுத் துறையில்தான் இருக்க வேண்டும். கடந்த காலத்திலே நாம் கசப்பான உண்மைகளைக் கண்டிருக்கிறோம். டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னது போல், நாம் புதிய பாதையை வைத்துக்கொண்டிருக்கிறோம். எனவே அதற்கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொழிக் கொள்கையில் வேகமாகப் பேசினார்கள். அதுபற்றி நிறைந்த சிந்தனையுள்ளவரும், ஆற்றல் மிக்கவருமான டாக்டர் ஹண்டே நமது முதல்வரவர்கள் எழுதினதைப் படித்துக் காட்டினார்கள். மேலவையில் அவர்கள் உறுப்பினராக இடம் பெற்றபோது, அவருடைய உள்ள உணர்வுதான் எழுத்து வடிவாக வெளிவந்ததென்று சொன்னார்கள். அந்த உணர்வு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருந்தபோது எழுந்ததுதான். மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் நாடாளுமன்றத்தில் வீர உரையாற்றினார்கள். அவர் பேச்சில் நாங்கள் பல காலம் லயித்திருக்கிறோம். ஆங்கிலப் பேச்சானாலும் சரி, தமிழ் பேச்சானாலும் சரி, கேட்போரைக் கவரும். திராவிட முன்னேற்றக் கழகத்தில் அவர் இருந்தபோதுதான், நாடாளுமன்றத்தில் அவ்வாறு பேச முடிந்தது. அதற்குப் பின்னாலே அப்படிப்பட்ட வீர உரை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மொழிக் கொள்கையை வைத்து திராவிட முன்னேற்றக் கழகம் கட்சியை வளர்க்கப் பார்க்கிறது என்று சொல்லுகிறார்கள். இதில் உங்களையும் சேர்த்துத்தான் சொல்லப்படுகிறது. வட இந்தியர்கள் பேசும்போது, ஜனதா அரசினர் பேசும்போது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் என்று சேர்த்துச் சொல்லுகிறார்கள். வடக்கத்திக்காரர்கள் பொதுவாக இரண்டு கட்சிகளையும் சொல்லுகிறார்கள். மொழியை வைத்துக்கொண்டு அரசியல் வளர்க்கப் பார்க்கிறார்களென்று சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும்போது, மத்தியிலே இருந்த இந்திரா காங்கிரஸ் அரசு அவ்வளவு கடுமையாக மொழிப் பிரச்சினையில் இல்லை. ஓரளவிற்கு ஒத்துப் போகும் மனப்பான்மை இருந்தது. இன்றைக்கு அப்படியில்லை. இன்றைக்கு மொழி ஆதிக்கத்தை அதிகப்படுத்து ... இல்லை ... மன்று வழியிலே, வேகப்படுத்துவதிலே இருந்த விறுவிறுப்பு அ

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 பிப்ரவரி 13

முதலமைச்சர்களைக் கூட்டிவிட்டோம், நாங்கள் பிரச்சினைகளை அணுகும்
முறையைப் பார்த்தீர்களா, இது உங்களுக்குத் தெரியவில்லையே என்று புதி
தாகச் சொல்லுகிறார்கள். டாக்டர் ஹண்டே அவர்களுக்குத் தெரியாததல்ல.
ஷேக் அப்துல்லா அவர்கள் மாநில சுயாட்சி பற்றிப் பேச பல முதலமைச்சர்
களைச் சந்தித்துப் பேசினார்கள். மேற்கு வங்க முதலமைச்சர் சில முதல
மைச்சர்களைச் சந்தித்துப் பேசினார். எனவே சில முதலமைச்சர்களைக்
கூப்பிட்டு, அவர்கள் கோட்டைக்கு வந்து பேசுவது என்பது சாதாரணமானது
தான். என்ன முடிவு எடுத்தார்கள்? திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப்
பெயர் வந்துவிடக் கூடாதென்பதற்காக நீங்கள் பயன்படுத்தும் வழி இது.
திராவிட முன்னேற்றக் கழகம் இதிலே முழுக்க முழுக்க நம்பிக்கை வைத்
திருக்கிறது. நீங்கள் தயங்கினாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழ
கத்திலுள்ள இளைஞர்கள், உங்களுடைய தொண்டர்கள் விட மாட்டார்கள்.

(பிற்பகல் 6-20)

மொழிப் பிரச்சினைபற்றி நம் இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்
லிக்கொண்டிருக்கிறார்கள். இளம் தலைமுறையினரை என்னதான் சுற்றிச்
சுற்றி வந்தாலும், அவர்கள் தி.மு.க.வின் வழியில்தான் வருவார்கள் என்பதை
நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்கிறேன். அதுபோன்று பல பிரச்சினைகள்
இருந்துகொண்டிருக்கின்றன. விவசாயிகள் பிரச்சினையானாலும் சரி,
மாணவர்கள் பிரச்சினையானாலும் சரி, தொழிலாளர்கள் பிரச்சினை
யானாலும் சரி, அது எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், இந்த ஆட்சியின்
அணுகுமுறைகள் நாட்டு மக்கள் கொஞ்சம்கூட ஏற்றுக்கொள்ளக்கூடிய
அளவில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்
பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் முன்மொழிந்து ஆளுநர் அவர்கள் உரையை
ஆதரித்து அவருடைய கருத்துக்களை எடுத்துச்சொல்லி இருந்தாலும்கூட,
அது ஒரு சொத்தையான, சோடையான சரக்கு என்ற என் கருத்தைச்
சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே
ஆளுநர் பெருமான் அவர்களின் உரையின்மீது, ஆசிரியர்கள், பட்டதாரிகள்
முன்னணியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன்.
இந்த உரையிலே வரவேற்கக்கூடிய பல அம்சங்கள் இருக்கின்றன.
ஆசிரியர்களுடைய பிரதிநிதி என்ற அளவில் தெரிவித்துக்கொள்கிறேன்—
இந்த உரையில் நாட்டிற்குப் பலன் அளிக்கக்கூடிய நல்ல பல திட்டங்கள்
இருக்கின்றன. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
உணவு நிலைமையும் திருப்திகரமாக இருக்கின்றது. கிராமப்புறங்களில்
ஆங்காங்கே வேலைவாய்ப்புக்கள் கிடைக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது.



1979 பிப்ரவரி 13] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அரசு கிராமப்புற மக்களுக்கு உதவி செய்து வருவதையும் நான் பாராட்டு
கிறேன். மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதிலே இந்த அரசு அதிக ஆர்வம்
காட்டி வருவதையும் நான் பாராட்டுகிறேன். குறிப்பாக ஆற்றல் மிக்க நமது
மின்துறை அமைச்சர் அவர்கள், அவருடைய பதவிக் காலத்திலேயே மின்சார
வசதி திருப்திகரமாக இருப்பதற்காக, அதில் அதிக கவனம் செலுத்திக்கொண்
டிருக்கிறார்கள். அவர் இந்தத் துறையிலே பட்டம் பெற்றவர் மட்டுமல்ல,
அனுபவத்தின் அடிப்படையிலும் அவர்கள் நல்ல பல திட்டங்களைச் செயல்
படுத்தி வருகின்றார்கள். அதற்காக நான் மின்துறை அமைச்சர் அவர்களையும்,
இந்த அரசையும் பாராட்டுகிறேன். சூரிய ஒளியிலிருந்து மின் சக்தி எடுக்க
முடியும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலும்
நீர் வளம் குறைந்துவிட்ட காரணத்தினால், நீர் வளத்திலிருந்து மின்சக்தி
பெற முடியாத நிலைமைகள் இருக்கின்றன. சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி
பெற அதிலிருந்து வரும் அந்த வெப்பச் சக்தியைப் பயன்படுத்த வேண்டும்.
அதை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தலாம் என்று
சொல்லப்படுகின்றது. நாமும் அந்த முயற்சியில் ஈடுபட வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முயற்சியில் அண்ணா
மலைப் பல்கலைக் கழக மாணவர்களும், ஆசிரியர்களும் ஆக்கபூர்வமான
முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது குறித்து அவர்கள் ஆராய்ச்சி செய்து
வருகிறார்கள். இந்த அரசு அந்த ஆசிரியர்களுடைய கண்டுபிடிப்பின்
விளைவுகளை நேரில் தெரிந்துகொண்டு, மின் உற்பத்தித் துறையில் நல்ல
விளைவுகளை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்படி
சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்தி செய்வதை, வெப்பத்தைப் பயன்படுத்தி
மின் உற்பத்தி செய்யும் ஆராய்ச்சியை அரசும் விரிவாக மேற்கொண்டு நமக்குத்
தேவையான மின்சக்தியைப் பெற வேண்டும். மின் சக்தி குறைவால்,
பற்றாக் குறையால் ஏற்படுகின்ற குறைகளை ஈடுகட்ட வேண்டுமென்று நம்மு
டைய மின் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டுவசதிபற்றிச் சொல்ல விரும்புகிறேன். கிராமப்புறங்
களில் நிலமற்ற, வீட்டு வசதி அற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வழி
செய்திருப்பது குறித்து அரசைப் பாராட்டுகிறேன். கிராமப்புறங்களில்
ஆசிரியர்கள் வீட்டு வசதி இல்லாமல், வீடு கிடைக்காமல், கிடைத்தாலும்
வீட்டுக்கு அதிகப்படியான வாடகை தரவேண்டிய நிலைமையில்
இருக்கின்றார்கள் என்பதை இந்த அரசு உணரவேண்டும். லட்சக்கணக்கான
ஆசிரியர்கள் அப்படி தொல்லை அடைந்து கொண்டிருக்கிறார்கள். கிராமப்
புறங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி கொடுக்க
வேண்டும் என்பதுபற்றி ஊதியக் குழு பரிசீலிக்கும் என்று எதிர்பார்த்தோம்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 பிப்ரவரி 13

ஆனால் ஏமாந்தோம். கிராமப்புறங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் உண்மையிலேயே ஏமாந்துவிட்டார்கள். ஒரு கருத்தினை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். எல்.ஐ.சி.-யிலே ஒரு முக்கியமான பதவியில், இயக்குநர்களில் ஒருவராக டாக்டர் ஹரான் என்பவர் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்கள் கல்லூரி முதல்வராக இருந்தவர்கள். நான் அவர்களைச் சந்தித்தபோது "கிராமப்புறங்களில் ஆசிரியர்களுக்கு வீடு கட்டுவதற்காக இந்த அரசு எல்.ஐ.சி.-யை அணுகினால், நான் கணிசமான அளவுக்கு எல்.ஐ.சி.-யிலிருந்து நிதி உதவி கிடைக்க பரிபூரணமான ஒத்துழைப்பை, ஆதரவைத் தருகிறேன்" என்று சொன்னார்கள். அவர் நம் தமிழகத்தைச் சேர்ந்தவர். அவர்கள் எல்.ஐ.சி.-யிலே முக்கியப் பதவியில் இருக்கின்ற காரணத்தினால் அவருடைய ஒத்துழைப்பைப் பெற்று, கிராமப்புறங்களில் ஆசிரியர்களுக்கான வீட்டுவசதித் திட்டத்தை எல்.ஐ.சி. உதவியுடன் நம் அரசு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே வேலை வாய்ப்புக்கு உறுதியளிக்கும் திட்டத்தை ஆளுநர் அவர்களது உரையிலே கண்டேன். அதையும் நான் பாராட்டு கிறேன். ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், தமிழகத்தில் இருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் இவர்கள் எல்லாம் வேலையில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். இத்தகைய வேலையில்லா ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதற்கு என்று ஒரு குறிப்பும் இந்த உரையில் காணப்படாதது ஆசிரியர்களின் பிரதிநிதியாக வந்துள்ள எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருப்பது ஆபத்தில் முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதேபோல் பட்டம் பெற்ற இளைஞர்கள் ஆயிரக்கணக்கில், லட்சக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் வேலை வேண்டுமென்று கேட்டுப் போராடுவதற்குத் தயாராக இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்படி வேலையில்லாத நிலைமையை வளர்த்துக்கொண்டே போனால், இந்தப் பட்டம் பெற்ற இளைஞர்கள் எல்லாம் பயங்கரமான சக்திகளாக மாறிவிடுவார்கள். அதனால் தமிழகத்தினுடைய சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படக்கூடிய நிலைமைகள் உண்டாகும் என்பதை அரசுக்கு எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன். பட்டம் பெற்றவர்களுக்கு ஒருபுறம் வேலை வாய்ப்பும், மறுபுறம் அவர்கள் தொழில் தொடங்க வாய்ப்பும் உருவாக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



1979 பிப்ரவரி 13] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அரசு அலுவலகங்கள் தலைமை அலுவலகங்கள் பல மாவட்டங்களில் பரவலாக அமைக்கும் திட்டம் உண்மையிலேயே மகிழ்ச்சி தருகிற ஒரு திட்டமாக இருக்கின்றது. அதை நான் பாராட்டுகிறேன். பல்வேறு மாவட்டங் களிலும் தலைமையகங்களை அமைப்பது நல்லது. அது மக்கள் எளிதில் தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பளிக்கும். பொதுவாக மாவட்டத் தலைநகரங் களில், வட்டாரத் தலைநகரங்களில் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு பாமர மக்கள், சாதாரண ஆசிரியர்கள் எல்லாம் சென்னைக்கு வந்து சட்டமன்ற உறுப்பினரை நாடிச் சென்று, அவர்கள் மூலம் பல அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தங்களுடைய காரியங்களைச் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் அவர்கள் தங்களுடைய நேரத்தையும், பொருளையும் இழக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதற்கு என்ன காரணம்? இந்த நோய்க்கு என்ன காரணம் என்பதை இந்த அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் போக்கு வளர்வதற்கு இந்த அரசு அனுமதிக்கக்கூடாது. மாவட்ட அளவில் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை மாவட்ட அதிகாரிகள் தீர்ப்பதற்கு, உடனடியாகக் காரியங்களைச் செயல்படுத்துவதற்கு, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு வழிமுறைகளைக் காண வேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக அரசுத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் காரியங்களைத் தாமதப்படுத்துவதற்கு 4 சொற் பதங்களை வைத்திருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தி எளிதாக பிரச்சினை களிலிருந்து விடுவித்துக்கொள்கிறார்கள். ஒன்று Clarification கேட்டிருக் கிறேன் என்று சொல்வார்கள். இன்னொன்று Call for remarks என்று சொல்வார்கள். மூன்றாவது 54 Orders of the Government are awaited என்று சொல்வார்கள். நான்காவது The matter is under consideration என்று சொல்வார்கள். இந்த நான்கு சொற்பதங்களைச் சொல்லி காலதாமதப் படுத்துகிறார்கள். இது ஏதோ இந்த ஆட்சியிலே மட்டும் நடைபெறுவதாகச் சொல்லவில்லை. கடந்த பல ஆண்டுகளாகவே இந்த நிலைமை இருக்கிறது. விரைவாகத் தீர்க்க வேண்டிய காரியங்களைக்கூடத் தாமதப்படுத்தி வருகின்றார்கள். இதனால் பொதுமக்கள் மட்டுமல்ல, ஆசிரியர்கள் உட்பட பலர் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்படி 'consideration' என்ற அளவிலேயே சில பிரச்சினைகள் 10 ஆண்டுகளாகக் கூட தேங்கி நிற்கின்றன. 'under consideration' என்று சொன்னால் அதற்கு என்று ஒரு காலக் கெடுவை நிர்ணயிக்க வேண்டும். முதலில் 'under consideration' என்று பதில் வரலாம். அடுத்த சில நாட்களில் அப்பிரச்சினை என்ன ஆயிற்று என்று திட்டவட்டமான பதில் வரவேண்டும். Whether it is negative or

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 பிப்ரவரி 13

(பிற்பகல் 6-30)

positive reply we do not mind. நாங்கள் அனுப்பும் கடிதத்திற்குத் தெளிவான பதில் வரவேண்டும். அதற்குப் பதில் வரவேண்டும். அந்த பதில் அளிக்காமல் பல ஆண்டுகளாக இவ்வாறு 4 சொற்களால் பதில் சொல்லும் முறையைப் பயன்படுத்துகிறார்கள். இந்த முறை நிலவுவது கல்வித் துறையில் மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் இருக்கிறது. இம் முறையைப் பின்பற்றி வேலையைத் தாமதப்படுத்துகின்ற சிகப்பு நாடா முறையை அதிகாரிகள் பின்பற்றி வருகிறார்கள். ஆசிரியர் தொகுதி உறுப்பினர்கள் மேலவையில் அதிகமான நேரம் எடுத்துக் கொள்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் குறைப்பட்டுக் கொள்வதும், கவலைப்படுவதும் உண்டு. அந்த அளவுக்கு கல்வித் துறையில் பிரச்சினைகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்தப் பிரச்சினைகளையெல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்ல எங்களுக்கெல்லாம் கிடைத்திருக்கும் ஒரே இடம் இந்த மேலவைதான். உங்களுடைய பொறுமையைச் சோதிக்கும் வகையில் பிரச்சினைகளை . எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருக்கிறோம். அந்த அளவுக்கு ஆசிரியர்களுக்குப் பிரச்சினைகள் இருப்பதால் தான், நாங்கள் அவற்றை விவரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இதை நீங்கள் தயவுசெய்து தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. கல்வித் துறையிலுள்ள இந்தப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் விரைவாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி ஆலோசனைக் குழு (Educational Consultative Committee) என்ற குழு அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்பே வைக்கப்பட்டு, அரசும் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டது என்று கருதுகிறேன். அத்தகைய குழு இதுவரை அமைக்கப்படவில்லை அல்லது கூட்டப்படவில்லை என்று நினைக்கிறேன். அதை எவ்வளவு விரைவாக அமைக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அமைத்து, அது அடிக்கடி கூடி கல்வி பற்றிய ஆசிரியர்கள் பற்றிய பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தால், பல பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு கிடைக்கும் என்பதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பொதுவாக அரசாங்க அலுவலகங்களில் தாமதம் நிகழ்வதால்தான் (முக்கியமான பொது இடங்களில்' Delay breads corruption' என்றெல்லாம் எழுதி வைக்கப்பட்டிருந்தும்) நாம் விரும்பாதபோதும்—பொதுமக்கள் விரும்பாத போதும்—அரசு விரும்பாதபோதும் ஊழலும் லஞ்சமும் பெருகுவதற்கு அத்தகைய தாமதம் காரணமாக அமைகிறது என்பதையும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



1979 பிப்ரவரி 13] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையொட்டி நான் என்னுடைய தனிப்பட்ட சொந்தக் கருத்தை இங்கு சொல்ல விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டம் இந்த மாநிலத்திலேயே பெரிய மாவட்டங்களில் ஒன்று. பெரிய மாவட்டமாக இருப்பதனால், நிர்வாகத்தை எளிதாக நடத்துவதற்கு, அதை இரு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை, உணர்ச்சி பல ஆண்டுகளாக அங்கு இருந்து வருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தின் நிர்வாகத்தை எளிமைப்படுத்த, அதை துரிதப்படுத்த, அதைப் பரவலாக்க அம்மாவட்டத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையிலே நிர்வாகப் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படுமென்றும் அதில் அரசு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுகுறித்து நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகின்றேன். அவ்வாறு ஒரு நிர்வாகப் பயிற்சி நிலையம் மிக விரைவாகத் துவக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அவ்வாறு அது துவக்கப்படும்போது, முதன் முறையாக அதில் கல்வித் துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். கல்வித் துறையிலுள்ள அதிகாரிகளின் நடவடிக்கை கல்வி அமைச்சர் அவர்களுடைய ஆர்வத்தை, உற்சாகத்தை, விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்ற அவருடைய உணர்வைப் பிரதிபலிப்பதாக இல்லை என்பதை நான் சென்ற கூட்டத் தொடரில் சொல்லியிருக்கிறேன். இப்பொழுதும் அதையே சொல்லுகிறேன். அதற்குப் பல சான்றுகளை நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆசிரியர்களுக்குப் பயிற்சி 'In-service, Orientation courses' தரப்படுவதுபோல் கல்வித் துறை அதிகாரிகளுக்கு ஒரு பயிற்சி வகுப்பு நடத்தி, அதில் அவர்களுக்குப் பயிற்சி அளித்தால், அது பல நன்மைகளை ஏற்படுத்தும் எபைதை நான் கல்வி அமைச்சர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கையின் சீற்றத்தினால் ஏற்படும் துயரமான விளைவுகளைத் தவிர்க்க ஒரு நிரந்தரத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இயற்கையின் சீற்றம், பெரு வெள்ளம், புயல் இவையெல்லாம் குறிப்பிட்ட சில மாவட்டங்களில்தான் திரும்பத் திரும்ப நிகழக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே அங்குள்ள மக்களைக் காப்பாற்ற நிரந்தரத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அதை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்துவதைப் பொறுத்தவரை, மக்களுடைய மனதிலே மாறுதலை ஏற்படுத்துவதன் மூலம்தான் அதிலே சாதனையைப் பெற முடியும், முழு வெற்றியை அடைய முடியும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. காரணம்—கிராமப்புறங்களில் உள்ள மக்கள் கள்ளைக் குடிப்பது தீமை அல்ல—நன்மை என்றுதான் இன்றும் நம்புகிறார்கள். அப்படி நம்பிச் செயல்படுகிறார்கள், குடிக்கிறார்கள். குடிப்பது தீமையல்ல என்று நினைத்து குடிக்கின்ற அந்தப் பாமர கிராம மக்களுடைய உள்ளத்தில் நல்ல எண்ணத்தை விதைக்க, ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று அன்புடன் மாண்புமிகு முதல் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

லஞ்ச ஊழலைக் களைவதில் இந்த அரசு மேற்கொள்ளும் முயற்சியை நான் மனதாரப் பாராட்டுகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் இதிலே அக்கறையும் ஆர்வமும் கொண்டிருப்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற கூட்டத் தொடரின்போது நான் இரண்டு குற்றச்சாட்டுகளைப் பற்றிச் சொல்லியிருந்தேன். அதன்மீது மிக மிக விரைவாக நடவடிக்கை எடுத்து, ஒரே வாரத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுடைய குடும்பத்திற்கு குடும்ப நல நிதி போய்ச் சேரக் காரணமாக இருந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வாறு ஆசிரியர்களுடைய ஒவ்வொரு பிரச்சினையையும் இங்கே எடுத்துப் பேசி அதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்று வந்தால், எதையுமே செய்ய முடியாத ஒரு சூழ்நிலை வரும். லஞ்ச ஊழலைக் களைவதற்கு பல பரவலான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கூறியவாறு லஞ்ச ஊழல் மாவட்ட அளவில் பல இடங்களில் பரவலாக இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் இரண்டு கருத்துக்களை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முதல் பிரச்சினையைப் பொறுத்தவரை, அது ஆசிரியர்கள் சம்பந்தப்பட்டது. ஆசிரியர்கள் தங்களுடைய ஊதியத்தைப் பெற இன்று கருவூலங்களின் துணையை நாடிச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆசிரியர்கள் தங்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகையைப் பெற வரும்போதும், இன்னும் பல்வேறு காரணங்களினால் நிலுவைத் தொகையைப் பெற வரும்போதும் குறிப்பிட்ட ஒரு தொகையை கருவூலங்களில் இருப்பவர்கள் லஞ்சமாகக் கேட்கிறார்கள். மாநிலம் முழுவதும் பல இடங்களில் பல ஆண்டு காலமாக இது மாமூலாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கருவூலங்களில் ஆசிரியர்களுடைய நிலுவைத் தொகையை அனுமதிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட தொகையை லஞ்சமாகக்





கொடுங்கள் என்று கேட்கின்ற ஒரு துர்ப்பாக்கியமான நிலையைப் போக்க மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று என்னவென்றால், லஞ்சம் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். லஞ்சத்திற்காக ஒரு சட்டபூர்வமான பாதுகாப்பு அரசாங்கத்தாலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். அதுதான் 'மெடிக்கல் ரீயிம்பர்ஸ்மென்ட்'. அது ஊழலின் மொத்த உருவம். அது சட்டபூர்வமாக ஆக்கப்பட்டிருக்கின்ற ஒரு ஊழல். மருத்துவச் செலவை ஈட்டுத் தொகையை அரசு கொடுப்பதால், பொய்ச் சான்றிதழ்களைக் கொடுத்து, உண்மையிலேயே மருந்து அருந்தி சிகிச்சை பெறாமலேயே, அந்தத் தொகையை வாங்குகிறார்கள். ஆனால் நூற்றுக்கு 90 பேருக்கு மேல் இந்த உதவியைப் பெற வேண்டிய அவசியத்தில் உள்ளவர்களுக்கு இந்தத் தொகை கிடைப்பதில்லை. ஆகவே மெடிக்கல் ரீயிம்பர்ஸ்மெண்டு என்பதற்கு பதிலாக மெடிக்கல் ரீயிம்பர்ஸ்மெண்டுக்கு எவ்வளவு தொகையை அரசு ஒதுக்குகிறதோ அந்தத் தொகையை சராசரியாகக் கணக்கிட்டு, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உட்பட சுமார் 7½ லட்சம் பேருக்கு ஒரு தொகையை மருத்துவப்படி என்ற வகையில் வழங்கினால் மிகவும் நல்லது. அந்தத் தொகையை மருத்துவப்படி என்ற பெயரில் வழங்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு முதல் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மருத்துவச் செலவு ஈட்டுத் தொகை இன்றையதினம் ஊழலினுடைய மொத்த உருவமாக இருப்பதனால், கட்டாயம் இதை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பது ஆசிரியர்களுடைய ஒட்டுமொத்தமான கோரிக்கை.

அடுத்தபடியாக, 'இந்தி மொழி ஆதிக்கம்' பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கேயுள்ள அரசியல் கட்சிகள், அரசியல் கட்சிகளுடைய தலைவர்கள் ஆகியோரது கோணத்திலிருந்து ஆசிரியர் பிரதிநிதியாகிய நான் சிறிது வேறுபட வேண்டியிருக்கிறது. இந்தி ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் இந்தியைப் படிக்க முடியாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறோம். இதுவரை நாம் செய்திருப்பது அவ்வளவுதான். இந்தி ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பது ஒன்று; மாணவர்கள் படிக்காமல் இருப்பதற்கு, வாய்ப்பு தராமல் இருப்பது என்பது வேறு. இப்பொழுது இரு மொழித் திட்டத்தின் வாயிலாக அவர்கள் இரண்டு மொழியைப் படிப்பதற்கு மட்டுமே வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் அவ்வாறு

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 பிப்ரவரி 13

இந்தி படிக்கின்ற வாய்ப்புகளை இழப்பதன் காரணமாக, எதிர்காலத்திலே வேறு மாநிலங்களுக்குச் சென்று வேலைவாய்ப்புகளைப் பெறக்கூடிய வாய்ப்புகள் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற கவலை மாணவர்கள் மீது உண்மையிலேயே அக்கறையுள்ள ஆசிரியனாகிய எனக்கு கவலை இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் பள்ளிக்கூடங்களில் இந்திப் படிப்பு இல்லாமல் இருந்தாலும், வசதியுள்ளவர்கள், விவரம் புரிந்தவர்கள் தங்கள் பிள்ளைகளை இந்தி பிரச்சார நிறுவனம் போன்ற அமைப்புகளின் மூலம் படிக்க வைக்கிறார்கள். இதனால் கையில் பண வசதி உள்ளவர்களும், விவரம் புரிந்தவர்களும் பயனடைகிறார்கள். ஏதும் விவரம் தெரியாத, மற்றும் பண வசதியில்லாத குடும்ப மாணவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவது கிடையாது.

(பிற்பகல் 6·40)

இவ்வாறு ஒரு பெரிய disparity-யை உருவாக்கியிருக்கிறோம். பள்ளிகளில் இந்தியை ஒழிப்பதன் காரணமாக மாணவர்களுடைய நலனை, எதிர்காலத்தை, பாதிக்கக்கூடிய செயலில் இறங்கிவிட்டோமோ என்ற அச்சம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, விருப்பமுள்ள மாணவர்களுக்கு மட்டுமாவது இந்தி படிக்கும் வாய்ப்பைக் கொடுக்கலாமா என்பதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் இந்த விஷயத்தில் பெற்றோர்களுடைய கருத்தையும் அரசு அறிய வேண்டியது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்பதில் இங்கே உள்ள எந்தத் தமிழனுக்கும் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனாலும்கூட ஆசிரியர் என்ற கண்ணோட்டத்தில் இதைச் சொல்ல விரும்புகிறேன். பெற்றோர்களுடைய கருத்தையும் இந்தப் பிரச்சினையில் அரசு அறிய வேண்டியது முக்கியம். நானேகூட ஒரு சிறு sample survey செய்து பார்த்தேன். மாணவர்கள்-பெற்றோர்கள் மத்தியில் இருக்கும் கருத்து மற்ற மொழிகளைக் கற்க வாய்ப்புத் தரப்பட வேண்டும் என்பதுதான் என்று அறிந்து கொண்டேன். எனவே முறைப்படி questionnaire மூலமாக அவர்களுடைய கருத்தைத் தெரிந்துகொள்ள அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால், உறுப்பினர் சீக்கிரமாக முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் பேச்சைத் துவங்கியே 10 நிமிடங்கள்கூட ஆகவில்லை. நான் ஒரு கட்சி சார்பாகப் பேசுகிறேன் என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் எண்ணிப் பார்த்து எனக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1979 பிப்ரவரி 13]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேச்சைத் துவங்கி 20 நிமிடங்களுக்கு மேலாகிறது. சீக்கிரமாக முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மன்னிக்க வேண்டும். அடுத்து, ஆளுநர் உரையிலே கல்வி பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை என்பது ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும், வேதனை தருவதாகவும் இருக்கிறது. கல்வியைப் பற்றி ஏன் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை என்பது புரியவில்லை. அதே போல் ஆசிரியர்களைப்பற்றியும் ஏன் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை என்றும் புரியவில்லை. இரண்டுமே ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. எனவே கல்வியைப்பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடாதது குறித்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். கல்வியைப்பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடாவிட்டாலும் கூட, நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்துவந்த எ பிரிவு, மற்றும் பி பிரிவு ஆசிரியர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் இரண்டையும் இணைத்து புரட்சிகரமான ஆணையை அரசு வெளியிட்டதற்காக ஆசிரியர்கள் சார்பாக அரசுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு ஒரு சிலர் இன்றையதினம் முட்டுக்கட்டை ஏற்படுத்துவதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அப்படி முட்டுக்கட்டை ஏற்படுத்த ஒருசிலர் முயன்றால், அரசு உரிய முறையில் சட்டபூர்வமாக அதைத் தடுத்து, நியாயத்தை நிலைநாட்டிட தீவிரமான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் 3-வது ஊதியக் குழுவால் ஆசிரியர் சமுதாயத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. அந்த அநீதிகளைக் களைய, மாற்று ஏற்பாடுகளைப் பற்றியும் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். மூன்றாவது ஊதியக் குழு ஏற்படுத்தியுள்ள முரண்பாடுகளைக் களைய இந்த அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நாங்கள் நம்பிக்கொண்டிருந்த நிலையில் ஆளுநர் உரையில் அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடாதது மெத்த வேதனையைத் தருகிறது. மூன்றாவது ஊதியக் குழுவால் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, குறிப்பாக உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆகிய நிலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கிற குறைபாடுகளைப் போக்குவதற்காக விரைவில் முறைப்படி ஒரு குழுவை அமைத்து மிக விரைவாக இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இதில் முக்கியமானதும், பரவலாக இருக்கிறதுமான ஒரு குறைபாடு, கிராமத்தில் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்களுக்கு

வீட்டு வாடகைப் படி வழங்கப்படவில்லை என்பதாகும். கிராமங்களை முன்னேற்றுவதை இலட்சியமாகக் கொண்ட ஒரு அரசு கிராமப் புறத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, கல்விக் கண்ணைத் திறக்கும் பணியை மேற்கொண்டிருக்கிற ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி தராதது குறித்து மிகவும் ஏமாற்றம் அடைகிறோம், வேதனைப்படுகிறோம். எனவே அவர்களுக்குக் கட்டாயம் வீட்டு வாடகைப் படி வழங்குவதற்கு ஆணையிட வேண்டுமென்று இந்த அரசைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையையும் இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகிறேன். 31—3—1978 அன்று ரூ. 290 அடிப்படை ஊதியமாகப் பெறும் லட்சக்கணக்கான ஆசிரியர்களுக்கு அவர்கள் 1—10—1978 அன்று ஊதிய நிர்ணயம் செய்துகொள்ள 5 சதவிகிதம் ஊதிய உயர்வு கொடுக்க அரசு நிதித் துறை மறுக்கிறது. எனவே அதையும் இந்த அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் 20 ஆண்டு காலம் பணிமுடிந்த ஆசிரியர்களுக்கு சிறப்புநிலை ஊதியம் உண்டு என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஒரு ஆசிரியர் பணியில் சேர்ந்து 20 ஆண்டுக்காலம் ஆகியிருந்தால் அதன் அடிப்படையில் இந்த சிறப்புநிலை ஊதியம் அமையும் என்று நிதியமைச்சர் அவர்கள் திருப்பூர்கள் கூட்டத்திலே குறிப்பிட்டார்கள். இந்தச் செய்தி பத்திரிகையிலேகூட வந்திருக்கிறது. ஆனால் இப்போது வேறுவிதமாக ஆணை பிறப்பிக்கப்படுகிறது. தேர்வுநிலை முடிந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஆசிரியர்களுக்குச் சிறப்புநிலை ஊதியம் கிடைக்கும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. தயவுசெய்து நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன், ஒரு ஆசிரியர் பணியில் சேர்ந்து 20 ஆண்டுக்காலம் ஆகியிருந்தால், அவருக்குச் சிறப்புநிலை ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், இந்தச் சிறப்புநிலை என்பது 1983 ஆம் ஆண்டுக்கு முன்பாக எந்த ஒரு ஆசிரியருக்கும் கிடைக்காது என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, அரசு ஏற்கெனவே ஒப்புக்கொண்ட ஒரு பிரச்சினையைப் பற்றி burning issue —என்பார்களே அதைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு நெருக்கடியான, முக்கியமான பிரச்சினையைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். 1—4—1970-க்குப் பிறகு அரசுப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் இந்தப் பிரச்சினை இந்த மன்றத்தில் பலமுறை விவாதிக்கப்பட்டு, இந்தப் பிரச்சினையில் நல்லதொரு தீர்வைக் கண்டு, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மிகச் சிறப்பான இரண்டு ஆணைகளை வெளியிட்டார்கள்.





ஆனால் இன்றுவரை அந்த ஆணைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை, செயல்படுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஐந்து நிமிடங்களில் உறுப்பினர் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அதிலே ஒரு ஆணை அரசு சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்காக வெளியிடப்பட்ட ஆணை எண் 2683, தேதி 30—12—1977. அந்த ஆணை வெளியிடப்பட்டு 14 மாதங்களாகியும் இன்னும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அதைப் போலவே தேர்ந்தெடுக்கப்படாத ஆசிரியர்களைப் பொறுத்து, எண் 2635, தேதி 21—12—1977 என்று ஒரு ஆணை வெளியிடப்பட்டது. பதினான்கு மாதங்களாகியும்கூட இன்றுவரை அந்த ஆணை செயல்படுத்தப்படவில்லை. இந்த இரண்டு ஆணைகளும் கல்வித் துறை அதிகாரிகளால் விரைந்து செயல் படுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த ஆசிரியர்கள் எங்களுக்கு எழுதுகிற கடிதங்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால்—ஒரு சிலர் தாங்கள் தற்கொலை செய்து கொள்வோம் என்றும், தீக்குளிக்கப் போகிறோம் என்றெல்லாம் கூட எழுதியிருக்கிறார்கள்—மிகவும் வேதனையாக இருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையிலும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1—4—1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் களுக்கு பணியில் சேர்ந்த தேதியில் இருந்து அவர்களுக்குரிய ஆண்டு ஊதிய உயர்வு தரப்படவில்லை. ஆனால் ஏ பிரிவு ஆசிரியர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. பி பிரிவு ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஏ பிரிவு ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சலுகை பி பிரிவு ஆசிரியர்களுக்குக் கிடைப்ப தில்லை. அந்தச் சலுகை பி பிரிவு ஆசிரியர்களுக்கு மட்டுமே மறுக்கப்படுகிறது. இது இன்று நேற்றல்ல—கடந்த 18 ஆண்டுகாலமாக நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏன் இந்த பாரபட்சம் என்பது புரியவில்லை. எனவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிரந்தரமாக்கப்படாத கல்லூரி ஆசிரியர்கள் பற்றிய பிரச்சினையைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கெல்லாம் பணிப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு பொதுவான ஆணை

அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் எவ்வாறு பணிப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று அந்த ஆணையில் விரிவாகக் குறிப்பிடப்பட வில்லை. சுமார் 7,500 பள்ளி ஆசிரியர்கள் உபரியாகக் கருதப்பட்டபோது கல்வித்துறை அரசாணை எண் 1395-ன்படி அந்த ஆசிரியர்கள் எவ்வாறு பணியில் அமர்த்தப்பட வேண்டும் என்று பணிப்பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையில் உள்ள நல்ல அம்சங்களைக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்திவிட்டாலே போதும். இதைச் செய்தால், தற்போது கல்லூரி ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவநம்பிக்கை, சஞ்சலம், சந்தேகம் போய்விடும் என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதைப் போலவே அரசுக் கல்லூரிகளில் பி பிரிவு பள்ளிகளிலிருந்து பதவி உயர்வு பெற்று உதவி பேராசிரியர்களாக, டியூட்டர்களாக இருப்பவர்கள் இன்றுவரை பணிவரன்முறைப்படுத்தப்படவில்லை. ஆனால் ஏ பிரிவு பள்ளிகளிலிருந்து பதவி உயர்வு பெற்று கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் பணி வரன்முறைப்படுத்தப்பட்டுவிட்டது. ஏன் இந்தப் பாடுபாகு? ஏ பிரிவில் இருக்கிற அதிகாரிகள், ஏ பிரிவு பள்ளிகளிலிருந்து சென்றவர்கள் என்பதால், அவர்களுக்கு எல்லாவிதமான சலுகைகளும் உடனடியாகக் கிடைக்கின்றன. ஆனால் பி பிரிவு பள்ளிகளிலிருந்து சென்றவர்கள் பெரும்பான்மையாக இருந்தும், அவர்களுக்கு இந்த வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதைக் குறித்தும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது உரையை முடிப்பதற்கு முன்பாக மிக முக்கியமான மூன்று விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக பதவி உயர்வு செய்ய வேண்டும். அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அவர்களுக்கு ஏதாவது ஒரு குறைந்த அளவு பயிற்சியைக் கொடுத்தாவது, இந்தப் பதவி உயர்வைக் கொடுக்கலாம் அல்லது வேறு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்தாவது பதவி உயர்வு கொடுக்கலாம். எப்படியும் இந்த இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





(பிற்பகல் 6-50)

அதைப் போலவே உயர்நிலைப் பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளிகளிலும் பி.டி. பட்டம் பெற்று, புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆந்திரா அரசு கல்வித் துறை இது குறித்து ஒரு அரசாணையை வெளியிட்டிருக்கிறது. ஆந்திர அரசு ஆணை எண் 886, நாள் 25—8—1977. அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்கு மிகச் சிறப்பாக ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின் நகல் ஒன்றை கல்வித் துறை இயக்குநர் அலுவலகத்தில் கொடுத்திருக்கிறோம். 1976 ஆம் ஆண்டு வரை பி.டி. பட்டம் பெற்ற, அத்தனை பேரும் பி.டி. ஆசிரியர்களாகப் பதவி உயர்வு செய்யப்படுவார்கள் என்று அந்த அரசாணையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாமும் செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இறுதியாக, ஓய்வு பெறும்போது பத்தாயிரம் ரூபாய் உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை ஆசிரியர்கள் சார்பாக, அரசு ஊழியர்கள் சார்பாக பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இது குறித்து அரசுக்கும் அதிக நிதிச் சுமை ஏற்படுத்தாமல் அதே சமயத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகமொத்தம் ஏழரை இலட்சம் பேருக்கும் பயன்படும் திட்டமொன்றை நாங்கள் தயாரித்து வைத்திருக்கிறோம். மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள் அதிகாரபூர்வமான ஒரு அழைப்பை எங்களுக்கு அனுப்புவார்களேயானால், நாங்கள் வந்து எங்களுடைய திட்டத்தை விரிவாகச் சொல்லத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் இருக்கிற பள்ளிகளுக்கும், நகராட்சி மன்றங்களின் கீழ் இருக்கிற பள்ளிகளுக்கும், மாநகராட்சியின் கீழ் இருக்கிற பள்ளிகளுக்கும், தனியார் நிர்வாகங்களின் கீழ் நடைபெறுகிற பள்ளிகளுக்கும், ஆக அத்தனை பள்ளிகளுக்கும் அரசு மானியம் முழுவதும் கொடுக்கப்படுகிறது என்றாலும், அங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பூரண பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஊராட்சி ஒன்றிய நகராட்சிப் பள்ளிகளையும், மாநகராட்சிப் பள்ளிகளையும், தனியார் பள்ளிகளையும் தேசியமயமாக்கி அவற்றை அரசே தன்னுடைய நேரடி நிர்வாகத்தில் கொண்டு வந்து அந்த ஆசிரியர்களுக்கு ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்களை, சங்கடங்களை, இன்னல்களை, இடர்ப்பாடுகளை நீக்க வேண்டு மென்று இந்தச் சமயத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும்

இந்த அரசையும் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் எனக்குக் கால அவகாசத்தை நான் விரும்பிய அளவுக்குக் கொடுக்காததன் காரணமாக . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் விரும்பிய அளவுக்குப் பேசிவிட்டார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** எஞ்சியவற்றை கல்வி மானிய கோரிக்கையின் மீது பேசும்போது சொல்லுகிறேன் என்று தெரிவித்துக் கொண்டு, ஆசிரியர்கள்—பட்டதாரிகள் முன்னணியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு, நாங்கள் சொன்ன கருத்துக்களை, ஆசிரியர்கள் தானே சொல்லுகிறார்கள் என்று அலட்சியமாக நினைக்காமல் அவற்றையெல்லாம் நல்ல முறையிலே பரிசீலனை செய்து நியாயமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் என்ற முறையில் இந்தி பற்றிய கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது பற்றிய விளக்கத்தைத் தெரிவிப்பது நாட்டுக்கும் நல்லது, நமக்கும் நல்லது என்பதால் அதைப்பற்றிக் கூற முன்வருகிறேன்.

நாம் இப்போது தமிழோடு ஆங்கிலத்தையும் படிக்கிறோம். வளர்ந்து வருகிற பெரும்பான்மை நாடுகளில் தாய் மொழியிலே படித்து அறிவை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரே மொழியைத்தான் படிக்கிறார்கள். ஆகவே எல்லோரும் ஒரே மொழியைப் படித்துக் கொண்டிருக்கிறபோது, இரண்டு மொழி படிப்பது என்பது கூட அதிகமான பாரம் என்று கருத வேண்டும். அதற்கு மேலும் ஒரு மொழி படிக்க வேண்டும் என்று சொல்லுவது, ஆசிரியர் என்ற முறையில், சரியல்ல என்பது என்னுடைய கருத்து. அப்படிப் படிக்கச் சொல்லுவது அறிவை பலியாக்கி மொழியறிவு வளர்ச்சிக்குச் செய்கிற காரியமாக இருக்கும். பிகாரில் இருக்கிறவன் ஒரு மொழியில் படித்து முன்னேறிக் கொண்டிருக்கிற நேரத்தில், தமிழக மாணவர்களை பீகார் மாணவர்களைவிட தாழ்வாக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. இரண்டு மொழியே அதிகம் என்ற அளவில், மேலும் மூன்றாவது மொழி வேண்டுமென்று சொல்லுகிற கருத்தை, ஆசிரியர் என்ற முறையில், மாண்புமிகு உறுப்பினர் கைவிட்டுவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.





**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மூன்றாவது மொழியைப் படிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தப் போவதில்லை. தங்களுடைய எதிர்கால நன்மைக்காக மாணவர்கள் இன்னொரு மொழியைப் படிக்க விரும்பினால், அவர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தின் உள்ளடக்கம். இந்திக்கு ஆதரவாகப் பேசினேன் என்று சொல்ல வேண்டாம். இந்தியைக் கடுமையாக எதிர்த்துப் போராடிய குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தியைப் பள்ளியிலே பாடமாக ஆக்கலாம் என்ற கருத்தை ஆசிரியர்களின் சார்பிலே தெரிவிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய பேச்சிலே குறிப்பிட்டார்கள். நானும் ஆசிரியர்கள் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டவன் தான். அவர் கூறிய கருத்தை ஆசிரியர்கள் சார்பிலே என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே உயிர் நீத்தவர்களில் சின்னசாமி, உடையார்பாளையம் வேலாயுதம் ஆகிய ஆசிரியர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் வழி வந்தவர்களே ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கவர்னர் உரையின் மீது பேசுகிறாரா? அல்லது தம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறாரா?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களுடைய கருத்தை ஆசிரியர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகத்தான் சொல்லுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் ஆசிரியர்கள் முன்னணியின் சார்பாக அந்தக் கருத்தைத் தெரிவித்தேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை நான்கு மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-55)

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. *Statutory Rules and orders.*

81. Notification issued with G.O. Ms. No. 581, Rural Development and Local Administration, dated the 17th April 1978 in regard to amendments to the Rules for the personal conduct of officers and servants of Panchayat Union Councils contained in paragraph 33 in Part II of the Manual on Panchayat Administration, 1967. [Laid on the table of the House under section 199(2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

82. Notification issued with G.O. Ms. No. 1838, Agriculture, dated the 20th November 1978 in regard to exclusion of certain villages from Pudur Regulated Market in Tirunelveli district. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

83. Notifications issued with G.O. Ms. No. 1850, Agriculture, dated the 21st November 1978 in respect of regulation of trade in Rubber in Kanyakumari district. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

84. Notification issued with G.O. Ms. No. 1513, Labour and Employment, dated the 2nd December, 1978 appointing Thiru P. G. Kittu, M. L. A., as a member in the reconstituted Tamil Nadu Labour Welfare Board. [Laid on the table of the House under section 41 (5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972).]

## B. *Reports, Notifications and Other* **Papers.**

**Nil.**

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1979 பிப்ரவரி 14.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Selection Grade for Drawing Masters.*

*21. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that many Drawing Masters in Coimbatore district have not been awarded Selection Grade Scale of pay; and

(*b*) if so, the reasons therefor?

### ஓவியப் பயிற்சி ஆசிரியர்களுக்குத் தேர்வுநிலை.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஓவியப் பயிற்சி ஆசிரியர் பலருக்கு தேர்வுநிலை சம்பளவிகிதம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 25—2—1978 வரை அரசினர் உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றிவரும் 27 ஓவிய ஆசிரியர்களுக்கு தேர்வுநிலைப் பதவி வழங்கப்பட்டு அவர்களுடைய சம்பளமும் தேர்வு நிலை சம்பள விகிதத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திலுள்ள அரசினர் பள்ளிகளில் பணியாற்றும் எந்த ஒரு ஓவிய ஆசிரியருக்கும் தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய கருத்துரு எதும் நிலுவையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே, உள்ளாட்சித் துறையின் கீழ் உள்ள நகரவைப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களின் அனைத்துப் பணிக்காலத்தையும் தேர்வு நிலை வழங்குவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆணை இருக்க, அதை நிறைவேற்றவில்லை என்று கூறப்படுகிறது. அனைத்துப் பணிக்காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தேர்வு நிலை வழங்கவில்லை என்பது உண்மையா? அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தப் பிரச்சினை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : கல்வித் துறை பிறப்பிக்கின்ற ஆணையை, குறிப்பாக உள்ளாட்சித் துறையின்கீழ் பணி புரிகிற ஆசிரியர்களுக்கு நிறைவேற்றுவதிலே பல தடைகள் இருக்கின்றன. திருநெல்வேலி நகராட்சியில் இதுபோல் இருப்பதை நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். கல்வித் துறையின் அரசாணை எண் 333 நகராட்சிப் பள்ளிகளுக்கும்; ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும் பொருந்தாதென்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இனிமேல் இப்படிப் பட்ட நிலைமை வராமல் பார்த்துக்கொள்ள, அந்த ஆணையிலேயே ஊராட்சி, நகராட்சிப் பள்ளிகளுக்கும் இது பொருந்துமென்ற வார்த்தைகளைச் சேர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பரிசீலிக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : கல்வித் துறையைப் பொறுத்த அளவில் நல்ல நோக்கத்தோடு ஆணையிடுகிறார்கள். ஒரு ஆசிரியர் ராஜினாமா செய்திருந்தாலும், வேறு காரணங்களால் பள்ளியை விட்டு விலகியிருந்தாலும், அந்த ஆசிரியர் வேலையில்லாமல் இருந்த காலத்தை நீக்கிவிட்டு, பணியாற்றிய அனைத்துக் காலத்தையும் சேர்த்துக்கொண்டு, பத்து ஆண்டுகள் ஆகியிருந்தால், தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று தெளிவாக அரசு ஆணையிருக்கிறது. அப்படி இருந்தும், உள்ளாட்சித் துறைப் பள்ளியிலே, ராஜினாமா செய்து விட்டு வந்த பிறகு, ஊதியம் கிடையாது, பழைய பணிக் காலத்தையும் சேர்த்து தேர்வு நிலை கொடுத்தது தவறு, என்று ஆடிட் அப்ஜெக்‌ஷன் சொல்லி, கொடுக்கப்பட்ட சம்பளம் பிடிக்கப்படுகிறது. எனவே இது குறித்து தக்க உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு ஆணையிட்டிருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினரவர்களே சொன்னார்கள். அந்த ஆணையை முறையாகச் செயல்படுத்த கல்வித் துறை முயற்சி எடுத்துக்கொள்ளும்.



திரு. சி. ரா. லெட்சுமினாதன்: கல்வித் துறை ஆசிரியர்களுக்காக வெளியிடும் ஆணைகள் பிற துறைகளுக்கும் பொருந்துமென்று சென்ற கூட்டத் தொடரிலேயே அமைச்சரவர்கள் கூறினார்கள். கல்வித் துறை ஆணையை உள்ளாட்சித் துறை மதிக்க மறுக்கிறது என்பதுதான் பிரச்சினை. ஆதலால் கல்வித் துறை ஆணையை உள்ளாட்சித் துறையும் உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று ஓர் உத்தரவு சென்றாலொழிய, அது நடைபெறப் போவதில்லை. பல ஆண்டுகளாக இருக்கும் இந்தப் பிரச்சினை தீரப் போவதில்லை. எனவே கல்வித் துறையின் அரசாணை எண் 333-ஐ உள்ளாட்சித் துறை செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவு அனுப்புவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஓர் உத்தரவு உடனடியாகச் செயல்பட வேண்டுமென்பதுதான் கோரிக்கை. அதற்காக இன்னொரு உத்தரவைப் போடுவதைவிட, அதை உடனடியாகச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கல்வித் துறை போடுகின்ற ஆணைகளைத் தொடர்ந்து, உள்ளாட்சித் துறையில் மட்டுமல்ல, அரிசன நலத் துறை மற்றும் எந்தெந்தத் துறைகளில் ஆசிரியர்கள் இருக்கிறார்களோ அத்தனை துறைகளிலும் தனித் தனியாக ஆணை பிறப்பிக்க தாமதம் ஏற்படுகிறது. அதை அமுல்படுத்துவதிலும் தாமதம் ஏற்படுகிறது. எனவே எந்த ஆணை பிறப்பித்தாலும், அது எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும் வகையில் செய்ய ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : கேள்வி பதிலிலிருந்து கல்வித் துறையின் ஆணைகளை நிறைவேற்றுவதில் உள்ளாட்சித் துறைக்குச் சங்கடம் இருப்பதாகத் தெரிகிறது. எனவே மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களே உள்ளாட்சித் துறைப் பொறுப்பையும் ஏற்றுச் செயல்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உள்ளாட்சித் துறையின்கீழ் உள்ள பள்ளிகளின் பொறுப்பு என்று சொன்னால், பொருத்தமாக இருக்கும்.

*Teachers who have won Best Teacher Award.*

*22. Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether there is any proposal with the Government to provide special incentives to the retired teachers who have won Best Teacher Award ; and

(b) if so, the details thereof ?

**நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்கள்**

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நல்லாசிரியர் விருது பெற்ற ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு ஊக்க சிறப்பு நிதி கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஆசிரியர்களிலே சிறந்த பணி செய்தவர்களை நல்லாசிரியர்களென்று தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பட்டயம் எல்லாம் வழங்குகிறோம். அதைக்கொண்டு அவர்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை. நல்லாசிரியர்கள் பட்டம் பெற்றவர்கள் ஓய்வு பெறும்போது, அவர்களுக்கு இன்சென்டிவ் போனஸ் மாதிரி ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு ஒரு தொகையைக் கொடுக்க ஒரு திட்டமிட்டிருந்தால்தான், நல்லாசிரியர்கள் விருது பெறுவதற்கு ஓர் உயிர் வரும். எனவே அது குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

(திரு. செ. முத்துசாமி எழுந்தார்.)



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உங்கள் ஒருவரை அனுமதித்தால், இன்னும் மூன்று பேர்களை அனுமதிக்க வேண்டுமே. (சிரிப்பு).

**திரு. க. அறிவழகன் :** நல்லாசிரியர் விருது பெருவதற்கான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை இப்போது சரியாக அமையவில்லை என்று ஆசிரியர்களிடத்திலே ஒரு கோரிக்கை இருக்கிறது. நல்லாசிரியர்களைத் தேர்ந்தெடுக்கின்ற குழுக்கள் இப்போது இருப்பதுபோல் இல்லாமல், பரவலான முறையில் நல்ல குழுக்கள் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் அரசுக்கு வரவில்லை.

**திரு. பி. ஆர். தாமஸ் :** நல்லாசிரியர் விருது என்று குறிப்பிட்டிருப்பது தேசிய நல்லாசிரியர் விருதா அல்லது மாநில நல்லாசிரியர் விருதா? தேசிய நல்லாசிரியர் விருதைப் பொறுத்தவரையில், பணிக்காலம் அந்த ஆசிரியர்களுக்கு 5 ஆண்டுகள் நீட்டிக்கப்படுகிறது. மாநில விருது பெற்றவர்களுக்கு அவ்வாறு 5 ஆண்டுகள் நீட்டிக்கப்படுகின்ற வாய்ப்பு அளிக்கப்படுகின்றதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மத்திய அரசு நல்லாசிரியர்கள் விருது பெற்றவர்களுக்கு 5 ஆண்டுகள் நீட்டிப்பு தந்து வந்தது உண்மைதான். அதை வைத்துக்கொண்டு மாநில அரசு நல்லாசிரியர் விருது பெற்றவர்களும் அத்தகைய நீட்டிப்பு வேண்டுமென்று கேட்டுக்காண்டதும் உண்மைதான். ஆனால் மத்திய அரசு அதை நிறுத்திவிட்டதால், இப்போது இரண்டும் இல்லாதிருக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

**புலவர் புலமைப்பித்தன் :** நல்லாசிரியர்கள் விருது பெரும்பாலும் தமிழாசிரியர்களுக்குத் தரப்படுவதில்லை என்ற புகார் அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. ஒருவேளை தமிழாசிரியர்கள் நல்லாசிரியர்களாகக் கருதப்படவில்லையோ என்ற சந்தேகம் இருக்கிறது. அதற்கு அமைச்சரவர்கள் விடையளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழாசிரியர்களுக்கும் தரப்படுகிறது.

**திரு. செ. முத்துசாமி :** தற்போது நல்லாசிரியர் விருது தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மட்டுமே வழங்கப்படுகிறது. கல்லூரி ஆசிரியப் பெரு மக்களுக்கு வழங்கப்படுவதில்லை என்ற

குறையை அவர்கள் சொல்லுகிறார்கள். இவர்களும் அது குறித்து அரசுக்குக் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் நல்லாசிரியர் விருது தர அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்த விருது ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு என்ற வகையிலே தந்து கொண்டிருக்கிறார்கள். அதை இப்போது நீட்டிக்கின்ற உத்தேசமில்லை.

(பிற்பகல் 4-10)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நல்லாசிரியர் விருது பெற்றவர்களுக்கு பணி நீட்டிப்பு தருவதற்கில்லை என்று சொல்கிறார்கள். மத்திய அரசு நிறுத்தி விட்ட காரணத்தால், மாநில அரசும் தரவில்லை என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாநில அரசு அப்படித் தராதபோதே, மத்திய அரசு தந்துகொண்டிருந்தது. நமது மாநிலம் எல்லாவற்றிலும் முன்னோடியாக இருப்பதுபோல, நமது மாநிலம் அவர்களுக்குப் பணி நீடிப்பு தருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மத்திய அரசு நிறுத்தியதன் காரணமாக நிறுத்தவில்லை. இது அரசியல் அமைப்பின் விதி 14-ஐ மீறுவதாக இருக்கிறது. ஆகவே சட்டத்தை மீறுவதில் நாம் முன்னோடியாக இருக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆசிரியர்கள் ஒருவர் பக்கத்தில் ஒருவர் அமர்ந்திருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு கேள்வியை மொத்தமாகக் கேட்டாலும் போதும்.

**திரு. செ. முத்துசாமி :** பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு விருது வழங்கப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் முதுகலைப் பட்டம் பெற்ற பேராசிரியர்கள் இருக்கிறார்கள். துணைப் பேராசிரியர்களாகவும் இருக்கிறார்கள். ஆசிரியர்களில் பயிற்சி பெற்றவர்களாக இல்லாவிட்டாலும், உயர் கல்வி பெற்றவர்களாக இருப்பவர் களையும் நாம் ஆசிரியர்களாக ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு அந்த விருது தருவதற்கு அரசு முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவர்கள் தனிப் பிரிவாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மேல்-நிலையில் பணியாற்றுவதால், அவர் களுக்கு அந்த விருதைத் தருவது குறித்து எந்த முடிவையும் அரசு எடுக்க வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** நல்லாசிரியர்கள் தேர்ந்தெடுப்பதில் அதிகாரிகள் ஒரு சார்பாக நடந்துகொள்கிறார்கள் என்ற புகார் பரவலாக இருப்பதால், அந்தக் குறையைக் களைவதற்கு, நல்லாசிரியர்களைத் தேர்ந்தெடுக்கின்ற குழுவில் ஆசிரியர்களின் பிரதிநிதிகளையும் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்த மாதிரியான புகார்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், அது குறித்து விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** நல்லாசிரியர் விருதைப் பெறும் ஆசிரியர்கள் பெறக்கூடிய ஆதாயம் வெறும் சர்டிபிகேட் மட்டுமா ? அதல்லாமல் பொருளாதார ஆதாயங்கள் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது விருது மட்டும்தான் ஆசிரியர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நல்லாசிரியர் விருது பெறுவதற்கு, C.E.O., D.E.O., D.I. போன்ற அதிகாரிகளைக் காக்காய் பிடிக்கும் நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். இவர்கள் மூலமாகத்தான் விருது பெறக் கூடிய நிலை இருக்கிறது. அந்த அதிகாரிகளின் சிபாரிசு இல்லாமல் பெற முடியாது. இதற்கு என்று தனியாக ஆசிரியர்கள் அடங்கிய ஒரு குழு அமைத்து அந்தக் குழுவின் சிபாரிசில் இந்த விருதை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற புகார்களை ஏற்றுக்கொள்வதற்கில்லை. இந்த விஷயத்தை நாம் D.I., D.E.O., C.E.O. போன்ற கல்வி அதிகாரிகளின் பொறுப்பில் விட்ட தற்குக் காரணம் அந்த ஆசிரியர்கள் எப்படி பணி ஆற்றுகின்றார்கள், அவர்கள் சிறப்பான பணியாற்றுகின்றார்களா என்று தெரிந்து வைத்திருப்பார்கள் என்பதால்தான். அவர்கள் அந்தப் பணியில், துறையில் இருப்பவர்கள். அந்தப் பணிபற்றித் தெரியாதவர்கள் அடங்கிய குழுவிடம் விட்டால், அவர்களை ஆசிரியர்கள் காக்காய் பிடிப்பது போன்ற நிலைமைகள்தான் வந்து விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## Moderation Board.

* 23. *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Moderation Board had been constituted in connection with the 10th Standard School Final Examination held during 1978;

(*b*) if so, the subjects and the number of marks given additionally; and

(c) the increase in the percentage of the successful students as a result thereof?

## "மாடரேஷன் போர்டு".

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு 10 ஆம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வை யொட்டி "மாடரேஷன் போர்டு" (Moderation Board) அமைக்கப் பட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எந்தெந்தப் பாடங்களில் எவ்வளவு மதிப்பெண்கள் கூடுதலாக அளிக்கப்பட்டன?

(உ) இவ்வேற்பாட்டால் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை சதவீதம் அதிகமானது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ), (இ) & (உ) தேர்வுகள் பற்றிய விவரங்கள் யாவும் பொது நலன் கருதி ரகசியமாகக் கொள்ளப்பட வேண்டியவையாதலால், கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு பதில் அளிக்க இயலவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## Issue of Government Orders in Tamil.

* 24. *Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to issue all the Government Orders issued by Education Department in Tamil; and

(*b*) if so, the date from which this will be implemented?



## அரசு ஆணைகளை தமிழில் வெளியிடுதல்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித்துறை வெளியிடும் அரசு ஆணைகள அனைத்தையும் தமிழில் வெளியிடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. செ. முத்துசாமி:** தலைவர் அவர்களே, தமிழுக்காக இந்த அரசு எவ்வளவோ சலுகைகளை அளித்துக்கொண்டிருக்கிறது. தமிழ் படித்தவர் களுக்குப் பல்வேறு நன்மைகள் செய்வதற்கு, தமிழை வளர்ப்பதற்கு, தமிழ் ஆராய்ச்சி செய்வதற்கு என்று தேவையான திட்டங்களை எல்லாம் இந்த அரசு தீட்டி வருகிறது. அப்படி இருக்கும்போது, கல்வித் துறையிலாவது, தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்ட பின்னர், தமிழில் ஆணைகளை வெளியிட வேண்டும். அதிலே அரசுக்குச் சிரமங்கள் இருக்கலாம். தமிழ்த் துறை வளர்ச்சி பெற்றிருக்கின்ற இந்தக் காலத்தில், தமிழ் வளர்ச்சித் துறையிலும் அரசு ஆணைகளை யெல்லாம் தமிழில் வெளியிடுவதுதான் அரசின் கொள்கை என உறுதியளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி அரசு ஆணைகள் அனைத்தும் தமிழிலேயே இருக்க வேண்டும் என்பது. கல்வித் துறையிலிருந்து நிதி சம்பந்தப்பட்ட உத்தரவுகள், அரசு ஆணைகள் அக்கவுண்ட்டன்ட் ஜெனரல் அலுவலகத்திற்குப் போகவேண்டி யிருக்கிறது. நிதி சம்பந்தமான ஆணைகள் ஆங்கிலத்தில்தான் போகவேண்டி யிருக்கிறது. அந்த உத்தரவுகள் ஆங்கிலத்தில் இருந்தால்தான், அக்கவுண்ட் டன்ட் ஜெனரல் அலுவலக அலுவலர்கள் அந்த உத்தரவை மதிக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் நிதி பற்றிய உத்தரவுகள் ஆங்கிலத்தில் போடப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்த அரசினுடைய துறைகளில், எந்தெந்தத் துறைகளில் ஆங்கிலத்தில் மட்டும் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அங்கத்தினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** இதுவரையில் கல்வித் துறையிலிருந்து ஆசிரியர்களுக்கு தமிழில் ஒரே ஒரு ஆணைதான் போட்டிருக்கிறார்கள். அதுவும் திரு. திரவியம் அவர்கள் கல்வித் துறைச் செயலாளராக இருந்தபோது வந்தது. ஆசிரியர்கள் மதிய உணவுத் திட்டத்தில் பொறுப் பேற்க, கடமையாற்ற என்று அந்த ஆணை தமிழில் போடப்பட்டது. அந்த நோத்தில் அது ஆசிரியர்களுக்குப் பாதகமாக இருந்தபோதிலும், அந்த ஆணை தமிழிலே இருந்ததே என்று பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா ஆணைகளையும் தமிழிலேயே போட வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலேதான் அக்கவுண்ட்டன்ட் ஜெனரல் அலுவலகம் இருக்கிறது. நமது அரசிலிருந்து அனுப்புகின்ற தமிழ் ஆணைகளை அவர்கள் மதிக்கத் தவறுகிறார்கள். தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது என்ற நிலை இருக்கும்போது, அங்கு அது செல்லாத நிலை இருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழுக்கு மரியாதை இல்லை. இன்றைக்கு தமிழால் வளர்ந்த அரசு, தமிழையே உயிர் மூச்சாகக் கொண்டுள்ள அரசு, தமிழிலே ஆணை வெளியிட்டால், அக்கவுண்டன்ட் ஜெனரல் ஆபிசில் மதிப்பதில்லை என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா ஆணைகளையும் தமிழிலே வெளியிடுவதற்கு அரசு நிச்சயமாக முயற்சிக்கும். தமிழோடு ஆங்கிலமும் இருக்கின்ற நிலைமையில், எங்கெங்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமோ அங்கு பயன்படுத்திக்கொள்கிறோம்.

THIRU G. VASANTHA PAI : Sir, I am glad that the Hon. Minister is giving an assurance that it will also be in English, because there are people like me, sitting near Thiru Muthuswamy, who do not know Tamil and we should also know the proceedings which are happening and it is no use having it only in one language. Order must be both in English and in Tamil. We are not saying that it should be only in English ; we want them to be both in Tamil and English.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** ஆங்கிலத்தோடு தமிழ் என்று திரு. வசந்தபை அவர்கள் சொல்கிறார்கள். இரு மொழிக் கொள்கை இருக்க வேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், ஆங்கிலத்தில் ஆணை சென்றால்தான், தணிக்கைத் துறையில் மதிக்கிறார்கள் என்று



அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். நம்மை மதியாரை நாம் மதிக்க வேண்டுமா ? நமது ஆட்சி தமிழிலேதான் நடந்து வருகின்றது. இந்த அரசு அந்த உரிமையை நிலைநாட்ட முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவர்கள் எல்லாம் மதிக்க வேண்டும் என்பதற்காகத்தானே நாம் ஆங்கிலத்தையும் ஒத்துக்கொண்டிருக் கிறோம்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** தணிக்கை அலுவலகத்தில் அவர்கள் தமிழையும் ஒத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**திரு. க. அறிவழகன் :** 'பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி' பொதுக் கணக்குக் குழுவில் தமிழில் அறிக்கை வேண்டுமென்று A.G. க்குச் சொல்லப்பட்டு, அவர்கள் எங்களுக்கெல்லாம் தமிழில் அறிக்கை தந்துகொண் டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் தமிழ் நாட்டில் கல்வித் துறை, நிதித் துறை சம்பந்தமான அறிக்கைகளைத் தமிழிலேயே தயாரிக்க அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தற்போது இருந்துகொண்டிருக் கின்ற சங்கடத்தைத்தான் நான் இங்கே எடுத்துச் சொன்னேன். அதைக் குறித்து அவர்களிடத்திலே பேச்சு வார்த்தை நடத்துவதற்கு முயற்சி எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Express Bus Service from Krishnagiri to Madras.*

*25. *Q.*—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal to run an Express Bus Service to Madras direct from Krishnagiri in the interests of the large number of travelling public ; and

(*b*) if so, when the bus service will be run?

இருஷ்ணகிரியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பயணம் செய்யும் ஏராளமான மக்களின் நலனுக்காக, கிருஷ்ணகிரி யிலிருந்து சென்னைக்கு நேரடியாக விரைவுப் பேருந்து ஒன்று விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அப்பேருந்து விடப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(இ) 27 செப்டம்பர் 1978 முதல் இத்தடத்தில் பேருந்துகள் இயக்கப் படுகின்றன.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இப்போது நாமக்கல்லிலிருந்து சென்னைக்குப் போவதற்கு மிகச் சிரமமாக இருக்கிறது. அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே விண்ணப்பித்திருக்கிறார்கள். அதைப்பற்றிப் பரிசீலனை செய்து, அத்தடத்தில் பேருந்து விடப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் நேற்று இதைப்பற்றிக் கூறினார்கள். அது குறித்து நடவடிக்கை எடுக்கு மாறு, விரைவுப் பேருந்து இயக்குநருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

திரு. க. அறிவழகன் : மாயவரத்திலிருந்து சென்னைக்கு வருவதற்கு அங்கிருந்து வழித்தடம் ஒன்றுமில்லை. அங்கிருந்து வருவதற்கு மற்ற வழித் தடத்தில் இடம் பிடிக்க சிரமமாக இருக்கின்றது. அதைப் பற்றி அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : "ஆக்குபன்சி ரேஷியோ" (Occupancy ratio) சரியாக இருக்குமானால், கணக்கெடுத்து அதன் அடிப் படையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

(ஒரே நேரத்தில் இரண்டு மூன்று ஆசிரியர் தொகுதி உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து எழுந்து பேச முற்பட்டனர்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மற்ற உறுப்பினர்களை இந்த விஷயத் தில் கொஞ்சம் பேச விடுங்கள்.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தஞ்சாவூர் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஊர். புராதனப் பிரசித்தி பெற்ற கோயில்கள் அங்கே நிறைய இருக்கின்றன. ஆகவே தஞ்சாவூரிலிருந்து மாயூரம், குடந்தை வழியாக சென்னைக்கு ஒரு விரைவுப் பேருந்து விடப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றி ஆராயப்படும்.

திரு. சி. இராமலிங்கம் : பண்ருட்டியிலிருந்து சென்னைக்கு வருவதற்கு விரைவுப் பேருந்து வசதி இல்லாததால், ரொம்பவும் சிரமமாக இருக்கிறது. பண்ருட்டி பெரிய வியாபார ஸ்தலம். புராதனச் சிறப்புடைய நகரம். பண்ருட்டியிலிருந்து புதுப்பேட்டை, அரசூர், விழுப்புரம் வழியாக சென்னைக்கு விரைவுப் பேருந்து விட வேண்டுமென்று அங்குள்ள மக்களும் நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரவர்கள் நிறைவேற்றிக் கொடுப்பாரா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றிய ஆய்வு தற்போது அரசிடம் இல்லை. அதுபற்றி ஆய்வு நடத்தப்படும்.

*Ships of Shipping Corporation of Tamil Nadu.*

*26. Q.—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of Ships owned by the Shipping Corporation of the Tamil Nadu Government as on 16th October 1978 ; and

(*b*) the price at which each was purchased ?

தமிழ்நாடு கப்பல் போக்குவரத்துக் கழக கப்பல்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 16 அக்டோபர் 1978 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான கப்பல்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) ஒவ்வொன்றும் என்ன விலைக்கு வாங்கப்பட்டது ?

[1979 பிப்ரவரி 14

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) அரசுக்குச் சொந்தமான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் இரு கப்பல்கள் உள்ளன.

(இ) "எம். வி. தமிழ்ப் பெரியார்" என்று மறு பெயர் சூட்டப்பட்ட "இந்தியன் எண்டவர்" என்ற கப்பல் ரூ. 75 லட்சத்திற்கும், "எம்.வி. தமிழ் அண்ணா" என்று மறு பெயர் சூட்டப்பட்ட "எம்.வி. யமஹறன மாறு" என்ற கப்பல் ரூ. 109 லட்சத்திற்கும் வாங்கப்பட்டன.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தக் கப்பல்களை வாங்குவதற்காக அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் ஏதாவது பெற்றிருக்கிறதா? இந்த நிறுவனத்தினுடைய கணக்குகள் எல்லாம் எந்த தேசியமயமாக்கப் பட்ட வங்கியில் வைக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் தரப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா மூலமாக, ஷிப்பிங் டெவலப்மெண்ட் பண்டு மூலமாக மத்திய அரசின் உதவி பெற்று வாங்கப்பட்டிருக்கிறது. எந்த வங்கியில் கணக்குகள், அக்கவுண்ட்ஸ் வைக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல் இல்லை.

**திரு. டி. சந்தோஷம் :** பொதுவாக பொதுத் துறை நிறுவனங்கள் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருப்பதுபோல் இதுவும் நஷ்டத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கிறதா? அல்லது லாபத்தில் ஓடிக்கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நஷ்டத்திலேதான் இரண்டு கப்பல்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த நிறுவனத்தினுடைய கணக்குகள் எல்லாம் தமிழகத்தை பேஸாக அடித்தளமாகக் கொண்டு இயங்கி வருகின்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் தான் வைக்கப்பட்டிருக்கின்றன என்கிற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அப்படியானால் அதை மாற்றியமைக்க அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** எந்த வங்கியில் கணக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவலை உறுப்பினர் தெரிந்தால் தெரிவிக்கலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** பஞ்சாப் நேஷனல் வங்கி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பஞ்சாப் நேஷனல் வங்கி கூட மைய அரசினால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒன்று என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1979 பிப்ரவரி 14]

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தமிழக அரசுக்குச் சொந்தமாக 2 கப்பல்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். முதல் கப்பல் வாங்கியது எந்த வருடம்? இரண்டாவது கப்பல் வாங்கியது எந்த வருடம்? நஷ்டம் என்றும் குறிப்பிட்டார்கள். வருடத்திற்கு எவ்வளவு நஷ்டம்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இரண்டு கப்பல்களுமே 1974 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டிருக்கின்றன. 1974-75 ஆம் ஆண்டில் தமிழ் அண்ணா 8,63,110 ரூபாயும், தமிழ்ப் பெரியார் 28,78,341 ரூபாயும், 1975-76 ஆம் ஆண்டில் தமிழ் அண்ணா 1,13,11,739 ரூபாயும், தமிழ்ப் பெரியார் 92,87,192 ரூபாயும், 1976-77 ஆம் ஆண்டில் தமிழ் அண்ணா 83,68,074 ரூபாயும், தமிழ் பெரியார் 39,17,540 ரூபாயும், 1977-78 ஆம் ஆண்டில் தமிழ் அண்ணா 34,80,844 ரூபாயும், தமிழ் பெரியார் 67,23,821 ரூபாயும் முறையே வருவாய் தேடித் தந்திருக்கின்றன. ஆனால் இழப்பாக ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 69 லட்ச ரூபாய் மொத்த இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த இழப்பு, ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, சற்று அதிகமாகும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** இவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கும் நிலையிலே இந்தக் கப்பல்களை நாம் வைத்து இயக்குவதனால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய நன்மை அல்லது லாபம் என்ன? எந்த நோக்கத்துக்காக, எந்த வகைக்கு இந்தக் கப்பல்கள் பயன்படுகின்றன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இந்தக் கப்பல்கள் வங்காளம் மற்றும் பீகாரிலிருந்து (நிலக்கரியை ஏற்றிக் கொண்டு) பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திற்குத் தேவைப்படும் நிலக்கரியைக் கொண்டு வருவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இப்பொழுது இழப்பு அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தால், கப்பல்களை விற்று விடுகின்ற முயற்சியில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஈடுபட்டிருக்கிறது.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** இவ்வளவு பெரிய தொகைக்கு இந்தக் கப்பல்களை வாங்கி இவ்வளவு நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்ற நிலையிலே இவற்றைக் கூவத்திலே விட்டு அதில் இருக்கக்கூடிய துர்நாற்றத்தைப் போக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன் (சிரிப்பு).

மாண்புமிகு **திரு. சி. பொன்னையன்** : இந்த இரண்டு கப்பல்களும் வாங்கப்பட்டதன் நோக்கமே சென்னை பேசின் பிரிட்ஜ் பகுதியிலுள்ள மின் சார உற்பத்தி நிலையத்துக்கு "ஹால்டியா" (Haldia) என்ற இடத்திலிருந்து நிலக்கரி ஏற்றி வர வேண்டும் என்பது தான். கூவத்தில் வீட்டு துர்நாற்றத்தை நீக்க அல்ல.

**திரு. ம. சங்கரலிங்கம்** : இரு கப்பல்களையும் இயக்குவதனால் மிகப் பெரிய தொகை நஷ்டமாக வருகிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். தனியார் கப்பல் போக்குவரத்தில் லாபம் கிடைக்கும்பொழுது, பொதுத்துறையில் மட்டும் நஷ்டம் ஏற்படக் காரணம் என்ன? ஏன் நஷ்டம் ஏற்பட்டது என்பது பற்றி ஆய்வு நடத்தப்பட்டதா? அந்தக் காரணத்தைக் கண்டுபிடித்து, அதனைக் களைய என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

மாண்புமிகு **திரு. சி. பொன்னையன்** : ஏன் நஷ்டம் ஏற்பட்டது என்பது பற்றி ஆய்வு நடத்தப்பட்டது. இந்த இரண்டு கப்பல்களும் நிலக்கரி ஏற்றி வர மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. அதனால் தான் இதில் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இப்பொழுது கப்பல் போக்குவரத்து உலகத்திலேயே நஷ்டத்தில்தான் நடந்து கொண்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி** : நஷ்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், சில பொதுத் துறை நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றிரண்டு வருடங்களில் இதுமாதிரி நஷ்டத்தில்தான் இருந்திருக்கின்றன என்ற போதிலும், சில ஆண்டுகளிலேயே மிகப் பெரிய லாபத்தைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையிலும், முதலில் நஷ்டம் ஏற்பட்டாலும், சில ஆண்டுகளுக்குப் பிறகு லாபம் கிடைத்த பின் அடைந்த நஷ்டத்தையெல்லாம் ஈடு செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதை மனதில் வைத்து இந்தக் கப்பல்களை கடலூர் துறைமுகத்தை மையமாக Base of Operation) வைத்துச் செயல்படுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு **திரு. சி. பொன்னையன்** : "ஹால்டியா" (Haldia) என்ற இடத்திலிருந்து சென்னைத் துறைமுகத்துக்கு நிலக்கரி ஏற்றி வர மட்டுமே இந்தக் கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. சென்னையை மையமாகக் கொண்டுதான் இப்பொழுது இந்தக் கப்பல்கள் இயங்கி வருகின்றன. அண்மையில் கூட கடலூரில் மற்ற சரக்குக் கப்பல்கள், பயணிகள் கப்பல்கள்





ஆகியவை வந்து போவதற்கு மத்திய அரசு இசைவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் மத்திய அரசும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. கப்பல்கள் கடலூர் வழியாகப் போய் வரவும் சரக்குகளை ஏற்றி இறக்கவும் கடலூர் துறைமுகத்தைப் பயன்படுத்த மைய அரசு இணக்கம் தெரிவித்து விட்டது.

**திரு. பி. மாணிக்கம்** : கரை ஓரமாக நிலக்கரியை மட்டுமல்லாமல் வேறு சரக்குகளை ஏற்றி இறக்க இந்த இரண்டு கப்பல்களையும் பயன்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு **திரு. சி. பொன்னையன்** : நிலக்கரியைத் தவிர வேறு பொருள்களை ஏற்றி இறக்க அவ்வளவு பயன்படாது என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி**: இரண்டு கப்பல்களும் நஷ்டத்திலேயே இயங்கி வருவதால் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் இரண்டு கப்பல்களையும் விற்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டு கப்பல்களுமே இப்பொழுது பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டுவரப் பயன்படுகின்றன என்றும் சொன்னார்கள். சமீபத்தில் மத்திய அரசு தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகன்களின் எண்ணிக்கையைக் குறைக்கப் போவதாக ஒரு பயம் இருந்து கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டுக்கு வரக்கூடிய நிலக்கரி கூட இந்தக் கப்பல்களை விற்றுவிடுவதன் மூலம் தடைப்படுமோ என்ற நிலையிலே, பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தின் மின்சார உற்பத்தியும் பாதிக்கப்படக்கூடிய நிலை உருவாகும். ஆகவே இப்பொழுது ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற இழப்பை மேற்கண்ட பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துக்கு மானியமாகத் தந்து மின்சாரத் தட்டுப்பாடு வராமலிருப்பதற்கு இந்த அரசு துணை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு **திரு. சி. பொன்னையன்** : பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், தேவைப்படும் நிலக்கரியை சிங்கரேணியிலிருந்து ரயில் மூலமாகத்தான் கொண்டுவர வேண்டும். ஆனால் ஹால்டியா துறைமுகத்திலேயிருந்து நிலக்கரியைக் கொண்டு வர வேண்டுமென்றால், கப்பல் மூலமாகத்தான் கொண்டுவர வேண்டும். பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், அதற்குத் தேவைப்படும் நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு ஒரு கப்பலே போதும் என்று மின் வாரியத்தினர் கூறியிருக்கிறார்கள். இப்போது ஒரு கப்பல் அந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது

(பிற்பகல் 4-30)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தற்போது பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திற்கு, ஒரு கப்பலே போதும் என்று மின்வாரியத்தினர் சொல்லியிருந்தாலும்கூட, எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கும் நிச்சயமாக நிலக்கரி தேவைப்படுகிறது. எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் நிலக்கரி பற்றாக்குறை வந்துவிட்டால் அதன் விளைவாக நிச்சயமாக மின்சாரத் தட்டுப்பாடு வந்துவிடும். ஆகவே அந்தமாதிரியான ஒரு நிலைமை வராமல் தடுப்பதற்காக, இந்த இரண்டு கப்பல்களையும் இந்தப் பணியில் ஈடுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இரண்டு கப்பல்களுக்கும் தொடர்ந்து வேலை கிட்ட வேண்டும். அதன் காரணமாக நட்டம் குறைய வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், எலெக்ட்ரிசிடி போர்டாரை அணுகி, இரண்டு கப்பல்களுக்கும் தொடர்ந்து வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறது. அது முடியும் என்று நம்புகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இப்போது தமிழ் நாடு அரசு சுரங்கங்களில் ஒரு பகுதியைத் தேசிய உடமையாக ஆக்கியிருக்கிறது. எனவே அவைகளிலிருந்து வெட்டியெடுக்கப்பட இருக்கும் கற்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப இந்தக் கப்பல்களைப் பயன்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** உறுப்பினர் அவர்கள் இதுபற்றித் தனிக் கேள்வி போடலாம்.

## Industrial Estates.

* 27. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to establish new Industrial Estates through SIDCO in Tamil Nadu ; and

(*b*) if so, the names of places and the Districts in which they will be established ?





## தொழிற் பேட்டைகள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் (Sidco) நிறுவனத்தின் மூலம் புதிய தொழிற் பேட்டைகள் (Industrial Estates) ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த எந்த மாவட்டங்களில் எந்த எந்தப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (அ) & (இ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) கீழ்க்கண்ட இடங்களில் புதிய தொழிற்பேட்டை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளது.

| வரிசை எண். | இடத்தின் பெயர். | நிறுவ உத்தேசித்துள்ள தொழிற் கூடங்களின் எண்ணிக்கை. | மாவட்டம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பரமக்குடி | 20 | இராமநாதபுரம் |
| 2 | திருச்செங்கோடு | 20 | சேலம் |
| 3 | மறைமலை நகர் | 35 | செங்கல்பட்டு |
| 4 | அடையார் | 25 | செங்கல்பட்டு |
| 5 | ஓசூர் | 30 | தருமபுரி |
| 6 | நெய்வேலி | 30 | தென் ஆற்காடு |
| 7 | திருப்பூர் | 30 | கோயம்புத்தூர் |
| 8 | பிள்ளையார்பட்டி (தஞ்சை) | 10 | தஞ்சாவூர் |
| 9 | சோமங்கலம் | 15 | செங்கல்பட்டு |
| 10 | கப்பலூர் | 20 | மதுரை |

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** சிட்கோ நிறுவனம் மூலமாக அமைக்கப்படும் தொழிற் பேட்டைகள் முழுவதிலும், தனியாருக்குப் பங்கு உண்டா? அல்லது அரசாங்கமே நேரடியாக இந்தத் தொழிற் பேட்டைகளை அமைத்து தொழில்களையும் நடத்துகிறதா? ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட தொழிற் பேட்டைகள் சிலவற்றில் தனியாருக்கு வாடகைக்கு இடம் அளிக்கப்பட்டு, அவைகளைத் தனியார் இன்னமும் காலியாக வைத்திருக்கிற நிலையில் மீண்டும் அந்த வாய்ப்பு அவர்களுக்குத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : சிட்கோ நிறுவனத்தில் மூல மாகத் தொழிற் கூடங்கள் கட்டுவதை 3 விதமாக வகுத்திருக்கிறார்கள். (1) நீண்டகாலத் தவணை முறை மூலமாக ( Hire purchase basis ) தொழிற் கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன. (2) வாடகையின் அடிப்படையில் சில தொழிற்கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன. (3) சிட்கோ மூலமாகவே சில தொழிற்கூடங்கள் நேரடியாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. எனவே மேற்காணும் 3 வகைகள் மூலமாக தொழிற்பேட்டைகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

திரு. க. இராமமூர்த்தி : தொழிற்பேட்டைகளைப் பொறுத்தவரையில், தென்னாற்காடு மாவட்டத்தில் ஏற்கெனவே தொழில் வளர்ந்திருக்கிற பகுதி களிலேயே இவை அமைந்திருக்கின்றன. எனவே தொழில் வளர்ச்சி இல்லாத செஞ்சி, திண்டிவனம் போன்ற பகுதிகளில் புதிய தொழிற்பேட்டைகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அப்படிப்பட்ட சில குறைபாடு களைப் போக்குகிற வகையில்தான், தமிழக அரசு இன்றையதினம் கிராமப் பகுதிகளில் புதிதாகத் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற அடிப் படையில் தற்போது ஊரகத் தொழிற் துறை என்ற ஒன்றை உருவாக்கி அத னுடைய பொறுப்பை நான் கவனித்து வருகிறேன். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு மார்ச் திங்கள் முடிவதற்குள் 1,000 இடங்களில் 1,000 தொழிற் கூடங்கள் கட்டுவது என்று முடிவெடுக்கப்பட்டு தற்போது 500 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த 500 தொழிற்கூடங்களும் கிராமப் பகுதிகளிலேதான் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் 10, 20 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப் பிட்ட பகுதிகளிலும் அடுத்து நாம் அறிவிக்க இருக்கிற திட்டத்தில், தொழிற் கூடங்கள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு கட்டித் தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அமைச்சர் அவர்கள் தற்போது அறிவித்த பட்டியல்படி கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட் டங்கள் தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டத்திலிருந்து விடுபட்டுப் போயிருக்கின்றன. குறிப்பாக சில மாவட்டங்களில் 60 தொழிற்பேட்டைகள் வரை கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் வரவேற்றாலும், விடுபட்டுப் போன மாவட்டங்கள் எந்தக் காரணத்தால் விடப்பட்டிருக்கின்றன? ஒரு வேளை தொழில் வளம் என்பது, அரசுக் கணக்குப்படி, இல்லாத மாவட்டங்கள்



என்று தவறாகக் கருதப்படுகின்றனவா? ஒரு தொழிற் பேட்டைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கேள்விக்கு விடையளிக்கும்போதே 'சிட்கோ' நிறுவனமே சில தொழிற்பேட்டைகளை நிருவகித்து வருகிறது என்று குறிப் பிட்டேன். அந்த வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம் பகுதியில் 5 தொழிற்பேட்டைகளை 'சிட்கோ' நிறுவனமே நிருவகித்து வருகிறது. இப்போது புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக அறிக்கைகளைப் பெற்று எங்கெங்கே சிறு தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு இருக்கிறதோ அந்தப் பகுதிகளில் மட்டும் நாம் புதிதாக முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. சுருக்க மாக Resources based Industries—small unit என்கிற முறையில், அந்தந்த இடத்திலேயே மூலப்பொருள் கிடைக்க வேண்டும். அப்படிப்பட்ட இடங்களிலே தொழிற்கூடங்களைக் கட்டிக் கொடுப்பதன் மூல மாக, விற்பனைக்கு சிரமம் இல்லாமல் இருக்கும் இடங்களைத் தற்போது தேர்ந்தெடுத்து தொழிற்கூடங்களைக் கட்டிக் கொண்டு வருகிறோம். தொழிற் கூடங்கள் என்பன இந்த மாவட்டத்திலேதான் இருக்க வேண்டும், இந்தப் பகுதியில்தான் இருக்க வேண்டும் என்ற அந்தக் கணக்கைப் பார்க்காமல், எந் தெந்தப் பகுதிகளில் மூலப்பொருள்கள் கிடைக்கின்றனவோ அந்த மூலப் பொருள்களை ஆங்காங்கே பயன்படுத்தும் வகையில் தொழிற்கூடங்களைக் கட்டுகிறோம். அதில் நிச்சயமாக கன்னியாகுமரி மாவட்டம் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. சந்தோஷம் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, கப்ப லூரில் ஒரு தொழிற்பேட்டை கட்டப்போவதாகக் குறிப்பிட்டார்கள். எற் கெனவே அங்கே ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. அதன் மொத்தப் பரப்பில் பாதியிலேகூட தொழிற்கூடங்கள் ஏற்படவில்லை. எனவே புதிதாக அங்கே தொழிற்பேட்டையை அமைக்கப் போகிறார்களா அல்லது ஏற்கெனவே காலியாக இருக்கிற இடத்தில் மட்டும் கட்டிடம் கட்டப் போகிறார்களா என்று அமைச்சர் அவர்களிடமிருந்து நான் அறிய விரும்புகிறேன். காலி யிடத்தில் கட்டிடம் கட்டுவது என்றால், அதைத் துரிதப்படுத்த வேண்டும். கடந்த 25 ஆண்டுகளாக அந்த இடம் பயன்படாமல் இருக்கிறது. ஆகவே அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** கப்பலூர் பகுதியில் தொழில் வளர்ச்சி ஏற்படாததற்கு ஒரு அடிப்படையான காரணம் இருக்கிறது. அந்தப் பகுதியில் தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றால், மத்திய அரசினு டைய நிதி உதவித் திட்டத்தின் கீழ் அந்தப் பகுதி வரவேண்டும். ஆனால் கப்பலூர் பகுதி முழுவதும் அந்தத் திட்டத்தின்கீழ் வரவில்லை. திருமங்கலம் பகுதியை ஒட்டியுள்ள பகுதிக்கு மட்டுமே Central Subsidy Scheme கீழ் நிதி உதவி பெறும் பகுதியில் வருகிறது. வடக்கு கப்பலூர் பகுதியை ஒட்டியுள்ள இடம்தான் அந்தத் திட்டத்தின்கீழ் வருகிறது. எனவே தமிழக அரசு கப்பலூர் பகுதி முழுவதும் திருமங்கலம் பகுதியைச் சேர்ந்தது என்று அறிவித்தும்கூட, மத்திய அரசு நிதி உதவி தருவதில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லும் அளவுக்கு செயல்பட்டு வருகிறது. இந்த நிலையைப் போக்க தமிழக அரசு புதிய திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகிறது. அதை நிதிநிலை அறிக்கையிலே கூட அரசு தெரிவிக்க லாம். அதற்குப் பிறகு இயற்கையாகவே தொழில் வளர்ச்சி ஏற்பட வாய்ப் பிருக்கிறது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல், அந்தப் பகுதி வளராமலிருப்பதால் Sipcot Industrial Complex என்ற மிகப் பெரிய, பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைக்கூட சிறு சிறு தொழில்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 'சிட்கோ' நிறுவனமே அந்த இடத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்தெடுத்து தொழில் முனைவர்களை அழைத்துக் கட்டிடம் கட்டிக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, instead of putting up industrial estates at places where the Government think industries will come up, would it not be better to invite applications from potential industrialists, small scale industrialists and find out where there is a demand, because, as the hon. Members remarked, there are many industrial estates which have been built up and where the sheds are lying idle and vacant and Government money is being wasted on such industrial estates? May I know from the Government whether, instead of trying to put up industrial estates on their own estimate they will invite applications from potential industralist so that these estates could be started in areas where they are most needed?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தற்போது தமிழகத்தின் தொழிற் கொள்கை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பிரதிபலிப்ப தாகவே இருக்கிறது. நாம் புதிதாகத் தொழிற்கூடங்களைக் கட்டுவதற்கு





முன்பு Motivation Campaign என்று மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டத் தொழில் மையத்தை நிர்வாகம் செய்யும் பொது மேலாளர், மாவட்ட நலத்துறை அதிகாரி ஆகியோர், தொழில் துறையில் பணியாற்றுகிற வர்களோடு சேர்ந்து முன்கூட்டியே அந்தப் பகுதியில் உள்ள தொழில் முனை வர்களை (Entrepreneurs) அழைத்து இந்தப் பகுதியில் என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றன, இங்கே தொழில் ஆரம்பித்து நன்கு நடத்த முடியுமா என்பதைப் பரிசிலித்த பிறகே தொழிற்கூடம் கட்டுகிறோம். இன்னின்ன பகுதிகளில் இத்தனை தொழிற்கூடங்கள் என்று புள்ளி விவரத் திற்காக, இத்தனை ஆயிரம் தொழிற்கூடங்களைக் கட்டுவது என்பதை இப்போது இருக்கிற அரசு மேற்கொள்ளவில்லை. ஏற்கெனவே அப்படிப்பட்ட தவறான அணுகுமுறை காரணமாகத்தான் பல தொழிற்கூடங்கள் செயல் படாமல் இருக்கின்றன. அவைகளையெல்லாம் நல்ல முறையில் செயல் படுத்த முடியுமா என்று பார்த்து, தொழில் முனைவர்களுக்கு உதவி கொடுத்து வருகிறோம். குறிப்பாக தொழில் முனைவர்கள் திறமையை (entrepreneurial quality) அடிப்படையாக வைத்து தொழிற் சாலைகளை அமைக்கும் முயற்சியைச் செய்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 245 தொழிற்கூடங்களை உருவாக்கியிருப்பதாக அறிவித்தார்கள். இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** 'சிட்கோ' மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுகிற இத்திட்டத்திற்காக சென்ற ஆண்டு தமிழக அரசு ஐம்பது இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. இந்த 50 இலட்சம் ரூபாயில் எப்படி இவ்வளவு எண்ணிக்கையுள்ள தொழிற்கூடங்களைக் கட்ட முடியும் என்று கேட்கலாம். ஒரு குறிப்பிட்ட பத்து இடங்களில் தொழிற்கூடங்களைக் கட்டி முடித்த பிறகு, அதற்கான பணத்தை லீட் பேங்குகளில் (lead banks) இருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறோம். கட்டிடத்தை யாருக்குக் கொடுக்கிறோமோ அவர்கள் தவணை முறையில் அந்தப் பணத்தை வங்கி களில் செலுத்திவிடுகிறார்கள். இந்த அடிப்படையிலேதான் இதைக் கட்டி வருகிறோம். இது செய்கிற தொழிலின் தன்மைக்கேற்ப வேறுபடுகிறது. கிராமத் தொழிலாக இருந்தால், ஏழு ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரையில்

செலவு செய்து கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்கிறோம். தீப்பெட்டி தொழிற்சாலையாக இருந்தால், 12 ஆயிரத்து 500 ரூபாய் வரையிலும் பனியன் தொழிற்சாலையாக இருந்தால் நாற்பதாயிரம் முதல் அறுபதாயிரம் வரையிலும் செலவு செய்து கட்டிக் கொடுக்கிறோம். சில இடங்களில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலும் செலவு செய்து கட்டிக் கொடுக்கிறோம். கட்டி முடிந்த பிறகு, வங்கிகளிலிருந்து 'சிட்கோ' பெற்றுக்கொள்ளுகிறது. தொழிலை நடத்துகிறவர்களுக்கும் வங்கிகளுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தி இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

## Neera

*28. *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. Minister for Rural Industries be pleased to state—

(*a*) the number of persons who have been issued licences for tapping Neera in Tindivanam Taluk, during 1977-78 and 1978-79; and

(*b*) the basis on which these licences were issued?

## பதநீர்

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பதநீர் இறக்குவதற்காக 1977-78, 1978-79 ஆகிய ஆண்டுகளில் திண்டிவனம் வட்டத்தில் உரிமம் வழங்கப்பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) எந்த அடிப்படையில் இந்த உரிமங்கள் வழங்கப்பட்டன?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (அ) திண்டிவனம் தாலுக்காவில் 1977-76 ஆம் ஆண்டில் 449 பனைத்தொழில் வல்லுநர்களுக்கும், 1978-79 ஆண்டில் 405 பனைத்தொழில் வல்லுநர்களுக்கும் பதனீர் இறக்க உரிமம் வழங்கப்பட்டது.

(இ) இவ்வுரிமங்கள் பனைவெல்ல கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கும் முன் ஆண்டில் பதனீர் இறக்கியவர்களுக்கும் தவறான செய்கைகளில் ஈடுபடாதவர்களுக்கும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்க பஞ்சாயத்துதாரர்களின் சிபாரிசின்பேரில் கதர் கிராமத் தொழில் வாரிய அலுவலர்களால் வழங்கப்படுகிறது.



**திரு. க. இராமமூர்த்தி :** இந்த உரிமங்களைப் பெற்றவர்கள் பல இடங்களிலே மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிற அளவுக்கு இவற்றைப் பயன்படுத்துகிறார்கள் என்ற காரணத்தால், பனை வெல்ல உற்பத்திக்கு மட்டும் பயன்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே உரிமங்களைப் பெற்றவர்கள் செயல்படுகிறார்களா என்பதைக் கண்காணிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** திண்டிவனம் தாலுக்காவிலே 12 பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் இந்த உரிமங்களைப் பெற்று செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து உண்மையானது என்பதை இங்குள்ள குறிப்புகள் வலியுறுத்துகின்றன. குறிப்பாக பாண்டிச்சேரிக்கு அருகாமையில் உள்ள இரண்டு சங்கங்கள் செயல்படவிடாமல் தவறான முறையில் செயல்பட்டதால், அச்சங்கங்கள் முழுக்க தடுக்கப்பட்டன. ஆக மீதமுள்ள 10 கூட்டுறவுச் சங்கங்களில் முழுக்க முழுக்க பனை வெல்ல உற்பத்தியை அதிகமாகச் செய்யும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

**திரு. டி. சந்தோஷம் :** திருநெல்வேலி மாவட்டத்தில் அநேக கிராமங்களிலே பெரும்பாலான மக்கள் பதநீர் இறக்கி அதன் மூலம்தான் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். இதில் மிகவும் கடினமான விதிகள் இருப்பதால், சமீப காலத்திலே அநேகம் பேர்களுக்கு உரிமங்கள் மறுக்கப்பட்டு அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் அளவில் வெகு சீக்கிரத்தில் உரிமங்கள் வழங்கும் முறையை எளிதாக்கிக் கொடுக்க (simplify) அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** உரிமங்கள் வழங்குவதிலே நாம் எதிர்பார்க்கிற தகுதிகள் மூன்றுதான். இந்த ஆண்டுக்கு உரிமம் வேண்டுமென்றால், முந்தைய ஆண்டில் பதநீர் இறக்கியிருக்கிறார்களா என்று பார்க்கிறோம். இரண்டாவதாக கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக இருக்கிறார்களா என்று பார்த்திருக்கிறோம். இவை இரண்டுக்கும் அப்பால் பதநீர் இறக்குவதாகச் சொல்லி, கள் உற்பத்தியில் ஈடுபடுகிறார்களா என்று பார்க்கிறோம். இதைத் தவிர எதையும் கண்காணிப்பதில்லை. இதையும் தளர்த்த வேண்டுமென்றால், வெல்லம் தயாரிப்பதற்குப் பதிலாக வேறு ஏதாவது தயாரிப்பார்களோ என்ற அச்சம் அரசுக்கு இருக்கிறது. இப்போது இருக்கிற முறையே சரியான முறை என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

அமர்த்தப்படுவார்கள் என்ற உறுதியை அந்த நிறுவனங்கள் அளித்திருக் கிறார்கள். ஆகவே, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4-50)

திரு. க. இராமமூர்த்தி : தாயகம் திரும்புகிற அகதிகளுடைய எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து வருகிறதா அல்லது அதிகரித்து வருகிறதா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : குறிப்பாக ஸ்ரீலங்காவைப் பொறுத்த அளவில், இந்தியா—இலங்கை ஒப்பந்தப்படி 6 லட்சம் தமிழர்கள் வர வேண்டும். ஏறத்தாழ 3 லட்சம் பேர்கள் வந்திருக்கிறார்கள். இன்னும் 3 லட்சம் பேர்கள் வந்தாக வேண்டும். பர்மாவிலிருந்து 1,44,183 பேர்கள் வந்திருக்கிறார்கள், வியட்நாமிலிருந்து 1,857 பேர்கள் வந்திருக்கிறார்கள். சில சமயங்களில் ஒட்டு மொத்தமாகவும் வருவதுண்டு. இல்லையென்றால் இடையிலே சில மாதங்கள் விட்டு வருவதும் உண்டு.

திரு. ம. சங்கரலிங்கம் : இலங்கை, பர்மா, வியட்நாம் போன்ற இடங் களிலிருந்து 1977 ஆம் ஆண்டு வந்த அகதிகள் சுமார் 52,000 பேர்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் வந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அனைவருக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டு விட்டதா? மத்திய அரசு தருகிற உதவி, வேலை வாய்ப்பை மட்டும் உருவாக்கு வதற்காகவா அல்லது வீட்டு வசதிக்கும் சேர்த்தா? குறிப்பாக கன்னியா குமரி நூற்பாலையிலே பர்மா அகதிகளுக்கு வேலை கொடுக்க மத்திய அரசு கொஞ்சம் நிதி ஒதுக்கி, தனியாக ஸ்பின்டில்ஸ் (Spindles) கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்கள் அங்கே வேலை பார்த்தாலும், வீடு இல்லாமல் அகதிகளாகவே இருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவில், குறிப் பாக தமிழ்நாட்டில் அகதிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்படுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : நான் எதிர்க் கட்சித் தலைவரவர் களுக்கு ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். 'அகதிகள்' என்ற வார்த்தை யைப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் அவர் களின் உடன்பிறப்புக்களாக இருக்கும்போது, அவர்கள் அகதிகளாக இருக்க முடியாது, தாயகம் திரும்பியவர்களாகத்தான் இருக்க வேண்டும். வியாபாரத் துடன், வீட்டு வசதி பொறுத்து சொன்னார்கள். வீட்டு வசதியைப்





பொறுத்தவரையில், கிராமங்களாக இருந்தால், 3 ஆயிரம் ரூபாயும், நகரங் களாக இருந்தால், 6 ஆயிரம் ரூபாயும் மத்திய அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கன்னியாகுமரியில் வீட்டு வசதி செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் இதுவரை வீட்டு வசதிக் கடன் பெற விண்ணப்பம் செய்யவில்லை. அவர்கள் அப்படி விண்ணப்பம் செய்திருந்தால், உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தமிழகத்திற்கு வரக் கூடிய அகதிகள் மூன்று தேசங்களிலிருந்து வருவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த மூன்று தேசங்களிலிருந்து வரும் அகதிகளுக்கு ஒரே தரமான உதவி அரசாங்கத்தின் சார்பில் கொடுக்கப்படுகிறதா அல்லது வெவ்வேறு விதமான உதவி அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தாயகம் திரும்பிய தமிழர்களிடையே எந்தவித வித்தியாசமும் இல்லை. அவர்களுக்கு எல்லா உதவிகளும் சரி சமமாக வழங்கப்படுகின்றன.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தாயகம் திரும்பிய அகதிகளுக்கு—அயல் நாட்டுத் தமிழர்களுக்கு இந்த அரசாங்கம் புதிய குடியிருப்புகளை ஏற்படுத்து கிறது. புதிய குடியிருப்புகளில் அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதி களை ஏற்படுத்தித் தரும் பணி அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. மிகப் பெரிய காரியங்களை ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே, ஆரம்பச் செலவையாவது அந்தத் துறை ஏற்றுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அது பற்றிய விவரம் தெரிவிக்கப் பட்டால், அரசு பரிசீலிக்கும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கம் தந்தார்கள். அவர் தந்த விளக்கம் எந்தக் குழுவைச் சார்ந்தது என்பது எனக்குத் தெரியாது. நான் குறிப்பிட்டது விஸ்வநாத் மற்றும் விஸ்வநாத், புவனேஸ்வரி கெமிகல் கம்பெனி என்ற இரண்டு நிறுவனங்கள் தாயகம் திரும்புகின்ற தமிழர்களுக்கு வேலை கொடுப்பதாகச் சொல்லி, ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாய் மானியம் வாங்கி, அவர்களை மோசம் செய்திருக்கிறார்கள் என்பதுதான். அவர்களே தண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு

## Refugees

* 29. *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) the number of refugees and repatriates who have come to stay in the State from March 1977; and

(*b*) the countries from which they have migrated?

### அகதிகள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977 மார்ச்சிலிருந்து இம்மாநிலத்தில் தங்குவதற்காக வந்துள்ள அகதிகள், தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) அவர்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து திரும்பிவந்துள்ளனர் ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** (அ) & (இ) : 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குப் பிறகு இம்மாநிலத்திற்கு வந்த அகதிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை | 12,947 | குடும்பங்களைச் சார்ந்த | 50,635 பேர். |
| 2 | பர்மா | 223 | குடும்பங்களைச் சார்ந்த | 715 பேர். |
| 3 | வியட்நாம் | 96 | குடும்பங்களைச் சார்ந்த | 328 பேர். |

இம்மாநிலத்திற்கு வந்த இந்நாட்டவரல்லாத வெளிநாட்டு அகதிகளைப் (Refugees) பற்றி விவரம் இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய கேள்வியின் நோக்கமே இந்த மாநிலத்தைச் சேராத அகதிகள் எத்தனை பேர் இங்கே வந்திருக்கிறார்கள், அவர்களுக்குச் செய்து தரப்படுகிற வசதிகள் என்ன என்று அறிவதுதான். அது பற்றிய விவரங்கள் இல்லையென்றாலும் கூட, அவர்களுக்குத் தரப்படுகிற வசதிகளும், சலுகைகளும் இந்த மாநிலத்திற்குத் திரும்பி வந்து சேருகிற தமிழர்—அகதிகளுக்கு அளிக்கப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** அடுத்த நாட்டிலிருந்து அகதிகளாக இங்கே வந்தவர்களுடைய எண்ணிக்கை என்னிடம் இல்லை. தாயகம் திரும்பியவர்களுடைய எண்ணிக்கைதான் இருக்கிறது. இலங்கையிலிருந்து வருகிற அகதிகள், அவர்கள் எந்த வேலைக்கு வர வேண்டுமென்று விருப்பப்



உதவி ஹைகமிஷனரிடம்
படுகிறார்களோ அதை கண்டியில் உள்ள
தெரிவித்தால், அதற்கேற்ப
(Deputy High Commissioner)
சில சமயங்களில் ஒரு மாதம்,
அவர்களை இங்கே குடியமர்த்துகிறோம்.
‘டிரான்ஸிட் காம்ப்’ என்ற இல்லங்களில்
இரண்டு மாதங்கள் ஆனாலும்
அவர்களை வைத்து அதற்குப் பின்னால் அவர்கள் வேலையில் அமர்த்தப்படு
கிறார்கள். அகதிகள் ஸ்ரீலங்கா, பர்மா, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து
தான் தாயகம் திரும்புகிறார்கள். அவர்களுக்கு வியாபாரக் கடன், வீட்டு
வசதிக் கடன் ஆகியவைகளைக் கொடுக்கிறோம். இவை அனைத்தும்
மத்திய அரசால் கொடுக்கப்பட்டு மாநில அரசால் வழங்கப்படுகிறது.

தமிழர்களில்
**திரு.. ஆற்காடு நா. வீராசாமி :** தாயகம் திரும்பக்கூடிய
சுமார் 150 குடும்பங்களுடைய பெயரைச் சொல்லி சென்னையிலே இருக்கிற
விஸ்வநாத் அண்டு விஸ்வநாத் என்ற கம்பெனியும், புவனேஸ்வரி கெமிக்கல்
இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனமும் நபர் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய்
என்று அரசு வழங்குகிற பணத்தைப் பெற்றுக்கொண்டு வேலை கொடுப்பதாக
உத்தரவாதம் சொல்லி, பிறகு வேலையும் கொடுக்காமல், சம்பளமும் கொடுக்
காமல் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா ? இப்படி அகதிகளின்
பெயரால் மோசடி செய்கிற கம்பெனிகளின் மீது உடனடியாக நடவடிக்கை
எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** மாநிலத்தைச்
குறிப்பிட்ட அந்தத் தமிழர்கள் இலங்கையிலிருந்து ஆந்திர
சேர்ந்த ராஜமுந்திரிக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதுதான் மத்திய
அவர்கள் ஏறத்தாழ முப்பது, நாற்பது
அரசின் உத்திரவாக இருந்தது.
குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். ஆந்திர மாநிலத்தில் குடியேறி, அங்கே
என்றும், இருக்கிற
விரும்பாமல், அங்கே மொழித் தகராறு இருக்கிறது
வந்து
இடமும் வசதியாக இல்லையென்றும் நான் அமைச்சரானவுடனே
தெரிவித்தார்கள். தமிழ் நாட்டிற்குத் திரும்பப் பெறுகிற உரிமை எங்
களுக்கு இல்லையென்ற காரணத்தால், மத்திய அமைச்சர் திரு. சிக்கந்தர்
பக்த் அவர்களை சந்தித்து இதுபற்றிப் பேசியபோது, மத்திய அரசு உதவி
யில்லாமல் தமிழ்நாட்டிலே நீங்களே உதவி கொடுப்பதாக இருந்தால்,
அவர்கள் தமிழ்நாட்டிற்கு வரட்டும் என்று கூறினார்கள். இதற்காக
மாநில அரசைப் பொறுத்த வரையில், பண உதவி செய்ய முடியாது என்பது
மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியுமென்று கருதுகிறேன். மத்திய
அரசின் உதவி அந்த இரண்டு கம்பெனிகளுக்கும் கிடைத்திருக்கிறது என்ற
விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. உடனடியாக அவர்கள் வேலைக்கு

செலவு செய்து கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்கிறோம். தீப்பெட்டித் தொழிற்சாலையாக இருந்தால், 12 ஆயிரத்து 500 ரூபாய் வரையிலும், பனியன் தொழிற்சாலையாக இருந்தால் நாற்பதாயிரம் முதல் அறுபதாயிரம் வரையிலும் செலவு செய்து கட்டிக் கொடுக்கிறோம். சில இடங்களில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலும் செலவு செய்து கட்டிக் கொடுக்கிறோம். கட்டி முடிந்த பிறகு, வங்கிகளிலிருந்து 'சிட்கோ' பெற்றுக்கொள்ளுகிறது. தொழிலை நடத்துகிறவர்களுக்கும் வங்கிகளுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தி இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

## Neera

*28. Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. Minister for Rural Industries be pleased to state—

(a) the number of persons who have been issued licences for tapping Neera in Tindivanam Taluk, during 1977-78 and 1978-79; and

(b) the basis on which these licences were issued?

## பதநீர்

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பதநீர் இறக்குவதற்காக 1977-78, 1978-79 ஆகிய ஆண்டுகளில் திண்டிவனம் வட்டத்தில் உரிமம் வழங்கப்பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) எந்த அடிப்படையில் இந்த உரிமங்கள் வழங்கப்பட்டன?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: (அ) திண்டிவனம் தாலுக்காவில் 1977-76 ஆம் ஆண்டில் 449 பனைத்தொழில் வல்லுநர்களுக்கும், 1978-79 ஆம் ஆண்டில் 405 பனைத்தொழில் வல்லுநர்களுக்கும் பதனீர் இறக்க உரிமம் வழங்கப்பட்டது.

(இ) இவ்வுரிமங்கள் பனைவெல்ல கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கும் மூன் ஆண்டில் பதனீர் இறக்கியவர்களுக்கும் தவறான செய்கைகளில் ஈடுபடாதவர்களுக்கும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்க பஞ்சாயத்துதாரர்களின் சிபாரிசின்பேரில் கதர் கிராமத் தொழில் வாரி அலுவலர்களால் வழங்கப்படுகிறது.



திரு. க. இராமமூர்த்தி: இந்த உரிமங்களைப் பெற்றவர்கள் பல இடங்களிலே மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிற அளவுக்கு இவற்றைப் பயன்படுத்துகிறார்கள் என்ற காரணத்தால், பனை வெல்ல உற்பத்திக்கு மட்டும் பயன்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே உரிமங்களைப் பெற்றவர்கள் செயல்படுகிறார்களா என்பதைக் கண்காணிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: திண்டிவனம் தாலுக்காவிலே 12 பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் இந்த உரிமங்களைப் பெற்று செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து உண்மையானது என்பதை இங்குள்ள குறிப்புகள் வலியுறுத்துகின்றன. குறிப்பாக பாண்டிச்சேரிக்கு அருகாமையில் உள்ள இரண்டு சங்கங்கள் தவறான முறையில் செயல்பட்டதால், அச்சங்கங்கள் செயல்படவிடாமல் தடுக்கப்பட்டன. ஆக மீதமுள்ள 10 கூட்டுறவுச் சங்கங்களில் முழுக்க முழுக்க பனை வெல்ல உற்பத்தியை அதிகமாகச் செய்யும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

திரு. டி. சந்தோஷம்: திருநெல்வேலி மாவட்டத்தில் அநேக கிராமங்களிலே பெரும்பாலான மக்கள் பதநீர் இறக்கி அதன் மூலம்தான் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். இதில் மிகவும் கடினமான விதிகள் இருப்பதால், சமீப காலத்திலே அநேகம் பேர்களுக்கு உரிமங்கள் மறுக்கப்பட்டு அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் அளவில் வெகு சீக்கிரத்தில் உரிமங்கள் வழங்கும் முறையை எளிதாக்கிக் கொடுக்க (simplify) அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: உரிமங்கள் வழங்குவதிலே நாம் எதிர்பார்க்கிற தகுதிகள் மூன்றுதான். இந்த ஆண்டுக்கு உரிமம் வேண்டுமென்றால், முந்தைய ஆண்டில் பதநீர் இறக்கியிருக்கிறார்களா என்று பார்க்கிறோம். இரண்டாவதாக கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக இருக்கிறார்களா என்று பார்த்திருக்கிறோம். இவை இரண்டுக்கும் அப்பால் பதநீர் இறக்குவதாகச் சொல்லி, கள் உற்பத்தியில் ஈடுபடுகிறார்களா என்று பார்க்கிறோம். இதைத் தவிர எதையும் கண்காணிப்பதில்லை. இதையும் தளர்த்த வேண்டுமென்றால், வெல்லம் தயாரிப்பதற்குப் பதிலாக வேறு ஏதாவது தயாரிப்பார்களோ என்ற அச்சம் அரசுக்கு இருக்கிறது. இப்போது இருக்கிற முறையே சரியான முறை என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

அமர்த்தப்படுவார்கள் என்ற உறுதியை அந்த நிறுவனங்கள் அளித்திருக்கிறார்கள். ஆகவே, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4-50)

திரு. க. இராமமூர்த்தி : தாயகம் திரும்புகிற அகதிகளுடைய எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து வருகிறதா அல்லது அதிகரித்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : குறிப்பாக ஸ்ரீலங்காவைப் பொறுத்த அளவில், இந்தியா—இலங்கை ஒப்பந்தப்படி 6 லட்சம் தமிழர்கள் வர வேண்டும். ஏறத்தாழ 3 லட்சம் பேர்கள் வந்திருக்கிறார்கள். இன்னும் 3 லட்சம் பேர்கள் வந்தாக வேண்டும். பர்மாவிலிருந்து 1,44,183 பேர்கள் வந்திருக்கிறார்கள், வியட்நாமிலிருந்து 1,857 பேர்கள் வந்திருக்கிறார்கள். சில சமயங்களில் ஒட்டு மொத்தமாகவும் வருவதுண்டு. இல்லையென்றால் இடையிலே சில மாதங்கள் விட்டு வருவதும் உண்டு.

திரு. ம. சங்கரலிங்கம் : இலங்கை, பர்மா, வியட்நாம் போன்ற இடங்களிலிருந்து 1977 ஆம் ஆண்டு வந்த அகதிகள் சுமார் 52,000 பேர்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் வந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அனைவருக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டு விட்டதா? மத்திய அரசு தருகிற உதவி, வேலை வாய்ப்பை மட்டும் உருவாக்குவதற்காகவா அல்லது வீட்டு வசதிக்கும் சேர்த்தா? குறிப்பாக கன்னியாகுமரி நூற்பாலையிலே பர்மா அகதிகளுக்கு வேலை கொடுக்க மத்திய அரசு கொஞ்சம் நிதி ஒதுக்கி, தனியாக ஸ்பின்டில்ஸ் (Spindles) கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்கள் அங்கே வேலை பார்த்தாலும், வீடு இல்லாமல் அகதிகளாகவே இருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் அகதிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்படுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : நான் எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். ‘அகதிகள்’ என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் அவர்களின் உடன்பிறப்புக்களாக இருக்கும்போது, அவர்கள் அகதிகளாக இருக்க முடியாது, தாயகம் திரும்பியவர்களாகத்தான் இருக்க வேண்டும். வியாபாரக் கடன், வீட்டு வசதி பொறுத்து சொன்னார்கள். வீட்டு வசதியை



பொறுத்தவரையில், கிராமங்களாக இருந்தால், 3 ஆயிரம் ரூபாயும், நகரங்களாக இருந்தால், 6 ஆயிரம் ரூபாயும் மத்திய அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கன்னியாகுமரியில் வீட்டு வசதி செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் இதுவரை வீட்டு வசதிக் கடன் பெற விண்ணப்பம் செய்யவில்லை. அவர்கள் அப்படி விண்ணப்பம் செய்திருந்தால், உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தமிழகத்திற்கு வரக் கூடிய அகதிகள் மூன்று தேசங்களிலிருந்து வருவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த மூன்று தேசங்களிலிருந்து வரும் அகதிகளுக்கு ஒரே தரமான உதவி அரசாங்கத்தின் சார்பில் கொடுக்கப்படுகிறதா அல்லது வெவ்வேறு விதமான உதவி அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தாயகம் திரும்பிய தமிழர்களிடையே எந்தவித வித்தியாசமும் இல்லை. அவர்களுக்கு எல்லா உதவிகளும் சரிசமமாக வழங்கப்படுகின்றன.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தாயகம் திரும்பிய அகதிகளுக்கு—அயல் நாட்டுத் தமிழர்களுக்கு இந்த அரசாங்கம் புதிய குடியிருப்புகளை ஏற்படுத்துகிறது. புதிய குடியிருப்புகளில் அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரும் பணி அந்தந்த டவுன் பஞ்சாயத்துகளிடமோ ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. மிகப் பெரிய காரியங்களை ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே, ஆரம்பச் செலவையாவது அந்தத் துறை ஏற்றுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அது பற்றிய விவரம் தெரிவிக்கப்பட்டால், அரசு பரிசீலிக்கும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கம் தந்தார்கள். அவர் தந்த விளக்கம் எந்தக் குழுவைச் சார்ந்தது என்பது எனக்குத் தெரியாது. நான் குறிப்பிட்டது விஸ்வநாத் மற்றும் விஸ்வநாத், புவனேஸ்வரி கெமிகல் கம்பெனி என்ற இரண்டு நிறுவனங்கள் தாயகம் திரும்புகின்ற தமிழர்களுக்கு வேலை கொடுப்பதாகச் சொல்லி, ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாய் மானியம் வாங்கி, அவர்களை மோசம் செய்திருக்கிறார்கள் என்பதுதான். அவர்களே துண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு

மேலவைத் தலைவரவர்களின் மூலமாக அமைச்சரவர்களிடம் அதை அளிக்கிறேன். இப்படி தொழிற்சாலைகள், இலங்கைத் தமிழர்கள் பெயரைப் பயன்படுத்தி மோசம் செய்திருப்பதால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** நேற்றைய தினமே என்னிடம் கொடுக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## *Sheep-Breeding Schemes*

* 30 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(*a*) whether the State Government have asked for any assistance from the World Bank for Sheep-breeding Scheme ; and

(*b*) if so, the amount in crores, sanctioned by the World Bank ;

(*c*) the break-up of the schemes for which this amount is proposed to be utilised?

## ஆடு வளர்ப்புத் திட்டங்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மாநில அரசு ஆடு வளர்ப்புத் திட்டங்களுக்காக உலக வங்கியிடம் உதவி ஏதும் கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், உலக வங்கி எத்தனை கோடி ரூபாய் வழங்கியுள்ளது ?

(உ) என்னென்ன திட்டங்களுக்காக அரசு இந்தத் தொகையை பயன்படுத்தக் கருதியுள்ளது ?

**மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி :** (அ) மாநில அரசு ஆடு வளர்க்கும் திட்டங்களுக்காக உலக வங்கியின் நிதி உதவிபெறும் பொருட்டு மத்திய அரசைக் கேட்டுள்ளது.

(இ) இன்னும் இதுபற்றி மத்திய அரசிடமிருந்து பதில் எதும் பெறப்படவில்லை.



(உ) கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது :—

(1) 33,000 ஆட்டினப் பிரிவுகளை ஏற்படுத்துதல் ;

(2) தீவிர ஆடுவளர்ப்புத் திட்டம் ஏற்படுத்துதல் ;

(3) பெருமளவில் ஆடுகளை பாதிக்கும் உடற்புழுக்களை நீக்கும் திட்டம் ;

(4) பெரிய அயலின ஆடு வளர்ப்புப் பண்ணை நிறுவுதல் ;

(5) கலப்பின ஆடு விருத்திப் பண்ணை நிறுவுதல்;

(6) ஆட்டிறைச்சிக் கொட்டில்களை நவீனப்படுத்துதல்;

(7) பயிற்சித் திட்டம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, பல்வேறு நூதனத் திட்டங்களுக்கு உலக வங்கி அனுமதி அளிக்காவிட்டால் அல்லது நிதி உதவி தராவிட்டால், இந்த அரசாங்கம் மத்திய அரசோடு தொடர்புகொண்டு, நிதி பெற்றோ, தனித்தோ அந்தத் திட்டங்களை நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் உலக வங்கி உதவி தரக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாக மத்திய அரசு ஏதாவது சமிக்ஞை தெரிவித்திருக்கிறதா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** நல்லதையே நாம் எண்ணுவோம். மத்திய அரசுக்கு நாம் அனுப்பியிருக்கிறோம். அவர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். நல்ல முடிவு அறிவிப்பார்களென்ற நம்பிக்கை இருக்கிறது.

**திரு. டி. சந்தோஷம் :** இந்தத் திட்டம் ஆரம்பித்து பல ஆண்டுகள் ஆயிற்று என்று நினைக்கிறேன். மதுரையிலே சென்ற ஆண்டிலே ஆட்டுக் கறியின் விலை கிலோ 10 ரூபாயிலிருந்து 12 ரூபாயாக உயர்ந்தது. இந்த ஆண்டு கிலோ 16 ரூபாயிலிருந்து 18 ரூபாயாக உயர்ந்துள்ளது. கசாப்புக் கடைக்காரர்களைக் கேட்டால், ஆடுகள் கிடைப்பதில்லை, கிடைத்தாலும் அதிக விலையாக இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இந்தத் திட்டத்தின் காரணமாக உயர்ந்துவிட்டதோ என்ற சந்தேகம் இருக்கிறது. இந்தத் திட்டத்தினால் பொதுமக்கள் உபயோகிக்கும் ஆட்டுக் கறியின் விலையைக் குறைக்க முடியுமா ? அதற்காக என்ன திட்டம் மேற்கொள்ளப்படுகிறது ? அது ஏன் வெற்றி பெறவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 14

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இந்தத் திட்டத்தைப்பற்றி நாங்கள் ஒரு திட்டக் குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம் என்றுதான் சொன்னேன். இத்திட்டம் இன்னும் செயல்படவில்லை. மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. இந்தத் திட்டம் செயல்படும்போது, அதன் மூலம் 33,000 ஆட்டினப் பிரிவுகள் ஏற்படுத்தப் படும். அதனால் ஆட்டிறைச்சியின் விலை குறையும். ஏழை விவசாயி களின் வாழ்க்கைத் தரம் உயரும். குறிப்பாக 6 ஆண்டுகளில் ஒரு ஏழை விவசாயிக்கு 8,500 ரூபாய் கிடைக்குமென்று கருதி, இந்தத் திட்டம் தீட்டியிருக்கிறோம்.

திரு ஆ. பாலசுப்ரமணியம் : ஆடு வளர்ச்சித் திட்டத்திற்காக தமிழக அரசு இதுவரையில் அளித்துள்ள நிதி உதவியின் மூலம் வாங்கப்பட்டுள்ள ஆடுகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தனிக் கேள்வி போட வேண்டு கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு —ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் காவல் துறையினர் கல்லூரிக்குள் புகுந்து மாணவர்களைத் தாக்கியது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் 13—2—1979 அன்று காலை சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர் களுக்கும், பொது மக்களுக்கும் தகராறு ஏற்பட்டதால், காவல் துறையினர் கல்லூரிக்குள் புகுந்து மாணவர்களைத் தாக்கியது குறித்து விவாதிக்க ஓர் ஒத்தி வைப்புத் தீர்மான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எந்த வகையில் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றிச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் திரு. ஆ. நல்லசிவன் அவர்களும், திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்களும்கூட ஒத்தி வைப்புத் தீர்மான முன்னறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள்.



1979 பிப்ரவரி 14]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, நேற்றைய தினம் பச்சையப்பன் கல்லூரி வரலாற்றிலேயே இதுவரையில் கேள்விப்படாத அள விற்கு, அங்கே மாணவர்களுக்கு இடையிலே நடைபெற்ற சிறு சம்பவத்தை வைத்துக்கொண்டு, மாணவர்களுக்குச் சம்பந்தமில்லாத பொது மக்கள் என்ற பெயரிலே சில குண்டர்கள் கல்லூரிக்குள்ளே புகுந்து மாணவர்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியிருக்கிறார்கள். கடந்த ஒரு மாத கால மாக பச்சையப்பன் கல்லூரிக்கு எதிரே ஒரு போலீஸ் படை நிறுத்தி வைக்கப் பட்டிருந்தும், அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கல்லூரிக் குள்ளே நுழைந்த குண்டர்களைத் தடுப்பதற்கு பதிலாக, இதுவரை கல்லூரிக் குள்ளே நுழையாத போலீசார் கல்லூரிக்குள்ளே நுழைந்து, மாணவர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் அத்தனை பேரையும் தாக்கியிருக்கிறார்கள். இன்றைய தினம் காலையிலே இதை நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றேன். இன்னும் ரத்தக் கறை மறையவில்லை. ரத்த ஆறு ஓடியதுபோல் கல்லூரி முதல்வர் அறையிலிருந்து எங்கு பார்த்தாலும் ரத்தக் கறைகள் இருக்கின்றன. முதல்வரவர்களுடைய அறை நொறுக்கப்பட்டிருக்கிறது. Science Laboratory நொறுக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் உணவு அருந்தக் கூடிய ஹாஸ்டல் நொறுக்கப்பட்டிருக்கிறது. பச்சையப்பன் கல்லூரி வரலாற்றில் இல்லாத அளவிற்கு இப்படிப்பட்ட ஒரு கொடிய சம்பவம் நடை பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்ல. ஆசிரியப் பெருமக்களுடைய ஸ்கூட்டர்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் பயன்படுத்துகிற சைக்கிள்களை பூந்தமல்லி நெடுஞ்சாலைக்குக் கொண்டு வந்து, கொளுத்தி

(பிற்பகல் 5-00)

யிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் கூட பத்திரிகைகளிலே வந்திருக் கின்றன. பேராசிரியர் கார் சேதமாக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பயங் கரமான சம்பவங்கள் நடைபெற்றதற்குப் பின்னாலே அங்கே இருந்த துணை முதல்வர் அவர்கள் போலீஸ் அதிகாரிகளுடன், ஐ.ஜி. அவர்களுடன் தொடர்பு கொண்டார்கள். $10\frac{1}{2}$ மணியிலிருந்து $2\frac{1}{2}$ மணி வரையிலே உள்புறத் திலேயே, அந்த காம்பௌண்டுக்குள்ளேயே உள்நாட்டுப் போர் போல போலீசாருக்கும் மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டிருக்கிறது. இதிலே என்ன பொது முக்கியத்துவம் என்று கேட்டால், அங்கு அடிபட்ட மாணவர்களுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அப்படி அடி பட்டவர்கள், பயங்கரமாகக் காயப்படுத்தப்பட்டவர்கள் ஒவ்வொரு கல்லூரி யாகச் சென்று மாணவர்களைத் தாக்கிவிட்டார்கள், போலீசார் எங்கள்

மண்டைகளைப் பிளந்து விட்டார்கள்' என்று காட்டுகின்ற நேரத்தில், மற்ற
கல்லூரி மாணவர்களும் சேர்ந்துகொண்டார்கள். இந்த நிலைமை
தொடர்ந்து இருந்தால், தமிழகத்தில் இந்தப் போராட்டம் பெரிய போராட்ட
மாக மாறி விடுமோ என்ற அச்சம் இருப்பதால், இந்தப் பிரச்சினையைக்
குறித்து அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை எப்படி
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்பதைப்பற்றி
விளக்கிக் கூற விரும்புகிறேன். முன்பே இரு கல்லூரிகளைச் சேர்ந்த
மாணவர்களிடையிலே தகராறு இருப்பதால், 'சென்சிடிவ் பிராப்ளம்' எழும்
என்பது பற்றி இந்த மாநில அரசுக்குப் புரிந்திருக்க வேண்டும். ஆகவே
கல்லூரி அதிகாரிகள் மூலமாக, கல்லூரி முதல்வர்கள் மூலமாக மாணவர்
களைக் கூட்டி வைத்துப் பேசி, இந்தப் பிரச்சினையைச் சிக்கலான பிரச்சினை
யாக ஆக்காமல் தவிர்த்து ஒரு நல்ல முயற்சியை எடுத்திருக்கவேண்டும்.
அதற்கான நடவடிக்கைகள இந்த அரசு எடுக்கவில்லை. வழக்கம்போல
போலீஸ் தடியடியில் கொண்டுவந்து விட்டுவிட்டது. அதன் காரணமாகத்
தான் இந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது. இதே நிலைமைகளை நீடிக்க
விட்டால், இந்தப் பிரச்சினை மாணவர்களிடையே ஒரு கொதிப்பை ஏற்படுத்தி
விடும். அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டால், அரசு எப்படி சமாளிக்கும்
என்பது பற்றியும், அரசாங்கம் எடுக்க இருக்கும் நடவடிக்கைகளப் பற்றியும்,
இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து, விவாதிக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பச்சை
யப்பன் கல்லூரியிலே நடந்த கலவரத்தில் அந்த காலேஜ் காம்பவுண்டுக்
குள்ளே போலீசார் போகக்கூடாது என்று இருந்தாலும், அத்துமீறி போலீ
சார் சமூக விரோதிகளை உடன் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கு
இருந்த மாணவர்களை மட்டுமல்லாமல், வகுப்பு அறையில் இருந்த மாணவர்
களையும் ஈவு இரக்கமில்லாமல் அடித்திருக்கிறார்கள். வகுப்பு அறைகளும்,
ரசாயன அறைகளும் உடைத்து நொறுக்கப்பட்டன. அத்தோடு நில்லாமல்,
கல்லூரி விடுதியிலே இருந்த மாணவர்களையும், அங்கே இருந்த பணியாளர்
களையும் அடித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், அங்கே இருந்த
சில பொருள்களைக் களவாடி வந்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில்
உடனடியாக ஒரு முடிவு எடுக்கவில்லையென்றால், இதற்கு முன்பு தியாகராய



கல்லூரியில் நடந்ததைப் போன்ற நிகழ்ச்சியாக இது மாறும். இந்த நிகழ்ச்சி
இன்றைக்கு மாணவர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்துகின்ற
நிலை இருக்கிறது. ஆகவே, அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து
இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, 12—2—1979
அன்று முற்பகல் சி. கந்தசாமி நாயுடு கல்லூரியில் பி. யு. சி. மாணவர்களான
முரளிதரன் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் இடையில் ஏற்பட்ட ஒரு
சிறு சண்டையைத் தொடர்ந்து முரளிதரன் பச்சையப்பன் கல்லூரியிலுள்ள
சில மாணவர்களின் ஆதரவை வேண்டியுள்ளார். அவர்களில் சிலரும் கோபால
கிருஷ்ணனை தாக்கும் நோக்கோடு கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு வந்தனர்.
கந்தசாமி நாயுடு கல்லூரியின் மாணவர்கள் செயலாளரான திரு. அனந்த
குமார் தலையிட்டு, சமரசத்தை ஏற்படுத்தினார். இருப்பினும், பச்சையப்பன்
கல்லூரியைச் சேர்ந்த சுமார் 35 மாணவர்கள் அன்றைய தினமே சுமார் 15-30
மணிக்கு கந்தசாமி நாயுடு கல்லூரிக்குச் சென்றனர். அங்குள்ள போதனா
ஊழியர்களை மிகவும் பட்டாசான வார்த்தைகளால் திட்டுவதில் ஈடு
பட்டனர். பின்னர் அவர்கள் அந்தக் கல்லூரிக்குள் நுழைந்து, சோடா பாட்டில்
கள், இரும்புத்தடிகள், செயின்கள் போன்றவற்றைக் கொண்டு தாக்கி சுமார்
ரூபாய் 1,500 மதிப்பிற்கான சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர்.
ல்தல காவல் துறையினரும், கன்ட்ரோல் ரூம் பார்டியும் அவ்விடத்திற்கு
விரைந்து சென்று, அமைதியை நிலைநாட்டினர். இ. பி. கோ. 147, 148, 448,
337, 427 மற்றும் 324 பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று அண்ணா நகர் காவல்
நிலைய குற்ற எண் 124/79-ல் பதிவு செய்யப்பட்டது; பச்சையப்பன் கல்லூரி
மாணவர்களான நரசிம்மன், மோகன்குமார், எஸ். மோகன்ராஜ் மற்றும் ராஜ
ஸ்ரீனிவாஸ் என்ற நால்வரும் கைது செய்யப்பட்டு, பின்னர் 'பெயிலில்' விடப்
பட்டனர். மேற்குறிப்பிடப்பட்ட கலவரத்தில் காயமடைந்த கந்தசாமி நாயுடு
கல்லூரியின் துப்புரவாளர் கண்ணன் என்பவர் கே.எம்.சி. மருத்துவ மனையில்
புறநோயாளியாக சிகிச்சை பெற்றார்.

13—2—1979 அன்று, பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் (500)
பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கு எதிராக கந்தசாமி நாயுடு கல்லூரி
முதல்வர் எடுத்துள்ள நடவடிக்கை எதிர்ப்பு தெரிவிக்கும் முகத்தான்—
கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு ஊர்வலமாகச் செல்ல திட்டமிட்டிருந்தனர்.
பச்சையப்பன் கல்லூரி மாணவர்களால் கலவரம் ஏற்படும் என்று எதிர்
பார்த்து, 2 செக்ஷன் டி.எஸ்.பி., அரை செக்ஷன் கேஸ் படையோடு

பச்சையப்பன் கல்லூரிக்கு எதிரில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில்—எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு—நிறுத்தி வைக்கப் பட்டிருந்தார்கள். சுமார் 11-00 மணியளவில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கல்லூரி காம்பவுண்டை விட்டு வெளியே வந்து, போலீஸ் படையின் மீதும், பொது மக்களின் மீதும் மற்றும் அவ்வழியாகச் சென்ற வாகனங்களின் மீதும் கற்களையும், சோடா பாட்டில்களையும் மற்றும் பிறவற்றையும்—அவர்கள் அப்படிச் செய்வதற்கான எவ்வித சம்பவமும் நடக்காமலேயே—வீசி எறிந்தனர். இச்செய்தி கிடைத்தவுடன், புளியந்தோப்பு ரேஞ்ச் பொறுப்பிலிருக்கிற செம்பியம் ரேஞ்ச் காவல் துறை உதவி ஆணையாளர் அவர்கள், தன்னுடைய ஆயுதவாளர்களோடும், மற்ற போலீஸ் படையோடும் அவ்விடத்திற்கு விரைந்து வந்தார்; அங்கே பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சோடா வாட்டர் பாட்டில்களையும், கற்கள் போன்றவற்றையும் கல்லூரியின் மேற்குப் பக்கத்தில் ஹாரிங்டன் சாலை—பூந்தமல்லி சாலை சந்திப்பில் கூடியிருந்த மக்களின் மேலும், போலீஸ் படையின் மேலும் மற்றும் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த வாகனங்களின் மீதும் எறிந்து கொண்டிருந்ததை அவர் கண்டார். அங்கு கூடியிருந்த பொது மக்களும் பதிலுக்கு கற்களையும் மற்றும் செங்கற்களையும் அந்த மாணவர்கள் கூட்டத்தின் மீது எறிந்தார்கள். காவல்துறை உதவி ஆணையாளர் அவர்கள், சாலையில் போக்குவரத்தினை மாற்றிவிட்ட பிறகு, சண்டையில் ஈடுபட்டிருந்த பொதுமக்களையும், மாணவர்களையும் கலைந்து செல்லும்படி எச்சரித்தார். ஆனால் அவர்கள் அவருடைய எச்சரிக்கைக்கு பணிந்து போகாததோடு, தொடர்ந்து கற்களையும், செங்கற்களையும் எறிந்தனர். ஆகவே, கூட்டத்தைக் கலைப்பதற்காக தகுந்த எச்சரிக்கை விடுத்தபிறகு கண்ணீர் புகை குண்டுகளை வெடிக்கும்படி அவர் உத்தரவிட்டார். ஆனாலும், அந்தக் கும்பல் பின் வாங்குகின்ற அறிகுறிகள் காணப்படவில்லை. எனவே, ஸ்தலத்திற்கு மற்றொரு படையோடு வந்திருந்த வட சென்னை சட்டம்—ஒழுங்கு காவல்துறை துணை ஆணையாளர் ஸையத் அவர்கள் அக்கும்பலை கலைப்பதற்கு—உரிய எச்சரிக்கை விடுத்த பின்னர் மறுபடியும் கண்ணீர் புகை குண்டுகளை வெடிக்கும்படி உத்தரவிட்டார். மொத்தத்தில் 25 கண்ணீர் புகைக் குண்டுகள் உபயோகிக்கப்பட்டன. பிறகு, மாணவர்கள் கல்லூரி காம்பவுண்டிற்குள் பின் வாங்கிச் சென்றனர். அப்படிப் போகும்போது அவர்கள் அப்பாவு என்ற ஒரு காவலரையும் (1144) காம்பவுண்டிற்குள் இழுத்துச் சென்று, அவரைத் தாக்கி, அவருக்கு இடது கையில் ரத்தக்காயத்தையும் ஏற்படுத்தினர். அந்தக் காவலரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டதால், செம்பியம் பகுதி காவல்துறை உதவி ஆணையாளர் அவர்களின்



பொறுப்பிலிருந்த காவல் படை, அந்தக் காவலரைக் காப்பாற்றும் பொருட்டு, கல்லூரி காம்பவுண்டிற்குள் விரைந்து சென்றனர். அதே நேரத்தில், கல்லூரிக்கு வெளியே கூடியிருந்த பொது மக்கள் கல்லூரியின் சுற்றுச் சுவரைத் தாண்டிக் குதித்து கல்லூரி காம்பவுண்டிற்குள் நுழைந்து மாணவர்களை கற்களாலும், மற்ற பொருட்களாலும் தாக்கியதோடு, கல்லூரிக் கட்டிடத்தையும் அங்கிருந்த சைகிள்கள், ஸ்கூட்டர்கள், கார்களையும் தாக்கினர். காவல் படை அந்த ஆபத்திலிருந்த காவலரைக் காப்பாற்றியதோடு, பொது மக்களையும் கல்லூரியின் காம்பவுண்டிலிருந்து வெளியே துரத்தினர். செம்பியம் பகுதி காவல் துறை உதவி ஆணையாளர் அவர்கள் கல்லூரி காம்பவுண்டிற்குள் கடும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 41 மாணவர்களையும் 6 விடுதி பணியாளர்களையும் மற்றும் 9 பொது மக்களையும் 12-30 மணிக்குக் கைது செய்தார்.

கல்லெறி காரணமாக 32 மாணவர்களும், 6 விடுதி பணியாளர்களும், 9 பொது மக்களும் (எல்லோரும் குற்றவாளிகள்) மற்றும் 14 காவல் துறையினரும் (தென் சென்னை சட்டம்—ஒழுங்கு காவல்துறை துணை ஆணையாளர், வடசென்னை சட்டம்—ஒழுங்கு காவல்துறை துணை ஆணையாளர் மற்றும் பெரியமேடு காவல்துறை ஆய்வாளர் உட்பட) காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் கே.எம்.சி. மருத்துவ மனைக்கும், அரசினர் பொது மருத்துவ மனைக்கும் சிகிச்சை பெறுவதற்காக அனுப்பப்பட்டனர்.

செம்பியம் பகுதி காவல்துறை உதவி ஆணையாளர் அவர்கள் இ. பி. கோ. 147, 148, 427, 332, 337, 341, 323 மற்றும் 324 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்றினை கீழ்ப்பாக்கம் காவல் நிலைய குற்ற எண் 253/79-ல் பதிவு செய்து, அவ்வழக்கினை—புலன் விசாரணைக்காக நகர குற்றப் பிரிவிற்கு மாற்றியுள்ளார். கைது செய்யப்பட்ட அனைவரும் பின்னர் பெயிலில் விடப்பட்டனர்.

இக்கலவரத்தில், கல்லூரி மரச்சாமான்கள் (ஃபர்னிச்சர்), ஜன்னல் கண்ணாடிகள், சைகிள்கள், 3 ஸ்கூட்டர்கள் மற்றும் ஒரு கார் ஆகியவை சேதமடைந்தன. மாணவர்களின் கல் வீச்சால் பி.டி.சி. (P.T.C.) மற்றும் காவல் துறை வாகனங்கள் சுமார் 15 சேதமடைந்தன.

நிலைமையை சமாளிப்பதற்காக 15 செக்ஷன் டி.எஸ்.பி.-யும் 5 செக்ஷன் ஏ.ஆர்.-ம், 4 அரை செக்ஷன்கள், ஒரு முழு செக்ஷன் கேஸும் உபயோகப்படுத்தப்பட்டன. வட, தென் சென்னை சட்டம்—ஒழுங்கு மற்றும் போக்குவரத்துப் பிரிவு காவல் துறை துணை ஆணையாளர்களும், 3 காவல்துறை

### சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் காவல் துறையினர் கல்லூரிக்குள் புகுந்து மாணவர் களைத் தாக்கியது குறித்து

(திரு. கா. இராசா முகமது) [1979 பிப்ரவரி 14

உதவி ஆணையாளர்களும், 5 ஆய்வாளர்களும் மற்றும் அப்பகுதியின் சட்டம்—ஒழுங்கு காவல்துறையினரும் ஒழுங்கை ஏற்படுத்த உபயோகப்படுத்தப் பட்டனர். சென்னை நகர காவல்துறை ஆணையாளர் அவர்கள் 13-00 மணிக்கு ஸ்தலத்திற்கு வந்து பார்வையிட்டார். 14-30 மணி வரையில் அவ் விடத்திலிருந்து, அங்கு கடமையாற்றிக்கொண்டிருந்த காவல்துறை துணை ஆணையாளர்களுக்கு உத்தரவுகள் பிறப்பித்தார். முழுமையாக சகஜ நிலை நிலைநாட்டப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, பச்சையப்பன் கல்லூரியின் துணை முதல்வர் கல்லூரியை காலவரையரையின்றி மூடி கல்லூரியின் விடுதியிலிருந் தவர்களை 13—2—1979 அன்று 6 மணிக்குள்ளாக காலி செய்யும்படி கூறினார். மேற்கொண்டு எவ்வித அசம்பாவித சம்பவங்களும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு போதிய போலீஸ் பாதுகாப்பு கல்லூரி காம்பஸைச் சுற்றி போடப்பட்டிருக்கிறது.

தேவையான, தக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கின்ற காரணத்தினால், இவ்விஷயத்தைக் குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்கவேண்டிய தேவையில்லை என்பதை நான் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10)

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நேற்றையதினம் எக்ஸ்பஞ்ச் செய்த போது அதன் முடிவை ஒத்துக்கொண்டீர்கள். இடையூறு செய்யக் கூடாது. இப்பொழுது என்ன கேட்கப் போகிறீர்கள்? கேளுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவைக் குறிப்பிலிருந்து ஒன்றையும் எடுக்க வேண்டாமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * மாண்புமிகு அவை முன்னவர் விளக்கத்திற்கு பிறகு அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை யென்ற காரணத்தால் இதற்கு அனுமதியளிக்க மறுக்கிறேன்

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



### 3. கவன ஈர்ப்பு.

விவசாயிகள் விவசாயக் கடன்கள் ரத்து கோரி வரி கொடா இயக்கம் தொடங்கியுள்ளது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவரவர்களே, திருத்துறைப் பூண்டி வட்டத்தில் தொடர்ந்து 3 ஆண்டுகளாக முறையே வறட்சியாலும், புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் விவசாயக் கடன்கள் ரத்து செய்ய கோரி வரி கொடா இயக்கம் தொடங்கியுள்ளது குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, 1976 ஆம் ஆண்டில், இம்மாநிலத்தின் பெரும் பகுதியில் வறட்சி நிலவியது. வறட்சி யின் காரணமாக உழவர்களின் பயிர்கள் பாதிக்கப்பட்டன. அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, வயல்கள்தோறும் சென்று பயிர்களைப் பார்வையிடுவதன் அடிப்படையில் நிவாரணம் அளிப்பதற்காக நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டதோடு அரசுக் கடன் நிலுவையையும் அரசு ஒத்தி வைத்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் சென்னை, செங்கற்பட்டு, கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக வேறு எல்லா மாவட்டங்களிலும் மேற்சொன்ன சலுகைகள் 1386 பசலிக்கு 1—7—1976 முதல் 30—6—1977 வரையிலும் நீடிக்கப்பட்டிருக்கிறது. 1977-78 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்படவில்லை. 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட கடும் புயல், பெரு மழை காரணமாக ஏறக்குறைய தஞ்சாவூர் மாவட்டம் முழுவதுமே பாதிக்கப்பட்டது. திருத் துறைப்பூண்டி வட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டது. இந்தப் புயலாலும், பெரு வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் 1387 ஆம் பசலி ஆண்டுக் கான அரசுக் கடன்கள் 1388 ஆம் பசலி ஆண்டுக்குத் தள்ளிவைக்கப்பட்டன. இப்படி பாதிக்கப்பட்ட கிராமங்களில் 1387 ஆம் பசலி ஆண்டுக்கான நிலவரி யும் ரத்து செய்யப்பட்டன. மேலும் தமிழக விவசாய சங்கங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை ஒட்டி 15—2—1979 வரை அரசுக் கடன்கள் வசூலிப்பதில், யாரிடமும், அதாவது பெரிய பட்டாதாரர்களாக இருந்தாலும் அல்லது சிறிய பட்டாதாரர்களாக இருந்தாலும், கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டாமென்று மாவட்ட ஆட்சியர்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர். மேற்கண்ட காரணங் களால் வரிகொடா இயக்கம் ஏதும் தொடங்கக் காரணமேயில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 14

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்திருக்கின்ற அறிக்கையிலே 1977-78ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் வறட்சியால் பாதிக்கப் படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 1976ஆம் ஆண்டிலே கடைமடைப் பகுதி, நாகைப் பகுதி, திருத்துறைப்பூண்டி பகுதி ஆகியவை வறட்சியால் பாதிக்கப்பட்டனவா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிகாரிகள் மூலமாகத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். 1977ஆம் ஆண்டு புயலாலும், 1978 ஆம் ஆண்டு வெள்ளத்தாலும் அந்த வட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே 15—2—1979 வரையிலே அரசுக் கடன்களை வசூலிப்பதிலே யாருக்கும் கெடுபிடி செய்யவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவு படுத்தினார்கள். அதற்குப் பின்னால் கெடுபிடி இருக்கும் என்பதால், இப்பொழுதே ஆங்காங்கே வரி கொடா இயக்கம் நடத்தி ஆங்காங்கே அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே அதை ஒத்தி வைத்துப் பயனில்லை. கடன்களை ரத்து செய்து ஏழையெளிய விவசாயிகளைக் காப்பாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, எந்தக் கடன்களைப்பற்றி உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று விளக்கம் வந்தால் நல்லது.

**திரு. மீனாட்சிசுந்தரம் :** நில வரியையும், விவசாயக் கடனையும் தான் நான் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நில வரி என்பது வேறு. கடன் என்பது வேறு. நில வரியைப் பொறுத்தவரை, அதைப் பற்றி "போர்ட் ஸ்டான்டிங் ஆர்டரில்" தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தந்த பசலியில் வருவாய் குறைவாக இருந்தால், ஆட்சித் தலைவரவர்களே அங்கேயிருக்கிற தாஸ்தாவேஜுகளைப் பார்த்து, பாதிக்கப்பட்டிருந்தால், தள்ளுபடி செய்யக் கூடிய அதிகாரம் இருக்கிறது. விவசாயக் கடன் என்றால், என்ன கடன் என்று தெளிவாக விளக்கிச் சொல்லும்படி உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** விவசாயக் கடன் என்றால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயத்துக்காகத் தரப்படுகின்ற கடன், உரம் முதலியவை வாங்குவதற்காகத் தரப்படுகின்ற கடன். அவற்றை ரத்து செய்ய வேண்டுமென்று [illegible] ஏதாவது வேண்டுகோள் வந்திருக்கிறதா? வந்திருந்தால் [illegible]பற்றி அரசு [illegible] முடிவு செய்யுமா?



1979 பிப்ரவரி 14]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இதுவரை அப்படிப்பட்ட கோரிக்கை வந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும் நான் குறிப்பாகச் சொல்லுகிறேன். கடன் என்றால், அரசு மூலமாக வாங்குகிற கடன் இருக்கிறது. கூட்டுறவுத் துறை மூலமாக வாங்குகிற கடன் இருக்கிறது. மையப் பேரரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட ரிசர்வ் வங்கியிலிருந்து கூட்டுறவுத் துறை மூலமாக விவசாயிகளுக்குக் கொடுத்து, திருப்பி அவர்களிடமிருந்து வாங்கி வங்கிக்குக் கொடுக்கின்ற கடன் இருக்கிறது. இப்படிப்பட்ட கடன்களையெல்லாம் கடந்த 3 ஆண்டுகளாக, 4 ஆண்டுகளாக ஒத்தி வைத்திருக்கிறோம். இவ்வாண்டு என்ன செய்வது என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

### 4. அரசின் தீர்மானம்.

### வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"திரு. கே. எஸ். அப்துல் வகாப், எம்.எல்.சி. அவர்களின் பதவிக் காலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் முடிவடைந்து விட்டதால் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப, தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு, வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் 'வகுப்பு II ஏனைய உறுப்பினர்கள்' என்ற தலைப்பின் கீழ் (h) பகுதியையொட்டி, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று இம்மன்றம் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்".

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"திரு. கே. எஸ். அப்துல் வகாப், எம்.எல்.சி. அவர்களின் பதவிக் காலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் முடிவடைந்து விட்டதால் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப, தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் 'வகுப்பு II ஏனைய உறுப்பினர்கள்'

(மாண்புமிகு மேலவைத் தலைவர்) [1979 பிப்ரவரி 14

என்ற தலைப்பின் கீழ், (h) பகுதியையொட்டி, மாண்புமிகு மேல தலைவர் முடிவு செய்யும் நாளன்று இம்மன்றம் ஓர் உறுப்பினரைத் தேர் தெடுக்க வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வேளாண்மைப் பல்கலைக் நிர்வாகக் குழுவிற்கு உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கென கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நியமனத்தாள்கள் வந்து சேர
கடைசி நாளும், நேரமும் : 16—2—1979 மாலை 5 ம

நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப்படும்
நாளும், நேரமும் : 16—2—1979 மாலை 6 ம

நியமனத்தாள்களைத் திரும்பப் பெற
கடைசி நாளும், நேரமும் : 17—2—1979 மாலை 5 ம

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்ப வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமேயின் வாக்கெடுப்பு நடைபெறும். வாக்கெடுப்பிற்கான நாளும், நேரமும் பின் அறிவிக்கப்படும்.

நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற் கொள்ளலாம்.

### 5. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் உரை மீதான விவாத கென்று 6 நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

கடைசி நாள் எதிர்க்கட்சித் தலைவர் பேசுவார். ஒருநாள் மாண் அமைச்சர் பதிலளிப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2 நாள் நடை விவாதத்தில் மொத்தம் 4 பேர் தான் பேசியிருக்கிறார்கள். இன்னும் 3 கள்தான் இருக்கின்றன. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 15 நிமிடங்க மேற்படாமலும், எதிர்க்கட்சித் தலைவர்கள் ½ மணி நேரத்திற்கு மே மலும் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பேசினால்தான் அந்த பிட்ட நாளன்று விவாதம் முடியும். அனைவரும் ஒத்துழைக்கு கேட்டுக்கொள்கிறேன்.



பிப்ரவரி 14]

(பிற்பகல் 5-20)

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் ஆசிரியர்கள் பிரதிநிதியாகிய நான் கலந்து கொள்ள வாய்ப்பு தந்த தங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொண்டு விவாதத்தை துவங்குகிறேன். நான் பேசத் தொடங்குகிறபோதே, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் உறுப்பினர்கள் தங்கள் பேச்சை 15 நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டு மென்று காலத்தை வரையறை செய்து தெரிவித்திருக்கிறார்கள். என்றாலும் கூட கடந்த இரண்டு நாட்களாக ஒவ்வொரு நாளும் இரண்டு உறுப்பினர்கள் தான் பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீண்ட நேரம் தரப்பட்டிருக்கிறது. எனவே நான் பேசுகிற இந்த நேரத்தில் அய்யா அவர்கள்—மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் மேற்சொன்னவாறு குறிப்பிட்டார்கள் என்றாலுமகூட, பெருமனது செய்து காலத்தை நீட்டித்துத் தருவார்கள் என்ற எண்ணத்தோடு பேசத் தொடங்குகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடுத்து, வரவு செலவுத் திட்டத்தின் மீது உறுப்பினர் பேசும்போது நான் நேரத்தை நீட்டித்துத் தருகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆளுநர் உரையிலே பல்வேறு நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்பதைக் குறித்து நான் அதை மனதாரப் பாராட்டுகிறேன். 13,400 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருப்பதைப்பற்றியும், கிராமப் பகுதிகளில் நிலமற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீடு கட்டுவதற்கு மனைகளை வழங்கும் திட்டம் பற்றியும், கிராமப்புறங்களில் நிலவும் வேலை யில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து, படித்த, படிக்காத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என் னுடைய தொகுதிக்குள்ளடங்கிய வேதாரண்யம் பகுதியில் பெரியதொரு நவீன உப்புத் தொழிற்சாலையைத் தொடங்க இருப்பதையும், அரசு அலுவலர் களுக்கு நிர்வாகப் பயிற்சி அளிக்கும் நிலையம் அமைக்க இருப்பதையும் குறிப்பிட்டு, சிவகாசி விபத்தைக் குறித்த வேதனையை வெளியிட்டு, அந்த விபத்துக்குக் காரணமாக இருந்தவர்களைக் கண்டித்திருப்பதையும் குறிப் பிட்டிருக்கிறார்கள். இப்படி பல்வேறு வரவேற்புக்குரிய செய்திகள் இருந் தாலும், 16 பக்கங்கள் கொண்ட ஆளுநரின் உரையிலே நாங்கள் தேடித் தேடிப் பார்க்கிறோம், அலசி அலசிப் பார்க்கிறோம் 'ஆசிரியர்' என்ற ஒரு சொல் எங்காவது வந்திருக்கிறதா என்று. ஆசிரியர்கள்தான் இந்த நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள் என்றெல்லாம் பேசுகிற இந்த நேரத்தில், அவர்

கள்தான் எல்லாவற்றையும் செய்கிறார்கள் என்று குறிப்பிடுகிற நேரத்தி 'ஆசிரியர்' என்ற ஒரு சொல்கூட இந்த 16 பக்க அறிக்கையிலே—ஆளு உரையிலே—வரவில்லை என்பதை மிக மிக வேதனையோடு சுட்டிக்காட் விரும்புகிறேன். அது மட்டுமல்ல, 7½ லட்சம் அரசு ஊழியர்களை கொண்ட ஒரு நிருவாக இயந்திரம் இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்த நிருவாகம் சரியாகச் செயல்படுகிறது என்றால், அதற்குக் காரண இந்த அரசு ஊழியர்கள்தான் என்று தெரிந்திருந்தும்கூட, அந்த ஊழி களைப்பற்றி இந்த ஆளுநர் உரையிலே ஏதாவது வந்திருக்கிறதா, அவர்க நிலை உயர ஏதாவது வழிவகை சொல்லப்பட்டிருக்கிறதா என்று பார்த்தா அப்படிப்பட்ட செய்திகள் எதுவுமே காணோம். ஆகவே இந்த உரை அர ஊழியர்கள், ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் பெருத்த ஏமாற்றமா அமைந்திருக்கிறது என்று நான் சொன்னால், யாரும் வருத்தப்படமாட்டா கள் என்று கருதுகிறேன். மற்றொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறே மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை சென்ற தொடர்கூட்டத்திற்குப் பி னாலே அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு இப்போதுதான் அடுத் தொடர்கூட்டம் துவங்குகிறது. சென்ற கூட்டத் தொடரின்போது நம மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊதியக் குழுவின் அறிக்கையை வி வில் செயல்படுத்துவோம் என்று அறிவித்தார்கள். அதைப் போல 37½ கோடி ரூபாய் செலவாகும் வகையில் மூன்றாவது ஊதியக் குழுவி அறிக்கையைச் செயல்படுத்தும் நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஆ 37½ கோடி ரூபாய் செலவு செய்து, இவ்வளவு பெரிய நன்மையைச் செ திருக்கிறோம் என்று அவர்கள் ஆளுநர் அவர்கள் உரையிலே பெருமையாக கூடக் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிக் குறிப்பிடா தற்குக் காரணம் அந்த ஊதியக் குழுவின் அறிக்கையில் எதுமில்லை. அர ஊழியர்களும், ஆசிரியர்களும் அனைவருமே பெருத்த ஏமாற்றத்திற் உள்ளாகியிருக்கிறார்கள் என்பதை மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்க உணர்ந்திருக்கிற காரணத்தால்தான், இதிலே பெருமைப்படுவதற்கு ஏ மில்லை என்று கருதி, ஊதியக் குழு பற்றி எதையுமே சொல்லவில்லை என் நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்ல, உறுப்பினர்களாகிய நாங்கள் இதற்கு முன்னா இங்கே இருக்கும் அமைச்சர்களிடமிருந்து பல்வேறு உறுதிமொழிகளை பெற்றிருக்கிறோம். குறிப்பாக ஓய்வு பெற்றவர்களுக்கு ரூபாய் 10,0 வழங்குதல் என்ற திட்டத்தினை சென்ற நிதிநிலையறிக்கையிலேயே மா மிகு நிதியமைச்சர் அவர்கள் படித்தார்கள். அந்தத் திட்டத்தைச் செய



படுத்துகிற முறையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவிலேயே அமுல்படுத்துவோம் என்று அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அப்படி ஏதும் சொல்லப்படவில்லை. இதற்காக ஏற்கெனவேகூட ஒரு போராட்டம் நடத்தப்பட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வாரத்தில் உங்கள் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து பேச்சு வார்த்தை நடத்துகிறேன் என்று சொன்னார்கள். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படாதது குறித்து இங்கே எதுவும் குறிப்பிடப்படவில்லை. அது போலவே மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கையில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய ஒரு நிவர்த்திக் குழு அமைக்க வேண்டும் என்ற எங்கள் கோரிக்கைக்கு இசைவு தெரிவித்தார் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். அது பத்திரிகைகளிலும் வானொலியிலும்கூட ஒலிபரப்பப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ அந்த நிவர்த்திக் குழு இன்னும் அறிவிக்கப்படவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் உறுதிமொழி நிறைவேற்றப்படாமலேயே இருக்கிறது. அதற்குரிய காரணம்கூட இங்கே குறிப்பிடப்படவில்லை.

சென்ற கூட்டத் தொடரின்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே பல்வேறு வேண்டுகோள்களைச் சொல்லி பல்வேறு உறுதிமொழிகளைப் பெற்றோம். தனியார் பள்ளி ஆசிரியர்கள், தனியார் கல்லூரி ஆசிரியர்கள் அனைத்துக் கல்லூரிகளின் ஆசிரியர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு போராட்டம் நடத்தினார்கள். ஆசிரியர்கள் பணியிலிருந்து விலக்கப்படுவதை எதிர்த்து அந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், நான் இந்த அவையிலே தந்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேசுகிறபோது வெளிப்படையாகவே சொன்னார்கள். "அப்படிப்பட்ட நிலை வராது. அரசாங்கம் ஆசிரியர்கள் பணியிலிருந்து வெளியேற்றப்படுவதை சட்டபூர்வமாகத் தடுக்கும்" என்று உறுதிமொழி அளித்தார்கள். ஆனால் நிலைமை என்னவென்றால் இன்றைக்குக் கூட ஆசிரியர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். திருச்சி ஹோலி கிராஸ் பள்ளியில் இப்போது போராட்டமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக இந்த அரசினுடைய அமைச்சர்கள் தருகிற எந்த உறுதிமொழியும் நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்றன என்பதையும், அவ்வாறு உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாத காரணத்தால் போராட்டங்கள் வெடிக்கின்ற சூழ்நிலை மீண்டும் வருகின்றது என்பதையும் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1979 பிப்ரவரி 14

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம்
சென்றுவந்தபோது, ஜப்பான் நாட்டில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியைப்
பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த நாட்டில் தொழிலாளர்கள் போராடும்
முறையைக் குறிப்பிட்டு அப்போது அவர்கள் பாராட்டு தெரிவித்தார்கள்.
ஜப்பான் நாட்டுத் தொழிலாளர்கள் போராடுவதற்கு முன்னதாக அமைதி
யான வழியில் கருப்புச் சின்னம் அணிந்து தங்கள் கருத்துக்களையும் குறை
களையும் தெரிவிக்கிறார்கள். அரசு உடனே அவற்றையெல்லாம் செயல்
படுத்துகிறது. அந்த நாட்டுத் தொழிலாளர்கள் தங்களின் வேலைக்குக்
குந்தகம் இல்லாமல் தங்கள் போராட்டத்தை நடத்துகிறார்கள் என்ற கருத்
தைத் தெரிவித்து அந்த முறையைக்கூட முதலமைச்சர் அவர்கள் பாராட்டி
னார்கள். அந்த அடிப்படையிலேயேகூட போராடலாமே என்று நாங்கள்
எண்ணிக் கொண்டோம். ஒருவேளை இதற்கு முன்னாலே நம்முடைய
அணுகுமுறை சரியாக இல்லையோ என்றுகூட கருதி, ஆசிரியர்கள் 3-வது
ஊதியக் குழுவின் அறிக்கை வெளியிட்ட பின்பு அந்த அறிக்கை மிகுந்த
ஏமாற்றமாக இருக்கிறது, அடிமட்டத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு எந்தப்
பயனும் இல்லை, ரூ. 5, 7, 9, 11 என்றுதான் ஊதிய உயர்வு கிடைத்திருக்
கிறதே தவிர, அரசு அறிவிப்பில் குறிப்பிட்டதைப் போல் 130 ரூபாய் பெறக்
கூடிய அளவுக்கு அந்த அறிவிப்பில் ஒன்றுமில்லை, குறிப்பாக அடிமட்டத்தில்
இருப்பவர்களுக்கு ஒன்றுமேயில்லை என்று சொல்லி மற்றும் அதிலே இருக்
கிற பல்வேறு குறைபாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டி அதற்காக அமைதி
வழிப் போராட்டம் ஒன்றை கருப்புச் சின்னம் அணிந்து ஆசிரியர்கள் நடத்திக்
காட்டினார்கள். சுமார் 2 லட்சம் ஆசிரியர்கள் அவ்வாறு கருப்புச் சின்னம்
அணிந்தார்கள். ஆனால் அதைப் போன்ற நிகழ்ச்சி வெளிநாட்டிலே நடந்த
போது பாராட்டிய முதலமைச்சர் அவர்கள் இங்கே அதே முறையில் அந்தப்
போராட்டத்தை ஆசிரியர்கள் நடத்தியபோது, அவர்களை அழைத்து
வைத்துப் பேசுகிற நிலைமை உருவாக்கினார்களா என்றால் இல்லை.
அதற்குப் பின்னாலே ஆசிரியர்கள் உண்ணாவிரதம்கூட இருந்தார்கள்.
அப்போதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரும்பிக்கூடப் பார்க்க
வில்லை. 9, 10, 11 தேதிகளில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின்
கூட்டமைப்பு பாதயாத்திரை மேற்கொண்டபோது, முதலமைச்சர் அவர்
களைப்பற்றிக் கவலைப்படவில்லை. வெளிநாட்டிலே இருப்பவர்கள்
போராட்டம் நடத்தினால், முதலமைச்சர் அவர்கள் அவர்களைப் பாராட்டு
கிறார்கள். நம் நாட்டிலே அதே முறையில் போராட்டம் நடத்தப்பட்டால்,
அவர்களை அழைத்துப் பேசி குறைகளைப் போக்க நினைக்கும் நிலை
இன்னும் ஏற்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்
கிறேன்.



1979 பிப்ரவரி 14] (திரு. க. மீனாட்சிசுந்தரம்)

அது மட்டுமல்ல, ஊதியக் குழு அறிக்கையைக் கொளுத்தப் போகிறோம்
என்றெல்லாம்கூட ஒரு சங்கம் அறிக்கை விட்டிருக்கிறது. அப்படிப்பட்ட
போராட்டங்களுக்கெல்லாம் காரணம் அரசாங்கத்தின் தற்போதைய அணுகு
முறைதான் என்பதை நான் பணிவன்போடு சுட்டிக்காட்ட கடமைப்
பட்டிருக்கிறேன். காரணம், ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதை எல்லாத்
தலைவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வெளிப்படையாக எல்
லோரும் பேசுகிறார்கள். ஆனால் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்
டிருப்பது என்னவென்று பார்த்தால், சிறுபான்மையோரை, விரல்விட்டு
எண்ணக்கூடிய சிலரைக் கொண்டு புதிய அமைப்புகளை அரசுக்குப் பக்கபல
மாகக் கொண்டுதான் இப்பொழுது இந்தக் கப்பல்கள் இயங்கி வருகின்றன.
அவைகளுக்கெல்லாம் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. காலம் காலமாக
என்.ஜி.ஜி.ஓ. வினர் சங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே
உள்ளவர்கள் அவர்களுடைய கோரிக்கையை நடுநிலையில் நின்று தெரிவிக்
கிறார்கள். அப்படித் தெரிவிக்கிற நேரத்தில் அவர்கள் எல்லாம் அரசாங்
கத்திற்கு எதிர்ப்பான கருத்துத் தெரிவிப்பதாகக் கருதி, அந்தச் சங்கத்தை
ஒழிக்கிற நோக்கத்தில் செயல்படுகிற ஒரு சில விரல்விட்டு எண்ணக்கூடியவர்
களை அழைத்து ஒரு சங்கம் அமைத்து, அதற்கு அரசாங்க அங்கீகாரம்
அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிரிவினர் ஏற்கெனவே 3 முறை முயன்று
தலைமைச் செயலாளர் அவர்களாலும் சம்பந்தப்பட்ட செயலாளர்களாலும்,
அங்கீகாரம் கேட்கும் அவர்களது கோரிக்கை நியாயமற்றது என்று தெரி
விக்கப்பட்டு மறுக்கப்பட்டது. இப்போது மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் தலையிட்டு இன்றையதினம் அவர்களாகவே அந்த அங்கீகாரத்தைத்
தந்திருப்பதாகச் செய்தி வருகிறது. உண்மையான நிலைமை அப்படி இருந்
தால், நான் வருத்தப்படுவதைத் தவிர, வேறு வழியில்லை என்று தெரிவித்துக்
கொள்ளுகிறேன்.

ஆகவே சங்கத்தைப் பிளப்பதற்கு, தங்களுக்கு உடந்தையாக தங்களுக்குச்
சாதகமாக இருப்பவர்களை வளர்த்துவிடும் வழிமுறைகளை இப்போதைய
அரசு கையாண்டு வருகிறது என்பதை மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்
கொள்கிறேன். அவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்து, அவர்களுக்குப் பதவி
உயர்வு கொடுத்து பல பல கமிட்டிகளிலே போட்டு ஆதரவு கொடுக்கப்படுகிறது
என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்
லோருக்கும் சமமான வாய்ப்புத் தராமல், சந்தர்ப்பம் தராமல் சில குறிப்
பிட்டவர்களை மட்டும் சில குழுக்களில் நியமித்து அந்தச் சங்கங்களை
அரசாங்கம் ஊக்குவிக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்,

ஆசிரியர்களின் பிரதிநிதிகளாக 6 பேர் இந்த அவையிலே இருந்தும்கூட, இங்கே இருக்கிற எந்த ஒரு கல்வியாளரும் அரசாங்கத்தின் கண்ணுக்குத் தென்படவில்லை. போர்டு ஆப் செகண்டரி எஜுகேஷன் என்ற அமைப்பில் இந்த அவையில் இல்லாத ஒரு வெளியாரை, சிறுபான்மை இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரைப் பங்கு பெறச் செய்திருக்கிறார்கள். இது அப்படிப் பட்டவர்களை ஊக்குவித்து, மற்றவர்களை மட்டம் தட்டுகிற முறையில் அமைந்திருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதுமட்டுமல்ல; ஆசிரியர்கள் சங்கத்தைப் பிளக்கிற வகையிலே புதியதோர் சங்கத்தை உருவாக்கி அந்தச் சங்கத்திற்கு என்று அலங் கார் ஹோட்டலில் அறை எடுத்துக் கொடுத்து, அவர்களுக்குப் பண வசதி எல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள். இந்த வகையிலே தான் இன்றையதினம் ஆளும் கட்சியினர் செயல்படுகிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சியினர் என்று சொல்கிறபோது நான் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவன் என்ற அந்த வரிசையில் இருந்து சொல்வதாகக் கருத வேண்டாம். நான் ஆசிரியர்—அரசு ஊழியர்களின் சங்கப் பிரதிநிதி என்ற கருத்தில் சொல்லுகிறேன். இருக்கின்ற

(பிற்பகல் 5-30)

சங்கங்கள் வைக்கின்ற கோரிக்கைகளைப் பற்றிய கருத்தைப்பற்றி அவர் களை அழைத்துப் பேசுவதை விட்டுவிட்டு, அச்சங்கங்களைப் பிளக்கிற பணியில் உள்ள சங்கங்களிடம் அரசு சொல்லுவது என்பது நல்ல முறையாக இருக்காது என்பதை இந்த நோக்கிலே பணிவன்போடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அது மட்டுமல்ல, சங்கங்களை இந்த அரசு மதிக்கவில்லை என்பதை மிகப் பெரிய குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். நடைமுறையிலே உள்ள மிகப் பெரிய சங்கம் ஒரு மாநாடு நடத்துகிறது. உதாரணத்திற்கு பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் குடந்தையிலே ஒரு மாநாடு நடத்தியது. அதிலே பங்கு பெற்ற முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். மூன்றாயிரம் தமிழாசிரியர் களுக்கு பணி அளிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அறிவித்தார்களே தவிர அவ்வறிவிப்பு இதுவரை செயல்படுத்தப்படவில்லை. தமிழாசிரியர் களுக்கு பணி அளிக்கப்படுமென்று அவர்கள் அறிவித்ததில் தவறில்லை. அந்த ஆசிரியர்களுக்கு அதனால் மகிழ்ச்சிதான். ஆயிரக்கணக்கான ரூபாயைச் செலவழித்து எந்தச் சங்கம் மாநாட்டை நடத்துகிறதோ அந்தச் சங்கத்தினுடைய கோரிக்கையைப்பற்றிப் பேசாமல், வேறு ஒரு சங்கத் தினுடைய கோரிக்கை அங்கே சொல்லப்படுகிறது. அதைப் போலவே அண்மையில் கல்லூரி ஆசிரியர்களுடைய மாநாடு உதகமண்டலத்திலே





நடந்தது. அதற்கு அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். அதிலே ஒன்றைச் சொன்னார்கள். 1973 ஆம் ஆண்டு போராட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் 14 நாட்கள் பணி இழப்புக்கு ஆளாகியிருந்தார்கள். அதை பணிக் காலமாக அறிவிக்கிறேன் என்ற பட்டதாரி ஆசிரியர்களுடைய கோரிக்கையை அங்கே அறிவித்தார்கள். அப்படிச் சொல்லக்கூடாது என்று நான் சொல்லவில்லை. எங்கே வேண்டுமானாலும் ஆசிரியர்களுடைய பிரச்சி னைகளைப்பற்றிச் சொல்லலாம் என்றாலும் கூட, அந்தச் சங்கத்தை மதிக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு அந்த அறிவிப்பைத் தந்தார்கள். அ. இ. மு. க. வேட்பாளராக தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் பட்ட தாரி தொகுதியைச் சேர்ந்தவர் என்பதால் அவரை மேடையிலே உட்கார வைத்துக் கொண்டு அவரையும் அங்கே அறிமுகப்படுத்தி—அவர் அக்கோரிக்கை யைக் கேட்டார் எனக்கூறி அப்படிச் சொன்னார்கள். அப்படிச் சொன் னால்தான் ஓட்டு கிடைக்கும் என்பதற்காக அதிகார துஷ்பிரயோகம் என்று சொல்வார்களே அதைப் போல் அந்த மாநாட்டில் அமைச்சர் அவர்கள் உறுதி மொழியை அளித்திருக்கிறார்கள். எனவே இப்படி ஆளும் கட்சியும், அதிகாரிகளும் நடந்துகொள்ளுவது ஆசிரிய சமுதாயத்தையும், ஆசிரியர் சங்கங்களையும், அரசு ஊழியர் சங்கங்களையும் கவுரவக் குறைவாகக் கருதக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மற்றொன்று. இப்படியெல்லாம் நான் சொல்லும்போது எதிர்தரப் பிலிருந்து குற்றம் சாட்டுவதாக எண்ணக்கூடாது. ஆசிரியர் என்ற முறை யிலே சொல்லுகிறேன். தாய்க் குலத்திற்குப் பெருமை அளிக்க வேண்டு மென்று கருதுகிற ஆட்சி இன்று நடைபெறுகிறது. குடந்தையிலே ஒரு ஆசிரியை மெடர்னிட்டி விடுப்பில் சென்றிருக்கிறார்கள். மகப்பேறு கால விடுப்புக்குப் பின்னால் அவர்கள் திரும்பும்போது, அவர்களை முன்பிருந்த அதே பள்ளியில்தான் அமர்த்துவார்கள். அவருடைய கணவர் திருச்சியிலே ஆசிரியராக இருக்கிறார். அவர்கள் இருவரையும் சேர்க்க வேண்டுமென்று ஆணை இருந்தும் கூட, அவர்கள் சேர்க்கப்படவில்லை. அந்த அம்மையார் குழந்தை பெற்று மகப்பேறு நல விடுப்பு முடிந்து திரும்பி வருவதற்குள் ளாகவே அவரை மாயூரத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். காரணம் கேட்டால், “ஆளும் கட்சியைச் சேர்ந்த மிகப் பெரிய பிரமுகர் அவருக்கு வேண்டிய பெண்ணை அப்பள்ளியில் போட வேண்டுமென்று சொன்னார்; ஆகவே போட்டோம். இல்லையென்றால், எங்களுக்கு ஆபத்து” என்று சொல் கிறார்கள். பச்சைக் குழந்தையை வைத்துக்கொண்டு தினந்தோறும் தஞ்சையிலிருந்து மாயவரத்திற்குச் செல்லக்கூடிய மோசமான நிலைமை

அமைத்து உருவாக்கியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு அதிகாரிகளாகட்டும், ஆளும் கட்சிக்காரர்களாகட்டும், இவர்கள் ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களையும் படாத பாடு படுத்துகிற நிலையை இன்று பார்க்கிறேன்.

திருப்பனந்தாள் ஒன்றியத்தில் செகண்டரி கிரேட் ஆசிரியராக இருந்து புலவராக மாறியவர். அவர் 1968 ஆம் ஆண்டிலேயே பாஸ் செய்தார். ஆனால் அவருடைய பதவியை அப்கிரேட் செய்யாமல் அவரைப் புறக்கணிக்கிற வகையில் 1976 ஆம் ஆண்டு பாஸ் செய்த பெண்மணி ஒருவருக்கு ஒரு ஆளுங் கட்சி அமைப்பாளர் கூறினார் என்பதற்காக பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 1971 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்தவர்களைத்தான் புலவர்களாகப் போட வேண்டும் என்று ஆணை இருக்கிறது. ஆனால் அதைப் புறக்கணிக்கிற வகையிலே இந்த உத்தியோகம் அந்தப் பெண்மணிக்குத் தரப்பட்டிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஆசிரியரைப் படுத்திய பாட்டைப்பற்றி அந்த ஆசிரியர் 4 பக்கம் அச்சடித்து எம்.எல்.ஏ., எம்.எல்.சி. அறைகளில் தந்திருக்கிறார்கள். அதைக் கவனமாகப் பார்க்க வேண்டும். பரமக்குடி சம்பவம் பற்றி அனைவருக்கும் தெரியும். திருப்பூரில் ஒரு ஆசிரியர் தாக்கப்பட்டிருக்கிறார். அவர் என் தாக்கப்பட்டிருக்கிறார்? அவர் ஆசிரியர்களின் சார்பாகச் சில கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருந்தார் என்பதற்காகத் தாக்கப்பட்டு அவர்மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை இன்றைய தினம் இருக்கிறது. இதெல்லாம் கீழ் மட்டத்திலே இருந்தாலும், அதையெல்லாம் தவிர்க்கக்கூடிய சூழ்நிலையை ஆட்சியாளர்கள்தான் ஏற்படுத்த வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டது. தலைவர் ஏற்கனவே சொல்லிவிட்டுப் போயிருக்கிறார், உங்களுடைய கருத்துக்களையெல்லாம் வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் பேசிக்கொள்ளலாம் என்று. ஆகவே தயவு செய்து சீக்கிரம் முடித்துவிடுங்கள். உங்களுக்குப் பின் பல பேர் பேசவிருக்கிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இன்னும் ஆசிரியர்கள் பிரச்சினைக்கே வரவில்லை. நல்ல வரவேற்கத்தக்க சில அம்சங்கள் ஆளுநர் உரையிலே இருக்கின்றன. அதாவது வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதைவிட இப்போது



நடைமுறையிலே இருக்கிற சிக்கல்களைத் தீர்த்தாலே, வேலை வாய்ப்பை அதிகப்படுத்த முடியுமென்று கருதுகிறேன். ஓர் ஆசிரியர் 21 நாட்களுக்கு மேல் விடுப்பு எடுத்தால்தான், அவருக்குப் பதிலாக மற்றொரு ஆசிரியரைப் போட வேண்டுமென்று இப்போது விதியிருக்கிறது. அதற்குக் குறைவாக விடுப்பு எடுத்தால், சப்ஸ்டிடியூட் போட அனுமதிப்பதில்லை. அது பஞ்சாயத்து யூனியன் பள்ளியாக இருந்தாலும் சரி, அரசுப் பள்ளியாக இருந்தாலும் சரி, தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி, அங்கெல்லாம் ஓர் ஆசிரியர் விடுப்பு எடுத்தால் அவருக்குப் பதிலாக மற்றொரு ஆசிரியரை உடனுக்குடன் நியமிக்கலாம் என்ற நிலைமையை உருவாக்கினால், அதனால் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க முடியும்.

மேலும் தற்போது ஒரு அரசு ஊழியர் 20 ஆண்டுகள் பணி புரிந்திருந்தால் மட்டுமே தானாக முன்வந்து ரிடையர் ஆகலாம் (வாலண்டரி ரிடையர்மென்ட்) என்றிருக்கிறது. அவ்வாணைகூட இன்னமும் ஆசிரியர்களுக்கு விரிவாக்கப்படவில்லை. ஆனால் ராஜஸ்தானில் 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தாலே வாலண்டரி ரிடையர்மெண்ட் ஆகலாம் என்றிருக்கிறது. ஆகவே இங்கும் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தாலே, வாலண்டரி ரிடையர்மென்ட் ஆகலாம் என்ற திட்டத்தைக் கொண்டுவந்தால், பணியிலே இருக்கிறவர்கள் வீட்டுக்குச் சென்று விடுவார்கள். அதனால் வேலை வாய்ப்பு நிறைய ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும் ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதத்தை 1 : 20 என்று குறைத்தால் வேலை வாய்ப்பைத் தர முடியும் என்றும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

சிவகாசியிலே பஸ் விபத்திலே உயிர் இழந்தவர்களின் குடும்பத்திற்கு நிதியைக் கொடுக்கிற நிலைமையை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். ஆனால் பள்ளி வயது மாணவர்களைக் கொண்டு போய் தொழிற்சாலைகளில் பணியாற்ற வைக்கக் கூடாது என்று சட்டம் இருந்தும் கூட, அதைப் புறக்கணித்துவிட்டு பணியில் அமர்த்தியிருக்கிறார்கள். 1975 ஆம் ஆண்டே ஆசிரியர் மன்றத்தினர் சேர்ந்து மாவட்ட ஆட்சியாளர்களிடத்திலே புகார் செய்த பிறகும் கூட அந்தச் சட்டத்தை அமுல்படுத்தாத தொழிற்சாலை நிர்வாகிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பல பள்ளிக் குழந்தைகள் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களாகவும், உணவு விடுதிகளில் டேபிள் துடைப்பவர்களாகவும், லாட்ஜ்களில் ரூம் பாய்களாகவும், பாய் முடைபவர்களாகவும், கிராமங்களில் மாடு மேய்ப்பவர்களாகவும், கடற்கரையோரத்தில் சுண்டல் விற்பவர்களாகவும், பிச்சை எடுப்பவர்களாகவும் இருக்

கிறார்கள். அவர்களையெல்லாம் அரசே பிடித்து அவர்களைக் கட்டாயப் படுத்தி பயிற்றுவிக்கக் கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்நிலைக் குப் பரிகாரம் காண, மிகக் கடுமையான சட்டம் போட்டு, அதை நிறை வேற்ற வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில், தாத்தையங்கார்பேட்டையில் பாறைக்கு வைக்கப் பட்ட வெடி பள்ளி மாணவியைத் தாக்கி அவளுடைய உயிரைக் குடித்திருக் கிறது. அதற்குக் காரணம் வெடி வைத்தவர்கள் லைசென்ஸ் இல்லாமல் பள்ளிக்குப் பக்கத்திலேயே தோட்டா வெடி வைத்திருக்கிறார்கள். ஆனால் நாட்டு வெடி வைக்கப்பட்டதாக அவர்கள் சமாதானம் சொல்லுகிறார்கள். அந்த வெடி ஆஸ்பெஸ்டாஸ் கூரையை உடைத்துக் கொண்டு வகுப்பில் இருந்த மாணவி மீது விழுந்து அவர் உயிரை இழந்திருக்கிறார். உயிரை இழந்த வருடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்க வேண்டும். இதில் கூலிக்காக வேலை செய்தவன்தான் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். லைசென்ஸ் பெறாமல் வெடி வைக்கத் தூண்டிய அந்த நில உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். காண்ட்ராக்டர்கள் தப்பித்துக் கொண்டுவிட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 5-40)

மேலவை உறுப்பினர் என்ற முறையில் ஒன்றைச் சொல்லுகிறேன். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் அவர்கள் கொலை செய்யப்பட் டார்கள். அது மிகப் பயங்கரமான விஷயம். பேரவை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தாக்கப்பட்டதைப் பார்க்கிறோம். அது மிக மிகப் பயங்கர மான விஷயம். தொழிற் சங்கத் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி போன்றவர்கள், ஆசிரியர் மன்றப் பொருளாளர் திரு. வில்லியம்ஸ் போன் றவர்கள் தாக்கப்பட்டார்கள். இவற்றையெல்லாம் மிகப் பயங்கரமாகக் கருத வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்பாவி மக்களாக இருந்து விடலாமே, ஏன் எல்லோருக்கும் தெரிந்தவனாகப் பணியாற்றுகிறோம், என்றைக்கும் உயிருக்கு ஆபத்து இருக்கிறதே என்ற எண்ணம் ஏற்பட்டிருக் கிறது. சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே, என் அறையிலே தூங்கிக் கொண்டிருந்தேன். தலைமாட்டிலே, கோட் ஸ்டாண்டிலே மாட்டியிருந்த சட்டையை சன்னல் வழியாகத் தூக்கிச் சென்றுவிட்டார்கள். எப்படித் தான் அந்த இடத்திற்கு ஏறி வந்தார்களோ தெரியவில்லை. சினிமாக்களில் வருவார்களே அப்படித்தான் வந்திருக்க வேண்டும். தலைமாட்டில் மாட்டி வைத்திருந்த சட்டையை கம்பி கொண்டோ அல்லது வேறு எதன் மூல மாகவோ இழுத்து, எடுத்துச் சென்றிருக்கிறார்கள். 102 ரூபாய் 50 காசு



காணாமல் போய்விட்டது. இரவு 3½ மணியிருக்கும். அதற்குப் பின் னாலே போலீசுக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்க முயற்சித்தால், தொலை பேசியை எடுப்பாரில்லை. தொலைபேசியில் பேச ஆளில்லை. பிறகு எல்லோரையும் எழுப்பி, அதற்குப் பின்னாலே தேடச் செய்து, யார் யாரையோ பிடித்து வந்து விசாரித்தார்கள். ஒன்றும் அகப்படவில்லை.

இன்றையதினம் தொழிற் சங்கத் தலைவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்துகிறார்கள். அவர்களுக்கு எங்கேயாவது எதிர்ப்பு இருக்கக்கூடும். இன்றைக்கு சட்டமன்றத்திலே வாதாடுகிறவர்களாக நாங்கள் இருக்கிறோம். எங்களுக்குத் தங்குகிற இடத்திலே பாதுகாப்பு இல்லை. நேற்றைய தினம் அவர்கள் நினைத்திருந்தால், என்னைக் கொலை செய்துவிட்டுப் போயிருக்க முடியும். அந்த அளவிற்கு பாதுகாப்பு இல்லாத நிலை. சட்ட மன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை வந்திருக்கிறதென்பதைக் கவனித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுட்டிக் காட்ட ஆசைப் படுகிறேன்.

இங்கே பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல விரும்பினாலும், குறுகிய காலமே தந்திருப்பதாலும், அடுத்து நிதி நிலை அறிக்கையில் பேச வாய்ப்பு தரவிருப்பதாலும், நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. இருந் தாலும் ஓரிரண்டு பிரச்சினைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு இருக்கும் சட்டங்களை அமல்படுத்தாமல் அதிகாரிகள் இருக் கிறார்கள். அதை அமைச்சர்கள் கவனிக்க வேண்டும். 'அட்டா' தொகையை வெள்ளப் பகுதிகளில் பட்டுவாடா செய்ய வேண்டுமென்று உத்தர விருந்தும் சென்னை நகருக்குப் பக்கத்திலுள்ள டிவிஷன்களில் பட்டுவாடா செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருந்தும், செங்கற்பட்டு மாவட்டத் திலுள்ள குன்றத்தூரில் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், ஆணையர் தர மாட்டேன் என்று மறுத்து, விண்ணப்பங்களை வாங்கி வைத்துக்கொண்டு விட்டார். பிறகு டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுத்து கேளுங்கள் என்று சொல்லி, 400 ஆசிரியர்களும் 10 ரூபாய், 15 ரூபாய் என்று செலவு செய்து, டாக்டர் சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுத்தார்கள். அது செல்லாதென்று டைரக்டர் ஆபீஸ் ப்ரொஷீஜர் சொல்லி, திருப்பி அனுப்பிவிட்டார்கள். எனவே அரசு போடும் ஆணைகள் செயல்படுத்தப் படாமல் இருக்கின்றன. இதனால் அரசுக்கும் அவப்பெயர் தேடிக் கொடுக்கிறார்களென்பதைச் சுட்டிக் காட்ட

விரும்புகிறேன். இதே போன்ற நிலை கிழக்கு இராமநாதபுரத்திலும் உருவாகியுள்ளது. வில்லிவாக்கத்தில், வெள்ள நிவாரணத்திற்காக 400 ரூபாய் அட்வான்ஸ் தரச் சொன்னதை இன்றைய வரையில் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவைத் தலைவரவர்கள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 15 நிமிடங்களுக்கு மேற்படாமல் நேரம் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஓர் உறுப்பினர் 15 நிமிடங்களுக்கு மேல் பேசினால், அடுத்து பேசுகின்ற உறுப்பினர்களும், அவர் பேசினார் என்று தாங்கள் பேசும் காலத்தை நீட்டிக்கக்கூடும். எனவே உறுப்பினர்கள் கால வரையறைக்குள் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சீக்கிரமாக என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலே இவையெல்லாம் குறிப்பிடாததற்கு நாங்கள் மெத்த வருந்துகிறோம். நீண்ட காலமாக சில கோரிக்கைகள் இருக்கின்றன. இடைநிலை ஆசிரியர்களை முதுநிலையாக்குவது, செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பி.யு. அல்லது பி.எட். பட்டம் பெற்றால், அதற்கான ஊதியம் அளிப்பது, தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனி ஊதியம் வேண்டுமென்பது போன்ற கோரிக்கைகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை. நாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு ஒன்றுமே இல்லை. அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் அவமதிக்கும் அளவிற்குத்தான் இந்த அறிக்கை இருக்கிறது. அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் பாராட்டக்கூடிய அளவிற்கு எதுவும் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது. எனவே குறைகள் அனைத்தையும் போக்க அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN : Hon. Deputy Chairman, Sir, may I first express my pleasure at the Governor's Address being given to us in the month of February unlike last year? And this, I hope, will be the convention in future, because it gives us an opportunity to review not only Government activities but what is proposed to be done during the coming year.

Before I pass on to the subject-matter of the Governor's Address, may I make a plea to the Government to consider what I have been stressing in the past, namely, the establishment of Consultative Councils for all the Ministries in the State? I would like to congratulate the Hon. the Minister for Electricity who has become the first Minister to constitute the Consultative Committee on Power; and in offering this congratulation, I hope I will not be mistaken, because I have been co-opted as a member of the Consultative Council on Power. I only wanted to mention that these Consultative Councils could be powerful institutions for rectifying many of the defects that we notice in the day-to-day administration of Government. Even in the first meeting of the Consultative Committee on Power, we were able to deal with many subjects and members were really pleased that they had an opportunity of knowing the Governments viewpoint on matters on which we give notices of adjournment motion, call attention, questions, etc., when only after a great delay we obtain the Government's answers to many questions we have in mind. I would plead, therefore, with the Hon. the Minister for Education, Civil Supplies, Agriculture, Transport and Communication, Industries, Health, Social Welfare and Co-operation that they may all constitute these Advisory Councils in their respective Ministries ... ... ...





MR. DEPUTY CHAIRMAN : A Consultative Committee has already been formed by the Hon. the Minister for Transport.

THIRU A. R. DAMODARAN : I am happy to know that and I only wish that such communications could have been placed on the table of the House, so that we may be better informed. I am very glad that the Transport Ministry has formed a Consultative Committee and I hope that all other Ministries will follow suit.

Sir, coming to the Governor's Address, may I first express my happiness on the very many good schemes that have been proposed, especially the very laudable project of providing house-sites for all people living in the rural parts and the construction of one lakh houses through Co-operatives, with some subsidy element, for the people belonging to weaker sections? In providing house-sites for persons in the rural areas, may I suggest that the time to act is the present because the price of land is increasing to such an extent that the more we delay this project the less will the Government be able to fulfil its objective of giving house-sites to all people in our rural parts? We do have large open spaces in all our villages and I hope that in the coming Budget, a substantial allocation will be made in this regard. I am not pleading for the construction of houses because I know that it is a physical and economic impossibility to provide a house for everybody who does not have a house in Tamil Nadu.

(பிற்பகல் 5-50)

I cannot even visualise whether we will ever be able to fulfil that objective purely from Government resources by the year 2080. But in the provision of house-sites and developed house-sites, properly planned, we can and should do something in the rural parts and I think this is a measure which will receive a large amount of support from the Members of this House.

Sir, reference has been made in the Governor's Address to one very important aspect of Government's policy in regard to the industrialisation of our State. All Governments including the Central Government have been talking a great deal about industrialisation both in the Central sector and the State sector and about heavy industries, medium industries, small-scale indusries and rural industries. Very many schemes have been adumbrated in the recent past and especially we now see the establishment of what are known as the District Industrial Centres which are meant to act as catalysts for entrepreneurial activity rather than for Government starting projects on its own. I refer to this because there is frequently a misconception, which seemed to exist even when the question about industrial estates was raised, whether industrial estates are built by Government for promoting Government companies or Government industries. That is not the object of industrial estates. It is meant to stimulate private entrepreneurial activity and the Government of Tamil Nadu have displayed commendable zeal and sincerity in establishing District Industrial Centres at record speed. But, frequently, I come across friends who ask me the question whether any progress has been achieved in industrialisation because of the establishment of District Industrial Centres. We must clearly recognise that these District Industrial Centres are part of a development programme. Governments can only encourage, foster and act as catalysts for the establishment of private industries and if the response from the public is not there, all these schemes are likely to go to waste. I refer to this because in the recent past over the past 1-1/2 years, not only in Tamil Nadu but all over India, there has been a slackening in the pace of industrialisation, whether it is in the rural sector, the small-scale, the medium-scale or the heavy sector. This is due to the climate that seems to exist in our country. Whereas the financial institutions are more than willing, having adequate resources, to lend to people who are interested in establishing industries, the response from the public, the private entrepreneurs, has not been forthcoming to the extent it should have. This is a dangerous trend which all Governments must recognise and analyse why the progress of industrialisation is being slowed down. In Tamil Nadu itself, the Government have referred to the fact that





they propose establishing—presumably joint sector projects although it has not been specifically named in the Governor's Address—the salt complex at Vedaranyam, the soda-ash and fertiliser factory at Tuticorin for which I think a letter of intent is being obtained and a paper industry based on bagasse. I would also refer in this connection to a plea that I have been making for years and that is that Tamil Nadu has not stressed adequately, and I do not know the reason, the starting of a petro-chemical industry in Tamil Nadu. We have the Manali refinery in Madras and although that refinery may be facing difficulties for the present because of the problem of crude-supply from Iran, we can expect that with the establishment of a *de facto* regime in that country the position of crude-supply may improve in course of time. But we must think in terms of a naphtha-cracker and petro-chemical complex in Tamil Nadu because it would not only mean the establishment of a Central sector project in Madras City but would set in motion a chain of industrial concerns, downstream units as they are called, involving an investment of over Rs. 300 crores to Rs. 400 crores. In 1967, when the late Chief Minister Dr. C. N. Annadurai, assumed office, some prominent industrialists from other States met him and requested him to press for a petro-chemical complex in Tamil Nadu. The climate was not suitable at that time for the creation of Central sector industries because, as you know, we did not have a Five-Ye Plan at that time. It was split into one-year Plans due to lack resources and the petro-chemical complex could not be develop

Today, Sir, if we go to Gujarat, we can see the Petro Complex in Baroda where an investment of over Rs. 50 has been made in the Central sector, which will lead to the ment in the next few years of industries where the total in will be over Rs. 1,000 crores and the employment potenti rated will run into 26,000 to 30,000 jobs. From this we can that only the establishment of a Petro-Chemical Complex in Nadu will result in the generation of greater employment opportuni-ties which we are emphasising. I would, therefore, plead with the Hon. the Chief Minister, who is also the Minister for Industries, to pay some attention to this subject, and not be diverted by the fact that these industries, being predominantly urban-oriented, will not benefit the rural classes. It is not so; the rural classes will be benefited because of the employment potential that will be generated and we will also be starting consumer industries manufacturing products which will be used entirely or mostly in our rural areas.

I would also plead for another project which was considered for Tamil Nadu but which does not seem to have materialised. I would like the Ministry to find out whether it was ever contemplated that Electronics Industries should be established in Tamil Nadu because I remember, a few years ago, when I met a friend in the Government of India who was serving in one of such Committees, he was very anxious that an export-oriented Electronics Industry should be established in Tamil Nadu where electronic components would be imported from foreign countries, assembled and then exported. There are places like Khandla where such export-free zones have been established and I believe Madras, with its net-work of engineering industries and with its skilled man-power, is an excellent State for the location of an Electronics Industry. It is also an employment-oriented industry. In my opinion, today if there is anything that should claim precedence over all other issues, it is the provision of employment to the vast millions of young people who are thirsty for jobs not only in our State but also in the neighbouring areas. Sir, industries can be promoted in Tamil Nadu. We have a good bureaucratic set-up; we have adequate land; the Hon. the Minister for Power assures the possibility of giving us adequate power, I hope, at least for industrialisation; various incentives have been offered, financial and otherwise; and skilled man-power is available. But, I would like to state here, even at the risk of being misunderstood, which I hope, will not happen, that the Hon. the Chief Minister who is now having so many portfolios carries a very heavy responsibility. He has with him General Administration, Home, Law and Order and many other portfolios. I feel that he should be in a position to shed some of these portfolios and take Industries as the main portfolio on which he will be able to bestow attention; or alternatively, because General Administration and Home portfolios have always remained with the Hon. the Chief Minister and if for administrative convenience, it may not be possible for him to shed those subjects, I would request him to appoint an under-study who will be able to carry out the policy of industrialisation that the Government have in mind. I have valid reasons for mentioning this, because industrialisation does not merely mean the issuing of a Government Order saying that we are opening industrial estates, offering financial incentives and advertisements being put up by the State Industrial Development Corporation. The establishment of industry today is a public-relations job for the Government. We have the Chief Ministers in neighbouring States who are trying to establish industries in their States. We face severe competition in the establishment of industries from Karnataka and Andhra States. Power is made available in Karnataka for industries at cheaper rates than in



Tamil Nadu. There is a feeling among industrialists in our State and outside that in view of the very many heavy responsibilities which our Hon. the Chief Minister has to shoulder, they are not able to get the guidance and advice which they look for at an early stage. I would plead that this aspect may be considered if it is possible; I do not say that this should be the only way. But I would certainly plead with him that more opportunities must be taken by the Hon. the Chief Minister to meet industrialists not only in Tamil Nadu but also in other States to plead with them, without having the fear that any approach to industrialists will be viewed with suspicion by this political party or that political party. Industrialisation is

(பிற்பகல் 6-00)

of paramount importance in promoting employment opportunities and it shiuld be the first and important responsibility of any Government to promote this in an active way. In this connection, may I refer to a G.O. that has been recently passed by the Department of Labour and Employment, G.O. No. 1138, dated 25th September 1978, informing all industrial concerns and all financial institutions that hereafter recruitment to industry should only be made through the Employment Exchanges in the State and that any post which is filled by advertisement can only be filled after obtaining a no-objection certificate from the Employment Exchange concerned? Sir, I believe this is a decision of the Tamil Nadu Cabinet and it has been brought forth with a very good motive, the motive being that, like all other State Governments, we want more of our local residents to be appointed in industries. Many State Governments have requested industries to employ skilled and unskilled personnel within the State itself without going outside and this G.O. is intended to fulfil that laudable objective of obtaining employment for local persons. Sir, in this, I would like to sound a note of caution. I think no industrialist will be foolish enough to employ persons in the pay-range of Rs. 800 or Rs. 900 per month from among residents outside the State for two reasons. First, it would mean more cost to the industrialist in providing subsidised housing to the persons concerned. Secondly, when skilled manpower is available in the area itself, it would not be wise to go outside. In fact, the Hon. the Minister for Finance when he recently opened a Rs. 12 crores factory of a Multi-national in Ennore made out, in the inaugural address, the plea that such concerns should have at least 65 per cent of their personnel

employed from local areas. In the Vote of Thanks that was proposed by the General Manager of the concern, he was very happy to point out to the Finance Minister that 95 per cent of the personnel of that Multi-national concern had been employed from persons from the Madras City area. The reason why I say this is that I would like the Government to bestow a little more attention on this aspect. The motives of the Government are excellent. They want to establish industries but they ask the people who come and invest Rs. 2 crores, Rs. 3 crores or Rs. 5 crores to recruit all personnel through the Employment Exchanges. The efficiency of the Employment Exchanges is well-known to the Members of the House. We have been complaining for years, of being under a licence permit-raj and we have not yet got ourselves away from it. Now, another condition is being imposed and one more licence has to be obtained from the Employment Exchange in the form of a no-objection certificate saying that so-and-so could be employed.

THE HON. THIRU S. RAMACHANDRAN: I would very much like to listen to the speech of the hon. Member Thiru Damodaran. In fact, I did not want to interrupt and thereby reduce his time. But there is only one impression that has gained ground with him by virtue of that G.O., which I think it is proper to correct. The intention in issuing the G.O. requesting the private industries also to recruit their personnel from the Employment Exchanges is not exactly to favour the locals. The real intention is otherwise. The private industries are able to favour a few of their own choice whereas, probably, the names of deserving people are kept pending for many years in the Employment Exchanges. In order to ensure social justice this has been thought of and if there is any difficulty in its actual working, the hon. Member Thiru Damodaran has got every right to present it. I would only like to allay his impression. It should not mean as though we are only interested in our locals instead of taking a national look on this issue.

THIRU A. R. DAMODARAN: I am glad for the clarification and in so far as a decided preference only for locals is not there, I am not going into that point. If the Tamil Nadu Government stressed that too much, the Tamils in other areas will be discriminated against. I would like to mention specifically with all the responsibility at my command that considerations of social justice and industrialisation may not go side by side. The Government will learn very shortly that it will be impossible to implement this G.O.



I just wanted to mention this because I do not want industrialisation to be affected. Let us be clear on one thing. When I invest Rs. 5 crores in an industry, I am interested in having persons whom I can trust. I am not going to take, as the Hon. Minister has done in his own department, hundreds of disloyal elements who will sabotage the very institution to which they have been recruited. I will recruit only persons who will be loyal and sincere and I will not go to the Employment Exchange because I do not knew the antecedents of persons suggested by them.

திரு. ஆ. நல்ல சிவன்: மாண்புமிகு உறுப்பினர் மின்சார அமைச்சரைப் பார்த்து உங்கள் டிபார்ட்மெண்டில் டிஸ்லாயல் எலிமெண்ட்ஸ் உள்ளனர் என்று கூறினார். யாரை அப்படிக் கூறினார் என்று அறிய விரும்புகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I am making a specific charge that not only in the Ministry of Power but in all the Ministries including Transport, there are many disloyal elements. I am referring to their basic loyalty to the concern for which they work. I am not specifying any particular department of the Government. I think my hon. Friend Thiru Nallasivan will also realise but he will not accept it openly that there are such elements. I only want to mention. . .

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன விளக்கம் கூறினாலும் மின்வாரிய அதிகாரிகள் அவர்களை வேலைக்கு எடுத்திருக்கிறார்கள். அவர்களைப் பற்றி "டிஸ்லாயல் எலிமெண்ட்ஸ்" என்று கூறுவது முறை தானா? அவர்களை அந்த இலாகா வேலைக்கு எடுத்திருக்கிறது. அதுவும் அவர்களை நம்பி வேலைக்கு எடுத்திருக்கிறது. 'டிஸ்லாயல்' என்று எப்படி உறுப்பினர் பேசலாம்? Loyal citizen என்றும் disloyal citizen என்றும் நம் நாட்டில் இரண்டுதரமான பிரஜைகள் இருக்கிறார்களா என்ன?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவருடைய அபிப்பிராயத்தைக் கூறியிருக்கிறார்.

THIRU A. R. DAMODARAN: I was only mentioning that this should not slow down our pace of industrialisation. My hon. Friend is welcome to refer in his speech to any aspect which I have referred to and he is quite welcome to criticise what I have stated. Everybody is entitled to have his own opinion.

The other thing which I would like to mention is about the new scheme which is mentioned in the Governor's Address. I am sorry; I shall finish within another five minutes.

MR. DEPUTY CHAIRMAN: The hon. Member can have 10 more minutes since the Hon. Minister has intervened.

THIRU A. R. DAMODARAN: Thank you, Sir. The other thing to which I would like to refer is another well-thought out motivated scheme of giving preference in Government employment to the children (offspring) of poor and illiterate parents. In our country over the past 30 years we have tried to evolve a system of preferences to help the backward communities, the Scheduled Castes and Tribes, people of various regions and weaker sections and this is a very laudable objective because the object is that persons who have never had an opportunity of securing Government employment should be given a chance of entering Government service. I would, however, like to plead that when you say that the offspring of poor and illiterate parents will be given preference in Government service, you place a premium on illiteracy.

(பிற்பகல் 6-10)

The Hon. the Minister for Education at the Centre is going to spend something of the order of Rs. 280 crores on non-formal-adult education, which means making persons literate. When we tried the system of production of income certificates for giving free education, a lot of bogus certificates were being issued. Now, we are being reduced to the unfortunate position in which persons who are literate will declare themselves illiterate so that their sons and daughters may get jobs. As I said, the motive is very good but it may have a reverse, back-pedal effect which I do not want to happen. While some preference may be given to certain areas which are backward in recruitment to Government jobs, I would request a further deep study of the scheme so that it may not have certain side-effects which would sabotage the very policies for which Government are striving in a different direction.

Yesterday the hon. Member Dr. Hande, while introducing the Motion of Thanks for the Governor's Address, spoke very vehemently, very clearly and very coherently on the language question. This is a subject which I thought for some time, a few years ago, would die out quietly. But, unfortunately, recent pronouncements have not only resurrected the language controversy



but have brought it out in a frightening form because all of us are now frightened by the bogey of a regional language assuming the status of a national language. When Thiru Jawaharlal Nehru gave his assurance, people desired even at that time that it should be embodied in the Constitution. But the wise statesmen who ruled us on that day said, "If Thiru Jawaharlal Nehru has given a promise, you may be sure that our Party will continue that promise". Unfortunately, the Party is not there to continue the promise and we have another Party now. And the Hon. the Prime Minister, for whom I have the greatest respect and regard, has further complicated the situation by his *ad hoc* references to the language question, by such declarations as stating that all those who are patriotic will read Hindi, assuming thereby that those who do not read Hindi are not patriotic. It is this sort of statement that has puzzled the South Indian minds—not the Tamilian minds but the South Indian minds—south of the Vindhyas in the four States of Kerala, Karnataka, Andhra Pradesh and Tamil Nadu, because while we have no objection to any regional language gaining importance and precedence in the State in which it is mostly used, the quarrel of our people with this statement is that gradually the South Indians will be edged out of the Central services and we will lose all employment opportunities. Even today in regard to the Lok Sabha, the former Members of Parliament who are Ministers here will vouchsafe the correctness, when I say, "I have attended the Lok Sabha sessions; I could not understand 65 per cent of what was spoken in the Lok Sabha because the Hindi language was used and English was used so sparingly." My only request on the language issue is this and on this, the hon. Member Dr. Hande need have no doubts. Neither the D.M.K. nor any of us on this side, the Congress, the C.P.I., etc. will have any difference on this. I am sorry, I should not speak on behalf of the C.P.I. I only wish to mention that there is considerable unanimity of opinion on the two-language formula in the sense that we would like all the States to use their regional languages within their States and also to use English as a common national language until our grandchildren are able to solve this issue without the heat and controversy that the language issue invariably involves us in. In this regard, I would like the Government of Tamil Nadu kindly to clarify in a slightly more elaborate fashion what really is their two-language formula which they wish us to support, because we have conflicting statements. The Hon. the Minister for Health, in addressing a conference of physicians, says that English should be the medium of instruction in medical colleges. Then, we have a communication that ours is one of the two Governments that wants

the regional language to be the medium of instruction in technical, professional and medical colleges. The only two Governments were the Government of Himachal Pradesh and the Government of Tamil Nadu and the only University which wanted the medium of instruction in medical colleges and professional institutions to be in the regional language was the Madras University presided over by Dr. Malcolm Adiseshiah. What a fall there has been in my countrymen in Tamil Nadu, of all places, which was the bastion of the English language and which was stating all over India that it was possibly the only State where English could continue as the national language and as the official language ! There seems to be a dichotomy of thought and a conflict which I would like the Cabinet to resolve. We have welcomed, for example, in a statement made by a Ministerial spokesman that the new proposal of the Union Public Service Commission to conduct examinations in the regional languages is a very welcome step. Dr. Hande hinted at it, not on behalf of the Government but on his own behalf. He said that if this proposal was accepted, it would virtually be the thin end of the wedge because those who wanted to bring in Hindi realised that unless they drove out English, Hindi would never replace English. The most liberal-minded people in Tamil Nadu are playing into the hands of Hindi fanatics when they support this proposal of regional languages being made the medium of examinations of the Union Public Service Commission. You will never have an all-India service either in Administrative Service, or Police Service or Judicial Service or in any other Service if you adopt this formula because ultimately it would mean that every State would have a quota of officers in the All-India Services and the very meaning of All-India Services will not be there. I fail to realise why we should have a Union Public Service Commission when the persons from Tamil Nadu answer the papers in Tamil, and they are corrected by Tamil-knowing persons in Tamil Nadu as it can be done more efficiently by our own Tamil Nadu Public Service Commission. I would, therefore, plead with the Government that on this issue, a certain amount of liberalism is required. Only day before yesterday I read in a Committee Report that professional, technical, medical education, etc. should be progressively imparted in the regional language. I have come to the conclusion that instead of fighting on this issue, I might even go to the extent of supporting what I heard the Hon. the Chief Minister has stated in Madurai, namely, the establishment of a separate Tamil University. In the Tamil University, you may start your Engineering, Medical



Colleges, Polytechnics, Arts and Science Courses in Tamil, you attract all the boys who want education in Tamil, pay them a stipend of not Rs. 80 but Rs. 160 or even Rs. 240; but you do not middle with the education of those who want education as they conceive it ought to be. In 1970 the D.M.K. Government made the fatal mistake of interfering with the medium of instruction in Government Colleges and they learnt their bitter lesson when they found that they were turning out the students from institutions to streets to stage a massive demonstration, not the demonstration that we see today of stones being thrown on buses and people invading into College campus. I am grateful to the D.M.K. Government for realising at that time that freedom of choice of medium is essential in educational institutions. The persons in power now belong to a separate party but they are brothers and come from the same stock and they have identical views on questions like State Autonomy and language ; I would request them kindly to ponder over this problem and realise that freedom of choice of medium in educational institutions is essential. We may insist upon a certain standard of quality either in Tamil or English for providing entry into Tamil or English medium course. But to force our ideas on the younger generation is totally unacceptable to the younger generation. There is a big generation gap between what our administrators think is necessary and what the youth wants. I would plead with the Tamil Nadu Government, while we fully support the plea that there should be greater wisdom in dealing with language problem, that they should also make their views clear on this subject. If I had some more time, I would have referred to certain other matters. But in view of the fact that I have referred to some important points because of your giving 10 more minutes and since I would have an opportunity to refer to other matters during the coming meeting, I shall not refer to other matters relating to education and my teacher friends will not mistake me on that score. I am partly Teachers' representative and partly Graduates' representative. We have number of representations to make and I shall take the opportunity during the Budget discussion. I thank you once again for your kindness, Sir.

* திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடத்தப்படும் இந்த விவாதத்தில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்கு சில அம்சங்கள் இருக்கின்றன; இருப்பினும், கல்வித் துறையைப் பொறுத்த அளவில், இந்த

அரசாங்கத்தினுடைய நிதியில் மூன்று பங்கை கல்விக்காகவே செலவிடுவ தாக பலமுறை எடுத்துரைக்கப்பட்டாலும், கல்வியைப்பற்றி ஒரு வரிகூட ஆளுநர் உரையில் குறிப்பிடாதது குறித்து நான் உண்மையிலேயே வேதனைப் படுகிறேன் என்பதை இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. தமிழ்நாட்டில் மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை வெளிவந்த பிறகு, இன்றையதினம் அது அமுல்படுத்தப்படும் நேரத்தில் பல பிரிவினருக்கு, குறிப்பாக ஆசிரியப் பெருமக்களுக்கு நியாயம் வழங்கப் படவில்லை, அவர்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாக நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மூன்றாவது

(பிற்பகல் 6-20)

ஊதியக் குழுவைப் பொறுத்த வரையில், அது ஒரு நீதிபதியின் தலைமையில் நியமிக்கப்பட வேண்டுமென்று, ஆசிரியர்கள் இயக்கங்களில் முதல் இயக்கமாக நான் சார்ந்திருக்கிற இயக்கம் மாண்புமிகு முதலமைச்சர், மற்றும் நிதி யமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொன்னபோது, அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். பிறகு நீதிபதியின் தலைமையில் அக்குழு அமைக்கப் பட்டது. நீதிபதியின் தலைமையில் அமைக்கப்பட்டதே தவிர, அந்தக் குழுவின் பரிந்துரை நீதியாக இல்லை. ஆசிரியர்களுக்கு அநீதியாக இருக் கிறது. எங்களுக்கு அந்தப் பரிந்துரைகள் ஏமாற்றத்தையளிக்கின்றன. நியாயம் வழங்க வேண்டும் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சமீபத்தில், சேலத்தில் உள்ள பொறியியல் கல்லூரி விழாவில் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டபோது, பொறியியல் துறை மாணவர்கள், பொறி யியல் ஆசிரியர்களுக்குச் சரியான ஊதியம் கொடுக்கப்படவில்லை என்று முதலமைச்சரிடம் முறையிட்டபோது, அதிலே இருக்கக் கூடிய குறைபாடு களைப்பற்றி அரசு ஆய்ந்து நியாயம் வழங்குமென்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பைப்பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் இல்லை. ஆளுநர் உரை என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்கம் என்று அறிவிக்கப்படக்கூடிய நேரத்தில், முதலமைச்சர் அவர்கள் ஊதியக் குழுவினுடைய அறிவிப்புகளைக் கொள்கைகளாக அறிவிக்கவில்லை என்று சொல்லும்போது, அரசாங்கத் தினுடைய இந்தக் கொள்கையை முதலமைச்சர் அவர்கள் தன் பதிலே





கூறுவார்கள் என்று நம்புகிறேன். இதிலே இருக்கக்கூடிய குறைபாடு, ஆசிரியர்களுக்குச் சரியான முறையிலே பரிந்துரைகளைச் செய்யவில்லை என்பதுதான். முதல் இரண்டு ஊதியக் குழுக்கள் செய்த பரிந்துரைகளை நீதிபதியின் தலைமையில் இருக்கக் கூடிய குழு மறைத்திருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்காமல் கால அவகாசத்தை எடுத்துக் கொள்ளுவதற்காக ஒரு குழுவை நியமிக்கிறார்கள். இப்படி கால அவ காசத்தை எடுத்துக்கொள்ளுவதற்காக ஒரு குழு நியமிக்கப்படுவது ஜன நாயக அரசு கடைப்பிடிக்கும் ஒரு முறையாகும். இன்றைக்கு போதிய கால அவகாசத்தை எடுத்துக்கொண்டு பரிந்துரைக்கக் கூடிய நேரத்திலே சரியான நீதி வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இரண்டாவது ஊதியக் குழு, இளநிலை ஆசிரியர்களை செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென்று பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரை ஏற்கெனவே இந்திய நாட்டில் கோத்தாரி தலைமையில் அமைக்கப்பட்ட கல்விக் குழுவின் கருத்தின் அடிப்படையிலே அமைந்திருக்கிறது. ஆனால் மூன்றாவது ஊதியக் குழு அந்தப் பரிந்துரையை மொத்தமாக நிராகரித்து விட்டது. 2-வது ஊதியக் குழுவினுடைய சில பரிந்துரைகளை நியாயம் என்று சொல்லக்கூடிய மூன்றாவது ஊதியக் குழு, இளநிலை ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், நிராகரித்துவிட்டது என்று சொல்லும்போது, வேதனை யாக இருக்கிறது. இளநிலை ஆசிரியர்கள் அத்தனை பேரையும் இடைநிலை ஆசிரியர்களாக ஆக்குவோம் என்று பல முறை அரசு அறிவித்திருக்கிறது. ஆகவே இதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை மாநிலத்திலிருந்து பிரிந்து போன கேரளத்தில் இளநிலை ஆசிரியர்கள் இருந்தார்கள். இப்போது அங்கே இளநிலை ஆசிரியர்களே இல்லை. அதைப் போலவே கர்நாடகாவிலே 1977ஆம் ஆண்டில் ஊதியக் குழு அமைக்கப்பட்டு, நான்கு பிரிவாக இருந்த ஆசிரியர்களையெல்லாம் ஒரே பிரிவைச் சேர்ந்தவர்களாக நிர்ணயித்திருக்கிறார்கள். கர்நாடகா ஊதியக் குழுவும் நீதிபதி தலைமையில் அமைக்கப்பட்டதுதான். இன்றைக்கு நீதி அங்கே வழங்கப்பட்டிருக்கிறது. பல விஷயங்களில் முற்போக்காகச் செயல் படுகிற அமைச்சரவை என்று சொல்லப்படுகிற இந்த அரசு ஆசிரியர்கள் விஷயத்தில் மட்டும், ஏன் முற்போக்காகச் செயல்படவில்லை என்பதைக் கேட்கிறேன். அகில இந்திய ரீதியிலே கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய கோத்தாரி கமிஷனின் அறிக்கையிலுள்ள சிபார்சுகளை தமிழ்நாடு அரசாங்கம் மட்டும் ஏன் அமுல்படுத்தவில்லை என்று கேட்கிறேன்.

நிர்வாக வசதிக்காக அந்தந்தப் பகுதிகளில் அரசு அலுவலகங்களை அமைக்கவேண்டும் என்ற கொள்கைக்கிணங்க, பட்டுப்புழு ஆராய்ச்சி இயக்குநர் அலுவலகத்தை சேலத்திலே அமைக்க இருக்கிறார்கள். கல்வித் துறையில் மட்டும் ஏன் அப்படிச் செய்வதில்லை? கல்வித்துறை இயக்குநருடைய அலுவலகத்தை தமிழ்நாட்டின் மையப் பகுதியாகவுள்ள திருச்சி நகரத்திற்கு மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். மஹாராஷ்டிரா மாநிலத்தில், பம்பாய் தலைமைச் செயலகம் இருந்தாலும், பூனாவில்தான் கல்வி இயக்குநர் அலுவலகம் இருக்கிறது. அதைப்போலவே தமிழ்நாட்டிலும் மையப் பகுதியில் இருக்குமானால், சென்னையில் இருக்கக் கூடிய நெரிசலும் குறையலாம், வரக்கூடிய ஆசிரியப் பெருமக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் வசதியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். தர்மபுரி மாவட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலகம் வேண்டுமென்று கோரப்படுகிறது. நிர்வாக வசதிக்காக பல இடங்களில் அலுவலகங்களை விஸ்தரிக்க வேண்டும். ஆகவே தர்மபுரியிலும் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது, தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பல விஷயங்களை இந்த அரசு அமுல்படுத்தியிருக்கிறது என்று மகிழ்ச்சியோடு சொன்னார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன். அதைப் போலவே இன்னொரு சாதனையையும் செய்து, இந்த அரசினுடைய பெருமையை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், தேர்தல் அறிக்கையிலே ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழாசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ஆகியவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க தனியாக ஒரு குழு அமைக்கப்படுமென்று தேர்தல் அறிக்கையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களுடைய வானொலிப் பேச்சிலும் தெளிவாக 'தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்' என்றும் சேர்க்கப்பட்டு சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்ற அவசியம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏன் ஏற்பட்டதென்றால், அன்றைக்கு அவர்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோது, ஆசிரியப் பெருமக்களின் பிரச்சினைகள் நல்ல முறையில் தீர்க்கப்படவில்லை என்று அவர்கள் கருதியதுதான்



என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆனால் அந்தக் குழு இதுவரையிலும் அமைக்கப்படவில்லை. அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு ஒரு வழி முறையையும் சொல்லுகிறேன். கல்வித் துறையிலே பறக்கும் படை என்று இருக்கிறது. ஓய்வூதியம் பெறுபவர்களுக்குச் சரியாக ஓய்வூதியம் கிடைக்கவில்லையென்றால், பறக்கும் படை சென்று ஆய்ந்து அங்கேயே அதைத் தீர்த்து வைக்கிறது. இது ஒரு முன்னேற்றமான நடவடிக்கை. அதே சமயத்தில் ஆசிரியப் பெருமக்களுடைய பிரச்சினைகளில், தற்காலிக வேலை நீக்கம், தனியார் பள்ளிகளிலிருந்து வேலை நீக்கம், ஊதிய உயர்வு வழங்காமலிருப்பது, அரசு உத்தரவுகளுக்கு விளக்கம் கேட்டு தாமதப்படுத்துவது, நிதி வழங்காமல் இருப்பது போன்ற பல பிரச்சினைகள் ஆறு ஆண்டுக் காலம், ஏழு ஆண்டுக் காலம் என்ற அளவில் முடங்கிக் கிடக்கின்றன. இதையெல்லாம் பறக்கும் படை கவனிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வித் துறை முன்னேற்றமடைந்தாலொழிய, நிச்சயமாக நாடு உருப்பட முடியாது. என்.ஜி.ஓ.-க்களுடைய பிரச்சினைகளைக் கவனிக்க ஜாயின்ட் சர்வீஸ் கவுன்சில் என்ற அமைப்பு இருக்கிறது. அந்த கவுன்சிலில் அரசு ஊழியர்கள் வந்து உட்காருகிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகள் எத்தனை இருந்தாலும், அவைகள் எல்லாம் தலைமைச் செயலாளருடைய தலைமையில் கூடிப் பேசித் தீர்க்கப்படுகின்றன. அப்படி ஆசிரியர்களுக்கு ஏன் நியாயம் வழங்கப்படுவதில்லை? இரண்டரை இலட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளில் தீர்வு காண 'டீச்சர்ஸ் சர்வீஸ் கவுன்சில்' என்ற ஓர் அமைப்பு கல்வி அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை இணைத் தலைவராகக் கொண்டும் அமைக்கப்பட வேண்டும். உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஏராளமாக இருப்பதால், உள்ளாட்சித் துறை அமைச்சரும் அக்குழுவில் இருக்க வேண்டும். நாங்கள் ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி இங்கே பல முறை வற்புறுத்துகிறோம். எங்களுக்கும் சில நேரங்களில் சங்கடங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. ஒரே பிரச்சினையை எத்தனை தடவை, ஆசிரியர் பிரதிநிதி என்ற முறையில் இந்தச் சபையில் சொல்லுவது? உங்களுக்குக் கூட சலிப்பாக இருக்கிறது, ஆசிரியர்கள் எழுந்தால், இந்த அவையே ஆசிரியர் அவையாக ஆகிவிடுகிறது என்று. எவ்வளவு எடுத்துச் சொல்லியும் நடைபெறாததால், மீண்டும், மீண்டும் அவற்றையே தொடுத்துச் சொல்ல வேண்டிய நிலையில் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன என்பதை அரசின் கவனத்

திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சங்கம் முதல் கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் வரையில் பிரதிநிதிகளை உறுப்பினர்களாக்கி இதைத் தீர்க்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தித் திணிப்பை இன்று எல்லாக் கட்சியினரும் எதிர்க்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்களும் இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கூட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். ஆளும் கட்சியினரும் அறிஞர் அண்ணாவின் பாசறையில் உதித்தவர்கள். இந்த முக்கியமான இந்திப் பிரச்சினையில் எதிர்க்கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் வேறுபாடு கிடையாது. ஆளும் கட்சி என்ற முறையில் அதன் வரையறைக்கு உட்பட்டு இந்தித் திணிப்பை எதிர்க்கிறார்கள். இந்த நேரத்தில் மற்ற கட்சிகளும் நேரு அவர்கள் கொடுத்த உறுதிமொழியைக் காப்பாற்ற அதைச் சட்டமாக்க வேண்டுமென்று எல்லோரும் ஒருமித்த உணர்வோடு இருக்கிறார்கள். இந்தியைத் தமிழ்நாட்டில் நுழையவிடக்கூடாது என்பதில் ஒற்றுமையான எண்ணங்கள் இருக்கின்றன. இந்தித் திணிப்பைத் தடுக்க வேண்டும் என்பதிலே நானும் உடன்படுகிறேன். ஆசிரியப் பெருமக்களுடைய உணர்வுகளும் இந்தக் கொள்கைக்காக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6-30)

மற்ற மாநிலங்களில் எல்லாம் இடைநிலை ஆசிரியர் பதவிகள் ஒழிக்கப்பட்டு விட்டன. இங்கு மட்டும் ஏன் வைத்திருக்க வேண்டும்? இதைக் கல்வித் துறை சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இடைநிலை ஆசிரியர்களுக்கு ஒரு சம்பள விகிதம் இப்போது வழங்கப்பட்டிருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. படித்த எழுத்தருக்கும், எஸ்.எஸ்.எல்.சி.க்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் படித்துள்ள செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் ஒரே ஊதிய விகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2-வது ஊதியக் குழுவில் இரண்டு ஆண்டு பயிற்சிக்கு இரண்டு ஊதிய உயர்வுகள் என்று கொடுக்கப்பட்டது இப்போது மறுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஊதியக் குழு அதை நிறுத்திவிட்டது. ஆசிரியர்களுக்குக் கொடுத்த அந்த உயர்வை அநியாயமாக நிறுத்திவிட்டது. இரண்டு ஆண்டுப் பயிற்சிக்குக் கிடைத்த ஊதிய உயர்வை மூன்றாவது ஊதியக் குழு குழி தோண்டி மண்ணைப் போட்டு மூடிவிட்டதென்று தெரிவித்துக் கொள்கிறேன். எஸ்.எஸ்.எல்.சி.க்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்களுக்கு இப்போது ஊதிய உயர்வு இல்லை. அதைவிட இன்னொரு வேடிக்கை, கொடுமை நடந்துள்ளது. இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று செகண்டரி கிரேட் ஆசிரியரான பிறகு, ஹையர் கிரேட் உடற்பயிற்சிக் கல்வி



ஆசிரியராக வேண்டுமென்றால், இன்னும் ஓராண்டு பயிற்சி பெற வேண்டும். அவர்களுக்கும் எழுத்தருக்குள்ள சம்பளம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றால், அது தர்மம்தானா, நீதி கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

நிதியமைச்சரவர்கள் எப்போதும் கோட்டைக் கதவுகள் திறந்திருக்குமென்று சொன்னார்கள். டெலிவிஷனிலே பேட்டி தந்தார்கள். நாங்கள் அப்போது எங்கள் பிரச்சினைகளை எடுத்து வைத்தோம். சங்கப் பிரதிநிதிகள் என்ற முறையில் எங்களுக்குப் பேட்டி கிடைத்தது. சமீபத்திலே மதுரையிலே நடந்த மாநாட்டிலே நிதியமைச்சரவர்கள் கலந்துகொண்டார்கள். அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், உங்கள் மனக் கதவைத் திறந்து ஆசிரியர்களுக்கு நீதி வழங்குங்கள் என்று.

இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் வந்தபோது, ஓர் ஆசிரியர் தன்னுடைய சம்பளத்தை விரும்பிய தேதியில்—அதாவது எந்தத் தேதியைச் சொல்கிறாரோ அந்தத் தேதியிலிருந்து நிர்ணயம் செய்து கொண்டு, அந்தத் தேதியிலிருந்து ஊதியக் குழுப் பரிந்துரையின் பலனையும் பெற்றார். அதாவது குறைந்தது 10 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று இரண்டாவது ஊதியக் குழு சொல்லியது. எனவே அந்த ஆசிரியருக்குப் புதிய ஊதியம் எந்தத் தேதியிலிருந்து வந்தாலும், அந்தப் பத்து ரூபாய் கிடைத்தது. ஆனால் மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி எந்தத் தேதியில் வேண்டுமானாலும் புதிய ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளலாம், ஆனால் குறைந்தபட்சப் பலனாகிய 20 ரூபாய் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். நீதிபதி தலைமையிலான ஊதியக் குழுவின் பரிந்துரை இப்படியிருக்கிறது. இது என்ன நீதி? இதை நாங்கள் நீதியாகக் கருதவில்லை. நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினாலும், அதற்கு அப்பீல் என்று இருக்கிறது. அப்படி உங்களிடம் அப்பீல் செய்கிறோம். இது நியாயமில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். விரும்பிய தேதியில்—அதாவது எந்தத் தேதியாக இருந்தாலும், புதிய ஊதிய விகிதத்தில் ஊதியம் வாங்கும்போது, மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி, 5 சதவிகித உயர்வு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசாங்கம் ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம் கொடுத்திருக்கிறது. ஏற்கெனவே செலக்ஷன் கிரேட் வழங்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி செலக்ஷன் கிரேட் வழங்கப்பட்டது. இன்றைய தினம் எல்லா ஊழியர்களுக்கும் தேர்வு நிலை வழங்கப்பட்டிருப்பது சிறப்பு அம்சமாகும். அதனால் இப்போது ஆசிரியர்களுக்கு சிறப்பு நிலை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு வேலை செய்ய

வர்களுக்குப் பாதகமாக அது குறித்து உத்தரவு வந்திருக்கிறது. தேர்வு நிலையில் 10 ஆண்டுகள் பணியாற்றினால்தான் சிறப்பு நிலை கிடைக்குமென்று சொல்கிறார்கள். 1—1—1971-ல் பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும் ஆசிரியரின் மகனுக்குக் கிடைத்துவிட்டது. ஆனால் பெற்ற அப்பனுக்கு உயர்நிலைப் பள்ளியிலே தேர்வு நிலை கிடைக்கவில்லை. அந்தப் புகாரை நீக்கி, எல்லோருக்கும் தேர்வு நிலை கொடுத்தார்கள். ஆனால் மகன் உயர்வு பெற்றது பெற்றதுதான். தந்தைக்கும் சொல்லித் தந்த ஆசிரியருக்கும் உயர்வில்லை. அவர்கள் 1—4—1974-ல் தேர்வு நிலைக்கு வந்தார்கள். 10 ஆண்டுகள் தேர்வு நிலையில் பணியாற்றினால்தான், சிறப்பு நிலை என்று சொல்லப்படுகிறது. ஊதியக் குழு 20 ஆண்டுகள் பணியாற்றினால், சிறப்பு நிலை வழங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறது. அரசாங்கத்தின் விருப்பமும் அதுதான். ஆனால் உத்தரவின்படி 20 ஆண்டுக் காலம் இன்று பணி செய்தவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. இன்றைக்கு இருப்பவர்களுக்கு நியாயம் செய்யுங்கள். ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி இன்றைக்கு இருப்பவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. எனவே நீங்கள் நியாயம் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு வாடகைப்படி அளிப்பதுபற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கிராமங்களில் வீட்டு வாடகைப்படி அளிப்பதில்லை. கிராமங்களிலுள்ள அரசு விடுதிகளுக்கு வீட்டு வாடகை குறைக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் எங்கோ அதிகாரத்தான் குவார்ட்டர்ஸ் இருக்கின்றன. எனவே எல்லா ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். நிதி நிலைமைகள் இல்லாததால், ஏற்பதற்கில்லை என்று 'பே கமிஷன்' சொல்லியிருக்கிறது. நகரத்தில் இருப்பவர்களுக்கு வீட்டு வாடகைப் படி அளிக்கப்படுகிறது. இந்த அரசு ஆட்சிக் காலத்தில் கேட்கிறேன், புரட்சித் தலைவர் காலத்தில் ஒரு ரூபாயையாவது வீட்டு வாடகைப் படியாக கிராமங்களில் உள்ளவர்களுக்கு வழங்குங்கள் என்று. கிராமங்களில் வாழ்கிறவர்களை நோக்கி திட்டங்களைத் தீட்டப் போவதாகத் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். எனவே ஒரு ரூபாயையாவது வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீட்டு வாடகைப்படி வழங்குவது தர்மமும் கூட, நியாயமும்கூட. ஆசிரியர்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கிவிடாதீர்களென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சரவையிலேகூட என்னுடைய சகோதரி மாண்புமிகு சுப்புலட்சுமி அமைச்சராக அமர்ந்திருக்கிறார். அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் கொடுமுடியிலே பணியாற்றியபோது, வாடகை கொடுத்துக்கொண்டுதான் இருந்தார்கள். புலவர் புலமைப்பித்தன் அவர்கள் நகர்ப்புறத்தில் இருக்கும்போது, வீட்டு வாடகைப்படி கிடைத்தது, கிராமத்தில் வாடகை கொடுக்கத்தான் வேண்டும்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினரவர்கள் 20 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். விரைவாக முடிக்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி:** அடுத்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் எல்லா ஊழியர்களுக்கும் மருத்துவப் படி வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்குமென்று சொன்னார்கள். அண்ணா அவர்கள் 'ஆலோசிக்கப்படும்' என்று அறிவித்ததை நீங்கள் கொள்கையாக ஏற்று செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அறிவித்தார்கள், தேர்தல் அறிக்கையிலே அல்ல. மேலே இருப்பவர்கள் மருத்துவச் செலவிற்காக நிறையப் பணத்தை எடுத்துக்கொள்வதும், கீழே இருப்பவர்கள் ஏமாந்து கொண்டிருப்பதையும் பார்த்து, அவ்வாறு சொன்னார்கள். அவர்கள் சொன்னதை, அவர்கள் வழியில் நிற்கும் இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக அண்ணா அவர்கள் சொன்னதை நிறைவேற்றினோமென்று இன்னுமொரு சாதனையைச் சேருங்கள்.

ஈட்டிய விடுப்பு பொறுத்து, ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அரசு ஊழியர்கள் ஓராண்டில், 365 நாட்களிலே 280 நாட்கள்தான் பணியாற்றுகிறார்கள். ஆசிரியர்கள் 220 நாட்கள், 200 நாட்கள் பணியாற்றுகிறார்கள். 280 நாட்கள் பணியாற்றுகிற அரசு ஊழியர்களுக்கு 33 நாட்கள் ஈட்டிய விடுப்பு அளிக்கப்படுகிறது. அதேசமயத்தில் 220 நாட்கள், 200 நாட்கள் பணி செய்யும் ஆசிரியர்களுக்கு 3 நாள் தான், விகிதாச்சாரப்படி இதை உடனடியாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைமை ஆசிரியர்களுக்குத் தனிச் சம்பளம் வேண்டுமென்று கேட்கப்பட்டது. முதல் பே கமிஷன் அறிக்கைப்படி தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனிச் சம்பளம் இல்லை. இரண்டாவது ஊதியக் குழு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனிச் சம்பளம் தந்தார்கள். மூன்றாவது ஊதியக் குழுவில் இன்னும் கொஞ்சம் முன்னேற்றம் இருக்க வேண்டாமா? தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனிச் சம்பளம் கொடுக்க வேண்டாமா? அதை நாங்கள் எதிர்பார்த்தோம். அதற்கான அறிவிப்புகள் இல்லாமல் இருக்கிறது. முதலமைச்சரவர்களே அந்த அறிவிப்பைத் தரவேண்டுகிறேன்.

அடுத்து, தகுதிக்கேற்ற ஊதியம். செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பி. டி. ஆசிரியர்களாகவும், தமிழாசிரியர்களாகவும் தங்களை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவரவர்கள் சமீபத்தில்கூட தமிழ் அறிஞர்களைப் பாராட்டியிருக்கிறார்கள், உதவி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் தமிழ்

படித்தவர்களுக்கு ஊக்க ஊதியம் இல்லை. பி. டி. படித்தவர்களுக்குத் தான் ஊக்க ஊதிய உயர்வு தரப்படுகிறது. இது தமிழ்நாட்டில் தமிழுக்குத் தரும் உயர்வா? உங்கள் ஆட்சியில் தரப்பட வேண்டாமா? உங்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்துவிட்டேன். இனி அமைச்சரின் பொறுப்பு. நீங்கள் செய்வதற்கு வந்திருக்கிறீர்கள். அந்த நம்பிக்கை யோடுதான் உங்களிடம் பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கிறேன். தமிழாசிரியர்களுக்கு 'இன்சென்டிவ்' தர வேண்டும். தகுதிக்கேற்ற ஊதியம் என்ற முறையில் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் தமிழாசிரியர் தேர்வோ, பி.டி. பட்டமோ பெற்றிருந்தால், அதற்கான ஊதியம் கொடுக்க வேண்டும்.

அடுத்து, தாய்க்குலத்திற்கு மகப்பேறு விடுப்பு கொடுக்கிறோம். மத்திய அரசு 3 மாதங்கள் மகப்பேறு விடுப்பு கொடுக்கிறது. அதே சட்டத்தை நாம் அமுல்படுத்துகிறோம். இங்கே இருப்பவர்களுக்கு 8 வாரங்கள்தான் மகப்பேறு விடுப்பு கொடுக்கிறோம். என்ன நியாயம்? தமிழ்நாடு அரசு ஓர் உத்தரவு போட்டிருக்கிறது. பி&ஏ ஆர் துறையில் அந்த உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். என்னவென்றால், கருச்சிதைவு ஏற்படக்கூடிய

(பிற்பகல் 6-40)

சகோதரிகளுக்கு 12 வாரங்கள் விடுப்பு கொடுக்கப்படும் என்று சொல் கிறார்கள். கருச்சிதைவுக்கே 3 மாதங்கள் என்றால், பிரசவத்திற்கு 3 மாத விடுப்பு கொடுக்க வேண்டாமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பிரசவமே வேண்டாம் என்று தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். (பலத்த சிரிப்பு).

**திரு. செ. முத்துசாமி:** பிரசவமே வேண்டாம் என்று சொல்கிறார்கள். பிரசவிக்கவே வேண்டாம் என்று சொல்வது வேறு. பிரசவம் செய்து கொள்ள வேண்டியவர்களுக்கு விடுப்பு வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. முன்கூட்டியே கருத்தடை செய்து கொள்வதுபற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. பிரசவமே வேண்டாம் என்றால், பிரசவ ஆஸ்பத்திரி என்று ஏன் வைத்திருக்கிறார்கள்? பிரசவ ஆஸ்பத்திரி என்று ஒன்று இருக்கின்ற வரையில் பிரசவிக்க வேண்டியதுதானே. (பலத்த சிரிப்பு) பிரசவிக்க வேண்டும்

என்று நான் சிபாரிசு செய்வதாகக் கருத வேண்டாம். அவர்கள் 3 மாத காலத்திற்கு அதிகமான சத்துணவு சாப்பிடுகிறார்கள். அவர்கள் அதிகச் சம்பளம் பெறுகிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் குறைந்த அளவு



சம்பளம் பெறுகிறார்கள். நிறைந்த சம்பளம் பெறுகின்றவர்களுக்கு 3 மாதம் விடுப்பு, குறைந்த சம்பளம் பெற்று, குறைந்த சத்துணவு சாப்பிடு வோர்க்கு 2 மாத விடுப்பு என்பது நீதியா? 3 மாதம் தரவேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சீக்கிரமாக முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** அடுத்து, ஆசிரியர்களுடைய குழந்தைகள் படிப் பதற்குச் சலுகைகள் கொடுக்க வேண்டும். ஆசிரியர்களுடைய வருமான வரம்பை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்றைக்கோ ஒரு காலத்திலே இருந்த வருமானத்தை வைத்து ஒரு வரம்பை நிர்ணயித் திருக்கிறார்கள். இளநிலை ஆசிரியர்கள் அவர்களுடைய மக்களுக்குக்கூட என்று ஒரு சலுகை பெற முடியவில்லை. ஊதிய வரம்பை நீக்க வேண்டு மென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். நீங்கள் கேட்டுவிட்டு பேசாமலேயே இருக்கிறீர்கள். இது தர்மம்தானா? எங்களுடைய பிள்ளைகள் படிக்க வேண்டாமா? ஏற்கெனவே ரூ. 60 சம்பளம் இருந்த போது, ரூ. 2,500 என்று வருமான வரம்பை வைத்திருந்தார்கள். அந்த வரம்பே இன்றைக்கும் இருக்கிறதே. எவ்வளவு பண வீக்கம் ஏற்பட்டிருக் கிறது. ஆசிரியர்களின் ஊதிய வரம்பை அரசு நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய குழந்தைகளை முடிந்த அளவுக்காவது படிக்க வைப்பதற்கு கல்விச் சலுகைகள் பெற அந்த வரம்பை நீக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள் 10 எ (1) விதியின்கீழ் பணியாற்றிக் கொண்டிருக் கின்றார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த, அவர்களுக்கென்று ஒரு ஸ்பெஷல் சர்வீஸ் கமிஷன் பரீட்சை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். சர்வீஸிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு 3-வது பே கமிஷனின் சிபாரிசுப்படி 1—4—1978-லிருந்தே ஊதிய உயர்வைக் கொடுத்திருக்கிறார்கள். ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு **1—10—1978** முதல்தான் ஓய்வூதிய உயர்வு கொடுத்திருக்கிறார்கள். ஏன் இப்படி 6 மாதம் பின்னே தள்ளிப் போட்டிருக் கிறார்கள்? ஓய்வு பெற்றிருப்பவர்கள் குறைந்த ஊதியம் பெற்றுக்கொண்டிருப் பவர்கள். இவர்களுக்கு ஒரு 6 மாதம் நீடித்துத் தரக்கூடாதா?

ஆசிரியர்கள் வாழ்க்கையிலே கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர்கள். அப்படி ஓய்வு பெற்றிருப்பவர்களுக்கு பென்ஷன் அனுப்பும்போது, அரசு எம்.ஓ. கமிஷனைப் பிடித்துக்கொள்கிறது. கமிஷனைக் கழிக்காமல், அரசு

[திரு. செ. முத்துசாமி] [1979 பிப்ரவரி 14

ஊழியர்களுக்கு பென்ஷனை அனுப்புகிறார்கள். அவர்களுக்கு எம். ஓ.
கமிஷனைப் பிடிப்பதில்லை. ஆனால் ஆசிரியர்களின் சம்பளத்திற்கு எம். ஓ.
கமிஷன் பிடித்துக்கொள்கிறார்கள். எல்லோரையும் அரசு சமமாக நடத்த
வேண்டும். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்ற கருத்து இருக்
கிறது. நாங்கள் சொல்லிக்கொடுக்கவில்லையா? ஆசிரியர்களுக்கும் கமிஷன்
பிடிக்காமல் வழங்க வேண்டுமென்று நிதித் துறையில் உத்தரவு போட
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதித் துறையிலே உத்தரவு போடும்போது, ஆசிரியர்களைப்பற்றியும்
அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களுக்கான உத்தரவுகள்
தனியாக வர வேண்டுமென்று சொல்கின்றார்கள். கல்வித் துறையிலேயும்,
உள்ளாட்சித் துறையிலேயும் தனியாக வரவேண்டுமென்று சொல்கிறார்கள்.
நிதித் துறையிலே எந்தச் சலுகை வழங்கினாலும், அதை எங்களுக்'க் கொடுக்க
வேண்டும். வெள்ள நிவாரண அட்வான்ஸ் என்று கொடுத்திருக்கிறார்கள்.
நீலகிரி மாவட்டத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு
இன்னும் கிடைக்கவில்லை. அரசு அதிகாரிகள் நிறையச் சம்பளம் வாங்கு
கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் அட்வான்ஸ் கொடுத்துவிட்டார்கள்.
ஆசிரியர்களின் வீடுகள் எல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டது. இங்கே
யிருந்து உத்தரவு போடுகிறார்கள். அங்கே கேட்டால், உத்தரவு போட்டா
லும் கூட, பணத்திற்கு எங்கே போவது என்கிறார்கள். Funds இல்லை
என்கிறார்கள். நாங்கள் அச்சடிக்கிறோமா என்ன? அச்சடிக்க முடிந்தால்,
பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடமே அட்வான்ஸ் பெற்றுக்கொள்ள முடியும்.
இந்த அரசு அதற்காக ஒதுக்கிய பணம் என்ன ஆயிற்று என்று கேட்டுக்
கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் எங்களுக்கு நிதி கிடைக்க
வில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட எல்லா இடங்களையும்
நேரடியாகப் பார்த்துவிட்டு வந்தார்கள். அரசு ஊழியர்களுக்கு ஒரு நீதி,
எங்களுக்கு ஒரு நீதியா? அவர்களுக்கு ஒரு நீதி, எங்களுக்கு ஒரு நீதி
என்று இப்படி இரண்டுபட்ட நீதி தேவைதானா? இது நீதிதானா, நீதி
தானா என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இங்கே பேசுவதற்கு
வாய்ப்புத் தந்தமைக்காக மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்
களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து எங்களுடைய தரப்பிலே
மாண்புமிகு அங்கத்தினர் டாக்டர் ஹண்டே அவர்கள் தம்முடைய சிறந்த
கருத்துக்களையெல்லாம் எடுத்து முன் வைத்ததை ஒட்டி நடைபெறுகின்ற



1979 பிப்ரவரி 14] [புலவர் புலமைப்பித்தன்]

இந்த நிகழ்ச்சியில் நானும் பங்கு பெறுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என
இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு ஏற்ப
டிருக்கும் கால அவகாச நெருக்கடியில் நான் எதைப் பேசுவது, எதை
விடுவது என்று தெரியாமல் இருக்கிறேன். அது என்னையே குழப்பத்தி
ஆழ்த்தியதாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமை
பட்டிருக்கிறேன்.

பொதுவாக ஆளுநர் உரை பற்றிப் பேசுகிறபோது, ஒரு படி மா
அடிப்படையான விவாதங்கள் சுவையாக, சூடாக நிகழ்ந்துகொண்டிருப்பதை
நம்மாலே உணர முடிகிறது. வன்முறைச் சம்பவங்கள் பற்றியும், நீதி
வழங்கப்படவில்லை, நீதி வழங்கப்படவில்லை என்பது பற்றியும் இங்கே
சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வன்முறைச் சம்பவங்களுக்கெல்லாம்
காரணம், ஏற்கெனவே இருந்த ஆட்சியில் அத்தகைய வன்முறைச் சம்பவங்
களுக்கு நீர் பாய்ச்சி தாமே வளர்த்திருந்தார்கள். அதைப் பற்றியே
இங்கே எடுத்துப் பேசுவதால், நேரம் வீணாகிறது என்று நான் கருதுவதால்
அதைப்பற்றி நான் இங்கே அதிகமாகப் பேச வேண்டியதில்லை என்று
எண்ணுகிறேன். நெஞ்சுக்கு நீதி பற்றி தினந்தோறும் சொல்லிக்கொண்
டிருப்பவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தானே எங்களுடைய தோழர்கள்
வெட்டிச் சாகடிக்கப்பட்டார்கள் என்ற விவரங்களை காலவெள்ளத்திலே
ரத்தக் கறைகளாகக் காட்டிக்கொண்டிருக்கின்றன என்பதை மட்டும்
அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் மிகுதியாகக் கவலைப்படுகின்ற மொழிப் பிரச்
சினை பற்றிப் பேசவேண்டுமென்று கருதுகிறேன். அதற்கு முன்னாலே
ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சட்ட முன்வடிவு என்று
முன்னாலே இருந்தது. அதை என்ன காரணத்தினாலோ இந்த ஆளுநர்
அவர்களின் உரையிலே மாற்றி மசோதா என்று வந்திருக்கிறது. 'மசோதா
என்பதும் சோதா என்பதும் என்ன தமிழ் என்று புரியவில்லை. இதை
சட்ட முன்வடிவு என்று முன்பு இருந்ததைப் போலவே மீண்டும் வழங்கும்
முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோ
மாத்திரமல்ல, அகர முதலி என்பதை அகர வரிசை என்று போட்டி
கிறார்கள். இதையெல்லாம் புரிந்துகொள்ள வேண்டியது நமது கட
என்பதை நான் நினைவுறுத்த விரும்புகிறேன்.

தந்தை பெரியார் அவர்களுடைய நினைவு விழாவினைச் சிறப்பா
கொண்டாடுவதன் வாயிலாக அவர்களுடைய தத்துவங்களை, சீர்திருத்
கொள்கைகளை இந்த நாட்டிலே பரப்பி, நிறுத்து இந்த நாட்டை

செம்மைப்படுத்துகின்ற இந்த அரசுக்கு மேலும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே வழியில் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த எழுத்துச் சீர்திருத்தத்தைப் பின்னாலே தமிழ் புலவர்களுடைய ஆலோசனையை ஏற்று அரசாங்கம் மீண்டும் மறு பரிசீலனை செய்யும் எனப்படுகிறது. அதற்கு நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

மொழிப் பிரச்சினைபற்றி இரண்டு தரப்பிலே இருப்பவர்கள் மாத்திரமல்ல, எல்லாத் தரப்பிலும் உள்ளவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து மிக ஆவேசமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு இருக்கின்ற மகிழ்ச்சி எல்லாம், இந்தியை யார் அதிகமாக எதிர்க்கிறார்கள் என்று இப்போது தெரிகிறது. இந்தியைப் போட்டி போட்டுக்கொண்டு எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். யார் யார் இந்தியை எதிர்க்கிறார்கள் என்று கேட்கும் நிலை மாறி, யார் யார் இந்தியை வேகமாக எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்கின்ற அளவுக்குக் காலம் மாறி வந்திருக்கிறது என்னும்போது, நம் இதயத்தே வழிந்துகொண்டிருக்கின்ற குருதியைத் துடைத்துக்கொள்வதற்கு வாய்பாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆயினும் எனக்கு பல நேரங்களிலே ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. இந்த நாட்டினுடைய புகோள அமைப்பும், அதனுடைய அடிப்படையிலே நடந்துகொண்டிருக்கின்ற ஜனநாயக முறை ஒரு செயற்கைத் தத்துவமாக இருந்துகொண்டிருக்கிறது என்பேன். தமிழை அடிமைப்படுத்தியிருக்கிறார்கள். நிரந்தரமாக அடிமைப்படுத்தும் நிலையை உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அதை அதிகமாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் உணர்ந்து வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். துவான் ஃபேன் டெங் என்ற சீன நாட்டு அதிபரை சந்தித்துப் பேசுகின்ற நம்முடைய அமைச்சர் திரு. வாஜ்பாய் இந்தியாவின் நிலைமை வேதனையைத் தான் தருகின்றது என்று சொல்கிறார்கள். அதேபோல்

(பிற்பகல் 6-50)

என்னுடைய வேதனையை அங்கேயுள்ளவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் சுமுகமான நட்புறவுகள் எல்லை தாண்டிய நாடுகளுடன் கூட இருக்க வேண்டுமென்று விரும்புகிற பரந்த மனப்பான்மையுடைய அமைச்சர்கள் மத்தியிலே இருக்கிறார்கள். ஒன்றுபட்டு இமயம் முதல் குமரிவரை ஒன்றாக இருக்க வேண்டுமென்று கூறுகிறவர்கள் அந்த



நல்ல உணர்வுகளை நம்மிடம் காட்ட மறுக்கிறார்கள் அல்லது மறுக்கிறார்கள், அதற்கு என்ன காரணம்? அதோடு மாத்திரமல்ல. நேரு இருந்த காலத்திலேயே நிறைவேற்றியிருக்க வேண்டிய சட்டம் அது. அது வாக்குறுதியாகவே பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. அவரது வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வேளையும் அந்த வாக்குறுதி காப்பாற்றப்படும், காப்பாற்றப்படும், இந்தி திணிக்கப்படவில்லை, திணிக்கப்படவில்லை என்று சொல்லுவதை நாம் நம்பித்தான் தீர வேண்டுமா என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இதை வெளிப்படையாகச் சொல்லப்போனால், நான் ஒரு வார்த்தையைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பெரிதும் மதிக்கக்கூடிய கொள்கை திராவிடக் கொள்கை, எல்லாவற்றுக்கும் மேலான மூலக்கொள்கை என்னவெனில் தமிழைப் பேணிப் பாதுகாப்பது என்ற அடிப்படைக் கொள்கையாகும். அது சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தென்னிந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த நம்முடைய பெருமதிப்பிற்குரிய பிரதமர் தேசாய் அவர்கள் வயதில் முதிர்ந்தவர், கல்வி அறிவு நிரம்பப் பெற்ற அறிவாளி, ஆட்சி புரிவதில் பல்லாண்டு அனுபவம் மிக்கவர், குறிப்பிடுகிறார் "தேச பக்தி இருந்தால் இந்தி படிப்பான்". அந்த வார்த்தையைக் கேட்ட நான் மிகுந்த வருத்தமடைந்தேன், வேதனையடைந்தேன், உள்ளக் கிளர்ச்சியுற்றேன். அப்படியானால் "வாழிய செந்தமிழ்" என்று முழங்கிய பாரதி தேசத்துக்கு விரோதி என்று பிரதமர் கூறுகிறாரா? தமிழுக்குப் பாதுகாப்புத் தேவை என்று சொல்லுவதைக்கூட தேசத் துரோகம் என்றும், தேசப்பற்றற்றவர்கள் என்றும் சொன்னால், அதற்கு நான் சொல்லும் பதில் எல்லாம் அதற்கு என்று தனியாகப் புதிய அகராதியைத்தான் போட வேண்டும். எனக்கு இப்பொழுது இருக்கிற வேதனையெல்லாம் என்னுடைய இப்போதைய வயது 43. இந்தப் போராட்டத்துக்கு வயது 42. முதன் முதலாக இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1937 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1938 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இது இன்னமும் எத்தனை தலைமுறைக்கு இப்படியே நீடிக்குமோ, தொடருமோ என்ற சந்தேகம், கேள்வி எனக்கு எழுகிறது. இது ஏன் என்று எனக்கு விளங்கவில்லை. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அதனாலேயே தீமைகளை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லுவது எப்படி தர்மமாகும், நியாயமாகும்? இன்னும் அவர்களுடைய எண்ணத்தை நாம் புரிந்துகொள்ளலாம். நான் சொல்லுகிறேன். தமிழ் மொழி ஒரு சிறப்பான மொழி, உயிருள்ள மொழி; செம்மொழி என்றெல்லாம் பெருமை பாராட்டிக் கொண்டிருப்ப

தனாலும், அதன் சிறப்புக்களையெல்லாம் அவர்கள் புரிந்துகொண்டிருப்பதன் காரணத்தினாலும், பண்டைச் சங்க காலத்திலிருந்து கடைசியாக பாரதிதாசன் வரை அது இலக்கிய இலக்கணங்களை முறையாகக் கொண்டு சிறப்புப் பெற்றிருப்பதனாலும், தமிழை பாடமாக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் இந்த அவையில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். முன்னாள் பிரதமர் நெருக்கடி நிலை அமுலில் இருந்தபோது, சோவியத் நாட்டுக்குச் சென்று அங்கே சொன்னார் "நான் ஒரு பழம் பெருமை மிக்க ஒரு பண்பாட்டுக்குச் சொந்தமான நாட்டிலே இருந்து வந்திருக்கிறேன்". அம்மையார் அவர்கள் அன்னை [illegible] துச் சென்று "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று சொல்லுவதற்குக் காரணமாக அமைந்திருந்த ஒரே மொழி இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ் மொழி தான். வெளிநாடுகளுக்குச் சென்று குறிப்பாக சமத்துவ நோக்கங்களை, லட்சியங்களைக் கொண்டிருக்கிற பொதுவுடைமை நாடுகளுக்கும் பொதுவுடைமை பூத்துக் குலுங்குகின்ற நாடுகளுக்கும் சென்று இந்த மொழியின் பெருமையை உணர்ந்து அதைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இந்த மொழிக்கு இந்திய நாட்டிலே உரிய சம அந்தஸ்தைத் தர நினைக்கவில்லையே, அதற்கு என்ன காரணம்? இன்னும் சொல்லப்போனால், இந்தி திணிக்கப்படவில்லை, திணிக்கப்படவில்லை என்று சொல்லிக் கொண்டே இந்தி திணிக்கப்படுகிறது. இது உடனே தீர்க்கப்படக் கூடிய பிரச்சினையாகத் தெரியவில்லை. தொடர்ச்சியாக இன்னும் எத்தனை தலைமுறைக்குப் போகுமோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. அடுத்தபடியாக, நான் ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். அது யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காக அல்ல. சமஸ்கிருத மொழியை செத்த மொழி என்பார்கள். அதிலிருந்து வந்தது தான் இந்தி மொழி. அது செத்த மொழி என்று சொல்லுகின்றார்கள் என்றால், அதை யாரும் பேசாத காரணத்தால், அந்த மொழியை யாரோ 200 பேர் பேசுவதாக ஒரு பொய்யான கணக்கை எடுத்து வைத்துக் கொண்டு அதிலிருந்து வந்த மொழியை தேசிய மொழி ஆக்கியிருக்கிறார்கள், தேசிய மொழியாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது, ஒத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் தமிழ் மொழியினுடைய ஒரு தனிச் சிறப்பைப் புரிந்துகொண்டுவிட்ட பின்னாலும், இந்த மொழி அடிமைப்படுத்தப்படுகிற நிலைமை. இந்த மொழியைச் சார்ந்தவர்களை இரண்டாம் தர மக்களாக நடத்துகிற கொடுமை எப்படி அனுமதிக்கப்படுகிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களுக்கு ஆங்கிலம் வெகு அழகாகப் பேச வருகிறது என்ற தனிச் சிறப்பு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. நானும் கூட அவர் பேசியதை வியந்து வியந்து பார்த்துக்கொண்டிருக்கிறேன், பாராட்டியிருக்கிறேன்.



ஆங்கில மொழி நமக்கு வேண்டும் என்பதில் இரண்டுபட்ட கருத்து இல்லை. ஆனால் எந்த அளவுக்கு வேண்டும் என்பதில்தான் நான் அவரோடு மாறுபடுகிறேன். கட்டிலுக்கு வருகிறவள் கட்டிக் கொண்டவள் மட்டும் தான், வேலைக்காரியாக வந்தவள் கட்டிலுக்கு வந்து வீட்டுக்கு உரிமையுடையவளாக மாறி விடக் கூடாது. அந்த வகையிலே உலக நாடுகளோடு தொடர்பு கொள்வதற்கும் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற பிற மாநிலங் களோடு தொடர்பு கொள்வதற்கும், அறிவியல் பார்வையைத் திறந்து விடுகிற சாதனத்தை உருவாக்குவதற்கும்தான் ஆங்கிலம் பயன்பட வேண்டுமே தவிர, ஒரு மொழி அறிவு என்கிற அடிப்படையிலே ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வதிலே தவறு இல்லை. ஆனால் பயிற்சி மொழியாக பாடங்களை தாய் மொழியிலேயே தான் படித்துக் கொள்ள வேண்டும், எல்லாக் கலைகளையும், சித்தாந்தங்களையும் தத்துவங்களையும் கூட தாய் மொழியிலேயே தான் படித்துக் கொள்ள வேண்டுமென்பது அறிஞர் பெருமக்களால் ஒப்புக்கொள்ளப் பட்ட பின்னால், எல்லாப் பாடங்களையும் பழையபடி ஆங்கிலத்திலேதான் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், திரும்ப வெள்ளைக்காரர்கள் இங்கே வருவதாக ஏதாவது செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது (சிரிப்பு).

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் இன்னும் எவ்வளவு நேரம் பேச விரும்புகிறார்? உறுப்பினர் பேசி முடிகிற வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**புலவர் புலமைப்பித்தன் :** அவர் பேசுகிற ஆங்கிலம் இருக்கிறதே அந்த ஆங்கிலத்திற்காக 1773 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டிலே ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டம், சட்டச் சொற்களை லத்தின் மொழியில் பயன்படுத்தக் கூடாது, ஆங்கிலத்திலே மட்டும் தான் சட்டச் சொற்கள் இருக்க வேண்டும் என்பது தான். அப்படி தப்பித் தவறி யாராவது லத்தீன் சொற்களைப் பயன்படுத்தினால், 50 பவுன்கள் அபராதம் விதிக்கப்படும், தண்டனை விதிக்கப்படும், ஒறுத்தம் விதிக்கப்படும் என்கிற சட்டத்தை 1773 ஆம் ஆண்டிலே உருவாக்கினார்கள். அதைப்பற்றி அவருக்கு என்னைக் காட்டிலும் அதிகமாகத் தெரியும். அப்படி ஆங்கில மொழியை வளர்ப்பதற்காக, அதன் வளத்திற்காக எல்லாத் துறைகளிலும் அந்த மொழி நிலை பெற வேண்டும் என்பதற்காக, உயர வேண்டும் என்பதற்காக, வேறு மொழிச் சொற்கள் ஆங்கிலத்திலே பரவாமல் இருப்பதற்காக, அதை ஒரு பெரிய குற்றமாக, தண்டனையாக, ஒறுத்தமாகச் கருதினார்கள். ஆங்கில மொழியைத் தவிர வேறு மொழியைப் பயன்படுத்தினால், ஒவ்வொரு சொல் லுக்கும், ஒவ்வொரு வார்த்தைக்கும் 50 பவுன்கள் அபராதம், ஒறுத்தம் விதிக்கப்

பட்டிருக்கிறது என்கிற வரலாற்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிடக் கூடாது. ஒரு 300 ஆண்டு காலமாக, 400 ஆண்டு காலமாக பல்வேறு ஆதிக்கங்களுக்குக் கீழே கட்டுப்பட்டுக் கிடந்த தமிழ் எல்லாக் கலைகளிலேயும் துறைகளிலேயும் வளர்ந்து வர வேண்டும் என்கிற எண்ணம் விடுதலை பெற்ற நாட்டிலே உருவாக வேண்டும் என்பது இயற்கையினுடைய நியதி. அந்த அடிப்படையில் எல்லாக் கலைகளையும் தமிழிலே தான், சிந்தனையோடு ஒட்டியிருக்கிற தாய் மொழியிலே தான் பெற வேண்டும் என்பது எல்லா அறிஞர்களும் ஒப்புக்கொண்ட ஒத்த முடிவு ஆகும். பாரதி கூட, "செல்வு தந்தைக்கு நூறு ஆயிரம் சென்றது. இது எனக்கோ பல்லாயிரம் நேர்ந்தன, நலமோ எத்துணையும் கண்டிலேன், இதை 40 ஆயிரம் கோயிலில் சொல்வேன்" என்று சொன்னார். ஆங்கிலத்தைப் படித்துக் கொண்டதினாலேயே "செலவு தந்தைக்கு நூறு ஆயிரம், சென்றது; இது எனக்கு பல்லாயிரம் நேர்ந்தன; நலமோ எத்துணையும் கண்டிலேன்; இதை நாற்பதாயிரம் கோயிலில் சொல்வேன்" என்று பாரதி சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 7-00)

இந்த அடிப்படையில்தான் சொல்லுகிறேன். சிந்தனை என்பது தாய்மொழியில்தான் இருக்க முடியும். நம் சிந்தனை தாய்மொழியாகிய தமிழில்தான் இருக்க முடியும். அப்படி சிந்தனையோடு ஒட்டியிருக்கிற மொழியில்தான் கலைகளை, கலைச் செல்வங்களைப் பெற வேண்டும் என்ற எண்ணம், இன்றைக்கு மட்டுமல்ல, முன்னாளில் கல்வி அமைச்சராகவும், நிதியமைச்சராகவும் இருந்த பெருமதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் "தமிழால் முடியும்" என்று நிரூபித்துக் காட்டுகிற முறையில் ஒரு சோதனையைத் தொடங்கினார்கள். ஆனால் இந்த நாட்டில் இருப்பவர்களுக்கு கடந்த 2,000 ஆண்டு காலமாக ஒரு மனோபாவம் இருக்கிறது. எதையும் தன்னுடைய மொழியில் சொன்னால் மரியாதையில்லை என்ற மனோபாவம் இருக்கிறது. அந்தக் கொத்தடிமை புத்தி இந்த நாட்டில் இன்னும் இருக்கிறது. ஆகவே தமிழ் நாட்டில் எல்லாத் துறைகளிலும் தமிழ்தான் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும். மொழி அறிவுக்காக ஒரு மொழியைப் படிப்பது என்பது வேறு. எல்லாத் துறைகளிலும் தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பது வேறு. இப்படி தமிழ் வளர்ச்சி பெறுகிற முறையில், பயிற்றுமொழியாக வருகிற முறையில் மாவட்டங்கள் தோறும் கருத்தரங்குகளைக் கூட்டி, வளர்க்கிற முறையில் ஈடுபட்டபோது, ஒரு நாள் ஒரு போராட்டம் என்ற அடிப்படையில் ஒரு ஊர்வலம் நடத்தப்





பட்டது. எப்படிப்பட்ட ஊர்வலம் அது என்பது எனக்குத் தெரியும். அது முழுக்க முழுக்க அரசியல் தன்னலக்காரர்கள் நடத்திய சூதான ஊர்வலம் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. அந்த ஊர்வலத்தாலே "சட்டி சுட்டதடா கை விட்டதடா" என்று அந்தக் கொள்கை அன்று விடப்பட்டது.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம் எந்த மொழி தன்னுடைய தாய் மொழியோ, எந்த மொழி சிந்தனையோடு சேர்ந்து இருக்கிறதோ அந்த மொழியில் கலைகளை, கல்வியைப் பெறுவதுதான் பயனுள்ளதாக இருக்க முடியும். அப்படி இல்லையென்றால் நாம் ரூ. 200 கோடி அல்ல, அதற்கு மேலாகக் கல்விக்குச் செலவு செய்தாலும், அது விழலுக்கு இறைத்த நீராகத் தான் போகும். அதனாலே கண்டிப்பாகப் பயன் இருக்காது. வேண்டுமானால் பெரிய ஐ.ஏ.எஸ். போன்ற படிப்புக்குச் செல்லுகிறவர்கள், மேட்டுக்குடித் தரத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவேளை இதனால் பாதகமடைவதாக நினைக்கலாம். ஆனால் இந்த நாட்டில் சாதாரண மக்களாக இருக்கிறவர்கள், இந்த நாட்டின் ஏழை எளிய மக்களாக இருக்கிறவர்கள், இந்த நாட்டு பொதுமக்கள் வாழ வகை செய்ய விரும்புகிறவர்கள் எல்லாம் தாய் மொழியில் தான் அனைத்தையும் கற்க வேண்டும் என்று விரும்புவார்கள். தாய்மொழியால் எந்த அளவுக்கு பல கலைகளையும் கற்றுத் தருகிற ஆற்றலை வளர்க்கிறோமோ அந்த அளவுக்கு நாட்டு மக்களுக்கு நல்லது. அப்போதுதான் "பள்ளத்தில் விழுந்திருக்கும் குருடர் எல்லாம் விழி பெற்று பதவி பெறுவர்" என்பதைப் போல் பள்ளத்திலே இருக்கிற குருடர்கள் எல்லாம் விழி பெற்று பதவி கொள்ளுவார்கள். எனவே தாய்மொழி பயிற்று மொழியாக இருந்தால் தான், இது முடியும் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இடையிலே ஏதேதோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் இன்றைக்கு எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற உணர்வு உருவாகி, அது வளர்ந்து வருகிறபோது, எந்த மொழியினுடைய ஆதிக்கமும் கூடாது என்கிற போது, ஆங்கில மொழியின் ஆதிக்கம்கூடத்தான் இருக்கக்கூடாது என்று சொல்லுகிறோம். ஆனால் ஆங்கில மொழி நமக்கு அறிவின் சாளரமாக இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ள மறுக்கவில்லை. ஆனால் தாய் மொழியினுடைய இடத்தை அது பிடித்துக்கொள்ள அனுமதிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய பணிவான கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் இந்த மேலவையில் இருக்கிற நண்பர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இந்த வகையில் ஒரே கருத்தை, ஒரே உணர்வை உடையவர்களாக இருக்க வேண்டும். எனக்கு ஒரு

[புலவர் புலமைப்பித்தன்] [1979 பிப்ரவரி 14

சம்பவம் நினைவுக்கு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது, தம்பிக்குக் கடிதம் என்று ஒரு கடிதத்தை எழுதினார்கள். அப்போது மிகுந்த வேதனையோடு எழுதப்பட்ட அந்தக் கடிதம் அனைவரையும் வேண்டிக்கேட்டுக் கொள்ளும் விண்ணப்பம் போல் அமைந்திருந்தது. அவர் எழுதினார்: "என்னை வேண்டுமானால் எதிர்த்திடுங்கள். எனக்கு வேண்டுமானால் உங்களின் எதிர்ப்பைக் காட்டுங்கள். ஆனால் என்னை எதிர்க்கிற காரணத்திற்காக, தமிழகத்தினுடைய எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்க நான் என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ளுகிறேனோ அவைகளை எதிர்க்காதீர்கள். அந்த முயற்சிகளை எதிர்த்து எதிர்கால சந்ததியினரைப் பாழ்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டாம்" என்று மொழிப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடும்போது கேட்டுக் கொண்டார்கள். அதையே நான் இப்போது பணிவன்போடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நமக்குள் எந்த உணர்வுகள் இருந்தாலும், கொள்கைகளில் பேதம் இருந்தாலும் சரி, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், ஒத்த கருத்துடையவர்களாக இருப்போம். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்ட உவமைதான் எனக்கு நினைவுக்கு வருகிறது. "வாய்ப்பாட்டு பாடுகிறவர் என்ன சுருதியில் பாடுகிறாரோ அதைப்போலத் தான் பக்க வாத்தியக்காரர்கள் வாசிக்கிறார்கள். சுருதி ஒன்றாக இருக்கிறது; வாத்தியம்தான் வேறாக இருக்கிறது" என்றார்கள். அதைப்போல நம் உணர்வுகள் எல்லாம் ஒன்றாக இருக்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல் இந்தி ஆதிக்கத்தை முழுமையாகத் தடுத்து நிறுத்திட, இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்திட, சுருதி ஒன்றாக இருப்பதைப்போல் நம்முடைய குரல்களும் ஒன்றாக இருந்தால், அத்தகைய முயற்சியில் நாம் வெற்றி பெற முடியும், இல்லையென்றால் எதிர்காலத் தலைமுறை இருள் சூழ்ந்துவிடும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த முயற்சியில் ஈடுபடுகிற இந்த அரசுக்குத் துணையாக நிற்க வேண்டும். இன்றையதினம் நமது அரசு அத்தகைய முயற்சியில் தீவிரமாக, முழுமையாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல், "பதவி போனால் போகட்டும், என் அலுவல் போனால் போகட்டும், என் தமிழ் விடுதலையாகட்டும்" என்ற தலைமுறை ஒருகோடி கண்ட தமிழர்தம் மானத்தைப் பாதுகாக்க, அடிப்படையில் தமிழ் மொழியைப் பாதுகாக்க, கடந்த 40 ஆண்டுக் காலமாக மேற்கொள்ளப்படும் இந்த முயற்சிகள், தொடர்ந்து மேற்கொள்ளப்படும் முற்றுகைப் போராட்டத்தை மேற்கொள்ளப்படும் இந்த முயற்சிகள், முடிவுக்குக் கொண்டு வருவதற்காக வெற்றிபெற நாம் ஒன்றுபட வேண்டும் என்று கூறி, வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.



1979 பிப்ரவரி 14]

### 6. அறிவிப்பு.

#### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விவரம் முடிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| 15—2—1979 முதல் 17—2—1979 வரை | ஆளுநர் உரையின் மீது விவாதம் |
| 19—2—1979<br>20—2—1979 | மாண்புமிகு முதலமைச்சரின் பதிலுரை.<br>தனி உறுப்பினர் அலுவல். |
| 21—2—1979 முதல் 27—2—1979 வரை | கூட்டம் இல்லை. |
| 28—2—1979 முதல் 2—3—1979 வரை | அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |

நாளை (15—2—1979) அன்று மட்டும் மேலவை மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடைபெறும். மற்ற நாட்களில் வழக்கம்போல் மேலவை 4 மணி முதல் 7 மணி வரை நடைபெறும்.

மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து மீண்டும் நாளை மாலை 3 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7.07)

7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

85. Notification issued with G.O. Ms. No. 1495, Commercial Taxes and Religious Endowments, dated the 2nd December 1978 in regard to the framing of the Regional Committee Rules, 1978 under the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. [Laid on the table of the House under section 116 (3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959)].

86. Notification issued with G.O. Ms. No. 1287, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 18th November 1978 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for exclusion of the post of Joint Transport Commissioner, when appointment is made by recruitment by transfer on tenure basis, from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India].

***B. Reports, Notifications and other Papers.***

**Nil.**

---

**தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.**

---

**வியாழக்கிழமை, 1979 பிப்ரவரி 15.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

**1. வினாக்கள்-விடைகள்.**

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

*Milch Cows Electrocuted.*

*31 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that some costly Milch Cows were electrocuted when they came into contact with the live wires in Choolaimedu, near Nungambakkam, Madras, during the month of September, 1978;

(*b*) the action taken by the Government to prevent such accidents in future;

(*c*) whether any compensation was given to the affected person; and

(*d*) if so, the amount so given?

**மின்சாரத் தாக்குதலுக்கான கறவை மாடுகள்.**

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சென்னை மாநகரில் நுங்கம்பாக்கம் அருகே உள்ள சூளைமேட்டில் அறுந்து கிடந்த மின்சார கம்பி வழி மின்சாரம் தாக்கி விலையுயர்ந்த கறவை மாடுகள் இறந்தது உண்மையா?

(இ) இம்மாதிரி விபத்துக்களைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு ஏதேனும் நஷ்டஈடு கொடுக்கப்பட்டதா?

(எ) ஆம் எனில், எவ்வளவு கொடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) மழைக்காலத்திற்கு முன்பாக மின் கடத்திகள் அறுந்து போகாமல் இருக்க ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்க மின்வாரியம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மின்கடத்திகள் அறுந்துபோனவுடன், மின்னிணைக்கம்பி (Fuse) அறுந்து போகாததினால் ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் உள்ள மேல்நிலை மின் கடத்திகளை புதை மின் கடத்திகளாக மாற்றி அமைக்கும் பணி ஒவ்வொரு கட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(உ) & (எ) இறந்துபோன மாட்டின் சொந்தக்காரர் நஷ்ட ஈடு கேட்டு தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு மனு செய்துள்ளார். மின்சார வாரியம் தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. ம. சங்கரலிங்கம்: மின்சாரக் கம்பி அறுந்து கிடந்ததால் ஏற்பட்ட விபத்தையொட்டி அங்கே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போல பல பகுதிகளில், குறிப்பாக மழை பெய்தவுடன், விபத்துக்கள் ஏற்படுவதைக் காண்கிறோம். இவற்றைத் தடுக்க எல்லாப் பகுதிகளிலும் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, விபத்துக்கள் நடந்தால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் நஷ்டஈட்டுத் தொகையைக் காலதாமதமின்றி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒவ்வொரு ஆண்டும் மின் கடத்திகளைச் சரிபார்க்க வேண்டிய 'Pre-monsoon Inspection'' என்ற இன்ஸ்பெக்ஷனை பருவ மழை வருவதற்கு முன்பு செய்ய வேண்டும். அத்தகைய இன்ஸ்பெக்ஷனைத் தவறாமல் நடத்தி லைன்கள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும் என்று மின் வாரியத்திற்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister see that underground wiring is installed in all parts of the City so that these accidents may be avoided?



THE HON. THIRU S. RAMACHANDRAN: The hon. Member's idea is already under execution.

THIRU G. VASANTHA PAI: Sir, I am bringing to the notice of the Hon. Minister that in a place like Adyar underground wiring has been put as long ago as three years ago but still we have got overhead wires and no connections have been given.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, I hope the Board will take care of it.

### *Transmitter at Madurai.*

* 32 *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to request the Central Government to install a Transmitter at Madurai for broadcasting Vividh Bharathi Programmes; and

(*b*) if so, the stage at which the matter now stands?

### மதுரையில் ஒலி அனுப்பி.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விவித பாரதி நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப, மதுரையில் ஒரு தனி ஒலி அனுப்பி (Transmitter) அமைக்கவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: விவித பாரதி நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப என்று இல்லாமல் ஒரு வானொலி நிலையமே மதுரையில் அமைக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

[1979 பிப்ரவரி 15

**திரு. வே. தங்கபாண்டியன்:** மதுரையிலே ஒரு வானொலி நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசாங்கம் ஆய்ந்து விட்டு விட்டதாகத் தெரிகிறது. ஆகவே மீண்டும் அதுபற்றித் தமிழக அரசு மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி கூடிய வரையில் புதிய நிலையத்தை ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** கடந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க இயலாது என்று கூறிவிட்டதால், அதன் தொடர்பாக கடந்த நவம்பர் மாதத்தில் நாம் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினோம். டிசம்பர் மாதத்தில், வருகிற ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளுகிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் திரு. அத்வானி அவர்களிடம் மீண்டும் இதை வலியுறுத்தியிருக்கிறோம். அதைத் தொடர்ந்து மீண்டும் அவருக்கு விரைவில் அமைக்க வேண்டும் என்று கடிதம் எழுதியிருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி:** மதுரையில் ஒலிபரப்பு நிலையத்தை அமைப்பது பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதுபோலவே டி.வி. நிலையத்தை மதுரைக்கு மட்டும் ரிலே ஸ்டேஷனாக வைக்க அனுமதி கிடைத்திருக்கிறது. திருச்சிக்கும் அந்த அனுமதியைப் பெறுவதற்கு முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** அதுபற்றி ஏற்கெனவே விவாதித்த போது, ஒளிபரப்பு நிலையங்கள் அமைப்பது என்பது பெரிய செலவில் நடைபெற வேண்டிய காரியமாக இருக்கிறது என்று மத்திய அமைச்சகத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டி மதுரைக்கு முதலிலே ஒளிபரப்பு நிலையத்தைப் பெறுகின்ற அந்த வாய்ப்பை மாத்திரம் உருவாக்குகின்ற ஆலோசனையில் ஈடுபட்டிருக்கிறோம். அதைப் பெற்றுவிட்ட பிறகு மாவட்டத் தலைநகரங்களுக்கும் பெறுவதற்கு சமயம் வரும்போது கேட்டுப் பெற முயற்சிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** விவித பாரதி என்று சொன்னால், இதற்கு என்ன பொருள்? தமிழ் நாட்டிலே நடைபெறுகிற நிலையத்திற்குக் கூட அந்தப் பெயர் இன்னும் தொடர வேண்டுமா? அதை மாற்ற அரசு முயலுமா? குறைந்தபட்சம் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் ஆரம்பிக்கிற நிலையத்திற்காவது முழுக்க முழுக்கத் தமிழ்ப் பெயர் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1979 பிப்ரவரி 15]

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இந்த மூலக் கேள்வியைக் கேட்ட அருமை நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்களிடமே பதில் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கலாம். அகில இந்திய அளவிலே விவித பாரதி என்று உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் சென்னை வானொலி நிலையம் என்றுதான் அறிவிக்கிறார்கள். அகில இந்திய அளவில் வைத்திருக்கிற பெயரை மாற்றக் கேட்பது நம்முடைய உரிமை அல்லது விருப்பம். மாற்றுவது என்பது அவர்களுடைய முடிவைப் பொறுத்தது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மதுரையில் வானொலி நிலையம் வைக்க சிபாரிசு செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே மாதிரி வேறு ஏதாவது ஊர்களில் வானொலி நிலையம் வைக்க சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இப்போது வேறு இடங்களில் அமைப்பதைப்பற்றிச் சொல்லுவதற்கில்லை. முதலில் மதுரைக்குப் பெற்றுவிட்டு, பெற்றதற்குப் பின்னால் வேண்டுமானால் அடுத்ததைப்பற்றிக் கேட்கலாம். கேட்கிறபோது எல்லாவற்றையும் கேட்டு ஒன்றும் பெற முடியவில்லை என்பதை விட ஒவ்வொன்றாகப் பெறுவதுதான் சிறந்த முறை என்று இந்த அரசு கருதுகிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** சென்னையில், சென்னை ஒலிபரப்பு நிலையம் என்று சொல்லுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னையில் ஆகாஷ்வாணி என்று சில சமயங்களில் சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படியானால் அதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இது நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வருகிற பிரச்சினை. அவர்கள் அகில இந்திய அளவில் ஆகாஷ்வாணி என்று சொல்லிவிட்டு, தமிழ் நாட்டு மக்களுடைய உணர்வை மதிப்பதற்காக 'சென்னை வானொலி நிலையம்' என்று அறிவிக்கிறார்கள். அந்த அளவுக்கு நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். விவித பாரதி என்பதை எப்படி அகில இந்தியப் பெயராக வைத்திருக்கிறார்களோ, அதைப் போலவே ஆகாஷ்வாணி என்பதையும் அகில இந்தியப் பெயராக வைத்திருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** புதிதாக ஒலிபரப்பு நிலையங்களை மற்ற இடங்களில் ஏற்படுத்த அரசு முயற்சிக்கிறது. ஆனால் தற்போது திருநெல்வேலி நிலையத்தில் இருக்கக்கூடிய இயந்திரங்களைவிட அதிக சக்தி வாய்ந்த இயந்திரங்களைப் பொருத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? ஏனென்றால்

[திரு. ம. சங்கரலிங்கம்]

திருநெல்வேலியிலிருந்து 50 மைல்களுக்கு அப்பால் உள்ள நாகர்கோவிலில் சிலோன், திருவனந்தபுரம் நிலையத்திலிருந்து நன்றாகக் கேட்கிறது. ஆனால் திருநெல்வேலியிலிருந்து ஒலிபரப்பப்படும் செய்தி கேட்கப்படுவதில்லை. அந்த இரண்டு நிலையங்களும் 50 மைல் தொலைவில்தான் உள்ளன. ஆகவே இது குறித்து தக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இந்த விஷயத்தைப்பற்றிக் கடந்த செய்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தெரிவித்தோம். குறிப்பாக கோவை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கிற வானொலி ரிசீவிங் ஸ்டேஷன்களை சக்தி மிக்கதாக மாற்ற வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டிருக்கிறோம். அதைப்பற்றி கவனிப்பதாக வாக்குறுதியை அளித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 3-10)

**திரு. செ. முத்துசாமி:** செய்திகள் வாசிக்கும்போது, 'ஆல் இந்தியா ரேடியோ' என்றுதான் சொல்லுகிறார்கள். இதைத் தமிழிலே சொல்லுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா? ஏற்கெனவே தமிழில் சொல்ல வேண்டுமென்ற உணர்வுகள் ஏற்பட்டு, 'ஆகாஷ்வாணி' என்று சொல்வதை விட்டுவிட்டாலும், 'ஆல் இந்தியா ரேடியோ' என்று சொல்லுவது தொடர்கிறது. இதையும் மாற்றி, 'வானொலி' என்று சொல்லுமளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** நான் முன்னாலே சொன்ன பதிலைத்தான் இதற்கும் சொல்ல வேண்டும். சென்னையிலே இருந்து சொல்லும்போது, அப்படிச் சொல்வதில்லை. டெல்லியிலே இருந்து தமிழ் செய்தி சொல்லும்போது, அப்படிச் சொல்லுகிறார்கள். எனவே டெல்லியிலே மாற்றுவதற்கு எந்த அளவிற்கு ஒத்து வருவார்களென்பது தெரியாது. நமது எண்ணங்களையெல்லாம் இந்த மன்றத்திலே இப்போது நாம் சொல்லுவதால், மீண்டும் ஒரு முறை மத்திய அரசுக்கு இதுபற்றித் தெரிவிப்போம்.

(திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திருப்பித் திருப்பி ஒருவரே எத்தனை முறை விளக்கம் கேட்பது?

**திரு. பி. ஆர். தாமஸ்:** மதுரையிலே வானொலி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமென்று கூறப்பட்டது. அதன் தொடர்பாக டெலிவிஷன் நிலையம் அமைக்க வாய்ப்பு இருக்கிறதா? அதற்குத் தமிழக அரசு முயற்சி எடுக்குமா?

**பல மாண்புமிகு உறுப்பினர்கள்:** பதில் சொல்லியாகிவிட்டது.



## *Janata Hotel in Gingee Fort.*

*33 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government for the opening of a Janata Hotel for the benefit of tourists in the Gingee Fort; and

(*b*) if so, when the same will be opened?

### செஞ்சிக் கோட்டையில் ஜனதா உணவு விடுதி

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செஞ்சிக் கோட்டையில் சுற்றுலா பயணிகளின் நலனுக்காக ஜனதா உணவு விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** (அ) & (இ) தற்பொழுது இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** செஞ்சிக் கோட்டைக்கு ஒரு நாளைக்குக் குறைந்தது 500 பேர்களாவது வருகிறார்கள். பெரும்பாலும் அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்க பள்ளி மாணவர்கள் பக்கத்திலுள்ள மாவட்டங்களிலிருந்து வருகிறார்கள். அந்தக் கோட்டை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அங்கே இரண்டு மைல் தொலைவிற்கு விடுதிகள் இல்லாததால், தனியாருக்கு அப்படிப்பட்ட விடுதி அமைக்க அனுமதி கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இது போன்ற சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தனியார் விடுதிகள் அமைக்க முன்வந்தால், அரசு அதை மறுப்பது கிடையாது. அதே நேரத்தில் 5 லட்சம் ரூபாய் திட்டத்தில் அங்கே சுற்றுலாப் பயணிகள் தங்கவும், மற்றும் பல அடிப்படை வசதிகள் செய்யவும் சுற்றுலாத் துறையினரிடம் திட்டம் இருக்கிறது. அதனால்தான் 'தற்போது இல்லை' என்று பதில் அளித்தேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** ஜனதா என்பதற்கு விளக்கம் தேவை. எத்தனை இடங்களில் ஜனதா ஹோட்டல்கள் இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** 'ஜனதா' என்ற பெயரை நான் வைக்கவில்லை. தமிழக அரசும் வைக்கவில்லை. ஆகவே வைத்தவர்களிடத்தில்தான் அந்தப் பெயருக்கு விளக்கம் கேட்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஜனதா ஹோட்டல் என்ற பெயரில் விடுதிகள் அமைக்கப்படவில்லை. எனக்குத் தெரிந்தவரையில், மத்திய சுற்றுலாத் துறை விடுதிகளுக்கு—நடுத்தர மக்கள் பயன்படுத்துகிற, குறைந்த செலவில் உள்ள விடுதிகளுக்குப் பெயராக 'ஜனதா' என்பது பயன்படுத்தப்பட்டு வருகிறதென்று நான் கருதுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** செஞ்சிக் கோட்டைக்கு இழுவை ரயில் அமைக்கப்போவதாக மத்திய அரசின் சார்பில் வாக்குறுதி கொடுக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது. அது எந்த அளவிற்கு உண்மை? அதை அமைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** அப்படிச் செய்தி வந்ததாக எனக்குத் தகவல் இல்லை. செஞ்சிக் கோட்டை என்பது மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பொறுப்பிலே இருக்கிறது. அப்படிப்பட்ட தகவல்கள் ஏதாவது வந்திருக்குமானால், அதைப் பரிசீலித்து, அதை விரைவுபடுத்த இந்த அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்கும்.

## *Maternity Leave.*

* 34 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that Maternity Leave facility has not been extended to the lady teachers serving in aided colleges; and

(*b*) if so, the reasons therefor?

### பேறுகால விடுப்பு.

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியைகளுக்குப் பேறுகால விடுப்பு வசதி அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இது உண்மை அல்ல.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *Junior and Senior Mechanics.*

* 35 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that, as per G.O. Ms. No. 151, Education, dated 29th January 1976 Educational Qualifications prescribed and the nature of work, for the Junior and Senior Mechanics serving in High Schools in the Engineering Sections, are one and the same; and

(*b*) if so, whether there is any proposal to award uniform scale of pay and Selection Grade scale of pay to both categories of Mechanics?

### இளநிலை, முதுநிலை கம்மியர்கள்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில், பொறியியல் பிரிவுகளில் பணி புரியும் இளநிலை, முதுநிலை கம்மியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிகளும் அவர்களது பணியின் தன்மையும் கல்வித் துறையின் 29—1—1976-ம் நாளிட்ட 151 ஆம் எண் அரசாணையின்படி ஒரே மாதிரியாக உள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இந்த இருசாரங்களைச் சேர்ந்த கம்மியர்களுக்கு ஒரே சீரான சம்பள விகிதத்தையும் தேர்வு நிலை சம்பள வீதத்தையும் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *Taking Over of Schools by Government.*

* 36 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to take over all the recognised Schools run both by private and other bodies; and

(*b*) if so, the date on which it will be implemented?

[1979 பிப்ரவரி 15

**பள்ளிகளை அரசுடைமையாக்குதல்.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசின் அங்கீகாரம் பெற்ற எல்லா தனியார் மற்றும் குழுக்களால் நடத்தப்படும் பள்ளிகளை அரசுடைமையாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில் எப்பொழுது நடைமுறைப் படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தனியார் பள்ளிகளை எல்லாம் அரசுடைமை யாக்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே கேட்ட போது, அவர்கள் ஊழல் மிகுந்த பள்ளிகளை எடுக்க முயற்சிப்போம், மற்ற பள்ளிகளைச் சேர்ப்பதற்கில்லை என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப் படையிலே ஊழல் மிகுந்த பள்ளிகளை அரசுடைமையாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்திய அரசியல் சட்டத்தின்படி மதம் மற்றும் மொழி சிறுபான்மையினருக்கு கல்வி நிலையங்களை நடத்தும் உரிமையுண்டு. எனவே அவர்கள் நடத்தும் பள்ளிகளை அரசு எடுத்து நடத்த அரசியல் சட்டம் இடம் தராது என்ற ஒரு வரம்பு அரசுக்கு இருக்கிறது. ஆகவேதான் அந்தக் கருத்தை நான் சொன்னேன். ஆனால் ஊழல் இருக்கிற பள்ளிகளைப் பொறுத்து, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை இந்த அரசு எடுக்கும். தேவையானால், அரசின் அதிகாரத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தனியார் பள்ளிகளிலே சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளிலே, அரசு எந்த ஆணை பிறப்பித்தாலும், அதைப் பின் பற்றுவதில்லை என்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும். அப படிப்பட்ட பள்ளிகளை—அரசு ஆணைகளைப் பின்பற்றாத பள்ளிகளை மட் டாவது மாற்ற, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்தப் பள்ளிகளை எடுக்கக்கூடி அதிகாரம் இல்லை என்கிற நிலைமை இருக்கிற காரணத்தாலேதான், நா அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை. நாம் போடுகிற ஆணைகளை அவர்க ஏற்று நடத்த, தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு வரு கிறது.



1979 பிப்ரவரி 15]

**திரு. ஆ. நல்லசிவன்:** கல்வித் துறையிலே மத மொழி மைனாரிட்டிகள் நடத்தும் தனியார் பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்ள என்ன தடை இருக்கிறது? அப்படி எடுத்துக் கொள்ள அரசு ஏன் தயாராக இல்லை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதைத்தான் சொன்னேன். தொழிற்சாலைகளை அரசுடைமையாக்குவதுபோல் இந்தப் பள்ளிகளை அரசுடைமையாக்குவது நியாயமல்ல என்று கருதுகிறேன். மேலும் ஆசிரியர் களுடைய பல்வேறு பிரச்சினைகளைப் பார்க்கும்போது, அரசுடைமை யாக்கும் கருத்து நியாயமாகிறது. பெற்றோர்கள் மாணவர்களின் நிலையைப் பார்க்கும்போது, அப்படிப்பட்ட தனியார் பள்ளிகளில் நிறைய போய்க் கொண்டிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களுக்கு முழுமையான அளவிற்கு பாதுகாப்புத் தர வேண்டும். அதை 6, 7 மாதங் களாகத் தர அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அதை வாதிட்டுப் பெறுவோமென்ற நம்பிக்கை இருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன்:** தேச உடைமையாக்குவது தவறு, தனியார் துறை யில் தொழில் நடத்துவது நல்லதென்று சொல்லுவது போல் தெரிகிறதே, அது ஏன்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சிறுபான்மையினருக்குக் கிடைக் கும் அந்த உரிமைகூட பெரும்பான்மை மக்களுக்குக் கிடைக்காமல் போகக் கூடாதென்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** சிறுபான்மையினர் நடத்துகிற பள்ளிகளிலே தவறு நடந்தால், அரசு அப்பள்ளிகளை எடுத்துக்கொள்வதற்கில்லை என்றாலும், அதைத் திருத்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. சிறுபான்மையினர் நடத்தும் தனியார் பள்ளி ஆசிரியர்களை, காரணமில்லாமல் விருப்பு வெறுப் பின் காரணமாக வெளியேற்றும்போது, கல்வித் துறை அதிகாரிகளுக்கு அவர் கள் மனுச் செய்தால், முறையீடு செய்தால், "நீங்கள் மைனாரிட்டி சமுதாயத் தினர் நடத்தும் பள்ளியில் வேலை பார்க்கிறீர்கள், நாங்கள் தலையிடமாட் டோம்" என்று சொல்வது அரசின் கொள்கைக்கு மாறுபட்டதாக இருக்கிறது. ஆசிரியர்களைப் பணியிலிருந்து வெளியேற்ற முன் அனுமதி வாங்க வேண்டு மென்று எம்.இ.ஆர். விதி இருக்கிறது. எனவே எல்லா அதிகாரிகளையும் அழைத்து, தவறு செய்கின்ற ஆசிரியர்களை அந்தப் பள்ளிகளிலிருந்து வெளி யேற்றும்போது, பிற பள்ளிகளில் ஆசிரியர்களை வெளியேற்றும் போது எடுக்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சிறுபான்மையினர் நிர்வாகத்தில் நடத்தப்படுகின்ற பள்ளியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அதே சமயத்திலே, மைனாரிட்டி அல்லாத நிர்வாகம் நடத்துகின்ற பள்ளிகளில் உள்ள மைனாரிட்டி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. இந்த முக்கியமான கருத்தை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்குகந்த சட்டத் திருத்தத்தை உறுதிபடுத்த, திட்டவட்டமாக மத்திய அரசுக்குப் பரிந்துரைத்து, அதே சமயத்தில் மேற்கொண்டு மைனாரிட்டி பள்ளிகள் தொடங்கினால் அனுமதி மறுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதற்கு அரசுக்கு உரிமையில்லை. ஆனால் எல்லா ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு கொடுப்பதற்கு என்றுதான் நாடாளுமன்றத்திலே ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

## *Transfer of Deputy Inspectors of Schools as Teachers.*

* 37 *Q.*—Thiru S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to transfer the Deputy Inspectors of Schools once in three years, as School Teachers to help the Teachers in the right method of teaching; and

(*b*) if so, the stage at which the matter now stands?

**பள்ளித் துணை ஆய்வாளர்களை, ஆசிரியர்களாக மாற்றல் செய்தல்.**

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஆசிரியர்களுக்குப் பாடபோதனையில் நன்முறையில் உதவ, பள்ளித் துணை ஆய்வாளர்களை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை பள்ளி ஆசிரியர்களாக மாற்றம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.



திரு. செ. முத்துசாமி : பள்ளித் துணை ஆய்வாளர் என்பவர்கள், ஆசிரியர் பணியிலே பழக்கப்பட்டவர்கள். அப்படி இருக்கும்போது, எல்லா ஆசிரியர்களும் பி.டி. பட்டம் பெற்றவர்கள் என்ற அளவில், அவர்களும் துணை ஆய்வாளர்களாக வரலாம். துணை ஆய்வாளர்களாக வந்துவிட்டவர்கள் மாற்றுப் பணிக்கு அனுப்பப்படாமல் இருப்பதால், புதிதாக ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு வாய்ப்பு சந்தர்ப்பம் இல்லாது போய்விடுகிறது. ஆகவே பள்ளித் துணை ஆய்வாளர்களை மூன்றாண்டுகளுக்கொரு முறை ஆசிரியர்களாகப் போடுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பள்ளியில் பட்டதாரி ஆசிரியர்களாக வந்து, அந்தப் பணிக்காலம் முடிந்த பிறகே பள்ளித் துணை ஆய்வாளராக நியமனம் செய்யப்படுகின்றார்கள். அதற்குப் பிறகு ஒரு சரகத்தில் 3 ஆண்டுகள் ஆய்வாளராக இருக்கின்றார்கள். அதன்பின் அவர்கள் வேறு சரகத்திற்கு மாற்றப்படுகிறார்கள்.

## *Purchase of Buildings by Tenants.*

* 38 *Q.*—Thiru E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether there is any proposal to amend the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960, so as to enable the tenants to purchase the buildings, in case the landlord tries to evict them for reasons other than default in payment of rent; and

(*b*) if so, the stage at which the matter now stands?

**வாடகைக்கு குடியிருப்போர் கட்டிடங்களை விலைக்கு வாங்குதல்.**

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வாடகை கொடுக்கத் தவறியது நீங்கலாக, பிற காரணங்களுக்காக நிலக்கிழார்கள், வாடகைக்குக் குடியிருப்போரை கட்டிடங்களிலிருந்து வெளியேற்ற முயற்சித்தால், வாடகைக்குக் குடியிருப்போர் அக்கட்டிடங்களை விலைக்கு வாங்குவதற்கு இயலும் வகையில், தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை, வாடகை கட்டுப்பாடு) சட்டத்தைத் திருத்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

## Blood Donation.

* 39 Q.—THIRU KU. Ma. BALASUBRAMANIAM (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether it is a fact that the relatives of the patients, who come for operation in Government Erskine Hospital, Madurai, are forced to donate blood;

(b) whether it was brought to the notice of the Government, that the poor patients who have no relatives, are very much affected thereby; and

(c) the action proposed to be taken by the Government thereon?

## இரத்த தானம்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கு (operation) வரும் நோயாளிகளின் உறவினர்கள், இரத்த தானம் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்பது உண்மையா?

(ஆ) இதனால் உறவினர்கள் இல்லாத ஏழை நோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) அதன் மீது அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: (அ) இல்லை.

(ஆ) இல்லை. இரத்த தானம் செய்யும் இரத்தத்தில் 85 சதவிகிதம் ஏழை நோயாளிகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் 'பிளட் பாங்க்' இருக்கிறது. அதிலிருந்து இரத்தம் கொடுப்பதற்கு ஒரு பாட்டிலுக்கு என்ன விலை வைத்து வாங்குகிறார்கள்? அப்படி ஒருவேளை ப்ளட் பாங்கில் இரத்தம் இல்லாமல் இருந்தால் உறவினர்களிடம் இரத்தம் பெறப்படுகிறதா அல்லது வேறு பாங்கிலிருந்து வாங்கி உபயோகிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் 8 வருடங்களாக இரத்த சேமிப்பு வங்கி செயல்பட்டு வருகிறது. அங்கே இரத்தம் மூன்று முறையில் சேகரிக்கப்படுகிறது. ஒன்று பணத்திற்கு இரத்தம் கொடுக்கின்றவர் மூலம் சேகரிப்பது. இன்னொன்று தாமாக முன் வந்து, வாலண்டரியாக 'ப்ளட் டோனேஷன்' தரப்படுகிறது. மூன்றாவது, நோயாளியின் உறவினர்கள் தாங்களாகவே இரத்தம் தருவது. யாரிடமிருந்து இரத்தம் எடுத்தாலும், அந்த இரத்தம் எடுப்பதற்குத் தகுதி என்ன என்பதைப் பார்த்து, ஆராய்ந்து, அதற்குப் பிறகு இரத்தம் எடுக்கிறார்கள். இந்த இரத்தம் யாருக்கும் விலைக்குத் தரப்படுவதில்லை. 80-லிருந்து 85 சதவிகிதம் வரையிலே அங்கே இருக்கின்ற பொதுப் பிரிவில் நோயாளிகளுக்குத் தரப்படுகிறது. மீதம் 15 சதவிகிதம் ஸ்பெஷல் வார்டிலே இருக்கக்கூடிய நோயாளிகளுக்குத் தரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. சந்தோஷம்: மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையிலே இரத்த சேமிப்பு பாங்கியில் குறைந்த பட்சம் இத்தனை லிட்டர் சேமிப்பு இருக்க வேண்டும் என்று விதி ஏதாவது இருக்கிறதா? அந்த லிமிட்டுக்குக் குறைந்து போனால், அதை உடனடியாக அந்த லிமிட்டுக்குக் கொண்டு வருவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? அந்த லிமிட்டுக்குக் குறைவாக அங்கு அடிக்கடி இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: சரியான நேரத்தில் நோயாளிகளுக்கு இரத்தம் செலுத்த வேண்டும் என்பதை உணர்ந்திருக்கின்ற காரணத்தால், எல்லாவிதமான இரத்தத்தையும் சேமித்து வைப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த இரத்தம் தேவைப்படும்போது இல்லையென்றால், அந்த நேரத்தில் கல்லூரி மாணவர்கள், மருத்துவர்கள் ஆகியோரிடமும் சேகரிக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்களிடமிருந்து நெருக்கடி நேரத்தில் இரத்தம் பெறப்படுகிறது. தாங்களாகவே வந்து இரத்தம் தருகின்றார்கள். தேவைப்பட்ட நேரத்தில் கிடைக்கின்ற காரணத்தால், இரத்தம் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: பணத்திற்கு இரத்தம் கொடுக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொடுக்கக்கூடிய இரத்தம் ஒரு தடவைக்கு எவ்வளவு இரத்தம் என்று கேட்கிறேன். ஒவ்வொரு தடவைக்கும் எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 3-30)

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** குறிப்பாக ஒரு நபருடைய உடலிலிருந்து எவ்வளவு இரத்தம் எடுக்க வேண்டுமென்று ஒரு குறிப்பிட்ட அளவை மருத்துவத் துறையில் வைத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு உட்பட்டு எடுக்கிறார்கள். இரத்தம் சேமிப்புக்கு என்று இரத்தத்தைக் கொடுக்கும்போது, பணத்திற்காக இன்றையதினம் கொடுப்பவர்களுடைய எண்ணிக்கை மிக மிகக் குறைவு. தாங்களாகவே முன் வந்து—வாலன்டரியாக கொடுக்கின்ற இரத்த சேமிப்பு இயக்கங்கள் நிறைய இயங்கிக்கொண்டிருக்கின்றன. இரத்த சேமிப்பு நிலையங்களுக்கு அவர்களாகவே வந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குக் கூட சென்னையிலே உள்ள ஓய்.எம்.சி.—இராணி மேரிக் கல்லூரி மாணவிகள் 60 பேர் இரத்த தானம் செய்திருக்கிறார்கள். இதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** ஒரு பாட்டில் இரத்தத்துக்கு என்ன விலை கொடுக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** அதுபற்றிய விவரம் இல்லை தனிக் கேள்வி போடவும்.

THIRU G. VASANTHA PAI: In view of the fact that this voluntarily donated blood collected in 1976 from the High Court and also from the Ethiraj College has become liced and served more as manure for the coconut plants in the King Institute, will the Government take precaution that these donors do not suffer from serum hepatitis as has happened in several instances in the High Court because the instruments which were used were not sterlised and were of a poor quality?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** பொதுவாக 3 வாரங்களுக்கு சேமிக்கின்ற இரத்தம் பாதுகாப்பாக குளிர்பதனப்படுத்தப்பட்ட பெட்டியில் வைக்கப்படுகிறது. ஆனால் இரத்தம் எந்த விதத்திலும் கெட்டு விடுவதில்லை. கெட்ட இரத்தமாக மாறி விடப் போகிற அளவுக்கு; சேகரிக்கின்ற இரத்தம் தங்கி விடுவது இல்லை. இரத்தம் சேமிக்கின்ற முறையில் எந்தவிதக் குறைபாடும் இன்றையதினம் இல்லை. 1976-77 ஆம் ஆண்டு அதுமாதிரி நடந்ததற்கான குறிப்பு ஏதும் இல்லை. தனிக் கேள்வி போடவும்.



THIRU G. VASANTHA PAI: Sir, may I request the Hon. Minister kindly to answer in English because I am not able to follow his Tamil?

THE HON. THIRU R. SOUNDARARAJAN: The hon. Member referred to a thing which happened in the year 1976. If the hon. Member puts a separate question, I can give the full details.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 'ஆன் ஏ பாயின்ட் ஆஃப் ஆர்டர்'. ஒரு உறுப்பினர் ஆங்கிலத்தில் பதில் சொல்ல வேண்டுமென்று ஒரு அமைச்சரைக் கட்டாயப்படுத்தலாமா? நம்முடைய சட்டமன்ற மேலவையில் உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் கேள்வி போடலாம். தமிழிலும் கேள்வி போடலாம். அமைச்சர்கள் பதில் சொல்லும்போது, தமிழில் பதில் சொல்லும்போது ஆங்கிலத்தில் தான் பதில் சொல்ல வேண்டுமென்று கட்டாயப்படுத்தலாம் என்று விதி ஏதாவது இருக்கிறதா?

THIRU A. R. DAMODARAN: It is only a request.

THIRU G. VASANTHA PAI: It was only a request.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினருக்குத் தமிழ் தெரியாது. அவர் ஆங்கிலத்தில் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டால், அது அனுமதிக்கப்பட வேண்டியது தான். சட்டமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, தமிழ் முதல் மொழி. அதற்கு அடுத்த இரண்டாவது மொழி ஆங்கிலம். அமைச்சர் ஆங்கிலத்தில் பதில் சொன்னதில் தவறு ஒன்றுமில்லை.

THIRU G. VASANTHA PAI: Thank you for the clarification.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆங்கிலம் தெரியாத அமைச்சராக இருந்தால், அந்த அமைச்சர் என்ன செய்வார்? இதுமாதிரி தாங்கள் ரூலிங் கொடுப்பது ஒரு முன் மாதிரியாக அமையும் என்பதால் தான் சொன்னேனேயல்லாமல், வேறொன்றுமல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பின்னால் அதுமாதிரி வந்தால் அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம்.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the fact that blood can be stored only for a limited time and since the modern practice is to have a blood plasma unit, may I know whether there is any proposal to have a blood plasma unit in the Erskine Hospital?

THE HON. THIRU R. SOUNDARARAJAN: There is now a proposal before the Government.

*Brain Fever.*

* 40 Q.—THIRU M. SANKARALINGAM;
Thiru K. RAMAMOORTHI;
THIRU Ku. Ma. BALASUBRAMANIAM (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) the number of persons who died due to brain fever, a new contagious disease, in 1977 and up to 15th May 1978, District-wise in Tamil Nadu; and

(b) the steps taken to prevent the disease?

**மூளைக் காய்ச்சல்.**

**திரு. ம. சங்கரலிங்கம், திரு. க. இராமமூர்த்தி, திரு. கு. மா பாலசுப்பிர மணியம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்):** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மூளைக் காய்ச்சல் என்ற புது வகை தொத்து நோயால், 1977 ஆம் ஆண்டிலும், 1978 ஆம் ஆண்டில் மே மாதம் 15 ஆம் நாள் வரையிலும் தமிழ் நாட்டில் மாவட்ட வாரியாக எத்தனை பேர் மாண்டனர்?

(இ) இந்நோய் வராமல் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** (அ) தமிழ் நாட்டில், மூளைக் காய்ச்சல் என்ற புதுவகைத் தொத்து நோயினால் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 7 பேர் 1977 ஆம் ஆண்டில் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் மாண்டனர்.

1978-ம் ஆண்டில் மே மாதம் முடிய இறந்தவர் எண்ணிக்கை மாவட்ட வாரி யாக பின்வருமாறு:—

தென்னாற்காடு மாவட்டம் 8.

இராமநாதபுரம் மாவட்டம் 1

திருநெல்வேலி மாவட்டம் 91.



திருச்சிராப்பள்ளி மாவட்டம் 2.

ஆகமொத்தம் 102 ஆகும்.

(இ) "ஜப்பானின் வைரஸ் மூளைக்காய்ச்சல்" என்னும் இந்நோய் ஒரு வகை சாக்கடை CULEX TRITAEORHYNCHUS. கொசுவின் மூலம் பரப்பப்படு கிறது. இந்நோய் கண்ட இடங்களிலும் மற்றும் உள்ள சுற்றுப்புற இடங்களில் உள்ள வீடுகளிலும் இக்கொசு தங்குமிடங்களாகிய மாட்டுத் தொழுவங்களிலும், பன்றி தொழுவங்களிலும், கொசு குறைப்பு நடவடிக்கையாக "பைரித்ரம்", பி.எச்.சி. மற்றும் டி.டி.டி, போன்ற பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளிக்கப் பட்டன. கொசு குறைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இந்த மூளைக் காய்ச்சல் நோய் திருநெல்வேலி மாவட்டத்தில் மக்களைப் பெருமளவு பாதித்திருந்தது. அந்தப் பகுதியில் மிகுதியாகக் கொசுக்கள் கிடையாது. நான் அறிந்த அளவில் பெருவாரியான பகுதிகள் மிகவும் சுத்தமான பகுதிகள். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன காரணம் மட்டும் தான் இந்நோய் பரவுவதற்குக் காரணமாக இருக்க முடியுமா? பிற காரணங்கள் ஏதாவது இருக்குமா என்று அரசு ஆராய்ந் ததா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** பூனா ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டி லிருந்து இங்கு வந்து ஆராய்ச்சிகளை நடத்தினார்கள். அங்கு இத்தகைய கொசுக்கள் அதிகமாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றைத் தடுப்பதற் கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டன.

**திரு. க. இராமமூர்த்தி:** வினா 1978 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் தேதி கேட்கப்பட்டதால், அதுவரையுள்ள தகவல் தான் கொடுக்கப்பட்டிருக் கிறது. அதற்குப் பிறகு இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்ற புள்ளிவிவரம் இருக்கிறதா? இந்த நோய் 1977 ஆம் ஆண்டில் திருநெல் வேலி மாவட்டத்தில் துவங்கியது. புது நோய். உடனடியாக அதைத் தடுத்து நிறுத்தி, கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். அந்த ஆண்டிலேயே கட்டுப் படுத்தப்படாததால் அடுத்த ஆண்டுக்கும் நோய் பரவியிருக்கிறது. 1979 ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாகவே இந்த நோயை வேகமாகக் கட்டுப்படுத்த அரசு என்ன மாதிரியான முனைப்பான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இந்த நோய்க்கு மூல காரணம் தண்ணீர் தேங்கிக் கிடக்கின்ற இடங்களிலிருந்து வளரும் ஒருவிதமான ஜப்பான் என்சபிலிட்டி வைரஸ் என்ற கொசுதான். இந்தக் கொசு முதலில் பறக்கின்ற பறவையினைத் தாக்குகின்றது. பிறகு வீடுகளில் வளரக் கூடிய மிருகங்களின் மூலமாக, அதாவது டொமஸ்டிக் அனிமல்ஸ் மூலமாகப் பரவுகிறது. பொதுவாக வீட்டில் வளரக்கூடிய பன்றி போன்ற பிராணிகள் மூலமாகப் பரவுகிறது. 5 வயது முதல் 15 வயது வரையுள்ள இளந்தளிர்களைத் தான் இது தாக்குகிறது. இது மனிதனிடமிருந்து மனிதனுக்குத் தொற்றும் வியாதி அல்ல. வேகமாக இது பரவுவதும் இல்லை. இதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை முனைப்பாக எடுத்ததன் காரணமாக, இந்த நோயின் செயல்திறன் பலவீனமடைந்து வருகிறது. இந்நோய் 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 22 பேருக்கு வந்தது. ஆனால் யாரும் அதனால் இறக்கவில்லை. நோயினால் தாக்கப்பட்டவர்கள் உடனே மருத்துவ மனைக்கு வந்தால், நல்லபடியாக சிகிச்சையளிக்க முடியும். அதற்குரிய அறிகுறி என்னவென்றால் முதலில் காய்ச்சல் வரும், பிறகு வலிப்பு வரும். காய்ச்சல் வந்த உடனேயே மருத்துவ மனைக்கு வந்தால், அதைத் தீர்ப்பதற்குரிய எல்லா மருத்துவ வசதிகளும் மருத்துவ மனைகளில் உள்ளன.

திரு. க. அறிவழகன்: இந்த நோய் முதலில் பறவைகளுக்கு வருகிறது என்றும், பிறகு பன்றிகளுக்கு வருகிறது என்றும், அதன் பிறகு கொசுக்கள் மூலமாகச் சிறார்களுக்கு வருகிறது என்றும் மருத்துவ நிபுணர்கள் கூறியிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த ஜப்பான் வைரஸ் மூளைக் காய்ச்சல் நோய் எந்தப் பகுதியிலே அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதியிலே இருக்கிற பன்றிகளை ஒழித்துக் கட்டுகிற முயற்சியை பீகார் மாநிலத்தில் செய்வதாகச் செய்தி வந்தது. அதைப்போல் இந்நோய் அதிகமாக இருக்கிற இடங்களில் உள்ள பன்றிகளைக் கொன்று விடுகிற ஒரு முயற்சி பற்றி ஆராயப்படுமா? இந்த மூளைக் காய்ச்சல் நோய் பீகாரிலும் தமிழ் நாட்டிலும் மட்டும் தான் வந்திருக்கிறது என்ற போதிலும், இந்த நோயின் பயங்கரத்தைக் கருதி மற்ற இடங்களில் இது பரவாமல் இருப்பதற்கு இன்னும் விரிவான முறையில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இந்நோய் திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகம் என்று உணர்ந்த காரணத்தால், அதைத் தீவிரமாகத் தடுக்கும் பொருட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு பறவைகள் சுமார் 100 பிடிக்கப்பட்டு அவற்றின் உடலிலிருந்து ரத்தம் எடுக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. பிறகு அந்தப் பறவைகள் உயிரோடு விடப்பட்டன. [illegible]





வளர்க்கக்கூடிய பன்றி, மாடு போன்றவைகள் மூலமாகவும் இந்நோய் வருகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் கொசுக்களை ஒழிப்பதற்கும் எல்லாவிதமான மருந்துத் தெளிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மூளைக் காய்ச்சல் நோய் பறவைகள் மூலமாகவும், பன்றிகள் மூலமாகவும் வருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் இந்த நோய் தமிழ் நாட்டில் அதிகமாக இறக்குமதியாகி இருக்கிறது. இது எந்த நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நோய், நம்முடைய நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்குச் செல்லும்போது, அந்நாட்டிலுள்ளவர்கள் போகின்றவர்களின் உடல் நிலையைப் பரிசோதனைசெய்து, ஹெல்த் சர்ட்டிபிகேட் வாங்குவது போன்று, வெளி நாடுகளிலிருந்து நம் நாட்டுக்கு வெளிநாட்டவர்கள் வரும்போது, மருத்துவ சோதனை செய்யப்பட்டு மருத்துவச் சான்றிதழ் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இது ஜப்பானிலுள்ள " ஜப்பான் என்சபிலிட்டி வைரஸ் " என்ற நோயைப் போன்ற நோய், அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நோய் அல்ல. அந்த நோயை ஒத்திருக்கிறது. அந்த நோய் தான் என்று உறுதி செய்யப்படவில்லை. இது மாதிரி வருகின்ற நோய்களையெல்லாம் " ஜப்பான் வைரஸ் மூளைக் காய்ச்சல் நோய் " என்று எடுத்துக் கொள்வதற்கும் இல்லை. காரணம் இது போன்ற தன்மையுடைய வேறு ஒரு சில நோய்கள் ஏற்கெனவே நம் நாட்டில் இருக்கின்றன. அத்தகைய நோய்களின் தன்மையும் கிட்டத்தட்ட இதைப்போலத்தான் இருக்கிறது. ஜப்பானிலுள்ள அந்த நோயைப் போல் இருக்கிறது என்பதால், இதற்கு இந்தப் பெயரை வைத்திருக்கிறார்கள். 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு கூட வட ஆற்காடு மாவட்டத்தில் இதுமாதிரி நோய் இருந்ததாக எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. மெடிக்கல் செக்கப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது கூட வெளி நாடுகளிலிருந்து நம்முடைய நாட்டுக்கு வருபவர்களுக்கு ஹெல்த் செக்கப் பண்ணுகிற முறை நம்முடைய நாட்டில் இருந்துகொண்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: அதிகம் மூளை உள்ளவர்களுக்கு இந்த நோய் பரவுகின்றதா அல்லது குறைந்த மூளை உள்ளவர்களுக்கு இந்த நோய் பரவுகிறதா? (சிரிப்பு).

[1979 பிப்ரவரி 15

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** 5 வயது முதல் 15 வயது வரையுள்ள இளம் தளிர்கள்தான் இந்நோயால் பாதிக்கப்படுகிறார்கள். மூளை உள்ளவர்களுக்கு இந்நோய் வருகிறதா அல்லது மூளை இல்லாதவர்களுக்கு இந்நோய் வருகிறதா என்ற ஆராய்ச்சி இன்னும் செய்யவில்லை. அத்தகைய ஆராய்ச்சி செய்யப்பட்டதற்குப் பின்னால், அதற்கான பதில் தர முடியும்.

(பிற்பகல் 3-40)

**திரு. க. இராமமூர்த்தி:** இந்த வியாதி முதலில் பறவைகள் மூலமாகவும், பின்னர் பன்றிகள் மூலமாகவும் மனிதர்கள் மத்தியில் பரவுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பறவைகள் என்று குறிப்பிடும்போது, கோழி, வாத்து என்ற இனங்களைக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் சொன்னதைப் போல், பன்றிகளை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதைப்போல் நாம் கோழிகளையும் இழக்க வேண்டிய நிலை வந்துவிடுமா ? அப்படிப்பட்ட நிலைமையை அமைச்சர் அவர்கள தடுத்து இந்த வியாதியை ஆரம்பக் கட்டத்திலேயே தவிர்த்திட வேறு நடவடிக்கைகளை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அதைப்போலவே மனிதர்களில் மூளை இல்லாத மனிதர்களுக்கு இந்த வியாதி வருகிறதா என்ற ஆராய்ச்சியை மேற்கொள்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைவிட மனிதர்களில் மூளை இல்லாதவர்கள் இருக்கிறார்களா என்ற ஆராய்ச்சியை மருத்துவத் துறை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன் (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** பன்றிகளைப் போல் பறவைகளையும் இழக்க வேண்டிய சூழ்நிலை வருமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அந்த நிலை வராத அளவுக்கு மருத்துவத் துறை நடவடிக்கை எடுத்து இந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மூளை இல்லாதவர்களுக்கு இந்த நோய் வருகிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியதன் காரணமாகத்தான் நான் அந்த பதிலைச் சொன்னேன். பொதுவாக இரத்தத்தில் இந்த நோய் பரவி, பிறகு 4, 5 நாட்களுக்குப் பின்னால், அது மூளையைப் பாதிக்கிறது. முதலிலே உடலை பாதித்து பிறகுதான் மூளையைப் பாதிக்கிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** இந்த நோய் தமிழகத்தை மட்டும்தான் பாதித்திருக்கிறதா ? வேறு மாநிலங்களையும் பாதித்திருக்கிறதா ? அப்படியென்றால், எந்தெந்த மாநிலங்களை இந்த நோய் தாக்கியிருக்கிறது



1979 பிப்ரவரி 15]

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதைப்போல், இந்த நோய் நம் நாட்டுக்குள் இம்போர்ட் (Import) செய்யப்பட்டதைப்போல் நாம் இந்த நோயை வேறுநாடு எதற்காவது எக்ஸ்போர்ட் செய்திருக்கிறோமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராஜன்:** இந்த நோய் பல்வேறு மாநிலங்களிலும் பரவியிருக்கிறது. என்னிடத்தில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் தான், குறிப்பு இருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் எந்தெந்த மாநிலங்களில் இந்த நோய் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது என்ற தகவலைச் சேகரித்துச் சொல்ல முடியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

திருச்சியில் உள்ள சிம்கோ மீட்டர் தொழிற்சாலையின் போக்கை எதிர்த்து சி.அய்.டி.யு. சங்கத் தலைவர் திரு. ரங்காஜன் உண்ணாவிரதம் இருப்பதையும், அது தொடர்பாக சட்டமன்றப் பேரவை உறுப்பினர் வீட்டில் கலவரம் நடத்தியதையும் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் திருச்சிராப்பள்ளியில் உள்ள சிம்கோ மீட்டர் தொழிற்சாலையின் போக்கை எதிர்த்து சி.அய்.டி.யு. சங்கத்தின் தலைவரான திரு. ரங்காஜன் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதையும் அது தொடர்பாக சட்டப்பேரவை உறுப்பினர் வீட்டில் கலவரம் நடத்தியதைப் பற்றியும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எந்த வகையிலே ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே சிம்கோ மீட்டர்ஸ் என்று சொல்லுகிற தொழிற்சாலையில் கடந்த 102 நாட்களுக்கு மேலாக 1,400 தொழிலாளர்களும், ஊழியர்களும் சில முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். அரசினுடைய கவனத்தையும், பொதுமக்களுடைய கவனத்தையும், ஈர்க்கிற வகையில் அங்குள்ள பெரும்பாலான தொழிலாளர்

களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் தொழிற் சங்கத் தலைவர் திரு. டி. கே. ரங்காராஜன் அவர்கள் 10 ஆம் தேதி தொடங்கி கடந்த 6 நாட்களாக உண்ணா விரதம் இருந்து வருகிறார்கள். இந்தக் கிளர்ச்சியை முன்னின்று நடத்தக் கூடிய தோழர் திரு. உமாநாத் அவர்கள் இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக எழுப்பி, சென்ற 3, 4 நாட்களாக இங்கே லேபர் கமிஷனர் முன்பாகப் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. அந்தப் பேச்சுவார்த்தையில் நிருவாகத்தின் சார்பாக ஒரு நியாயமான சமாசத்திற்கு வருவதற்கு மறுக்கிறார்கள். இறுதியான முடிவெடுக்கும் நிலையில் உள்ளவர்கள் ஸ்தலத்தில் இல்லை என்று சொல்லி, இதிலே காலதாமதம் செய்து வருகிறார்கள். அப்படி இருக்கும்போது, திருச்சியில் தோழர் திரு. உமாநாத் அவர்களுடைய வீட்டில் இரவு 1 மணிக்கு மேல் மூன்று சோடா பாட்டில்கள் வீசி கலவரம் செய்திருக்கிறார்கள். நல்ல வேளையாக சோடா பாட்டில்கள் விசப்பட்ட அறைக்குள் யாரும் படுத்திராத காரணத்தால், சேதம் இல்லாமல் போய்விட்டது. இந்தத் தாக்குதல் ஏதோ ஒரு சாதாரண சம்பவமில்லை. கடந்த 102 நாட்களில் திருச்சியில் குறிஞ்சி என்கிற ஹோட்டலில் சில ரவுடிகளை வைத்துக்கொண்டு, இந்த நிறுவனத்தின் மேனேஜ்மென்ட்டார் தொடர்ந்து இது போன்ற சம்பவங்களை நடத்தி வருகிறார்கள். இந்த மேனேஜ்மெண்ட்டுக்குப் பள்ளிப்பாளையத்தில் ஒரு பேப்பர் மில் இருக்கிறது. அந்தப் பேப்பர் மில்லின் பி. ஆர். ஓ. என்கிற அதிகாரியாக ஒரு மாஜி போலீஸ் அதிகாரி ஹானஸ்ட் குப்புசாமி என்பவர், மேலும் ஒரு கண்ட்ராக்டர் ராஜு என்பவரைச் சேர்த்துக்கொண்டு, குறிஞ்சி ஹோட்டலில் கடந்த 100 நாட்களுக்கு மேலாக தொடர்ந்து தங்கிக்கொண்டு இந்தச் சம்பவங்களை நடத்தி வருகிறார். வேலை நிறுத்தத் தொழிலாளர்களைத் தாக்கியதாக 5, 6 பேர்கள்மீது வழக்குகள்கூட பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களைத் தாக்க இரண்டு ஜீப்புகளில் ஆயுதங்களோடு கூடிய ரவுடிகளை அவர்கள் ஏற்பாடு செய்து, அந்த ரவுடிகள் செல்லும்போது, அங்கே இருக்கிற ஒரு டி.எஸ்.பி. பாண்டியன் என்பவர் அந்த ரவுடிகளைக் கைது செய்திருக்கிறார். ஆனால் எந்தக் காரணத்தாலோ—ஒரு வேளை முதலாளிகள் கொடுத்த தவறான ரிப்போர்ட்டின் காரணமாகவோ என்னவோ தெரியவில்லை—அவர் அந்த இடத்திலேயிருந்து வேறு இடத்திற்கு, நாங்குநேரிக்கு மாற்றப்பட்டிருக்கிறார். இது நல்ல காரியம் செய்தவருக்குக் கிடைத்த பரிசோ என்னவோ தெரியவில்லை. இந்த விதமாகக் கலவர நடவடிக்கையோடு தொழிலாளர்கள்





தலைவருடைய வீட்டிலும் தாக்குதல் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக திருச்சியில் ஒரு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மேற்கொண்டு கலவரம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது என்பதால், அரசு இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த அவசர நிகழ்வினைக் குறித்து விவாதிக்க இந்த அவையில் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 17-4-1978-ல் சிம்கோ மீட்டர் நிறுவனத்தில் இருந்த ஒரே தொழிற்சங்கமான அய். என். டி. யு. சி. சங்கம் தொழிற் தகராறு சட்டம் 12 (3) பிரிவின்கீழ் ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருக்கிறது. 12 (3)-
கீழ் ஒரு ஒப்பந்தம் செய்தால் அது எல்லாத் தொழிலாளர்களையும்
படுத்தும். எத்தனை ஆண்டுக் காலத்திற்கு கட்டுப்படுத்தும் என்
பட்டிருக்கிறதோ அத்தனை ஆண்டுகளுக்கும் அது கட்டுப்படுத்தும்.
பிரிவை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

(உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் தம் இருக்கையில் இருந்து

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : உட்காருங்கள். உட்
நான் முடிக்கவில்லையே, நான் பேசி முடித்த பிறகு நீங்கள் பிறகு
அதுவரை கொஞ்சம் உட்காருங்கள்.

(உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி இருக்கையிலிருந்து
தலைவரை நோக்கிப் பேச முனைந்தார்).

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இப்படி உறுப்பினரை அமைச்சர்
சொல்லலாமா . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் அமர
நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். உறுப்பினர் அவர்கள்
கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு முன் நானே கவனித்துக் கொ
கிறேன். உறுப்பினர் எழுந்தால், அவரைத் தடுக்க தலைவராகிய நான்
கிறேன். அமைச்சர் அவர்கள் தலைவரை நோக்கித்தான் பேச வேண்
உறுப்பினரோடு நேரடியாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அவசரப்பட வேண்டாம் என்று தான் உறுப்பினரைக் கேட்டுக்கொண்டேன். சிம்கோ மீட்டர் பிரச்சினையை சொல்லி அதற்குப் பிறகு திரு. உமாநாத் இல்லம் தாக்கப்பட்டிருக்கி பிரச்சினை பற்றிச் சொல்லுகிறேன். இதுவரை சிம்கோ மீட்டர் பற்றி 'extempore' ஆகச் சொன்னேன். பிறகு எழுதி வைத்திருப்பதையும் சொல்லுகிறேன். சட்டத்தைத் தெரிந்து கொள்வது எல்லோருக்கும் நல்லதுதானே.

"Where a settlement has been recorded under section 12 neither an industrial dispute can be raised in respect of the settlement nor can the matter covered by the settlement form the subject-matter of further cancialiation proceedings'

செக்ஷன் 12 (3)-ன்படி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால், அதைப்பற்றி மீண்டும் சமரசப் பேச்சு பேசவே கூடாது, சமரசப் பேச்சுவார்த்தை எதுவும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"A settlement arrived at before a Conciliation officer should not be invalidated on technical grounds. So, where a settlement was properly entered into and the workmen were represented by a trade union, it will not be open to another trade union to canvass the validity of the settlement on the ground that the workmen were not properly represented".

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இந்த அவை நன்கு நடக்க வேண்டும் என்ற அடிப்படையில் இதை நான் ஒரு வேண்டுகோளாகச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் எதைச் சொல்ல வேண்டு மென்றாலும், தலைவர் மூலமாகச் சொல்லுவதுதான் சிறந்ததாக இருக்கும். அதுதான் நல்ல மரபாகும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, நான் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். என்ன நடைபெற்றது என்பதை முதலில் நான் தெரிவித்து விடுகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, ஸ்டிரைக்குடைய நியாய அநியாயம் பற்றி இங்கே பேசத் தேவையில்லை. அமைச்சர் அவர்கள் அந்த விஷயத்திற்குள் போகக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். தாக்கப்பட்ட சம்பவத்தை நான் குறிப்பிட்டேன். அதைப் பற்றித்தான் அவர்கள் பதில்





சொல்ல வேண்டும். அதை விட்டு அமைச்சர் அவர்களுக்கு இருக்கிற ஞானத்தையெல்லாம் சபைக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று தங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் இதைத்தான் சொல்ல வேண்டும் என்று தலைவர் எதையும் சொல்ல முடியாது. பிரச்சினை யாக அவைக்கு வந்துவிட்ட பிறகு, எதைப்பற்றியும் அமைச்சர் குறிப்பிட லாமா, கூடாதா என்று தலைவர் சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அப்படி இருந்தும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக இரு சாராரையும் அழைத்து, பேச்சுவார்த்தையை நாங்கள் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக் கிறோம். இரு சாராரையும் அழைத்து உடனடியாக ஒரு ஒப்பந்தம் ஏற் படுத்துவது என்பது சுலபமான காரியமல்ல. உடனே செய்து விடக்கூடிய ல்ல. அவர்கள் கொஞ்சம் cool down ஆக வேண்டும். What we call, cooling off period". அது வந்தால்தான், ஒரு செட்டில்மெண்டுக்கு வர முடியும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே தான் இரு சாராரையும் அழைத்து, பேச்சு வார்த்தை நடத்தச் சொல்லி அது நடந்து கொண்டிருக்கிறது. Higher level, Joint Committee level, Commissioner level என்று பேச்சு வார்த்தை நடை பெற்றுக் கொண்டிருக் கிறது. நானும் பேசி வருகிறேன். இதைக் குறித்து சட்டப் பேரவையிலே திரு. ரமணி அவர்கள் கூட பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 3-50)

சற்று முன் திருச்சி காவல் துறை அதிகாரியிடமிருந்து, உமாநாத் வீடு க்கப்பட்டதை குறித்து . . . .

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** தலைவர் அவர்களே, 'கூலிங் டவுன்' ன்றால் என்னவென்று புரியவில்லை. 'கூலிங் டவுன்' என்றால் என்னவென்று மிழில் சொன்னால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இரண்டு பேர் சண்டை போட்டுக் கொண்டிருக்கும்போது உடனே சமாதானம் பண்ணக்கூடாது. முடியாது. இரண்டு பேரும் சண்டை போட்டு ஓய்ந்த பிறகு, அடங்கிய பிறகு, சமாதானம் பண்ணினால்தான், அவர்கள் நாம் சொல்லுவதைக் கேட்பார்கள். அவர்கள் அதிலே அடித்துக் கொண்டிருக்கும்போது, சமாதானம் பண்ணப் போனால்,

நமக்கும் ஒன்று விழும். ஆகவே 'கூலிங் பீரியட்' என்று வைத்திருக்கிறார்கள். எனவே அமெரிக்காவில் 90 நாட்களுக்குள் அவர்களுடைய தகராறுக்குள் அரசு தலையிடக்கூடாது என்று இருக்கிறது எனக் கூறப்படுகிறது.

உமாநாத் அவர்கள் வீடு தாக்கப்பட்டது குறித்து திருச்சி காவல் துறை அதிகாரியிடமிருந்து வந்த தகவல் இதுதான். இன்று 15-2-1979 அதிகாலை ஒரு மணியளவில் உமாநாத் அவர்கள் தொலைபேசியின் மூலம் திருச்சி மாவட்டக் காவல் துறை அதிகாரியிடம் பேசினார். திருச்சியில் உள்ள அவருடைய வீட்டில் யாரோ சோடா பாட்டிலை எரிந்தார் என்றும், பாதுகாப்புத் தேவை என்றும் கூறினார். உடனே காவல் துறை இன்ஸ்பெக்டர் தலைமையில் காவல் துறை அதிகாரியை அனுப்பி வைத்தார். அங்கு போய் பார்த்ததில், ஜன்னல் கம்பிக்கு அருகில் வீட்டுக்குள்ளே சோடா பாட்டிலின் உடைந்த பாகங்கள் கிடந்திருக்கின்றன. அது போக முழு சோடா பாட்டில், உடைக்கபடாதது, வீட்டுக்கு வெளியே கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இப்போது அங்கே பலத்த காவல் துறை பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஒரு ஏ. எஸ். ஐ., இரண்டு கான்ஸ்டேபிள்கள் இருக்கிறார்கள். மற்றபடி அமைதி நிலவுகிறது. செக்ஷன் 336, 426 ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடக்கின்ற காரணத்தால், இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 'சற்று முன் கிடைத்த தகவல்' என்று சொன்னார்கள். இதையேதான் காலையில் நிதியமைச்சர் அவர்கள் அசெம்பிளியில் சொன்னார்கள். அப்படியானால், இப்போது கிடைத்தது என்று எப்படிச் சொல்லுகிறார் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** 'சற்று முன்' என்ற வார்த்தையின் 'இம்ப்ளிகேஷன்ஸ்' தெரியாது. இப்போது கிடைத்தது என்றால், நான் 'மீன்' பண்ணுவது நினைப்பது 15-ஆம் தேதி. அதைத்தான் சற்று முன், திருச்சி மாவட்டக் காவல் துறை அதிகாரியிடமிருந்து வந்த தகவலை சற்று முன்னால் கொடுத்தேன்.



3. உரிமைப் பிரச்சினை.

முதலமைச்சர் மேலவையில் ஆற்றிய உரையை 'அண்ணா' நாளிதழில் தவறாகப் பிரசுரித்தது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரு. [illegible] அவர்கள் [illegible] விதி 157-ன் கீழ் 13—2—1979 அன்று மாண்புமிகு முதலமைச்சர் [illegible]யில் பேசியதாக 14—2—1979 தேதியிட்ட அண்ணா [illegible] செய்தி பற்றி ஒரு உரிமைப் பிரச்சினைக் [illegible]த்துள்ளார்.

[illegible]கையில் வெளியான செய்தி வருமாறு :

[illegible] கூட்டங்களில் மீண்டும் கலகம் செய்ய முயற்சிப்பதாக [illegible] நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கலைஞ[illegible]ம் அவர் கேட்காமல் போகவே—அவருக்குப் பாதுகாப்புக் [illegible]தாக செக்யூரிட்டி அதிகாரிகளை அனுப்பி வைத்தேன்".

[illegible] இது சம்பந்தமான 13—2—1979 நாளன்று சட்டமன்ற மேலவை [illegible] குறிப்பைப் படித்துப் பார்த்தேன். அதில் மாண்புமிகு [illegible]ச்சர் அவர்கள் கூறியிருப்பதாவது :

[illegible] மீண்டும் ஒரு முறை கலகம் விளைவிக்கக் கூடிய சூழ்நிலை வந்ததாக ப[illegible]கையில் செய்தி வந்தவுடனே நான் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர் [illegible] தொலைபேசியில் கூப்பிட்டுக் கேட்காமல் அதிகாரிகளுக்கு உடனடியாக உத்[illegible]விட்டு செக்யூரிட்டி என்ற பொறுப்புணர்வுள்ள அதிகாரியை அனுப்பி [illegible]னேன் என்பது இங்கே எதிர்க்கட்சியிலே உள்ள நண்பர்களுக்குத் தெரியும் [illegible] கருதுகிறேன்".

" ஆனால் மாண்புமிகு கலைஞர் அவர்கள் அதை வேண்டாம் என்று சொல்லிவிட்டு, குறிப்பாக அவர் சொன்ன பதில், எங்கள் கட்சிக்காரர்களைக் கலந்து கொண்டுதான் நாங்கள் பதில் சொல்ல வேண்டும். ஆகவே அவர்களை திருப்பியனுப்புகிறேன் "

என்று முதலமைச்சர் அவர்கள் பேசியதை நான் இங்கேயிருக்கிற தஸ்தாவேஜுகளிலிருந்து தெரிந்துகொண்டேன். முதலமைச்சர் தான் நேரிடையாகத் தொலைபேசியில் கருணாநிதி அவர்களுடன் தொடர்பு கொண்டதாகக் குறிப்பிடவில்லை. எனவே, பத்திரிகைச் செய்தி சட்டமன்ற நடவடிக்கையின்

உண்மையான பிரதிபலிப்பு இல்லை. இன்று 15-2-1979 அண்ணா நாளித ஒரு திருத்தமும் வெளியிடப்பட்டுள்ளது. எனவே இதில் முதலமைச்சர் உரிமைப் பிரச்சினை ஒன்றும் இல்லையென்று அறிவிக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, 15—2—1 அண்ணா பத்திரிகையில் திருத்தம் வெளிவந்ததாகச் சொல்கிறீர்கள். அ பத்திரிகை மாலைப் பத்திரிகை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் பார்த்துத்தான் சொல்லுகிறே அந்தப் பத்திரிகை இரண்டு மணிக்கே வந்திருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நீங்கள் சொன்னால் சரி.

**4. கவன ஈர்ப்பு.**

**கடலூர் நகராட்சியிலுள்ள மேல் நிலைப் பள்ளியில் பௌதிகம், வேதிய மற்றும் பொருளாதாரம் ஆகிய படிப்புகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்க படாததால் மாணவர்கள் படும் இன்னல்களைக் குறித்து.**

THIRU A. R. DAMODARAN: Sir, I wish to call the atte tion of the Hon. the Minister for Local Administration to matter of urgent public importance, namely, the fact that in th Higher Secondary School run by the Cuddalore Municipal Cou cil in Cuddalore, teachers have not been posted or appointed t January 20th 1979, to teach Physics, Chemistry and Economics i the first year of the course resulting in the boys receiving n instruction at all in these subjects causing enormous hardship t them.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இது தொடர்ப இங்கு வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இப்போது தற்காலிகமாக அந் பாடங்களைப் போதிக்கிற ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்க ஆனால் குறிப்பாக கல்வித் துறை ஆணையின்படி அந்தப் பாடத்திலே பட்டம் பெற்ற பி.டி. உதவியாளர்கள் அந்த உயர்நிலைப் பள்ளியிலேயே இரு பார்களேயானால் அவர்களைக் கொண்டே நடத்தலாம் என்ற நிலைமை யொட்டி, வேதியியல், பொருளாதாரம் ஆகிய பாடங்களைப் போதிக்க உ யாளர்கள் கிடைக்கவில்லை என்பதால்தான் வெளியிடங்களிலிருந்து ஆ களை நியமிக்க வேண்டுமென்று ஆணையாளர் நகராட்சி ஆய்வாளரை அ





கேட்டிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் நகராட்சி மேல்நிலைப் பள்ளி களில் இப்படிப்பட்ட காலி ஏற்படக்கூடிய இடங்களைக் கணக்கிட்டு வெளியே இருந்து ஆட்களை நியமிக்க இன்ஸ்பெக்டர் ஆப் முனிசிபாலிட்டீஸ் நடவ டிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். இதை விரிவுபடுத்துமாறு அவரை அரசு நிச்சயமாகக் கேட்டுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, may I have a clarification? The Hon. Minister said that local arrangements were made to teach Physics and Chemistry. May I know what is meant by the term 'local arrangements'?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அந்த உயர் நிலைப் பள்ளியிலே பொருளாதாரப் பாடத்தை நடத்த முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர் இருந்ததால், அவர் அந்தப் பாடத்தை நடத்துமாறு ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. மற்ற இரண்டு பாடங்களைப் பொறுத்த அளவில், ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. 'எந்த வகையில்' என்ற முழுமையான விவரம் என்னிடம் இல்லை. ஆனால் இப்போது மாணவர்களுக்குப் பாடம் போதிக்கப் பட்டு வருகிறது என்று அறிகிறேன். நிரந்தரமாக உரிய ஏற்பாட்டைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

THIRU A. R. DAMODARAN: I would like to bring to the notice of the Hon. Minister that of the 36 Municipal Schools, there are a number of Graduate teachers in Physics and Chemistry who are available in the existing Municipal Schools. So, I would request the Hon. Minister kindly to see that these teachers are first posted because Municipal service is considered as one service. I would also like him to investigate why for seven months the Local Administration Department has been sleeping over this matter. It is an educational matter and the students have to have coaching because they have to appear for their second semester examination in the month of March. I would request him to take early action. I have asked about only one school but I believe that students in more than ten schools are suffering from this plight. I would, therefore, request him to look into this matter.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற இந்த நல்ல யோசனையைக் கருத்திலே கொண்டு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

5. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆளுநர் [illegible] நன்றி தெரி[illegible] தீர்மானத்திற்கு [illegible] திருத்தங்கள் [illegible]கள். உறுப்பின[illegible] [illegible] முழுவ[illegible] [illegible] தேவையில்லை. [illegible] முன் [illegible] கிறேன் என்று [illegible].

**திரு. கா. லெட்சுமிகாந்தன்:** [illegible] திருத்தங்களைக் கடை[illegible] சேர்த்துக் கொள்ளவும் :—

1. சூரிய [illegible] பயன்ப[illegible] திட்டத்தை உருவாக்கி செயல்படுத்திட வேண்டும்.

2. கிராமப்புற [illegible] உள்ள இந்த[illegible] கிராமப்புற [illegible] கிராமப்புற [illegible] களுக்கு [illegible] படுத்திட வேண்[illegible]

3. [illegible] அவ[illegible] சுமார் 30,000 [illegible] வாய்ப்பளி[illegible] [illegible] ஆசிரியர்களுக்கு [illegible] செயல்ப[illegible] [illegible] வேண்டும்.

4. [illegible] வகுப்புகளை [illegible] ஆசிரியர்களின் [illegible] அரசு வெ[illegible] ஆணைகளை [illegible] அளிக்க நட[illegible] [illegible] வேண்டும்.

[illegible] கட்டுத் [illegible] (Medical Reimbursement) [illegible] ஆகற்தப் [illegible] அனைவருக்கும் ஒரே [illegible] ஆசிரியர்கள் [illegible] அரசு நட[illegible] [illegible] வேண்டும்.

[illegible] இந்திய இந்தி[illegible] [illegible] செய்ய [illegible]

[illegible] க்கியுள்ள [illegible] மாத[illegible] [illegible] வேண்[illegible]





8. 1—4—70-க்குப் பிறகு அரசுப்பள்ளிகளில் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்களின் நீண்ட காலப் பிரச்சனையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. பி.யூ. பட்டம் பெற்று இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றும் தொடக்க, நடுநிலை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்வு செய்ய அரசு ஒரு சிறப்பாணையை வெளியிட வேண்டும்.

10. தனியார் பள்ளிகள், உள்ளாட்சித்துறையின் கீழ் நடைபெறும் நகரவை மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அனைத்தையும் தமிழ் நாடு அரசே ஏற்று நடத்த வேண்டும், என்றும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. பி. ஆர். தாமஸ்:** நான் வழி மொழிகிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** பிற்கண்ட திருத்தங்களைக் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும் :—

1. கல்வியைப்பற்றி ஒரு வரி கூட குறிப்பிடாததையும்,

2. மூன்றாவது ஊதியக்குழு ஊதியத்தில் உள்ள முரண்பாடுகளை நீக்குவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடாததையும்,

3. தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றிய அறிவிப்பு இல்லாதது பற்றியும்,

4. வேலையற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றிய அறிவிப்பு இல்லாதது பற்றியும்,

5. ஆசிரியர்களிடையே உள்ள வேறுபாடுகளை நீண்ட நாட் குறைபாட்டைப் போக்குவதற்கான அறிவிப்பு இல்லாதது பற்றியும்,

6. இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாகச் செய்யும் அறிவிப்பு இல்லாதது பற்றியும்,

7. நடுநிலைப்பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் தமிழாசிரியர்கள் நியமனம் பற்றிய அறிவிப்பு இல்லாதது பற்றியும்.

8. அரசு ஊழியர்களுக்கு அளிப்பதுபோல ஓய்வு பெற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் பணவிடை அஞ்சல் மூலம் ஓய்வுத் தொகை அளிப்பது பற்றி அறிவிப்பு இல்லாதது பற்றியும்,

9. ஆசிரியர் குழந்தைகட்கு கல்விச் சலுகை அளிக்க ஊதிய வரம்பை நீக்குவதற்கான அவிப்பு இல்லாதது பற்றியும்,

10. ஆசிரியைகளுக்கு 12 வாரம் மகப்பேறு விடுப்பு அளிப்பதற்கான அறிவிப்பு இல்லாதது பற்றியும்,

11. 1—4—1970-க்குப் பின்னால் அரசு பள்ளிகளில் பணியில் சேர்ந்த இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர் போல பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணிவான்முறை செய்யாதது பற்றியும்,

12. தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தனிச் சம்பள விகிதம் அறிவிக்கப்படாதது குறித்தும்,

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நான் வழிமொழிகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கீழ்க்கண்ட திருத்தங்களைக் கடைசியில் சேர்த்துக்கொள்ளவும் :—

1. மூன்றாவது ஊதியக் குழு அறிக்கையின் மீது அரசு மேற்கொண்ட முடிவுகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளைத் தவிர்க்க வழிவகை கூறப் படாததும் ;

2. கல்லூரி ஆசிரியர்கள், தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின் கோரிக்கைகளின் மீது அரசு தந்த உறுதிமொழிகள் இதுகாறும் நிறைவேற்றப் படாததற்கு வருத்தம் தெரிவிக்கப்படாததும் ;

3. புயல்-வெள்ளப் பகுதி என அரசால் அறிவிக்கப்பட்ட சென்னை நகரம் தவிர்த்த ஏனைய பகுதி வாழ் ஆசிரியர்களுக்கு கட்டாய சேமிப்பு முழுத் தொகையையும் பட்டுவாடா செய்யப்படாததற்குக் காரணம் கூறப் படாததும்;

4. பெருவாரியான தனியார் பள்ளி ஆசிரியர்கட்கு விதிமுறைப்படி கட்டாய சேமிப்புத் தொகையின் 3-வது தவணை பட்டுவாடா செய்யப் படாததைக் கண்டிக்காததும் ;



5. ஓய்வுபெறும் அரசு ஊழியர்கட்கும் ஆசிரியர்கட்கும் ரூ. 10 ஆயிரம் அளிக்கும் திட்டத்தை ஊழியர் சங்கங்களின் வேண்டுகோள் அடிப்படை யில் ஏற்று அறிவிக்கப்படாததும்;

6. கிராமப்புற ஆசிரியர்கட்கு வீட்டுவாடகை, அனைத்து ஊழியர் கட்கும் மாதந்தோறும் மருத்துவப்படி ஆகியவை வழங்குவது பற்றி ஏதும் குறிப்பிடாததும்;

7. ஊட்டி அருகே மூன்று கிராமங்களில் மலைசாதியினருக்கும் அரிசனங்களுக்கும் ஏற்பட்ட மோதலில் சுமார் 500 வீடுகள் கொளுத்தப் பட்டதும், 11 பேர் உயிரோடு எரிக்கப்பட்டதும் பற்றி ஏதும் குறிப்பிடாததும்;

8. தஞ்சை மாவட்டத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக முறையே வரட்சி, புயல், வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கடன் ரத்து செய்வது பற்றி ஏதும் அறிவிக்கப்படாததும் ;

9. திருச்சி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை பள்ளி மாணவி வெடி விபத்துக்காளாகி வகுப்பறையிலேயே உயிரிழந்ததற்கு அனுதாபம் தெரிவிக்கா ததும், அம்மாணவியின் குடும்பத்திற்கு உதவி அளிக்கும் அறிவிப்பும் ஆளுநர் உரையில் குறிப்பிடாததும் வருந்தத்தக்கது.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** நான் வழிமொழிகிறேன்.

(பிற்பகல் 4-00)

**THIRU K. RAMAMOORTHI:** "Add the following at the end:

but regret to note:

(i) Government's attempt to dilute the concessions so far allowed and enjoyed by the Backward Communities;

(ii) the Promulgation of Ordinance on Prohibition without properly realising the implications of its extreme penal provisions; and

(iii) that it fails to mention about any progressive and socialistic measures or policies.

**திரு. ஆ. பாலசுப்பிரமணியம் :** நான் வழிமொழிகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** கீழ்க்கண்ட திருத்தங்களைக் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும் :—

1. காவல் துறையை தவறாகப் பயன்படுத்துவது பற்றியும் ;

2. தொழிலாளர் நலன்களுக்கு விரோதமாகவும், சட்ட முறைகளை மீறியும், செயல்படும் தொழிலாளர் நல இலாகாவின் தவறான போக்கினைப் பற்றியும் ;

3. மாநில நிர்வாகத்தில் சிலர் தவறான முறையில் தலையிட்டு நிர்வாகத்தின் செயல் திறனுக்கு ஊறு விளைவிப்பது பற்றியும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் வழிமொழிகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** கீழ்க்கண்ட திருத்தங்களைக் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும் :—

1. நில உச்சவரம்புச் சட்டத்திற்குப் புறம்பாக மறைத்து வைத்துள்ள பினாமி நிலங்களைக் கைப்பற்றுவது பற்றியும் ;

2. உச்சவரம்பு சட்டத்திலுள்ள விதிவிலக்குகளை ரத்து செய்வது பற்றியும் ;

3. கல்வி, தர்மம், கோவில், வேதபாடசாலை, கால்நடைப் பண்ணை என்ற எண்ணற்ற பெயரால் உருவாக்கப்பட்டுள்ள டிரஸ்டுகள் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டியது பற்றியும்;

4. விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 15 ஏக்கர் என்று உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டியது பற்றியும்;

5. திருத்தச் சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் உபரி நிலத்தை விவசாயத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டியது பற்றியும் ;

6. விவசாயத் தொழிலாளர்களுக்கு தினக்கூலி குறைந்த பட்சம் ரூபாய் 8 என்று நிர்ணயிக்க வேண்டியது பற்றியும் ;

7. குத்தகை விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேறாமல் பாதுகாக்க சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டியது பற்றியும் ;



8. குத்தகை விவசாயிக்கு 75 சத விகிதம்; நிலச்சுவாந்தாருக்கு 25 சத விகிதம் என்று நிர்ணயிக்க வேண்டியது பற்றியும் ;

9. விவசாயத்தில் ஆண்டுக்கு நிகர வருமானம் ரூபாய் 3,600 வரை அல்லது 5 ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயிகள் பட்டுள்ள (கூட்டுறவு, அரசு, தனியார்) கடன்கள் முழுவதையும் ரத்து செய்ய வேண்டியது பற்றியும் ;

10. ஆண்டுக்கு நிகர வருமானம் ரூபாய் 7,200 வரை அல்லது 10 ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவு, அரசு, தனியார் கடன்களுக்கான வட்டி முழுவதையும் ரத்து செய்ய வேண்டியது பற்றியும் ; அவர்கள் பட்டுள்ள கடன்களை நீண்ட காலத் தவணைகளில் கட்ட உதவிட வேண்டியது பற்றியும் ; விவசாய விளை பொருட்களுக்கு நியாய விலை கிடைக்க அரசு தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது பற்றியும்; அறுவடைக் காலத்தில் நெல் கொள்முதலை அரசு நடத்திட வேண்டியது பற்றியும், குவிண்டால் நெல்லுக்கு ரூபாய் 100 கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டியது பற்றியும்;

11. தமிழ்நாட்டில் சில முதலாளிகள் தொழிற் தகராறுகளை முறையாகத் தீர்க்க முன்வராமல், தாக்குதலிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்க முன்வராமல் காவல் துறையினர் முதலாளிகளுக்கு ஆதரவாகச் செயல்படும் போக்கை மாற்றுவது பற்றியும் ;

12. அரசு தொழிற் தகராறுகளை தொழிலாளர் துறை மூலம் பேசித் தீர்க்க முடியாதபடி செய்துவிட்டு, காவல்துறை மூலம் தொழிலாளர் இயக்கங்களையும், வேலை நிறுத்தங்களையும் ஒடுக்கும் நடவடிக்கையைக் கைவிட வேண்டியது பற்றியும் ;

13. பெரிய தொழில்களை தமிழ்நாட்டில் ஏற்படுத்தும் குறிப்பு இல்லாதது பற்றியும் ;

14. படித்தவர்களுக்கு வேலை உத்தரவாதம் அல்லது அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றியும், கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் வேலையில்லாக் காலங்களில் 'வேலைக்கு உணவுத் திட்டம்' செயல்படுத்துவது பற்றியும் ;

15. கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு உத்தரவாதமும், நேரடி சம்பளமும் வழங்க ஏற்பாடு செய்வது பற்றியும் ;

16. கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு வேலைப் பாதுகாப்பும் குறைந்த பட்ச சம்பளமும் கிடைக்க ஏற்பாடு செய்வது பற்றியும் ;

17. விலைவாசியைக் கட்டுப்படுத்த 500 பேருக்கு ஒன்று வீதம் ஏற்படுத்தப்படும் மலிவு விலைக்கடைகள் மூலம் அத்தியாவசியப் பண்டங்களைப் பொது மக்களுக்கு விநியோகிப்பது பற்றியும் ;

18. மதுவிலக்கை தீவிரமாக அமுல்படுத்துகிறோம் என்ற பெயரால், போலீசுக்கு மிதமிஞ்சிய அதிகாரங்களைக் கொடுத்து, தமிழ் நாட்டுச் சிறைகள் நிரம்பி வழியும்படியாக, பத்தாயிரக் கணக்கான ஏழைகளைச் சிறைபடுத்தியிருக்கும் கொள்கையை மாற்றுவது பற்றியும் ;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திரு. ப. மாணிக்கம் : நான் வழிமொழிகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : கீழ்க்கண்ட திருத்தத்தைக் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும்:

"தமிழக விவசாயிகளின் பொருளாதார அவல நிலையைப் போக்குவதற்கு வழி வகைகள் காண்பது குறித்து ஆளுநர் உரையில் எதும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது";

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : நான் வழிமொழிகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தமிழ்நாடு அரசின் மூன்றாவது ஊதியக் குழு அளித்த அறிக்கை வந்திருக்கிறது. இந்த அவை அதற்குப் பின்னால் கூடியிருக்கிறது. எனவே, அந்த அறிக்கையை மேலவை உறுப்பினர்களுக்கு அரசு தருமா? இந்த அவையிலே அந்த அறிக்கையை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நீங்கள் கேட்க வேண்டிய நேரம் கடந்தாகி விட்டது. கேள்வி கேட்க நேரமுண்டு.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தகவல்தான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நாளை கேளுங்கள்.



திரு. பி. ஆர். தாமன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரைமீது நடைபெறுகின்ற விவாதத்தில் சில கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டின் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. தட்டுப்பாடு இல்லாமல், மக்கள் வாங்கக்கூடிய அளவிற்கு உணவுப் பொருள்கள் கிடைப்பது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. ஆனால், நெல் விலை, விவசாயிகளுக்குப் பெரிதும் பாதிப்பு அளிப்பதாக இருக்கிறது. அது வேதனையாக இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் குவிண்டால் 68 ரூபாய் என்றிருந்த விலையை 75 ரூபாய் என்று உயர்த்தியதற்காக நான் பாராட்டு தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயப் பெருங்குடி மக்களின் நிலைமையைப் பொறுத்த அளவில், அவர்களுடைய உற்பத்திச் செலவு, விற்பனை விலைக்கு ஏற்றதாக இல்லை. இந்த நிலைமையில் மாநில அரசு சில நடவடிக்கைகளை எடுப்பது வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. வட மாநிலங்களில் கோதுமை உற்பத்திச் செலவை ஈடுகட்டும் அளவிலே மத்திய அரசு மானியம் வழங்குகிறது. அது போல் தமிழகத்தில் நெல் உற்பத்திச் செலவை மத்திய அரசு ஈடு கட்டாமலிருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. ஒருவேளை மாநில அரசு தகுந்த நடவடிக்கை எடுப்போமென்று கூறினாலும், அதைச் செயல்படுத்தி, பிற மாநிலங்களில் வழங்குவதுபோல், நெல்லுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில், மாநிலத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பெரும் எழுச்சி பெற்றிருக்கிறார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலத்திலே ஆங்காங்கே பல பகுதிகளிலே விவசாயப் பெருங்குடி மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி, கருத்தரங்குகள், பேரணி ஆகியவற்றை நடத்தி, பல தீர்மானங்களை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிலை உணர்ச்சிமிக்க நிலைதான். காரணம், இயற்கையாலே, வறட்சியால், புயலாலே, வெள்ளத்தாலே பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுறவுக் கடனைக் கட்ட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: On a point of order, Mr. Deputy Chairman. May I request the hon. Members who have business with the hon. Ministers kindly to transact it in the lobby so that there is no disturbance to the Member speaking?

MR. DEPUTY CHAIRMAN: I bring to the notice of the hon. Members and also the hon. Ministers that they may transact their business, if any, in the lobby without disturbance to the other hon. Members.

THIRU K. ARIVAZHAGAN: Will this apply to the hon. Member Thiru A. R. Damodaran also?

MR. DEPUTY CHAIRMAN: At that time, the hon. Member may raise a point of order.

திரு. பி. ஆர். தாமஸ்: விவசாயிகள், இயற்கையின் கோளாறுகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்கள் புயலாலும், வறட்சியாலும், பெரும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட காரணத்தாலே, விவசாயக் கடன்களை, கூட்டுறவுக் கடன்களைக் கட்ட முடியவில்லை. வரிகளைச் செலுத்த முடியவில்லை. குடும்பத்தைச் செம்மையாக நடத்த முடியவில்லை. இந்த நிலைமையை உணர்ந்து, அரசு சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால், விவசாயிகள் பல இடங்களில் போராட்டத்தில் ஈடுபடக்கூடிய நிலை ஏற்படும். அவர்கள் அரசுக்குத் தீர்மானங்கள் அனுப்பியிருக்கிறார்கள். மாநில அரசு சில முயற்சிகளை எடுத்து, அவர்கள் குறைகளைக் களைந்தாலும், மேலும் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்கள்தோறும் நியாய விலைக் கடைகள் ஆரம்பிக்கப்படுமென்று சொல்லி, ஏறத்தாழ 16,000 கடைகள் இலக்காகக் கொடுக்கப்பட்டன. கிராமங்களில் உள்ள மக்களின் தேவை என்ன, அவர்களுக்குத் தேவையான பொருள்களை அந்தக் கடை அவர்களுக்குக் கட்டுபடியாகும் விலைக்குக் கொடுக்கிறதா, தனியார் கடைகளுடன் போட்டியிட்டு பொருள்களை வழங்க முடியுமா என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். அரசாங்கக் கடைகளாக இருப்பதால், அங்கே இருக்கும் ஊழியர்கள் மக்களை வரவேற்று, அவர்களுக்கு வேண்டியவைகளைக் கேட்டு பணியாற்றுவார்களா என்பதைச் சிந்திக்க வேண்டும். காரணம் என்னவென்றால், நான் ஒரு சந்தர்ப்பத்திலே ஒரு வங்கியின் பொறுப்பில் இருந்தேன். அந்த வங்கியின் சார்பில் 11 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டன. கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பொருள்களை விற்பனை செய்யும்போது அந்த நியாய விலைக் கடைகள் நல்ல முறையில் செயல்பட்டன. நஷ்டம் ஏற்படவில்லை. ஆனால் அவை கட்டுப்பாட்டுக்கு உட்படாத பொருள்களை விற்றபோது, நிர்வாகச் செலவிற்குக்கூட கட்டுப்படியாகாத நிலை ஏற்பட்டது. இதையெல்லாம் கவனித்து, கண்காணிப்புக் குழுக்களை அமைத்து, அந்தக் கடைகளை சரிவர இயங்கச் செய்ய வேண்டும். பொதுவாக மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் தொகை, பல துறைகளிலே, பல மாநிலங்களிலே சரியாகச் செலவழிக்கப்படுவதில்லை, பல மாநிலங்கள் அந்தத் தொகையைச் சரியாகப் பயன்படுத்துவதில்லை என்பதைப் பார்க்கிறோம். அந்த அளவிலே தம்முடைய கூட்டுறவுத் துறை 3 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து பெற்று, கூட்டுறவுத் துறையிலே பயன்படுத்தி நியாய விலைக் கடைகளை



உறுதிப்படுத்தும் என்றால் நல்லது. ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகளில் நியாய விலைக் கடைகளை உறுதிப்படுத்திவிட்டால், அதாவது நிர்வாகத் திறன் வளர்க்கப்பட்டால், நிச்சயமாக வருங்காலத்தில் அந்தக் கடைகள் நல்ல முறையில் செயல்படுமென்று கருதுகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில், அது நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறது. ஒரு நாட்டில் எந்த அளவிற்கு மின்சாரம் உற்பத்தி ஆகிறதோ, அதைப் பொறுத்துத்தான், அந்த நாட்டின் உற்பத்தி, வேலை வாய்ப்பு, சிறு தொழில்கள், பெரும் தொழில்கள் வளர்ச்சி ஆகியவை இருக்க முடியும். சில திட்டங்கள் இங்கே முடிவடைந்திருக்கின்றன. உதாரணமாக சுருளியாறு, குந்தா திட்டம் முடிந்திருக்கிறது. அதே சமயத்தில் தூத்துக்குடி அனல் மின் திட்டம், மேட்டூர் அணைத் திட்டம், காடம்பாறைத் திட்டம் எல்லாம் திட்டப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்கள் எப்போது முடிவடையும் என்பது திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. இவைகளையெல்லாம் வேகமாக முடிக்க வேண்டும். உற்பத்தியாகின்ற மின்சாரம்—சிறு தொழில்களுக்கு, விவசாயிகளுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது—தட்டுப்பாடு இல்லாமல், வெட்டு இல்லாமல் வழங்கப்படும் நிலை வர வேண்டும். அனைத்துத் தொழில்களுக்கும் மின்சாரம் தடையின்றி வழங்கப்படுமென்ற குறிப்பு இல்லை. எனவே தடையின்றி அனைத்துத் தொழில்களுக்கும் மின்சாரம் வழங்கும் முறையில் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். அப்போதுதான் மாநிலத்தில் தொழில் வளர்ச்சி அதிகரிக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கூறிய ஒரு கருத்தை நான் வலியுறுத்துகிறேன். சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யலாமென்றும், அதை எவ்வாறு மக்களுக்கு வழங்கலாமென்பது குறித்து ஆய்வு செய்ய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை வேண்ட வேண்டுமென்றும் கோரினார்கள். அந்த அடிப்படையிலே அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளிலே உள்ள ஏழை மக்களுக்கு, வீடு கட்டிக்கொள்ள வசதியில்லாதவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தர வேண்டும். நில மனை வழங்குவதற்கான நல்ல திட்டங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதோடு ஊரமைப்புத் திட்டங்கள் வகுக்கப்படுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலே அந்த வீடுகளில் உரிமையாளர்களாக யார் இருப்பார்களென்று கேள்வி எழுகிறது. சில பகுதிகளில் நான் பார்த்திருக்கிறேன். முதலில் நிலமனைப் பட்டா வழங்குகிறார்கள். ஆனால் அந்தப் பட்டா வழங்குவதற்கு முன்னால் அந்தப் பகுதியிலுள்ள பணம் படைத்தவர்கள் அவர்களைக் கடனாளியாக்கி விடுகிறார்கள். அப்படிக் கடன் பட்டவர்கள் தொடர்ந்து வீடுகட்ட மானியம் பெற

ஏற்பாடு செய்கிறார்கள். அந்த மனைகளுக்கும், கட்டப்பட்ட வீடுகளுக்கும் உண்மையான உரிமையாளர்கள் ஏழைகளாக இல்லாமல் இருக்கும் நிலைமை பெருவாரியாக இருக்கிறது. எனவே, இந்த மனைகளை வழங்கும்போதும், வீடு கட்ட மானியம் கொடுக்கும்போதும், ஊரமைப்புத் திட்டத்தைச் சீரமைக்கும்போதும், நான் சொன்ன கருத்துக்களை மனதிற்கொண்டு, பாதிப்பு ஏற்படாமல் உண்மையான ஏழை மக்களை அந்த வீடுகளுக்கு உரிமையாக்குமளவிற்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லோருக்கும் வேலைவாய்ப்பு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. பல முறைகளின் மூலமாக, திட்டங்களின் மூலமாக, சிறு தொழில்கள், பெருந் தொழில்கள் மூலமாக, முசுக்கட்டை வளர்த்தல் போன்ற இத்தனை திட்டங்களின் மூலமாக நமது மாநிலத்திலுள்ள லட்சக்கணக்கான வேலையில்லாதவர்களுக்கு வேலை அளிக்கப்படுகிறது. படித்தவர்கள், படிக்காதவர்

(பிற்பகல் 4-10)

கள், ஏழை எளியவர்கள் அனைவரும் இந்தத் திட்டத்தில் வேலை வாய்ப்புப் பெறுவார்களா என்ற ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. சில மாநிலங்களில் படித்தவர்கள் வேலை வாய்ப்புத் திட்டம் என்று இருந்து வருகிறது. ஊதியம் வழ[illegible]குப் பட்டியலிலே வேலை இல்லாதவர்கள் பெயர்களையும் பதிவு செய்து அவர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் கொடுக்கவேண்டுமென்று நிபந்தனை வைத்திருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், ஒவ்வொரு மாநில அரசும் அந்தந்த மாநில மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது அந்த அரசின் கடமை என்று உணர்வதுதான். வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது மாநில அரசின் கடமை. அதைப் பெற்றுக்கொள்வது மக்களுடைய உரிமை என்று செயல்படுகிறார்கள். இந்த வேலை வாய்ப்புத் திட்டம் 'மக்களுக்கு வேலை வாய்ப்புக்கு உறுதி அளிக்கும். கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் படித்தவர்களுக்கு, படிக்காதவர்களுக்கு வேலை வாய்ப்பு என்ன என்பது பற்றிய விவரம் இல்லை. அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அகில இந்திய அடிப்படையிலே எடுத்துப் பார்த்தால், [illegible] கோடி மக்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். சமீபத்தில்கூட வேலை வாய்ப்புக்காக கோஷம் போட்டு போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இ[illegible] காரணமாக புரட்சியே உருவாகக்கூடிய சூழ்நிலை மாநிலத்திலேயே உருவாகிக் கொண்டிருக்கிறது. படித்தவர்களாக இருந்தாலும் படிக்காதவர்களாக இருந்தாலும் வேலைவாய்ப்புக்கு அரசு உறுதி கொடுக்காது விட்டால் மக்கள் போராட்டங்களைத் தீவிரப்படுத்தப்படக்கூடிய அபாயம் இருக்கிறது என்பதை நமது மாநில அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



சிவகாசியில் சமீபத்திலே ஒரு பயங்கரமான விபத்து ஏற்பட்டது. தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்த குழந்தைகள் வேலையிலிருந்து திரும்பும்போது மடிந்தார்கள். 33 குழந்தைகள் இறந்தார்கள். இந்தக் குழந்தைகள் எல்லாம், பள்ளியில் படித்துக்கொண்டிருக்கவேண்டியவர்கள், தொழிற்சாலைக்குச் சென்றிருக்கிறார்கள். காரணம் என்ன? மாநில அரசாக இருந்தாலும், மத்திய அரசாக இருந்தாலும், அரசியல் சட்டத்தில் 45-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி, அரசியல் அமைப்புச் சட்டம் அமுலான பிறகு மக்களுக்கு இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி அமுல் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். இன்று 30 ஆண்டுகள் முடிந்துவிட்டன. நாம் சுதந்திரம் வாங்கி, அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றி 30 ஆண்டுகள் நடந்து முடிந்து விட்டன. சமீபத்திலே பத்திரிகையிலே பார்த்தேன். கல்வி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆய்வின் அடிப்படையிலே சொல்லியிருக்கிறார்கள். அகில இந்திய அளவில் இலவசக் கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுல்படுத்துவதாக இருந்தால், ரூபாய் 1,300 கோடி செலவாகும் என்கிறார்கள். பண வசதியின்மை நமக்குத் தடையாக இருக்கிறது. அகில இந்திய அடிப்படையிலே, மாநில அளவிலே எடுத்துக்கொண்டாலும், பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பது 100-க்கு 80 பேர்கள்தான், 20 சதவிகிதத்தினர் பள்ளிக்கே வந்து சேர்வது இல்லை. 80 குழந்தைகளில் 40 குழந்தைகள் ஐந்தாவது வகுப்பிலேயே நின்று விடுகின்றார்கள். அடுத்து, 20 குழந்தைகள் உயர்நிலைப் பள்ளி வரை படித்துவிட்டு நின்று விடுகிறார்கள். அதில் 20 குழந்தைகள் உயர் கல்வி வரை வருகிறார்கள். அதிலும் 7 குழந்தைகள் தேர்வு பெறுகிறார்கள். அதிலும் 3 பிள்ளைகள் மேல் படிப்புக்குச் செல்கிறார்கள். நான் நினைக்கிறேன், ஒரு வேளை நம்முடைய மக்களுடைய கல்வி அறிவு பரவலாக இல்லாத காரணத்தினாலே, நம் மக்கள் கல்வியினுடைய பயனை உணர முடியாத நிலையில் இருக்கின்றார்கள் என்று. இந்தக் கல்வியினாலே அவர்களுக்கு ஏதாவது ஊதியம் கிடைக்குமா என்று எண்ணுகிறார்கள். நம் மாநில அரசிலேயும் ஏராளமான திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். மதிய உணவுத் திட்டம் வைத்திருக்கிறார்கள். இலவசக் கல்வித் திட்டம் வைத்திருக்கிறார்கள். இலவசச் சிகிச்சைத் திட்டம் எல்லாம் அளித்திருக்கிறார்கள். ஆனால் இத்தனை திட்டங்கள் சேர்ந்தும் கூட, 20 விழுக்காடு பள்ளிகளிலே சேரக் கூடிய நிலைமைகள் இல்லை. காரணம் கல்வியிலே நம்பிக்கையில்லாத நிலைமைகளில் இருக்கின்றன. படித்தவர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமைகள் இருக்கின்றன. கிராம மக்கள் அந்த உணர்வோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். கல்வித் துறை முன்னேற வேண்டும். அரசு நல்ல தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். அவைகள் அரசின் தயவுடன் நல்ல முறையிலே செயல்பட வேண்டும். நிச்சயமாகக் கல்வியின் மேல் மக்களுக்கு நம்பிக்கையற்ற நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அந்த நிலையை மாற்றி ஒரு நம்பிக்கையான நிலையை உரு

வாக்க வேண்டும். நிச்சயமாக அந்தக் கல்வியை மக்கள் பெறுவதனால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது என்ற நிலைமை உருவாக வேண்டும். இந்தக் கல்வித் திட்டத்தினால் இன்றைக்கு வேலை வாய்ப்பு உருவாகும். அதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். கல்வி நிலை இப்படி இருக்கும்போது, 20 சதவிகிதக் குழந்தைகள் பள்ளிக்கே வராத நிலை இருக்கிறது. இந்த ஆண்டு உலகக் குழந்தைகள் ஆண்டு என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு என்று சொல்லி, மாநில அரசுகளும் மத்திய அரசும் விழாக்கள் கொண்டாடுகின்றன. பிள்ளைகளுக்கு இனிப்புகள் கூட வழங்கினார்கள். அதைப் பாராட்டுகிறேன். மாநில அரசுகள் ஆரம்பப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். மாநிலத்தில் ஐந்து வயதிற்குக் குறைவாக உள்ள குழந்தைகளுக்கு என்ன செய்திருக்கிறார்கள்? 3 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு என்ன செய்திருக்கிறார்கள்? அவர்கள் பாதுகாப்புக்கு, சுகாதாரத்திற்கு என்ன செய்திருக்கிறார்கள்? அந்தக் குழந்தைகளுக்கு நாற்றங்கால் பள்ளிகள் திறந்திருக்கலாம். ஏன் நர்சரி பள்ளி, நாற்றங்கால் பள்ளி திறக்கக்கூடாது? ஏராளமான ஆரம்பப் பள்ளிகள் வைத்திருக்கிறோம். அவற்றோடு இந்த நாற்றங்கால் பள்ளிகளையும் இணைத்துக் கிட்டத்தட்ட 40 ஆயிரம் ஆசிரியர்களுக்கு, வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கலாம். 3 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கென்று நாற்றங்கால் தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கலாம். மத்திய அரசு ஏராளமான உதவி செய்திருக்கிறது. இப்படிப்பட்ட நாற்றங்கால் பள்ளிகளை நாம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த 20 விழுக்காடு பிள்ளைகளில் 10 விழுக்காடு பிள்ளைகளை நாற்றங்கால் பள்ளிகளிலும், எஞ்சிய 10 விழுக்காடு பிள்ளைகளை முதல் வகுப்பிலேயும் சேர்த்துக்கொள்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால், பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரியர்களுக்கு நல்ல பயன் கிடைக்கும், வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயமாக கல்வி அறிவு வளரவும் இது வழி வகுக்கும். பல பெற்றோர்கள் வேலைக்குச் சென்று விடுகிறார்கள். கிராமப்புறங்களிலே அவர்களுடைய குழந்தைகளை வைத்துப் பாதுகாப்பதற்கு இந்த நாற்றங்கால் பள்ளிகள் வசதியாக இருக்கும். ஒருவேளை சிறந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேண்டுமென்று சொன்னாலும் கூட, சிறந்த ஆசிரியர்களை அதற்காக என்று தேர்ந்தெடுத்து அனுப்பலாம். கிராமப் புறங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்து தரவேண்டும். வீட்டு வாடகைப் படி எல்லாம் கொடுத்தால் மட்டும் போதாது. நகரத்தில் வாழ்பவர்களுக்கு வீட்டு வாடகைப் படி கொடுப்பதுடன் நகர ஈட்டுப்படியும் கொடுக்கின்றார்கள். அது போல கிராமத்தில் உள்ள ஆசிரியர்களுக்கும் கிராம ஈட்டுப் படி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. க. அறிவழகன்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கிராம வீட்டு வாடகைப்படி கேட்கிறார்களா அல்லது வீடு கட்டிக் கொடுப்பது பற்றிக் கேட்கிறார்களா ?

**திரு. பி. ஆர். தாமஸ்:** கிராமத்தில் வாழ்பவர்களுக்கு வீட்டு வாடகைப் படி தரப்பட வேண்டுமென்பதோடு கூட, கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கு ரூரல் காம்பென்சேட்டரி அலவன்ஸ், சிட்டி காம்பென்சேட்டரி அலவன்ஸ் என்று கொடுக்கின்றார்களே அதுபோல, ரூரல் காம்பென்சேட்டரி அலவன்ஸ் அதாவது கிராம ஈட்டுப் படி என்று தரவேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூறுகிறேன். அப்படிச் செய்வதால்தான், நிச்சயமாக பள்ளிக்கு வராத 20 சதவிகிதம் பிள்ளைகளையும் பள்ளிக்கு வரச் செய்து அவர்களுக்கும் போதிக்க வாய்ப்பும் வசதியும் ஏற்படும்.

பணிப் பாதுகாப்புபற்றி இந்த மன்றத்திலே ஆசிரியர்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் பலமுறை சொல்லியிருக்கிறோம். அதைப்பற்றி அரசை வேண்டிக்கேட்டுக்கொண்டிருக்கிறோம். பொதுவாக அது சிறு பான்மையினர் பள்ளியாக இருந்தாலும் சரி, பெரும்பான்மையினர் பள்ளியாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இன்னும் ஏற்படவில்லை. பெரும்பான்மையினர் பள்ளி பற்றி அரசியல் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள்

"All minority communities whether based on language or religion shall have the right to establish and administer an institution of their choice". என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப் பாதுகாப்பு அரசியல் சட்டத்தில் எதற்கு வழங்கப்பட்டிருக்கிறது? I feel it is only for a clean administration and not for maladministration or mismanagement of the school. Taking this into account, the Government should immediately take action wherever there is maladministration or mismanagement.

அந்த அடிப்படையிலே எடுத்துக்கொண்டால், அரசியல் சட்டம் குறுக்கே வராது என்றுதான் கருதுகிறேன். தனியார் பள்ளிகளிலே, சிறுபான்மையினர் பள்ளிகளிலே, பெரும்பான்மையினர் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை என்று சொல்கின்றார்கள். அரசுப் பள்ளிகளிலும், அரசுக் கல்லூரிகளிலும் ஆசிரியர்களை 10 ஏ (1) விதியின்கீழ் டெம்பாரி சர்வீஸ் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 1—4—1978-லிருந்து அவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படை விதியின் காரணமாக அவர்களுக்கு பல தொல்லைகள் இருக்கின்றன

என்பதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்
கிறேன். புதுமுக வகுப்பைப் பொறுத்த வரையில், என்ன சொல்லப்படுகிறது
என்றால், இப்போது புதுக் கல்வித் திட்டத்தின் காரணமாக ஆசிரியர்களுக்கு
வேலைவாய்ப்பில் பாதிப்பு ஏற்படும், அப்படி பாதிப்பு ஏற்படும்போது, அவ
களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று சொல்கின்றார்கள். ஆனா
அவர்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படும் என்று திட்டவட்டமா

(பிற்பகல் 4-20)

அறிவிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியா
அதற்கு ஒரு அரசாணை வழங்கப்பட வேண்டும். எல்லாக் கல்லூரிகளிலு
பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும் வருகிற ஆண்டு பி.யு.சி. வகுப்புகள்
ஒழிக்கப்படும்போது, எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்ற ஏற்பா
வேண்டும். அவர்கள் தொடர்ந்து பணியிலே இருப்பார்கள், வேலையில்ல
விட்டாலும், தொடர்ந்து ஊதியம் பெறுவார்கள் என்ற வகையி
அரசாணைகள் வெளியிடப்பட வேண்டும். 1966 ஆம் ஆண்டிலே விருப்ப
பாடங்கள் ஒழிக்கப்பட்ட நோக்கில், பல ஆசிரியர்கள் பணி இழந்தபோது
அப்படி அரசாணைகள் போடப்பட்டன. அப்பொழுது நானும் அந்த
சலுகையைப் பெற்றேன். அந்தந்த மாவட்டக் கல்வி அதிகாரிகள் அங்குள்ள
வேலைப் பளுவைப் பார்த்து, அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்.
வேலைப்பளு இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர்களை எந்த
காரணத்தைக் கொண்டும் வீட்டுக்கு அனுப்பக்கூடாது,—சம்பளம் கொடுக்க
வேண்டும்,—மேலும் பக்கத்திலே உள்ள பள்ளிகளிலே ஆசிரியர்கள் ஏதாவது
தேவைப்பட்டால், அவர்களை அந்தப் பள்ளிகளுக்கு மாற்ற வேண்டும் என்ற
வகையில் அரசாணை வெளியிட்டிருந்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விரைவாக முடிக்க வேண்டும்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** அடுத்தபடியாக, பறக்கும் படை என்ற ஒன்று
இருக்கிறது. மதுரையில் இந்தப் பறக்கும் படை ஓய்வூதியம் வராமல் இருந்த
ஆசிரியர்களுக்கு, அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்று ஓய்வூதியத்
தைப் பெற்றுத் தந்திருக்கிறது. அதுபோல பல இடங்களில் அது நல்ல ப
காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. அரசாங்கத்தில் பணியாற்றுகின்ற
ஆசிரியர்களுக்குத்தான் இது நன்மைகளைச் செய்து வருகிறது. தனியார்
நிர்வாகத்தில் ஆசிரியர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால், நிர்வாகத்தினரிடம்
பேசி பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல தீர்வுகளைக் காண இந்தப் பறக்கும்
படை முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அதற்குரிய ஏற்பாட்டை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் செய்
அறிவிக்கப்படும் என்று நான் எதிர்பார்த்தேன்.



அடுத்தபடியாக, ஊதியக் குழுவில் உள்ள சில முரண்பாடுகளை ஆசிரியர்
களைப் பொறுத்தமட்டில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஊதியக் குழுவைப்
பொறுத்தவரை, 1—4—1978-லே புதிய ஊதிய விகிதம் அமுலுக்கு வந்திருக்
கிறது. ஓர் ஆண்டிலே 4 தினங்கள் ஊதிய உயர்வைக் கொடுக்கலாம் என்று
இருக்கிறது. ஆனால் 1—4—1978-க்குப் பின்னால் இயற்கையாக அவர்
களுக்கு ஊதிய உயர்வு வரக்கூடிய நாளில் புதிய ஊதிய விகிதத்திற்கு வர
விரும்பினால் ஊதிய உயர்வுச் சலுகையைக் கொடுக்க மறுக்கிறார்கள்; அடிப்
படையிலேயே 5 விழுக்காடு உயர்வு கிடைக்கும் உரிமையைத் தர மறுக்கி
றார்கள். அதை அவர்கள் இழக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். மூன்றாவது
ஊதியக் குழுவினுடைய அறிக்கை வந்த பிறகு, புதிய ஊதிய விகிதங்கள் வந்த
பிறகு, இந்த 5 விழுக்காடு அடிப்படை ஊதியத்தை உயர்த்திப் பெற்றுக்
கொள்ளலாம் என்று சொல்லப்படாததால், நாங்கள் இதைப் பின்பற்ற முடி
யாது என்று சொல்வது சரியல்ல. ஒவ்வொரு ஆண்டிலும் 4 நாட்களில்
அவர்கள் அதைப் பெறுவதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

அடுத்தபடியாக, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்
திருப்பது குறைவு என்று அனைத்து ஆசிரியர்களும் கூறுகிறார்கள். அது
மாதிரி இடைநிலை ஆசிரியர்களுக்கும் ஊதிய நிர்ணயம் செய்திருப்பது
சரியல்ல என்று கூறுகிறார்கள். அதையும் மாற்றியமைக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கின்றேன்.

கிராமப்புற ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி மற்றும் கிராம ஈட்டுப்
படி ஆகியவற்றை வழங்க உத்தரவிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர
வர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம், கிராமப்புறத்தில் இருக்கும்
ஆசிரியர்களுடைய குடும்பத்திலுள்ள ஒரு குழந்தைக்கு உடம்பு சரியில்லை
யென்றால், அவர்கள் நகரத்துக்கு வந்து டாக்டரிடம் காட்டித்தான் சிகிச்சை
பெறவேண்டியிருக்கிறது. இது மாதிரி பல காரணங்கள் இருக்கின்றன.
எனவேதான், நகரத்துக்கு வழங்குவது போல் கிராமத்தில் பணியாற்றுகின்ற
ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.டி. படித்திருந்தால்,
அவர்களுக்கு பி.டி. ஆசிரியர் ஊதியம் வழங்க அரசு உத்தரவிட
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பு நிலை ஊதியம் என்று மூன்றாவது ஊதியக் குழுவில் ஒரு சலுகை
கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே வாங்கி வருகிற தேர்வு நிலை
1—1—1971 ஆம் ஆண்டுதான் அமுலுக்கு வந்தது. அப்படியென்றால் 1981
ஆவது வருஷம் தான் ஆசிரியர்களுக்கு முதலாவது சிறப்பு ஊதியம், அதாவது
சிறப்பு நிலைப் பதவி கிடைக்கும். அந்த ஆசிரியர்கள் 25 ஆண்டு, 30 ஆண்டு

என்பதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். புதுமுக வகுப்பைப் பொறுத்த வரையில், என்ன சொல்லப்படுகிறது என்றால், இப்போது புதுக் கல்வித் திட்டத்தின் காரணமாக ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பில் பாதிப்பு ஏற்படும், அப்படி பாதிப்பு ஏற்படும்போது, அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று சொல்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படும் என்று திட்டவட்டமாக

(பிற்பகல் 4-20)

அறிவிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக அதற்கு ஒரு அரசாணை வழங்கப்பட வேண்டும். எல்லாக் கல்லூரிகளிலும் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும் வருகிற ஆண்டு பி.யு.சி. வகுப்புகள் ஒழிக்கப்படும்போது, எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்ற ஏற்பாடு வேண்டும். அவர்கள் தொடர்ந்து பணியிலே இருப்பார்கள், வேலையில்லாவிட்டாலும், தொடர்ந்து ஊதியம் பெறுவார்கள் என்ற வகையில் அரசாணைகள் வெளியிடப்பட வேண்டும். 1966 ஆம் ஆண்டிலே விருப்பப் பாடங்கள் ஒழிக்கப்பட்ட நோக்கில், பல ஆசிரியர்கள் பணி இழந்தபோது அப்படி அரசாணைகள் போடப்பட்டன. அப்பொழுது நானும் அந்தச் சலுகையைப் பெற்றேன். அந்தந்த மாவட்டக் கல்வி அதிகாரிகள் அங்குள்ள வேலைப் பளுவைப் பார்த்து, அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். வேலைப்பளு இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் வீட்டுக்கு அனுப்பக்கூடாது,—சம்பளம் கொடுக்க வேண்டும்,—மேலும் பக்கத்திலே உள்ள பள்ளிகளிலே ஆசிரியர்கள் ஏதாவது தேவைப்பட்டால், அவர்களை அந்தப் பள்ளிகளுக்கு மாற்ற வேண்டும் என்ற வகையில் அரசாணை வெளியிட்டிருந்தார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விரைவாக முடிக்க வேண்டும்.

திரு. பி. ஆர். தாமஸ்: அடுத்தபடியாக, பறக்கும் படை என்ற ஒன்று இருக்கிறது. மதுரையில் இந்தப் பறக்கும் படை ஓய்வூதியம் வராமல் இருந்த ஆசிரியர்களுக்கு, அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்று ஓய்வூதியத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது. அதுபோல பல இடங்களில் அது நல்ல பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. அரசாங்கத்தில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குத்தான் இது நன்மைகளைச் செய்து வருகிறது. தனியார் நிர்வாகத்தில் ஆசிரியர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால், நிர்வாகத்தினரிடம் பேசி பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல தீர்வுகளைக் காண இந்தப் பறக்கும் படை முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய ஏற்பாட்டை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் செய்து அறிவிக்கப்படும் என்று நான் எதிர்பார்த்தேன்.



அடுத்தபடியாக, ஊதியக் குழுவில் உள்ள சில முரண்பாடுகளை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஊதியக் குழுவைப் பொறுத்தவரை, 1—4—1978-லே புதிய ஊதிய விகிதம் அமுலுக்கு வந்திருக்கிறது. ஓர் ஆண்டிலே 4 தினங்கள் ஊதிய உயர்வைக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் 1—4—1978-க்குப் பின்னால் இயற்கையாக அவர்களுக்கு ஊதிய உயர்வு வரக்கூடிய நாளில் புதிய ஊதிய விகிதத்திற்கு வர விரும்பினால் ஊதிய உயர்வுச் சலுகையைக் கொடுக்க மறுக்கிறார்கள்; அடிப்படையிலேயே 5 விழுக்காடு உயர்வு கிடைக்கும் உரிமையைத் தர மறுக்கிறார்கள். அதை அவர்கள் இழக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். மூன்றாவது ஊதியக் குழுவினுடைய அறிக்கை வந்த பிறகு, புதிய ஊதிய விகிதங்கள் வந்த பிறகு, இந்த 5 விழுக்காடு அடிப்படை ஊதியத்தை உயர்த்திப் பெற்றுக் கொள்ளலாம் என்று சொல்லப்படாததால், நாங்கள் இதைப் பின்பற்ற முடியாது என்று சொல்வது சரியல்ல. ஒவ்வொரு ஆண்டிலும் 4 நாட்களில் அவர்கள் அதைப் பெறுவதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

அடுத்தபடியாக, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்திருப்பது குறைவு என்று அனைத்து ஆசிரியர்களும் கூறுகிறார்கள். அது மாதிரி இடைநிலை ஆசிரியர்களுக்கும் ஊதிய நிர்ணயம் செய்திருப்பது சரியல்ல என்று கூறுகிறார்கள். அதையும் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கிராமப்புற ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி மற்றும் கிராம ஈட்டுப் படி ஆகியவற்றை வழங்க உத்தரவிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம், கிராமப்புறத்தில் இருக்கும் ஆசிரியர்களுடைய குடும்பத்திலுள்ள ஒரு குழந்தைக்கு உடம்பு சரியில்லையென்றால், அவர்கள் நகரத்துக்கு வந்து டாக்டரிடம் காட்டித்தான் சிகிச்சை பெறவேண்டியிருக்கிறது. இது மாதிரி பல காரணங்கள் இருக்கின்றன. எனவேதான், நகரத்துக்கு வழங்குவது போல் கிராமத்தில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.டி. படித்திருந்தால், அவர்களுக்கு பி.டி. ஆசிரியர் ஊதியம் வழங்க அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பு நிலை ஊதியம் என்று மூன்றாவது ஊதியக் குழுவில் ஒரு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே வாங்கி வருகிற தேர்வு நிலை 1—1—1971 ஆம் ஆண்டுதான் அமுலுக்கு வந்தது. அப்படியென்றால் 1981 ஆவது வருஷம் தான் ஆசிரியர்களுக்கு முதலாவது சிறப்பு ஊதியம், அதாவது சிறப்பு நிலைப் பதவி கிடைக்கும். அந்த ஆசிரியர்கள் 25 ஆண்டு, 30 ஆண்டு

பணியாற்றிவிட்டு ஓய்வுபெறும் நிலையில் இருக்கிறார்கள். 20 ஆண்டு ஆசிரியர் பணியை முடித்திருந்தால், அவர்கள் எந்த நிலையிலே இருந்தா சிறப்பு நிலை ஊதியம் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமாறு கேட் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளிலே சிறப்புப்படி என்று தலைமை ஆசிரியர்களுக் மாதந்தோறும் 50 ரூபாயும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 25 ரூபாயும் வழ வருகிறார்கள். அதை மாற்றியமைக்க வேண்டுமென்று தலைமையாசிரி சங்கம் கோரிக்கை அனுப்பியிருக்கிறது. ஆகவே, 75 ரூபாய் தலைமை ஆசி யர்களுக்கும், 50 ரூபாய் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் என்று மாற்றியமைத் அரசாணை வெளியிட வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் மாநிலத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் ஓய்வூதியம் பெ வதில் பெரிதும் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். 1970 ஆம் ஆண்டு முன்னால் ஓய்வுபெற்றவர்களுக்கும் 1970-க்குப் பின்னால் ஓய்வுபெற்றவர்களு கும் ஓய்வூதியத்தில் பெரும் இடைவெளி இருக்கிறது. இதைப்பற்றி நேற்றை தினம் ஒரு மாண்புமிகு உறுப்பினர் கூட சொன்னார். 1—4—1978 அ முதல் புதிய ஓய்வூதியம் வழங்காமல் 1—10—1978 முதல் தான் வழங்குகிற கள். அதை 1—4—1978 லிருந்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொ கிறேன். குறைந்தபட்ச ஓய்வூதியம் 100 ரூபாய் என்று ஆக்கியிருக்கிறார்க அது மிகக் குறைவு. அதை 150 ரூபாயாக ஆக்க வேண்டும். அதே போ மற்ற பிரிவினருக்கு அகவிலைப்படி அளிக்கும்போது, அதை அப்படியே ஓய் பெற்றவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரை முடிக்கிறேன்.

* திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவரவர்கள் மேதகு ஆளுநர் உரை பற்றி என் கருத்தைச் சொல்ல வாய்ப்பளித்தமை என்னுடைய பணிவான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். செ ஆண்டு ஆளுநரின் உரை 20 பக்கம் இருந்தது. இந்த ஆண்டு 16 பக்கமா குறைந்திருப்பதைப் பார்த்தேன். புத்தகத்தின் அளவிலும் பக்கங்களி உள்ள குறைபாடு மாத்திரமல்ல, அதன் உள்ளே உள்ள கருத்தும் குறை தான் காணப்படுகிறது. அதைப் படித்துப் பார்த்தபோது, உருப்படிய நான் கண்டது மூன்றே மூன்று தான்.

முதலாவது நெல், அரிசிக்குக் கட்டுப்பாடு நீக்கியது, இரண்டாவது கோ மைக்கு அதிக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது போலவே அரிசிக்கும் விலை உயர்த்த தொடர்ந்து வலியுறுத்துவோம் என்பது, மூன்றாவது கோதுமை மானியம் தருவது போல் அரிசிக்கும் மானியம் தர வேண்டும் என்





தொடர்ந்து வற்புறுத்துவோம் என்பது. ஆக மொத்தத்தில் மூன்று செய்திகள் தான் என் கண்ணில் பட்டன. தொடர்ந்து வலியுறுத்தப்படும், வற்புறுத் தப்படும் என்பதிலிருந்தே, இது தீராத பிரச்சினை என்பதை அவர்களே உணர்ந்திருப்பதாக அறிந்துகொள்ள முடிகிறது. தொடர்ந்து நாம் கேட்டுக் கொண்டேயிருப்போம்; அவர்கள் மறுத்துக் கொண்டேயிருப்பார்கள். இன்னும் வற்புறுத்திக் கேட்டால் நீயும் கோதுமையே சாப்பிடு, குல்லா போடு என்று சொன்னாலும் சொல்லுவார்கள். அவ்வாறு செய்யாதவர்கள் தேச விரோதி என்று கூட சொல்வார்கள். சில விஷயங்களில் அப்படித் தான் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

1977 ஆம் ஆண்டிலே 16 ஆயிரம் நியாய விலைக் கடைகள் திறப்போம் என்று அறிவித்தார்கள். 2 ஆண்டுகளுக்குப் பிறகு 13,400 கிராமங்களுக்கும் கடை என்று இருக்கிறது. அதிலும் வெறும் 'கடை' என்றுதான் இருக் கிறது. அது நியாயவிலைக் கடைதானா என்று சொல்லப்படவில்லை. இன்னும் பாக்கி 2,600 கடைகள் 2 மாத காலத்திற்குள் திறக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். 13,400 கடைகள் திறக்க 2 வருடம் ஆகியிருக்கிறது. 2 மாதத்திற்குள் 2,600 கடைகளை எப்படித் திறக்கப் போகிறார்களோ ?

நேற்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூட இதைப் பற்றிக் குறிப்பிட்டு "நியாய விலைக் கடையா? அநியாய விலைக் கடையா?" என்று கேட்டார்கள். முக்கியமாக நாட்டிலே இன்றைக்கு உயர்ந்து வரும் விலைவாசி யைக் கட்டுப்படுத்த ஏதாவது செய்திருக்கிறார்களா, சிந்தித்திருக்கிறார்களா என்று தேடித் தேடிப் பார்த்தேன். அதிலும் ஏமாற்றமடைந்தேன். ஆசிரியர் களுக்கு தேர்வு நிலை, ஊதிய உயர்வு, கிராம ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி எல்லாம் வேண்டுமென்று மாண்புமிகு ஆசிரியர் தொகுதி உறுப்பினர்கள் கேட் டார்கள். அவர்கள் ஏன் அப்படிக் கேட்டார்கள் என்றால், எல்லாவற்றுக்கும் மூலகாரணம் விலைவாசி உயர்வு தான். விலைவாசி உயர்வதும் அதற்கு நிவாரணம் கேட்பதும், உடனே ஊதியத்தையும் படியையும் உயர்த்துவதால் தேவையை நிறைவு செய்ய முடியாது. விலைவாசியைக் கட்டுப்படுத்தச் சிந்திக்காத அரசாங்கம் விஷச் சக்கரத்தில் அகப்பட்டுக்கொள்கிற நிலையைத் தான் அடையப் போகிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

விலைவாசியைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று சிந்திக்கத் தெரியாத அரசாங்கம் திறமையான அரசாங்கம் என்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன். எமர்ஜென்சி நேரத்தில்கூட விலைவாசி ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்தச் சில பகுதிகளை மட்டும் நான் பாராட்டுகிறேன். கடைகளில் பொருள்களின் விலைப் பட்டியலை [illegible]

வேண்டுமென்றும் பொருள்களின் மேல், விலை லேபிள் ஒட்டவேண்டுமென்று
கடைக்காரர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இதை வியாபாரிகள்
இப்பொழுது கைவிட்டு விட்டார்கள்.

முன்பு ஓட்டல்களில் வரி இருந்தது. இப்பொழுது வரி இல்லை. முன்
2 இட்டிலியின் விலை 20 காசு. வரி 1 காசு. ஆக நாம் கொடுப்பது 21 காசு.
இப்பொழுது வரி இல்லை. ஆனால் இரண்டு இட்டிலிக்கு 25 காசு கொடுக்கி
றோம். ஆக மொத்தத்தில் 4 பைசா நமக்கு நஷ்டம். அதே மாதிரி முன்பு
வடை விலை 20 காசு. வரியைச் சேர்த்து 21 காசு கொடுப்போம். இப்
பொழுது வடையின் விலையை 25 காசு ஆக்கிவிட்டார்கள். ஆக நமக்கு
நஷ்டம் 4 காசு. இதையெல்லாம் தட்டிக் கேட்க நாதியில்லை. அநியாய
வியாபாரிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்ற அரசாங்கத்தால் முடியவில்லை.
இதைப்பற்றி 2 நாட்களுக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூட
இறைச்சி விலை கிலோ 20 ரூபாய் என்று சொன்னார்கள். மாண்புமிகு
அமைச்சரவர்களும் ஆடு வளர்ப்பதற்காகக் கூட உலக வங்கியிடமிருந்து உதவி
யெல்லாம் வருகிறதென்று சொன்னார்கள். ஆனால் இந்த இறைச்சி விலை
வாசியைக் கட்டுப்படுத்த மட்டும் இந்த அரசாங்கத்துக்கு அதிகாரம்
இல்லையா? இறைச்சியை முன்பு சேர் அளவில் வாங்கும்போது விலை
குறைவு. இப்பொழுது கிலோ அளவில் வாங்கும்போது, விலை அதிகமாகி
யிருக்கிறது. இதனால்தான் மீன் விலையும் மிக மிக அதிகமாக ஏறியிருக்
கிறது. அதைத் தொடர்ந்து காய்கறி விலையும் ஏறிக்கொண்டேயிருக்கிறது.
காய்கறிக்காரனைக் கேட்டால் "நான் என்ன சார் செய்ய முடியும்? கறி
விலையையும் மீன் விலையையும் பாருங்கள், நானும் வாரத்தில் ஒரு நாளாவது
மீனும் கறியும் வாங்கிச் சாப்பிட வேண்டாமா"? என்று கேட்கிறான். ஆக,

(பிற்பகல் 4-30)

ஒன்றில் விலை ஏறினால், மற்றொன்றில் அது தொடருகிறது. நாடு இனறக்
கூடிய அளவுக்கு இன்றையதினம் விலைகள் உயர்ந்துகொண்டிருக்கின்றன.
"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான்" என்பதைப்போல் தாராளமாகக்
கிடைத்துக் கொண்டிருந்த சிமிண்டுக்கு அரசாங்கத்திலே கட்டுப்பாடு கொண்டு
வந்தார்கள். ஏற்கெனவே மூட்டை ரூபாய் 20, 22க்குத் தாராளமாகக்
கிடைத்துக் கொண்டிருந்தது. எல்லோரும் வீடு கட்டினார்கள். கட்டிடத்
தொழிலாளர்களுக்கும் மர வேலை செய்பவர்களுக்கும் நல்ல வேலை
வாய்ப்புக் கிடைத்தது.

ஆனால் என்ன காரணத்திற்காகவோ சிமிண்ட் கட்டுப்பாட்டைக் கொண்டு
வந்தார்கள். இப்போது கண்ட்ரோல் விலை ரூபாய் 24.40. ஆனால்
அதை வாங்குவதற்கு பெர்மிட் கிடைப்பதில்லை. அதற்கான கோட்டா
கிடைப்பதில்லை. பெர்மிட்டுக்காக தாசில்தாரிடம் மனுச் செய்ய வேண்டும்



என்கிறார்கள். 20 மூட்டைக்கு மேல் சிமிண்ட் தேவைப்பட்டால், அதற்குத்
தனியாக எஞ்சினியரிடம் சான்றிதழ் தேவை என்கிறார்கள். இதையெல்லாம்
எதற்காகச் செய்தார்களோ தெரியாது. பிளாக் மார்க்கெட்டைத் திறந்து
விடுவதற்காகத்தான் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தார்களோ என்னவோ?
இப்போது பிளாக் மார்க்கெட்டில் ஒரு மூட்டை சிமிண்ட் 44 ரூபாய்க்குக்
கிடைக்கிறது, கண்ட்ரோல் வந்ததால் ஏற்பட்ட வினை இது!

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரு பக்கம் விலை ஏறிவிட்டது,
கட்டுப்பாடு கொண்டுவரவில்லை என்கிறார் உறுப்பினர். ஆனால் அடுத்த
மூச்சிலேயே கட்டுப்பாடு கொண்டுவந்தீர்கள், விலை ஏறிவிட்டது என்கிறார்.
அரசாங்கம் என்ன நிலை எடுக்க வேண்டுமென்று உறுப்பினர் விரும்புகிறார்?

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: கட்டுப்பாட்டை நீக்கியதை நான் வர
வேற்கிறேன். கட்டுப்பாடு கொண்டு வரப்படுவதாலே விலை ஏறுவதையும்,
பிளாக் மார்க்கெட் வளருவதையும்தான் நான் குறை சொல்லுகிறேன். கட்டுப்
பாடு கொண்டு வந்ததால், மூட்டை 24 ரூபாய்க்கு விற்ற சிமிண்ட் இன்றைக்கு
40 ரூபாய்க்கு விற்கிறதே என்றுதான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது
மட்டுமல்ல. சிமிண்ட் பெர்மிட் கோரி தாசில்தார் அலுவலகத்திற்குப்
போனால், அங்கே சீக்கிரத்தில் எதையும் சாதிக்க முடியாது என்பது உங்கள்
எல்லோருக்கும் தெரியும். அது எங்கேயும் உள்ள அரசு இயந்திரத்தின் நிலை.
எடை போடுகிற மிஷினில் 10 பைசா போட்டால்தான், நமது எடை கார்டை
வெளியே தள்ளும். அதைப்போல அங்கே 'சம்திங்' கொடுத்தால்தான், அந்தப்
பெர்மிட் கிடைக்கும். எஞ்சினியரிடம் சென்று சான்றிதழ் வாங்க வேண்டு
மென்றால், அவருக்கும் 'சம்திங்' கொடுக்க வேண்டும்.

இந்த அளவுக்கு மக்கள் அல்லலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது
மட்டுமல்ல, சிமிண்ட் வியாபாரிகள் ஏராளமான பணத்தைக் கொண்டு போய்
அதில் முடக்கி வைத்துக்கொண்டு 'பெர்மிட்' வரவில்லை, அதனால் சிமிண்ட்
விற்க முடியவில்லை என்று சிமிண்ட் மூட்டையை வைத்துக்கொண்டு கஷ்டப்
பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏராளமான பணத்தை அதிலே முதலீடு
செய்து அவர்களும் திண்டாடுகிறார்கள். சிமிண்ட் கிடைக்காத காரணத்தால்,
கட்டிட வேலை நடைபெறுவதில்லை. அதனால் கட்டிட வேலையாட்கள்
வேலையில்லாமல் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அடுத்து அந்தப் பட்டாளம்
இங்கே ஊர்வலம் வரப்போகிறது, என்றும் சொல்லிக் கொள்கிறேன். (ஒரு
குரல்: நீங்களே ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?) நான் ஏற்பா[illegible]
வில்லை. பஸ்ஸின் அதிகம் உப்பினால் ஒரு நாளைக்கு வெடிக்கத்தான் [illegible]
அதை முன்னெச்சரிக்கையாக நான் இங்கே தெரிவிக்[illegible]றேன். அவ்வ[illegible]

எனவே, இந்த விலையேற்றத்தைத் தடுக்க, லஞ்ச ஊழலைத் தடுக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க அரசாங்கம் உடனே நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 1978 ஆம் ஆண்டில் ஆளுநர் உரையிலே ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தது. வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நிறுவனம் (Overseas Employment Corporation) என்ற பெயரில் ஒரு அமைப்பு நிறுவப்படும் என்று அறிவித்தார்கள். அதைப்பற்றி எந்தவிதமான முயற்சியும் இதுவரை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அரசாங்கம் அதைச் செய்யவில்லை என்றாலும், தனிப்பட்ட வேறு சிலர் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். துபாய் நாட்டிற்கு அனுப்பி அங்கே வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறோம் என்று பலரிடம் ரூபாய் 6,000, 8,000 கமிஷன் கொடு என்று லஞ்சம் வாங்கி சிலருக்கு வேலையும் வாங்கிக் கொடுக்கிறார்கள், சிலரை ஏமாற்றவும் செய்கிறார்கள். சிலருடைய பாஸ்போர்ட்டையே எடுத்துக் கொண்டு, அதில் வேறு போட்டோவை ஒட்டி, அவைகளைக் கொண்டு (mis use) துஷ்பிரயோகம் செய்து வருகிறார்கள். அதைத் தடுக்கும் வகையில் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்து, 1978-ல் சொல்லப்பட்டது நினைவிருக்கும் என்று நம்புகிறேன். பிற மொழியில் உள்ள நல்ல நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படும்; அதைப் போலவே தமிழில் உள்ள நல்ல நூல்களை பிற மொழிகளில் ஆக்கப் போகிறோம் என்றார்கள். அது என்ன ஆனது என்றே தெரியவில்லை. அதைப் போலவே வறுமையில் வாடும் தமிழ்ப் புலவர்களுக்கு மாத உதவிப்பணம் கொடுக்கும் வகையில் ஏற்கெனவே 5 தமிழறிஞர்களுக்கு உதவிப் பணம் கொடுத்தார்கள். மேலும் 45 தமிழறிஞர்களுக்கும் விரைவில் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டது. அதைப்பற்றி இப்போதாவது குறிப்பிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஒன்றையும் காணோம்!

வறுமையில் வாடும் புலவர்கள் யார் யார் என்று அருமை நண்பர் புலவர் புலமைப்பித்தன் அவர்களுக்கே கூட நன்றாகத் தெரியும். திரு. நாரா. துரைக்கண்ணன், கவி கா.மு. ஷெரிப், கவிஞர் வாணம்பாடி, தே. ப. பெருமாள், வேலவன் ஆகியோரெல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாரும் எங்கள் கட்சிக்காரர்கள் அல்ல. ஆயினும் நல்ல தமிழ் அறிஞர்கள். திரு. தே. ப. பெருமாள், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையிடம் பாடம் பெற்றவர்கள். அவர்கள் பெயரெல்லாம் உதவிப் பணம் பெறுவோர் பட்டியலில் அறிவிக்கப்படும் என்று நான் எதிர்பார்த்தேன்.



ஆனால் என்ன காரணத்தாலோ அதைச் செய்யாமல், திடீரென்று ஒருநாள் ஆஸ்தானக் கவிஞர் நியமனம் பற்றிய செய்தி வந்தது. அப்படி நியமிக்கப்பட்ட ஆஸ்தானக் கவிஞர் யாரென்றால், எந்தப் பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் ஆளும் கட்சிக்காரர்கள் தெய்வமாகச் சொல்லிக்கொள்ளுகிறார்களோ, அவர்களையே மதிக்கக் கொள்ளாதவர். பெரியார், அண்ணா ஆகியோர்களுக்கு மதிப்புக் கொடுக்காதவர். அவர்தான் இன்றைய ஆஸ்தானக் கவிஞர். அதனையடுத்து சமீபத்தில் 8 ஆஸ்தானக் கலைஞர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மதுரை சோமு, பாலமுரளி கிருஷ்ணா, லால்குடி ஜெயராமன், முருகபூபதி, கே. பி. சிவானந்தம், நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன், வலங்கைமான் சண்முகசுந்தரம் மற்றும் திருமதி வைஜயந்திமாலா ஆகியோர் அந்த நாட்டுக் கலைஞர்கள். இவர்களுக்குச் சாமான்யமான உதவியல்ல, மாதம் ஆயிரம் ரூபாய் உதவிப் பணம்! அதுவும் 5 வருஷத்திற்கு! சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட அவ்வளவு கிடையாது (சிரிப்பு).

அதே நாளில் வேறொரு செய்தியும் வருகிறது. பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்களுக்கும் திரு. பெ. தூரன் அவர்களுக்கும் வெறும் பட்டயம். இது எப்படி இருக்கிறது என்றால், பசியால் வாடுகிறவர்களுக்கு ஜீரண சக்தியின் லேகியம் மருந்து கொடுத்துவிட்டு, அஜீரணத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு வான்கோழி புலவை விருந்து போடுவது போல் இருக்கிறது! மருந்து கொடுக்க வேண்டியவர்களுக்கு விருந்தைக் கொடுத்து, விருந்து கொடுக்க வேண்டியவர்களுக்கு மருந்து கொடுத்திருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் அரசாங்க உதவிப்பணம் தருவது யாருக்கு? மது விலக்கு அமுலில் இருப்பதால், அதன் பேரை நான் சொல்ல விரும்பவில்லை. அதை ஞாபகமாகச் சொல்ல முயலுகிறேன்! அதில் கலப்பதற்கு சோடா செலவு செய்கிறவர்களுக்கு, அரசு அவர்களுக்கு மாத்திரம் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறதே! எதற்காக இந்த ஆயிரம் ரூபாய்? மேற்கொண்டு ஆயிரம் ரூபாய் சிக்கன் சிக்ஸ்டிபைவ் (Chicken Sixty-five) வாங்கவா அல்லது முந்திரிப் பருப்பு (Cashew-nut) வறுவல் வாங்கி பக்கவாத்தியம் வைத்துக் கொள்ளவா? எதற்காக இந்த ஆயிரம் ரூபாய் தருகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இன்டிமேட் சென்ட் வாங்கவே ஆயிரம் ரூபாய் செலவு செய்கிறவர்களுக்கு, மேலும் ஆயிரம் உதவிப் பணமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, அவையில் இல்லாதவர்களைப் பற்றி இப்படிப் பேசுவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: நான் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. அரசு செய்திருக்கிற காரியத்தைப்பற்றிப் பேசுகிறேன். அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசவைக் கவிஞர் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அவர் இங்கே அவையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலையில் உறுப்பினர் அவர்கள் இவ்வாறு பேசுவது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: நான் கவர்னர் உரையின்மீது பேசிக்கொண்டிருக்கிறேன். ஆகையால் தமிழகக் கலைஞர்களுக்கு உதவி செய்திருப்பதைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அது தவறு என்று எப்படிச் சொல்ல முடியும்?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் உறுப்பினர் பேச வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: இன்டிமேட் செண்ட் வாங்குவதற்கே மாதம் ஆயிரம் ரூபாய் செலவு செய்கிறவர்களுக்கு எதற்காக அரசு ஆயிரம் ரூபாய் தர வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. டிரை கிளீனிங் (Dry-Cleaning) -க்கு மட்டும் ரூபாய் ஆயிரம் செலவு செய்கிறவர்களுக்கு அரசாங்க உதவிப் பணம் ஆயிரம் ரூபாய் என்றால், லிப்ஸ்டிக் வாங்கவா, யுடெக்லோன் வாங்கவா? அவர்களுக்கு எதற்காக இந்த உதவிப் பணம் கொடுக்க வேண்டும்? இந்தப் பணம் எப்படி பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்று நேற்றையதினம் பேசிய உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் அழகாகக் குறிப்பிட்டார்கள். ஏழை எளியவர்களிடத்திலே, விவசாயிகளிடத்திலே வரி மூலம் வசூலிக்கிற பணம் இது. அவர்கள் வரிப்பணம் பாக்கி கொடுக்கவில்லை என்றால், அவர்களுடைய அண்டா குண்டாவையெல்லாம் எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறார்கள். குழியை விட்டுவிட்டு குடைகல்லைக் கொண்டு வருகிறார்கள். இப்படியெல்லாம் வசூல் செய்யப்படும் பணத்தை இவர்களுக்குக் கொடுப்பது என்றால், நியாயம் வேண்டாமா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பொதுவாக அரசாங்கத்தினுடைய திட்டங்களைக் குறை சொல்லலாம். அதில் தவறு இல்லை. அவ்வாறு சொல்லும்போது, யாரையும், யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.



*மாண்புமிகு திரு. க. இராசா முகமது: ஒரு நாட்டியக் கலைஞருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற வகையில்தான் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட நிலையில் கொடுக்கப்படும் உதவிப்பணம் லிப்ஸ்டிக்குக் கொடுக்கப்படுகிறதா என்று உறுப்பினர் கேட்கிறார். லிப்ஸ்டிக் போன்றவற்றைப் பெண்கள்தான் வாங்குவார்கள். எனவே ஒருவரை மனதில் கொண்டு பேசுவது முறையில்லை. உறுப்பினர் அவர்களுக்கே அந்தக் கலை தெரியும் என்றால், அதைக்கூட அரசு பரிசீலிக்கும். (சிரிப்பு).

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அரசாங்கத்தின் கொள்கையைப் பற்றி உறுப்பினர்கள் இங்கே பேசலாம். ஆனால் பேசுவது கண்ணியமாகவும் அதே நேரத்தில் யாருடைய மனதையும் புண்படுத்தாமலும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அரசாங்க அறிவிப்பில் இருக்கிற பட்டியலைப்பற்றி, பெயரைச் சொல்லி விமர்சிக்காவிட்டாலும், பொதுவாக டிசர்விங் (deserving) ஆட்களைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டுவது தவறல்ல என்று நான் நினைக்கிறேன். அதை குறையாகக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: பொதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டியக் கலைஞரைவிட இன்னொருவர் மிகச் சிறப்பாகப் பயின்றிருக்கிறார் என்று சொல்வது வேறு. ஆனால் இந்தப் பணம் எதற்காக என்ற அடிப்படையில் அது லிப்ஸ்டிக் வாங்கவா என்று நகைச்சுவையாகச் சொல்வதுபோல் சொன்னாலும், அது தவறு. இந்த உதவி பெறுகிறவர்கள் கலைஞர்கள் என்பதை நாம் எண்ணிப் பார்த்தால், அவர்களுக்கு இது எவ்வளவு இழுக்கு என்பதை உணர முடியும். இவரைவிட சிறந்த கலைஞர்கள் இருக்கிறார்கள், அவர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டினால், அடுத்தமுறை அறிவிக்கும்போது, ஆலோசிக்க வாய்ப்பு உண்டு. அவர்களுடைய பெயரைக் கூட விமர்சிப்பது, உதவி பெற்றவர்களைப்பற்றி அதை விட்டுவிட்டு, அதுவும் உள்நோக்கத்தோடு விமர்சிப்பது தவறு என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, அந்தக் கலைஞர்களுக்குக் கொடுத்தது தவறு, வேறு கலைஞர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. வசதி படைத்த எந்தக் கலைஞர்களுக்கும், ஏழை மக்களிடமிருந்து வசூலிக்கும் வரிப் பணத்தைத் தூக்கிக் கொடுப்பது

தவறு என்றுதான் சொல்கிறேன். வள்ளுவர் கூறுகிறார், "உதவி வ... தன்று உதவி, உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து" என் வள்ளுவருக்கு விழா எடுக்கிற ஆட்சியாளருக்கு இந்தக் குறள் தெரியாதா?

**புலவர் புலமைப்பித்தன் :** தலைவர் அவர்களே, இந்தத் திருக்கு... உறுப்பி... இதற்கு மேற்கோளாகப் பயன்படுமா என்பதை மாண்புமிகு ... விளக்கினால், நலமாக இருக்கும்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** பயன்படும் என்றுதான் சொல்கிறே... கொஞ்சம் பொறுமையாக இருந்தால், விளக்குகிறேன். உதவி என்பது அத... அளவைப் பொறுத்ததல்ல, உதவி செய்யப் பெற்றவரின் தன்மை, பயனை பொறுத்தது என்று தான் பொருள். இன்ப நிறைப்போய் உள்ளவர்களு... அறு சுவை விருந்து போடுவது உதவியாகாது. பசியால் உயிருக்கு... போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு, ஒரு கிண்ணம் கூழ் கொடுத்தால் க... அது அவர்களுடைய உயிரைக் காப்பாற்ற முடியும். அதுதான் இந்தக் கு... வினுடைய கருப்பொருளாகும். வள்ளுவருடைய இந்தக் குறளுக்கேற்ப, அ... பண உதவி கொடுப்பதிலே கொஞ்சம் கட்டுப்பாடு ... மேற்கொ... வேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, கலைஞர்களுக்கு உ... வழங்கப்பட்ட அந்த விழாவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ... விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். மத்திய ஆட்சியில் பத்மபூஷண் போ... மத்... பட்டங்களைக் கொடுத்து அவர்களைச் சிறப்பித்திருக்கிறார்கள். அரசு சிறப்பித்தவர்களுக்கு நாமும், தமிழ் நாட்டில் வாழக்கூடிய கலை... களுக்கு, ஏன் சிறப்பளிக்கக் கூடாது என்ற முறையில் சிறப்பித்திருக்கிறார்... திரு. அப்பாதுரை, நாரண துரைக்கண்ணனார் அவர்களையும் ஏன் சிறப்பி... வில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்க... விடுபட்டவர்களைப்பற்றி அடுத்து பரிசீலிக்கப்படும் என்று அங்கே அந்த வி... வில் சொல்லியிருக்கிறார்கள். இந்த உதவிகளை மக்கள் வரிப் பணத்திலிரு... வாரி வழங்குகிறோம் என்று சொல்வது சரியில்லை. மத்திய அரசு கௌரவ... வர்களை நாமும் கௌரவிக்கிறோம்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, நான் சொ... வது, தேவையற்றவர்களுக்குப் பண உதவியாக மக்களுடைய வரிப் பணத்... கொடுக்கக் கூடாது என்பதுதான். யாருக்குப் பண உதவி தேவையோ ... களுக்குக் கொடுக்க வேண்டும். புகழ் தேவைப்படுகிறவர்களுக்குச் சி... மட்டும் செய்ய வேண்டும்.





(திரு. சி. இராமலிங்கம் அவர்கள் இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது, வேண்டுமானால் இதற்கு மறுப்புச் சொல்லலாம். இப்போது குறுக் கிட வேண்டாம். எந்த உதவி யாருக்கு இன்றியமையாத தேவையாக இருக் கிறதோ அவர்களுக்குத்தான் அதைச் செய்ய வேண்டும். சிறப்பிப்பது என் பது வேறு, பண உதவியளிப்பது என்பது வேறு. சிறப்பிக்க வேண்டுமானால், ஆறடிக்கு ஆறடி அளவுக்குப் பட்டயம் தயாரித்து வேண்டுமானால் நாலாம். அப்படியென்றால், நான்கூட வாழ்த்துப் பாக்களை எழுதித் தருவேன். அவர் களை அப்படி சிறப்பிப்பதுதான் தேவை; பணம் தேவையல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. இன்னும் இதற்கு ஒரு சட்டம் வர வேண்டும். வரு மான வரி செலுத்துபவர்களும், வசதி படைத்தவர்களும் அரசு மானியம் பெறத் தகுதியற்றவர்கள் என்று சட்டம் வர வேண்டும். அப்படிப்பட்டவர் கள் ஏற்கெனவே வாங்கியிருந்தாலும் கூட, அவர்களுடைய பெயர்களை நீக்க வேண்டும். இப்படி அள்ளிக் கொடுப்பது என்பது வரிப் பணத்தைத் தூர்விதி யோகப்படுத்துகிற செயல் என்பதை அரசு தெரிந்துகொள்ள வேண்டும் என் பது என்னுடைய வேண்டுகோள். வருமான வரி செலுத்தக்கூடிய அளவுக்குச் செல்வம் படைத்தவர்களுக்குப் பண உதவி செய்வதற்குப் பதிலாக பட்டயம் கொடுக்கட்டுமே. எனக்குக் கூட கலைமாமணி விருது கொடுத்தார்கள். கூடவே தங்கக் காசு ஒன்றும் கொடுத்தார்கள். அப்படிச் செய்யட்டும். அதை விட்டுவிட்டு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்பது வீண் விரயம் என்றுதான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணை தலைவர்:** பட்டயம் கொடுத்தோடு பண மும் கொடுத்தார்களா?

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** ஒரு தங்கக் காசு மட்டும் ஒரு பவுன் எடையுள்ளது. ஆகவே வருமான வரி செலுத்தும் அளவுக்கு வசதி படைத்த வர்களுக்குப் பணத்தைக் கொடுத்துச் சிறப்பிக்கத் தேவையில்லை. இன் னொன்றை நான் சொல்லும்போது, இங்கு இருக்கக் கூடிய மாண்புமிகு உறுப் பினர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கூட அவர்கள் இரண்டு தடவைகளுக்கு உறுப்பினராக இருந்திருந்தால், உதவிப் பணம் கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அந்தப் பணம் வந்துதான் வாழ வேண்டும் என்ற தேவையுள்ளவர்களுக்கு மட்டும் கொடுப்பது சரி. வசதி படைத்த உறுப்பினர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினராக இருந்ததற்காக மானியம் பெற வேண்டுமென

[திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்] [1979 பிப்

நிலையில் இருப்பவர்கள் அல்ல. அவர்களில் பல [illegible] வசதி செ களுக்கு அரசு உதவித் தொகை வழங்கப்படாதென்று கேட்டுக்கொள்

அதே சமயத்தில் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். சட்ட உறுப்பினர்களுக்கு, இரயிலில் பயணம் செய்வதற்காகக் கூப்பன்களைக் கொ திருக்கிறார்கள். மிகத் தாராளமாகக் கொடுத்ததால், அவை வீட்டில் இருக்கின்றன. அந்தக் கூப்பன்கள் வருகின்ற மே மாதத்தோடு கால ங்களை [illegible] தெரிவிக்க வேண்டும். பிற ம களில் அந்த கூப்பனால் மனைவியோடு பிரயாணம் செய்யலாம் என் பெண் உறுப்பினராக இருந்தால் கணவனையும் அழைத்துக்கொண்டு செ லாம் என்னும் விதி வகுத்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் அ விதி வகுக்கவில்லை. நாமும் அந்த விதியை வகுத்துக்கொண்டால், என் போன்ற வயதானவர்கள், மனைவியோடோ, மகனோடோ, மகளோடோ, துணையை அழைத்துக்கொண்டு செல்ல முடியும். ஆகவே அந்த வகை சட்டத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தெரி உதவி பயனுள்ளதாக இருக்க வேண்டும். கூப்பனை வைத்திருந்து திரு தருவதாக இருக்கக் கூடாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப் வயதானவர்களுக்குத்தான் வேண்டும் என்கிறாரா அல்லது இளைஞர்களு வேண்டும் என்கிறாரா?

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** இளைஞர்கள் தனியாக மனைவி அழைத்துக்கொண்டு போகட்டும். நாங்கள் மனைவியை அழைத்துச் செ சென்றால், அவர்களுக்குத்தான் நாங்கள் பணிவிடை செய்ய வேண்டி (சிரிப்பு.)

**புலவர் புலமைப்பித்தன்:** தனியாக அவர்களே மனைவிகளை அழைத் கொண்டு போகட்டும் என்றார்கள். மனைவியையா அல்லது மனைவிகளை (சிரிப்பு.)

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** நான் சொல்லுவது, மனைவி அ மகனை அழைத்துச் செல்ல வேண்டுமென்று தான். பிற மாநில உள்ளதைப் போல் இங்கும் இந்தக் கூப்பன்களைப் பயன்படுத்த வே என்பதுதான்.



1979 பிப்ரவரி 15] [illegible]

அதே [illegible]

[illegible] இல்லை.

[illegible]

[திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்] [1979 பிப்ரவரி

மானம் என்பதாகும். அவர்களுடைய உண்மையான நோக்கம், ஒன்று இ மற்றொன்று ஆங்கிலம். இதைப் பார்க்கிறபோது மாநில மொழிகள் பு கணிக்கப்படுகின்றன, தாய்மொழி அவமதிக்கப்படுகிறது என்று தெரி நேற்று டில்லியில் ஒரு காங்கிரஸ் விழாவில் குடியரசுத் தலைவர் அவ பேசியிருக்கிறார்கள், அப்போது, தெலுங்கிலே பேச ஆரம்பித்து ஆங்கிலத் உரையை முடித்திருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் பேசிய ஒன்று அவருடைய தாய்மொழி. இன்னொன்று பொது மொழி ஆங்கி நமது இருமொழிக் கொள்கைக்கே அவரும் வந்திருக்கிறார். குடியர தலைவருடைய கொள்கையில் இந்திக்கு இடமில்லை என்பது அவருடை நேற்றைய பேச்சில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தச் சுற்றறிக் இந்தியிலும் ஆங்கிலத்திலும்தான் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. என் த மொழி புறக்கணிக்கப்பட்டுவிட்டது. ஆகவே இந்த அறிக்கையை இ அவையிலேயே கிழித்துப் போடுகிறேன். அதை நான் ஏற்றுக்கொள விரும்பவில்லை.

இன்னொன்று. தமிழ் எழுத்தாலும் இங்கே இந்தி நுழைகிறது. " தர்ஷன் கேந்திரா" என்று தமிழால் எழுதப்பட்டிருக்கிறது. கொஞ்ச நே திற்கு முன்பு குறிப்பிட்டதைப்போல, 'விவித பாரதி, ஆகாஷ்வாணி' என் தைப்போல "தூர்தர்ஷன் கேந்திரா" என்று தமிழ் எழுத்தால் எழுதியிரு றார்கள். இதைக் கண்டித்து ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பின ஒருவரே மத்திய அரசு அமைச்சர் திரு. அத்வானி அவர்களுக்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறார். "தூர்தர்ஷன் கேந்திரா" என்று சொ தமிழில் எழுதிவிட்டால் நம்மைத் திருப்திப்படுத்திவிடலாம் என்று நினை றார்கள். இந்த நிலைமையில் போய்க்கொண்டிருந்தால், நாளை என் வாகும்? நாளைக்கு இந்தியில் உள்ள சொற்களை தமிழ் எழுத்தில் எழு மத்திய அரசாணைகள், மாநில அரசுக்கு வர ஆரம்பிக்கும்.

(பிற்பகல் 4-50)

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்.

" அரே, டமில் நாடுகா பிரதான் மந்திரிஜி! ஹமாரா பாரத் தேஷ் பிரதமர்ஜி, மதராஸ்கோ பாரா தாரிக்கோ ஆரஹே ஹைஹென். அம மதராஸ்மே காந்தி ஜயந்திமே ராம்துன் பஜன் கர்னேக் கேலியே சப் தயார்கரோ "—இப்படி ஆணை அனுப்புவார்கள்.

புலவர் புலமைப்பித்தன்: இரு மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டிரு ற இந்த அவையில் இந்தி பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1979 பிப்ரவரி 15]

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: எதைப் பேச வேண்டாமென்று சொல்கிறீர்கள் ?

புலவர் புலமைப்பித்தன்: இந்தியை.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: இந்தியை அப்படித் தமிழ் எழுத்தால் திணிப்பார்களென்பதற்காகச் சொல்கிறேன். இந்திச் சொற்களையே இப்படித் தமிழ் எழுத்தில் எழுதி அனுப்புவார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்தியிலே என்ன சொன்னார்களென்பதைத் தமிழிலே சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: 'தமிழ் நாடு முதன்மந்திரி அவர்களே, நமது பாரதப் பிரதமர் சென்னைக்கு 12 ஆம் தேதி வரப்போகிறார்! உங்கள் சென்னையில் காந்தி ஜெயந்திக்காக, ராம்துன் பஜனைக்கு எல்லா ஏற்பாடு களையும் தயாராகச் செய்து வையுங்கள்' என்று பொருள். ஆகையினால்— "தூர்தர்ஷன் கேந்திரா" என்பதை முதலில் அகற்ற வேண்டும். 'தொலைக் காட்சி நிலையம்' என்ற பெயரை வைக்க நாம் வற்புறுத்த வேண்டும். 'ஆகாஷ்வாணி' என்ற பெயரை மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். 'ஆல் இந்தியா ரேடியோ' என்று வைத்துக் கொள்ளட்டும். அதே நேரத்தில் 'வானொலி நிலையம்' என்றும் இருக்க வேண்டுமென்று போராட வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த நிலைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவு பெறவேண்டும். இந்தி திணிக்கப்படுகிற தென்பதை உணர்ந்து, எதிர்த்துப் போராட வேண்டும். டாக்டர் ஹண்டே அவர்கள் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒற்றுமையோடு இதில் போராட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு முன்னால் அவர்கள் தெளிவு பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேரம் குறைவாக இருப்பதால், சுருக்கமாகப் பேசுகிறேன்.

மதுவிலக்குச் சட்டம் எதிர்பார்த்த அளவிற்குப் பலனை அளித்திருக்கிற தென்று ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. என்ன பயன் ? பெரியவர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள்கூட சாராய வெள்ளத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நம்மை நாமே, தெரிந்தும் தெரியாதது போல் ஏமாற்றிக்கொள்வது சரியல்ல. எல்லா இடங்களிலும் சாராய வியாபாரம் பெருகிக் கொண்டிருப்பதைத் தடுக்க முடியவில்லை என்பது நன்கு தெரிந்த விஷயம், அது எந்த அளவிற்கு முற்றியிருக்கிறதென்றால், குடி வெறியோடு கல்லூரியில் புகுந்து தாக்குமளவிற்கு வளர்ந்திருக்கிறது. முன்னே தியாகராயர் கல்லூரியில் புகுந்து தாக்கினார்கள். மாணவர்கள் பேராசிரியர்கள் தாக்கப்பட்டார்கள். நேற்றைக்கு முன்தினம் பச்சையப்பன்

கல்லூரியில். குடி வெறியோடு போய்த் தாக்கியிருக்கிறார்களென்பது ஒப்
கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே சாராய வியாபாரம் நடைபெறவில்
என்று சொல்லுவது உண்மையல்ல. இங்கே மது பெர்மிட் கொடுக்கிறார்க
ஆலை ரெனியுவலுக்கு அனுப்பும்போது 30 ரூபாய் முன்பணம் கட்
ரனியுவல் மனுச் செய்ய வேண்டும். அதற்கு மனு ஆய்வு நடத்துகிறார்கள்
பிறகு மருத்துவ சோதனைக்கு அனுப்புகிறார்கள். அதற்குப் பிறகு பீ
பணம் கட்ட வேண்டும். இது என்ன முறை? ரேடியோ லைசன்ஸ், கா
லைசன்ஸ் ஆகியவற்றை ரெனியுவல் செய்கிறோம். துப்பாக்கி லைசன்ஸ்
ரெனியுவல் செய்கிறோம். காலக்கெடு முடியும் நாள் அன்று கட்டணத்தை
கட்டினாலும் உடனே ரினிவல் சீல் போட்டுக் கொடுத்து விடுகிறா
கள். அதுபோலத்தானே இதிலும் செய்ய வேண்டும்? ஏன் தாமதம்
ஆகும்பம்? மருத்துவ காரணமாகப் பர்மிட் தருவதாகச் சொல்கிறார்கள்
ஆனால், அதிலும் வருமான வரி செலுத்துகிறவர்களுக்கு, அதாவது
ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு நான்கு யூனிட்டுகள்
அவர்களுக்கு அதிக நோய் வருமாம், அதற்குக் குறைவாக வருமானம் உள்
வர்களுக்கு 2 யூனிட்டுகள் என்று தருகிறார்கள். அதையாவது குறிப்பிட்ட
காலத்திற்குள் தர வேண்டுமல்லவா? ரினிவலுக்கே 6 மாத காலம் கடத்தினால்
இடைக் காலத்தில் அவன் உடல் நிலை என்னாவது? கள்ளத்தனமாக வாங்கி
சாப்பிட வேண்டுமென்று அர்த்தமா? எந்த அர்த்தத்தில் கால தாமதம்
செய்யப்படுகிறதென்பது தெரியவில்லை. இதுவும் தவறான கொள்கை.

ஆகவே ஆளுநர் அவர்கள் அறிக்கையில் மொத்தமாகப் பார்க்கும்போது
எது குறித்தும் பாராட்ட முடியவில்லை என்பதை வருத்தத்தோடு
தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் ஹண்டே அவர்கள் முன்மொழியும்போது
இது கவர்னர் அவர்களது உரையாக இருந்தாலும், முதலமைச்சரவர்களின்
கருத்துப் பிரதிபலிப்புதான் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனா
உண்மையான ஆளுநர் அறிக்கை வேறொன்றை நான் படித்திருக்கிறேன்
[illegible]-1-79 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்... அந்
உண்மையான ஆளுநர் உரை வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே "கோப்பு
[illegible]களில்லை; வழக்குகள் தாமதமாகிக்கொண்டிருக்கின்றன, லஞ்ச ஊழ
புகார்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன, கிராமங்களில் பட்டினி
வறுமை தாண்டவமாடுகிறது, காவல் நிலையங்களில் மக்கள் அவமான
படுத்தப்படுகிறார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கவர்னர் அவர்க
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் சொன்னதுதான் உண்மையான
ஆளுநர் உரை; சட்டமன்றத்திலே ஆளுநர் அவர்கள் ஆற்றிய இந்த உரையை
பாராட்ட முடியாவிட்டாலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்
கவர்னர் அவர்கள் ஆற்றிய அந்த உரையைப் பாராட்டுகிறேன்.



 காவல் துறையினர்
முதல்வர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஒழுங்காகக்
மதுவிலக்கை உண்மையாக அமல் நடத்த வேண்டுமென்றும், இல்லையென்றால் வீட்டுக்குப் போக
கடமையைச் செய்ய வேண்டுமென்றும், அப்படி அவர்கள் சொன்னதை
வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறை என்ன செய்யும்? பாவம்!
நான் பாராட்டுகிறேன். ஆனால், வழக்குகளைப் பதிவு செய்கிறார்கள்;
காவலர்கள் ஒழுங்காகத்தான் அப்போது அவர்கள் அடி படுகிறார்கள்,
கேஸ்களைப் பிடிக்கப் போகிறார்கள். பாதுகாப்பு இல்லை. போன
வெட்டப்படுகிறார்கள். அவர்களுக்கே மேலிடத்துத் தலையீடு
கூட்டத்திலேயே சொன்னேன். ஏனென்றால் "பதிவு செய்கிறார்களென்றால்
இருக்கிறது. இன்றைக்கு ஒரு வழக்குப் ஏனென்று கேட்டால்,
நாளைக்கு வேறுவிதமாக அதை மாற்றுகிறார்கள். என்று சொல்கிறார்கள்.
"மேலிடத்து உத்தரவு, நாங்கள் என்ன செய்வது" சரியாகச் செயல்பட
இதைத் தடுக்காத வரையில், காவல் துறையினர் பதிவு செய்த பிறகு,
முடியாது. காவல் துறையினர் வழக்குகளைப் எல்லா வழக்குகளையும் பதிவு
குற்றவாளிகள் தப்பித்துக்கொள்கிறார்கள். குற்றம் செய்பவன் அஞ்ச மாட்டான்.
செய்வது மட்டும்தான் என்றால், குற்றவாளி பயப்படுவான்.
உடனடியாகத் தண்டனை என்றால் தான், முயற்சியையெல்லாம் வழக்குகளாகப்
இதுவரை பல படுகொலை, கொலை நாம் கேட்டால், கோர்ட்டில்
பதிவு மட்டுமே செய்து வைத்திருக்கிறார்கள். பேச முடியாதென்று சொல்லி
வழக்கு இருப்பதால், அதைப்பற்றிப் குற்ற உணர்வு உள்ளவர்களாகவும்
விடுகிறார்கள். இதனால்தான் காவலர்களே கற்பழிக்கும் நிலை உருவாகி
மாறிவிட்டார்கள். காவல் நிலையத்திலே என்பதைக் காட்டுகிறது.
இருப்பது அந்த இயந்திரமே கெட்டிருக்கிறது கெடுத்து விட்டார்களென்று
இரண்டு ஆண்டுகளில் அந்த இயந்திரத்தைக் முதலமைச்சரவர்கள் காவல்
இந்த ஆட்சியாளர்களைச் சொல்கிறேன். இல்லையென்றால்
துறையினரைப் பார்த்து "கடமையைச் செய்யுங்கள்,
வீட்டிற்குப் போங்கள்" என்று சொல்கிறார், ஆனால் . . .

(மேலவைத் துணைத் தலைவர் மணியடித்தார்)

(சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன்.) காவல் துறைக்கு முழுப் பொறுப்
பேற்றுள்ள முதலமைச்சரவர்களே ஓராண்டுக்கு முன்பு ஒன்று சொன்னார்கள்.
சாராயக் குற்றவாளிகள் பட்டியல் என்னிடம் இருக்கிறது, அதை விரைவில்
வெளியிடுவேன் என்று சொன்னார்கள். அந்தக் குற்றவாளிகள் தண்டிக்கப்
பட்டார்களா? நமக்கே இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. 'சாராயக்
குற்றவாளிகளின் பட்டியலை ஒரு கையில் வைத்துக்கொண்டு, அவர்களைத்
தண்டிக்க வேண்டிய அதிகாரத்தை மற்றொரு கையில் வைத்துக்கொண்டு,

[திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்] [1979 பிப்ரவரி

அவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல், அவர்கள் குற்றத்தை முதலமைச் மறைத்து வைத்திருக்கிறார் என்று சொல்ல விரும்புகிறேன். அப்படி ஏ.சி. அல்லது டி.சி. செய்தால், உடனே அவர்களை டிஸ்மிஸ் செய்வீர் சஸ்பெண்ட் செய்வீர்கள், குற்றவாளி என்று தெரிந்தும் நடவடிக் எடுக்காததற்கு தண்டனை கொடுப்பீர்கள். ஆனால் குற்றவாளி பட்டியலையே வைத்துக்கொண்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கா அவர்கள் தப்பித்துக்கொள்ளவும், அவர்களைப் பாதுகாக்கவும் முதலமைச்ச உதவியிருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவையின் அனுமதியோ அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** அதிகாரிகளாக இருந்தால் நடவடிக் எடுக்கிறார்கள். முதலமைச்சரவர்களை அப்படிச் செய்ய முடியாது. அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. ஆகையால் பணிவாக வேண்டுகோ விடுக்கிறேன். இரண்டு ஆண்டுக்காலம் அரசு நிர்வாகத்தை, அ இயந்திரத்தை, காவல்துறை இயந்திரத்தைச் சீர் கெடுத்துவிட்டீர்க மேலும் சில ஆண்டுகள் இருந்து கெடுக்க வேண்டாம்; நீங்கள் ஆண்ட போதும்; ஆட்சிமுறை உங்களுக்குப் புரியவில்லை; ஆகையால் நீங் வீட்டிற்குப் போங்கள்; கடமையில் தவறியதற்காக வீட்டிற்குப் போங் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சரவர்கள் வேறு துறையி திறமையாகச் செயல்படுவார் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் இந்த துறையில் அவர் ஆண்டது போதும், வீட்டுக்குப் போங்கள் என்று கேட் கொண்டு, பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி சொல்லி, அமைகிறேன்.

(பிற்பகல் 5-00)

* **THIRU D. V. D'MONTE:** Hon. Deputy Chairman, Sir, to my mind, the Governor's Address is, like the proverbial Curate's Egg, good in part. I find a lack of dynamism and progressive spirit which one expects from the ruling party. To some extent, my hon. Friend Dr. Hande has allayed some of my misgivings and fears, as he has been able to plug some of the loopholes which are found in the Address. There are certain important matters which have been glossed over or even overlooked in the Address. I looked forward to a more progressive programme as economic programme for the uplift of the State, and I looked forward in vain to a programme for health care, for improved health service. I find no mention at all about the International Year of the Child—1979, Viewed in this background, I have some misgivings. In the matter of labour and industrial relations,



I know that very sincere efforts have been put in by the Hon. the Minister for Labour and I compliment him on a better climate, although much more has to be done. I know there is a certain limit up to which the law and Government can play in the field of labour. The Government can issue necessary guidelines and up to a point serve as a deterrent to erring managers and employees. But the real problem lies in bringing about a change of heart among labour leaders and managements alike and in instilling in them a resolve not to stop production. Greater resort to dialogue and reference of dispute to impartial arbitration even where the law does not provide or require it will certainly help to improve matters. Trade unions will do well to serve the needs of the workers better than what they have done in the past. Some of the suggestions which our Hon. Minister had made in recent times, especially in relation to Trade Unions are good and I hope this will go a long way in removing the present difficulties and create a better climate in labour and industrial relations.

In regard to law and order situation, I must confess to a feeling that there has been some further deterioration in recent times. I feel it had taken a turn for the worse in the recent past when every sort of anti-social activities including murder and arson took place in the wake of the arrest of Thirumathi Indira Gandhi and her jail term. Sir, I feel very sorry about Kanyakumari incident—the bus tragtdy and I do hope that the Government will bring all the anti-social elements and goondas to book. The public must have an answer for this lapse or what I feel is a lapse on the part of the Government.

As I mentioned earlier, the year 1979 has been designated as the International Year of the Child. This will be a stupendous task facing the Government. No doubt authors and poets will wax eloquent and write volumes of books about the child. But it is one of the quirks of fate that the child, the hero of the year, will himself go through the year in blissful ignorance without very much bothering while the "elders" would fret all the year around. Have the Government understood the tasks and responsibility involved? They have to take care of thousands of children born and brought up in the slums in urban areas and rural areas. They have to bear the responsibility of eliminating school drop-

outs, educating the economically weak and the socially handicap child to grow up without emotional or psychological inhibitio This is a task that cannot be completed in a year or even in years' time. But we have to make a start and even if the Gover ment appreciate this point of view, it will certainly do someth to meet the enormity of the problem. In the Governor's Addre I find a passing reference to the Sivakasi bus tragedy and th condemnation of child-labour by the Government. I would go step further and request that instead of mere condemnati Government should come forward with very radical measures put a stop to this system of child labour once and for all. Th indeed would be a very good way of beginning the year of th Child.

Sir, in regard to the language issue I have to state that I a one with the Government in opposing any form of imposition Hindi from any quarter. The Government here are committ to the two-language formula of Tamil and English. I would li to take this opportunity to make a special plea on behalf English and more so on behalf of my community, the Anglo Indian community. That English is an Indian language has bee judicially accepted. Chagla, C.J., in the Bombay case has clearl held that English is an Indian language in the Constitutiona sense and as such it is entitled to the protection vouchsafed in Article 29 of the Constitution. The Anglo-Indian community are Indian citizens by birth and their mother tongue is English Have they no right in determining the future language of our country? This is a basic right. Article 29 of the Constitution gives us this right to press for protection and conservation of our language. That is why under Article 350-B a Special Officer fo linguistic minorities is envisaged to safeguard our rights. Ther will be ample opportunities for me to speak further on this subjec when the language issue comes up before the House. But what disturbs me is that I find that in our State English is being grad ally dispensed with both in Government correspondence and Universities. As my hon. Friend Thiru Damodaran has clearl stated yesterday, we are playing into the hands of the Hindi prot gonists who are eagerly waiting to thrust Hindi ultimately in th place of English. This is something that we have got to guar against. I would plead with my friends in the ruling Party and the D.M.K. for a spirit of toleration. It is only a spirit of intoler



ance that is creating havoc in the language issue as was clearly spelt out by the President Thiru Sanjiva Reddi recently. I would make an appeal that English should be given back its original place in the working of our State.

In the Governor's Address there is special reference for promoting jobs for people in the rural areas. I cannot see how this is going to work out. Tamil Nadu has been a late starter in creating jobs as compared to Karnataka and Kerala who are already on the job. In Maharashtra and West Bengal they are thinking in different directions and in West Bengal they are thinking of paying a dole to the educated unemployed. In the Governor's Address there is mention about village planning and the construction of one lakh houses in five years. I would like to ask the Government what exactly is meant by the job guarantee. How many people are going to be covered this year or in the next five years?

(பிற்பகல் 5-10)

Do we have an idea of the extent of the problem? In our State, the rise in number of the jobless, compared to all-India level, is very much higher and in the matter of providing jobs we are in the lowest rung of the ladder. The figure for 1975 is 39,000 and it has fallen to 27,000 in 1977. This indicates the worsening situation in the employment position in our State. While I welcome the efforts made by the Government to improve this, I would caution the Government against making promises which they may not be in a position to fulfil.

There is an absence of any reference to medical care and medical health schemes. From what I see and hear there is a big gap between promises and fulfilment. The situation is far from satisfactory in our Primary Health Centres where there is lack of medicines, doctors and medical services. It should be the endeavour of this Government to bring medical relief to the doors of the common man. The Government must find out a radical way to implement their policy of bringing medical relief to the doorsteps of the poor.

Sir, I have already made known my views on the subject of Prohibition which appears to be occupying a great part of the Government's attention. I still say that tightening of the dry law

[Thiru D. V. D'monte]

is not the answer to the problem. Nothing short of a sociolog[ical] revolution can wean people from the habit of drinking. T[he] recent Ordinance has not stopped the illicit distillation or boot[leg]ging. In fact, I would say it is on the increase. I am aware th[at] in Madras City every type of liquor, arrack, Gingeberis, an[d] many other forms and types of Hooch, is available. There a[re] queues in certain portions of Vepery to get coupons for Rs. [...] and with those coupons, they can walk into a place and pick up [a] peg of liquor. I see that the Ordinance has created addition[al] difficulties, administrative and otherwise, which were not foreseen. Prohibition offences have been abnormally classified with offence[s] like murder, robbery, food adulteration. To equale a mea[sly] pecadillo as a serious crime is completely out of proportion. The amended Act provides for jail term of six months for tho[se] who violate the law; and you can just imagine the consequence[s] on the bread-winner of a family going to jail for six months, with[out] any means of support to his poor wife and children. Sir, th[e] new law has failed to touch the real manufacturers of illici[t] brew who are flourishing. I, therefore, take this opportunity o[f] appealing to the Government to take a more pragmatic view, [if] Prohibition is to be successful in our State.

Sir, I have one more point and I have done. I welcome the proposal of the Government to exempt small scale industries from power-cut. This will no doubt provide some sort of relief to entrepreneurs but the general position of small scale industries is still far from satisfactory. Their general difficulties are: lack of finance, lack of organisational facilities, lack of storage and marketing facilities, and lack of improved technical knowledge and lack of raw materials. There is an abundant scope for small scale industries, cottage and rural industries to flourish in our State. This is one sector where the employment potential is very high. Government should come forward with radical measures to deal with these problems on a war-footing. The sick industries must be catered to. According to my information, at least 25 per cent of all the small-scale industries in the State are sick without any means of early relief. There is also ample room for export in the small-scale sector. I would commend the idea of an export marketing consortium to take care of the export trade of



small-scale industries. This has been tried out successfully in countries like Singapore and Kenya. I feel that an export-oriented unit should find the market for the overflow of manufactured items from our State.

I thank you, Sir, for having given this opportunity to say a few words on this occasion.

* திரு. ஈ. எஸ். **வெங்கடேசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சிறப்பான அம்சங்கள் நிறைந்த ஆளுநர் உரையை வர வேற்று நன்றி கூறும் நல்வாய்ப்பு கிடைத்தமைக்கு என்னுடைய மகிழ்ச்சியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன். நீதி, நேர்மை, நாணயம் என்ற அடிப்படையிலே ஒவ்வொரு காரியத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்துகின்ற காரணத்தால் அவருக்கும் அவர் சீரிய தலைமையில் செயல்படுகின்ற அரசுக்கும் நல்லெண்ணம் படைத்த அனைவருடைய ஆதரவும் பெருகி வருகின்றதைப் பார்க்கின்றோம். மக்கள் பெருவாரியாக இந்த அரசினுடைய நல்லெண்ணத்தைப் புரிந்து கொள்வதையும், பயனடைந்து வருவதையும் நாம் எல்லோரும் நன்றாகக் காண முடிகிறது. சிலர் மாறுபட்ட கருத்து வேறுபாடுகளாலும், காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் இந்த அரசைப் பற்றிக் குறை கூறுகிறார்கள்.

(உறுப்பினர்கள் இருக்கையில் அமர்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தனர்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேசுகின்ற உறுப்பினரைத் தவிர மற்ற உறுப்பினர்கள் அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்த டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் வெகு சிறப்பாக உரையாற்றினார்கள். முதல்வர் அவர்களுடைய நல் உணர்வுகளையும், நல்ல எண்ணத்தையும், இந்த அரசினுடைய மொழிக் கொள்கையையும் பற்ற திட்டங்களையும் வெகு விளக்கமாகவும், அதே சமயத்தில் வெகு ஆணித் தரமாகவும் ஆதாரங்களுடனும் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள். அதனால் நான் அதைப்பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருக்க விரும்பவில்லை. எனக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரமும் குறைவு. சுருக்கமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டும் பேசி என் உரையை முடிக்க ஆசைப்படுகிறேன்.

மொழிக் கொள்கையைப் பற்றிக் குறிப்பாக டாக்டர் ஹண்டே அவர்கள் வெகு அழகாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமோதரனும் திரு. டி'மாண்டியும் கூட மொழிப் பிரச்சினையைக் குறிப்பிட்டு தெளிவாகப் பேசினார்கள். தமிழ் ஆர்வம் வேண்டியதுதான். ஆனால் தமிழ்

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1979 பிப்ர

ஆர்வத்தாலே ஆங்கிலத்தை இழித்துப் பேசுவதோ பழித்துப் பேசுவ
அல்லது புறக்கணிப்பதோ நல்லதல்ல. அப்படிச் செய்தால், நாம் இ
ஆகியவற்றுக்கு அழி வைச் செய்தவர்களாவோம் என்பதை மனதில் வைத்
கொண்டு இந்த விவாதத்தில் பேசவேண்டும். ஆங்கிலத்தை எ
காரணத்தைக் கொண்டும் புறக்கணிக்கக் கூடாது. அருமை நண்பர்
டிமோண்டி அவர்கள் சொன்னது போல், ஆங்கிலம் இந்திய மொழிகள்
ஒன்று என்பதை ஒரு உயர் நீதிமன்றமே ஏற்றுக்கொண்டிருக்கிறது என்ப
நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்ப
பட்ட ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதோ இழித்துப் பேசுவதோ அல்
பழித்துப் பேசுவதோ நல்லதல்ல. தமிழ் ஆர்வம் ஒவ்வொருவருக்கும் இரு
வேண்டியதுதான். அதற்காக ஆங்கிலத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்
நான் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொள்கின்றேன்.

சென்ற கூட்டத் தொடரில் நான் பேசும்போது என்னுடைய ஆசையை
தெரிவித்திருந்தேன். அது என்னுடைய கன்னிப் பேச்சுங்கூட. அ
ஆசையைப் பற்றி நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீ
துறையிடத்தும் நீதிபதிகளிடத்தும் பெரியார் அவர்கள் எவ்வளவு தா
மதிப்பும் மரியாதையும் பற்றும் கொண்டிருந்தார் என்பதையெல்லாம் சுட்டி
காட்டி மாவட்டங்களைப் பிரிக்கும்போது, குறிப்பாக கோயம்புத்தூர் மாவ
டத்தைப் பிரிக்கும்போது, ஈரோட்டை மாவட்டத் தலைமைப் பீடமாக
கொண்டு ஒரு மாவட்டம் அமைத்து அதற்குப் பெரியார் மாவட்டம் என்
பெயர் வைக்க வேண்டுமென்று சொன்னேன். ஆளுநர் உரையிலிருந்து வெ
ப்படையாக என் ஆசை நிறைவேறியிருப்பது கண்டு மகிழ்ச்சி கலந்த நன்றியை
அரசுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்
இங்கே அருமை நண்பர் திரு. லெட்சுமி காந்தன் அவர்கள் பேசும்போது, வட
ஆற்காடு மாவட்டத்தைக் கூட இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டு
கொண்டார்கள்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** உறுப்பினர் பேசும்போது அவருடைய ஆசை
ஆளுநர் உரையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் பெரியார் மாவட்டம்
என்று பெயர் சூட்டப்பட்டு விட்டது என்றும் சொன்னார்கள். அப்ப
பெரியார் மாவட்டம் என்ற சொல் ஆளுநர் உரையில் இருக்கிறதா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு.
வெங்கடேசன் உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கலாம்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** உறுப்பினர் கேட்டது எனக்கு சரியாக
காதில் விழவில்லை.



1979 பிப்ரவரி 15]

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** "பெரியார் மாவட்டம்" என்ற சொல் ஆளுநர் உரையில் இருக்கிறதா?

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** சென்ற கூட்டத் தொடரின்போது என்னுடைய ஆசையைச் சொன்னேன். பெரியார் மாவட்டம் என்ற செய்தி வெளியில் வந்திருக்கிறது. என்னுடைய அந்த ஆசை நிறைவேறியது, இந்த அரசால் நிறைவேற்றப்பட்டது என்றுதான் சொன்னேன். அதற்காக இந்த அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-20)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் தன்னுடைய ஆசை நிறைவேற வேண்டும் என்று விரும்புகிறாரா அல்லது அவருடைய ஆசை நிறைவேறிவிட்டது என்று குறிப்பிடுகிறாரா என்று உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அறிய விரும்புகிறார்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** என்னுடைய ஆசையை நான் சென்ற தொடர்கூட்டத்தின்போது தெரிவித்தேன். இப்போது அது நிறைவேறியிருக்கிறது என்று நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியன் :** கவர்னர் உரையில் கோவை மாவட்டத்தை இரண்டாக்கி ஒன்றிற்கு ஈரோடு மாவட்டம் என்று பெயர் வைக்கப்படும் என்றிருக்கிறது. உறுப்பினர் அவர்களின் ஆசை அது பெரியார் மாவட்டம் என்று அழைக்கப்பட வேண்டுமென்பது. அந்த ஆசை நிறைவேறியிருக்கிறதா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** என் ஆசை நிறைவேறியிருக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன்.

அடுத்து, உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது, வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதுதான் நிர்வாக வசதிக்கு சிறந்ததாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டார். வட ஆற்காடு மாவட்டம் என்பது மட்டுமல்ல. நான் வட ஆற்காடு மாவட்டத்தில் பணியாற்றியிருக்கிறேன். பொதுவாக எல்லாப் பெரிய மாவட்டங்களுமே நிர்வாக வசதிக்காக 2 அல்லது 3 ஆகப் பிரிக்கப்பட வேண்டும். மக்களுடைய நன்மைக்காக பெரிய மாவட்டங்களைப் பிரிப்பது நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களுக்கும், கிராம மக்களுக்காகவும் அரசு மேற்கொண்டு இருக்கிற திட்டங்கள் அனைத்தும் கிராம மக்களை நிச்சயமாகக் கவரும். அதனால் பலரும் பயனடைவார்கள். அதைப் போலவே அரசின் இயக்குநரகங்களும், அரசு நிறுவனங்களின் தலைமையிடங்களும் சென்னையிலே குவிந்திருப்பதைத் தவிர்க்கும் வகையில் மாநிலத்தில் பல்வேறு இடங்களுக்கு மாற்றப்படும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம். அதனால் மக்கள் பெரிதும் பயன் அடைவார்கள். அதைப் போலவே தற்போது மாவட்டத் தலை நகரங்களில் மட்டும் சட்ட கோர்ட்டுகள் குவிந்து இருக்கின்றன. மக்களின் நலனுக்காக அவைகளையும் பரவலாக்கி மற்ற இடங்களுக்கு மக்களின் சௌகரியத்திற்கேற்ப மாற்றுவது நல்ல என்று நினைக்கிறேன். எனவே அரசு அதனைக் கவனித்து உயர்நீதி மன்றத்தைக் கலந்து ஆவன செய்ய வேண்டும் என்ற என்னுடைய ஆசையை தெரிவித்துக்கொள்கிறேன். புதிய மதுவிலக்குச் சட்டத்தைப்பற்றிப் பலரும் இங்கே பேசினார்கள், வெளியிலும் பேசுகிறார்கள். நான் மதுவிலக்குச் சட்டத்தை நிர்வகிப்பதற்காக தனி நீதிபதியாகவே சில சமயம் பணியாற்றியிருக்கிறேன். எனவே, அதைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். மதுவிலக்குச் சட்டம் நல்ல முறையில், அதிலும் கடுமையான முறையில், நிறைவேற்றப்பட வேண்டும். ஏழை எளியவர்கள்தான் இந்தச் சட்டத்தால் அதிகம் பயனடைந்திருக்கிறார்கள். உண்மையிலேயே அந்தச் சட்டத்தைக் கடுமையாக்கி நல்ல முறையில் அமுல்படுத்தினால், நிச்சயமாக நாட்டிலுள்ள பெரும்பாலான ஏழை எளிய குடும்பங்கள் பயன்பெறும். பொதுமக்கள், குறிப்பாக பெண்கள் மதுவிலக்குச் சட்டத்தை வரவேற்கிறார்கள். பல ஏழைக் குடும்பங்கள் இந்தச் சட்டத்தின் காரணமாகக் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. என்னுடைய வேலைக்காரர்கள்கூட இதைப் பற்றி என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கும், சாராயம் விற்பவர்களுக்கும், சாராயத்தைக் கடத்துகிறவர்களுக்கும் இந்தச் சட்டத்தில் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதை இன்னும் கடுமையாக ஆக்க வேண்டும். அந்தக் குற்றம் செய்பவர்களைப் பொது இடத்திற்குக் கொண்டு வந்து சாட்டையால் கூட அடிக்கலாம். Whip பண்ணுவது என்று கூடச் செய்யலாம். அப்போதுதான் பொதுமக்களுக்கு அதுபோன்ற சமூக விரோதிகளை நன்றாகத் தெரியும். அதனால் அதுபோன்ற சமூக விரோதிகள் தலைகாட்ட மாட்டார்கள். அரசாங்கம் அதுபோன்ற முறையைக் கொண்டு வர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதே நேரத்தில் குடிப்பவர்களுக்குக் கடுமையான ஜெயில் தண்டனை இருக்கக்கூடாது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் குடிப்பவர்கள் தங்களுடைய சுய நலனுக்காகவோ, பணம் சம்பாதிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டோ குடிப்பதில்லை. சாராயம்



காய்ச்சுபவர்களும், விற்பவர்களும், கடத்துபவர்களும் தங்களுடைய சுய நலத்துக்காக, எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டும், மற்றவர்கள் குடியைக் கெடுத்தாவது தாங்கள் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் செயலாற்றுவார்கள். ஆகவே, அவர்களுக்கு மட்டுமே கடுமையான தண்டனை வழங்க வேண்டும். குடிப்பவர்களைப் பொறுத்த வரையில், சில பேர் addicts ஆகி விடுகிறார்கள்.

* **திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** குடிப்பவர்கள் இல்லை என்றால், விற்பவர்களுக்கு வேலையில்லை. இதைப்பற்றி வள்ளுவர் கூட புலால் உணவு தின்பவர்களே இல்லாவிடின் விலையின் பொருட்டு ஊன் விற்பவர்கள் எவரும் இல்லாமல் போவார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இது நீதிபதியாக இருந்த மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும் என்று கருதுகிறேன். குடிப்பவர்கள் இல்லாவிட்டால், விற்பனை செய்பவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விற்பனை செய்பவர்கள் இல்லையென்றால், குடிப்பவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்பது உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்களது அபிப்பிராயம்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** சாராயம் காய்ச்சுகிறவர்கள் இல்லாவிட்டால் குடிப்பவர்கள் இருக்க மாட்டார்கள். விற்பனை செய்வதுதான் கொடுமை. ஆகவே, விற்பனைக்கு வழியில்லாமல் செய்ய வேண்டும். அடுத்து குடிப்பவர்களுக்கு ஜெயில் தண்டனை கொடுத்தால், அவர்களுடைய குடும்பங்கள்தான் அதிகக் கஷ்டப்படுகின்றன. அநேகமாக அவர்களுடைய குடும்பங்கள் ஏழைக் குடும்பங்கள். இதனால் அவர்கள் மேலும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அரசாங்கம் அவர்களை ஜெயிலுக்கு அனுப்புவதற்குப் பதில் அவர்களிடத்தில் ஒரு மனமாற்றம் ஏற்படச் செய்யவேண்டும். குடிக்கு அடிமையானவர்கள் குடித்துவிட்டு ஜெயிலுக்குப் போய் வெளியே வந்தபின், வெறிகொண்டு இன்னும் அதிகமாகக் குடிக்கிறார்கள். அவர்கள் பெரிய நோயாளிகளைப் போன்றவர்கள். மிக நல்லவர்களாகவும், பண்புள்ளவர்களாகவும், அறிவாளிகளாகவும், திறமையுள்ளவர்களாகவும் கூட இருப்பார்கள். தங்கள் குடிப்பழக்கத்தினால் வெட்கமும் வேதனையும்கூட அடைவார்கள். ஆனால் அந்தப் பழக்கத்தை விடமுடியாமல் தவிக்கிறார்கள். அது போன்றவர்களை medical, psychological and psychiatric மருத்துவ, மனோதத்துவ முறைகளிலே ட்ரீட்மென்ட் கொடுத்து அவர்களை நல்வழிப்படுத்தி காப்பாற்ற முயற்சிக்க வேண்டும். வெளிநாடுகள் சிலவற்றில் திருத்தப்பட வேண்டிய குற்றவாளிகளுக்கு ஜெயிலுக்கு பதில் Hostel punishment கொடுக்கப்படுகிறது. அது போன்ற முறைகளைப் பின்

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1979 பிப்ரவரி 15

பற்றி நல்ல கற்பனை செய்து பார்க்க அருமையாக இருக்க விரும்புகிறவர்களுக்கு நான் முன்னே சொன்னபடியே ரிப்போர்ட் செய்தால், நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இப்போது இருக்கும் மதுவிலக்குச் சட்டத்தின் முக்கியமான பிரிவுகளின் அடிப்படையில் தொடுக்கப்படும் வழக்குகள் எல்லாம் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் விசாரிக்க வேண்டும் என்று இருக்கிறது. 4 (1) (ஏ) குற்றங்கள் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட் விசாரிக்கக் கூடிய குற்றம். நம் மாநிலத்தில் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள்தான் மிக அதிகமாக இருக்கிறார்கள். மதுவிலக்குச் சட்டக் குற்றங்களை மட்டும் விசாரிக்க விசேஷ முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் ஆக சேலத்தில் இருந்திருக்கிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்பு இருந்தேன். அப்போதே மதுவிலக்குக் குற்றங்களை விசாரிக்க முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டை ஏற்படுத்தினார்கள். ஆனால் விசேஷமாக ஒரு சிலர்தான் இருந்தார்கள். இப்போது நிலைமை என்னவாகி விட்டதென்றால் தமிழ்நாடு முழுவதும் பெரும்பாலான மதுவிலக்குக் குற்றங்களை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள்தான் விசாரிக்க வேண்டும் என்பதால், பெரிய தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஏற்கனவே, குறைவாகவுள்ள முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் ஐ.பி.சி. கேஸ்களையும், வேறு பல முக்கிய கேஸ்களையும் நிறைய விசாரிக்க வேண்டியிருக்கிறது. இதனால் வழக்குகள் முடிவடைவதில் காலதாமதம் ஏற்படுகிறது. கோர்ட்டிற்குப் போகிறவர்களும் அல்லல் படுகிறார்கள். மாஜிஸ்டிரேட்டுகளும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், எல்லா செக்கண்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகளையும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளாக ஆக்கிவிட வேண்டும். அதன் காரணமாக நிச்சயம் திறமையான நீதி நிர்வாகம் நடக்கும் என்று நான் நம்புகிறேன். ஏற்கனவே, 1976 ஆம் ஆண்டிலே தமிழ்நாட்டில் உள்ள அத்தனை மாஜிஸ்டிரேட்டுகளையும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளாக மாற்ற வேண்டும் என ஆணையிடப்பட்டது. G.O. Ms. No. 202, Home, என்ற ஆணையில் அந்த உத்தரவு வந்திருக்கிறது. உத்திரவு போட்டு மூன்று வருடங்களாகியும் கூட இன்னும் இந்த இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளாக ஆக்கப்படவில்லை. இப்போது கடுமையான மது விலக்குச் சட்டம் வந்திருப்பதால், இது மிக மிக அவசியம். ஆகவே, எல்லா கோர்ட்டுகளையும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளாக உடனடியாக மாற்றிவிட வேண்டும். இப்படி எவ்வளவு சீக்கிரமாக இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் நிலைமையை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளாக உயர்த்த முடியுமோ அந்த அளவுக்கு அது நல்லது. நமக்கு அண்டை மாநிலங்களான கர்நாடகத்திலும், ஆந்திரத்திலும்



[1979 பிப்ரவரி 15 [திரு. ஈ. எஸ். வெங்கடேசன்]

அநேகமாக எல்லா கோர்ட்டுகளும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளாகத் தான் இருக்கின்றன. முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் என்றால், அவர்கள் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் விசாரிக்க வேண்டிய கேஸ்களைக் கூட விசாரிக்க முடியும். எனவே, விரைவில் எல்லாக் கோர்ட்டுகளையும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக, நான் ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியன் என்ற முறையில் ஓய்வு பெற்ற ஊழியர்களின் சார்பாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையில் நான் ஒருவன் தான் ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியன் என்று நினைக்கிறேன். உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் பேசும்போது ஓய்வு பெற்ற ஆசிரியர்களைப்பற்றிப் பேசினார்கள். நான் ஓய்வு பெற்ற ஆசிரியர்களைப்பற்றியும் மற்றும் ஓய்வு பெற்ற எல்லா அரசாங்க ஊழியர்களைப் பற்றியும் பேசுகிறேன். தற்போது அவர்கள் உண்மையிலேயே புறக்கணிக்கப்பட்டவர்கள் என்ற நினைப்பு இருக்கிறது. அவர்கள் எல்லாம் அநேகமாக அனாதைகளாக இருக்கிறார்கள். அவர்களைப்பற்றிக் கேட்க யாரும் இல்லை. போன கூட்டத் தொடரின்போது நான் அவர்களைப்பற்றி, பேசினேன். பத்திரிகைகள் கூட அதைப்பற்றி எழுதவில்லை. ஓய்வு பெற்றவர்களுக்கு வேறு ஒன்றும் செய்யாவிட்டாலும் கூட, பேசுவதையாவது பத்திரிகைகள் வெளியிட்டால், அந்த ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ஒரு தெம்பு வரும். அது ஒரு டானிக் மாதிரி இருக்கும். ஏதோ நம்மைப்பற்றியும் கேட்பதற்குச் சில பேர் இருக்கிறார்களே, வேறு யாரும் இல்லாவிட்டாலும், நம்மைப்பற்றிப் பேசுவதற்கு ஆட்கள் இருக்கிறார்களே என்பதை அவர்கள் தெரிந்து கொள்வார்கள். பத்திரிகைகளின் ஆதரவு கண்டு மகிழ்வார்கள். பொதுமக்களும், அவர்களும் உதவி செய்ய அது தூண்டுகோலாக இருக்கும். எனவே, பத்திரிகைக்காரர்கள் இந்த மாதிரியான சிறு உதவியாவது அவர்களுக்காகச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவைக்காகப் பேச வேண்டுமே தவிர பத்திரிகைக்காகப் பேசக்கூடாது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதெல்லாம் உங்கள் மூலமாகத்தான் பேசுகிறேன். ஆனால் இவைகள் எல்லாம் பத்திரிகை மூலமாக வந்தால் நாட்டிற்குத் தெரியும். அதனால்தான் இதைச் சொல்கிறேன். சமீபத்தில் மூன்றாவது ஊதியக் குழு அறிக்கை வெளி வந்திருக்கிறது. அதில் பரிந்துரையாக Recommendation வில் Serving personnel க்கு ஒரு தேதியிலிருந்தும் ஓய்வு பெற்றவர்களுக்கு மற்றொரு தேதியிலிருந்தும் அமுலுக்கு வரும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

அதாவது, 1-4-1978-லிருந்து Serving personnelக்கு அமுல்படுத்த வேண் ஓய்வு பெற்றவர்களுக்கு 6 மாதம் கழித்து 1-10-1978-தேதியில் தான் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. வித்தியாசம் காட்டும் உத்தரவுகூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை. வரு ரூபாய் 5 அல்லது 10 அல்லது 15 அதிகமாகக் கிடைக்கும். பென்ஷன் களுக்கு அந்த உயர்வு கூட இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் எல் தங்களைப் புறக்கணித்து இதை அரசாங்கம் கவனிக்கவில்லை போலிருக்கி என்று நினைக்கிறார்கள். எனவே அரசாங்கம் இதில் கவனம் செலுத்தி ஆ செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக அரசாங்கம் ஆ செய்யும் என்று நம்புகிறேன். கடந்த 9-ம் தேதி கூட இந்த ஓய்வு பெ தள்ளாதவர்கள் தள்ளாடிக் கொண்டே கோட்டையை நோக்கி ஊர்வலம் வந்து ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அதி

(பிற்பகல் 5-30)

அவர்கள் பல குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஓய்வு பெற்ற களுடைய நன்மைக்காக அவைகளையெல்லாம் இந்த அரசு நிச்சயமாக ஆரா மென்று நினைக்கிறேன். அவர்களுடைய கோரிக்கைகள் சிலவற்றை இங் சொல்லுகிறேன். அந்தக் கோரிக்கைகளை அரசு நிச்சயமாகக் கவனிக் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(1) குறைந்த அளவு பென்ஷனை பஞ்சப்படி சேர்க்காமல் 130 ரூபாய உயர்த்துதல். (2) 1970 ஆம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்றவர்களுக்கும், அத குப்பின் ஓய்வு பெற்றவர்களுக்குக் கொடுப்பதைப் போல பஞ்சப்படியை சம மாகக்கொடுக்க வேண்டும். (3) பென்ஷனில் ஒரு பகுதியை ஒப்படை Commu செய்து விடுகிறார்கள். சாதாரணமாக ஒருவர் ஓய்வு பெற்றபின், தன் னுடைய பென்ஷன் தொகையில் மூன்றில் ஒரு பங்கை கம்யூட் பண்ணலாம் கம்யூட் பண்ணிய தொகையை பத்து வருஷம் என்ற அளவுக்குக் கணக்கிட் கொடுக்கிறார்கள். அப்படி கம்யூட் பண்ணியவர் பத்து வருடங்களுக்குப் பின் உயிரோடிருந்தால், பென்ஷன் குறைந்து போவதால் அவர்களுக்குக் கஷ்ட உண்டாகிறது. ஆகவே கம்யூட் செய்தவர்கள் 10 ஆண்டுகளுக்குப் பின் உயி ரோடிருந்தால், அந்த கம்யூட் செய்த பென்ஷன் தொகையையும் கொடுக் வேண்டுமென்று கேட்கிறார்கள். இப்படிக் கொடுப்பதால், அரசாங்கத்திற் நஷ்டம் இருக்காது. அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். (4) தற்போது வேலையில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் பஞ்சப் படியையே ஓய்வு பெற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும். இது நியாயமா





கோரிக்கை. (5) வைத்திய சிகிச்சைகளுக்குத் தரும் படியைப் பெறுவதில் உள்ள சிக்கலான முறையை மாற்றி, மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட அலவன் சைத் தர வேண்டும் என்று கேட்கிறார்கள். பல இடங்களுக்குப் போய், அப்ளி கேஷன் எழுதிக் கொடுக்க வேண்டிய நிலை அவர்களுக்குக் கஷ்டங்களை உண்டு பண்ணுகிறது. ஓய்வு பெற்றவர்களுக்கு நிச்சயமாக நோய் வரத்தான் செய்யும். அதனால் அதிகச் செலவு ஆகும். ஆகவே மாத அலவன்சாகக் கொடுத்தால், நலமாக இருக்கும். (6) குடும்பப் பென்ஷன் முறை அமுலுக்கு வருவதற்கு முன் இறந்துவிட்டவர்களின் குடும்பத்திற்கும் குடும்பப் பென்ஷனை அளிக்க வேண்டும் என்ற ஆறு கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை இந்த அரசு கவனமாகப் பரிசீலித்து நிச்சயமாக அவர் களுக்கு உதவி செய்யுமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஏனென்றால், நம் முடைய முதலமைச்சர் அவர்களுடைய திறமையான தலைமையில் இயங்குகிற அரசாங்கம் இது போன்ற குறைகளையெல்லாம் பாச உணர்வுடன் கவனித்து ஆவன செய்வதற்காகத் தேர்ச்சி பெற்ற மக்களாதரவோடு நடந்து வருகிறது. ஆகவே அமைச்சர்கள் உதவி செய்வார்கள் என்பதை மறுபடியும் சொல்லி இந்த நல்ல வாய்ப்பைக் கொடுத்தமைக்காக நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. ஆ. நல்லசிவன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் அறிக்கையாகக் கருதுகிற ஆளுநர் அறிக்கையின் மீது எங்களுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இந்த அறிக்கை தமிழ் நாட்டு மக்களிடத்திலே மிகுந்த ஏமாற்றத்தை அளித்திருக் கிறது என்பதுதான் எங்களுடைய கருத்து. இந்த அறிக்கையிலே நிறைய நல்லெண்ணம் இருக்கின்றது. அரசினுடைய அறிக்கையில் மிகுந்த நல்லெண் ணம் மட்டும் இருந்தால் பிரயோசனம் இல்லை. நிறைய காலம் பொறுத் தோம். வருடா வருடம் நல்லெண்ணம் இருந்து, அதைச் செயல்படுத்தக் கூடிய அளவுக்கு ஈடுபட்டார்களா என்றால், இல்லை. ஆகவே மக்களுக்கு இவர்களிடத்திலே நம்பிக்கை ஏற்படுவதற்குப் பதிலாக அவநம்பிக்கைதான் உண்டாகும் என்று கருதுகிறேன். இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த டாக்டர் ஹண்டே அவர்கள் கூறிய வார்த்தையையே இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் உரையை நிகழ்த்துகிற நேரத்தில், எதிர்க் கட்சி களாகிய நாங்கள் வெளிநடப்புச் செய்தது சரிதானா என்று கேட்டார்கள். நாங்கள் எல்லாம் எதிர் அணியாக ஏன் ஒன்று சேர்ந்திருக்கிறோம் என்றும் கேட்டார்கள். இந்தக் கேள்வியையெல்லாம் குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியையும், முஸ்லிம் லீக்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கட்சியையும் பார்த்துக் கேட்டார்கள். அப்போது அவர் என்ன சொ என்றால், "நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்று உங்களு தொகுதிகளில் எல்லாம் முதல்வர் அவர்கள் இரவு பகல் பார்க்காமல் தேர்தல் வேலை செய்யவில்லையா? இப் மட்டும் ஏன் எதிர் அணியில் இருக்கிறீர்கள்?" என்றார். இதை எங்களைப் பார்த்து ஏன் கேட்க வேண்டும்? இவர் எங்களைப் பார்த் படிக் கேட்டது எங்களுக்கு எப்படிப் படுகிறது என்றால், டாக்டர் ஹ அவர்கள் பண்போடு பேசுவதால் அப்படிக் கேட்டார்கள் என்று நினை றோம். ஆனால் வெளியே மேடைகளில் வேறுமாதிரிப் பேசுகிறார் தேர்தல் காலத்தில் ஒரு கட்சி மற்றொரு கட்சியோடு தொகுதி உடன் செய்கிறது. அப்படிச் செய்யும்போது, ஒவ்வொருவருடைய நிலையைக் க கிட்டு, மற்றொருவருடன் சேர்ந்தால், எத்தனை ஸ்தானங்கள் அதிகம் கிடைக்கும் என்று எண்ணித்தான் தொகுதி உடன்பாடு செய்கிறார் அவர்களுக்கிடையே தொகுதி உடன்பாடு பண்ணுவதன் காரணமாகத் அதிகமான ஸ்தானங்கள் கிடைக்கின்றன. அப்படி தொகுதி உடன்ப செய்யும் கட்சிகளிலே பெரிய கட்சி அதிகமான இடங்களைப் பெற்று அ அமைத்த பிறகு, மற்ற சிறு சிறு கட்சிகள் அரசாங்கத்தினுடைய கொள் களை விமர்சிக்க ஆரம்பிக்கும்போது, ஆட்சியில் உள்ள பெரிய கட்சி, "நாங் போட்ட பிச்சைதானே" என்று கேட்கிறார்கள். இவ்வளவு பச்சையா கேட்கக்கூடாது என்று எண்ணி இங்கே டாக்டர் ஹண்டே அவர்கள் இப் எதிர்க்கலாமா, இது நன்றி தானா என்பது போல் கேட்டார்கள் என் நினைக்கிறேன். இது நன்றிப் பிரச்சினையல்ல. தேர்தல் காலத்திலே நடந் தொகுதி உடன்பாடுதான். கொள்கை உடன்பாடு அல்ல. கொள்கை விஷயத் மாறுபடும்போது, விமர்சனம் செய்வதை யாரும் விட்டுக்கொடுக்க மாட்டோ தொகுதி உடன்பாடுதான் செய்திருக்கிறோம். கொள்கை உடன்பாடு நமக்கு இல்லை. மக்களுக்கு விரோதமான காரியத்தை ஆளும் கட்சி செய்தா எதிர்க் கட்சிகளுக்கு அதை விமர்சனம் செய்யும் உரிமையிருக்கிற ஏற்கெனவே இதை ஒத்துக்கொண்டிருக்கிறோம். நாங்கள் ஏன் அவ்வா விமர்சிக்கிறோம் என்று எண்ணிப் பார்ப்பதற்குப் பதிலாக, டாக்டர் ஹண்டே மாதிரி மதிநுட்பம் 'இன்டலக்சுவல்' உள்ளவர்கள் 'சிம்பதியில்லை' பண்ணி பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது.

இதை நல்ல முறையில் யோசிப்பது நல்லது. 1977 ஆம் ஆண்டு ஜ மாதம் தேர்தலில் நாங்களும் முஸ்லிம் லீக் கட்சியும் சேர்ந்திருந்தோம். 19 ஆம் ஆண்டில் மதுரை மாநகராட்சித் தேர்தலில் நாங்களும் இந் கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்திருந்தோம். அப்படிச் சேர்ந்திருந்த நாங் ஆட்சியாளர்களை இன்றைக்கு ஏன் விமர்சிக்கிறோம்? ஏதோ கட்சி சம்ப





மான நலனுக்காக உள்ள ஒரு பிணக்கு என்று டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னது போல் தோன்றியது. அது அப்படி இல்லை. கட்சி சம்பந்தமான பிணக்கு என்று நாங்கள் பார்ப்பதில்லை. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள், பள்ளிபாளையம் தொழிற் சங்க இயக்கத்தைப்பற்றி. நாங்கள் இரண்டு பேரும் தோழமையாக இருந்து அதற்குத் தலைமை வகித்திருக்கிறோம். என்னைப் பற்றி அறிமுகப்படுத் தும்போது கூட, நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து வேலை நிறுத்தத்துக்கு தலைமை தாங்கியது பற்றி அவர் கூறியிருக்கிறார். ஆனால் அவர் மந்திரியாக வந்த பிறகு, ஒரு காரியத்தைச் செய்தார்கள். இரண்டு பேரும் சேர்ந்து தலைமை தாங்கிய அந்த இயக்கத்திலுள்ள சங்க நிர்வாகிகள் மீது பழி வாங்கியதுதான். எங்கள் சங்கத்தைச் சேர்ந்த 4 பேர் பழி வாங்கப்பட்டார்கள். அவர்கள் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டு அவ்வளவு பெரிய மோசமான குற்றச்சாட்டு அல்ல. ஆனால் அவர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டு உண்மையிலேயே மோசமான குற்றச்சாட்டு. ஆனால் அவர் பின்னால் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். எங்கள் சங்க நிர்வாகிகள் வேலைக்குத் திரும்ப எடுக்கப்படவில்லை. அதனால் உறவு முறிந்து விடவில்லை. ஆகவே நாங்கள் கட்சியை மட்டும் பார்க்கவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இரத்தினம் என்பவர் மீது வழக்கு தொடரப்பட்டு அவர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார். அந்த வழக்கு லேபர் கோர்ட்டுக்குப் போனபோது, அந்த டிஸ்மிசல் சரி என்று உறுதி செய்யப்பட்டது. அதற்கு மேல் அவர் உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்தார். உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்தபோது, நிர்வாகத்தினருடைய வழக்கறிஞர்களும், அவருடைய சங்கத்தின் வழக்கறிஞரும் பேசிய பிறகு, வழக்கு உயர்நீதி மன்றத்தில் தொழிலாளிக்குச் சாதகமாக வந்துவிடுமென்று கருதி, அப்படியானால் பேக் வேஜஸ் கொடுக்க வேண்டி வரும் என்பதால், அவருடன் பேசி மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. பிறகு அவருடைய வழக்கு வாபஸ் பெறப்பட்டது. வேலை நீக்கம் செய்யப்பட்ட சி.பி.எம். தொழிலாளிகளை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டுமென்று அருமை நண்பர் திரு. நல்லசிவன் அவர்கள் இது வரையில் என்னிடம் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 5-40)

**திரு. ஆ. நல்லசிவன் :** இதற்கு நான் என்ன சொல்லுவது என்றே
வில்லை. நான்தான், அந்த நான்கு பேர்களையும் வேலைக்கு மீ
வைத்துக்கொள்ளவேண்டுமென்று மனுவை அமைச்சரவர்கள் வி
கொடுத்தேன். அதன்மீது அவர்கள் உத்தரவு போட்டார்கள். இப்படி
போடுகிற உத்தரவுகள் அமலுக்கு வாராமல் போய்விடுமென்று நினைக்கி
நீங்கள் சொன்னதால், நான் அந்த விவரங்களைச் சொல்கிறேன். இ
ஹைக்கோர்ட்டுக்குப் போனதால், இவர்களுக்குச் சாதகமாகிவிடுமெ
பயந்து, நிர்வாகத்தினர், சமாசமானார்களென்று அமைச்சர
சொன்னார்கள். பயந்த மேனேஜ்மெண்ட் அல்ல அது. சேஷசாயி கம்
என்பது இந்தியாவிலுள்ள 75 மானாபலி மேனேஜ்மென்டில் ஒன்ற
மேட்டூர் கெமிகல் தொழிற்சாலை எம்ப்ளாயீஸ் குறித்த வழக்கை க
கோர்ட்டில் இன்னும் இழுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கோர்ட்
வரப் பயந்துவிடுவார்களா? கோர்ட்டுக்கு வரப் பயந்தார்களா அ
அமைச்சர் அவர்களின் செல்வாக்குக்கு உட்பட்டார்களா என்ப
சமுதாயத்தின் முடிவிற்கு விட்டுவிடுகிறேன்.

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், கட்சியாக இருந்த
இந்தப் பிரச்சினையில் தகராறு எப்போதோ ஏற்பட்டிருக்கும். இன்றை
தொழிலாளர்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. கொள்கை வே
இருக்கிறது. கொள்கை முரண்பாடு இருக்கிறது. அதனால் ஏற்பட்ட தகரா
தான் இது. அதை நீங்கள் அப்ரிசியேட் பண்ண வேண்டும். நீங்கள் அ
சிம்ப்ளிபை பண்ணி, முதலமைச்சரவர்கள் வரவில்லையா என்று கேட்ப
அவ்வளவு இம்மெச்சூராகவா உட்கார்ந்திருக்கிறோம்? அல்லது நீ
அவ்வளவு இம்மெச்சூரா? சமுதாயப் பிரச்சினைகளை இப்படிப் பே
தீர்த்துவிட முடியாதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்களைப்பற்றி ஆளுநர் உரையில் ஒன்றும் குறிப்பிடப்
வில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் கு
பிட்டார்கள். அது தற்செயலாக நேர்ந்தது அல்ல என்று நினைக்கிறே
தொழிலாளர்கள் பிரச்சினைபற்றி என்ன நினைக்கிறார்களோ, மனச்சா
பூர்வமாக என்ன நினைக்கிறார்களோ, உள்ளத்திலே என்ன நினைக்கி
களோ அதை அப்படியே அறிக்கையிலே எழுதினால் அவர்களுக்கு பா
ஏற்படுமென்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகலால் எழுதிக்
வரவேன் என்று விட்டுவிட்டார்கள். தொழிலாளர் நல இலாக்காவை எ
நிர்வகித்திருக்கிறார்களென்று உண்மையாக எழுதினால், தமிழ் நாட்டி



தொழிலாளர்களுக்கு ஆத்திரம் ஏற்படுமென்று இந்த அரசுக்கு நன்றாகத்
தெரியும். ஆதலால் அதைப்பற்றிச் சொல்லாமல் விட்டுவிட்டார்களென்று நான்
நினைக்கிறேன். இந்த அரசுக்கு தொழிலாளர்களைப் பற்றி ஒரு கொள்கை
இருக்கிறது. அது இந்த அறிக்கையில் சொல்லப்படவில்லை. 'அன்டிக்ளேர்ட்
பாலிசி'—சொல்லப்படாத கொள்கை இருக்கிறது. அது என்னவென்றால் 200,
250 ரூபாய் சம்பளம் வாங்குகிற யாரும் சம்பள உயர்வோ, பஞ்சப்படி
உயர்வோ, போனஸ் உயர்வோ கேட்பது நியாயமல்ல, அவர்கள் போராடக்
கூடாது, அப்படி போராடினால் அது சமுதாயத்திற்குக் கெடுதலானது என்று
அமைச்சர்கள்—முதலமைச்சரிலிருந்து மற்ற அமைச்சர்கள்வரை நினைக்கி
றார்கள். அப்படிப்பட்ட கோரிக்கைகளுக்காகப் போராடுவதைப் பற்றி அவர்
களுக்குக் கோபம் வருகிறது. குறிப்பாக அரசும் முதலாளியாக இருக்கிறது.
$7\frac{1}{2}$ லட்சம் சிப்பந்திகள் அரசின்கீழ் இருக்கிறார்கள். அரசுக்குக் கீழே மின்
வாரியம் இருக்கிறது, டிரான்ஸ்போர்ட் இலாகா இருக்கிறது. அரசின்கீழ் எத்
தனையோ இலாக்காக்கள் இருக்கின்றன. அங்கே வேலை செய்யக்கூடிய
சிப்பந்திகள், 250 ரூபாய், 300 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குபவர்கள்
கலெக்டிவ் பார்கெயின் செய்யலாமென்றால், அரசாங்க பட்ஜெட்டை அது பாதிக்
கும். நாட்டிலே ஒன்றுபட்ட தொழிற் சங்கப் போராட்டங்கள், தொழி
லாளர் போராட்டங்கள் நடக்க அனுமதித்தால், அரசாங்கத்திற்குத் தொந்தரவு
ஏற்படுமென்ற அனுபவம் இருக்கிறது. எனவே தமிழ் நாட்டில் ஒன்றுபட்ட
தொழிற் சங்கப் போராட்டங்களை அனுமதிப்பதில்லை என்ற முடிவிற்கு வந்
திருக்கிறார்கள். இப்படி போராட்டங்கள் என்று சொல்லும்போது, இரும்புக்
கரம் கொண்டு அடக்குவோமென்று சொல்வதில்லை. அதுதான் புத்தி
சாலித்தனம். ஏற்கெனவே இருந்த அரசாங்கம் அப்படிச் சொல்லி, கெட்ட
பெயர் வாங்கியதென்பதைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். செய்வதைச் செய்
வோம், முன்கூட்டியே ஏன் சொல்லி, அதைச் செய்ய வேண்டுமென்று மிக
சாமர்த்தியமாகச் செய்கிறார்கள். வெளியே, தாகூக்காக, இந்தப் பூனையும்
இந்தப் பாலைக் குடிக்குமா என்று நினைக்கிற அளவிற்கு, உழைப்பாளி மக்
களுக்கு உதவிகளைச் செய்கிறோமென்று பேசுகிறார்கள். காரியம் செய்யும்
போது—டபுள் டாக், இரட்டை நாக்கு, இரண்டு அணுகு முறை இருக்கிற
தென்பதை உதாரணங்கள் மூலம் என்னால் கூற முடியும். அவர்களுக்கு இப்
படிப்பட்ட கண்ணோட்டம் இருப்பதால், என்ன செய்கிறார்கள்? இரும்புக்
கரம் கொண்டு அடக்குவோமென்று சொல்வதில்லை. பொது மக்களைக்
கொண்டு வந்து சந்திப்போமென்று சொல்கிறார்கள். இப்படி எதிர்க் கட்சித்
தலைவராக இருக்கும் போது, கூறினால் பரவாயில்லை. முதலமைச்சராக
இருக்கும்போது, அப்படிச் சொன்னால் என்ன அர்த்தம்? அக்டோபர் 23
ஆம் தேதியன்றும், என்.ஜி.ஓ. ஸ்டிரைக் நடந்தபோதும் பொது மக்களைக்
கொண்டு சந்திப்போமென்று சொன்னார்கள். அவர்கள் என்ன நினைக்கிறா

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 பிப்ரவரி

கள்? இந்த நாட்டிலே—தமிழ் நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள். இன் டிரியல் ஒர்க்கிங் பாபுலேஷன்—உழைப்பாளி மக்கள் 10, 15 சதவிகிதம் இருக்கிறார்கள். மொத்த பாபுலேஷனில் 10, 12 அல்லது 15 சதவிகிதம் இவர்கள் இருக்கிறார்கள். இவர்களும் ஒன்றுபட்டுப் போராடவில்லை. சேர் போராடுவதில்லை. பஞ்சாலை ஊழியர்கள் தனியாகப் போராடுகிறார் சிமெண்ட் தொழிற்சாலை ஊழியர்கள் தனியாகப் போராடுகிறார்கள். அப்ப போராடும்போது, பொதுமக்களுக்கு ஓரளவுக்கு அசவுகரியம் ஏற்படுகிற டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தியபோது, பொது களுக்கு அசவுகரியம் ஏற்பட்டது. இப்படி எந்தத் தொழிலில் ஈடுபட்டவர் போராடினாலும், அசவுகரியம் ஏற்படும். எனவே 'உங்கள் நலனுக்கு இ கள் குறுக்கே நிற்கிறார்கள்' என்று பொது மக்கள் மத்தியில் சொ போராட்டத்தை அடக்கிவிடலாமென்று நினைக்கிறார்கள். போன அ மாதிரி இரும்புக்கரம் கொண்டு அடக்குவோமென்று சொல்லாமல், பொ மக்களைக் காட்டி இப்படிப்பட்ட போராட்டங்களை அடக்கலாமென்று கரு கிறது. அதனுடைய தொடர்ச்சியாக இந்த அரசு தமிழ் நாட்டில் எந்த தொழிற் சங்கப் போராட்டமும் வெற்றி அடையக்கூடாதென்றும் இல்லாவிட்டால், தன்னுடைய பைனான்சியல் பொசிஷன் அபெக்ட் ஆ மென்றும் கருதுகிறது. இதனால் முதலாளிகளுக்கு சவுகரியத்தை உண்டாக்கு கிறார்கள். முதலாளிகளின் இன்புளுயன்ஸ், நிர்பந்தம், செல்வாக்கு இவை களைப் பற்றியெல்லாம் பேசலாம். ஆனால் பூரணமாகப் பேச நேர போதாது.

1977 ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் நடந்த பல்லவன் டிரான்ஸ்போர்ட் ஊழியர்களின் ஸ்டிரைக்கை உடைக்க அரசு மொஃபுசில் பஸ்களைக் கொண்டு வந்தது. இது ஐ.எல்.ஓ. கோட்பாட்டுக்கு விரோதமானது. ஏற்கெனவே வேலை செய்யும் தொழிலாளர்கள் நூற்றுக்கு நூறு வேலை நிறுத்தம் செய்தால், இந்த மாதிரி ஸ்டிரைக்கை உடைக்கக்கூடாதென்று ஐ.எல்.ஓ. தீர்மானத்தை மத்திய அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது. அது மாநில அரசைக் கட்டுப்படுத்தும். அப்படி இருந்தும் பகிரங்கமாக ஸ்டிரைக்கை உடைத்தார்கள். 1978-லே என்.ஜி.ஓ.-வினர் போராடினார்கள். அப்போது ஹைட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளில் 'மீனியல் ஸ்டாஃப்' வேலைக்கு வர வில்லை. அப்போது சிறைக் கைதிகளைக் கொண்டுவந்து வேலை செய்தார் கள். ஐ.எல்.ஓ. கோட்பாடு சிறைக் கைதிகளை உபயோகப்படுத்தக் கூடா தென்று இருக்கிறது. இவர்கள் நாசுக்காகக் காரியங்களைச் செய்தார்கள் ஒரு தொழில் தகராறு நடக்கிறது. தொழிலாளர்கள் போராடுகிறார்கள் வேலை நிறுத்தம் முடிவடைகிறது. ஒப்பந்தம் செய்யப்படுகிறது. ஒப்பந்தம் செய்யப்பட்ட பிறகுகூட, வழக்குகள் முடியாமல் இருக்கிறது. தொழிலாளர்



1979 பிப்ரவரி 15] [திரு. ஆ. நல்லசிவன்]

கள் மீதுள்ள வழக்குகளை இவர்கள் வாபஸ் செய்வதில்லை. வருஷக் கணக் காக வாபஸ் செய்வதில்லை. பெரியநாயக்கன்பாளையம் லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் தொழிலாளர்கள் 1977 ஆம் ஆண்டு ஜூன் 1 ஆம் தேதி ஸ்டிரைக்கை ஆரம்பித்தார்கள். 1¾ வருடம் ஆகிறது. அப்போது போடப்பட்ட வழக்கு கள்—35 தொழிலாளர்களின் மீதான வழக்குகள், செக்ஷன் 307-ன்கீழ் கொலை செய்ய முயற்சித்ததாக போடப்பட்ட வழக்குகள் விசாரிக்கப்பட்டு, இன்றைக்கு அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 1¾ வருடம்—15 நாட் களுக்கு ஒரு முறை கோர்ட்டுக்கு அவர்கள் அலைந்து கொண்டிருந்தார்கள். இப்படி தொடர்ந்து செய்கிறார்கள். ஆனால் என்ன சொல்லுகிறார்கள்? ஆகஸ்ட் 15ல் வழக்குகளை வாபஸ் வாங்குகிறோம், பெரியார் நூற்றாண்டு விழாவின்போது வழக்குகளை வாபஸ் வாங்குகிறோம் என்று பொது மக் களுக்கு அறிவிக்கிறார்கள். ஆனால் உள்ளுக்குள்ளே வழக்குகளை நடத்துங்க ளென்று இரட்டை வேடம் போடுகிறார்கள். பொது மக்களுக்குக் கூறுவது ஒன்று, செயல் முறை வேறு, ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டில் நானும் ஒரு உறுப்பினன். பல தொழில் தகராறுகள் முடிந்துவிட்டன, ஆனால் வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை. எனவே தொழிலாளர்களை ஏன் 15 நாட்களுக்கு ஒரு முறை கோர்ட்டுக்கு வரச் சொல்லுகிறார்கள், அதனால்

(பிற்பகல் 5-40)

அவர்கள் வேலையும் சம்பளமும் இழக்கிறார்கள் என்று கூறினோம். நீங்கள் சொன்னபடி எல்லாம் செய்ய வேண்டுமா என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அதிகாரிகள் அப்படிப்பட்ட அக்ரிமெண்டைப் போடுகிறார்கள். தொழிலாளர்கள் மீதுள்ள கேஸ்கள் வாபஸ் வாங்கப்படவில்லை. அதற்கு என்ன சொல்கின்றார்கள்? அது ஹோம் டிப்பார்ட்மெண்டிலே, செய்ய வேண்டிய வேலை என்று சொல்கின்றார்கள். நான் அவர்களிடம் கேட்டேன். லேபர் டிப்பார்ட்மெண்டிலிருந்து தொழில் தகராறு தீர்ந்துவிட்டது என்று எழுதினால்தான், ஹோம் டிப்பார்ட்மெண்ட் வாபஸ் வாங்குமா என்று கேட்டேன். எவ்வளவு சாமர்த்தியமாக சமாளிக்கிறார்கள் பாருங்கள். இப்படிப் பட்ட தொல்லைகள் தொழிலாளர்களுக்கு ஏற்பட வேண்டும் என்று அமைச்சர் களே சொல்கின்றார்கள். இப்படிப்பட்ட கஷ்டங்கள் எல்லாம் ஏற்படும் என்று போராட்டங்கள் நடத்துகின்ற தொழிலாளர்களுக்குத் தெரிய வேண்டும் என்றும் சொல்கின்றார்கள். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் அக்டோபர் 1978ல் போனஸ் தகராறு வந்தது. போராட்டம் நடந்தது. அதில் 800 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை, கைது செய்யப்பட்டவர்களை ஜாமீனில் விடக்கூடாது என்று பப்ளிக் பிராசிக்யூட்டர் அவர்கள் ஆட்சேபணை பண்ணியிருக் கிறார்கள். இதைப்பற்றி முதல்வர் அவர்களைக் கேட்டபோது, "தொழிற்

சங்கத் தலைவர்கள் பேச்சைக் கேட்டுப் போராட்டங்கள் செய்தால், எ ஆகும் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். அதைப்பற்றி அவ சிறைக்குள்ளே இருந்துகொண்டு ஆற அமர யோசிக்கட்டும்" என்று அவ கூறுகிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலை அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கூறியது, வன்முறைச் செயல்க ஈடுபட்டவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள்தான் நீதிமன்றம் வரைக் சென்றிருக்கின்றன. அதைப்பற்றி நீதி மன்றம் தான் தீர்ப்பு சொல்ல வேண் வன்முறைச் செயல்களில் ஈடுபடாத தொழிலாளர்கள் மீதுள்ள குற் சாட்டுகள் வாபஸ் வாங்கப் பெறும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அ தான் செய்துகொண்டிருக்கிறார்கள். வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமெ சொன்னால், 'லா அண்டு ஆர்டர் சிட்டுவேஷன்' என்ன ஆகும் என்ப பற்றியும் நாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். வன்முறை ஈடுபட்டவர்கள் குற்றம் நிரூபிக்கப் பெற்று அவர்களுக்குத் தண்டனை இல் என்றால், நிலைமைகள் என்ன ஆகும்? அப்படி நிலைமைகள் இருக் போது, அந்த வழக்குகளை வாபஸ் வாங்குவது எப்படி என்றுதா சொன்னார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : "சிறைக்குள்ளே இருந்துகொண்டு, தொழி சங்கத் தலைவர்கள் சொல்வதைக் கேட்டால், என்ன கஷ்டங்கள் ஏற்படு என்பதைப்பற்றி யோசித்துப் பார்க்கட்டும். அவர்கள் வெளியிலே இருந்தா அது தெரியாது. சிறை தான் அதற்குரிய இடம், சிந்தனைக்குரிய இடம் என்று கூறியதைத்தான் நான் சொல்கிறேன். எ.டி.எம்.கே. ஆட்சிக் வருவதற்கு முன்பு டி.எம்.கே. ஆட்சியிலே, அந்தக் கட்சித் தொண்டர்க மீதும் இப்படிப்பட்ட ஆயுதத்தைத்தான் பிரயோகித்தார்கள் என்று ஜனா பதிக்கு முறையீடு செய்யப்பட்டது. நாம் ஜனநாயக அமைப்பிலே இருப் தால், நான் கேட்கிறேன். தமிழ் நாட்டிலே எங்களுடைய கட்சியும் தொழிற்சாலைகளும் இந்த அரசினுடைய கொள்கையை எதிர்த்துப் போராடுகின்றன. இந்தத் தொழிற் சங்கத்தின் மீதுதான் வழக்குகள் போடுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட கட்சி தொழிற் சங்கத்தின் மீது மட்டும் வழக்குப் போடுவில்லை. எல்லா தொழிற்சங்க ஊழியர்கள் மீதும் போடுகிறார்கள். தொழிற் சங்கத் தலைவர் கள் தொழிலாளர்களை எப்போதும் ஸ்ட்ரைக் பண்ணச் செய்கிறார்கள். தமிழ் நாடு அரசுடன் தகராறு ஏற்படச் செய்வதாக ஒரு கருத்து இருக்கிறது. இது உண்மையல்ல. இந்த அரசு என்ன பண்ணுகிறது? ஆயிரக்கணக்கான தொழி லாளர்கள் மீது இந்த அரசு வழக்குகள் போடுகிறது. இதில் என்ன தெரிகிறது? தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர் ஒருவர் இப்போது அமைச்சரா





இருக்கிறார். உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்று சொல்வார்களே, அது போல இப்போது நடந்துகொண்டிருக்கிறது. எங்களுடைய இயக்கத்தில் உள்ள பலஹீனத்தை இந்த அரசிலே நீங்கள் இருந்துகொண்டு சுட்டிக் காட்டுகிறீர்கள். உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பது போல, தொழிற் சங்க இயக்கத்திலே இருந்தவர் இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியை உண்டாக்குகிறீர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் அவர்களைத்தான் உடன் பிறப்பு என்று குறிப்பிடுகிறீர்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : தொழிற் சங்கத் தலைவராக இருந்தவர். எங்கள் பலஹீனம் எங்கெல்லாம் இருக்கிறது என்பதைப் பற்றி ஆட்சிக்கு எடுத்துச் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். (சிரிப்பு) இப்போதும் நான் மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களைப் பற்றி தனிப்பட்ட முறையில் குறை சொல்ல விரும்பவில்லை. அரசாங்கத்துக்குச் சிறந்த கருவியாக துணையாகப் பயன்படுகிறார்கள் என்று சொல்கிறேன். அவரைத் தனிப்பட்ட முறையில் குறைத்துச் சொல்லவில்லை. அரசின் கொள்கையைத்தான் அவர்கள் அமுல் நடத்துகிறார்கள்.

டி.ஐ. சைக்கிள்ஸ் பற்றி இங்கே மாண்புமிகு அங்கத்தினர் டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பேசும்போது, சிம்சன் கம்பெனி பெருமளவுக்கு போனஸ் கொடுத்தது என்று சொன்னார்கள். அதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசும்போது, ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். இதற்கு முன்பு சிம்சன் கம்பெனியில் கிட்டத்தட்ட 95 லட்சம் ரூபாய்க்கு போனஸ் தொழிலாளர்களுக்குக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். அப்போது ஆட்சியில் இருந்த ஆளுங்கட்சிக்கும் எங்களுக்கும் மாறுபட்ட கருத்து இருந்தது. டாக்டர் ஹண்டே அவர்களுக்கும் மாறுபட்ட கருத்து இருந்தது. ஆனால் அப்போது சிம்சன் கம்பெனி நிர்வாகத்தின் தொழிற் சங்க விஷயத்தில் அரசியல் சூதாட்டமே நடத்தினார்கள். ஆளுங் கட்சியினரும் நிர்வாகத்தினரும் சேர்ந்து ஒரு அரசியல் சூதாட்டத்தை நடத்தினார்கள். டாக்டர் ஹண்டே அவர்கள் தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர்,

இப்போது தொழிலாளர்களின் உரிமையை மறுக்கலாமா என்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று டாக்டர் மீண்டேட அவர்கள் சொல்வார்கள். ஆனால் சிம்சன் நிர்வாகம் அன்று அரசியலிடுல் சூதாட்டம் நடத்தியது. சிம்சன் நிறுவனம் 95 லட்சம் ரூபாய் தொழிலாளர்களுக்கு போனசாகக் கொடுத்ததாகச் சொல்கின்றார்கள். அவர்கள் எங்கிருந்து கொண்டுவந்து கொடுத்தார்கள்? அவர்கள் பாட்டன் வீட்டிலிருந்தா கொண்டுவந்து கொடுத்தார்கள்? தொழிலாளர்கள் சம்பாதித்ததைக் கொடுத்தார்கள். சிம்சன் கம்பெனி பற்றி நான் இதைத் தான் சொல்ல விரும்புகிறேன்.

டி.அய். சைக்கிள்ஸ் கம்பெனியிலே நடந்த சாமாசாரம் என்ன? டி.அய். சைக்கிள்ஸ் பற்றிப் பேசினார்கள். தலைமை நீதி மன்றம் சொன்னது என்ன? அது என்னவென்றால், தொழிலாளர்களுக்குக் கொடுக்கின்ற பஞ்சப்படியை டி.ஏ.-வை உற்பத்தியோடு இணைக்கக்கூடாது. சம்பந்தப்பட்ட வாழ்க்கைப் புள்ளி, அதை வேலை செய்யும். நாளோடுதான் இணைக்கவேண்டும். புரொடக்ஷனோடு சம்பந்தப்படுத்தக்கூடாது என்று தலைமை நீதி மன்றத்தில் சொல்லியிருக்கின்றார்கள். டி.அய். சைக்கிள்ஸ் முதலாளிகள் தொழிலாளர்களின்மீது வேலைப் பளுவை அதிகமாக்கினார்கள். அவர்கள் பஞ்சப்படியை உற்பத்தியோடு இணைக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தொழிற் சங்கம் அதைப்பற்றிப் பேசும்போது ஒத்துக்கொண்டது.

**திரு. ஆ. நல்லசிவன்:** தொழிற்சங்கம் பேசும்போது, சில தலைவர்கள் அதை ஒத்துக்கொண்டது உண்மைதான். ஆனால் தொழிலாளர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. டி.அய். சைக்கிள்ஸ் தொழிலாளர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி யெல்லாம் செய்தீர்கள். அய்வர் குழு என்றெல்லாம் வந்திருக்கிறது. உண்மைகளை அவர்கள் மறைக்கிறார்கள். தலைமை நீதி மன்றம் பஞ்சப்படியை உற்பத்தியோடு சம்பந்தப்படுத்தக் கூடாது என்ற தீர்ப்பைத்தான் சொல்லியிருக்கிறது. இப்போது போடப் பட்டிருக்கின்ற ஒப்பந்தத்தைத் தொழிலாளர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.





அந்த ஒப்பந்தத்தினால் பல ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். ஒப்பந்தம் முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்கின்றது. அதையே முதலமைச்சர் அவர்களும் 'அப்ரூவ்' பண்ணுகிறார்கள்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அவர் சொல்கின்ற கருத்துக்கள் முதலமைச்சர் அவர்கள்பற்றி இருக்கின்ற காரணத்தினாலே, நான் தலையிட வேண்டியிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அதை 'அப்ரூவ்' பண்ண வில்லை. சமரசப் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தது. முதலாளிகள் வற்புறுத்தியது 1.25 என்று. புரொடக்ஷன் 1.25 சைக்கிள் தர வேண்டுமென்று கேட்டார்கள். தொழிலாளர்கள் 1.15 என்று கேட்டார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னது போல், சங்கத் தலைவர்கள் ஒத்துக்கொண்டார்கள். இதை அவர்களுடைய தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று பின்னர் கூறினார். அவர்களை ஏற்றுக் கொள்ளவைக்க முடியவில்லை எனக் கூறினார். இதற்கிடையிலே தொழிலாளர்கள் ஒரு கூட்டம் போட்டு, அவர்களுக்குள்ளேயே அய்ந்து தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அந்த அய்ந்து தொழிலாளர்களுக்கு அவர்கள் அதிகாரம் கொடுத்தார்கள். அந்த அய்ந்து தொழிலாளர்களும் முதலாளிகளுடன் பேசி ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படை யிலேதான் அவர்கள் வேலைக்குப் போய்விட்டார்கள். 1.25 சைக்கிளி லிருந்து 1.33 சைக்கிள் வரை அவர்கள் அதிகமாக வேலை செய்து, கிட்டத்தட்ட ரூ. 60, ரூ. 70 வரையில் அதிகச் சம்பளம் வாங்கிக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே நடந்த ஒப்பந்தத்திற்கும் அரசுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அது முதல்வர் அவர்கள்முன் ஏற்பட்ட ஒப்பந்தம் அல்ல. 'கன்சிலியேஷன்' செய்து வந்த ஒப்பந்தமும் அல்ல. 11—1—1978 முதல் 14—10—1978 வரையில் மூடிவிட்டு இருந்த காரணத்தால், தொழிலாளர் களாகவே அய்ந்து தொழிலாளர்களை நியமித்து, அவர்களே ஒப்பந்தம் செய்து கொண்டு கையெழுத்திட்டு, பிறகு 16—10—1978-ல் தொழிற்சாலையைத் திறந்து கொண்டார்கள். அப்படி ஒப்பந்தம் செய்து கொண்டதைத்தான் அரசுக்கு அனுப்பினார்கள். நாங்கள் அதை 'ரிஜிஸ்தர்' செய்தோம். It becomes a valid document according to law. ஆகவே இந்த

ஏற்றுக்கொள்ளவில்லை என்று பின்னர் கூறினார். அவர்களை ஏற்றுக் கொள்ளவைக்க முடியவில்லை ' எனக் கூறினார். இதற்கிடையிலே தொழிலாளர்கள் ஒரு கூட்டம் போட்டு, அவர்களுக்குள்ளேயே ஐந்து தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அந்த ஐந்து தொழிலாளர்களுக்கு அவர்கள் அதிகாரம் கொடுத்தார்கள். அந்த ஐந்து தொழிலாளர்களும் முதலாளிகளுடன் பேசி ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் அவர்கள் வேலைக்குப் போய்விட்டார்கள். 1.25 சைக்கிளிலிருந்து 1.33 சைக்கிள் வரை அவர்கள் அதிகமாக வேலை செய்து, கிட்டத்தட்ட ரூ. 60, ரூ. 70 வரையில் அதிகச் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நடந்த ஒப்பந்தத்திலும் அரசுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அது முதல்வர் அவர்கள்முன் ஏற்பட்ட ஒப்பந்தம் அல்ல. 'கன்சிலியேஷன்' செய்து வந்த ஒப்பந்தமும் அல்ல. 14—1—1978 முதல் 14—10—1978 வரையில் மூடிவிட்டு இருந்த காரணத்தால், தொழிலாளர்களாகவே ஐந்து தொழிலாளர்களை நியமித்து, அவர்களே ஒப்பந்தம் செய்து கொண்டு கையெழுத்திட்டு, பிறகு 16—10—1978-ல் தொழிற்சாலையைத் திறந்து கொண்டார்கள். அப்படி ஒப்பந்தம் செய்து கொண்டதைத்தான் அரசுக்கு அனுப்பினார்கள். நாங்கள் அதை 'ரிஜிஸ்தர்' செய்தோம். It becomes a valid document according to law. ஆகவே இந்த விவகாரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரை இழுக்க வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். தொழிலாளர்கள் நீண்ட நாட்களாகப் போராடிப் பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களும் நானும் தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்தபோது, 55 நாட்களாக இணைந்திருந்து போராடியிருக்கிறோம். அவர் ஒரு 'சென்ட் லீடர்'.

**திரு. ஆ. நல்லசிவன் :** அமைச்சர் அவர்கள் ரிக்கார்டுகளைக் காட்டிப் பிரயோசனமில்லை. பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்தோடு இணைத்து, அத்துடன் உற்பத்தியோடு இணைக்க வேண்டும் என்று முதல்வர் கூறினார் என்பதை நான் நிரூபிக்க முடியும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அங்கத்தினர் அவர்கள் முதல்வர் அவர்களை 'அட்டாக்' பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் உறுப்பினருக்கு விவரங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளைக் கேட்டுக் கொள்ளுங்கள்.







விவகாரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரை இழுக்க வேண் என்று சொல்லிக்கொள்கிறேன். தொழிலாளர்கள் நீண்ட நாட்கள் போராடிப் பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர் நானும் தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்தபோது, 55 நாட்களாக இ திருந்து போராடியிருக்கிறோம். அவர் ஒரு 'சென்ட் லீடர்'.

**திரு. ஆ. நல்லசிவன் :** அமைச்சர் அவர்கள் ரிக்கார்டுகளைக் கா பிரயோசனமில்லை. பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்தோடு இணை அத்துடன் உற்பத்தியோடு இணைக்க வேண்டும் என்று முதல்வர் கூறி என்பதை நான் நிரூபிக்க முடியும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அங்கத்தினர் அவர்கள் முதல் அவர்களை 'அட்டாக்' பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களு ஒன்று சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் உறுப்பினருக்கு விவ களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளைக் கேட் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேச்சு வார்த்தைகளில் கல கொண்டவர்கள் மதிப்புமிக்க திரு. கே. டி. கே. தங்கமணி அவர் திரு. கோபு அவர்கள், லேபர் டிப்பார்ட்மெண்ட் ஆபீசர்கள். 1.25 சைக் செய்ய தொழிலாளர் தலைவர்கள் ஒத்துக்கொண்டார்கள். தொழிலாளர் உற்பத்தி காட்டாமல் வாங்க முடியாது என்ற அளவுக்கு நிலவரம் ஏற்பட் அதைப்பற்றிப் பரிசீலனை செய்து விட்டு, 1.25-க்கு திரு. கே. டி. தங்கமணியும் ஒப்புக்கொண்டார்கள். இருந்தாலும் திரும்ப பேச்சு வார்த் நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். இதற்கிடையில் ஐவர் கு அமைத்து, அதன் மூலமாக ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அ அடிப்படையில் தொழிலாளர்கள் வேலைக்குப் போய்விட்டார்கள். முதல் அவர்கள் அதைச் செய், இதைச் செய் என்று சொல்லவில்லை. I physically present. ஆனால் அந்தப் பேச்சு வார்த்தையின்போ உறுப்பினர் அவர்கள் இல்லை என்பதை நான் இந்த அவையில் சொல் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேச்சு வார்த்தைகளில் அ
கொண்டவர்கள் மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவ
திரு. கோபு அவர்கள், லேபர் டிபார்ட்மெண்ட் ஆகியோர்கள். 1.25 சை
செய்ய தொழிலாளர் தலைவர்கள் ஒத்துக்கொண்டார்கள். தொழிலாள
உற்பத்தி காட்டாமல் வாங்க முடியாது என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்
அதைப்பற்றிப் பரிசீலனை செய்துவிட்டு, 1.25-க்கு திரு. கே. டி.
தங்கமணியும் ஒப்புக்கொண்டார்கள். இருந்தாலும் திரும்ப பேச்சு வார்
நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். இதற்கிடையில் அய்வர்
அமைத்து, அதன் மூலமாக ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அ
அடிப்படையில் தொழிலாளர்கள் வேலைக்குப் போய்விட்டார்கள். முத
அவர்கள் அதைச் செய், இதைச் செய் என்று சொல்லவில்லை. I
physically present. ஆனால் அந்தப் பேச்சு வார்த்தையின்பே
உறுப்பினர் அவர்கள் இல்லை என்பதை நான் இந்த அவையில் சொ
கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6.00.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலே பேசுங்கள்.

திரு. ஆ. நல்லசிவன்: டி.அய். சைக்கிள் சம்பந்தமாக ஏற்படுத்தின
அய்வர் குழுவைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். அமைச்சருக்கும் இ
பற்றி நன்றாகத் தெரியும். பேர் நான் இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆ
எல்லாம் தனியாக இருக்கின்றன. அய்வர் குழு எதற்காக அமை
பட்டது? தொழிற்சங்கமே இல்லாத ஒரு ஆலை அல்லது நிறுவன
தொழிலாளர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்க அய்வர் குழு இருக்க
என்று இருக்கிறது. அப்படி இருக்கக்கூடிய விதியைப் பயன்படு
கொண்டு பல ஆயிரம் தொழிலாளர்களுடைய ஆதரவைப் பெற்றிருக்கக்
தொழிற்சங்கத்தைப் புறக்கணித்துவிட்டு அய்ந்து பேரை மட்டும் அழை
கையெழுத்து வாங்கி, அவர்கள் கையெழுத்துப் போட்ட பிறகு, அவர்க
மட்டும் உள்ளே விடுவதும் கையெழுத்துப் போடாதவர்களை உள்ளே
றப்பதும் எந்த விதத்தில் நியாயம்?
போலீசுக்கு என்ன வேலை? அந்த நேரத்தில் கேட்டி
தொழிலாளர்களை உள்ளே விடாமல் தொழிற் சங்கத்தின் ஆதரவைப் பெ
கையெழுத்து வாங்கி அவர்களை உள்ளே அனுமதிப்பதும் மற்ற தொழி
ர்கள் போன உடனே அவர்கள் மீது தடியடி நடத்துவதும் போன்ற
ங்கள் நடந்தன. ஆலைவாயிலில் நண்பர் திரு. கே. டி. கே. போன்றவர்
டிக்கவில்லை. அவர்களை அடித்தது பாரிஸ் கார்னர் பக்கத்தில். க
யக் கொடுத்து, நிர்ப்பந்தமாகக் கையெழுத்து வாங்கி, போலீசை வை



கொண்டு உள்ளே விட்டார்கள். அன்றையதினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டி. வி. எஸ். முதலாளிகளை விமர்சித்துப் பேசினார். டி.வி.எஸ்.-இல் குண்டர்களை வைத்துத் தாக்குகிறார்கள் என்று பேசினார்கள். முதலாளிகளைப் பற்றிப் பேசுவது தப்பு என்று இப்பொழுது உங்களுக்குப் படுகிறதா? முதலாளிகள் தொழிலாளர்களை குண்டர்களை வைத்துத் தாக்கினார்கள் மெஜாரிட்டி தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்ற தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தொழிற்சாலையின் வாசலில் கூட்டம் போட்டால் குண்டர்கள் வந்து அவர்களைத் தாக்குகிறார்கள். அதுமட்டுமல்ல, 'சிம்கோ'-வில் கூட அப்படிப்பட்ட நிலைதான். அந்த சம்பவத்துக்கு நான் போக விரும்பவில்லை.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 'சிம்கோ' சம்பவத்துக்குப் போகவில்லை என்று ஏன் சொல்ல வேண்டும்? 17—4—1978-ல் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த நேரத்தில் அங்கு ஒரே ஒரு யூனியன்தான் இருந்தது. ஆகஸ்ட் மாதத்தில் என எண்ணுகிறேன். சி.அய்.டி. யூனியன் ஒப்பந்தத்தை உடைப்போம் என்று கோஷம் போட்டது. நாங்கள் போயிருந்தபோதுகூட, ஒப்பந்தத்தை உடைப்போம் என்று கோஷமிட்டார்கள். அது சம்பந்தமாக எவ்வளவு புத்தகங்கள் வேண்டுமானாலும் கொண்டுவந்து போடுகிறேன், என்ன இருக்கிறது என்பதைப் படித்துக் காண்பிக்கிறேன். என்னை நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைத்து, "நாளையதினம் நீ சட்டத்தைப்பற்றி ஒன்றும் பேசக் கூடாது, உடாநாத் நாளையதினம் வருகிறார்" என்று சொன்னார்கள். மேலும் சட்டத்தை மறந்துவிட்டு 'ஹியூமானிட்டேரியன் கிரவுண்ட்'-ல் அந்தத் தொழிலாளர்களுக்காக ஏதாவது செய்தால், அதை நான் வரவேற்பேன் என்று சொன்னார்கள். மேலும் கன்சிலியேஷன் செய்யக் கூடாது என்றுதான் இருக்கிறது. அப்படி இருந்தும் மூன்று நாட்களுக்கு முன்பு 12(3) செட்டில்மெண்டிற்கு உட்பட்டே அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் விரும்பி, என்னிடம் சொல்லி, பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நல்ல எண்ணம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரைப்பற்றி உறுப்பினர் இப்படிப் பேசலாமா? "இராகவானந்தம், நீ சட்டத்தைப் பற்றி அங்கே ஒன்றும் பேசாதே, ஹியூமானிட்டேரியன் கிரவுண்ட்ஸ்-ல் தொழிலாளர்களுக்காக சட்டத்திற்கு உட்பட்டே ஏதாவது செய்ய வேண்டும் என்று சொன்னார்களே, அப்படிப்பட்ட முதல்வரைப்பற்றி உறுப்பினர் இப்படிப் பேசுகிறாரே என்று நான் வருந்துகிறேன். அவர்களுடன் நேற்று முன்தினம் பேசினேன், நேற்று பேசினேன், இன்றைக்கும் கூட பேசினேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவரைப் பேச அனுமதியுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** முதல்வரைப் பற்றிக் ... அதுவுதான் நான் பதில் சொல்ல வேண்டிய கட்டத்தில் இருக்கிறேன். ... சிம்சன்பற்றி குருமூர்த்தியை வைத்துப் பேசிக் கொண்டிருந்ததால் ... வந்திருக்கிறேன். முதல்வர் செய்தாரா என்று உறுப்பினர் சொல் ... சரியல்ல. தயவுசெய்து ஹியூமானிட்டேரியன் கிரவுண்ட்ஸ்-ல் ஏதாவது செ... லாளர்களுக்காகச் செய்யுங்கள் என்று எங்களுக்குக் கட்டளையிட்டவரே ... மூடைய மாண்புமிகு முதலமைச்சர்தான் என்பதை மாண்புமிகு உறுப்பின... கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எந்த ஒன்றில் நீங்கள் இர... போதும் ஒத்து வரமுடியாதோ அதை விட்டு விட்டு அடுத்த விஷயத்திற்... போய் விடுங்கள். உறுப்பினர் இனி பேசும்போது, தயவுசெய்து அடு... விஷயத்துக்குப் போங்கள்.

**திரு. ஆ. நல்லசிவன்:** 12(3)-ன் கீழ் எல்லாத் தொழிற் சங்கத்தை... கொண்டு கையெழுத்திட்டிருக்கிறார்கள். ஹியூமானிட்டேரியன் கிரவுண்... பேசுங்கள், செய்யுங்கள் என்று முதலமைச்சர் தொழிலாளர் ... அமைச்சருக்குக் கட்டளையிட்டதாகச் சொன்னார்கள். அந்தத் தொழிலா... களை 100 நாட்கள் பட்டினி போட்ட பிறகுதான், ஹியூமானிட்டேரி... கிரவுண்ட்ஸ் என்ற எண்ணம் வர வேண்டுமா? 100 நாளைக்குப் பிறகு இ... ஹியூமானிட்டேரியன் கிரவுண்ட்ஸ் என்ன தேவை இருக்கிறது?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே ... நிமிடங்கள் பேசி விட்டார்கள். உறுப்பினர்கள் பலர் பேச இருக்கிறார்... சிக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** நீங்கள் சொல்வதெல்லாம் மேல் பூச்சு என்பது... நான் சொல்ல விரும்புகிறேன். 1,200 பேரை 100 நாள் பட்டினி போ... வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? அப்பொழுது சட்டம் என்... செய்தது? இந்த விஷயத்தில் அரசாங்கம் ஒரு கொள்கையை வகுத்... வைத்திருக்கிறது என்று நான் நினைக்கின்றேன். அதாவது தனித் ... யாகத் தொழிலாளர்களை நசுக்குவது. அக்டோபர் 23 ஆம் தேதி மாநி... த்ராவும் உள்ள தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ஒரு அர்த்தாலை நட... னார்கள். தனித் தனியாக எங்களை அடித்து நொறுக்கி நசுக்கப் பா... கிறீர்களே, அனைவரும் ஒன்று சேர்ந்தால் அடிக்க முடியாது என்று கா... டுவதற்காக அர்த்தால் செய்து காட்டினார்கள். அக்டோபர் 22 ஆம் தே...



முதல்வர் பேசுகையில் அவர் பயன்படுத்திய வார்த்தைகள் காந்தியடிகள் கையாண்ட முறை அல்ல. அண்ணா கடைப்பிடித்த முறை அல்ல. அப்போது முதலமைச்சர் அவர்கள் தெருவில் மக்களை வைத்துச் சந்திப்போம் என்று சொன்னார்களே, அது எப்படிப்பட்ட வார்த்தை? போலீசை வைத்து சந்திப்போம் என்று சொல்லியிருந்தால் கூட, பரவாயில்லை. வெண்ணிறப் படை என்று பெயர் பெற்ற அவர்களுடைய கட்சித் தொண்டர்கள் கையில் கம்பைக் கொடுத்து அனுப்பினார்கள். ஒவ்வொரு அரசியல் கட்சியும் தொண்டர்களிடம் தடியைக் கொடுத்து அனுப்பினால், தமிழ்நாட்டில் அமைதி நிலவுமா? தமிழ்நாட்டிலே ஜனநாயகம் இருக்குமா? தமிழ் நாட்டிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. "தனிப் பாரம்பர்யம் போய் அண்மைக் காலமாக வன்முறை சம்பவங்கள் அதிகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன" என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவற்றில் உங்களுக்குப் பங்கு இல்லை என்று சொல்லுகின்றீர்களா? அக்டோபர் 23 ஆம் தேதி சட்டத்தைக் கையில் எடுங்கள் என்று உங்கள் கட்சிக்காரர்களை அனுமதித்தீர்களே அது சரியா? சைக்கிள் செயினை கையில் எடுத்தார்களே, அது சரியா? திருப்பூரில் ஒரு பஸ் முதலாளியின் மகன், அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளர் பஸ்ஸை எடுத்துக்கொண்டு போய் ஜனங்கள் மேல் ஓட்டுகிறார். ஜனங்கள் கலவரமடைந்து ஓடுகிறார்கள். ஒரு போலீஸ்காரர் பஸ் ஏறி இறந்து போய் விடுகிறார். அதற்கெல்லாம் நீங்கள் பொறுப்பில்லை என்று பேசுகிறீர்கள். வன்முறை செய்பவர்களுக்கெல்லாம் சட்டம் பாதுகாப்பு கொடுக்கிறது. உங்கள் கட்சிக்காரர்கள் மற்றவர்களை அடிக்கிறார்கள், போலீசார் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் கட்சிக் காரர்கள் மற்றவர்களை என்ன செய்தாலும், போலீஸ் ஒன்றும் செய்ய முடியாது என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

(பிற்பகல் 6-10)

எனவேதான் அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு பஸ் சொந்தக்காரர் பஸ்ஸை எடுத்துக் கொண்டுபோய் பொதுக்கூட்டம் நடத்தப்படுகிற இடத்தில் வேகமாக ஓட்டி ஒரு போலீஸ்காரரைச் சாகடிக்கிறார். இதையெல்லாம் அண்ணா தி.மு.க. வினர் ஆர்கனைஸ் (organise) செய்து நடத்துகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் உங்களுடைய போக்கின் காரணமாகத்தான் தொண்டர்களுக்கு ஒரு எண்ணம் பிறந்திருக்கிறது. நம்மை எந்தப் போலீசும் ஒன்றும் செய்துவிடாது என்ற எண்ணம் உண்டாகியிருக்கிறது.

அடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் கொ[லை] நடந்திருக்கிறது. அதைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஆனால் என்ன செய்தி வருகிறது? அவரைத் தாக்கிக் கொலை செய்த ஒரு ஆளா, 4 ஆளா? அதில் ஈடுபட்டவர் அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்தவரா இல்லையா? இன்றையதினம் விசாரணை நடக்கிறதா இல்லையா? ஏன் இந்த நிலைமை வந்தது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். 4 பேர் சேர்ந்து இந்தச் செயலைச் செய்துவிட்டு, கொலை செய்துவிட்டு, கொலை செய்தது ஒரு ஆள்தான் என்று சொல்லி உண்மையை மறைக்கப் பார்க்கிறார்கள் என்று வெளியே சொல்லுகிறார்களா இல்லையா? தமிழ்நாட்டில் கட[ந்த] 25 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்றால், இது ஒரு அசாதாரணமான சம்பவம் இல்லையா? அதில் அண்ணா தி.மு.க.வின் பெயர் ஒரு தொண்டர் மூலமாக இணைக்கப்படுகிறது என்றால், இது தற்செயலாக நிகழ்வதா? நெருப்பு இல்லாமலா புகைகிறது? ஏதோ ஒன்று இருக்கிறது. எனவேதான் அப்படிச் சொல்லுகிறார்கள்.

அடுத்து, 30 ஆம் தேதி தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி மீது தாக்குதல் நடைபெறுகிறது. அண்ணா தி.மு.க. அதை ஏற்பாடு செய்தது என்று நான் சொல்லவில்லை. ஆனால் நிலைமை என்ன? அதிலே கைது செய்யப்பட்ட ஒருவர் அண்ணா தி.மு.க. உறுப்பினர் என்று காவல் துறையில் அதை விசாரிக்கும் காவல் துறை இன்ஸ்பெக்டர் ரிக்கார்டில் எழுதுகிறார். உண்மையா இல்லையா என்பது வேறு விஷயம். அது சரியா, தப்பா என்[ற] கேள்விக்குக்கூட நான் போகவில்லை. இதெல்லாம் எப்படி நடை[] பெறுகின்றது?

அடுத்து, பரமக்குடியில் பரமக்குடி எம்.எல்.ஏ. தாசில்தாரை அடிக்கப் போகிறார். தமிழ்நாட்டில் இருக்கிற ரெவின்யூ அதிகாரிகள் அசோசியேஷன் இதற்காகப் பெரிய ஆர்ப்பாட்டமே செய்கிறார்கள். ஒரு தாசில்தார், டெபுடி கலெக்டராகப் புரமோஷன் ஆக வேண்டியவர் தாக்கப்படுகிறார் என்றால், இந்த தைரியம் எப்படி ஏற்படுகிறது? இதற்கெல்லாம் காரணம் உங்கள் கட்சித் தொண்டர்கள் 23—10—1978 அன்று "தமிழ்நாட்டில் ஆயுதத்தை கையில் எடுத்துக்கொண்டு கடையை அடைக்க வேண்டும் என்று எவன் சொல்லுகிறான் அவர்களை நாங்கள் பார்க்கிறோம்" என்று போர்ப் பறை செய்ததுதான். கடைக்காரருக்குப் பாதுகாப்புத் தேவை என்றால் போலீஸ்காரர்கள் பாதுகாப்பு தரட்டும். அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்த





வர்கள் எதற்காக தொண்டர் படையை—அண்ணா தி.மு.க. படையை—அனுப்பி, கடைக்காரர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்? இது சரியா? இதன் விளைவாக அண்ணா தி.மு.க. ஊழியர்களுக்கு என்ன எண்ணம் ஏற்படுகிறது? "நாம் எதைச் செய்தாலும், நம்மை போலீஸ் தடுக்காது, நாம் எதைச் செய்தாலும் போலீஸ் தலையிடாது". இந்த எண்ணம் அவர்களுக்கு ஏற்படுகிறது. எனவே அச்சமில்லாமல் அவர்கள் இந்தக் காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இந்த எண்ணம் வந்தால் அண்ணா தி.மு.க.காரர்கள் இதை எல்லா ஊர்களிலும் செய்து பார்க்கத்தானே எண்ணுவார்கள். எனவேதான் சொல்லுகிறேன், இதைப் போன்ற கடைக்காரர்களும், கட்சிக்காரர்களும் மற்றக் கட்சிக்காரர்களும், திருப்பிச் செய்கிற முறையில் எடுத்தால் தமிழ்நாட்டிலே அமைதி நிலவுமா என்று எண்ணிப் பாருங்கள். நான் இதையெல்லாம் சொல்லுவதற்குக் காரணம் நாங்கள் இன்னும் எதிர்க்கட்சிக்காரர்களாகவே இருக்கிறோம். அதன் காரணமாகத்தான் மற்றவர்கள் உங்கள் மீது censure motion கொடுக்கும்போது நாங்கள் உங்கள்மீது 'no confidence motion' தான் கொடுக்க வேண்டும் என்ற நிலையை எடுத்து, இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுவதன் மூலம் உங்களைத் திருத்த முடியும் என்று பார்க்கிறோம். நாங்கள் சொல்லுவதையெல்லாம் நல்லெண்ணத்தோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். உண்மையான நண்பன் என்பவன் நாம் தவறு செய்யும்போது இடித்துக் காட்டுகிறவனாகத்தான் இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு உங்களுக்கு எப்போதும் 'ஆமாம்' போட்டுக் கொண்டிருக்கிறவன் உங்களுடைய உண்மையான நண்பன் அல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாகச் சொல்ல விரும்புவதெல்லாம் நீங்கள் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ளுங்கள், 23—10—1978 அன்று மேற்கொண்ட போக்கு தவறான போக்கு, பொதுமக்களைக் கொண்டு எதையும் சந்திப்போம் என்று கூறுவது தவறு என்று பகிரங்கமாக ஒப்புக் கொண்டாலொழிய, இந்த அராஜகத்திற்கெல்லாம் அண்ணா தி.மு.க.தான் காரணம் என்கிற சரித்திர உண்மையை நீங்கள் மறைக்க முடியாது என்று கூறி, தொழிற் சங்கப் போராட்டங்களை போலீசை வைத்துக்கொண்டு அடக்கி ஒடுக்கிவிடலாம், லேபர் டிபார்ட்மெண்டை ஒதுக்கிவிட்டு போலீஸ் இலாக்காவைக் கொண்டு ஒடுக்கிவிடலாம் என்று எண்ணாமல், அப்படிப்பட்ட நடைமுறைகளைக் கைவிட்டு, லேபர் டிபார்ட்மெண்ட் மூலமாக, கன்சிலியேஷன் மூலமாகத் தீர்த்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட வேண்டும், அதன் மூலமாக நாட்டில் நல்ல நிலைமையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவையின் இன்றைய நிகழ்ச்சி இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4.00 மணிக்கு கூடும்.

(மாலை 6.14 மணி)

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

### 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

87. Notification issued with G.O. Ms. No. 2909, Home, dated the 25th November 1978, exempting from payment of excise duty and gallonage fee on rum provisioned for use of Armed Forces during the period of emergency in the country, etc. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937, Tamil Nadu Act X of 1937.]

### *B. Reports, Notifications and other papers.*

24. Notification issued with G.O. Ms. No. 1126, Rural Development and Local Administration, dated the 11th July 1978, appointing the 11th day of July 1978, as the date on which certain sections of the Tamil Nadu Local Authorities Laws (Second Amendment) Act shall come into force.



---

வெள்ளிக்கிழமை, 1979 பிப்ரவரி 16.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Pensioners.*

*41 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(a) whether there is any proposal to supply spectacles and hearing-aids to Pensioners, free of cost, at least once in three years; and

(b) if so, the stage at which the matter now stands?

### ஓய்வூதியம் பெறுபவர்கள்

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, மூக்கு கண்ணாடிகளையும், செவி கேட்டிச் சாதனங்களையும் இலவசமாக மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையாவது வழங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. க. அறிவழகன்:** மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை வழங்குவதற்கான செயற்குறிப்பு இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒருவேளை ஒவ்வொரு ஆண்டும் வழங்குகிற செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** அதற்கும் பதில், இல்லை என்பது தான்.

திரு. செ. முத்துசாமி: இந்த மூக்குக் கண்ணாடி வழங்குதல், கேட்கும் கருவிகள் வழங்குதல் போன்ற சலுகைகள் அரசு ஊழியர் மட்டும் கொடுக்கப்படுகின்றன. ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகைகள் படுவதில்லை. ஆசிரியர்களுக்கும் வழங்கும் எண்ணம் அரசுக்கு உண்டா பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அரசு ஆசிரியர்களுக்கு உண்டு.

திரு. ம. சங்கரலிங்கம் : ஓய்வு பெற்றவர்களில், மூக்குக் கண்ணாடி, கேட்டிச் சாதனங்கள் ஆகியவைகள் அரசு ஆசிரியர்கள் மட்டும் பெற நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியிருக்குமானால், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்குவதில் என்ன கஷ்டம்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அரசுக்கு அனுதாபம் இரு ஆனால் நிதியாதாரம் இல்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: அரசாங்கத்திற்காக உழைத்து, உ ஓய்வு பெற்ற பின் காது மந்தமாகிறது, கண் பார்வை குறைகிறது. அ பட்டவர்களுக்கு இதைக் கொடுக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய வி கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, கொஞ்சம் வி மாகச் சொல்லுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகி இந்தக் கேள்வியைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் கள் ஓய்வு பெற்ற ஊழியர்கள் சங்கத்தின் உப-தலைவர் என்பது என தெரியும். ஒரு முறை ஒரு விழாவை நடத்தி, ஓய்வு பெற்றவர்களை அ அழைத்து வந்து, அந்தக் கூட்டத்திலே என்னைப் பேச வைத்தபோது, அ கூடியிருந்தவர்கள் அத்தனை பேரும் அந்த பேச்சைத் தெளிவாகக் கேட் கள் என்பதை நான் புரிந்துகொண்டேன். ஆகையினால் திரு. வெங்கடே அவர்கள் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருக்கிற அவர்களின் சார்பாக வ வதைவிட்டுவிட்டு மற்றவர்களின் சார்பாக வாதாடக் கேட்டுக் கொள்கிறே

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: காது கேளாதது, கண் தெரிய என்பது எல்லோருக்கும் ஒன்றுதான். அரசாங்கத்தில் உள்ளவர்க மட்டும் கிடைக்கும் என்று அரசின் அபிப்பிராயத்தைச் சொன்னா ஆசிரியர்கள், மற்றும் சிப்பந்திகள் அமைச்சர்களோடு பேசுகிற எம்.எல்.ஏ., எம்.எல்.சி. ஆகியவர்களும் பேசுகிறார்கள். அவர்களுக்கு குறைபாடு இருந்தால், அவர்களுக்கும் தர அரசு முன்வருமா என்று விரும்புகிறேன். (சிரிப்பு.)



மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பெரியவருக்கு அந்தக் குறைபாடு இருக்குமானால், அதை நேரிலே எங்களுக்குத் தெரிவித்தால், அதைப்பற்றி கவனம் செலுத்துவேன் என்று உறுதி கொடுக்கிறேன். அவருக்கு ஏற்கெனவே கண்ணாடி இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அரசுத் துறை ஆசிரியர்களுக்கு மட்டும் இந்த உதவி அளிப்பதாகவும், மற்றவர்களுக்கு அளிப்பதற்கு அனுதாபம் இருக்கிறது, ஆனால் நிதியாதாரம் இல்லையென்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அனுதாபம் மட்டும் ஆசிரியர்களை வாழ்விக்க முடியாது. அவர்கள் நினைத்தால், அந்த நிதியாதாரத்தை உருவாக்கி அவர்களுக்கும் வழங்க முடியும். உள்ளாட்சித் துறை ஆசிரியர்கள், தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஆகிய அனைவருக்கும் வழங்குவதற்குரிய ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நிதியமைச்சர் நினைத்தால் முடியு மென்று, மாண்புமிகு உறுப்பினர் என் மேல் வைத்திருக்கக்கூடிய நம்பிக் கைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் மீண்டும் இயலாமையை வெளியிடுவதற்காக வருந்துகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மொத்தம் ஏழரை இலட்சம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள் தமிழ் நாட்டில். இதிலே ஆறரை இலட்சத்திற்கு மேற்பட்ட வர்களுக்குச் சலுகை தரப்பட்டிருக்கிறது. மீதமுள்ள ஒரு இலட்சத்திற்குக் குறைவான தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், உள்ளாட்சித் துறை ஆசிரியர் களுக்கும் வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இதற்குப் பதிலை நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன் என்று கருதுகிறேன்.

## *Relief Fund.*

* 42 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(a) whether contributions have been received on behalf of the Government in any other way apart from public contributions towards the Chief Minister's Flood Relief Fund, to set right the damages caused by cyclone and flood during last year;

(b) whether it has come to the notice of the Government that individuals, political parties and journals have collected funds for the same cause; and

(c) whether the Government have received full information about these collections?

நிவாரண நிதி.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஆண்டில் நிகழ்ந்த புயல், வெள்ள பாதிப்புகளைக் களைய பொது மக்களிடமிருந்து நன்கொடை பெற்ற முதல் அமைச்சர் நிவாரண நிதி நீங்கலாக, அரசின் சார்பில் வேறு எந்த வகைகளிலேனும் நன்கொடை ஏற்கப்பட்டதா?

(இ) தனியார்கள், அரசியல் கட்சிகள், பத்திரிக்கைகள் இதே காரணத்திற்காக நன்கொடை வசூல் செய்தது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(உ) இந்த வசூல் பற்றிய முழு விபரங்கள் அரசுக்குக் கிடைத்ததா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** (அ) & (இ) கடந்த ஆண்டில் நிகழ்ந்த புயல், வெள்ள பாதிப்புக்களைக் களைய, பொது மக்களிடமிருந்து நன்கொடை பெற மாவட்ட ஆட்சியாளர்களுக்கும், பொது நல நிறுவனங்களுக்கும், வணிக வங்கிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. மேலும் 'நட்சத்திர இரவு' என்ற கேளிக்கை நிகழ்ச்சியை, சேலம், கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நடத்தி அதன் மூலமாக நிதி திரட்டப்பட்டது. மத்திய அரசிடமிருந்தும், பிற மாநில அரசுகளிடமிருந்தும், வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்தும் நிதி பெறப்பட்டது. புயல்-வெள்ள நிவாரண நிதி திரட்ட குமுதம் என்ற தமிழ் பத்திரிக்கைக்கும் அனுமதி அளிக்கப்பட்டது. இவ்வாறு பல்வேறு வகையிலும் பெறப்பட்ட நிதி முதல்வரின் பொது நிவாரண நிதிக் கணக்கில் சேர்க்கப்பட்டது.

(உ) பல்வேறு வகையில் திரட்டப்பட்ட முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் மொத்தம் 14—8—1978 வரை ரூபாய் 7,91,09,857.74.

**திரு. க. இராமமூர்த்தி:** புயல் வெள்ள நிவாரண நிதிக்காக ஆளுநர் அவர்களே அவருடைய பெயரிலே நிதி திரட்டினார்கள். அது முதலமைச்சர் நிதிக்கு வந்ததா? அல்லது ஆளுநர் அவர்கள் தனியாக நின்று அதை விநியோகம் செய்கிற பொறுப்பை ஏற்றிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** முதலமைச்சர் நிதி என்ற பெயரிலே யார் நிதி திரட்டினாலும் முதலமைச்சருக்குத்தான் வந்திருக்க வேண்டும்.





**திரு. க. இராமமூர்த்தி:** என்னுடைய கவனம் சரியாக இருக்குமானால், ஆளுநர் அவர்கள், மஹாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று நிதி திரட்டி வந்தார்கள் என்று நினைக்கிறேன். ஆளுநர் அவர்களிடம் நேரடியாகக் கோடிக்கணக்கில் கொடுத்ததாக எனக்குத் தகவல். அது உண்மையா? அப்படியானால், ஆளுநர் அவர்கள் தனியாக முயற்சித்து வசூலித்த நிதியின் விவரம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** முதலமைச்சர் நிதி என்கிற போது, அதை யார் திரட்டினாலும், முதலமைச்சர் நிதிக்குத்தான் வர வேண்டும். தனியாக யார், யார் எவ்வளவு நிதி கொடுத்தார்கள் என்ற கணக்கு இல்லை. தனியாகக் கேள்வி கேட்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4-10)

**திரு. க. இராமமூர்த்தி:** முதலமைச்சரவர்கள் நிதிக்கு ஆளுநர் அவர்கள் திரட்டிய நிதி வந்து சேர்ந்ததா? எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நான் என்னுடைய பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். யார் பணம் திரட்டினாலும் வந்திருக்க வேண்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஆளுநர் அவர்கள் திரட்டிய நிதி வந்திருக்க வேண்டுமென்பதிலிருந்து, அதை நியதி என்று ஒத்துக்கொள்கிறோம். வந்ததா என்பதுதான் இந்தச் சபையும், நாடும் தெரிந்துகொள்ள வேண்டியது. அடுத்து, சில பொது நல அமைப்புகளும், ஒரு பத்திரிகையும் நிதி திரட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டதென்று சொன்னார்கள். அப்படி பொது நல அமைப்புகளும், பத்திரிகையும் நிதி திரட்ட ஏதேனும் முறையீடுகள் வந்தனவா? அதற்கான விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படி விதிகளை எல்லோரும் அமைத்துக்கொள்ளலாமா? எல்லோரும் கடிதம் எழுதிக் கொண்டு அதைத் தொடரலாமா என்பதை விளக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தனித்தனியாக எந்தெந்த நிறுவனங்கள் எவ்வளவு பணம் சேர்த்துக் கொடுத்தன என்ற கணக்கு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்கிறேன். யார் வசூல் செய்தாலும், அரசிடம் அனுமதி பெற்றுதான் வசூலிக்கிறார்கள். அரசு, அவர்கள் தகுதியைப் பார்த்து அனுமதி வழங்கியிருக்கும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** புயல் வெள்ள நிவாரண நிதிக்கு அரசாங்கம் வசூலித்த தொகையை எந்தக் கணக்கில் தணிக்கை செய்கிறார்கள்? வசூலித்த 7 கோடி ரூபாய் கணக்கும் யாரால் தணிக்கை செய்யப்பட்டது? தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை வந்து விட்டதா?

[1979 பிப்ரவரி

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தனிக் கேள்வி போடவும்.

(பல உறுப்பினர்கள் எழுந்தார்கள்)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் த பதில் சொல்லவில்லையே, தனிக் கேள்வி போட வேண்டுமென்று சொல்கிறா

(உறுப்பினர்கள் திரு. கோ. சி. மணி, திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்கள்)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திருப்பித் திருப்பி அதிலேயே கேள் கேட்டால், எப்படி? நேரத்தை இந்த வினாவிற்கே வீணாக்குவதா?

திரு. கோ. சி. மணி: ஆளுநர் அவர்கள் யார், யாரிடத்தில் எவ்வளவு நி பெற்றார் என்ற விவரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் முதலமைச்சர் நிதி காக ஆளுநர் அவர்கள் மூலமாக வசூலிக்கப்பட்ட தொகை வந்துவிட்டதா வரவில்லையா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஆளுநர் அவர்கள் பணத்தை வாங்கி வைத்துக்கொண்டிருப்பார் என்று இங்கே இருக்கிறவர்கள் நினைக் றார்களென்று கருதுகிறேன். வசூலிக்கப்பட்ட பணம் பூராவும், யார் வசூ பண்ணியிருக்கிறார்களோ அவர்களிடமிருந்து அதற்கான கணக்கு வந்திரு வேண்டும். வந்திருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, My question is specific என்னுடைய கேள்வி மிகத் தெளிவாக இருக்கிறது. பதிலைப் பொறுத் சபையில் வந்திருக்க வேண்டுமென்று, சூகம் பதிலாக அமைவது முறையா இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். நீங்கள்தான் எங்களை காப்பாற்ற வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முதலில் என்னைக் காப்பாற் கொள்ள வேண்டியிருக்கிறது. கேள்வி கேட்டீர்கள். விவரம் என்னிட இல்லை, தனிக் கேள்வி போடுங்கள் என்று அமைச்சர் சொன்ன பிறகு திருப்பி திருப்பிக் கேட்டால் எப்படி?

திரு. க. இராமமூர்த்தி: கேள்வி மிகத் தெளிவாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இரா மூர்த்தி அவர்கள் கேட்ட கேள்வி, ஆளுநர் அவர்களால் வசூல் செய்யப்பட் அந்தப் பணம் முதலமைச்சர் நிதிக்கு வந்து சேர்ந்ததா என்பதுதா தெளிவான கேள்வி. அதற்கு பதில், அவர் வசூலித்த தொகை அத்தனையு வந்து சேர்ந்தாகிவிட்டது என்பதுதான்.



1979 பிப்ரவரி 16]

திரு. க. இராமமூர்த்தி: ஆளுநர் அவர்கள் மூலமாக வசூலிக்கப்பட்ட தொகை மொத்தம் எவ்வளவு?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திருப்பித் திருப்பி அதைத்தான் கேட் கிறீர்கள்.

திரு. க. இராமமூர்த்தி: என்னுடைய கேள்வி, 'புயல் வெள்ள பாதிப்பு களைக் களைய, பொது மக்களிடமிருந்து நன்கொடை பெற்ற முதலமைச்சர் நிவாரண நிதி நீங்கலாக, அரசின் சார்பில் எந்த வகைகளிலேனும் நன்கொடை ஏற்கப்பட்டதா? தனியார்கள், அரசியல் கட்சிகள், பத்திரிகைகள் இதே காரணத்திற்காக நன்கொடை வசூல் செய்தது அரசின் கவனத்திற்கு வந்துள் ளதா?' என்பது. இந்தக் கேள்விகளுக்குப் பதில் வருகின்றபோது, இதற்கான துணைக் கேள்விகளிலே கேட்கப்பட்ட என்னுடைய கேள்வி தவிர்க்க முடியாத ஒன்று. அரசுத் தரப்பில் இதற்கு பதில் இருக்க வேண்டும். அதுதான் நியாயமென்று கருதுகிறேன். ஆதலால், பதிலில் சங்கடம் வரும்போது, இவ்வளவு பிரச்சினைகளும் வருகின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் என் நிலையைத் தெரிந்துகொள்ள வேண்டும். விவரம் இல்லை என்று சொல்லி, தனிக் கேள்வி போடுமாறு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள்.

THIRU K. RAMAMOORTHI: You can pull them up, Sir.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எப்படி?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பல துறைகளில் நிதி வசூலாகியிருக் கிறது. பத்திரிகைகளின் மூலமாக, ஆளுநர் அவர்களின் மூலமாக, சில நிறு வனங்கள் மூலமாக, ரோடரி கிளப், லயன்ஸ் கிளப், ராமகிருஷ்ணா மிஷன் மூலமாக பணம் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எவ்வளவு வந்தது என்ற கணக்கு விவரம் அமைச்சரவர்களிடம் இல்லை என்பதை அவர் தெரிவித்து, அதற்குத் தனிக் கேள்வி போடுங்களென்று கேட்கிறபோது, நியாயமாக அதை ஏற்றுக்கொள்வீர்களென்று நான் நம்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: எதற்காக தனிக் கேள்வி போடச் சொல்கிறார் களோ, அது கேள்வியாக இந்தக் கேள்வியில் கேட்கப்பட்டிருக்கிறது. இப் போது அதற்கு பதில் இல்லையென்றால், நாளைக்கு அந்த வினாவை மாற்றி வைத்தோ அல்லது இந்தத் தொடரில் வேறொரு நாளைக்கு மாற்றி வைத்தோ, பதில் சொல்வதுதான் முறை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அது கவனிக்கப்படும்.

*Mass Casual Leave by Officials.*

* 43 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the the Minister for Revenue be pleased to state:

(a) whether the Officials of the Uthamapalayam Office, in Madurai District, had taken Mass Casual Leave day during December, 1978; and

(b) if so, the reasons for which they resorted to move?

**அலுவலர்களின் ஒட்டுமொத்த சிறுவிடுப்பு**

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அ அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள உத்தமபாளையம் தாலுக்கா அ கத்தின் அலுவலர்கள் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் மொத்தமாக சிறுவிடுப்பு எடுத்தார்களா ?

(இ) ஆம் எனில், என்ன காரணங்களுக்காக அந்தப் போராட் மேற்கொண்டார்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, (அ)

(இ) சின்னமனூர் சிமெண்ட் வியாபாரிகள் கொத்தனார்களுக்கு ச முறையில் சிமெண்ட் விநியோகம் செய்யவில்லை என்று தாசில்தாரிடம் கூறுகையில் அவர் அலுவலகத்தில் நடந்துகொண்ட முறையில் உ பாளையம் தாலுகா அலுவலர்கள் ஒட்டுமொத்தமாக 13—12—1978 அ சிறிது நேரம் விடுப்பு எடுத்தார்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** உத்தமபாளையம் தாலுகா அலுவ பணியாற்றுகிற அத்தனை அலுவலர்களும் ஒரே நேரத்தில் லீவ் எடுத்தி றார்கள். எந்தத் தவறுக்காக தாசில்தாரை அங்கே முற்றுகையிட்டார் அரசாங்கத்திடம் அந்தப் பிரச்சினை வந்தபோது, அது குறித்து என்ன வழங்கியிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** சிமெண்ட் கொடுக்கவி கொத்தனாருக்கு என்று அங்கே கேட்கப்பட்டிருக்கிறது. உடனே கொ இடத்தை தாசில்தார் வந்து பார்க்க வேண்டுமென்று சொல்லப்ப தாசில்தார் இப்போது வேலையாக இருக்கிறாரென்று சொல்லியிருக்கிறா அவர்கள், உடனே அவர் வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அ பேச்சு வார்த்தையில், சிறிது தவறான முறையில்—வர வேண்டும்





முடியாது என்பதில் மாறுபட்ட கருத்து வந்ததால், அவர்கள் கண்டிப்பாக தாசில்தார் வர வேண்டுமென்று கூறியதால், சிறிது நேரம் விடுப்பு எடுத்திருக்கிறார்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** வர வேண்டுமென்று வற்புறுத்தியவர்கள் மீது அரசாங்க அலுவலர்களைத் தடுத்தார்களென்ற குற்றத்தின்கீழ் வழக்கு போடப்பட்டுள்ளதா ? ஆமெனில் வழக்கு நடைபெறுகிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அப்படி வழக்கு போட்டதாக வும், அந்த வழக்கு நடப்பதாகவும் தெரியவில்லை. வருவாய்த் துறை அதிகாரி கள், எங்களுக்கு குறை எதுவுமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஒரு தாசில்தார் அலுவலகத்திற்குச் சென்று, தாசில்தாரை இன்ன முறையில் செயல்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறவர் கள்மீது வழக்கு தொடராமல் போனால், அதே நிலை எல்லா இடங்களிலும் தொடர வாய்ப்பு இருக்காதா ? அதுகுறித்து பாராமுகம் காட்டக் காரண மென்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பாராமுகம் காட்டவில்லை. இப்படி பல குறைகள் வந்திருக்கிறதே என்று வருவாய்த் துறை அதிகாரி களைக் கூப்பிட்டுக் கேட்டபோது, இப்போது ஒத்துப் போய்விட்டோம் என்று சொன்னதால் வழக்கு போடவில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** ஒரு தாசில்தார் பாதிக்கப்பட்டு அலுவல கத்தில் உள்ளவர்கள் அனைவரும் சிறு விடுப்பு போட்டிருக்கிறார்கள். தாசில் தாரைத் தொந்தரவு செய்தவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் ஒத்துப் போய்விட்டார்களா ? இனி இதுமாதிரி வரும் கேஸ்களில் வழக்கு போடாமல் இருப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** ஆளுங் கட்சி அல்லது வேறு கட்சி என்ற எண்ணமில்லை. அங்கே பாதிக்கப்பட்டவர்கள் சிமெண்ட் தேவை என்று வந்திருக்கிறார்கள். அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களா அல்லது மற்றவர்களா என்பதல்ல பிரச்சினை. அதுபற்றி எங்கள் கவனத்திற்கு வந்த வுடன், அவர்களைக் கூப்பிட்டுக் கேட்டோம். தாசில்தார் அவர்கள், 'எங்கள் இடத்தில் வர வேண்டுமென்று சொன்னார்கள்' என்று தெரிவித்ததால், ஒன்றும் பண்ண முடியவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அன்று அரசு அலுவலர்கள் காரணமில்லாமல் விதிக்குப் புறம்பாக சிறு விடுப்பு எடுத்து, போராட்டம் செய்திருக்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நடத்துகிற போராட் எல்லாவற்றிலும் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால், உங்க எதுவுமே நடைபெறாது. எத்தனையோ போராட்டங்களில் சம்பந்தப் வர்களை விட்டுவிடுவது தெரியும். சிறிது நேரம், 15 நிமிடங்கள் சிறை எடுத்திருக்கிறார்கள். இப்படிச் செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொ பட்டுள்ளது. அதற்குமேல் தண்டிக்க சட்ட விதிகள் இல்லை.

## *Escape of Prisoners.*

*44 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Ho the Minister for Law be pleased to state:

(*a*) whether it is a fact that the detenus who were kept the Central Jail, Tiruchirappalli, have escaped during Ap 1978;

(*b*) if so, whether it is also a fact that they were la traced and put in prison again;

(*c*) whether any enquiry was conducted in connection wi their escape;

(*d*) if so, whether the enquiry report will be placed on t Table of the House; and

(*e*) whether it is a fact that those who escaped, are report to be Naxalites?

### கைதிகள் தப்பி ஓட்டம்

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருச்சிராப்பள்ளி மத்திய சிறை யில் காவல் கைதிகளாக இருந்தவர்கள், சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் சிறையி அடைக்கப்பட்டிருப்பதும் உண்மையா?

(உ) அவர்கள் தப்பி ஓடியது சம்பந்தமாக விசாரணை ஏதும் நடத் பட்டதா?

(எ) ஆம் எனில், அந்த விசாரணை அறிக்கை அவை முன் வைக் படுமா?

(அய்) அவ்வாறு தப்பி ஓடியவர்கள் நக்சலைட்டுகள் என்று சொல் படுவது உண்மையா?





THE HON. THIRU K. NARAYANASWAMY: The answ is :—

(*a*) The following prisoners who were confined in Cent Prison, Tiruchirappalli, attempted to escape from the prison the night of 20th April 1978—

1. Convict No. 39643—Vadhyar *alias* Kaliaperumal.
2. Convict No. 60708—Thamizharasan.
3. Convict No. 60151—Radhakrishnan.
4. Remand Prisoner No. 2644—Ramakrishnan.
5. Remand Prisoner No. 2524—Dorai.

(*b*) The first four were captured immediately and sent to the Headquarters Hospital, Tiruchirappalli, for treatment. Remand Prisoner Dorai was apprehended near Ponmalaipatti Park on 21st April 1978 and brought to the prison.

(*c*) There was no inquiry under the Commissions of Inquiry Act, 1955. However, the Inspector-General of Prisons visited the prison and submitted a report to the Government.

(*d*) Does not arise.

(*e*) Yes.

(பிற்பகல் 4-20)

திரு. ம. சங்கரலிங்கம் : நமது இந்திய துணைக் கண்டத்தில் பிற மாநிலங்களில் நக்சலைட் கைதிகள் உட்பட எல்லா கைதிகளையும் விடுதலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் ஒரு காலத்தில் நக்சலைட்டுகள் என்று சொல்வது தவறு என்றும், நெருக்கடி காலச் சூழ்நிலையில் அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டது என்ற காரணத்தாலும், அவர்களை விடுதலை செய்திருக்கிறார்கள். அதையொட்டி தமிழகத்திலே உள்ள இந்தக் கைதிகளை விடுதலை செய்கின்ற குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K NARAYANASWAMY: Sir, on another occasion, I had stated that they were convicted. The Convict Nos. mentioned by me indicate that they have been convicted for offences like those under sections 307 and 302, I.P.C., etc. I do not have the details with me now. Only the other day, I read them out in the other House. Because they are now undergoing definite periods of imprisonment awarded to them

by Courts of Law in accordance with law, the question of release is not certainly under the consideration of the Gov ment.

திரு. ம. சங்காலிங்கம் : நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டவர்கள் மாநிலங்களிலே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தக்கால கட் யிலே இருந்த நிலைமைகள் காரணமாக, நெருக்கடி கால நிலைமைகள் கார மாக அவர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பெற்றவர்கள். அ தண்டனை பெற்றவர்கள் எல்லாம் இன்று பெரும் பதவிகளில் இரு கின்றார்கள், ஆளுகின்ற பதவியில் இருக்கிறார்கள். ஆகையால், இன் இருக்கின்ற கைதிகளை விடுதலை செய்து, அவர்களையும் சிறந்த பிரஜைகளா மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, the Government may consider this matter.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : சென்ற ஆண்டு தமிழகத்திலே, மற்ற மத் றையிலேயிருந்து தப்பிப் போயிருக்கிறார்கள். யார் யார் தப்பிப் போயிரு றார்கள் என்ற செய்தி அரசுக்குத் தெரியுமா, தெரியாதா என்று அறி ரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: There is o information before the Government about the escape f prisoners from other jails in other districts in this State. I ay that there is no information.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தலைவர் அவர்களே, சென்ற ஆண் சேலம் மத்திய சிறையிலேயிருந்து ஆயுள் தண்டனை பெற்ற ஒரு கை தப்பிப் போய்விட்டார் என்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டுக் கொ கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: The hon. Member is requested to put a separate question. Then the details will be furnished to him.

திரு. ஆற்காடு. நா. வீராசாமி : திருச்சி சிறையிலேயிருந்து தப்பிய அய்ந்து கைதிகளும் நக்சலைட்டுகள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நக்சலைட்டுக்களுக்குத் தனியாக இடம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் தப்பி ஓட முடிந்தது என்று கருதப் படுகிறது. அதைத் தடுக்கின்ற வகையில் நக்சலைட்டுகளையும் மற்ற கைதிகளோடு சிறையில் வைக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா



என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவதாக, இந்த அரசாங்கம் நக்சலைட்டுகள் என்று சொல்வதற்கு ஏதாவது இலக்கணம் வகுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, the Prison Rules provide for the confinement of the prisoners in separate cells. Unless the Prison Rules are changed, they cannot be confined in one bunch. Because they had been confined in contravention of the Prison Rules in one bunch in one cell, the unfortunate escape has resulted.

THIRU J. M. MIAKHAN: When the Hon. Minister answered the question, he gave five names. One of them is Vadhyar alias somebody. Does it denote his profession or is it his name?

THE HON. THIRU K. NARAYANASWAMY: The Government have no information on that aspect. Sometimes the famous wrestlers who participate in the wrestling matches, with langotas, are also called, I think, Vadhyars. The wrestlers are called Vadhyars.

THIRU K. S. ABDUL WAHAB: Mr. Chairman, Sir, the Hon. Minister said that five naxalite prisoners escaped from the Tiruchirappalli Jail. If they had escaped, it must be due to slackness of the jail authorities. I want to know whether the matter was inquired into and whether any punishment has been given to the authorities responsible.

THE HON. THIRU K. NARAYANASWAMY: A detailed enquiry as suggested by the hon. Member is now being conducted on the following aspects :—

1. the extent and nature of the neglect of staff members;

2. the connivance on the part of staff members, prisoners and convict warders or outsiders for procuring the materials used in their escape;

3. whether the prisoners had any outside contacts.

A case has been registered by the Police and the Q Branch of the C.I.D. is investigating.

புலவர் புலமைப்பித்தன் : இந்த நக்சலைட்டுகள் என்று சொல்லப் படுகின்றவர்கள் எப்போது கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I th only day before yesterday I gave the details in the ot House. If this answer is necessary and if the hon. Mem does need the dates of their conviction and the commencement the period of imprisonment, I can easily furnish the particul in my chamber or in the open House. They were given on day before yesterday in the other House.

திரு. ப. மாணிக்கம்: அமைச்சர் அவர்கள் சிறையிலிருந்து தப்பி இருப்பதாகச் சொல்கின்றார்கள். அவர்கள் தப்பித்ததற்கு சிறையிலு கொடுமையான சூழ்நிலைகள் காரணமாக இருக்கலாம். அந்தக் காரண களைப்பற்றி விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா? அந்தக் காரண களையும் விசாரணையில் சேர்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும் கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, when enquiry is conducted, it is bound to cover all aspects.

திரு.. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, இந்தச் ச யிலே நடப்பது எல்லோருக்கும் தெரியவேண்டுமென்பது ஒரு முக்கியமா விஷயம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நீங்கள் கேட்பது கேள்வியா அல் பாயிண்ட் ஆப் ஆர்டரா?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: அமைச்சர் அவர்கள் தமிழிலே பே முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் என்னாலே பேச முடி வில்லை. அதைப்பற்றி நான் கண்டிக்கவில்லை. தலைவராவது எங்களுக்கு சொல்ல வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, தமிழிலே எங்களுக்கு சொல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு ஏதாவது உத்தரவா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களி உள்ளுணர்ச்சியைப் புரிந்துகொள்கிறேன். அதன் காரணமாக என்னை இன் டிரான்ஸ்லேட்டராக ஆக்கிவிடாதீர்கள்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, ஆங்கிலத்திலிருந்து தமிழி மொழிபெயர்த்துச் சொல்வதற்கு யாரையாவது 'டெப்யூட்' பண்ணுங் தாங்களே சொல்ல வேண்டும் என்பதில்லை





*Judicial Second Class Magistrate's Court at Usilampatti.*

* 45 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Law be pleased to state—

(a) whether any building intended for locating a Judicial Second Class Magistrate's Court at Usilampatti was completed as early as January 1978; and

(b) if so, the action taken in locating the Court at Usilampatti?

*உசிலம்பட்டியில் நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம்.*

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உசிலம்பட்டியில், நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தை நிறுவுவதற்கான கட்டிடம் ஒன்று 1978 ஜனவரியிலேயே கட்டி முடிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், உசிலம்பட்டியில் அந்த நீதிமன்றத்தை அமைக்க எடுத்த நடவடிக்கை யாது?

THE HON. THIRU K. NARAYANASWAMY:

(a) No, Sir.

(b) Does not arise.

*National Talented Scholarships.*

* 46 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that pupils, eligible for scholarships under the National Talented Scholarships for Rural areas, have not yet been paid any amount so far; and

(b) if so, the reasons for the delay?

## தேசிய திறமைப் படிப்பு உதவித் தொகைகள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் ...ண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமப் பகுதிகளுக்கு தேசிய திறமைப் படிப்பு உதவித் ...கள் என்னும் திட்டத்தின் கீழ் படிப்பு உதவித் தொகைகளைப் பெற ...யுள்ள மாணவர்களுக்கு இதுவரையில் தொகை எதுவும் வழங்கப்பட ...என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) உண்மை இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 4-30)

திரு. பி. ஆர். தாமஸ்: 11 ஆண்டுக் கல்வித் திட்டம் இருந்த கால ...திறமையுள்ள கிராமப்புற மாணவர்களுக்கு, விடுதியில் தங்கிப் படி ...களுக்கு மாதம் இவ்வளவு தொகை என்று உதவித் தொகை வழங்கப்பட் ...'பிளஸ் 2' ஆரம்பிக்கப்பட்ட பிறகு முதல் ஆண்டுக்கு வழங்க காலதா ...ஆகியிருப்பதால், திறமைவாய்ந்த கிராமப்புற மாணவர்கள் சேர்க்கப் ...இன்றுவரை அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படாததால், அம்மா ...கள் மிகுந்த தொல்லைப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் பள்ளி ஆர ...தலும் ஏற்கெனவே திறமைவாய்ந்தவர்கள் என்று தீர்மானித்துத் தேர் ...கப்பட்ட காரணத்தால், வருட ஆரம்பத்திலேயே அந்த உதவித் தொ ...வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் அ ...ஏன் உதவித் தொகை வழங்குவதற்கு காலதாமதம் ஆகியிருக்கிறது ...கேட்டிருக்கிறார்கள். ஹையர் செகண்டரி வகுப்புக்கும் இந்த உ ...தொகைத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமா என்று மத்திய அரசிடம் ... பிறகு, இப்பொழுது அதற்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக் ...அதனால் தான் இத்தகைய நிலை ஏற்பட்டது.

திரு. க. அறிவழகன் : கிராமப் பகுதிகளுக்கு தேசிய திறமைப் ...உதவித் தொகைகள் என்னும் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிற ...தொகை சில உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாத்திரம் வழங்கப்படுகிற கா ...தால், கிராமங்களிலே பரவலாக இருக்கிற திறமை மிக்க மாணவர்கள் ...பயனைப் பெற முடியவில்லை. எந்தப் பகுதியிலே இந்த வி...



இருக்கின்றனவோ அங்கு தான் சென்று மாணவர்கள் படிக்கக்கூடிய நிலைமையும் உதவித் தொகைகள் பெறக்கூடிய நிலைமைகளும் இருக்கின்றன. இந்த உதவித் தொகையைத் திறமையுள்ள மாணவர்கள் தங்களுடைய இல்லங்களிலிருந்து படித்தாலும், அவர்களுக்கும் தரப்படும் என்கிற வகையில் இத்திட்டத்தை அரசு மாற்றியமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்பொழுதுகூட விடுதியில் தங்கிப் படித்தால்; ஆயிரம் ரூபாயும், வீட்டில் தங்கிப் படித்தால் 500 ரூபாயும் வழங்கப்படுகிறது என்பதை உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: கிராமப் பகுதிகளுக்குத் தேசிய திறமைப் படிப்பு உதவித் தொகைகள் என்னும் இந்தத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்கள் எந்தெந்தப் பள்ளிக்கூடங்களில் படிக்கலாம் என்ற ஒரு பட்டியல் இருக்கிறது. அந்தப் பட்டியலிலுள்ள ஒரு சில பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் ஒரு சில பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் இருக்கின்றன. இந்த முறையினால் நடைமுறைச் சங்கடங்கள் பல இருக்கின்றன. அந்தப் பட்டியலை மறுபடியும் புதுப்பித்து விரிவான முறையில் எந்தெந்த மேல்நிலைப் பள்ளிகளில் இப்படிப்பட்ட மாணவர்கள் சேரலாம் என்ற புதிய பட்டியல் ஒன்றை வெளியிடுவதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : இந்த உதவித் தொகைத் திட்டத்திற்கு கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களிலிருந்து திறமையானவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை உருவாக்குகிறார்கள். அந்த மாணவர்கள் தங்களுடைய தந்தையார் பணியாற்றுகிற எந்தப் பள்ளியில் படித்தாலும், அந்த உதவித் தொகையான ரூபாய் 500 அரசு வழங்க முன் வந்தால் தான், அவர்களை முன்னேற்ற முடியும். ஆகவே எல்லா கிராமப்புறங்களில் உள்ள பள்ளிக்கூடங்களிலும் படிக்கின்ற திறமையான மாணவர்களுக்கும் இந்தச் சலுகையை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பள்ளிக்கூடங்களில் அந்தத் திறமை வாய்ந்த மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. க. அறிவழகன் : வீட்டிலிருந்து திறமையுள்ள மாணவர்கள் படித்தால்கூட, 500 ரூபாய் உதவித் தொகை பெறத் தகுதியுள்ளவர்கள் என்றும், ...யில் சேர்ந்து படித்தால் ஆயிரம் ரூபாய் பெறத் தகுதியுள்ளவர்கள்

என்றும், குறிப்பிட்ட சில பள்ளிகளில்தான் அவர்கள் படிக்க வேண்
இன்ற ஒரு முறை மத்திய அரசின் திட்டம் என்றும் மாண்புமிகு
அமைச்சரவர்கள் சொல்வார்கள். திறமையுள்ள மாணவர்கள் எந்த
பங்களில் இருந்தாலும், அவர்கள் எந்த உயர்நிலைப் பள்ளியில் படித்
அவர்களுக்கு உதவி கிடைக்கும் என்ற வகையில் மத்திய அரசுக்கு
அரசு ஆலோசனை வழங்கி இத்தகைய திட்டத்தைப் பரவலாக
வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தேசிய திறமைப் படிப்பு
தொகைகள் என்ற திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற மாண
குறிப்பிட்ட இடங்களிலேயுள்ள பள்ளிகளில் படித்தால்தான், அ
படிப்பில் சிறப்பான கவனம் செலுத்த முடியும் என்கிற காரணத்தால்
அவர்கள் இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு உதவித் தொ
கள் வழங்கப்படுகின்றன.

*Duty Allowance for Headmasters.*

*47 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM: Will
Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that Duty Allowance given to Hea
masters, working in Primary Schools, having a strength of th
teachers, has been stopped as a result of the clarification rec
issued by the Government;

(b) if so, whether it has been brought to the notice of th
Government that, about fifteen thousand of such Headmasters
not getting the Duty Allowance as a result of the above clari
cation; and

(c) if so, whether the Government will come forward
issue orders to the effect that the Duty Allowance will be giv
if the School has enough student's strength for three Teacher

### தலைமையாசிரியர்களுக்குப் பணிப்படி

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவ
கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மூன்று ஆசிரியர்கள் பணியாற்றும் தொடக்கப் பள்ளித் தலை
ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பணிப்படி, அரசு அண்மை
பிறப்பித்த விளக்க ஆணையின் காரணமாக நிறுத்தப்பட்டது உண்மைய



(இ) ஆம் எனில், இந்த விளக்க ஆணையால், அத்தகைய பள்ளித் தலைமையாசிரியர்கள் சுமார் பதினைந்தாயிரம் பேர் பணிப்படி பெற முடியாமல் போனது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(உ) ஆமெனில், பள்ளியின் மாணவர் எண்ணிக்கை மூன்று ஆசிரியர்கள் பணியாற்றும் அளவுக்கு இருந்தாலே பணிப்படி உண்டு என ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) நிறுத்தப்பட்ட பணிப்படியை நிறுத்தப்பட்ட நாளிலிருந்தே மீண்டும் அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மூன்று ஆசிரியர்கள் வரை பணியாற்றும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு இந்தப் பணிப்படி அளிக்கப்படுகிறது. ஓராசிரியர், ஈராசிரியர் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இந்தப் பணிப்படி அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நீண்டநாளாக அளித்துக்கொண்டு வருகிறார்கள். அத்தகையவர்களுக்கும் பணிப்படி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்பொழுது அந்த உத்தேசம் இல்லை.

*Appointment of separate Director..*

*48 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether there is any proposal with the Government to appoint a Director in be Headquarters to look into the Teachers' problems solely, and

(b) if so, when he will be appointed?

### தனி இயக்குநர் நியமனம்

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தனியாகக் கவனிக்க தலைமை நிலைய இயக்குநர் ஒருவரை நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் நியமிக்கப்படுவார்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. செ. முத்துசாமி:** இந்தக் கேள்வியைக் கேட்டதன் நோக்கமே இப்பொழுது அங்கேயிருக்கிற பள்ளிக் கல்வி இயக்குநரை ஆசிரியர்களோ ஆசிரியர் பிரதிநிதிகளோ தங்களுடைய பிரச்சினைகள் சம்பந்தமாகப் பார்க்கப் போகும்போது, அநேகமாக சுற்றுப் பிரயாணம் மற்றும் அலுவல் சம்பந்தமாக வெளியே போய்விடுகிறார். ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் மிகப் பெரிய பிரச்சினைகளாக இருப்பதால், நான் கேட்டிருந்தமாதிரி, ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தனியாகக் கவனிக்க தலைமை நிலைய இயக்குநர் ஒருவரை நியமித்தால்தான், பிரச்சினைகள் எளிதாகத் தீரும். அரசும் என் கோரிக்கையை ஏற்கும் என்ற காரணத்தால்தான், அத்தகைய ஒரு கேள்வியைக் கேட்டேன். எனவே இப்பிரச்சினையைப் பரிசீலித்து தலைமை நிலைய இயக்குநர் பதவியை வழங்க அரசு முன்வருமா? இக் கோரிக்கையை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இயக்குநர் இல்லாத நேரங்களிலும் கூட பிரச்சினைகளைக் கவனிக்க ஒவ்வொரு பிரிவிற்கும் இப்பொழுதுகூட ஒவ்வொரு இணை இயக்குநர் இருக்கிறார். அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். அதுமட்டுமல்ல. ஆசிரியர்கள் அங்கே போகக்கூடாத அளவுக்கு ஆசிரியர்களுக்குப் பிரச்சினைகளே இல்லை என்கிற அளவுக்கு அவர்களுடைய பிரச்சினைகள் போக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கமும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஆசிரியர்களுடைய சம்பள நிர்ணயம், பதவி உயர்வு, தேர்வு நிலை போன்ற பிரச்சினைகள் குறித்த பல பேப்பர்கள் இயக்குநர் அலுவலகத்தில் பெண்டிங்காக இருந்து வருகின்றன. அதற்குக் காரணம் கல்வித் துறையிலிருந்து வெளியிடப்படுகின்ற அரசாணைக்கு ஒரே மாவட்டத்திலுள்ள இரு கல்வி அதிகாரிகள் இரண்டு விதமான விளக்கங்களைச் சொல்லுவது. எனவேதான் இப்படிப்பட்ட நிலைமைகள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, தனி இயக்குநர் நியமனம் இல்லாவிட்டாலும்கூட, பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலேயே ஆசிரியர்களின் பிரச்சினைகளைக் கவனிக்க தனியாக "கம்ப்ளைன்ட் செல்" என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுகுறித்துப் பரிசீலிக்கலாம்.



**திரு. செ. முத்துசாமி:** விளக்கம் என்ற பெயரால் கீழே இருப்பவர்கள் மேலே இருப்பவர்களிடம் ஒரு விளக்கம் கேட்டால், பதில் வருவதற்கு ஆண்டுக் கணக்கிலே காலதாமதம் ஆகிறது. கீழே இருப்பவர்கள் மேலே இருப்பவர்களிடம் விளக்கம் என்று கேட்டால், குறிப்பிட்ட அந்த விளக்கங்களை குறிப்பிட்ட மாதங்களுக்குள் அளிக்க வேண்டுமென்ற வகையில் அரசு ஒரு அறிவுரை வழங்கி கால அளவை நிர்ணயிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தாமதம் என்பது பொதுவாக அரசு அலுவலகங்களில் இருக்கின்ற நிலைமை. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார். தாமதத்தைப் போக்குகின்ற எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.

**திரு. க. அறிவழகன்:** ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தனியாகக் கவனிக்க தலைமை நிலைய இயக்குநர் ஒருவரைத் தனியாக நியமிக்க முடியாது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆசிரியர்களுடைய பிரச்சினைகளுக்காக இயக்குநரகத்திற்கு அவர்கள் வரக் கூடாது என்று சொன்னார்கள். மாநிலம் பூராவும் உள்ள ஆசிரியர்களுக்கும் பிரச்சினைகள் ஏராளம் உள்ளதால், அவர்களுடைய பிரச்சினைகளைப் போக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிலையிலேயே ஒரு அதிகாரி நியமிக்கப்படுவாரா? இரண்டாவதாக, இந்த ஊதியப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அவர்களுடைய பிரச்சினைகள் இதுவரை தீராத காரணத்தால், ஆசிரியர்களுக்கென தனியாக நிலையான ஒரு ஊதியக் குழு "பெர்மனன்ட் பே கமிஷன் ஃபார் டீச்சர்ஸ்" அமைக்கப்படுமா? மூன்றாவதாக, கல்வித் துறையிலே இயக்குநர்கள் இருக்கின்றார்கள் அல்லவா, அவர்களை இயக்கி வைக்க தனியாக ஒரு இயக்குநர் நியமிக்கப்படுவாரா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படி உத்தேசம் இல்லை.

**திரு. ப. மாணிக்கம்:** கல்வித் துறை சம்பந்தமான ஏராளமான பிரச்சினைகளை "பரிசீலிக்கலாம்" என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லிய விஷயங்களையெல்லாம் பரிசீலனை செய்து விட்டார்களா என்று எப்போது தெரிவிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவற்றைப்பற்றி உறுதிமொழி நடவடிக்கைக் குழு விவரங்களைச் சேகரித்து அவர்கள் அதைப் பின்தொடர்வார்கள்.

THIRU G. VASANTHA PAI: Will the Government consider the appointment of a Committee consisting of Teachers' representatives on the side of the Government as well as on the side of the Opposition to nivestigate into these matters and make a report to the House?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படிப்பட்ட ஒரு அவசியம் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தனி இயக்குநர் நியமிப்பதற்கில்லை என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் சொன்னார். மேலும் ஆசிரியர் பிரச்சினைகளுக்காக இயக்குநரகத்திற்கு வருவது குறைய வேண்டுமென்றும் சொன்னார்கள். ஆசிரியர்கள் போக வேண்டாம் என்று வைத்துக்கொண்டால்கூட ஆசிரியர் பிரதிநிதிகளாகிய நாங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அங்கு போக வேண்டிய நிலை இருக்கிறது. காலை நேரம் நாங்கள் போனால் இயக்குநர் செயலகத்திற்கு வந்து விடுகிறார். காலை நேரவும் செயலகத்திலேயே தங்கி விடுகிறார். மாலையில் போனால், செயலகத்தில் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அவருடைய அலுவலர்களை வைத்து கூட்டம் கூட்டி விளக்கி விளம்பரப்படுத்துகிறார். ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைக் கேட்க இந்த நிலையில் அவருக்கு நேரமில்லை. அந்தக் காரணத்திற்காவது ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தனியாகக் கவனிக்க தலைமை நிலைய இயக்குநர் ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு கவனிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆசிரியர்கள் பிரச்சினைகளுக்காக இயக்குநரகத்திற்கு வரக் கூடாது, தடை செய்ய வேண்டும் என்பதல்ல நான் கூறியதன் கருத்து. பிரச்சினைகளே வராத அளவுக்கு அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும், அந்த அளவுக்கு அதிகாரிகள் வேகமாக இயங்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அவ்வாறு சொன்னேன்.

(பிற்பகல் 4-40)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய ஓய்வு, குடும்ப நலநிதி போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கப் "பறக்கும் படை" என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அந்தப் படை மாவட்டம்தோறும் வரும், அப்படி வருவதற்கு முன்பாக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு முன்னறிவிப்புத் தரப்படும் என்றெல்லாம் கல்வித் துறை இயக்குநர் அவர்கள் சார்பில் எங்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால் அந்தப் பறக்கும் படை பெயருக்குத் தகுந்தாற்போல் மிக வேகமாக வந்து மிக வேகமாகப் பறந்து போய்விடுவதாக, அந்தப் படை வந்துபோன பிறகு தான் எங்களுக்குச் செய்திகள் கிடைக்கின்றன. எனவே இதற்குப் பதிலாக ஒவ்வொரு மாவட்டத்



திற்கும் பறக்கும் படையை ஒரு குறிப்பிட்ட காலத்தில் அனுப்பி, அனைத்து ஆசிரியர்கள் பிரச்சினைகளையும், அவைகளை எங்கெங்கே தேங்கிக் கிடக்கின்றனவோ அந்தந்த அலுவலகங்களிலேயே, முன்கூட்டியே ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு முன்னறிவிப்புக் கொடுத்து வரவழைத்து, உட்கார்ந்து பேசித் தீர்த்துவிட்டால், பெரும்பாலான பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வைக் காண முடியுமென்பதால், அமைச்சர் அவர்கள் இந்த யோசனை குறித்துப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தேங்கிக் கிடக்கும் ஆசிரியர்கள் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் தற்போது ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். அந்த முயற்சியின் காரணமாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகள் அதிகரிக்கப்பட்டு, மாவட்டங்களில் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று கருதுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** ஆசிரியர்களுடைய பிரச்சினைகளே இந்த அவையினுடைய பெரும் பகுதி நேரத்தை எடுத்துக் கொள்ளுகின்றன என்று நினைக்கிற அளவுக்கு . . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதை எத்தனை முறை சொல்லப் போகிறீர்கள்? இது என்ன புகாரா?

**திரு. செ. முத்துசாமி:** பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. எனவே இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள 6 ஆசிரியப் பிரதிநிதிகளையும் (எம்.எல்.சி.-க்களையும்) கொண்ட ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி ஒன்றை கல்வித் துறைக்காக நியமித்து, கல்வித் துறைப் பிரச்சினைகளையெல்லாம் அந்தக் குழுவைக் கொண்டு தீர்த்துக் கொள்ளும் நிலையை உருவாக்குவதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஏற்கெனவே கன்சல்டேடிவ் கமிட்டி ஒன்று அமைப்பது குறித்த கருத்தினை சென்ற ஆண்டே நான் குறிப்பிட்டேன். அது விரைவில் அமையவிருக்கிறது. அதிலே எல்லா பிரதிநிதிகளும் பரவலாக இருப்பார்கள். ஆசிரியப் பிரதிநிதிகளுக்கு நான் விடுக்க விரும்புகிற ஒரு வேண்டுகோள், ஆசிரியர் தொகுதியிலிருந்து இந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தால், ஆசிரியர்களுக்காக மட்டும் தான் பேசுவது என்ற முறை வைத்துக்கொள்ளக் கூடாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அப்படியும் இல்லையே, ஆசிரியப் பிரதிநிதிகள், எல்லாவற்றிலும் தானே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு).

[1979 பிப்ர

*49 Q.—Thiru S. MUTHUSWAMY & Thiru C.
LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for E
cation be pleased to state—

(a) whether there is any proposal with the Government
appoint a separate Director for Higher Secondary and Hi
Schools and a separate Director for Elementary and Mid
Schools; and

(b) if so, when it will be implemented?

திரு. செ. முத்துசாமி மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமி
கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்
வேண்டுகிறேன்—

(அ) உயர் இடைநிலை மற்றும் இடைநிலை பள்ளிகளுக்கென தனியா
ஒரு இயக்குநரும், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கென தனியா
ஒரு இயக்குநரும் நியமனம் செய்யும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ;

(இ) ஆமெனில், அது எப்போது செயல்முறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ). இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. முத்துசாமி : ஒரு காலத்தில், கல்வித் துறையில் பள்ளி
யுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தபோது, இத்துறைக்காக ஒ
இயக்குநர் இருந்தார். இப்போது தொடக்கப் பள்ளிகளைப் பொறு
வரையில், மிகப் பெரிய அளவுக்கு, விரிவாக்கப்பட்ட எண்ணிக்கையுள்
பள்ளிகளைக் கொண்ட ஒரு துறையாக இருக்கிற காரணத்தால், தொடக்
கல்வி அளிக்கும் பள்ளிகளுக்கு மட்டும் என ஒரு இயக்குநர் அலுவலகத்
அமைப்பதன் மூலம், பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வச
ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு, மேல்நிலைப் பள்ளி, இடைநிலைப்
பள்ளியோடு சேராது தனியாக ஒரு இயக்குநரை நியமிக்கும் யோசனையை
அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பழைய சென்னை மாநில
என்றிருந்தபோது, அதாவது 1953-க்கு முன்பு கல்வித் துறையில் ஒரே ஒ
இயக்குநரகம்தான் இருந்தது. ஒரு இயக்குநர்தான் இருந்தார். பிறகு சட்ட
கல்விக்கு ஒரு இயக்குநரும், பொறியியல் தொழிற் கல்விக்கு என்று ஒ
இயக்குநரும், அதற்குப் பிறகு கல்லூரிக் கல்விக்கு ஒரு தனியா
இயக்குநரும், அதற்குப் பிறகு பாடநூல் வெளியீட்டு நிறுவனத்திற்காக என்
ஒரு இயக்குநரும், அதற்குப் பிறகு அரசினர் தேர்வுக்கு என்று ஒ



1979 பிப்ரவரி 16]

இயக்குநரும் பிறகு நூல் நிலையங்களுக்காக என்று ஒரு தனி இயக்குநரும், நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி ஒரு இயக்குநர் பார்த்துவந்த வேலையை பகிர்ந்து பகிர்ந்து தந்த பிறகு, இப்போது இருக்கிற நிலைமையில் ஒரே இயக்குநர் நல்ல முறையில் இந்த நிருவாகத்தை நடத்த முடியும் என்று தான் நான் நினைக்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒரு காலத்தில் D.P.I. என்று ஒரே ஒரு பதவி இருந்து, பிறகு தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு இயக்குநர்களின் பதவிகளை ஏற்படுத்தியது குறித்து உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன், வரவேற்கிறேன். ஆனாலும் கல்வியினுடைய மிக முக்கியமான அடித்தளம் அமைக்கப்படுகிற இடம் என்று சொல்லப்படும் துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி ஆகியவற்றைச் சிறந்த முறையில் நிர்வகிக்க நிச்சயமாக ஒரு தனி இயக்குநர் தேவை என்பதே என்னுடைய கருத்து. எனவே இப்போது முடியாவிட்டாலும், மிக விரைவிலாவது அந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்க, கோரிக்கையை ஏற்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துவக்கப் பள்ளி அல்லது உயர் துவக்கப் பள்ளி, அதற்கு மேல் உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி என்ற கட்டங்கள், ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு இருக்கின்றன. சில இடங்களில் 5-வது வகுப்பு வரை இருக்கும். சில இடங்களில் 1 முதல் 8 வகுப்புகள் வரையிலும், சில இடங்களில் 6 முதல் 10 வகுப்புகள் வரையிலும் இருக்கின்றன. இன்னும் சில இடங்களில்தான் 13 வகுப்புகள் வரை இருக்கின்றன. இப்படி பல்வேறு கட்டங்களில் கலந்து இருக்கிற காரணத்தாலும், ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாலும், பல்வேறு பிரச்சினைகளைப் பார்க்கிறபோது, ஆசிரியர்கள் பிரச்சினை என்பது கொஞ்சம் இருக்கிறது. அதைக்கூட விரைவில் தீர்த்து விட்டால், இயக்குநருக்குப் போதுமான அளவுக்கு வேலையில்லாத நிலை வந்தாலும் வந்துவிடும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : On a point of order, Sir. தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்களுக்குத் தாங்கள் கேள்வி நேரத்தில் வாய்ப்பு அளிக்கிறீர்கள். அது தலைவரின் அதிகாரத்திற்குட்பட்டது. அவரின் விருப்பத்திற்குட்பட்டது . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதை 'கன்பர்ம்' செய்ய வேண்டுமா ?

திரு. இந்கர்டு நா. வீராசாமி : ஆனால் பொதுவாக ஆ... கொறடாவாக இருப்பவர்கள் இப்படிக் கேள்வி நேரத்தை ஆக்கிர... கொள்வதில்லை. இதன் காரணமாக மற்ற உறுப்பினர்களுக்கு ... வாய்ப்பு குறைந்துவிடுகிறது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொ... வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது முறையான கேள்வியி... கட்சிக் கொறடாக்கள் கேள்வி கேட்கக்கூடாது என்று விதி ஏதுமில்... அப்படியும் திரு. அறிவழகன் அவர்கள் அதிகமாகக் கேள்வி நேர... ஆக்கிரமித்துக் கொள்வதுமில்லை. ஆளும் கட்சியின் சார்பில் ஒன்று அ... இரண்டு உறுப்பினர்கள்தான் கேள்விகளைக் கேட்கிறார்கள். ஆகவே இ... ஒரு பிரச்சினையாக ஆக்க முடியாது. இதில் ஒழுங்கும் இல்லை, பிரச்சினை... இல்லை. ஒழுங்குப் பிரச்சினை என்பது முறையாக இருக்க வேண்டும்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், ... இயக்குநராக இருந்த நிலை மாறி, எவ்வாறு பல இயக்குநர்கள் பதவி... உருவாக்கப்பட்டு, இப்போது எத்தனை பேர் அதிகமாக இருக்கிறார்கள் என்... குறிப்பிட்டார்கள். ஆனால் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்... இன்றைக்குப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, ஒரு புதிய இயக்கு... பதவியும் உருவாக்கப்படவில்லை என்பது ஒன்று. இரண்டாவது 170 கோ... ரூபாய் கல்வித் துறைக்காகச் செலவழிக்கிறோம் என்று அடி... பேசுகிறோம். ஆனால் இதைவிட மிகக் குறைவாகச் செலவழிக்கிற கூட்டுற... துறையில் இயக்குநர் அளவில் பல்வேறு அதிகாரிகள் இருக்கிறார்கள். அ... விட மிகக் குறைவாகச் செலவழிக்கிற வேறு பல துறைகளில் இதே பத... தரத்தில், 7, 8 பேர் அல்லது 10, 15 பேர் இருக்கிறார்கள். ஆனால் பெ... வளர்ச்சி பெற்று வருகிற கல்வித் துறையில்—இந்த பட்ஜெட் தொடரின்போ... முடியவில்லை என்றாலும், அடுத்த பட்ஜெட் தொடரின் போதாவது—பு... இயக்குநர் பதவிகளை உருவாக்கும் முயற்சியை மாண்புமிகு அமைச்... அவர்கள் மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் கல்வி அமைச்சரா... பொறுப்பேற்ற பிறகு, சிக்கன நடவடிக்கை காரணமாக, ஒரு இயக்... பதவியைக் குறைத்திருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



## Houses for Retired Government Servants.

*50 Q.—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) wheher there is any proposal with the Government to allot at least 10 per cent of the houses constructed by the Tamil Nadu Housing Board under various Schemes, to retired Government Servants either for sale or for rent; and

(b) if not, whether the Government will consider such a proposal?

## ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களுக்கு வீடுகள்

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர்களுக்கு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பல்வேறு திட்டங்களில் கட்டுகின்ற வீடுகளில், குறைந்த பட்சம் பத்து சதவிகிதமாவது விற்பனைக்கோ அல்லது வாடகைக்கோ ஒதுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) இல்லையெனில், இச்செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(இ) ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கும் சம்பாதிக்கும் திறன் குறைவாய் இருக்குமாதலால், அவர்களுக்கென வீட்டு வசதி வாரியக் (hire purchase) குடியிருப்புகளை தவணை முறை விற்பனைக்காக குடியிருப்புகள் பத்து சதவிகிதம் ஒதுக்க இயலாது. வாரியத்தின் வாடகைக் குடியிருப்புகள் எவருக்கும் பிரத்யேகமாக ஒதுக்கப்படுவதில்லையாதலால் ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர்களுக்கென அவைகளைக் குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்குவதும் இயலாது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : ஓய்வு பெற்றவர்களைப் பொறுத்தவரையில், அரசாங்கம் அவர்களை நலிவுற்ற பிரிவினர் (Weaker Section) என்று கருதி, இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படியொரு ஆலோசனை அரசுக்கு இப்போது இல்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு ஒரு வீடுகளையாவது ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அ முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்போது முன்வரு இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(1) திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் நிறுவனத் தொழிற் தகராறு குறித்

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, On a point clarification, Sir. ! நேற்றையதினம் இந்த அவையிலே பேசும்பே மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் திருச்சி சிம் மீட்டர்ஸ் நிறுவனம் சம்பந்தமாக தொழிற் சங்கத்தோடு மீண்டும் பே வார்த்தை நடத்துவதாக வாக்குறுதி அளித்தார்கள். அந்த சிம்கோ மீட்ட நிறுவனத்தைப் பொறுத்தவரையில் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது கேள்வியோடு சம்பந்தப்பட்ட என்று உறுப்பினர் சொல்ல வேண்டும். இப்போது எப்படி இது வருகிறது?

திரு. க. இராமமூர்த்தி : On a point of clarifica only, Sir.

ஒரு குரல் : தற்போது 'Zero hou

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 'Zero hour' என்று எ இந்த அவையில் கிடையாது.

திரு. க. இராமமூர்த்தி : இந்த நிறுவனத்தில் அங்கீகரிக்கப்ப ஐ.என்.டி.யு.சி. என்ற தொழிற் சங்கத்தோடு 1978 ஆம் ஆண்டு 11 பிரிவின்கீழ் ஒரு ஒப்பந்தம் நிருவாகத்திற்கும் தொழிற் சங்கத்திற்குமிடை அரசுத் தலையீட்டின்பேரில் ஏற்பட்டது. அதற்குப் பிறகு, அரசுத் தரப் இந்த ஒப்பந்தத்தை உடைப்பதில்லை என்ற வாக்குறுதி இந்த அவை மட்டுமல்லாமல், வேறு பல இடங்களிலும் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அ மாறாக, அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட 4 மாதங்களுக்குப் பிறகு அவ புதிய தொழிற் சங்கம் ஒன்று அதே கோரிக்கைகளை வைத்து,



போராட்டங்களை நடத்தி, ஏற்கெனவே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலைக்குப் போகிற தொழிலாளர்களைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மீண்டும் அரசுத் தரப்பில் ஏற்கெனவே தந்த வாக்குறுதிகளுக்கு மாறாக 12 (3) ஒப்பந்தத்தை உடைப்பதற்கு மறுபரிசீலனை செய்கிறோம் என்ற பெயரில் இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்வது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-50)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன், இந்தச் சட்ட மன்ற மேலவையில் 'ஜீரோ அவர்' என்று ஒன்றில்லை. அதை ஏற்படுத்துகிற மாதிரி ஒரு புதிய மரபை உண்டாக்குகிறார்கள். அதுவும் பெரிய விஷயத்தைக் கேட்கிறார்கள். இப்படியே ஒவ்வொரு உறுப்பினரும் கேட்டால், பாராளுமன்றத்தில் உள்ளதைப் போல் இங்கும் 'ஜீரோ அவர்' ஏற்பட்டுவிடும். தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதாக இருந்தால், நான் அனுமதிக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : பாராளுமன்றத்தில் இருப்பதால், நாமும் அதைப் போல் செய்யலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அப்படியானால், விதிகளைத் திருத்த வேண்டும்.

திரு. கோ. சி. மணி : நமது நிதியமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் இருந்திருக்கிறார். அவர் அந்த விதிமுறைகளைத் தெரிந்தவர்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதைத் தெரிந்துகொள்ள பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்க வேண்டும் என்பதில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அந்தக் காரணத்தாலே மட்டும் 'ஜீரோ அவர்' வரவேற்பதாக ஆகாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் மரபை மீறுவதாக இல்லை. கவர்னர் உரையின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுவார் என்று கருதுகிறேன். அப்போது இதைச் சொன்னால் பதில் சொல்லுகிறேன். இப்போது மரபை மீறி சொல்லுவதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## (2) உறுப்பினர் திரு. இளம்பரிதி கைது குறித்து உரிமைக் குழு அறிக்கை குறித்து.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நடந்த கூட்டத் தொடரில், மா உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொ இந்த மன்றத்திலே உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டு, அதைத் உரிமைக் குழுவிற்கு அனுப்பினீர்கள். நாட்கள் பல உருண்டோடிவிட் அக்குழு தன்னுடைய அறிக்கையை அளித்துவிட்டதா? அறிக்கை மாண்பு உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொ விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த அறிக்கை, அஜண்டா பே வருகிறபோது, உங்களுடைய பார்வைக்கு வரும்.

## 3. அறிவிப்பு.

**அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்குத் தேர்தல் கு**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அண்ணாமலைப் பல்கலைக் பேரவைக் குழுவிற்கு திருவாளர்கள் பி. ரா. லெட்சுமிகாந்தன், ப எச். வி. ஹண்டே ஆகிய இருவர் மட்டுமே போட்டியிட்டதால், முறைப்படி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதனை மேலவைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## 4. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

**கோவிந்தன் என்பவர் கைது செய்யப்பட்டு மாதவரம் காவல் நிலைய லாக்கப்பில் வைக்கப்பட்டு, பிறகு வீட்டிலிருந்து மருத்துவ மனைக் கொண்டுபோகும்போது இறந்தது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. நல்லசிவன் அவர்கள் ஒரு ஒ வைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அது எந்த வகையில் ஒ வைப்புத் தீர்மான விதிகளுக்குட்பட்டது என்பதைச் சுருக்கமாகச் செ வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, கோவிந்தன் என்ற ஒ மாதவரம் போலீஸ் ஸ்டேஷனில் 14 ஆம் தேதி இரவு கைது செய்து, அன்றைக்கு அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும் தா அவர் இறந்ததாகப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டு பத்திரிகைச் செய்தியிலிருந்து, 14 ஆம் தேதி இரவே அவர் கைது செ





பட்டு 14 ஆம் தேதி முழுவதும் போலீஸ் லாக்கப்பில் வைத்து அடைத்து வைக்கப்பட்டதாகவும், 15 ஆம் தேதி காலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும்போது அவர் இறந்து போனதாகவும் தெரிகிறது. ஆகவே அவருடைய சாவு மர்மமாக இருக்கிறது. அதைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. போலீஸ் தரப்பிலிருந்து, அவர் 15 ஆம் தேதி காலையில் கைது செய்யப் பட்டதாகவும், கைது செய்தவுடனே மார்புவலி வந்ததாகவும், ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்போது அவர் இறந்து போனதாகவும் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவரைக் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனில் வைத்துத் தாக்கப் பட்டதன் காரணமாக, அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும்போது இறந்து போனார் என்று சொல்லுவது போலீஸ் தரப்பினர் கூறும் தொடர்ந்த சரித்திரமாக இருக்கிறது. இந்த குறிப்பிட்ட சம்பவத்தினால் சென்னையில் பரபரப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை இருப்பதால், இது குறித்து அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். ஆகவே இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருளை விவாதிக்க இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராசா முகமது :** மேலவைத் தலைவர் அவர்களே, புழல் கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தன் என்பவர் குடித்த குற்றத்திற்காக 14 ஆம் தேதி இரவு மாதவரம் போலீஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப் பட்டார். 15 ஆம் தேதி காலை நெஞ்சு வலி என்று கூறினார். ஆகவே அவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அவருடைய வீட்டிலிருந்து அவருடைய உறவினர்கள் ஸ்டான்லி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும்போது, வழியில் இறந்துவிட்டார். ஸ்டான்லி மருத்துவமனை அவசரப் பிரிவிலிருந்து சடலம் அவரது உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. இது சம்பந்தமாக மாதவரம் காவல் நிலையத்தில் Section 176 Cr.P.C. என்ற பிரிவின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சவப் பரிசோதனை செய்யப்பட்டு உடல் அவரது உறவினர்களிடம் கொடுக்கப்பட்டது. சவப் பரிசோதனை முடிவு இன்னும் வரவில்லை. சைதாப்பேட்டை சப்-கலெக்டர் இது குறித்து விசாரணை நடத்தி வருகிறார். எனவே இது சம்பந்தமாக முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கோவிந்தன் என்பவர் கைது செய்யப்பட்டு மாதவரம் கா நிலையத்தில் லாக்கப்பில் வைக்கப்பட்டு பிறகு வீட்டிலிருந் மருத்துவ மனைக்குக் கொண்டு போகும்போது இறந்தத குறித்து



மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வேண்டிய அவசியமில்லை என்று கருதி இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(3) மாநிலக் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி ஒத்தி வைப் தீர்மானம் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இன்றைய தினம் நான் ஒரு ஒத்தி வை தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். சென்னையில் மாநிலக் கல் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கொடுத்திருந்தேன். இது காலை 11 ம நடந்தது. நான் காலையிலேயே தீர்மானத்தைக் கொடுத்திரு அரசாங்கம் விரும்பியிருந்தால், தகவல்களைச் சேகரித்துக் கொடுத்திருக்

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, மா உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற விஷயம் இன்று காலையில் விஷயமாகத் தெரிகிறது. சமாதானத்தை ஏற்படுத்துகிற முயற் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மாலை இரண்டரை மணி வரையில் அ இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. என்னதான் விஷயம் திருந்தாலும், அதிகார பூர்வமாகப் பெற்றுத்தான் கருத்துக்களைச் செ வேண்டுமென்ற நோக்கத்தின் காரணமாக, இதைப்பற்றி இன்னை சொல்ல முடியவில்லை. பொதுவாக எவ்வளவு விரைவாக இப்படிப் விஷயங்களில் பதில் சொல்ல முடியுமோ அந்த அளவுக்குத் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொண்டு மாண் உறுப்பினர் அவர்களுடைய ஒத்தி வைப்புத் தீர்மானத்தை நா எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(4) மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை குறித்து.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, மூன்றாவது ஊ குழுவினுடைய அறிக்கை இன்னும் வெளியே வரவில்லை. அதை நிதியமை அவர்கள் அவையில் வைக்க ஏற்பாடு செய்வார்களா என்று கேட்கிறேன்.

THE HON. THIRU K. MANOHARAN : Mr. Chairman, that question does not arise.





5. கவன ஈர்ப்புத் தீர்மானம்.

(1) 1—4—1970-க்குப் பின் அரசு பள்ளிகளில் பணி அமர்த்தப்பட்ட இடை நிலை ஆசிரியர்களின் பணி, வேலைக்குச் சேர்ந்த நாளிலிருந்து, வரன்முறை செய்யப்படாதது குறித்து.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" 1—4—1970-க்குப்பின் அரசுப் பள்ளிகளில் பணி அமர்த்தப்பட்ட இடைநிலை ஆசிரியர்களின் பணி, வேலைக்குச் சேர்ந்த நாளிலிருந்து, வரன் முறை செய்யப்படாததால் பல்லாயிரம் இடைநிலை ஆசிரியர்கள் பாதிக்கப் பட்டுள்ளது குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது குறித்து ஒரு அறிக்கை @ இந்த அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரிலேயே கல்வி அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். சொல்லி 6 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அதே பள்ளியில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு அவர்கள் சேர்ந்த நாளில் இருந்து பணி, வரன் முறை செய்ய உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆகவே வருகிற கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பிலாவது இது அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தற்காலிக நியமனம் செய்த நாளிலிருந்து அவர்களுடைய பணியினை வரன்முறை செய்வது, அந்நாள் முதல் ஊதியத்தைக் கொடுக்கலாம் என்பது பற்றிய கருத்து அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சி. சா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, 1—4—1970-க்குப் பிறகு 3—3—1973-க்குள் நியமிக்கப்பட்ட 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளி இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள் இதரசிறப்பாசிரியர்கள் அவர்களின் பணி 1974-லிருந்து வரன்முறை செய்யப்பட்டிருக்கிறது. இதனால் அவர்களுக்கு மூன்றாண்டுகளுக்குரிய ஊதிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் 'ஏ' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள உடற் பயிற்சி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் ஆகியோருடைய பணியை அவர்கள் பணியில் சேர்ந்த தேதி யிலிருந்து வரன்முறை செய்யப்பட்டு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டு ஆணை

@ 483-484-ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**1—4—1970-க்குப் பின் அரசு பள்ளிகளில் பணி அமர்த்தப்பட்ட இடைநிலை ஆசிரியர்களின் பணி, வேலைக்குச் சேர்ந் நாளிலிருந்து வரன்முறை செய்யப்படாதது குறித்து**



வெளியிடப்பட்டிருக்கிறது. ஏன் இந்தப் பாகுபாடு? குறிப்பாக மாவட்டத்தில் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இது குறித் ஆதாரங்கள் இருக்கின்றன. எனக்கு முன் பேசிய மாண்புமிகு உ அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல், பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட ஆணை வெளியிடப்பட்டாலும், அ படுத்தாமல் குறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை மாண் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்றாலும் அந்த ஆணையில் பட்டதாரி ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த தேதி ஊதிய உயர்வைக் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்று செ பட்டிருப்பதாலும், 'ஏ' பிரிவு ஆசிரியர்களுக்கும் பணியில் சேர்ந்த முதல் ஊதிய உயர்வைக் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்று யிருப்பதாலும், 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கு மட்டும் இதை வழங்குவதி இந்தப் பாரபட்சம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பாரபட்சம் ஒன்றுமில்லை. அதைத் தீவிரமாகப் பரிசீலித்து வருகி என்பதைத்தான் சொல்லுகிறேன்.

(பிற்பகல் 5-00)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, நான் இது கு கல்வித் துறைக்கு 30—7—1978-ல் கடிதம் எழுதினேன். அந்த அதிகா யிருந்து பதில் வந்தது. "I am directed to state that the matte under the consideration of the Government" என்று அதிகாரி குறிப்பிட்டிருந்தார். நான் ஏற்கெனவே சொன்னது 'கன்சிடரேஷன்' என்ற சொல்லைப் பயன்படுத்தி, காலதாமதம் ஏற்ப கொண்டிருக்கிறார்கள், நம்முடைய கல்வித் துறை அதிகாரிகள் என் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, விரைவுபடுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நடவடிக்கை எடுக்கப்படும்.



**(2) நகராட்சி, மாநகராட்சி மற்றும் ஊராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஆசிரியர்களுக்கு 14—2—1977 தேதியிட்ட அரசாணை எண் 333 நிறைவேற்றப்படாததால் ஏற்படும் பண இழப்பு, இன்னல்கள் குறித்து.**

**திரு. பி. ஆர். தாமஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"நகராட்சி, மாநகராட்சி மற்றும் ஊராட்சி அனைத்து நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அனைத்து நிலை ஆசிரியர்களுக்கு கல்வித் துறையினரால் 14—2—1977 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண் 333-ல் கண்ட ஆணைகள் இதுநாள் வரை நிறைவேற்றப்படாமல் இருப்பதால் ஏற்படும் பண இழப்பு, இன்னல்கள் குறித்து".

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அறிக்கை @ அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** தலைவரவர்களே, எந்தெந்த நகராட்சிகளிலே, உள்ளாட்சிகளிலே இந்த அரசாணை நிறைவேற்றப்படவில்லை என்று கேட்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே பலமுறை உள்ளாட்சித் துறை அதிகாரிகளுக்கு இதை எடுத்துக்காட்டி எழுதியிருக்கிறோம். நேரில் சந்தித்துக் கூறி யிருக்கிறோம். ஆனால் நிறைவேற்றப்படவில்லை. திண்டுக்கல், கரூர், திருப்பூர், பட்டுக்கோட்டை நகராட்சிகள், உசிலம்பட்டி பஞ்சாயத்து யூனியன், கொட்டாம்பட்டி பஞ்சாயத்து யூனியன் ஆகிய இடங்களில் இந்த ஆணை நிறைவேற்றப்படவில்லை. ஆசிரியர்களுடைய அனைத்துப் பணிகளும், நகராட்சிப் பள்ளியோ, பஞ்சாயத்து யூனியன் பள்ளியோ, தனியார் பள்ளியோ, அரசுப் பள்ளியோ எங்கு பணியாற்றியிருந்தாலும், வேலையை ராஜினாமா செய்துவிட்டு, வேறொரு நிர்வாகத்திற்கு வரும்போது, அனைத்து நிர்வாகங்களிலும் ஆற்றிய பணியை ஒட்டுமொத்தமாகச் சேர்த்து, 10 ஆண்டுகள் பணியாற்றியிருந்தால், தேர்வு நிலை வழங்கலாமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்குத் தெரியும். எனவே அவர்கள் அனைவருக்கும் தேர்வு நிலை வழங்க ஆணை பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே, நகராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருந்தால், அது பற்றிய முழு விவரங்களையும்

---

@ 484-485 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வைத்திருக்க முடியும். ஆனால் தீர்மானம் பொதுவாக இருந்ததால்,
ஆய்வாளர், ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோரிடம் இது
கேட்டபோது, எந்தப் புகாரும் வரவில்லை என்றும், இது முழு
அமல்படுத்தப்படுகிறதென்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்போது
களின் பெயர்களையும், ஊராட்சி ஒன்றியங்களின் பெயர்களையும் குறி
காட்டியிருக்கிறார்கள். ஆகவே அதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்
அரசு மேற்கொள்ளும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நாங்கள் இருவரும் சேர்ந்து,
சட்ட மன்றக் கூட்டத் தொடரில் இதே கவன ஈர்ப்புத் தீர்மானத்
கொண்டு வந்தோம். அதற்கு பதில் அறிக்கை, சட்டமன்றக் கூட்டத்
முடிந்த பிறகு, வீட்டிற்கு அனுப்பப்பட்டது. அதிலேயிருந்த பத்திக
சற்று முன்பின் மாற்றி இப்போது கொடுத்திருக்கிறார்கள். அப்ப
கொடுத்திருக்கிறார்கள். இதில் மிகத் தவறானது என்னவென்றால், 10 ஆ
பணி முடித்தவர்களுக்கு, 333 ஆணைப்படி தேர்வு நிலை வழங்குவது
படுத்தப்பட்டுவிட்டது என்பதுதான். பொய்யான தகவலை, பொய்
அறிக்கையை மேலவைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் பேசும்போ
"உண்மைக்கு மாறான" என்று சொல்ல வேண்டும். 'பொய்'
வார்த்தையைச் சொல்ல வேண்டாம்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, நான் திரு
கொள்கிறேன். 'உண்மைக்கு மாறான செய்தியை' மேலவைக்கு அனுப்பி
றார்கள். அதே அறிக்கையை மீண்டும் கொடுத்திருக்கிறார்
எங்களுடைய பணி விதிகளிலே திருத்தம் ஏற்படுத்தினால்தான், அவ்
தர்வு நிலை கொடுக்க முடியும்" என்று நேரிலே சொல்கிறார்
அறிக்கையிலே சொல்லும்போது, எந்தெந்த இடங்கள் என்று குறிப்பி
சால்லுங்கள் என்று சொல்லுகிறார்கள். திரு. காமல் அவர்கள் குறிப்பி
ால், ஆதாரங்களை நான் வைத்திருக்கிறேன். அவற்றைச் சொல்ல
லவையின் நேரத்தை இப்போது எடுத்துக்கொள்ள விரும்பவி





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே அமைச்சரவர்கள் சொன்னதற்கு விளக்கம்தான் கேட்கலாம். சொற்பொழிவு நிகழ்த்தக்கூடாது. விளக்கம் கேட்கத்தான் விதி அனுமதிக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆதலால் சொற்பொழிவாற்றுவதா ?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, உறுப்பினர்கள் பொதுப்படையாகச் சொல்லுகிறார்கள், குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று அறிக்கையிலே காணப்படுகிறது. அது எங்களை அவமதிப்பதுபோல் இருக்கிறது. இந்த அவை முடிந்த பிறகு, விவரங்களை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் கொடுக்க இருக்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள், இதுகுறித்து உள்ளாட்சித் துறை விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தூண்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினைக்காக உள்ளாட்சித் துறை செயலரைச் சந்திக்கச் சென்றபோது, நாங்கள் அவமதிக்கப்பட்டோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. பி. ஆர். தாமஸ் எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உங்கள் 'ரவுண்ட்' முடிந்துதான் அவர் பெயரைக் கூப்பிட்டேன். நீங்கள் அப்போதே கேட்டிருக்க வேண்டும். அப்போதே சந்தர்ப்பம் கொடுத்தேன். ஆசிரியர் தொகுதி பிரதிநிதிகளிடம் பட்ாதபாடு படுகிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** ஒரு சில ஆசிரியர்களுக்கு இந்த ஆணை அமுலாக்கப்பட்டது. ஆனால் தணிக்கையாளர்கள் ஒப்புக்கொள்ள முடியாதென்று மறுத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் தெரிவித்திருந்தால், அவர் ஏற்ற பரிகாரம் செய்திருக்கலாம். அவர்கள் மறுக்கக் காரணம், ராஜினாமா செய்துவிட்டு மற்றொரு பள்ளிக்கு மாறியிருக்கிறார்கள் என்பதுதான். ராஜினாமா செய்யாமல், ஒரு நிர்வாகத்திலிருந்து இன்னொரு நிர்வாகத்திற்கு வர முடியாது என்ற கருத்தையும் கூறி, இதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

நகராட்சி, மாநகராட்சி மற்றும் ஊராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஆசிரியர்களுக்கு 14—2—1977 தேதியிட்ட அரசாணை எண் 333, நிறைவேற்றப்படாததால் ஏற்படும் பணி இழப்பு, இன்னல்கள் குறித்து.

[1979 பிப்

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதனை தெளிவாக இருப் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தபடி, உள்ளாட்சித் என்பது ஒன்றே. அதனுள்ளே பல நகராட்சிகள், ஒன்றியங்கள் இருக்கின் இரண்டு மாநகராட்சிகளைப்பற்றி எந்தவிதப் புகாரும் இல்லை சொல்லப்படுகிறது. கனம் சுப்பையா நீர்மானத்திலேயே அவர்கள் கோடி காட்டியிருந்தால், உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். திரு. சி லெட்சுமிகாந்தன் அவர்கள் வருத்தத்தோடு ஒன்றைச் சொன்ன அதற்காக வருத்தம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கென தெரிவித்திருந்தால், உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கல இப்போது உறுப்பினர்கள் அவர்கள் கையிலே உள்ள நகராட்சி ஒன்றியங்கள் பட்டியலைக் கருமாக்கையால், அது பற்றி விசாரித்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தோராவது அறிக்கையை அளித்

திரு. எம். சங்கரலிங்கம் : பேரவைத் தலைவர்களே, அரசு உ மொழிக் குழுவின் 31-வது அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

7. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, என் பெய கொடுக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன். கீழ்க்கண்டதை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக்கொள்ளவும் :

"தமிழக விவசாயிகளின் பொருளாதார அவல நிலையைப் போ வதற்கு வழிவகைகள் காண்பது குறித்து ஆளுநர் உரையில் எ குறிப்பிடாதது வருந்தத்தக்கது".

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : தலைவரவர்களே, நான் வழிமொ கிறேன்.

* திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தலைவரவர்களே, 1979 ஆம் ஆ பிப்ரவரி 9 ஆம் நாள் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் நிகழ்த்துகின்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வா





அளித்தமைக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். டாக்டர் ஹண்டே அவர்கள் பேச்சைக் கேட்டுவிட்டுத்தான், நான் ஆளுநர் உரையைப் படித்தேன். அவர்கள் சாதாரணமாக நன்றாகப் பேசக் கூடியவர்கள். எங்கள் பகுதியில் அவர்களை அழைக்கும்போதுகூட, ஏதாவது தலைப்பு கொடுத்துத்தான் பேசச் சொல்லுவார்கள். என்னைப் பொறுத்த வரையில், ஒன்று சொல்லுவேன். இந்த அறிக்கையை அவர்கள் படித்திருந்தால் கூட, இவ்வளவு அழகாகப் பேசியிருக்க முடியாது. ஒன்றை அழகாகச் சொன்னார்கள். பாரத தேசத்தை எடுத்துக்கொண்டால், எந்த மாநிலத்திலும் இல்லாத அமைதி தமிழ்நாட்டில் நிலவுகிறதென்று சொன்னார்கள். நிறை குடமும் தளும்பாது, வெறும் குடமும் தளும்பாது என்று சொல்லுவார்கள். சட்டக் கல்லூரியில் பரிபூரண அமைதி நிலவுகிறது. கல்லூரியையே மூடி விட்டார்கள். ஏறக்குறைய 20 நாட்கள்தான் இந்த ஆண்டில் சட்டக் கல்லூரி நடந்திருக்கிறது. முதல் பி.ஜி.எல்., இரண்டாம் பி.ஜி.எல்., பி.எல். மூன்று வகுப்புகளும் சேர்ந்து 20 நாட்கள்தான் நடந்திருக்கிறதென்று சொல்லு கிறார்கள். முதல் பி.ஜி.எல். 10 நாட்கள் நடக்கும். பிறகு அதை மூடி விடுவார்கள். பிறகு இரண்டாம் பி.ஜி.எல். 5 நாட்கள் நடக்கும். அதை மூடிவிடுவார்கள். பிறகு பி.எல். 7 நாட்கள் நடக்கும். அதை மூடிவிடுவார்கள். இப்படி அந்தக் கல்லூரி நடந்துகொண்டிருக்கிறது.

இதைக் கருத்தில் கொண்டுதான் சொன்னார்களோ என்னவோ தெரிய வில்லை. சென்ற சட்ட மன்றக் கூட்டத் தொடரிலேயே சட்டக் கல்லூரி பற்றிப் பேசினேன். சட்டக் கல்லூரியில் முறைகேடான நியமனங்கள் நடந்திருக்கின்றன. சட்டக் கல்லூரியிலே பேராசிரியர்கள் பொறுப்பை ஏற்கிறவர்கள் மூன்று ஆண்டுகள் வழக்கறிஞர்களாக இருக்க வேண்டுமென்று முன்பு விதி இருந்தது. சென்ற ஆண்டு அதற்கு மாறாக 4 பேர்களை, வழக்கறிஞர்கள் என்ற தகுதியில்லாமல், நியமித்திருக்கிறார்கள். அப்படி நியமித்த பிறகு, அதை 'ஜஸ்டிபை' பண்ண வேண்டுமென்பதற்காக, நியாயப்படுத்த வேண்டுமென்பதற்காக ஒரு "G.O." போட்டிருக்கிறார்கள். G.O.No.1898, நாள் 21—10—1978-ல் உத்தரவு போட்டிருக்கிறார்கள், நான்

(பிற்பகல் 5-10)

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், நீதி மன்றத்திற்கே போகாத ஒருவர், வழக்கறிஞராகப் பணியாற்றாத ஒருவர், உத்தியோகத்திலே இருந்து வரும் ஒருவர் எப்படி கல்லூரியிலே இருக்கின்ற மாணவர்களுக்கு வழக்கைப்பற்றிச் சொல்லிக் கொடுக்க முடியும்? அவர்களிடம் கற்ற மாணவர்கள் எப்படி

வழக்கறிஞராக உருவாக முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந் தமிழுக்காகவே இருக்கிறது. தமிழை வாழ வைக்கிறோம் சொல்கிறார்கள். சட்டத் துறையிலே தமிழ் படித்தவர்கள் புற படுகிறார்கள். இங்கே அரசுத் துறையிலே பணியாற்றுபவர்கள், ஒ குள்ளே தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றாக வேண்டும். அ தேர்வு பெறாதவர்களுக்கும் வேலை கொடுக்கப்படுகிறது. தயவுசெய்து பற்றி விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை ஏதோ ஒரு சம்பிரதாயத்திற்காகக் கொடுக்கப்படுவது இருக்கிறது. திருமண வீட்டிலே சம்பிரதாயத்திற்கு மணமக்களுக்கு கூறுவதற்காகப் போவது போல இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் ப சொல்வார்கள் என்று ஊருக்குக்கூட போகாமல் காத்திருந்தேன். வரவேயில்லை. இது ஒரு சம்பிரதாயமாக ஆகிவிடக்கூடாது என்பதற் சொல்கிறேன். பத்து நிமிடங்கள் பேசினதற்கு என்று இல்லாவிட்டாலும், நிமிடம் பேசினதற்காவது பதில் சொல்வதற்கு வர வேண்டும். இதை தலைவர் அவர்கள் வாயிலாக இந்த மன்றத்திற்குச் சொல்லிக்கொள்கிறே

அடுத்ததாக, ஆளுநர் அவர்கள் உரையிலே பல அம்சங்களைப்பற் சொல்லியிருக்கிறார்கள். டிரான்ஸ்போர்ட் துறையைப் பொறுத்து, ஒ சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அமைச்சர் பெருமக்கள், வெளி களுக்குப் போகிறபோது, காரிலே போகாமல் Mofussil பஸ்களி போக வேண்டும். அப்போது ஜனங்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என் பார்க்க வேண்டும். சில நாட்களுக்கு முன் பத்திரிகையிலே வந்த "பொன்னையன் அவர்களே, பல்லவன் டிரான்ஸ்போர்ட் பஸ்-லே மக் மாண்டது போதாதா ?" என்று கூட எழுதப்பட்டிருந்தது. பேப்ப எடுத்துப் பார்த்தால், தஞ்சாவூரிலே பத்து பேர்கள், கோயம்புத்தூ 20 பேர்கள் செத்து விட்டார்கள் என்று தெரிந்தது. பஸ்ஸினாலே ஏன் இ விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று கேட்டால், அதற்குக் காரணம் 60 பேர்க பிரயாணம் செய்யவேண்டிய பஸ்ஸிலே 120 பேர்கள் போய்க்கொண்டி கிறார்கள். சேலத்திலே நடந்ததைப் பற்றி நான் இந்த மன்றத்திலேக சொன்னேன். டிரைவர் பக்கத்திலே, பேனட் மேலே படியிலே எல்லாம் ஏ கொண்டு போகிறார்கள். இப்படி ஏன் நடக்கிறது என்று கேட் ரூ. 5,000-க்கு வாங்கிவிட்டார்கள், அதை 'காம்பென்சேட்' பண்ணுவத இப்படிச் செய்கிறார்கள் என்றுதான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப் பஸ் அதிபர்கள் ஏன் செய்கிறார்கள் ? இதைக் கண்காணிப்பதற்கு ஆர்.டி இருக்கிறார்கள், போலீசார் இருக்கிறார்கள். ஏன், 60 பேர்கள் போகி பஸ்ஸிலே 120 பேர்களை அனுமதிக்கின்றார்கள் ? அதற்கு என்ன கார என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





மட்டுமல்ல. சென்ற கூட்டத் தொடரிலே மினி பஸ்கள் விடுவதாகச் சொன்னார்கள். ஆனால் அங்கே மினி பஸ்கள் விட்டிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. மினி பஸ் என்பது என்ன என்று கூட எனக்குத் தெரியவில்லை. இந்த அறிக்கைகளிலேதான் குறிப்பிடுகிறார்கள். விக்கிரமாதித்தன் கதையிலே உள்ளது போல கூடுவிட்டு கூடு பாய்கின்ற மாதிரி, இந்த ஆண்டு அறிக்கை வருகிறது. அடுத்த ஆண்டு ஒரு அறிக்கை வருகிறது. இப்படி ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது அறிக்கை வருகிறது. இந்த அறிக்கைகளை, உரைகளை எல்லாம் திரும்பத் திரும்பப் படித்துக்கொண்டிருக்கிறோம்.

நாமெல்லாம் இந்த நாட்டுக்கு முதல் சமுதாயமாகக் கருதுவது உழவர் பெருமக்களைத்தான். அகில இந்திய அடிப்படையிலே எடுத்துக் கொண்டாலும், நமது மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும் உழவர் சமுதாயம் தான் மிகப் பெரிய சமுதாயம். ஆனால் அப்படிப்பட்டவர்கள் நமது நாட்டில் புறக்கணிக்கப்படுகிறார்கள். விவசாயிகளைப் புறக்கணிக்கின்ற நாடு என்று ஒன்று இருக்கின்றது என்றால், அது நமது நாடாகத்தான் இருக்க முடியும். தமிழ்நாட்டில்தான் விவசாயிகள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இன்னும் இருக்கின்ற 4 ஆண்டுகள்கூட, ஆளச் சொன்னாலும் ஆளமாட்டோம் என்று சொல்கின்ற அளவுக்கு, முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்றுதான் எண்ணுகிறேன். சில தினங்களுக்கு முன் விவசாயிகள், 5,000 மாட்டு வண்டிகள் ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள்.

சமீபத்திலே சேலம் வந்தபோது பஸ் வசதியில்லை. ஊருக்குள்ளே பஸ்ஸே இல்லை. சுமார் 3 மைல்கள் நடந்து போனால்தான் கிடைத்தது. அவ்வளவு கஷ்டம் இருக்கிறது. அதிக பஸ்கள் விடவேண்டும். விவசாயிகள் வரி கொடா இயக்கம் ஆரம்பித்திருக்கிறார்கள். வரி கொடுக்காதீர்கள் என்று நோட்டீஸ் ஒட்டியிருக்கிறார்கள். மகாநாடு நடத்தி தீர்மானம் கூட போட்டிருக்கிறார்கள். விவசாயிகள் மின்சார மோட்டார்கள் வைத்திருக்கிறார்கள். வரிகளை விவசாயிகள் கட்ட முடியவில்லை. அப்படி கட்ட முடியாமல் சேர்ந்து விட்ட தொகை இப்போது ரூ. 5,000, ரூ. 10,000 ஆகும். வசூல் செய்வதில் தாமதம் எவ்வளவு ஆகிறதோ அந்த அளவுக்குக் கட்ட வேண்டிய தொகையும் அதிகமாகிவிடுகிறது. அந்த அளவுக்கு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் அவர்கள் இந்த உரையிலாவது விவசாயிகளுக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருக்க வேண்டும். இதுவரையில் எந்தவிதமான அறிவிப்பும் கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு விவசாயிக்கு ஒரு குவிண்டால் நெல் உற்பத்தி செய்வதற்கு ரூ. 117 வரை செலவாகிறது. அதை ஒரு குவிண்டாலுக்கு ரூ. 85-க்குக் கொடுக்க வேண்டும் என்றால், எப்படி முடியும் ? உற்பத்திச் செலவே 117 ரூபாய் என்று இருக்கும்போது,

85 ரூபாய்க்கு விற்க வேண்டும் என்று சொன்னால், எப்படி மனம் இன்றைக்கு நெல் விலை மட்டுமல்ல, வெங்காயத்தின் விலை ரூ. இருந்தது, அதுவே இப்போது ரூ. 10-க்கு விற்கிறது. அந்த மலிவாக விற்கிறது. இப்படி விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொரு விலைகள் வீழ்ச்சி அடைந்திருக்கின்றன. விவசாயிகளைப்பற்றி கவலைப்படவில்லை. அவர்களைப் புறக்கணித்துவிட்டது. அறிக்கையிலே, தமிழ் நாடு முழுவதும் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப் மக்களுக்கு, பயிரிடப்பட்ட வாழைத் தோட்டம், கரும்புப் பயிர் போயிருந்தால், ஏக்கருக்கு ரூ. 100 கொடுப்பதாக அறிவித்திருந்தார் சேலம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அறிக்கையில் 15 ஆம் பக்க சொல்லியிருக்கிறார்கள்.

"... acres under sugarcane and plantains which have b damaged or lost will also be provided with a subsidy of Rs. per acre as assistance for revival or re-planting"

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியிலே சில இடங்க குறிப்பிட்டிருக்கிறார்கள். கெஜட்டிலே போட்டிருக்கிறார் சேந்தமங்கலம் பஞ்சாயத்து யூனியன், எருமைப்பட்டி, மோக பஞ்சாயத்து யூனியனில் அதிகாரிகள் வந்து கணக்கு எடுத்தார் எத்தனையோ ஏக்கரிலே, கரும்பு வாழை எல்லாம் அழிந்துவிட்டிருக்கி எத்தனை ஏக்கர். எவ்வளவு அழிந்திருக்கிறது என்பது பற்றியெல் அதிகாரிகள் கணக்குக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். அப்படி அ ஏற்பட்ட நிலத்திற்கு ஏக்கருக்கு ரூ. 100 என்று சொல்கிறார்கள். ஆனா அதைக் கொடுக்கவில்லை. இதற்காகப் பணமே ஒதுக்கவில்லை என்று ந சொல்லத் தயாராக இல்லை. நிவாரணத் தொகையாக போய்ச் வேண்டியவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதைத் தான் நான் கண்கா வில்லை என்றுதான் சொல்லிக்கொள்கிறேன். இந்த அரசு மீது குற் இல்லை. அதைக் கண்காணிக்காமல் விட்டுவிட்டார்கள்.

விவசாயிகள் சமுதாயத்திற்கு அடுத்த சமுதாயமாக இருப்பவ நெசவாளர் சமுதாயம். நெசவாளர்கள் பற்றி ஒரு வரி கூட இந்த உரை இல்லை. அந்த சமுதாயத்தினரின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக் வகையில் உரையிலே ஒன்றும் சொல்லாதது வருத்தத்திற்குரியதாகும்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

(பிற்பகல் 5-20)

அடுத்தபடியாக, இன்றைக்கு அரசாங்கம் Tamil Nadu Debt Relief Act என்று ஒரு சட்டம் கொண்டுவந்திருக்கிறது. அந்தச் சட்டப்படி கொடுக்க வேண்டிய பணம் 500 ரூபாய்க்குக் கீழே இருந்தால், அந்தப் பணம் வேண்டி கோர்ட்டிலே Case போட முடியாது. 'ரைட் ஆப்' செய்து விடலாம் என்று இருக்கிறது. 5 ஆயிரம் ரூபாய் வரை 9 சதவிகிதம் வட்டியுடன் பாதித் தொகை என்று இருக்கிறது. 5 ஆயிரம் ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை அசல் மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்று இருக்கிறது. 10 ஆயிரத்துக்கு மேல் அசலும் உண்டு, வட்டியும் உண்டு. இது தனிப்பட்டவர்களுடைய கடனைப் பொறுத்தவரைதான். அரசாங்கக் கடன்களைப் பொறுத்தவரை, என்ன முறை பின்பற்றப்படும் என்று தெரியவில்லை. கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் காவிரியைப் பார்வையிட தஞ்சைக்கு வந்திருந்தார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய திரு. இராமமூர்த்தி அவர்களும், நம்முடைய மாண்புமிகு மின்சார அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களும் வேளாண்மை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களும்கூட அவருடன் வந்திருந்தார்கள். நாமக்கல்லில் திரு. தேவராஜ் அரசுக்கு ஒரு வரவேற்பு கொடுக்கப்பட்டது. அந்த வரவேற்பில் கர்நாடக முதலமைச்சர் பேசும்போது, "தமிழ்நாட்டில் புரட்சி ஆட்சி, புரட்சி ஆட்சி என்று சொல்லுகிறீர்களே? என்ன புரட்சி நடந்திருக்கிறது?" என்று கேட்டார்கள். "விவசாயிகளுக்கு இருக்கிற கடன் தொகையை மகாராட்டிரத்தில் ரத்து செய்து விட்டார்கள். கூட்டுறவுக் கடன், அரசாங்கக் கடன் எல்லாவற்றையும் ரத்து செய்து விட்டார்கள்" என்று குறிப்பிட்டார்கள். அதேமாதிரி கருநாடகத்திலே கூட்டுறவுக் கடன், அரசாங்கக் கடன் எல்லாவற்றையும் ரத்து செய்து விட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்கள். அதுமாதிரி நீங்களும் செய்தால்தான் அதற்குப் பெயர் "புரட்சிக்கார அரசு" என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் இரண்டு பேர் அந்த விழாவில் பங்கு பெற்றிருந்தார்கள். இவ்வளவு நாள் ஆகியிருக்கிறது. இதுபற்றி என்ன முடிவு எடுத்தார்கள் என்பது தெரியவில்லை. இன்றையதினம் விவசாயிகள் கடன் தொல்லையால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், அழுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுக் கடன், அரசாங்கக் கடன், தனியார்க் கடன் ஆகிய மூன்று கடன்களால்—கடனிலிருந்து மீள வழி தெரியாமல்—தாங்க முடியாமல் விவசாயப் பெருங்குடி மக்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். போஸ்டரில் போடுவதாலும், மேடையில் ஏறி புரட்சி, புரட்சி என்று பேசுவதாலும், சொல்லுவதாலும், எழுதுவதாலும், சட்டப் பேரவை, மேலவை ஆகிய அவைகளில் புரட்சித் தலைவர், தானைத்

தலைவர் என்று வார்த்தைகளை அடுக்குவதாலும், அள்ளி விசவ மட்டுமே புரட்சி வந்துவிடாது. கர்நாடக, மஹாராஷ்டிரா மாநில செய்தமாதிரி, புரட்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அதன் தான் உண்மையான புரட்சி அரசு என்ற பெயர் பொருந்தும். செய்யத் தவறி விட்டால், உங்களுக்கு எதிர்ப்பாக விவசாயிகள் ஒன்றுதிர மகத்தான புரட்சி உருவாகும். அதற்கும் பெயர் புரட்சிதான். மிகவும் எச்சரிக்கையாக இருங்கள் என்று நான் இந்த அரசுக்கு படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவத் துறையில் இன்றைக்கு நாமக்கல்லில் ஒ பெரிய அரசாங்க மருத்துவ மனை இருக்கிறது. அங்கே இருக்கிற அரசா மருத்துவ மனை பற்றி ஏற்கெனவே நான் பேசியிருக்கிறேன். இப்பொழு நல்ல திருப்திகரமான டாக்டர்களைப் போட்டிருக்கிறார்கள். அதற்கா என்னுடைய பெரு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஒ ரு குறைபாடு இருக்கத்தான் செய்கிறது. அந்தக் குறையைப் போக் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது பெரிய ஆஸ்பத்திரியாதலா சுற்றுச் சுவர் கட்ட வேண்டுமென்று சொல்லிச் சொல்லிப் பார்த்து விட்டோ "பிராவிஷன்" இல்லை என்று சொல்லுகிறார்கள். எவ்வளவு பெரிய மருத்து மனை, சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கிறது. நோயாளிகளுக்கான பா ரொட்டி போன்றவற்றை பன்றி, நாய் போன்றவை எடுத்துக்கொண்டு போ விடுகின்றன. அதோடு மாத்திரமல்லாமல், இன்னும் பெரிய ஆபத்து கா திருக்கிறது. இன்னும் 'மெட்டர்னிட்டி வார்டு' போன்றவற்றில் புகுந் விட்டால், அந்தப் பிராணிகள் குழந்தைகளைக்கூட எடுத்துக்கொண்டு போ விடும். அதிகாரிகளிடம் சென்று கேட்டால், புரவிஷன் இல்லை என் சொல்லுகிறார்கள். இங்கு அதற்குரிய அமைச்சர் இருக்கிறார், முதலமைச்ச இருக்கிறார். நீங்கள் இதற்கு இந்த புரவிஷனை மாற்றாவிட்டால் யார்தா புரவிஷனை உருவாக்க முடியும்? இதுபோன்ற அத்தியாவசியத் தேவைக அடியாக நிறைவேற்ற வேண்டும். ஆஸ்பத்திரியின் பக்கமாக 10 நா களுக்கு முன்பு போய்க்கொண்டிருந்தேன். அப்போது ஆஸ்பத்திரிக் முன்னால் கூட்டம் கூடி பெரிய கலாட்டா நடந்து கொண்டிருந்தது. கலாட் பண்ணியவர்கள் மருத்துவமனைக்கு உள்ளே போய்விட்டார்கள். சுவர் என் இருந்தால், காவலாளி இருப்பான், அவன் அங்கே போகிறவர்களைச் செ பண்ணுவான். அப்படிப்பட்ட நிலையில் இத்தகைய குறைபாடுக இருக்காது. இந்தக் குறைபாடுகளையெல்லாம் விரைந்து தீர்க்க வேண்டு

ஆளுநர் உரையில் நீங்கள் 12-வது பக்கத்தில் அழகாக ஒரு கருத்தை சொல்லியிருக்கிறீர்கள். "இலங்கையில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேத திற்கு மனிதாபிமான அடிப்படையில், பிறருக்குத் துயரோ, இடரோ, இ



கண்ணோ ஏற்படும்போது, தன்னை வருத்திக்கொண்டு, மற்றவர்களுக்கு உதவிடும் பண்பாடு" என்று சொல்லியிருக்கிறீர்கள். 4 நாட்களுக்கு முன்பு வந்த செய்தியில் ஈழத்தேசத்தில் இருக்கிற அரசாங்கம் ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவர இருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கு இருக்கக்கூடிய தமிழர்கள் இன மொழி கலாச்சாரம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக உரிமை கேட்டுப் போராட முடிவு செய்தார்கள். அப்படிப் போராடுவதைக் கலைத்திட வேண்டும் என்று சட்டத்தை, பீனல் லாவை இலங்கையில் திருத்தப் போவதாக 4 நாட்களுக்கு முன்பு இந்து பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் கூட சமீபத்தில் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்தார். தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தையும்கூட சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அவரிடம் நம்முடைய பிரதமர் என்ன கூறியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். இலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் உரிமையைவிட இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான், பிரதமரின் சுற்றுப்பயணத்திற்குப் பிறகுதான் இப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தை இலங்கை அரசு கொண்டுவர முடிவு செய்திருக்கிறது. அய்.நா. சார்ட்டரில், 11-வது சாப்டரில் 76-வது ஆர்ட்டிகிளில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். "சார்பு நாடுகளாக இருந்தாலும் கூட அடிப்படை உரிமையைக் கோர உரிமை இருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக இலங்கையில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற நிலையில் தங்களுடைய உரிமையை இழந்த நிலையில் அரசாங்கத்தைப் பார்த்து உரிமை கேட்டாலே அது கொடுமை என்று தண்டிக்கக்கூடிய நிலையில் இலங்கை அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கம் இந்தக் காரியத்தில் மிக எச்சரிக்கையாக இருந்து பிரதமரிடம் இதை எடுத்துச் சொல்ல வேண்டும். அண்ணாவின் தத்துவத்தை நாங்கள்தான் செயல்படுத்துகிறோம் என்று சொல்லுகிறீர்கள். இது அண்ணாவின் அரசு, அண்ணாவின் கொள்கைகளைக் காப்பாற்றுகிறோம் என்று கூறுகிறீர்கள். அண்ணா சொன்னதை மறந்து விட்டீர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அன்றையதினம் அண்ணா தம்பிக்கு என்று எழுதினார். "தம்பீ, கடல் நீர் ஏன் கரிக்கிறது என்று உனக்குத் தெரியுமா? இலங்கையில் இருக்கின்ற தமிழர்கள் சிந்துகின்ற கண்ணீர் கடலோடு கலப்பதால்தான் கடல் நீர் கரிக்கிறது" என்று அண்ணா எழுதினார்கள். அந்தப் பிரச்சினையை நீங்கள் தீர்க்க முன்வரவில்லை. அங்குள்ள அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக அரசு சட்டத்தைத் திருத்தத் தயாராக இருக்கிறது. 1971 ஆம் ஆண்டிலே இதேபோன்று மேற்கு பாகிஸ்தான் கிழக்கு பாகிஸ்தானின் இனமொழி, கலா

வாயிலாகத்தான் எங்களுக்குப் பெரிய விளம்பரம் தேடித்தர வேண்
விரும்பவில்லை. நீங்கள் விளம்பரம் தேடித் தந்துதான் நாங்க
மனிதர்களாக ஆக வேண்டும் என்ற அவசியமும் இல்லை.
எங்களை நீங்கள் அறிமுகப்படுத்திய பிறகுதான், நாங்கள் காரியம்
கொள்ளவேண்டுமென்ற கட்டாயத்திலும் நாங்கள் இல்லை. இதை
நான் சொல்லுவதற்குக் காரணம் எங்கள் பகுதிக்கு யார் வந்தாலும்
அமைச்சர் வந்தாலும், எங்களுக்குத் தெரிவிப்பதே இல்லை. எ
இன்விடேஷனே இல்லை. என்னைப் பொறுத்தவரையில், நான் உ
அவையிலிருந்து சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்
எங்கள் பகுதிக்கு அமைச்சர் திரு. குழந்தைவேலு வருகிறார். வேளா
துறை அமைச்சர் அவர்கள் வருகிறார்கள். எதற்கு? நகராட்
நிலையக் கட்டிடத்தைத் திறந்து வைக்கிறார். இந்த நிகழ்ச்சிக்கு
அழைப்பு இல்லை. ஸ்பெஷலாபீசரை, போனில் அழைத்து ஏன்
அழைப்பு அனுப்பவில்லை என்றால், நாங்கள் என்ன சார் செய்
ஆளும் கட்சியில் சொல்லுகிறபடி நாங்கள் செய்கிறோம் என்கிறார்.
ஒன்றும் செய்வதற்கில்லை என்கிறார். அடுத்து 14—11—1978
20—11—1978 வரை அகில இந்தியக் கூட்டுறவு வார விழா நடைபெற்
அதிலும் எங்கள் பெயர் இல்லை. இதெல்லாம் என்ன நியாயம் என்
எனக்குப் புரியவில்லை. ஆனால் அதே நேரத்தில் தருமபுரி மாவட்ட
இருக்கிற கலெக்டர் அங்கே நடக்கிற நிகழ்ச்சிகளுக்கு எங்கள் பெய
போடுகிறார். ஏனென்றால் நான் அங்கே போக மாட்டேன் என்பது தெ
30 மைலுக்குப் பக்கத்திலே இருக்கிற சேலத்திலும், நாமக்கல்லிலும்
பெறுகிற நிகழ்ச்சிகளுக்கு எங்கள் பெயர் போடப்படுவதில்லை.
சொல்லுகிறேன் என்றால், இதைப்போன்று எதற்காக அரசாங்கம் எங்க
புறக்கணிக்க வேண்டும் என்று தெரியவில்லை. ஒன்றல்ல, இரண்
இதைப்போன்று பல நிகழ்ச்சிகளைச் சொல்ல முடியும். அனைத்தி
நான் ஆதாரங்களை வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று இந்த நே
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு அமைச்ச
மற்ற பெரிய மனிதர்கள் வருகிற புரோகிராம் எங்களுக்கு உரிய நேர
கிடைப்பதேயில்லை. நிகழ்ச்சிகள் முடிந்து இரண்டு நாட்கள் கழித்துத்
அவர்கள் புரோகிராம்கள் எங்களுக்கு வருகின்றன. ஒருமுறை சட்டம
பேரவையில் பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்கள் திருவு
டத்தைத் திறந்து வைப்பதற்காக இங்கே பாரதத்தின் ஜனாதி
வந்திருந்தார்கள். உண்மையிலேயே அந்த விழா முடிந்த பிறகு 2 நா
கழித்துத்தான் எனக்கு அந்த விழாவிற்கான அழைப்பிதழ் வந்தது.
எல்லோருக்கும் நடைபெறுகிறதா அல்லது மேலவை உறுப்பினர்க



மட்டும்தான் நடக்கிறதா என்று தெரியவில்லை என்பதை மாண்புமிகு தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சர்கள் எங்கள் பகுதிக்கு வருகிறபோது, அவர்களிடம் சிலவற்றை 'ரெப்பிரசண்ட்' செய்யலாம் என்றால், அந்தப் புரோகிராம்கள் அவர்கள் வந்துபோய் இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் எங்களுக்குக் கிடைக்கின்றன. இப்படி நடப்பது சாதாரணமாகி விட்டது.

அடுத்து, ஒன்றைமட்டும் குறிப்பிட்டுவிட்டு முடித்துக்கொள்கிறேன். இன்றைக்கு அரசாங்க நிருவாகத்தில் அரசியல் கட்சிக்காரர்கள் தலையீடுகள் அதிகமாகப் போய்விட்டன. ஆட்சியில் உள்ளவர்கள் இதை மறுக்க முடியாது. பஞ்சாயத்துத் தேர்தல், முனிசிபாலிடி தேர்தல் ஆகியவற்றை ஏன் ஒத்திப் போடுகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் இதுதான். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவரவர்கள் ஒரு பகுதியைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இதை இந்த மன்றத்தில் சொல்லும் போது, இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். பொறுப்பேற்றுக் கொள்வதால் ஒன்றும் நடந்துவிடுவதில்லை. போன தடவை பொறுப்பேற்றுக் கொண்டேன். அதன் பிறகு ஒன்றுமே நடந்துவிடவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்—அவரவர் குத்தகை எடுத்த மாதிரி—ஒவ்வொரு பகுதியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் நல்ல காரியத்திற்காகக்கூட அதிகாரிகளை அணுக முடியவில்லை. அப்படியே அதிகாரிகளிடம் போனால், 'நாங்கள் என்ன செய்யட்டும்?' என்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறார்கள், அதன்படி நாங்கள் நடக்கிறோம் என்கிறார்கள். இன்னொன்றையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முன் பெல்லாம் அதிகாரிகளைச் சந்தித்து சட்டமன்றத்தில் அந்த அதிகாரியைப் பற்றிப் பேசப் போகிறோம் என்றால், அவர்கள் நடுங்குவார்கள். காரியத்தை விரைவில் செய்கிறோம் என்பார்கள். ஆனால் இப்போது என்ன நிலைமை என்றால், "நீங்களெல்லாம் இங்கே சத்தம் போடுகிற வேலையை வைத்துக் கொள்ளாதீர்கள், சட்டமன்றத்திலே பேசுங்கள்" என்று தைரியமாகச் சொல்லுகிறார்கள் என்பதை நான் இங்கே தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதிகாரிகள் இப்படிப் பேசுவதற்குக் காரணம், அப்படிப்பட்ட அதிகாரிகளுக்குத்தான் இந்த ஆட்சியில் ஆதரவு இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு புரமோஷன் கிடைக்கிறது. சென்ற தடவை இந்த மன்றத்திலே நான் சேலத்தில் இருந்த கல்வி அதிகாரி அவர்களின் முறைகேடான செயல்களைப்பற்றி விரிவாகப் பேசினேன். அவர் மீது குற்றஞ்சாட்டிய ஒரு வாரத்திற்குப் பிறகு அந்த அதிகாரி சென்னைக்கு புரமோஷனில் வந்திருக்கிறார். எனவேதான் சொல்லுகிறேன், இதையெல்லாம் நினைவில் வைத்துக்கொண்டு இக்க வாக ஜனநாயகத்தின் அடிப்

படையில் நடக்கிறது என்பதை நிரூபிக்க, உள்ளாட்சித்துறைத் தேர்
நடத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக
ஜனநாயக முறைப்படி, நியாயமான ஆட்சியை நாட்டில் நடத்த

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதிகாரிகள் எதிர்க் கட்சிக்காரர்
நிறைய உதவி செய்கிறார்கள் என்று பேசிப் பாருங்கள். அதனால்
கிடைக்கும்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** எனவே மீண்டும் சொல்கிறேன்.
யாளர்கள் இதையெல்லாம் மனதில் கொண்டு உண்மையிலேயே தமிழக
ஒரு அமைதியான ஜனநாயக ஆட்சியைக் கொண்டுவர வேண்டும், அ
உடனடியாக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கேட்
கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்குபற்றி ஒரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறே
இப்போது மதுவிலக்குப் பிரச்சினையில் மிகக் கடுமையான சட்டம் கொ
வந்திருக்கிறோம். நியாயம். நான்கூட அதைப்பற்றி முதலமைச்சர்
களிடத்திலே ஒரு வினா எழுப்பியிருக்கிறேன். இந்தக் கடுமையா
சட்டத்தைக் கொண்டு வந்ததால், உண்மையிலேயே யார் பாதிக்கப்பட்டு
கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு பணக்காரரையா
காட்ட முடியுமா ? நான் விவரம் தெரிந்து பேசுகிறேன். தினமும் நான் கோ
டுக்குப் போகிறேன். இந்தச் சட்டத்தால் உண்மையிலேயே சாதா
ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். காசு கொடுக்கக்கூ
சக்தி உள்ளவர்கள், சட்டத்தின் ஓட்டையில் புகுந்து போய்விடுகிறார்
ஆனால் சாதாரண ஏழை எளிய மக்கள், தங்களிடம் இருக்கும் அண்
குண்டாக்களை விற்று கேசை நடத்தி கடைசியிலே ஜெயிலுக்குப் போ
றார்கள். இந்தக் கடுமையான சட்டம் போட்டிருப்பதால், இன்றை
அதிகமாகப் பாதிக்கப் படக்கூடியவர்கள் ஏழை எளிய மக்கள்தான் என்ப
உணர வேண்டும். சரி, அப்படி இந்தச் சட்டத்தைப் போட்டுவிட்டதா
சாராயமோ அயல்நாட்டுச் சரக்கோ உண்மையிலேயே ஒழிந்துவிட்ட
தயவுசெய்து ஒழிந்துவிட்டது என்று நினைக்க வேண்டாம். முன்பிருந்த
விட இன்றைக்கு அதிகமாகக் கிடைக்கிறது என்பதைக் கருத்தில் கொள்
வேண்டும். இதைச் சொல்லுவதால் என்மீது கோபப்பட வேண்டாம். நா
உண்மை நிலையைச் சொல்லுகிறேன். இன்றைக்குப் போலீஸ் அதிகாரிக
சொல்லுகிறார்கள். பாண்டிச்சேரியிலிருந்து கொண்டு வருகிறோம் என்
சொல்லிவிட்டுக் கடத்திக் கொண்டு வருகிறவர்களை, எங்களால் பிடிக்க முடி
வில்லை என்று அவர்களே சொல்லுகிறார்கள். எனவேதான் சொல்
கிறேன், நீங்கள் சட்டத்தைக் கடுமையாக்கி ஏழை எளிய மக்களை ட



வாட்டுவதைக் காட்டிலும், மாநிலத்தில் தாராளமாக சாராயத்தையும் அயல் நாட்டுச் சரக்கையும் விட்டுவிடுங்கள். பக்கத்திலே கர்நாடகத்திலே இருக்கிறது. ஆந்திரத்திலே இருக்கிறது, கேரளத்திலே இருக்கிறது. தமிழ்நாடும் குஜராத் மாநிலமும் மட்டும்தானே மதுவிலக்கை அமுல்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதனால் ஆண்டொன்றுக்கு நமக்கு "ரெவின்யூ லாஸ்" மட்டும் ரூ. 120 கோடி ஆகிறது. ஒன்று சட்டத்தைக் கடுமையாக்கி முழுமையாக சாராயத்தை ஒழிக்க வேண்டும். அப்படியிருந்தாலும் பரவாயில்லை. அப்படியில்லாமல் ஒரு சிலரை மட்டும் கஷ்டப்படுத்த இந்த நிலை தேவையில்லை என்றுதான் கருதுகிறேன். நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட "திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்று ஒருமுறை சொன்னார். அந்த வகையிலே குடிக்கிறவர்களாகப் பார்த்துத் திருந்தாவிட்டால், குடியை ஒழிக்க முடியாது என்று சொல்ல விரும்புகிறேன். அதுதான் உண்மையான நிலைமை. எனவே இதை மனதில் வைத்து அரசாங்கத்தில் இருப்பவர்கள் செயல்பட வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

**திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கடந்த 9 ஆம் நாள் மேன்மை தங்கிய தமிழக ஆளுநர் அவர்கள் இந்த ஆண்டினுடைய துவக்கத்தில், கூட்டவைக் கூட்டத்தில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்து இந்த அவையில் 12 ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து விவாதம் நடைபெற்று வருகிறது.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நன்றி தெரிவித்தும், எதிர்க் கட்சியில் இருப்பவர்களில் சில பேர் நன்றி தெரிவித்தும், சில பேர் நன்றி தெரிவிக்க முடியாமல் சங்கடப்பட்டு, அதைக் கண்டித்துப் பேசுவதும் ஒரு வழக்கமாக, மரபாக இருந்து வருகிறது. ஆனால் இந்த ஆண்டு நம்முடைய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையை ஏற்றுக்கொள்வாரே மன்றத்தில் இல்லை என்ற அளவுக்கு, ஆளும் கட்சியினர் எண்ணத்தக்க அளவுக்கு, ஆளும் கட்சியில் தயாரிக்கப்பட்டு, கவர்னர் அவர்களால் இங்கே நிகழ்த்தப்பட்ட உரை அவ்வளவு கேவலமான நிலைக்கு உள்ளாகி இருக்கிறது என்பதை எதிர்க் கட்சியினர் அத்தனை பேரும் சுட்டிக் காட்டியிருப்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றுகிறபோது, சில எதிர்க் கட்சிகள் வெளிநடப்பு செய்தார்கள் என்பது தான் உண்மை. தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், பார்வார்டு பிளாக் கட்சியைச் சேர்ந்தவர்களும், உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்தவர்

[திரு. கா. இராமமூர்த்தி]

கரும் வெளிநடப்பில் கலந்துகொள்ளவில்லை. மேலும் எண்ணிக்
வாக்காளர் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது, 70 சதவீதத்திற்கும் அ
பட்ட உறுப்பினர்கள், வாக்காளர்களுடைய பிரதிநிதிகள், அ
உட்கார்ந்து உரையை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இங்கேயும் ஆ
உரையை சில தன்மைகள் கருதி, குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்
என்ற நோக்கோடும் பேசியிருக்கிறார்களே தவிர, மாண்புமிகு உறுப்பி
திரு. கோ. சி. மணி அவர்கள் நினைக்கிற விதத்தில்—அவர் சொ
கருத்தில்—இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டி
கிறேன்.

திரு. கோ. சி. மணி: நான் இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புவது சென்
முறை ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியபோது, பேரவையிலும், மற்று
இந்த அவையிலும் இருந்த எதிர்க்கட்சிகளுடைய உறுப்பினர்களின் எண்
ணிக்கை எத்தனை, அவர்களில் முழு மனதோடு எத்தனை பேர் ஆளுந
உரையை ஆதரித்துப் பேசினார்கள், இன்று எத்தனை எதிர்க் கட்சியை
சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள், அவர்களில் பேரவையில்
ஆளுநருக்கு ஒரு அறிக்கையை முந்திக்கொண்டு படித்துவிட்டு வெளியே வந்
வர்கள் எத்தனை பேர் என்று, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நினை
படுத்த விரும்புகிறேன். வாக்காளர் எண்ணிக்கையையும், உறுப்பினர்களின்
எண்ணிக்கையையும், வெளிநடப்பு செய்தவர்களின் எண்ணிக்கையையும்,
ஆளுநர் உரையை எத்தனை பேர் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்,
எத்தனை பேர் அதிலே குற்றம் குறைகளைச் சுட்டிக் காட்டினார்கள்,
என்பதையெல்லாம் நம் அவையின் முன்னவர் அவர்கள் இங்கே தெளிவாகக்
குறிப்பிட்டார்கள். அவ்வாறு நினைவுபடுத்தியதற்காக நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

குற்றம் குறைகளைப் பேசுவதுகூட நீங்கள் கேட்கிற எண்ணிக்கையின்
அடிப்படையிலேதான் இருக்க வேண்டுமா என்று உங்களிடம் கேட்க விரும்பு
கிறேன். எத்தனை பேர்கள் குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டியிருக்கி
றார்கள். சுட்டிக் காட்டப்பட்ட குற்றங் குறைகளைத் தவிர, நிறைவுகள்
ஏதாவது இருக்கிறதா? நீங்கள் காட்டுகிற சதவீதக் கணக்கைப் பார்த்த
லும்கூட, குறை சொல்லி முடித்தவர்களுடைய எண்ணிக்கைதான் இந்த அவை
யிலே அதிகம் என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிரு
கிறேன். இதைச் சொல்லுவதற்குக் காரணம், உங்களுடைய ஆட்சி ஒ
இருபது மாத காலத்திற்குள் எங்கே ஆரம்பித்து எங்கே வந்துவிட்ட



[திரு. கோ. சி. மணி]

ஒருமுறை கவர்னர் உரையாற்றி அந்த ஆண்டு முடிந்து அடுத்த ஆண்டு
துவக்கத்தில் மறுமுறை அவர் உரையை நிகழ்த்துகிற நேரத்தில், சென்ற
ஆண்டு உரையாற்றி முடிந்த அந்த ஓராண்டு கால இடைவெளியில் ஏற்பட்
டிருக்கிற முக்கிய பிரச்சினைகளைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டு, அதற்
கான காரணங்களைச் சொல்லி, அதற்குத் தேவையான இன்னின்ன பரிகாரங்
களைக் கண்டிருக்கிறோம் என்று சொல்லுவதும், அந்த இடைவெளி கால
அளவுக்குள் ஏற்பட்ட விளைவுகளைச் சுட்டிக் காட்டி அதற்குண்டான இன்
னின்ன பரிகாரங்களைக் கண்டிருக்கிறோம் என்று சொல்லுவதும்தான்
கவர்னர் உரையின் மரபு.

இந்த ஆண்டு கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையைப் படித்திருக்கிறோம்.
ஆனால் அவரால் கடந்த ஓராண்டுக் காலத்திலே நிகழ்ந்தவைகளைத்
திட்டவட்டமாகச் சொல்ல முடிந்திருக்கிறதா? விரல் விட்டு எண்ணக்கூடிய
ஒன்றிரண்டைச் சொல்லியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்
திரு. எஸ். முருகையன் படுகொலை செய்யப்பட்டதைக் குறித்து ஒரு வரி
சொல்லியிருக்கிறார். அனுதாபம் தெரிவிக்கிறேன் என்று சொல்லியிருக்
கிறார்கள். வேலைவாய்ப்புத் திட்டங்களைப் போட்டிருக்கிறோம், அதனால்
11 ஆயிரம் பேர் பயனடைவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு ஆளுநர் உரையை நிகழ்த்திய பிறகு மறுபடியும் வெள்ளம்
வந்தது. ஏற்கெனவே வெள்ளம், புயல், கடும் மழை பெய்த காரணத்தாலும்,
அதற்கு முன் 1974, 1975 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியினாலும்,
அதற்கடுத்த ஆண்டு பெய்த பெருமழையின் காரணமாகவும் ஏற்பட்டவை
களைக் குறிப்பிட்டுச் சொல்லி, அதற்குப் பரிகாரம் தேட வேண்டுமென்று
சொல்லி முடித்துவிட்டு, இந்த ஆண்டு வருவதற்குள் இன்னும் ஒரு
பெருமழை ஏற்பட்டு, கஷ்டங்கள் ஏற்பட்டு தங்கள் உடைமைகளை இழந்து
தவிக்கின்ற சூழ்நிலையில் இன்று அதற்குப் பரிகாரம் தேடுவதற்குரிய
வழிகளைப்பற்றி நம்முடைய ஆளுநரின் இந்த ஆண்டு அறிக்கையில் ஒரு
சிறிது கோடிட்டுக் காட்டவில்லை. அது போகட்டும். இந்த ஆண்டுதான்
குறிப்பிட்டுக் காட்டவில்லை. சென்ற ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சிக்காக
வருத்தம் தெரிவித்து கண்ணீர் சிந்தி விட்டு, பரிகாரம் தேட முனைந்திருக்
கிறோம் என்று சொல்லி, வெள்ளம் பற்றிய 'வெள்ள நிவாரண அறிக்கை'
என்ற ஒன்றை இங்கே வைத்தார்கள். அதில் செய்ய வேண்டிய பரிகாரங்
களையும், செய்திருப்பவைகளையும் கோடிட்டுக் காட்டி விளம்பரம்
செய்தார்கள். 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருமழையாலும், புயலாலும்,
வெள்ளத்தாலும் எத்தனை பேர் இறந்தார்கள். அதிலே எத்தனை பேர்
காணாமல் போனார்கள், எத்தனை பேருக்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகை
வழங்கப்பட்டது என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு வெள்ள நிவாரண

[திரு. கோ. சி. மணி] [1979 பிப்

அறிக்கையை சென்ற ஆண்டு இங்கே அளித்திருக்கிறார்கள்.
அறிக்கையில் 560 பேர் இறந்தார்கள் என்ற விவரத்தைத் தெரி
கிறார்கள். இறந்துபோனவர்களுக்குப் பிறகு, இறந்தவர்க
குடும்பங்களைக் கவனிக்க ஆயிரம் ரூபாய் உதவித் தொகையை
கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். எத்தனை பேருக்கு
தொகை அளிக்கப்பட்டது என்பதையும் விவரமாக எடுத்துச் சொன்னா
இறந்தவர்கள் 560 பேர், அவர்களில் 160 பேர்களுக்கு நாங்கள் அந்த
தொகையை அளித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்
பேர்களுக்கு உதவித் தொகை வழங்கியிருப்பதற்குக் காரணம், அவ
பொருள் ஈட்டி வந்தவர்கள், பொருள் ஈட்டிய அவர்கள் இறந்துவிட்ட
அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற வழியில்லாமல் போனதால்
கொடுத்தோம் என்று சொன்னார்கள். அப்படியானால், மிச்சம் இரு
நானூற்று சொச்சம் பேர்கள் பொருள் ஈட்டாதவர்கள் இறந்தார்கள் எ
தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போது நிதியமைச்சர் அவ
குறிப்பிட்டுச் சொன்னார்கள், விட்டுப் போனவைகளையெல்லாம்
பரிசீலனை செய்வோம் என்று. திருவிடைமருதூர் தொகுதியில் ஸ்ரீனி
நல்லூரில் 14 வயதுடைய பையன் இறந்துவிட்டான். அவன் தினசரி
வேலை செய்து வந்தான். அவனும் ஒரு கிழவியும் மட்டும்தான் அ
குடும்பத்தில் இருந்தார்கள். வேறு யாரும் அந்தக் குடும்பத்தில் இல்
அவன் ஐந்து, பத்து ஆண்டுகள் கழித்தால், முழு வேலை செ
குடும்பத்தைக் காப்பாற்ற முடியும். அவனுக்கு உதவி கொடுக்க வேண்ட
என்று கேட்டபோது, பரிசீலனை செய்வோம் என்று சொன்னார்க
ஆனால் இதுவரையிலும் அந்த உதவி அவனுக்குக் கிடைக்கவில்லை
160 பேருக்குச் செய்ததைப் போலவே இந்த ஒருவனுக்குச் செய்திருக்கலா

இன்னொரு வேடிக்கை. இந்த மன்றத்திலே அறிவிக்கப்பட்டது. 196 பே
காணாமல் போனார்கள்; ஐந்து ஆயிரம் கோழிகள் இறந்துவிட்ட
23 ஆயிரம் கால்நடைகள் அழிந்துவிட்டன என்று அறிவித்தார்கள். அதி
காணாமல் போன கோழியைப்பற்றிச் சொல்லவில்லை. காணாமல் போ
ஆடு, மாடுகளைப்பற்றிச் சொல்லவில்லை. ஆனால் 196 மனிதர்கள் கா
வில்லை என்று சொன்னார்கள். அதை வேடிக்கையாகக் கருதுகிறார்கள
வெள்ளம், புயல் ஏற்பட்டதால் 196 பேர் காணவில்லை. ஓராண்டு கடந்
விட்டது. காணாமல் போனவர்கள், காணாமலே போனார்களா? அல்ல
இறந்து போனார்களா? காலையில் கன்னியாகுமரியில் பிச்சை எடுத்துவிட்
மாலையில் மதுரையில் வந்து பிச்சையெடுக்கிறான். வெள்ளத்தில் காணா
போன அந்த 196 பேரும் திரும்பி வந்திருக்கமாட்டார்களா, அதைப்பற்



1979 பிப்ரவரி 16] [திரு. கோ. சி. மணி]

தெரிந்துகொள்ள முடியாதா? அவர்கள் காணாமல் இந்த நாட்டை விட்டே போய்விட வேண்டுமா? நீங்கள் வந்த பிறகு, இருக்க முடியாமல், இருக்க மனம் இல்லாமல் போய்விட்டார்களா? அதைப்பற்றி விசாரித்து அறிந்து கொள்ள முடியாதா? 196 குடும்பங்களுக்கு உங்களால் ஆறுதல் சொல்ல முடிந்ததா? அவர்களுக்கு நீங்கள்தான் உதவி செய்து தொலைக்க வேண்டும். காணாமல் போனவர்களில் இரண்டு பிணத்தை இங்கிருந்து எடுத்தோம், இரண்டு பிணத்தைக் கடலிலிருந்து எடுத்தோம், ஒன்றைக் கிணற்றிலிருந்து எடுத்தோம் என்று சொல்லுகிற யோக்கியதை இந்த ஆட்சிக்கு இல்லையென்றால், அந்த 196 பேர்கள் என்ன ஆடுமாட்டைவிட கேவலமானவர்களா என்று தெரியவில்லை; அவர்களைப்பற்றிக் கவலை வேண்டியதில்லையா? அவர்களுக்கும் உதவி செய்தோம் என்ற கணக்கைக் கொடுக்கப் போகிறார்களா? வாக்குக்குக் கணக்கைச் சொன்னவர்கள், "நாலரை கோடி உள்ள தமிழகத்தில் 196 எவ்வளவு பேர்? இதற்காக என்னுடைய காலத்தை, நேரத்தை விணடிக்கச் சொல்கிறீர்களா?" என்று கேட்டாலும் கேட்கலாம். காணாமல் போய்விட்டார்கள் என்று சொல்லு வதற்கு என்ன நெஞ்சுரம் இருக்க வேண்டும்? இதை விட காணாமல் போனவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் இன்று வரை இருக்கிறார்களே, அது எவ்வளவு பெரிய கொடுமை? எதற்காக ஆட்சி நடக்கிறது? காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்கக் கூடிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறதே தவிர, வேறு யாருக்கு இருக்கிறது? 196 பேர் காணாமல் போய் விட்டார்கள் சென்ற ஆண்டு, அப்போது அவசரத்தின் காரணமாகக் கண்டு பிடிக்க முடியவில்லை. இப்போது ஓராண்டு முடிந்துவிட்டது. அவர்கள் என்ன ஆனார்கள் என்று கண்டுபிடிப்பதை விட என்ன வேலை இந்த அரசுக்கு? தேடிவிட்டோம், அவர்கள் கிடைக்கவில்லை, அல்லது எங்கேயோ போய் விட்டார்கள்; ஆகவே இனிமேல் அவர்களையும் இறந்தவர்களின் பட்டியலில் சேர்த்துவிட்டோம் என்று அவர்களுடைய குடும்பத்திற்குச் செய்தியை ஏன் அறிவித்திருக்கக் கூடாது? இந்த ஆயிரம் ரூபாய் உதவித் தொகையை அவர் களுக்கும் ஏன் கொடுத்திருக்கக் கூடாது? இன்னும் சொல்லுகிறேன்; வெள்ளத்தால் இறந்துவிட்டார் அவர்களில் பல குடும்பங்களில், கணவன் என்று மனைவிகள் தாலியை அறுத்துவிட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகள் கருமாதியைக் கூட செய்துவிட்டார்கள். ஆனால் இந்த ஆட்சிக்கு மட்டும் அதில் நம்பிக்கையில்லை. அதற்குக் காரணம் இந்த ஆயிரம் ரூபாயைக் கொடுக்க வேண்டும் என்பதுதான். அதற்காக ஏன் வீண் விளம்பரம் செய்கிறார்கள்? கொஞ்ச காலத்திற்கு முன்னால் விளம்பரம் என்றால், கசப்பு என்று சொன்னார்கள். இறந்தவர்கள் 560 பேர் என்ற கணக்கைக் காட்டி விட்டு, அதில் 400 பேருக்கு உதவித் தொகை கொடுக்க முடியாமல் போய் விட்டது. மேலும் காணாமல் போன 196 பேரையும் கண்டுபிடிக்க முடிய

வில்லை. ஆகவே அவர்கள் இறந்திருந்தாலும் அல்லது போயிருந்தாலும், அவர்களுடைய குடும்பங்களுக்கெல்லாம் அ ரூபாய் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த நாட்டில் நவம்பர் 12 ஆம் தேதி மழை ஆரம்பித்தபோது மேடைகளில் பேசினார்கள், "நாங்கள் நல்லவர்கள் வந்தோம்; வந்ததற்குப் பிறகு மழை பெய்தது" என்று. ஆளும் கட்சியில் உள் இதைப் பேசாதவர்களே இல்லை. அந்த மழை 12 ஆம் தேதிக்குப் வெள்ளமாக மாறி, புயலாக உருவெடுத்து நாட்டில் சேதத்தை உண் தற்குப் பிறகு "இயற்கையின் சீற்றத்தை எதிர்த்துப் போராடினோம்" சொன்னார்கள். அன்றைக்கு நல்லவர்களுக்காகப் பெய்த மழை இயற்கையாக மாறிவிட்டது. இப்படிச் சொல்ல ஆரம்பித் இயற்கையின் சீற்றத்தை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைக்கு வ கிறார்கள். எங்கள் ஊரில் ஒரு பழமொழியைச் சொல்லுவார்கள், "ப மடைதான் வடியும்" என்று. இப்போதுதான் இவர்கள் இயற்கையை எ வேண்டிய சூழ்நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

வெள்ளம், கடும் மழை இவைகளின் விளைவாக தஞ்சை மாவட்ட குறிப்பாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிக்கையே சுட்டிக் காட்டுகிறது. அருமைச் சகோதரர் திரு. பா மணியம் அவர்கள் பேசுகிறபோது, தெளிவாகக் குறிப்பிட்டுச் சொன்னா

(பிற்பகல் 5-50)

நான்கூட அதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வெள்ள நிவ அறிக்கையிலே மிகத் தெளிவாக புள்ளி விவரங்களைக் குறிப்பிட் கிறார்கள். புயலாலும், வெள்ளத்தாலும் எவ்வளவு சேதங்கள் நாட்டில் ஏற்பட்டதென்ற விவரத்தைத் தனித்தனியாகச் சொல்லுகிறார் விவசாய விளைபொருள்கள் எவ்வளவு அழிந்துவிட்டதென்பதைத் தெளி சொல்கிறார்கள். அவைகளுடைய மதிப்பு என்ன என்பதைக் குறிப்பி சொல்ல விரும்புகிறேன். 41 கோடியே 81 லட்சம் ரூபாய்க்கு, சென்ற அடித்த வெள்ளத்தாலும், புயலாலும் விளைபொருள்கள் அழிந்துவிட் 23,000 ஆடுகள், கால்நடைகள் அழிந்துவிட்டன. 5,000 கோழிகள் அழி விட்டன. இவைகள் சேர்ந்து மொத்தம் 47 கோடியே 14 லட்சம் ரூ விவசாயம் சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக் 47 கோடியே 14 லட்சம் ரூபாய் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு, உழை உழைத்து கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற சமுதாயத்திற்கு ஒரே ஆண்டி ஒரு குறிப்பிட்ட மாதத்திற்குள் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசா



பிரச்சினையில் உள்ளடக்கி, அதைத் தொழிலாக வைத்துக்கொண்டு, வேறு தொழிலுக்குப் போக முடியாமல், படித்துப் பட்டம் பெறாமல், வேறு மூலதனம் இல்லாமல் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிற விவசாயச் சமுதாயத்திற்கு 47 கோடியே 14 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. நான் பணிவோடு ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். 47 கோடியே 14 லட்சம் ரூபாய் அளவிற்கு நஷ்டத்தை உண்டாக்கிய புயலுக்குப் பிறகு, ஓராண்டு முடிந்துவிட்டது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

1974-75-ல் வறட்சி ஏற்பட்டது. 1975-76-ல் புயலும், வெள்ளமும் வந்தது. 1977-ல் வெள்ளம் வந்தது. தொடர்ந்து மூன்று பசலிகளுக்குக் கஷ்டங்கள் வந்தன. மூன்று ஆண்டுகளாக இவ்வளவு பெரிய கொடுமைகளைத் தாங்கிக் கொண்டிருப்பது மட்டுமல்ல, அவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். போட்ட முதலை வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தமுடியவில்லை. எடுக்க முடியவில்லை. எடுக்கும் நோக்கில் மழை அதை அழித்துவிட்டது. தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் குறுவை நட்டிருந்தார்கள். அறுவடை நோக்கில் மழையும் புயலும் வந்ததால், அறுவடை செய்ய முடியவில்லை. அறுவடை செய்தவர்களுக்கும் போதிய அளவிற்கு மகசூல் கிடைக்கவில்லை. சிறிய அளவிற்குத்தான் மகசூல் பெற்றார்கள். அதை நீங்கள் ஒத்துக்கொண்டீர்கள். அதெல்லாம் முடிந்துவிட்டது. அப்படி ஏற்பட்டதற்கு என்ன பரிகாரம்? தயவு செய்து சொல்லுங்கள். ஒரே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தில் 43-வது விதிப்படி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தால், கவர்னர் உரையில் பேசுங்கள் என்று தள்ளி விடுகிறார்கள். இது எவ்வளவு சாதாரண விஷயமாகிவிட்டது; அவசர அதி முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேச, விவாதிக்க அந்த விதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அவசரமில்லை என்று இந்த மன்றத்திலே தள்ளுகிற அளவிற்கு நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. இதைவிட அவசரம் வேறு என்ன இருக்கிறதோ எனக்குப் புரியவில்லை. அதைவிட அதி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை எதுவோ, நான் அறியேன் பராபரமே! இப்படி ஏற்பட்டிருக்கிற கொடுமைகளைத் தவிர்க்க என்ன வழி முறைகள்? தொடர்ந்து மூன்று ஆண்டுகள் மழை, வெள்ளம் ஏற்பட்டதால் 47 கோடியே 14 லட்சம் ரூபாய் அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அணைத் தலைவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், வாங்கிய கடனைக் கொடுக்காதீர்களென்று நாங்கள் சொல்லவில்லை. வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இந்தத் தலைமுறைக்கு முன்னால் ஒரு பழமொழி—உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது என்பது பழமொழி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தாங்கள் கொ
வைப்புத் தீர்மானம் குறித்து கவர்னர் உரையில் பே
தலைவரவர்கள் அறிவித்திருப்பார்களானால் அது தலைவரின் மு
அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. அந்த முடி
உறுப்பினர் குறிப்பிடுவதோ அல்லது அந்த முடிவிற்கும் அரசுக்கும்
சம்பந்தம் இருப்பதாக உறுப்பினர் தெரிவிப்பதோ சரியானதல்ல.

**திரு. கோ. சி. மணி :** அதைவிட முக்கிய பிரச்சினை வேறு
முடியாதென்ற காரணத்தாலேதான் அதைக் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அரசாங்கத்தைச்
சுட்டிப் பேசுவதால், அரசாங்கம் சொல்லி தள்ளிவிட்டதாக ஒரு
ஏற்படுமென்ற காரணத்தால் சொல்கிறேன். தலைவரின் முடி
உறுப்பினர் அவர்கள் விமர்சிக்கக் கூடாது.

**திரு. கோ. சி. மணி :** நான் அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொ
பேசுகிறேன் என்பதைத்தான் தெளிவுபடுத்துகிறேன். அதற்காக
அப்படிச் சொன்னேன். ஏற்பட்டிருக்கிற கடன் சுமையைத் தாங்க
வில்லை. அதற்கு முக்கியமான காரணம் இருக்கிறது. பிள்ளை பெற்று
பேத்தி எடுத்ததுபோல, கணக்குப் பார்த்தால் நெல்லின் விலை உற்ப
செலவைவிட குறைந்து காணப்படுவதுதான் அதற்கு மூல காரணம் என்
எல்லோரும் ஒத்துக்கொண்டாகிவிட்டது. இந்த நாட்டு முதல்வரவர்
ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மூன்று முதலமைச்சர்கள் கூடிய மாநா
117 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு உற்பத்திச் செலவு ஆகிறது, அடக்க
ஆகிறது என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு மூ
பேரும் எழுதினார்கள். ஆறு நாட்கள் கழித்து, கேரளத்தில் அப்போதி
முதலமைச்சர் குவிண்டால் நெல் 120 ரூபாய் என்று அறிவித்துவிட்
அவருக்கும் அந்த மத்திய அரசுதான், அவருக்கும் அந்த அரசியல் சட்
தான். இங்குள்ள முதல்வரவர்களுக்கும் அதுதான். இவர், எழுதியிருக்கிறே
பதில் வருமென்று சொல்கிறார். காரணமென்ன? அவர் மதிக்கிற அளவி
அவர் கொண்டிருக்கும் உணர்வு அளவிற்கு, தமிழக முதலமைச்சரவ
தமிழ் நாட்டு நிலைமைகளை மதிக்கவில்லை, அதைப்பற்றிக் கவலைப்
வில்லை. இது தவிர வேறு என்ன காரணம்? ஒரே மத்திய ஆட்சி,
சட்டம், மூன்று பேரும் அதை ஒத்துக்கொண்டு விட்டார்கள். இப்பே
7 ரூபாய் உயர்த்தி வந்திருக்கிறது. குவிண்டால் 85 ரூபாய் எ
வந்திருக்கிறது. அதுகூட இன்னும் அமுலுக்கு வரவில்லை. 117 ரூபாய் செ
செய்துவிட்டு, 85 ரூபாய்க்குப் பொருள்களை விற்க யாருக்காவது ம
வருமா? அப்படி விற்பதுண்டா? அப்படி அமைதிக்கமுண்டா? பார்



கொண்டு சும்மா இருப்பது உண்டா? இப்படிச் செய்தால், நஷ்டம் வராமல்
என்ன வரும்? 117 ரூபாய் செலவாகிறது. 85 ரூபாய்தான் கொடுக்கிறார்கள்.
இடையிலே 32 ரூபாய் இருக்கிறது. 32 ரூபாய் உற்பத்தியிலே நஷ்டம் வருகிறது
என்று சொல்லும்போது, 'செய்கிறோம்', 'வரும்' என்று சொன்னால்,
அதை எப்படி ஏற்றுக்கொள்வது? அவர்களால் வரி கொடுக்க முடியவில்லை,
வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. அதனால் மாநாடு
போடுகிறார்கள், ஊர்வலம் வருகிறார்கள். மிராசுதாரர்கள் தூண்டிவிடுகிறார்கள்
என்று சொல்லுகிறார்கள். அவர்களும் தமிழ் நாட்டிலேதான் இருக்கிறார்கள்.
உங்கள் ஆட்சியின் கட்டுப்பாட்டிற்குள்தான் இருக்கிறார்கள். அவர்கள்
அதிகமாக நிலம் வைத்திருந்தால் எடுத்துக்கொள்ள வேண்டியதுதானே.
அவர்கள் யார், யார் என்று கோடிட்டுக் காட்ட வேண்டியதுதானே. ஒட்டு
மொத்தமாகப் பேசுவானேன்? சாதாரண எண்ணிக்கையில் ஏழைகள்
இருந்து, அதிக எண்ணிக்கையில் அவர்கள் இருக்கிறார்களா? இல்லையே.
அதற்குக்கூட ஆதாரம் சொல்கிறேன். 1976-77-ல் கூட்டுறவுத் துறை
தன்னிடத்திலே கடன் வாங்கி யிருப்பவர்களுள் எத்தனை சிறு நிலச்
சுவாந்தார்கள் என்பதைச் சொல்லிவிட்டு, அதிலே எத்தனை குத்தகை
தாரர்கள் என்பதையும் சொல்லுகிறது. மொத்தத்தில் 87 சதவிகிதம் கடன்
வாங்கியிருக்கிறார்கள். அதில் 80 சதவிகிதத்தினர் குறைந்த நிலம்
வைத்திருப்பவர்கள். அதாவது 1 ஏக்கர், 2 ஏக்கர் என்று 5 ஏக்கருக்குள்
வைத்திருப்பவர்கள், மொத்தத்தில் 87 சதவிகிதம் தமிழ் நாட்டில்
இருக்கிறார்கள். அதில் 80 சதவிகிதத்தினர் சிறு நிலச் சொந்தக்காரர்கள்.
ஏழு சதவிகிதத்தினர் பெரு நிலச் சொந்தக்காரர்கள். அப்படி 7 சத
விகிதத்தினர் இருக்கிறார்களென்று வைத்துக்கொண்டாலும், அதற்காக
80 சதவிகிதத்தினர் அபராதம் செலுத்த வேண்டுமா? அவர்கள் கொடுமைக்கு
ஆளாக வேண்டுமா? பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை பொதுக்
கூட்டத்தில் சொன்னார்கள். 40, 80, 90 வாழை மரம் இருந்து, அதிலே
10 தென்னை மரங்களும் இருந்தால், அதற்கு தென்னந்தோப்பு என்று
சொல்ல மாட்டார்கள். அதை வாழைத் தோப்பு என்றுதான் சொல்லுவார்கள்.
தொண்ணூறு வாழை மரங்கள், 10 தென்னை மரங்கள் இருந்தால், அது
வாழைத் தோட்டமே தவிர, தென்னந் தோப்பு அல்ல என்று சொன்னார்கள்.
அதை என் அண்ணாவின் தம்பி என்று சொல்கிற நீங்கள் ஏற்றுக்கொள்ளக்
கூடாது? எண்பது சதவிகிதம் சிறு நிலச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள்.
ஏழு சதவிகிதம் பெரு நிலச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். எண்பத்தேழில்
80-ஐக் கழித்தால் 7. அவர்களுக்காக 80 சதவிகிதத்தினர் பாதிக்கப்பட
வேண்டுமா? அவர்கள் பின்னாலே போகிறார்கள், அவர்கள் சொல்வதைக்
கேட்கிறார்கள் என்றால், அது எப்படி நியாயம்? எதற்காக மற்றவர்கள்
பாதிக்கப்பட வேண்டும்? தஞ்சை மாவட்டத்திலே இரண்டு கூட்டுறவு மத்திய

வங்கிகளில் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று கும்பகோணம் வங்கி, மற்றொன்று தஞ்சை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி. கும்ப மத்திய வங்கியின் சார்பாக மூன்று ஆண்டுகளிலும் ஒத்தி வை கடன் தொகை எவ்வளவு என்பதைச் சொல்கிறேன். கும்பகோணம் 12 கோடியே 99 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் குறுகிய காலக் கடன் காலக் கடனாக மாற்றப்பட்டிருக்கிறது. தஞ்சை வங்கியில் மூன்று ஆண் 9 கோடியே 23 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் குறுகிய காலக் கடன் காலக் கடனாக மாற்றப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் தஞ்சை மாவட் ஒத்தி வைத்திருப்பது மட்டும் 22 கோடியே 23 லட்சத்து 39 ஆயிரம் ஏற்கெனவே 47 கோடி ரூபாய் இருந்துவிட்டோம். 22 கோடி ரூபாய்க் கடன் சுமை இருக்கிறது. இந்த ஆண்டு போடப்பட்டிருக்கிற வரியைக் வேண்டும். தண்ணீர் வரி, சர்சார்ஜ், புதிய வரி, ஸ்பெஷல் டாக்ஸ் ஆகியவ கட்ட வேண்டும். எப்படி முடியும்? இது என்ன நியாயம்? இது

(பிற்பகல் 6-00)

அல்லவா? எண்பத்தைந்து ரூபாய்க்கு நாங்கள் நெல்லை விற்க வேண் அதை உற்பத்தி செய்வதற்கு குவிண்டாலுக்கு 117 ரூபாய் செலவு வேண்டும். இதிலே ரூ. 32 விவசாயிகள் நஷ்டப்பட வேண்டும். யார் இ தொழிலுக்கு வருவார்கள்?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையிலே பேசிய பத்திரிகையிலே பார்த்தேன். நாட்டிலே தரமான சினிமாப் பட எடுப்பார்கள் என்றால், அது நடக்காமல் நஷ்டம் வந்துவிடுகிறது என் அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அ தொழிலுக்கு அது உதவியாக இருக்கும். அது அந்தத் தொழிலுக்கு எவ் பெரிய உத்தரவாதம் தெரியுமா? அதனால் அந்தத் தொழிலில் ஈடுபட்டு பவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? அந்தத் துறையி இருப்பவர்களுக்கு அது எவ்வளவு தெம்பைக் கொடுக்கிறது தெரியு அவர் அப்படிச் சொன்னது தவறு என்று சொல்லவில்லை. அவர்களுக்கு அ உத்தரவாதம் எவ்வளவு தெம்பைக் கொடுக்கும்? அந்த மாதிரி விவசா களுக்கு என்று ஒரு வார்த்தை தேவை... விவசாயிகளுக்கு உதவி செய்வே என்று தேர்தல் நேரத்திலே சொன்னார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், சினிமாத் துறைக்குக் காட் ஆக்கத்தை, ஒரு 5 சதவிகிதம், இந்த ஏழை எளிய விவசாயிகளுக் கொடுத்திருக்கக்கூடாதா? நீங்கள் படுகின்ற கஷ்டம் தெரிகிறது, ஏதா ஒரு உதவியான காரியத்தைச் செய்கிறோம் என்று உங்களால் சொ முடிந்ததா? நீங்கள் உற்பத்தி செய்யுங்கள், உங்களுக்கு ஏற்படு



நஷ்டத்தை ஈடு கட்டுகிறோம் என்று ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா? சினிமாப் படம் எடுப்பதைவிட விவசாயி என்ன பாவம் செய்தான்? சினிமாத் கொடுமையான, கேவலமான தொழிலா அந்த விவசாயத் தொழில்? சினிமாத் தொழில் நல்ல தொழிலாகவே இருக்கட்டும். அந்தத் தொழிலை வளர்க்க வேண்டாம் என்ற எண்ணம் எனக்கு இல்லை. அதனால் அவர்களுக்கு அந்த ஊக்கம் தருவது தவறு என்று சொல்லவில்லை. அதை நான் பாராட்டுகிறேன். அதே மாதிரி விவசாயிகளுக்கும் ஊக்கத்தைக் கொடுங்கள். இது வரை ஏதாவது சொல்லியிருக்கிறார்களா? மாறாக திசை திருப்பி விடுகிறார்களே தவிர வேறு என்ன வழி செய்திருக்கிறார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்வதானால், உற்பத்திச் செலவும் அதிகரித்துவிட்டது. அதற்கு உதாரணம் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்னும் அய்ந்து உறுப்பினர்கள் பேச இருப்பதால், அங்கத்தினர் அவர்கள் சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. கோ. சி. மணி :** இந்த மன்றத்திலே இந்த செஷனில் பேசத் சந்தர்ப்பம் இல்லை. ஆகவே நேரம் எடுத்துக்கொள்கிறேன். கொஞ்ச நேரம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அங்கத்தினர் அவர்கள் வரவு-செலவுத் திட்டம் வரும்போது பேசிக்கொள்ளலாம்.

**திரு. கோ. சி. மணி :** நான் தலைவர் அவர்களைத்தான் கேட்கிறேன். அவர் நேரம் கொடுத்தால் பேசுகிறேன். கொடுக்கவில்லை என்றால், நிறுத்திக் கொள்கிறேன். அவரைத்தான் நான் இப்போது கேட்டுக் கொள்கிறேன். நான் பேசுகின்ற நேரத்தில் அமைச்சர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். அதனாலே தான் நான் பேசுகிறேன். விவரங்கள் சொல்கிறேன். அது அவர் களுக்கும் நல்லது, எனக்கும் நல்லது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியே சென்றுவிட மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** 1974-ல் குவிண்டாலுக்கு 92 ரூபாய் விலையாக இருந்தது. 1974-ல் ஒரு லிட்டர் டீசல் விலை ரூ. 1.17 காசு. ஆனால் நெல்லுக்கு இன்றைக்கு இருக்கின்ற விலை குவிண்டாலுக்கு ரூ. 85. ஒரு லிட்டர் டீசலுக்கு இன்று விலை ரூ. 1.45. இது பெரிய மாறுதல் இல்லையா? பெரிய மிராசுதார்கள்தான் ஆயில் என்ஜின் வைத்திருப்பார்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை. சாதாரணமாக ஏழை எளியவர்கள்கூட அதை

உபயோகிக்கின்றார்கள். இன்னொன்று டிராக்டர் பார்ட்ஸ் விலைகள்
32211 என்ற நம்பருள்ள பேரிங் விலை ரூ. 58. அதே பேரிங்
188 ரூபாய் என்று விற்கிறது. ரூபாய் 58-க்கு விற்ற அந்த டிராக்டர்
பேரிங்குக்கு, உபகரணத்திற்கு விலை ரூ. 188. ஒரு லிட்டர் டீசல் ரூ.
விற்றது, இன்றைக்கு ரூ. 1.45-க்கு விலை உயர்ந்திருக்கிறது. அது மட்
3984/3920 என்ற நம்பருள்ள பேரிங் விலை ரூ. 125 என்று 1977-ல் இ
இரண்டு ஆண்டுகள் கழித்து இப்போது ரூ. 142.50 என்று விலை
திருக்கிறது. ஆனால் நெல் விலை இறங்கியிருக்கிறது. அதே நேரத்தில்
உற்பத்தி பண்ணுவதற்குத் தேவைப்படுகின்ற பொருள்கள், உபகர
விலைகள் உயர்ந்திருக்கின்றன. இதை விட வேறு உதாரணம்
வேண்டுமா? இதை ஒட்டியே குத்தகைதாரர்கள் பிரச்சினை. இதை ஒட்
தான் விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினை. அவர்களுக்கு இன
6 ரூபாய் கொடுக்கிறோம். ஒரு விவசாயி அந்தக் கூலியை வைத்துப் பி
முடியுமா? அதை வைத்துக்கொண்டு அவனுடைய குடும்பத்தை ந
முடியுமா? அப்படியும் ஆண்டு முழுவதற்கும் அவனுக்கு
கிடைக்கிறதா? அதுவும் கிடையாது. தஞ்சை மாவட்டத்தைப் பொ
வரையில், 5 மாதம்தான் வேலை கிடைக்கும், மீதம் 7 மாதத்திற்கு
கொடுக்க முடியாது. இப்படிப்பட்ட நிலையிலே ஒரு நாளைக்கு ரூ. 6 வ
கொண்டு வாழ்வது என்பதை நம்புவதும் தவறு. ஆனால் விவசாயிகளு
கொடுக்க முடியவில்லை என்பதற்கு அந்தத் தரப்பிலே கூறுகின்ற கா
நெல் உற்பத்திச் செலவால் ஏற்படுகின்ற நஷ்டமே தவிர வேறு கா
இல்லை என்பதுதான். இந்தப் பிரச்சினையைத் தீர்த்தால்தான், எ
தரப்பினருக்கும் நாம் ஏதாவது ஒரு சவுகரியத்தைச் செய்து கொடுக்
இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட குறிப்பிட்டுப்
பிருக்கிறார்கள். 'கோயில் நிலங்களை, குத்தகைதாரர்களுக்கு இன
கொடுக்க முடியாது' என்று சொல்லியிருக்கிறார்கள். 'கோயில் நிலங்க
குத்தகைதாரர்களுக்கு இனிமேல் கொடுக்க முடியாது' என்று நான் செ
வில்லை. எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு நல்ல பிரசித்தி
பத்திரிகையில் வந்திருக்கிறது. தினமணி பத்திரிகையிலே வந்த தலை
செய்தியைத்தான் குறிப்பிட்டுக் கேட்கிறேன். அவர்கள் போட்ட தலை
'கோயில் நிலங்களைக் குத்தகைதாரர்களுக்குக் கொடுக்க முடியாது'
இருக்கிறது. கோவையிலே அவர்கள் பேசிய பேச்சைத்தான் தின
பத்திரிகையில் தலைப்பிட்டுப் போட்டிருக்கிறார்கள். அதற்கு என்ன கா
சொல்கின்றார்கள் தெரியுமா? சோஷலிஸம் பேசுகின்றவர்கள், சம்பூர
பேசுகிறவர்கள், கோயில் நிலங்களுக்கு வரவேண்டிய குத்தகைத் தொகை



கொடுக்காதே என்று சொல்கிறார்கள். குத்தகை செலுத்துவதைத் தடுக்கிறார்
ள். அவர்களுடைய கட்சியை வளர்க்க வேண்டும் என்பதற்காக அப்படிச்
சொல்கிறார்கள். குத்தகைதாரர்கள் குத்தகையைக் கொடுப்பதில்லை.
கோயிலிலே இருப்பவர்களை விவசாயிகள் ஏமாற்றுகிறார்கள். குத்தகையைக்
கொடுப்பதில்லை. அவர்களே சாப்பிடுகிறார்கள். அவர்களைவிட அதிக
எண்ணிக்கையில் இருப்பவர்கள் கோயில்களிலே, மடங்களிலே இருக்கிறார்கள்.
இந்தக் குத்தகையைத் தராத காரணத்தால், அவர்கள் அவஸ்தைப்படு
கிறார்கள். குத்தகைதாரர்களுடைய எண்ணிக்கை குறைவு என்கிறார்கள்.
குத்தகைதாரர்களுடைய எண்ணிக்கை குறைவா? கோயில்களிலே பணியாற்று
கிறவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதா? அதிக எண்ணிக்கை
புடையவர்களுடைய வருமானத்தைக் குறைந்த எண்ணிக்கை உடையவர்கள்
சாப்பிடுகிறார்கள் என்றும் சொல்கிறார்கள். இதை நாங்கள் ஒருகாலும்
அனுமதிக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். இனி குத்தகைதாரர்களுக்குக்
கோயில் நிலத்தை விட மாட்டோம் என்று குறிப்பிட்டுச் சொல்கிறார்கள்.
நான் அவர்களுடைய கணக்கை, அவர்கள் சொல்கின்ற புள்ளிவிவரத்தை
வைத்தே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1977-ல் இவர்கள் வெள்ள நிவாரண
அறிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை
அறிக்கையில் மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள். மொத்தத்தில்
22 லட்சம் சொச்சம் பேர்கள். இது 87 சதம் ஆகும். உழவர்கள் குடும்பங்களில்
வந்தவர்களில், மொத்த எண்ணிக்கையில் 80 சதவிகிதம் ஆகும். சிறிய
உழவர்கள், சொந்த நிலம் அற்றவர்கள் குத்தகைதாரர்கள் எண்ணிக்கை
21,13,000. சொந்த நிலம் இல்லாமல், கோயில், மடம், தனியார் இவர்கள்
நிலங்களில் குத்தகைதாரர்களாக இருப்பவர்களின் எண்ணிக்கை இது.
அதுவும் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் வாங்கியவர் மட்டும் 21,13,000 பேர்கள்
என்று குறிப்பிடுகிறார்கள். இது என்ன ரொம்பக் குறைந்த எண்ணிக்கையா?
இவர்களுக்குப் பரிகாரம் தேடுவது தவறா? இவர்களைவிட அதிகமானவர்கள்
ஆலயங்களிலே வேலை செய்கிறார்களா? மடத்திலே வேலை செய்கிறார்களா?
இந்த 21 லட்சம் சொச்சம் எண்ணிக்கையை அவர்கள் தாண்டியிருக்
கிறார்களா? இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். ஒரு உதாரணம்
சொல்கிறேன். நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் இதுவரை
மொத்தக் குத்தகைதாரர்கள் எண்ணிக்கையைச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** அங்கத்தினர் அவர்கள் குத்தகை
தாரர்கள் மொத்த எண்ணிக்கையை எடுத்துச் சொன்னார்கள். கோயில்
நிலங்களில் குத்தகை எடுத்திருப்பவர்கள் எண்ணிக்கையைச் சொல்ல
வேண்டும்.

திரு. கோ. சி. மணி : நம்முடைய மாண்புமிகு அறநிலையப் பாதுகா...
துறை அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் விவரங்கள் கேட்கிறா...
அவருக்கு அது சொல்லத் தேவையானதுதான். குத்தகைதா...
எண்ணிக்கையில் கோயில் நிலங்கள் மற்றும் மடத்திலே இருக்கிற குத்...
தாரர்கள் எண்ணிக்கை தவிர, தனியார் நிலங்களில் குத்தகைதாரர்...
இருப்பவர்கள் எண்ணிக்கை ஒரு சதவிகிதம் கூட இருக்காது என்று சொ...
கொள்கிறேன். இந்த நிலைமை எப்படி வந்தது? தனியார் துறையில் அதி...
இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நான் சொல்கிறேன், தம்புக...
தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்ததே, மொத்தக் குத்த...
தாரர்களை ஒழித்து, அதிலே இருக்கின்ற இடைத்தரகர்களை நீக்கிவிட்...
கடைசியிலே யார் மிஞ்சுகிறார்களோ அவர்களை அந்த நிலங்களை உழு...
சொல்வது என்பதுதான் அந்தச் சட்டம். அந்தச் சட்டத்தின் அடிப்படையி...
மிஞ்சித் தங்கியவர்கள்தான் இந்த 21 லட்சம் சொச்சம் பேர்கள். நா...
குறிப்பிட்டுச் சொல்கிறேன், இதிலேயும் ஏறத்தாழ 20 லட்சத்திற்...
பேர்ப்பட்டவர்கள் கோயில் நிலங்களிலே, மடத்து நிலங்களிலே குத்தகை...
வைத்திருப்பவர்கள். அது மட்டுமல்ல. நீங்கள் எல்லாம் தெரிந்துகொள்...
வேண்டும் என்பதற்காக ஒரு உதாரணம் சொல்கிறேன். தங்களுக்காகவே...
சொல்லலாம் என்று எண்ணுகிறேன். ஒரு மடத்தில் ஒருவர் பேட்...
அளித்திருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் கேட்...
விவரங்கள் கணபதியா பிள்ளை கமிஷன் ரிப்போர்ட்டில் உள்ளன என்...
கருதுகிறேன்.

**திரு. கோ. சி. மணி :** நானும் அந்த ரிப்போர்ட்டிலிருந்துதா...
சொல்கிறேன். அகோபில மடம் என்று ஒன்று இருக்கிறது. அமைச்சர் அவ...
களுக்குக்கூட நன்றாகத் தெரியும். ஜீயர் சுவாமிகள் என்று இருக்கிறார்க...
தஞ்சைக்கு வந்திருந்தார்கள். அந்த மடத்தினுடைய அதிபர் திரு. தவத்தி...
அழகிய சிங்கர் அவர்கள் வந்திருந்தார்கள். அவரைப் பத்திரிகை நிருபர்க...
பேட்டி கண்டார்கள். அவர் மனம் திறந்து ஒரு தகவலைச் சொன்னா...

(பிற்பகல் 6-10)

தமிழ் நாட்டில் தற்போது இருக்கிற முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்க...
மடமும் கோயிலும் சிறந்த முறையில் இருக்க வேண்டும், அதற்கா...
பாதுகாப்பு இருக்க வேண்டுமென்று விரும்புகிறார் என்று சொன்னார். அவ...
அவ்வாறு சொல்லியதில் தப்பு ஒன்றுமில்லை. மேலும் சொன்னார், "நல்...
எண்ணம் உடையவர், சினிமாவில் அவர் நடித்ததால் எல்லாவற்றை...
தெரிந்து வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட முதலமைச்சரிடத்தில் நமக்...



தேவையானவற்றைச் சொல்லி நியாயம் பெற இடையிலே நமக்கு ஆள்
இல்லை" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். "என்னுடைய மடத்திற்குச்
சொந்தமான நிலம் 6 ஆயிரம் ஏக்கர் இருக்கிறது. அந்த 6 ஆயிரம்
ஏக்கரையும் குத்தகைக்கு விட்டோம்" என்றும் கூறியிருக்கிறார். அவர்கள்
குத்தகை சரியாக அளப்பதில்லை என்றும், அதன் காரணமாக கோயிலிலே
பணியாற்றுகிறவர்கள் அவஸ்தைப்படுகிறார்கள் என்றும், அவர்களுக்கு
ஒருவருக்கு மாதம் 200 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டியிருந்தாலும், ஒரு
மாதத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என்றும் தெளிவாகக் கூறி
யிருக்கிறார். அவர் சொல்வதிலும் உண்மை இருக்கிறது. ஒருவருக்கு
200 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டி வந்தாலும், 20 ஆயிரம் ரூபாய்
அவருக்குத் தேவைப்படுகிறது என்கிறார். அப்படியென்றால், எத்தனை பேர்
வேலை செய்கிறார்கள்—100 பேர். அவருக்கு 6 ஆயிரம் ஏக்கர் சொந்த நிலம்
இருக்கிறது. இப்பொழுதுள்ள சட்டத்தில் 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல்
குத்தகை வைத்துக்கொள்ளக் கூடாது என்று தெளிவாக இருக்கிறது, ஒரு
ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர்; 4 ஏக்கர், 5 ஏக்கர் என்று தான் வைத்திருக்
கிறார்கள். ஐந்து ஏக்கர்தான் எல்லோரும் வைத்திருப்பார்கள் என்று சொல்ல
முடியாது. ஐந்து ஏக்கர் வைத்திருந்தாலும்கூட, 6 ஆயிரம் ஏக்கரில்
எத்தனை 5 ஏக்கர்கள் இருக்கின்றன? 1,200 ஐந்து ஏக்கர்கள் இருக்கின்றன.
1,200 விவசாயக் குடும்பங்கள் பிழைத்துக் கொண்டிருக்கின்றன. மடத்தில்
வேலை பார்ப்பவர்கள் மொத்தம் 100 பேர். அங்கே 1,200 விவசாயிகள்
குடும்பம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். வாங்கிய கடனைக் கொடுக்க
முடியவில்லை என்று நான் சொல்லவில்லை. முடியாததற்குக் காரணம் என்ன
என்பதைப் பரிசீலிக்க வேண்டாமா? உற்பத்திச் செலவு அதிகரித்துக்
கொண்டே போகிறது. விவசாயியினுடைய உற்பத்திச் செலவு அதிகரித்துக்
கொண்டு போகின்ற நிலையில் அவனுடைய வருமானம் குறைந்துகொண்டே
இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் நீங்களாக இருந்தால், என்ன
செய்திருப்பீர்கள் என்று கேட்பீர்கள். கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு
வங்கியில் நான் தலைவராக இருந்தபோது, வறட்சி ஏற்பட்டது. அவர்களுக்கு
நிவாரணம் அளிக்கும்பொருட்டு 3 கோடி 58 லட்சம் ரூபாய் கடன் நிலுவை
ஒத்தி வைக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்கள் பயனடைந்
தார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் விவசாயி
களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். தி.மு.க. ஆட்சிக்
காலத்தில் விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லையா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள்
40 நிமிடங்கள் பேசி விட்டார்கள். சீக்கிரமாக முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. கோ. சி. மணி : ஐந்து நிமிடத்திற்குள் முடித்து வி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நடந்தது என்ன? கொள்முதல் செய்ய வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டதை யாரும் மற முடியாது. இதைப்பற்றி மாண்புமிகு துணைத் தலைவர் அவர் நன்றாகத் தெரியும். துணைத் தலைவர்களும் நானும் ஒரே அ ட்கார்ந்துகொண்டு கொள்முதலுக்காக வந்திருந்த அதிகாரிகளி சண்டை போட்டிருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் பொது துணைத் தலைவரைத் தொடர்புபடுத்திப் பேசக் கூடாது.

திரு. கோ. சி. மணி : மன்னிக்க வேண்டும். தொடர்புபடுத்திப் வில்லை. சாட்சி இருக்கிறீர்கள் என்பதற்காகத்தான் குறிப்பிட் சொல்லக் கூடாது தான், இருந்தாலும், உணர்ச்சி என்னை அப்படிச் செ வைக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நடைமு படுத்திய நெல் கொள்முதல் முறையை இந்த நேரத்தில் சுட்டிக்கா விரும்புகின்றேன். நெல்லை, குறுவை நெல் உட்பட, ஒவ்வொரு கிராமத்தி இருக்கிற ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் கொள்முதல் செய் குடந்தை கூட்டுறவு மத்திய வங்கி எல்லையில் 260 சங்கங்கள் நெல் கொள்முதல் செய்தன. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், சிவில் சப்ளை துறை தனியாக வாங்கின. இருந்தும்கூட கூப்பாடு போட்டார் இப்பொழுது பார்த்தால், கார்ப்பரேஷனும் வாங்கவில்லை, சிவில் சப் துறையும் வாங்கவில்லை, கூட்டுறவுச் சங்கங்களும் வாங்கவில்லை. இப்பே தனியார் என்ன விலை நிர்ணயித்திருக்கிறார்களோ அந்த விலைக்குத் கொள்முதல் செய்கிறார்கள். நீங்கள் 85 ரூபாய் என்று விலை நிர் திருந்தாலும், அவர்கள் என்ன விலை கொடுக்கிறார்களோ அது தான் வி என்பது இன்றைய நிலை. நெல்லை வைக்க இடம் இல்லையென்ற விலையைக் குறைத்து விடுகிறார்கள். சாக்கு இல்லாவிட்டால், விலை குறைத்து விடுகிறார்கள். பணம் இல்லாவிட்டாலும், விலையைக் குறை விடுகிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டங்கள் அன்றையதினம் விவசாயி ஏற்பட்ட காரணத்தால்தான், திராவிட முன்னேற்றக் கழகம் கொள்மு செய்தது. விவசாயிகளின் கூக்குரலுக்கு அரசு செவி சாய்த் அதேமாதிரி விவசாயிகளுக்கு மின் இணைப்பு கிடைப்பதில் காலதாம ஏற்பட்டால், அவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் ஆயில் எஞ்சின் வா கடன் கொடுத்தோம். அத்துடன் ஆயிரம் ரூபாய் உதவித் தொகையை கொடுத்தோம். இருபோக சாகுபடி செய்யுங்கள் என்று பேரறிஞர் அண் வேண்டுகோள் விடுத்தார். ஒரு போகத்தை இரு போகமாக மா



